


# கலைத்தவசி

குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைக்கழகப் போட்டியில் முதல் இடம் பெற்ற 'வீரத்தாய்' நாடகக் குழுவினர் – 1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தவசி

கலைஞர் குழந்தை செபமாலை அவர்களின்

கலைப்பணி நயப்பு மலர்

வெளியீடு

முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்

மன்னார்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு | : கலைத்தவசி |
| விடயம் | : கலைஞர் குழந்தை செபமாலை |
| ஆசிரியர் | : மலர்க்குழு |
| பக்கங்கள் | : 296 |
| முதற் பதிப்பு | : 2012 |
| பதிப்புரிமை | : முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் |
| வெளியீடு | : முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் |
| அட்டை ஓவியம் | : ஆசை இராசையா |
| கணினி பக்க அமைப்பு | : ஜெயந்த் சென்ரர் |
| வடிவமைப்பு | : கி. செல்மர் எமில் |
| அட்டை வடிவமைப்பு | : அ. ஜுட்சன் |
| அச்சுப்பதிப்பு | : யே. எஸ். பிரின்டர்ஸ் |

சர்வதேச நியம நூல் இலக்கம்
ISBN 978-955-4609-00-6

| | |
|---|---|
| Title | : KALAITHAVASI |
| Subject | : Kalaingar Kulanthai Sebamalai |
| Author | : Editorial Board |
| Pages | : 296 |
| First Edition | : 2012 |
| Copy Right | : Murunkan Mutthamil Kalamandram |
| Published by | : Murunkan Mutthamil Kalamandram |
| Cover Design | : Asai Rasaiyah |
| Computer Page Setting | : Jeyanth Centre |
| Layout | : C.Selmar Emil |
| Cover Illustrator | : A.Judeson |
| Print by | : J.S.Printers |


International Standard Book Number
ISBN 978-955-4609-00-6





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்





**மலர்க்குழு சார்பாக**

| | |
|---|---|
| கி. செல்மர் எமில் | 08 |

**ஆசியுரைகள்**

| | |
|---|---|
| மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை | 10 |
| மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை | 11 |
| மேதகு கின்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை | 14 |
| மேதகு எஸ்.ஜெபநேசன் ஆண்டகை | 15 |
| ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாதேசிய ஸ்வாமி | 16 |

**வாழ்த்துரைகள்**

| | |
|---|---|
| அருள்தந்தை ம.போல் நட்சத்திரம் | 17 |
| அருள்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் | 18 |
| அருள்தந்தை விக்ரர் சோசை | 19 |
| வைத்திய கலாநிதி ம.ஒஸ்மன் சாள்ஸ் | 20 |

**உள்ளத்தின் வெளிப்பாடுகள்**

- புலவர் செ.செபமாலை குழந்தை
  பேராசிரியர் அ.சண்முகதாஸ் — 21
- குழந்தையின் கூத்துலகு
  பேராசிரியர் சி.மௌனகுரு — 24
- மன்னார்ப் பிரதேச நவீன கவிதை முன்னோடி...
  பேராசிரியர் செ.யோகராசா — 32
- கலைஞர் குழந்தை செபமாலையை வாழ்த்த நினைத்தபோது...
  பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா — 36
- குழந்தை
  பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் — 38
- அருளாளர் யோசவ் வாஸ் பணியில் பொதுநிலையினர்...
  பேராசிரியர் வண.ஞா.பிலேந்திரன் — 39




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ குழந்தை செபமாலை கூத்தியலின் ஒரு பன்முக ஆளுமை...
அருள்கலாநிதி அ.பி.ெயயசேகரம் 52
❖ கிறிஸ்தவ நாட்டுப்புற இலக்கியத்தின் மீட்புப்பணி...
அருள்சகோதரி கலாநிதி மாக்கிரட் பஸ்ரின் 56
❖ 'தலைக்கோல்' விருதுபெற்ற மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்துக் கலைஞர்...
கலாநிதி தமிழ்மணி அகளங்கன் 58
❖ ஈடுபாடுள்ள ஒரு கலைஞன்...
அருள்கலாநிதி யோ.கி.போல் றொகான் 60
❖ கலையில் தோய்ந்த மனிதம் கலைஞர் குழந்தை செபமாலை
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் 63
❖ தனது நாட்டுக்கூத்துக்களால் மக்களை இன்னமும் ஈர்க்கும் கலைஞர்...
கவிஞர் பி.பி.அந்தோனிப்பிள்ளை 65
❖ எங்கள் முகவரி குழந்தை அண்ணா
அருள்சகோதரி செ.எலிசபேத், அ.கா. 67
❖ நற்செய்தி மண்மயமாக்கலில் பொதுநிலையினரின் பங்களிப்பு...
அருள்பணி.ம.வி.இ.இரவிச்சந்திரன் 73
❖ புரட்சிகர புதுமைகளைப் படைத்தவர் குழந்தை
பேராசிரியர் அகஸ்ரின் சூசை 79
❖ குழந்தையின் வழிப்பயணத்தில் வழிநடந்த கலைஞர்கள்
திருமதி செ.றோஸ்மேரி 82
❖ இலக்கியவாதிக்கோர் இலக்கணம்
எம்.எம்.சியான் 88
❖ ஒரு நதியின் இடையறாத பாய்ச்சலாக ஓடிய கலைஞர் குழந்தை
தமிழ்நேசன் அடிகள் 90
❖ மன்னார் மண்ணுக்கு முகவரிதந்த குழந்தை செபமாலையின் நாடகங்கள்...
யோ.யோண்சன் ராஜ்குமார் 94
❖ குழந்தை மாஸ்ரரின் அரங்க வாழ்வு
திருமதி நவதர்ஷினி கருணாகரன் 104
❖ காலத்தை வென்று நிற்கும் கலைஞர் நம் குழந்தை மாஸ்ரர்
பி.மரியதாஸ் 111
❖ தசமுகன் குழந்தை
பி.எம்.செபமாலை 119
❖ குழந்தை செபமாலை பாடிய கல்வெட்டுக்கள்
செ.இன்பராஜா 123
❖ குழந்தை என்னும் கலைக்குன்று
கலைவாதி கலீல் 126
❖ யார் இந்தக் குழந்தை
எஸ்.ஏ.சில்வா 129
❖ குழந்தை உள்ளம் கொண்ட குழந்தைக் கலைஞர்
ச.சரவணமுத்து 132
❖ 'குழந்தை'யின் வார்த்தையில் 'குழந்தை'!
அருள்பணி.செ.அன்புராசா, அ.ம.தி. 134
❖ வாழ்ந்து வளர்ந்து வளர்த்து வாழ்வித்த எங்கள் ஐயா!
செ.ஆனந்தன் 147



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ குழந்தை, மன்னார் கலைச்சொத்து
**அருள்பணி.எஸ்.ஏ.பொன்சியன், அ.ம.தி.** 152
❖ ஆசிரியப்பணி ஊடாக கலைத்தாய்க்குப் பணிபுரிந்தவர்
**தேசகீர்த்தி எஸ்.மரியாம்பிள்ளை** 155
❖ தமிழாள் கூத்தவை
**ஏ.ரகுநாதன்** 158
❖ கலையூடாக மறைவளர்த்த மறைபரப்பாளர்
**அருள்திரு இ.அகஸ்ரின் புஸ்பராஜ்** 160
❖ நாட்டுக்கூத்துக் காவலன் கலாபூஷணம் 'குழந்தை' செ.செபமாலை
**வண்ணை தெய்வம்** 163
❖ உயர்வான மதிப்பீடுகளைக் கொண்டவர்
**அருள்தந்தை பி.யேசுராஜா** 165
❖ காலத்தால் அழியாப் புகழ்படைத்த கலைக் குடும்பம்
**டேவிட் ராஜேந்திரன்** 167
❖ மன்னார் மாதோட்டம் தந்த 'மாபெரும் கலைஞன்' செபமாலை 'குழந்தை'
**அருள்பணி.செ.அன்புராசா, அ.ம.தி.** 168
❖ முருங்கன் மண்ணின் மூத்த மைந்தன்
**திருமதி சிறில் மரியதாசன் பப்சி** 172
❖ வெள்ளைச் சிரிப்பும் கள்ளமற்ற பேச்சும்
**கு.பரராசா** 175
❖ வித்தகருக்கு வாழ்த்துக்கள்
**த.தயாநிதி** 178
❖ கலைஞானி செபமாலை குழந்தை
**எஸ்.சந்தியாப்பிள்ளை** 179
❖ கூத்திசை வித்தகன் - செபமாலை பன்முக பண்பாளன்
**எம்.அரியநாயகம்** 181
❖ இயேசுவின் குழந்தையா? தந்தையா?
**அருள்பணி.பெனோ சில்வா** 183
❖ தமிழ் வாழ, கலைகள் வளர சேவையாற்றிய கலைஞன்
**சி.ஸ்ரனிஸ்லாஸ்** 185
❖ நான் கண்ட குழந்தை மாஸ்ரர்
**ப.செபமாலை எமில் குலாஸ்** 188
❖ தமிழ்த்தாய் கொடுத்த வரம் கலைக் குழந்தை
**ச.யேசுதாசன்** 191
❖ மன்னாரின் கலைப்பொக்கிஷம், மன்னாரின் சொத்து
**இ.கி.அ.ஜோண் பொஸ்கோ** 194
❖ குழந்தை மாமா என் குருநாதர்
**அருள்தந்தை ப.விமல், அ.ம.தி.** 197
❖ நான் கண்ட செபமாலை அதிபர்
**பேதுரு பாக்கியநாதன்** 200
❖ ஒரு கலைக் குடும்பம்
**ம.ஆபேல் றெவ்வல்** 203
❖ குழந்தை ஆசிரியர் ஒரு முன்னுதாரணம்
**திருமதி ஜெயாபாலாஜி** 205



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கலைவேந்தன் குழந்தை

எஸ்.ஏ.இராசநாயகம் 207

❖ சமூக எழுச்சியின் முன்னோடி கலைஞர் குழந்தை

அலஸ் மரியதாஸ் 210

❖ என் துரோணர்

திருமதி வசந்தி சுவாந்தக்குரூஸ் 212

❖ இசையினால் இறைவனைப் புகழ்ந்தவர்

அருள்பணி.க.அ.அருள்ராஜ் குருஸ் 215

❖ மன்னார் கூத்துக்கலை முதுசம் கலைஞர் குழந்தை

செ.மாசிலாமணி 217

❖ கலைக்குயில் குழந்தை மாஸ்ரர்

டொறத்தி யோகப்பர் 218

❖ குழந்தை செபமாலை யார் இவர்?

பி.றோசலின் 220

❖ மன்னார் மண்ணின் முதுசம் குழந்தை செபமாலை

எஸ்.ஏ.உதயன் 224

❖ முருங்கனில் முதிர்ந்த முத்து குழந்தை ஆசிரியர்

திருமதி பெப்பி விக்ரர் லெம்பெட் 226

❖ மன்னார் மாவட்டத்தின் கூத்திசைக் காவலன்...

தவநாதன் றோபேட் அருட்சேகரன் 228

❖ குழந்தை செபமாலையிடம் கண்டதும், கற்றதும்,...

ப.சந்தியோகு 230

❖ ஈழத்தமிழரின் இணையில்லாக் கலையே கூத்துக் கலை

கன்னிமுத்து வெல்லபதியான் 234

❖ மன்னார் மண் தந்த குழந்தை என்னும் மன்னர் இவர்...

'பிரியாலயம்' துரைஸ் 238

❖ கலைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்பவர்...

கிறிஸ்ற்றி ஜேம்ஸ் 240

❖ நான் அறிந்த குழந்தை மாமா...!

அ.ஜஸ்மின் ஷறோண் 242

❖ என் நினைவுகளில் நிறைந்திருக்கும் 'குழந்தை'

அருள்திரு. செ.அந்தோனிமுத்து, அ.ம.தி. 245

❖ பொற்கிளி, பொன்னாடை பொருட்டல்ல...

திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் 247

❖ வாழ்க்கையைக் கலையாக்கியவன்

அருள்திரு.ஜெயந்தன் அ.ம.தி. 248

❖ ஒரு மாபெரும் கலைஞனைச் சந்தித்தேன்...!

ந.அருணகிரிநாதன் 249

❖ நான் கண்ட அற்புதக் கலைஞன்

அருள்தந்தை ஜெரோம் லெம்பெட், அ.ம.தி. 250

❖ செழிப்புறு நிலமகள் பேர்கொண்ட முருங்கன்

கலையார்வன் 252

❖ செபமாலை குழந்தையின் கலைப்பணியும் சமூகப்பணியும்

ச.குணசீலன் 254



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மனித நேயமுள்ள இறைத்தொண்டன்
திருமதி பயஸ் ரதி யுவடக்சியா பீரிஸ் 256

❖ வழிகாட்டும் கலங்கரை விளக்கு
ம.பத்திநாதன் 257

❖ தமிழை அதிகமாக நேசிக்கும் எனது பெரியப்பா
அருட்சகோதரி தே.வளர்மதி, அ.கா. 259

❖ "நாடகக் கலை என்பது மனிதனுக்குப் பிரியமான சொத்து
'ஆற்றுகை' ஆசிரியர் குழுவினர் 261

❖ கல்வி, கலைப் பணிக்கு தன்னையே அர்ப்பணித்த பெருமகன்
அருள்சகோதரி தன்னியா அந்தோனிப்பிள்ளை 268

❖ பாடசாலையில் அக்கறைகொண்ட மாமனிதன்
திருமதி அன்னம்மா சந்தாம்பிள்ளை கொடுதோர் 270

❖ கல்வியும் கலையும் இவரின் இரு கண்கள்
திருமதி தே.மேரி றீற்றா 271

❖ பால்போல் மனம்கொண்ட பாவலர்
ஏ.டி.தேவதாசன் அல்மேடா 273

❖ அமுதசுரபி குழந்தைக்கு!
அ.அந்தோனிமுத்து 274

❖ பல்கலை விற்பனர்
திருமதி சோதிமலர் மகேஸ்வரன் 277

❖ மாபெரும் கலைப் பொக்கிஷம்
ப.அஜந்த ரூபன் 279

❖ கலை ஆர்வமும் சமூகத் தொண்டும்
ப.அற்புதராஜா 281

❖ தமிழ்ப் பற்றுள்ள பெருமகன் கலைஞர் குழந்தை
செ.அல்பிறெட் சில்வா 283

❖ கூத்திசைக் காவலர் விருதும் பாராட்டு விழாவும்
வண்ணை தெய்வம் 284

❖ அழுவாரோடு அழுது மகிழ்வாரோடு மகிழ்பவர்
ம.சவிரி 286

❖ முத்தான கலைஞர் குழந்தை எம் கிராமத்தின் சொத்து
அ.ஜீட் புனிதராஜ் 287

❖ சிறந்ததொரு தலைவன்
ப.றெனாட் தயானந்தன் 291

❖ சமூகத்தை மாற்றும் 'குழந்தை'யின் சிந்தனைப் புரட்சி
யா.பெஞ்சமின் 293

❖ சிறந்த நாடகக் கலைஞன்
திருமதி எம்.ஏ.எம்.கபிரியேல் 294

❖ 1966-1982 வரை கலைநிகழ்வுகளில் பெற்ற சான்றிதழ்கள்
திருமதி ச.திருமகள் 295



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு சார்பாக...



**கி.செல்மர் எமில்**
*பொறுப்பாசிரியர்,*
*'கலைமுகம்'*
*கலை, இலக்கிய, சமூக இதழ்.*

**த**ன் வாழ்வின் பெரும் பகுதியை தன் சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும், தான் உள்வாங்கிக் கொண்ட கலைவாழ்வுக்காகவும் ஓய்வின்றி இடையறாது பணிசெய்த ஆளுமைமிக்க மனிதனின் - கலைஞனின் உயிர்த்துவம் மிக்க வாழ்வின் பதிவுகளை அவன் வாழும் காலத்திலேயே ஆவணப்படுத்தி அக்கலைஞனுக்கும், இம்மண்ணுக்கும் கையளிக்கும் முயற்சியின் வெளிப்பாடே உங்கள் கரங்களில் தவழ்கின்ற 'கலைத்தவசி' என்னும் மலராகும்.

இம்மலரின் பக்கங்கள் அனைத்திலும் பதிவாக்கப்பட்டுள்ள கலைஞர் திரு.செபஸ்தியான் செபமாலை (குழந்தை மாஸ்ரர்) அவர்கள் தமிழ் மண்ணுக்கு, குறிப்பாக மன்னார் மாவட்டத்துக்கு தன் கலை, கல்வி, சமூகப் பணிகளால் ஆற்றியுள்ள சேவைகளை அளவிட முடியாத அதேவேளை அவற்றை அறியாதவர்கள் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். அவர் வாழும் காலத்தில் வாழ்கின்றவர்களால் அவர் அறியப்பட்டிருந்தாலும், அவரது காலத்திற்கு பின்னர் வருகின்ற தலைமுறையினர் 'இப்படி ஒரு கலைஞன் நம் மத்தியில் வாழ்ந்துள்ளான்' என்பதை தெரிந்து கொள்ளவும், கலைஞர் குழந்தை அவர்கள் தான் வாழும் காலத்திலேயே தன்னைப் பற்றிய முழுமையான பார்வையை தான் வாழ்ந்த - பணியாற்றிய சமூகத்திடமிருந்தே பெற்று நிறைவடையவும் இம்மலர் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கின்றோம்.

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மனிதர்கள் அறிவிலும், அறிவியலிலும் வியக்கத்தக்க வகையில் வளர்ந்து செல்கின்ற அதே நேரத்தில் அவர்களிடமிருந்து மனிதத்தன்மைகளும், தன்னலம் கருதாத சமூக சிந்தனைகளும் செயற்பாடுகளும், அடுத்தவர் மட்டிலான உண்மையான கரிசனைகளும் அருகி வருகின்றமையை இன்று உலகிலும், எமது மண்ணிலும் நடந்தேறும் பல்வேறு சம்பவங்களும் எமக்கு சுட்டிநிற்கின்றன. தங்களைப் பற்றி மட்டும் சிந்தித்து தமது வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் மனிதர்களே இன்று அதிகமாகிவிட்டார்கள்.

இத்தகைய பின்னணியில்தான் குழந்தை மாஸ்ரர் போன்ற உண்மைக் கலைஞர்களின் வாழ்வு எம் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரிகையாக அமைகின்றது. அத்துடன் இத்தலைமுறையில் இவர் போன்ற கலைஞர்கள் தோன்றுவார்களா என்ற கேள்வியையும் நம் முன் வைக்கின்றது. குழந்தை மாஸ்ரர் அவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய கௌரவங்கள், விருதுகள், பட்டங்கள் எவையுமே அவராக தேடிப்பெற்றவையல்ல. அவை அனைத்தையும் தனது தன்னலம் கருதாத பணிகள் மூலம் இயல்பாகவே தன்னை நோக்கி வரச்செய்தவர். இவருக்கு வழங்கப்பட்ட கௌரவங்கள், விருதுகள், பட்டங்களால் அவைகள் பெருமைபெற்றன என்றால் மிகையாகாது.

குழந்தை மாஸ்ரர் அவர்களின் கலைப்பணி நயப்பு மலராக வெளிவரும் 'கலைத்தவசி' மலர் அவரது அன்பு மகனான அருள்பணி. செ.அன்புராசா அடிகளாரின் பெருமுயற்சியின் பயனாக உருவாகி, குழந்தை மாஸ்ரர் அவர்களால் நிறுவப்பட்டு, வளர்க்கப்பட்ட முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு செய்யப்படுகின்றது.

குழந்தை மாஸ்ரர் அவர்கள் தான் சார்ந்த பங்குத் திருச்சபையில் ஆர்வமுள்ள பணியாளனாக, கல்விப் புலத்தில் ஆசிரியராக, அதிபராக, கலையுலகில் நாடக, நாட்டுக்கூத்து நடிகனாக, எழுத்தாளனாக, நெறியாளனாக இவற்றுக்கப்பால் சிறந்ததோர் கவிஞனாக பல்வேறு தளங்களில் பணியாற்றியவர். அவர் உறவாடிய - அவரோடு உறவாடிய மனிதர்கள் எண்ணற்றோர். அவர்களில் பெரும்பாலானோர் இம்மலருக்கு தங்கள் படைப்புக்களை ஆய்வுகளாக, கட்டுரைகளாக, கவிதைகளாக வழங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கும், இம்மலருக்கு சிறப்புச் சேர்க்கும் முகமாக ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெரியோர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம்மலரில் குழந்தை செபமாலை அவர்கள் ஊடகங்கள் சிலவற்றிற்கு வழங்கிய நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் இந்நேர்காணல்களைப் பிரசுரித்த ஊடகங்களுக்கும் எமது நன்றிகள். மேலும், கடந்த 2009ஆம் ஆண்டு கலைஞர் குழந்தை அவர்களுக்கு பிரான்ஸ் - பாரிஸில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் வெளியிடப்பட்ட மலரில் இருந்தும் (அம்மலர் இங்கு பரவலாக கிடைக்காத காரணத்தினால்) பல ஆக்கங்கள் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. தவிரவும் 1982இல் முருங்கனில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் வெளியிடப்பட்ட சிறிய பாராட்டு மலரில் இருந்தும் சில விடயங்கள் இங்கு மீள்பிரசுரமாகியுள்ளன. மலரின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டுக்கு இவை வலுச்சேர்க்கும் எனக் கருதியதாலும் இவ்வாறு செய்துள்ளோம். இம்மலர்களை வெளியிட்டவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

மேலும், இம்மலரின் அட்டைப் படத்திற்காக குழந்தை மாஸ்ரரின் தோற்றத்தை அழகுற வரைந்து தந்த எமது மண்ணின் புகழ்மிக்க ஓவியர் திரு. ஆசை இராசையா அவர்களுக்கும், அட்டைப் படத்தை அழகுற வடிவமைத்து அச்சிட்டுத்தந்த ஜே.எஸ் கிராபிக்ஸ் நிறுவனத்திற்கும், மலரின் கணினி அச்சுக்கோப்பு, பக்க அமைப்பு ஆகியவற்றை சிறப்புற மேற்கொண்ட ஜெயந்த் சென்ரர் நிறுவனத்திற்கும், சிறப்புடன் அச்சிட்டுத்தந்த யே.எஸ். பிரிண்டர்ஸினருக்கும் மற்றும் இம்மலரின் வருகைக்கு பல்வேறு வழிகளிலும் துணைநின்றவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆளுமைமிக்க ஓர் அற்புதமான கலைஞனின் வாழ்வின் சுவடுகளைச் சுமந்து வருகின்ற இம்மலரினை கலையுலகம் மிகுந்த பற்றுதலோடு தன் கரங்களில் ஏந்தும் என நம்புகிறோம். ■

## மலர்க்குழு

**கி. செல்மர் எமில்**

**ப. சந்தியோகு**

**ச. குணசீலன்**

**கு. இராயப்பு**

**செ. மாசிலாமணி**

**பா. கிறிஸ்துநேசரட்ணம்**

**செ. அன்புராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மறைமாவட்ட ஆயரிடமிருந்து...

'குழந்தை மாஸ்ரர்' என்று நன்கு அறியப்பட்ட திரு. செ.செபமாலை அவர்கள் இன்று கலையுலகில் 'கலைஞர் குழந்தை' என்று அழைக்கப்படுகின்றார். கலைஞர் குழந்தை அவர்களின் 50 ஆண்டு கால சமய சமூக, கலைப் பணிகளை ஆவணமாக்கும் நோக்குடன் வெளியிடப்படும் நூலுக்கு ஆசியுரை எழுதுவதில் அகமகிழ்கின்றேன். குழந்தை மாஸ்ரரோடு எனக்குள்ள தொடர்பு 50 ஆண்டுகளுக்கு மேலானது. 1954ஆம் ஆண்டு முருங்கன் பாடசாலையில் இருவரும் ஒரே வகுப்பில் கல்வி பயின்றோம். அன்று தொடக்கம் இன்றுவரை அவருடனான எனது உறவும் நட்பும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அவருடைய இறைப்பற்று, சமயப் பணிகள், சமூக அக்கறை, கலைத்திறமைகள் போன்றவற்றை நான் நன்கு அறிவேன்.

அவருடைய கலை ஆர்வம் மற்றும் கலைத்திறமைகளை நாடே நன்கறியும். இறைவன் தனக்குக் கொடுத்த ஆற்றல் திறமைகளை அவர் முற்றும் பயன்படுத்தினார். நாடகக் கலையை முதன்மையான கலை வடிவமாகக்கொண்டு பல வகையான நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். பல நாடகங்கள் பரிசுகளை வென்றுள்ளன. தனது சமய, சமூக, கல்விப் பணிகளோடு கலைப்பணியை முக்கிய பணியாகக்கொண்டு அதிலே முத்திரை பதித்தார். அவருடைய அர்ப்பணிப்பும் தியாகமும் அளவிட முடியா தவை. பொருளாதாரச் சுமை, உடல் நோய்கள், மற்றவர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற பல சவால்கள் மத்தியில் அவர் கலையை வளர்த்தார். அவருடைய கலைச் சேவையைப் பாராட்டி மறைமாவட்டம் சார்பாக 'திருக்கலை வேந்தன்' என்ற பட்டத்தை அவருக்கு நாம் வழங்கியதை இந்த வேளையில் மகிழ்வோடு நினைவுகூர்கின்றோம்.

அவருடைய விசுவாச வாழ்வு பலரும் மெச்சத்தக்க சாட்சிய வாழ்வாக அமைந்திருந்தது. அவர் திருச்சபைப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திவந்தார். திருச்சபையின் பணியாளர்களுக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருந்தார். திருச்சபையின்மேல் அவருக்கிருந்த அன்பு, அக்கறை காரணமாக தன் பிள்ளைகளில் ஒருவரை குருத்துவ வாழ்வுக்கு வழிநடத்தினார். அருட்திரு. அன்புராசா அவர்கள் அமல மரித்தியாகிகள் சபையில் குருவாகி சிறப்பான பணிகளை ஆற்றிவருகின்றார்.

கலைஞர் குழந்தை அவர்களின் பெருவாழ்வை ஆவணமாக்கும் இந்த நூலாக்க முயற்சி வெற்றிபெறவும், அவருடைய வாழ்க்கையினால் பலரும் தொடப்பட்டு கலைப்பணிக்கும், சமயப் பணிக்கும் தங்களை அர்ப்பணிக்க முன்வர வேண்டும் என்றும் ஆசிக்கின்றேன். இறையருள் வேண்டுகின்றேன்.

ஆயர் இல்லம்,
மன்னார்,

**மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மறைமாவட்ட ஆயரிடமிருந்து...

எமது அன்பிற்கினிய கலைஞரும் ஆசிரியருமான குழந்தை செபமாலை ஆசிரியரின் கலை வாழ்வையும், ஆசிரியப் பணியையும், தமிழ் தொண்டினையும், சமூக சேவையையும் பாராட்டி, அவற்றை ஆவணப்படுத்தும் எண்ணத்தோடு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழும் தலைமுறையினருக்கும் வருங்கால பரம்பரைக்கும் பன்முக ஆளுமையுடைய கலைமகன் "குழந்தை" ஆசிரியர் பற்றிய பதிவுகள் தூண்டுதலாக, முன்னுதாரணமாக, படிப்பினையாக, பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

"குழந்தை மாஸ்ரர்" என்று அன்பாக அழைக்கப்படுகின்ற குழந்தை ஆசிரியரை எவ்வளவிற்கு மிக நீண்டகாலமாக எனக்குத் தெரிந்திருக்கின்றதோ அவ்வளவிற்கு அவரின் பலதரப்பட்ட பணிகளையும் அறிந்திருக்கின்றேன். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கலை வாழ்விலும் பொது வாழ்விலும் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்து வருகின்ற கடவுள்பக்தி நிறைந்த, ஆழ்ந்த விசுவாசமுள்ள, ஒரு தலைசிறந்த கலைஞன்.

மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த நாடகக் கலை முன்னோடியாக இருப்பினும் மன்னார் மாதோட்டத்தைக் கடந்து இலங்கை நாடு அறிந்த ஒரு கலை விற்பன்னராகத் திகழுகின்றார் என்பதை நோக்குகின்ற போது, ஈழத்துக் கலை உலகில் இவரின் பங்களிப்பு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக எத்தகையது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

"குழந்தை" இவ்வாறு கலை உலகில் பிரகாசிப்பதற்கு அவரின் குடும்ப பின்னணியும் அவர் பெற்றுக் கொண்ட உருவாக்கமும் முக்கிய பங்கு வகிக்கின்றன எனக் கூறத்துணியலாம். குழந்தை ஆசிரியரின் தந்தையார் செபஸ்தியான் ஓர் சிறந்த அண்ணாவியார், பெரிய தகப்பனார் சந்தான் ஒரு சிறந்த புலவராவார், ஒன்றுவிட்ட சகோதரன் பாவிலு (சீனி) மன்னாரில் அறியப்பட்ட ஒரு புலவராவார். இவ்வாறு இவரின் குடும்பத்தவர்கள் கலை உலகில் குழந்தை ஆசிரியர் பிரவேசிக்க காரணமாய் இருந்திருக்கின்றார்கள்.

மேலும், முருங்கனில் கல்வி கற்பித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றொகேசன் ஆசிரியர், பங்குத் தந்தையாய் இருந்த சுவாமி வில்வராசசிங்கம் அடிகள் ஆகியோர்; குழந்தை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை செல்வதற்கு முக்கிய மூலக்காரணமாய் இருந்திருக்கின்றார்கள். அத்துடன் அன்றைய கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அதிபராய் இருந்து பணியாற்றிய நம் பெருமதிப்புக்குரிய அமரத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமான மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் உருவாக்கத்தையும் குழந்தை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஆளுமையுள்ள மனிதர்களுடனான தொடர்பும், அவர்களின் உருவாக்கமும், குழந்தையை கலை உலகில் மேலும் சிறந்து விளங்கவும், சமூகத்திற்கு தம் ஆசிரியப்பணி ஊடாகவும் கலை மூலமாகவும் பெரும் பங்களிப்புக்களைச் செய்வதற்கும் அடிப்படைக் காரணங்களாய் அமைந்திருக்கின்றன.

குழந்தை ஆடுவார், பாடுவார், நாடகம் எழுதுவார், நெறிப்படுத்துவார், நடிப்பார், இசையமைப்பார், இசைக்கருவிகள் மீட்டுவார், கவி புனைவார். கலையில் 'குழந்தை'க்குத் தெரியாத அல்லது இவர் தொடாத பகுதி எது? கலை அம்சங்கள் அனைத்தையும் நன்கறிந்தவராவார்.

இப்படிப் பல திறமைகளைப் பெற்று, அவற்றை தம்முடைய விடாமுயற்சி யாலும், தொடர் பயிற்சியாலும், அர்ப்பணிப்பாலும் வளர்த்துக் கொண்டவர்தான் குழந்தை. இத்தகைய திறன்கள் மிகத் தரமான நாடகங்களையும், நாட்டுக்கூத்துக் களையும், ஏனைய கலை நிகழ்வுகளையும் தொடர்ந்து ஆற்றுகை செய்வதற்கு இவருக்குத் துணையாய் இருந்திருக்கின்றன.

விவிலியம், தமிழ் இலக்கியம், வரலாறு போன்றவற்றில் இருந்து நாடகங் களுக்கான பாடுபொருளை தெரிவுசெய்து, சமூக வாழ்வுக்குப் படிப்பினையாக அவற்றை ஆக்கி, ஆற்றுகை செய்துவிடுவார். இதனால், குழந்தையின் நாடகங்கள் ஏனைய கலை நிகழ்வுகள், அறிஞர்களின், பெரியோர்களின், கலை ஆர்வலர்களின், பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருக்கின்றன. மேலும், அரசினதும் அறிஞர்களினதும் பொது அமைப்புக்களினதும் பல பட்டங் களையும், கௌரவங்களையும், பாராட்டுதல்களையும் 'குழந்தை' பெற்றிருப்பது இவரின் நீண்ட காலக் கலைத் தொண்டின் சிறப்பினை அங்கீகரிப்பதாகவே அமைகின்றது.

குழந்தையின் கலைத் தொண்டினை சிறப்பித்து ஊக்குவிக்கும் முகமாக 1982ஆம் ஆண்டிலேயே முருங்கன் பாடசாலை அபிவிருத்தி சபையினால் அதிபர் திரு. எஸ்.வேதநாயகம் அவர்களின் தலைமையில் இவருக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது இவருக்குப் பொன்னாடை போர்த்தி "கலைஞர் குழந்தை" என்ற பட்டமும் கொடுப்பதற்கு அப்போதைய மன்னார் ஆயரான நான் சென்று இந் நிகழ்ச்சியினை சிறப்பித்தமையை இந்த சந்தர்ப்பத்தில் மகிழ்வுடன் எண்ணிப்பார்க் கின்றேன்.

கலைஞர் குழந்தை அவர்கள் இறைவன் கொடுத்த நல்வரங்களை தனக்காக வைத்திருக்காமல் இறைவனைப் புகழவும் சமூக மேம்பாட்டுக்காகவும் நன்கு பயன்படுத்தி வந்திருக்கின்றார். வழிபாடுகளில் அவர் தம் குரல் வளத்தால் பக்திப் பரவசம் ஊட்டி வழிபாட்டை பாடல்களால், கவிகளால், பஜனைகளால் சிறப்பிப்பவர். மன்னாரில் எங்கெங்கு பொதுவிழாக்கள் நடக்கின்றதோ அங்கெல்லாம் தம் இசை யால், நடிப்பால், குரல்வளத்தால் நிகழ்வுகளைச் சிறப்பித்து பெரியவர்களைப் பெருமைப்படுத்துவார்.

அண்மையில் இவரைக் கொண்டு பதிப்பித்து வெளியான, "வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்" என்ற இறுவட்டானது நமக்குக் கிடைத்த பெரும் செல்வமாகவே பார்க்கின்றேன். வீடுகளிலும் ஆலயங்களிலும் இவ்வியாகுல இசையை "குழந்தை மாஸ்ரரின்" இனிய குரலில் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மாஸ்ரர் பெரியவர்களுக்குக் காட்டுகின்ற மரியாதை, கீழ்ப்படிவு, கடவுள் நம்பிக்கை, மற்றவர்களை மதிக்கின்ற பண்பு உண்மையில் பாராட்டுதற்குரியது. இத்தகைய நற்பண்புகளை கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளாகவே காண்கின்றேன்.

ஈற்றில், இதுவரை காலமும் இறைவன் குழந்தை ஆசிரியரின் ஊடாகச் செய்த நற்பணிகளுக்காக நன்றி கூறுகின்றோம். தம்மாலான கலைப்படைப்புக்களைத் தொடர்ந்து தரவும், இவரால் வார்க்கப் பெற்ற, வளர்த்தெடுக்கப்பட்ட பல கலைஞர்கள் குழந்தை ஆசிரியரைப் போல "கலை வழி இறைபணி" புரிய வேண்டியும், இறைவன் இவரைத் தொடர்ந்து நல்வரங்களால் நிரப்ப வேண்டியும் எனது நல்லாசிகளைக் கூறிநிற்கின்றேன்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்,*



27.07.1982 இல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்ட ஆயரிடமிருந்து...



**"தோ**ன்றிற் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும் பொய்யா மொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைகளுக்கொப்ப மன்னாரில் பிறந்து வளர்ந்த ஒருவரால், எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் முருங்கன் குழந்தை மாஸ்டர் (குழந்தை செபமாலை) அவர்களைத் தெரியாத வர்கள் இருக்க முடியாது. அவ்வளவிற்கு பிரபல்யமான ஒருவர்தான் குழந்தை மாஸ்டர். எவ்வளவிற்கு அவர் பிரபல்யமானவரோ அவ்வள விற்கு அடக்கம், ஒழுக்கம் கொண்ட நேரிய பண்பாளர், பழகுவதற்கு இதமான தன்மை கொண்டவர். நான் இவரை கடந்த 50 ஆண்டுகளாக அறிந்திருக்கின்றேன்.

இவரைப் பற்றிக் கூறுவதாயின் சிறந்த பாடகர், நாடக எழுத்தாளர், இசையமைப்பாளர், பேச்சாளர், சமூக ஆர்வலர் எனப் பன்முகம் படைத்தவர். கலைத்தாயின் பன்முகத் தன்மைகளை தன்னகத்தில் தாங்கிய கலைச் சிற்பி என்று அவரைக் கூறினால் அது மிகையாகாது. தனது நாற்பது வருட ஆசிரியப்பணிக்கூடாக, கலைத் தாய்க்கு சேவை புரிந்துள்ள உன்னத படைப்பாளியாவார். தமிழும் கிறிஸ்தவமும் தனது இரண்டு கண்களாக் போற்றி இரண்டிற்கும் வியக்கத்தக்க சேவைகளை ஆற்றியுள்ளார்.

இவரது ஆக்க, அரங்க செயற்பாட்டினை பாராட்டியும், கௌரவித்தும் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்று விருதுக்காக பலர் ஏங்கும் காலத்தில் அவரது உயர் பணிக்காக விருதுகள் அவரது காலடியினைத் தேடி வந்துள்ளன. இலங்கையின் அதி உயர் இலக்கிய விருதாகிய "சாஹித்திய விருதினை" 1998இல் "பரிசு பெற்ற நாடகங்கள்" எனும் நூலுக்காகப் பெற்றுள்ளார். இதனைவிட வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது, கிழக்குப் பல்கலைக்கழக விருது, இந்துக் கலாச்சார திணைக்களத்தால் "கலாபூஷண விருது" என்று அடிக்கிக் கொண்டே செல்லலாம்.

தன் வாழ்நாளின் பெரும் பகுதியினை கலைக்காகவே அர்ப்பணித்த உத்தமர்தான் குழந்தை மாஸ்டர். கிறிஸ்தவக் கலை, இலக்கியவாதிகள் அருகிக் கொண்டு வரும் இக்காலகட்டத்தில் இவரது கிறிஸ்தவக் கலை, இலக்கிய சேவை, நாமும் அக்கலை இலக்கிய உலகில் செயற்பட முன்னுதாரணமாகின்றது. எனவே அன்னாரது கிறிஸ்தவ, தமிழ் இலக்கியப் பணியினை கௌரவித்துப் பாராட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலரினூடாக அன்னாரை வாழ்த்துவதுடன் அவரது உடல் நலத்திற்காகவும் பிராத்திக்கின்றேன்.

**மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**

ஆயர் இல்லம்,
மட்டகளப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயரிடமிருந்து...

திரு. செபமாலை குழந்தை அவர்களது கலையோடு இணைந்த வாழ்வு என்னைப் பெரிதும் கவர்ந்தது. கலைஞர்களுக்கு குறிப்பாக மறைந்து போகும் நமது நாட்டின் பாரம்பரியங்களையும், கலைகளையும் தமது அர்ப்பணிப்பினால் காப்பாற்றி இன்றைய சமுதாயத்திற்கு அவற்றை நினைப்பூட்டி வருபவர்களுக்கு தமிழ்ச்சமுதாயம் என்றுமே கடமைப்பட்டுள்ளது.

செபமாலை குழந்தை பன்முக ஆளுமை கொண்டவர், நடிகர், பாடகர், நாடகத்தயாரிப்பாளர், இசையமைப்பாளர், எழுத்தாளர், சமூக ஆர்வலர். நாடகமே அவருடைய உயிர்மூச்சாகவிருந்த பொழுதும் சிறந்த ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கின்றார். அவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள். கலைஞனின் பார்வை அவர்கள் மீது பட்டிருக்கும். அதனால் அவர்களும் கலை ஆர்வலராகப் பணிபுரிந்திருப்பர்.

எழுபது நாடகங்களை இவர் எழுதியமைக்கு அவருடைய கடின உழைப்பும், சோர்வில்லாத திடசங்கர்ப்பமும் காரணங்களாகும். சமுதாயம் அவருடைய பணியை அங்கீகரித்தது. கவிஞர் குழந்தை, கலைஞர் குழந்தை, முத்தமிழ் வேந்தன், கலாபூஷணம், திருக்கலை வேந்தன், கூத்திசைக்காவலன் முதலிய பட்டங்கள் அவரைத்தேடி வந்தன. 1999இல் சாஹித்திய விருது அரச இலக்கிய விழாவில் அவருக்கு வழங்கப்பட்டது.

இத்தனை காலமாக கலை வளர்ப்பில் ஒன்றித்துப்போன திரு. குழந்தை செபமாலை இன்றும் வாலிபனாக உலாவி வருகின்றார். கத்தோலிக்க நாடக மரபில் அவர் ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் அநேகமுண்டு. "நல்ல பணியொன்றில் ஈடுபட்டுழைப்பதே நல் ஆரோக்கியத்திற்கு வழி".

திரு. குழந்தை செபமாலையின் செயற்பாடுகள் ஆவணப்படுத்தப்படவிருக்கின்றது எனக் கேள்விப்பட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். அவருடைய "நாடகப்பணி" தமிழ் கற்கும் மாணவர்களுக்கும், நாடகவியல் மாணவர்களுக்கும் ஒரு சிறந்த கருவூலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆவணப்படுத்தும் முயற்சிக்கு இறைவன் அருள் கிட்டுவதாக.

**மேதகு எஸ்.ஜெபநேசன்**

*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திடமிருந்து...

அன்புசார் பெருந்தகை,

ஆசிரியர் செபமாலை குழந்தை அவர்களைக் கௌரவித்து பாராட்டுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கும் 50 ஆண்டுகள் நிறைவாகப் பணியாற்றி "கூத்திசைக் காவலன்" எனும் சிறப்புப் பட்டம் பெற்று நிறைவாக வாழ்ந்து கொண்டிருக்கும் செபமாலை அவர்களை அனைவரும் நன்கு அறிவர்.

தமிழனின் மரபு வழிப்பண்பாடுகளை எல்லோரும் நிறைவாக கற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் நீண்ட காலமாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை அமைத்து அரிய பணியாற்றியமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

சீரான உடை, நேரான பேச்சு, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயற்றிறன் அனைத்தும் கொண்ட செபமாலை அனைவரோடும் அன்பாகப் பழகுபவர். கிறிஸ்தவ மதத்தில் வாழ்ந்தாலும் அனைத்து மக்களையும் மதிக்கின்ற பண்புடையவர்.

இவருடைய வாழ்க்கை வரலாறு இன்று வாழும் சமூகத்தினருக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. இவருடைய பணிகளைக் கௌரவிக்கும் அனைத்து அன்புள்ளங் களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். செபமாலை குழந்தை அவர்கள் நீண்ட காலம் சுகதேகியாக வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாதேசிய ஸ்வாமி**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். அமலமரித் தியாகிகள் மாகாண முதல்வரிடமிருந்து...

ஆசிரியர் குழந்தையின் வாழ்வையும் அவரது பல்வேறுபட்ட பணிகளையும் பலரும் பல்வேறு கோணங்களில்நின்று பதிவுசெய்வதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சேவை நயப்பு ஆவணப்படுத்தலுக்குப் பலர் கட்டுரைகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதன் ஊடாக குழந்தை ஆசிரியரின் வாழ்வும் பணியும் எவ்வளவு காத்திரமானது என்பதையும் அவர் பணி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் நாம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. தமிழ் மக்களுக்கும், தாய் திருச்சபைக்கும் எத்தகைய தொண்டினை மிக நீண்டகாலமாக ஆற்றியிருக்கிறார் என்பதை இந்த நாடே நன்கறியும்.

நல்லாசிரியராக, ஆற்றல்மிகு கூத்துக் கலைஞனாக, சிறந்த சமூக, இலக்கிய, விவிலிய நாடக இயக்குநராக, சமூக ஈடுபாடுள்ளவராக, இலக்கிய ஆர்வலராக, தான் சார்ந்த சமூகத்தின் கல்வி முன்னோடியாக, விசுவாசமான கத்தோலிக்கராக இவர் தம் வாழ்வை அர்ப்பணித்திருப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கின்றது.

மொழிப்பற்றும், இனப்பற்றும்,சமயப்பற்றும் அவருடைய படைப்புகளில் எப்போதும் இழையோடி இருப்பதை அவதானிக்கலாம். அடக்கப்பட்ட மக்களின்பால் ஆவேசத்தையும் அக்கறையையும் தம் எழுத்துக்கள் ஊடாகவும் கலைவண்ணங்கள் மூலமாகவும் வெளிப்படுத்துவதைக் காணலாம். ஒரு யதார்த்தமான உண்மைக் கலைஞனின் இயல்புஅது.

மன்னார்ப் பிரதேசத்தில் நான் பணிசெய்த காலத்தில் ஆசிரியர் குழந்தையின் பணிகளையும் சமூக ஈடுபாட்டையும் அறிந்திருக்கிறேன். எக்காரியத்தை எடுத்தாலும் அதில் அர்ப்பணிப்போடு செயற்படும் அவரின் ஆளுமையைப் பார்த்து வியந்திருக்கிறேன். இத்தகைய தியாக சிந்தையோடு ஏறக்குறைய ஐந்து யுகங்களாகத் தொடர்ந்து கலை, சமூக, சமயப் பணிகளை ஆற்றிவந்திருக்கிறார் என்றால் உண்மையில் இவர் ஒரு 'வாழ்நாள் சாதனையாளன்'தான். இச்சந்தர்ப்பத்தில் குழந்தை ஆசிரியரையும் அவருடன் பல ஆண்டுகளாக உழைத்த அத்தனை கலைஞர்களையும் வாழ்த்தி நல்லாசி கூறிநிற்கிறேன்.

**அருள்தந்தை ம.போல் நட்சத்திரம், அ.ம.தி.**

தொடர்பகம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்ட குருமுதல்வரிடமிருந்து...



மன்னார் மாவட்டத்தின் முருங்கன் என்னும் அழகிய சிற்றூரில் பிறந்து, வளர்ந்து தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஆற்றல், திறமைகளை விருத்தி செய்து பன்முக ஆளுமையுடன் விளங்குகின்ற திரு.செபமாலை குழந்தை அவர்கள் தமது இல்லற வாழ்வில் அரை நூற்றாண்டைக் காண இருக்கின்றார்.

திரு. செபமாலை குழந்தை அவர்களையும் அவருடைய நூல்கள், படைப்புக்கள், ஆற்றுகைகளையும் மன்னார், யாழ் மறைமாவட்டங்களில் அறியாதவர்கள் யாரும் இல்லை என்ற அளவிற்கு அறிமுகமான ஒரு நல்ல ஆசான். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கலை, கலாசார, தமிழ், சமய, சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி சிறந்த பாடகனாகவும், நாடகத் தயாரிப்பாளராகவும், நெறியாளராகவும் ஏன் பல முக்கியமான பாத்திரங்களை தலைமைதாங்கி நடித்த ஒரு சிறந்த கலையாளுமை உள்ளவராகவும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமல்ல ஆசிரியப் பணியை அர்ப்பணிப்போடும் கடமையுணர்வோடும் செய்து பல ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் உள்ளங்களில் இடம்பிடித்த ஒரு நல்லாசானாகவும் விளங்குகின்றார். இறைபற்றுக்கொண்ட குடும்பத்தில் வளர்ந்தமை யால் பக்தியில் சிறந்த பல மறையுண்மைகளைக் கற்று, விசுவசித்து வளர்ந்திருக்கின்றார். அதன் வெளிப்பாடாக 'வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்' என்ற இயேசுவின் பாடுகளைப் பற்றிய துன்பியல் பக்தி இலக்கிய இறுவட்டினை இவரின் முழுப்பங்களிப்பினால் உருவாக்கித் தந்திருக்கின்றார்.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஸ்தாபகராகவும் இற்றைக்கு 48 வருடங்களுக்கு மேலாக பல கலைஞர்கள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரை உள்வாங்கி இன்றும் அதன் பெருமை குன்றாமல் இயக்கி வருகின்றார். மனிதநேயமும் சமூக அக்கறையும் கொண்ட ஒரு மக்கள் கலைஞனாகவும் ஆசானாகவும் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். இரக்க சுபாவமும் எல்லோருக்கும் உதவி வாழவேண்டும் என்ற பேரார்வமும் கொண்டவர். இதனால் இவர் பலரது பாராட்டுதல்களை பெற்றதுடன் பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்று பல்வேறு இடங்களில் பொன்னாடை போர்த்தி யும், கௌரவிக்கப்பட்டும் இருக்கிறார்.

திருமண வாழ்வில் பொன்விழா காணயிருக்கும் இவர் துணைவியாரையும் உவகைபொங்க வாழ்த்தி, இவர் பணிசிறக்க நல்லாசிகளையும் கூறிநிற்கின்றேன்.

அருள்தந்தை ஜஸ்ரின் ட. ஞானப்பிரகாசம்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட குருமுதல்வரிடமிருந்து...



இளைப்பாறிய அதிபர் கலாபூஷணம் திரு.செபமாலை குழந்தை மாஸ்ரர் அவர்களின் கலைத்துறைப் பங்களிப்பைப் பாராட்டி வெளிவரும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குழந்தை மாஸ்ரர் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு அளவிடமுடியாததும், காலத்தால் புகழ்சேர்த்திடும் பெருமைமிகு கலைப்படைப்பாகவும் திகழ்கின்றது. நீண்ட காலமாக கலைத்துறையினூடாக மனித, சமூக, சமய, இறையரசின் மதிப்பீடுகளை வெளிக்கொணரும் வகையில் தனது கலைப்படைப்பாற்றல் மூலம் வாழ்விற்கு உந்து சக்தியாக அமையும் பல்வேறு அம்சங்களை வழங்கியுள்ளமை எண்ணி மகிழ்கின்றோம். தான் மட்டுமல்ல பிறரையும் இணைத்து கலைவடிவின் இரசனைகளை வெளிக்கொணர்ந்தமை இவரின் சிறப்பம்சமாகும்.

தனது இத்தகைய பங்களிப்பின் மூலம் படைத்தவரின் பெருமையைப் பறைசாற்றி நற்செய்திக்குச் சான்று பகர்ந்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது. "தங்களது தனித்திறமையால் உந்தப்பட்டுத் தூய திருச்சபையில் கடவுளின் மகிமைக்காகப் பணியாற்ற விரும்பும் கலைஞர்கள் அனைவரும் கலைப் படைப்புக்களை உருவாக்குவதில், படைத்தவரான கடவுளைத் தூய்மையாய் பின்பற்றுகின்றார்கள்" (இரண்டாம் வத்திக்கான் சங்க திருவழிபாட்டு கொள்கைத் திரட்டு எண் 127) எனக் கூறுவது முற்றிலும் குழந்தை மாஸ்ரருக்குப் பொருத்தமானதாகவுள்ளது.

இவரது கலைவடிவங்கள் தமிழ் கத்தோலிக்க இலக்கியத்திலும் இடம் பிடித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. தனது படைப்பாற்றலை பாமர மக்களும் விளங்கிக் கொள்ளத்தக்க விதத்தில் இவரது பசான், நாடகங்கள், கவிகள், பாடல்கள் அமைந்திருப்பது அவரின் மனிதம் சால் மாண்பை மேலும் விளக்கி நிற்கின்றது. இத்தகைய சிறப்புடைய ஆசானுக்கு எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும், இறையாசீரை யும் தெரிவித்து நிற்கின்றேன்.

அருள்தந்தை அ.விக்ரர் சோசை

ஆயர் இல்லம்
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருங்கன் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய கலாநிதியிடமிருந்து...

மன்னார் மாவட்டமானது கலை, பண்பாடு, கலாசார விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பிரதேசமாகும். அதிலும் குறிப்பாக முருங்கன் இயல், இசை, நாடகத்தில் பல சாதனைகளைப் படைத்து வரலாற்றில் இடம்பிடித்து, குறிப்பாக நாட்டுக்கூத்துக் கலையில் சிறப்புற்றுக் கோலோச்சும் ஒரு கிராமமாகும். இதன் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் முழுமுதல் காரணமாக இருந்தவர்தான் 'கூத்திசைக்காவலன்' கலைஞர் குழந்தை அவர்கள்.

என்னுடைய அனுபவத்தில் முருங்கன் என்ற கிராமத்தின் முகவரி எம் கலைக்காவலன் குழந்தை அவர்களே. என்னுடைய பாடசாலைக் காலத்திலும் பயிற்சிக் காலங்களிலும் இவரின் பணிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், பத்திரிகைகளில் படித்தும் இருக்கிறேன்.

வாழ்க்கைத் தேர்வினாலும், கடவுளின் ஆசீராலும் அவரோடு நேரடியாக உறவுகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன். இன்று அவருடைய நீண்டகால இடைவிடாத பலதரப்பட்ட பணிகளையும் பார்த்து வியந்து நிற்கின்றேன். தான் எடுத்துக் கொள்ளும் எக்கருமத்தையும் நிறைவாகச் செய்து முடிக்கும் அவரின் மனதினை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இவரின் வாழ்வில் துலங்கிய எளிமையும், பொறுமையும், தியாக சிந்தையும், கடவுள் நம்பிக்கையும், மனிதாபிமானமும், விடாமுயற்சியும் எமது வாழ்வுக்குப் படிப்பினைகள் ஆகட்டும். இப்பேர்ப்பட்ட மாமனிதர்களின் பதிவுகள் நம் இதயத்தை ஈரமாக்கட்டும், நம் வரலாற்றுக்கு செழுமை சேர்க்கட்டும் என கலைமாமேதை குழந்தை அவர்களை வாழ்த்துகிறேன்.

**வைத்திய கலாநிதி ம.ஒஸ்மன் சாள்ஸ்**

*பிரதேச வைத்தியசாலை*
*முருங்கன்.*
*மன்னார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் செ.செபமாலை குழந்தை



**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
Ph.D.(Edin.),D.Litt.(Hon.UJ)
*வாழ்நாள் பேராசிரியர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**17**ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு செழுமையான நாடக மரபினை மன்னார் வாழ் கத்தோலிக்க மக்கள் பேணிவருகின்றனர். 17ஆம் நூற்றாண்டில் மாதோட்டத்தின் முதல் நாடக ஆசிரியர் எனக் கருதப்பட்டவர் லோறஞ் சுப்பிள்ளை அண்ணாவியார் ஆவார். அவர் மரபிலே வந்தவர்கள்தான் சந்தியோகுப்புலவர், வெள்ளைப்புலவர், குருகுல நாட்டுத்தேவர், கீத்தான்பிள்ளை ஆகியோர். சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் பெஞ்சமின் செல்வத்தினூடாக மக்சிமஸ் லம்பேர்ட், சகோதரர் லம்பேர்ட், குழந்தை செபமாலை ஆகிய கலைஞர்கள் மேற்கிளம்பினர். குழந்தை செபமாலை மன்னார் ஈன்றெடுத்த ஒரு மாபெரும் கலைஞன்.

செபஸ்தியான் செபமாலை தம்பதியினரின் புதல்வரான செபமாலை மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியைப் பெற்றார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரியராகத் தனது தொழிலை ஆரம்பித்து, 40 வருட சேவையின் பின்னர் ஓய்வுபெறும்போது முதலாந்தர அதிபராகப் பதவி வகித்தார்.

அவர் அதிபராகப் பணிசெய்யும்போது மன்னார் பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஓர் இரவு அப்பாடசாலையிலே தங்கிச் செல்ல வேண்டியிருந்தது. கடமையும் கண்ணியமும் மிக்க ஒருவர் திரு. செபமாலை குழந்தை என்பதை அன்று உணரக்கூடியதாயிருந்தது. தமிழ் உணர்வுமிக்க ஒருவராக குழந்தை அவர்கள் விளங்கிவந்துள்ளார். தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆனந்தராசா, இன்பராசா, அன்புராசா, திருமகள், மலர்விழி, கயல்விழி என்னும் பெயர்களை இட்டுள்ளமையை இங்கு சான்றாக எடுத்துக் காட்டலாம். இவருடைய மகன் அருட்தந்தை செ.அன்புராசா அடிகளார் தந்தையின் கலைத் தடத்திலே நின்று அதனை ஆய்வு செய்துள்ளார். அடிகளாருடைய ஆய்வுநூல் **மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் - ஓர் ஆய்வு** என்பதாகும். இந்நூலை "50 ஆண்டுகளாக சமய, சமூக, தமிழ், கலைத் தொண்டு ஆற்றிவரும் என் 'ஐயா' கலாபூஷணம் செபமாலை (குழந்தை) அவர்களுக்கும் இவருக்குப் பின்புலமாகத் திகழும் என் அம்மா றோஸ்மேரி அவர்களுக்கும்" என்று கூறிச் சமர்ப்பணம் செய்துள்ளார். ஒரு கூத்திசைக் காவலனாகிய தந்தைக்கும் அவருடனியங்கும் அன்னைக்கும் ஒரு மகன் ஆற்றக்கூடிய உதவி இதைவிட வேறு என்னவாக இருக்கமுடியும்? அருட்தந்தை அன்புராசா அவர்களுடைய ஆய்விலே நான் கண்ட ஒரு சிறப்பு என்ன வெனில் ஒரு துறவியின் மன ஒடுக்கமும் அதே நேரத்தில் அறிவு நிரம்பிய விரிவும் அங்கே காணப்படுவதாகும். இதற்கு ஒரு சிறிய சான்றினை இங்கு தருகிறேன். மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடக வரலாற்றிலே இவர் தந்தை திரு. செபமாலை குழந்தையும் ஒரு கணிசமான பங்கு உடையவராயுள்ளார். ஆனால் அவர் பற்றி பெரிதாக தன்னுடைய ஆய்விலே அவர் விபரிக்காது உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. செபமாலை குழந்தை ஒரு கலைக் குடும்பத்திலே வந்தவர். இவருடைய தந்தையார் நன்கு மத்தளம் வாசிக்கும் திறனுடையவர். இவர் ஓர் அண்ணாவியாராக மன்னாரிலே விளங்கியவர். இவருடைய சகோதரர்கள் மூவர் நன்றாகப் பாடக்கூடிய இசைக் கலைஞர்கள். இத்தகைய இசைக் குடும்பப் பாரம்பரியமுடைய செபமாலை, முருங்கன் மகா வித்தியாலயத்தில் மாணவனாகப் படித்த காலத்தில் பாடசாலையின் இசை, நாடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தினார். முருங்கன் பாடசாலையில் தொடங்கிய குழந்தை செபமாலையின் கலைப்பயணம் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் அதன் பின்னர் ஆசிரியராக வெளியேறிய பின்னரும் வேகமாக வளர்ச்சியடைந்தது.

குழந்தை செபமாலை ஒரு சிறந்த கவிஞருமாவார். மாதோட்டக் கவிஞர்களுள் ஒருவரான குழந்தை செபமாலை 1968ஆம் ஆண்டு பேராசிரியர சு. வித்தியானந்தனாலே "கவிஞர் குழந்தை" எனப் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டார். இலக்கியத்துறையில் இவரின் ஈடுபாடு 1955ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இவருடைய முதல் ஆக்கமான 'அறப்போர் அறைகூவல்' என்னும் கவிதை இலங்கை வானொலியில் 1963ஆம் ஆண்டு முதலில் ஒலிபரப்பானது. அதிலிருந்து நாடகம் கவிதை என இலங்கை வானொலியிலும், தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வருகின்றார். இவ்வகையில் இருநூறுக்கும் மேற்பட்ட ஆக்கங்கள் வானொலியிலே ஒலிபரப்பாகியும் பத்திரிகைகளில் வெளியாகியும் உள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகம் குழந்தை செபமாலைக்கு வழங்கிய 'தலைக்கோல் விருது' அவருடைய கலைத் திறனையும் கலைத் தொண்டினையும் எடுத்துக்காட்டக் கூடியது. அன்று (1960-1963) பேராதனைப் பல்கலைக் கழகத்திலே மாணவர்களாயிருந்த சி.மௌன குருவும் நானும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தயாரித்த கூத்துக்களுடன் தொடர்புடையவர்கள். அவருடைய கூத்துக்கள் மன்னாரிலே மேடையேற்றப்படும்பொழுது அங்கு செல்லவும் அங்குள்ள கலைஞர்களைச் சந்திக்கவும்

**ஓர் இயல்புவாழ்வுடைய கலைஞன் எப்படி உலகம் உவக்கும் கலைஞனாக ஆனார் என்பதற்குரிய இரகசியத்தை மகனுடைய பார்வையிலே வெளிவந்துள்ள சொற்களுடாக நாம் தரிசிக்கமுடிகின்றது.**

வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது குழந்தை செபமாலையையும் காணும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் மௌனகுரு பல தடவை மன்னாருக்குச் சென்று குழந்தையினுடைய கலைத் திறன்களையெல்லாம் அறிந்து கொண்டார். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை பண்பாட்டுப் பீடத்தின் தலைவராக இருந்தபோது மன்னார் கலைஞரான குழந்தை செபமாலையை இவருடைய கலைப் பங்களிப்புக்காகக் கௌரவிக்கவேண்டுமென எண்ணித் 'தலைக் கோல் விருதுக்கு' அவருடைய பெயரைப் பரிந்துரை செய்தமை பாம்பின்கால் பாம்பறிந்தமையை ஒக்கும்.

குழந்தை செபமாலை அவர்கள், நாட்டுக்கூத்து மரபு நாடகம், இசைநாடகம், சமூக நாடகம், நாட்டிய நாடகம், சரித்திர நாடகம், இலக்கிய நாடகம் என ஏறக்குறைய எழுபது நாடகங்கள்வரை எழுதித் தயாரித்து அரங்கேற்றியிருக்கின்றார் என அறியவருகிறோம்.

இவற்றுள் கல் சுமந்த காவலர்கள், வீரத்தாய், இறைவனின் சீற்றம், புதுமைப்பெண், இணைந்த உள்ளம், பரதேசி மகன், சிலம்பின் சிரிப்பு, விடுதலைப் பயணம், நல்வாழ்வு, இறைவனா? புலவனா?, அன்புப் பரிசு, கண்டி அரசன், யார் குழந்தை, வீரனை வென்ற தீரன் போன்ற நாடகங்கள் நூற்றுக்கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ள முக்கியமான நாடகங்களாகும்.

மன்னார் மண் தந்த குழந்தை என்னும் கலை மன்னருக்கு பாரிஸ் நகரிலே அவருடைய கலை வாழ்வினையும் வளத்தினையும் பாராட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா எடுத்தார்கள். அங்கு வாழும் துரைஸ் என்னும் ஓர் அன்பர் தன் மனத்திலே தோன்றியவற்றை,

"கம்பீரமான நடையும்!
கண்களால் கவர்ந்திழுக்கும்
திறனும்!
பாடினால் கேட்டுக்கொண்டே
இருக்கலாம்! கூத்திலே
ஆடினால் பார்த்துக்கொண்டே
இருக்கலாம்!
நாட்டுக்கூத்து இவர் மூச்சு!
நமக்கு இவர் பெரும் சொத்து!
நல்ல கலைகளைப் படைத்த இவர்
நம்மோடு இன்னும் பல்லாண்டு
காலம்
பாராட்டு அரங்கங்கள் பல கண்டு
பள்ளிக்கூடமாய் நம்மோடிருந்து
பண்பாளன் நீங்கள் என்றும்
நீடூழி வாழ்க வாழியவே!"

என்று கவிதையாகத் தந்துள்ளார்.

கலைஞராகிய தந்தையை அருட் தந்தையாகிய மகன் அன்புராசா ஆய்வும் உணர்வும் கலந்த பார்வையிலே கூறுவதை எல்லோரும் படிக்கவேண்டும்:

"1962இல் சாதாரண குழுக்களாக நாடகங்களை அரங்கேற்ற ஆரம்பித்து அதன் தொடர்ச்சியாக 1964ஆம் ஆண்டில் 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' கருவாகி, உருவாகி இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளாக அதனைக் கருத்தோடு காத்து இயக்கிவருகின்றார். எத்தனையோ மன்றங்கள் புதுமழைக்குப் புற்றீசல்கள் போல தோன்றுகின்றன. ஓரிரு ஆண்டுகளில் ஒருசில நிகழ்வுகளோடு மறைந்துபோகின்றன. ஆனால் இம்மன்றத்தைத் தொடர்ந்து ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களாக இயக்கிவரும் இவரின் தலைமைத்துவம் உண்மையில் வியக்கத்தக்கது.



1982இல் நடந்த பாராட்டு விழாவின்போது

பழைய ஒரு வீணைப்பெட்டி, ("சர்ப்பினா" அதனுடைய வயதும் ஏறக்குறைய இவருடைய வயதை ஒத்ததே!) இரண்டு தாளங்கள், எப்போதோ வாங்கிய ஒரு 'டோல்க்கி', நாடகத்திற்காகத் தைத்த சில நாடக உடுப்புகள், ஒருசில முகப்பூச்சு மைகள், இன்னும் சில நாடக ஆபரணங்கள்... இவைதான் அவரின் சொத்துக்கள்!

இவற்றை வைத்துக்கொண்டு எத்தனை இடங்களுக்குச் சென்றிருப்பார், எத்தனை நாடக நிகழ்ச்சிகளை நடத்தியிருப்பார், எத்தனை போட்டிகளில் வெற்றியீட்டியிருப்பார்! நினைத்தால் மெய்சிலிர்க்க வைக்கின்றது. ("மன்னார் மாதோட்டம் தந்த "மாபெரும் கலைஞன்" செபமாலை "குழந்தை", **கூத்திசைக் காவலர் மன்னார் பெற்றெடுத்த குழந்தை,** பாரிஸ், 2009)

ஓர் இயல்புவாழ்வுடைய கலைஞன் எப்படி உலகம் உவக்கும் கலைஞனாக ஆனார் என்பதற்குரிய இரகசியத்தை மகனுடைய பார்வையிலே வெளிவந்துள்ள சொற்களுடாக நாம் தரிசிக்கமுடிகின்றது. நீண்ட கட்டுரையின் ஒரு பகுதியினையே நான் இங்கு தந்துள்ளேன்.

கட்டுரை தந்த மைந்தன் தந்தை பற்றி ஒரு நூலினை வெளியிடுகின்றார். பலரும் போற்றும் ஒரு மாபெரும் கலைஞனைப் பற்றிய ஒரு நூல் மிகவும் வேண்டப்படுவதொன்று. அந்நூல் சிறப்புற்றமைய என் வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கின்றேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் கூத்துலகு



**பேராசிரியர் சி. மௌனகுரு**
*B.A. (Hons), M.A.,PG.Dip.in.Ed., Ph.D.*
*முன்னாள் கலைப்பீடாதிபதி,*
*நுண்கலைத்துறைத் தலைவர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.*

ஈழத்துத் தமிழ் நாடக உலகில் இரண்டு பெரும் குழந்தைகள் நம்மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு குழந்தை, குழந்தை ம. சண்முகலிங்கம் என்று அழைக்கப் படுகிறது. இன்னொரு குழந்தை, செ.செபமாலை என்று அழைக்கப்படுகிறது. சண்முகலிங்கம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். கலையரசு சொர்ணலிங்கத்தின் வாரிசாகத் தோன்றியவர், நாடக அரங்கக் கல்லூரியைத் தோற்றுவித்தவர். நவீன நாடகக்காரராக அறியப்பட்டவர்.

குழந்தை செபமாலை, செபஸ்தியான் அண்ணாவியாரின் வாரிசாகத் தோன்றியவர், முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தை நிறுவிய வர், கூத்துக்கலைஞராக அறியப்பட்டவர், மன்னாரைச் சேர்ந்தவர்.

இருவருமே எண்பது வயதினை அண மிக்கொண்டிருப்பவர்கள். முதுமைக் கலைஞர் களன்று. முதிர்ந்த கலைஞர்கள். நன்றாக முற்றிப் பழுத்துக் கனிந்த பழங்கள். குழந்தை ம.சண்முகலிங்கத்திற்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் அளித்தும், குழந்தை செ.செபமாலைக்கு தலைக்கோல் விருது வழங்கியும் கிழக்குப் பல்கலைக்கழகம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது. இவ்விரு முதிர்கனிகளினதும் அன்புக்கும் நேயத்திற்குமுரியவனாக நான் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பது நான் பெற்ற பேறுகளில் ஒன்று.

குழந்தை செபமாலை அவர்களைத் தலைக்கோல் விருதுக்காக நுண்கலைத்துறைத் தலைவராக அன்று இருந்த நான் சிபார்சு செய்தபோது அதற்கான காரணங்களைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது. நான் தெரிவித்த முக்கிய காரணங்களுள் ஒன்று; அவரது இடைவிடாத தொடர் செயற்பாடுகளாகும்.

குழந்தை செபமாலையையும் அவரது செயற்பாடுகளையும் புரிந்துகொள்ள நாம் இத் தொடக்கப் புள்ளியை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்கலாம்.

## தொடர் செயற்பாடுகள்

1940ஆம் ஆண்டிலே பிறந்த குழந்தை செபமாலை 1945இல் அவரது ஐந்தாவது வயதில், "ஐயா சிறுவன் ஏழை என்மேல் மனம் இரங்காதா?" என்று பாடியபடி மேடையில் தன் வாழ்வை ஆரம்பித்ததாகக் குறிப்பிடுகிறார். 1945லிருந்து அவரின் நாடகச் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. இச்செயற்பாடுகள் 1957 களில் அவர் பயின்ற அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், 1960கள் தொடக்கம் அவர் கற்பித்த பாடசாலைகளிலும், 1964 தொடக்கம் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினூடாக மன்னாரிலும் இலங்கையின் பல பாகங்களிலும் எனத் தொடர்ச்சியாக இற்றைவரை அறாமல் தொடர்கிறது. இராணுவக் கெடுபிடிகள், இடப் பெயர்வுகள், சூறாவளிகள், சுனாமிகள் எல்லா வற்றையும் எதிர்கொண்டு மனஓர்மையுடன் தனது 72ஆவது வயதுவரை அவர் பணி தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியைத் தொடர்வதற்கான ஆன்மீக வலு ஒன்று வேண்டும். அவ்வலு நாடக கூத்து கலைகளுடன் அவர் இரண்டறக் கலந்தமையால் ஏற்பட்ட ஒன்றாகும். கலையோடு இரண்டறக் கலத்தல், அதுவாக மாறுதல் உண்மைக் கலைஞனின் இயல்பு. காணுமிடமெல்லாம் ஞானிக்கு இறைவன் தெரிவதுபோல் உண்மைக் கலைஞனுக்கு காணுமிடமெல்லாம் கலை தெரியும். இவ்வண்ணம் தான் நேசித்த கலையுடன் இரண்டறக் கலந்திருந்தமை குழந்தை செபமாலையின் சிறப்பான இயல்பாக எனக்குத் தெரிகிறது. இதற்கான பின்புலம் அவருக்கு வாய்த்தமையே இதற்கான காரணமாகும்.

அவரது குடும்பமே ஒரு கூத்து கலைக் குடும்பம். முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் ஒரு வகையில் உறவினர் நிறைந்த மன்றமாகவே இயங்கியது. குழந்தையின் அண்ணன் சீமான், தம்பிமாரான இரத்தினம், பிலேந்திரன், யேசுதாசன், சகோதரி எலிசபெத், மருமகன் அந்தோனிப்பிள்ளை, முக்கியமாக மனைவி றோஸ்மேரி அனைவரும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் இயங்க உதவிய குடும்ப அங்கத்தவர்கள். குழந்தையைப் புரிந்து கொண்டு அவர் வழியில் தாமும் சென்ற கூட்டத்தினர்.

கூத்துக் கலைஞராக வாழ்கின்ற குழந்தையின் மகன்தான் செபமாலை அன்புராசா. மன்னார் மாவட்ட கத்தோலிக்க நாடகங்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை வெளியிட்டவர்.

இப்படிப் பார்க்கும்போது குழந்தை செபமாலையின் குடும்பத்திற்குள் ஒரு பாரம்பரியம் தெரியவருகிறது. தந்தை செபஸ்தியான் அண்ணாவியார். விடிய விடிய கூத்துக்கள் மேடையிட்டவர். மகன் குழந்தை செபமாலை தந்தையிடமிருந்து கூத்தை முழுவதுமாகப் பெற்று அதனை நடத்தியதுடன் புதுமைகள் பலவற்றையும் நவீனத்தையும் புகுத்தி அதனை இன்னொரு தளத்திற்கு உயர்த்தியவர். குழந்தையின் மகனோ அன்புராசா அதனை ஆய்வுப் பொருளாக்கி அறிமுகம் செய்தவர். அண்ணாவியார், கூத்துக்கலைஞர், ஆய்வாளர் என பாட்டன், மகன், பேரன் என்ற வகையில் மன்னார் மரபுக் கூத்து செல்வது ஏனைய குடும்பங்களுக்குக் கிடைக்காத ஒரு பேறு.

இந்த அறாத்தொடர்ச்சி காரணமாகவே ஏனைய மன்னார் கூத்துக் கலைஞர்களிடமிருந்து வேறுபட்டு தனித்துவம் பொருந்தியவராக குழந்தை செபமாலை நமக்கு காட்சி தருகின்றார்.

## மரபும் மாற்றமும்

மன்னார் கூத்து தனித்துவமானது. மட்டக்களப்பு, யாழ்ப்பாண நாடகங்களின் அமைப்பினின்று வேறுபட்ட அமைப்பை உடையது. சிங்கள 'நாடகம' தோன்ற காலாயிருந்தது. இத்தகையதொரு மரபினை கத்தோலிக்க மதகுருமார் தம் மதம் பரப்பும் வாகனமாக்கிய போது ஈழத்துக் கூத்து மரபு இன்னொரு பரிணாமம் பெற்றது. இலத்தீன் மொழியில் பாதிரிமார் பேசிய பேச்சுக்களைவிட ஆலய வெளியில் நடைபெற்ற கூத்துக்கள் மக்களுக்கு கிறிஸ்தவத்தை அதிகம் புரியவைத்தது. பாதிரிமாரும் இக்கூத்துக் கலைக்கு மிகுந்த ஆதரவு அளித்தனர். இத்தகையதொரு கூத்து மரபினூடாகத்தான் குழந்தை செபமாலை வளர்ந்தார்.

இளம் பருவத்தில் அவரது அடிமனத்தில் கூத்தும், மத்தளமும், பாடலும், ஆடலும் உறைந்து போயிருக்க வேண்டும். இளமையில் அவர் தந்தையாருடன் இணைந்து கூத்துக்கள் ஆடியிருக்கவும் கூடும். காலனித்துவக் கல்வியும், நவீன சிந்தனைகளும், நவநாகரிகங்களும் அவரது சிந்தனைப் போக்கில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும். இதனால் அவரது கவனம் நாடகக் கலை மீது அதிகம் திரும்பியிருக்கலாம். இதன் விளைவாகவே



1970களில் 'யார் குழந்தை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நவீன நாடகப் பயணம் ஆரம்பமாகியது (அவரது நாடகங்கள் பற்றிய விபரம் இன்னொரு இடத்தில் கூறப்படுகிறது). தம் உணர்வுகளையும் திறன்களையும் வெளிப்படுத்த நாடகத்தை அவர் ஓர் ஊடகமாகக் கொள்கின்றார். அவரது நாடகங்களைச் சில எழுத்தாளர்கள், சமூக நாடகம், இலக்கிய நாடகம், சரித்திர நாடகம் எனப் பிரித்துக் காட்டியுள்ளனர். ஏறத்தாழ 10 சமூக நாடகங்களும், 03 சரித்திர நாடகங்களும், 04 இலக்கிய நாடகங்களும், 03 இசை நாடகங்களும், 12 நாட்டுக்கூத்து மரபு நாடகங்களும் இவர் எழுதியதாக புண்ணியாமீன் தனது கட்டுரையொன்றில் தரவுகள் தந்துள்ளார். எனினும், 17 சமூக நாடகங்களும், 08 இசை நாடகங்களும், 27 நாட்டுக்கூத்து மரபு நாடகங்களும், ஏனைய நாட்டிய, வசன நாடகங்களாக 18 என ஏறக்குறைய 70 நாடகங்களை எழுதியுள்ளார் என இப்போது அறியவருகிறோம். இத்தகவலைத் தந்தவர் குழந்தையின் மகன் அன்புராசா அடிகளார்.

இக்காலகட்டத்தில் குழந்தை இரண்டு பெரும் சிந்தனைகளாற் பாதிக்கப்பட்டிருந்தார்.

ஒன்று, தமிழரசுக் கட்சி பரப்பிய இன உணர்வுச் சிந்தனை.

மற்றொன்று, திராவிட முன்னேற்றக் கழகம் பரப்பிய சீர்திருத்தச் சிந்தனைகள்.

இவ்விரு சிந்தனைகளின் தாக்கம் அன்றைய இலட்சிய வேகம் மிக்க தமிழ் இளைஞர்களின் மீது இருந்தது. இப்பின்னணியிலேயே சீர்திருத்தக் கருத்துக்களும், தமிழ் உணர்வும் மிக்க நாடகங்கள் பல எழுந்தன. இந்நாடகங்கள் சினிமாச் செல்வாக்கும், பார்சி வழிநாடக மரபின் செல்வாக்கும் பெற்றிருந்தன. இத்தகைய நாடகங்கள் மலை நாடு, கொழும்பு, யாழ்ப்பாணப் பகுதிகளில் மேடையேறின. மக்கள் மத்தியில் சென்ற இந்நாடகங்கள் இன்னும் சரியாக ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் பதியப் படவில்லை.

இப்போக்குகளில் ஒன்றாகத்தான் குழந்தை செபமாலையின் சமூக, இலக்கிய, சரித்திர நாடகங்களை நாம் கணிக்க வேண்டியுள்ளது. 1960களில் ஈழத்து நாடக மரபில் இரண்டு பெரும் போக்குகள் தென்படுகின்றன. ஒன்று பேராசிரியர் வித்தியானந்தன் தொடங்கி வைத்த கூத்தை நவீன யுகத்துக்கு எடுத்துச் செல்லும் போக்கு. மற்றது பேராசிரியர் கணபதிப்பிள்ளை அறிமுகப்படுத்திய பேச்சுத்தமிழை உயிர்த்துடிப்புடன் நாடகத்தில் பயன்படுத்தும் போக்கு.

பேராசிரியர் வித்தியானந்தன் நாடகங்களால் கவரப்பட்ட குழந்தை, அவர் பாணியில் கூத்தைச் சுருக்கி, நாடகமாக அளிக்க முயல்கின்றார். அவரது கூத்து மரபு நாடகங்கள் யாவும் வித்தியானந்தன் பாணியில் சுருக்கக் கூத்துக்களாக அமைகின்றன.

மரபை இறுகப் பிடித்துக் கொண்டு இருக்கும் கலைஞனாக அல்லாமல் மரபை மென்மேலும் புதுத் திசைகளில் வளர்க்கும் கலைஞனாக குழந்தை 1960களில் இருந்து முகிழ்கிறார். விடிய விடிய ஆடப்பட்ட மரபு வழி நாடகங்களில் நின்று விலகி ஓரிரு மணித்தியாலங்களுக்குள் ஆடிவிடக் கூடிய படித்த மட்டங்களையும் பாடசாலை மாணவர்களையும் ஈர்க்கக் கூடிய குறுங்கூத்துக்களைப் படைக்கிறார். அவர் படைத்த கூத்துக்களாவன வீரத் தாய், கல் சுமந்த காவலர்கள், இணைந்த உள்ளம், வீரனை வென்ற தீரன், யார் குழந்தை, அழியா வித்துக்கள், விடுதலைப் பயணம், இறைவனா புலவனா, முதல் குடும்பம், பூதத்தம்பி, குண்டலகேசி, நவீன விவசாயம் போன்றனவாகும். முதல் ஐந்து நாடகங்களும் எழுத்துவடிவில் எமக்கு கிடைத்துள்ளன. இவை பரிசு பெற்ற நாடகங்கள் என்ற பெயரில் 1997இல் வெளியாகியுள்ளன.

வீரத்தாய்க்கான கரு திராவிட இயக்க கவிஞரான பாரதிதாசனின் கவிதைத் தொகுதியான வீரத்தாயிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இது ஒரு பெரிய வெளியீடு என்றும் தமது தேவைக்காக அதிலிருந்து சுருக்கி எடுத்துள்ளதாகவும் செபமாலை குறிப்பிடுகின்றார். மணிபுரி மன்னன், மனைவி விஜயராணி அவர்களது மகன் சுதர்மன் அவர்களது அமைச்சனதும், தளகர்த்தனதும் சூழ்ச்சியால் கவிழ்க்கப்படுகின்றனர். மனைவியும் மகனும் வெளியேற்றப்படுகின்றார்கள். வெளியேறிய மகாராணி விஜய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி ஆண்வேடம் பூண்டு மாறுவேடத்தில் மணிபுரியில் நடமாடி மகனையும் வீரனாக வளர்த்து நாட்டை மீட்டு மகனுக்கு அளிக்கிறாள்.

பெண்ணினது தன்னம்பிக்கை, வீரம், விடாமுயற்சி என்பவற்றை காட்ட பாரதிதாசன் படைத்த காவியம் அது. பெண் விடுதலையை மறைமுகமாக பேசும் இந்த நாடகம் குழந்தையைக் கவர்ந்துள்ளது.

கல்சுமந்த காவலர்கள் தமிழகத்தில் சேரன், செங்குட்டுவன் ஆட்சிக்காலத்தில் தமிழரைப் பழித்த கனகன், விஜயன் என்ற வட நாட்டு மன்னர்களைச் கல்சுமந்து தமிழ்நாடு வரவழைத்த கதையை ஆதாரமாகக் கொண்டது.

இணைந்த உள்ளம் கலைஞனுக்கும் அரச குமாரிக்குமிடையே உள்ள காதலைக் கூறுவது. அரச குமாரி குருடி என்று கூறி திரை போட்டு அத்திரையின் பின்னால் இருந்து அவளுக்குக் கற்பிக்குமாறு அரசன் வேண்டுகிறான். ஒரு கட்டத்தில் திரை கீழே விழ கலைஞனும், அரச குமாரியும் ஒருவரை ஒருவர் கண்டு காதலிக்கிறார்கள். மன்னன் கலைஞனுக்கு மரண தண்டனையை அளிக்கிறான். மன்னனுடன் நீதி கேட்டு போராடி மன்னன் மகள் ஜெயிக்கிறாள். இங்கும் ஏற்றத் தாழ்வுக்கு எதிரான கருத்தும் பெண்ணின் வாதாடும் திறனும் கூறப்படுகின்றது.

வீரனை வென்ற தீரனில் பிலிஸ்தியருக்கும், இஸ்ரயேலருக்கும் இடையில் நடைபெற்ற பெரிய சண்டையில் இஸ்ரயேல் பக்கம் நின்ற தாவீது என்னும் இடைச்சிறுவன் கவண் எறிந்து மிகப் பலசாலியும் இஸ்ரயேலர் கண்டு நடுங்கும் வீரனுமான கோலியாத்தை வெல்வதைக் கருவாக கொண்டது.


யார் குழந்தையின் கரு, ஒரு குழந்தையைத் தத்தமது குழந்தை என்று சலமோன் மன்னனிடம் வாதாடிய இரண்டு பெண்களின் வழக்கினை தன் புத்திசாலித்தனத்தினால் சாலமோன் முடித்து வைப்பது.

இவ்வைந்து நாடகங்களையும் ஒரு சேரப் பார்க்குகையில் குழந்தை செபமாலையின் சிந்தனை உலகு தெரிய வருகிறது.

விவிலியம் (வீரனை வென்ற தீரன், யார் குழந்தை), சிலப்பதிகாரம் (கல்சுமந்த காவலர்கள்), பாரதிதாசன் கவிதைகள் (வீரத்தாய்) என்பவற்றிலிருந்து தம் கதைக் கருக்களை எடுத்துக் கொள்கிறார் குழந்தை. இத்தெரிவில் தான் குழந்தையின் சிந்தனை புலனாகின்றது. வீரத்தாயிலும், இணைந்த உள்ளத்திலும் பெண்களின் வீரத்தையும், கல் சுமந்த காவலர்களில் தமிழரின் பெருமையையும், வீரனை வென்ற தீரனிலும், யார் குழந்தையிலும் சிறுவர்களின் வீரத்தையும் புத்திசாலித்தனத்தையும் காண்கிறார் குழந்தை.

பெண்கள், சிறுவர், தமிழர் என அவரது கருக்கள் அமைவதைக் காண்கிறோம். பெண்களை, சிறுவர்களை மரபு வழி பெண்கள் சிறுவர்களாக அன்றி இன்றைய சிந்தனைப் போக்குகளுக்கு ஏற்ப வீரமும், புத்திசாலித்தனமும் மிக்கவர்களாகப் போராடக் கூடியவர்களாக காண்கிறார். குழந்தையின் மனதின் முற்போக்கும் சீர்திருத்த சிந்தனைகளும் இதன் மூலம் எமக்கு தெரிய வருகின்றது.

கல்சுமந்த காவலர்கள் அவரது தமிழ் உணர்வின் வெளிப்பாடு. தமிழரசுக் கட்சியின் தீவிர அபிமானியாகவும் மன்னார் எம். பி. அழகக்கோனுக்கு நெருக்கமானவராகவும் அடக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களுக்கு ஆதரவாளனாகவும் இருந்த குழந்தை சேரன், செங்குட்டுவனாக மாறி தமிழைப் பழித்தோரை பழிவாங்கும் தன்மை கொண்ட நாடகத்தை



1970களில் 'அன்புப் பரிசு'



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உருவாக்குகிறார்.

தம் கூத்துப் புலமையினை பயன்படுத்தி இக்கருத்துகளுக்கு ஒரு கூத்து வடிவம் தருகிறார். ஏலவே *1960*களில் வித்தியானந்தன் சுருக்கி அளித்த கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன் என்பவற்றை அளிக்கை முறையிலும் பிரதிமுறையிலும் அறிந்திருந்த இவர் பேராசிரியரின் வழியில் தம் பயணத்தை மேற் கொள்கிறார்.

பேராசிரியர் வித்தியானந்தன் புராண இதிகாசக் கதைகளை எடுத்துக் கொண்டது போலவே இவரும் விவிலிய, தமிழ் இலக்கிய கதைகளை எடுத்துக் கொள்கிறார்.

## பேராசிரியர் வித்தியானந்தன் வழியில்

*1950, 1960*களில் பேராசிரியர் வித்தியானந்தனும் பேராசிரியர் சரத்சந்திராவும் இலங்கை நாடக உலகை, மண் சார்ந்த நாடக மரபை நோக்கித் திருப்பிய இரு பெரும் பிரதிமைகளாகும்.

ஆங்கில நாடக மரபையடியொற்றிய நாடக மரபொன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பமானது. பேராசிரியர் லுடுவிக், பேராசிரியர் சரத்சந்திரா, பேராசிரியர் கணபதிப் பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகிய நால்வரும் முக்கியமானவர்கள். முன்னவர்கள் இருவரும் சிங்கள நாடக மரபையும் பின்னவர்கள் இருவரும் தமிழ் நாடக மரபையும் பாதித்தவர்கள். லுடுவும், கணபதிப்பிள்ளையும் ஆங்கில நாடக மரபையும், சரத்சந்திராவும் வித்தியானந்தனும் இலங்கைக் கூத்தினடியாக சிங்கள, தமிழ் மக்களுக்கான மண் சார்ந்த நவீன நாடக மரபையும் உருவாக்க முயன்றவர்கள். இம்முயற்சிக்குப் பின்னணியாக அன்றைய காலகட்ட சமூக அரசியல், பொருளியல், சமுதாயப் பின்னணிகள் அமைந்திருந்தன.

பேராசிரியர் வித்தியானந்தன் மரபு மட்டக்களப்பில் அவரது மாணவர்களால் முன்னெடுக்கப்பட, மன்னாரில் இம்மரபு அவரது நேரடி மாணவரல்லாத மானசீக மாணவனான குழந்தை செபமாலையினால் முன்னெடுக்கப்படுகிறது. இவ்வகையில் குழந்தையின் கூத்துக்கள் ஆராயப்படுதல் பயன்தரும் முயற்சியாகும்.

வித்தியானந்தன் தயாரித்த கர்ணன் போர், நொண்டி நாடகம் என்பன இரண்டும் பழைய மரபுவழிக் கூத்துக்களின் சுருக்கமாகும். இராவணேசனும், வாலிவதையும் புதிய கூத்துருவ நாடகங்களாகும். இராவணேசனையும், வாலிவதையையும் இக்கட்டுரையாசிரியர் வித்தியானந்தன், சிவத்தம்பி வழிகாட்டலில் அன்று எழுதியிருந்தார். இந்நான்கு கூத்துக்களுடனும் குழந்தையின் கூத்துக்களை ஒப்பிட்டாயுமிடத்து குழந்தையின் கூத்து நோக்கும் சிந்தனை உலகும் தெரியவரும்.

கர்ணன், இராவணன், வாலி ஆகியோர் காவிய நாயகர்கள் தத்தமக்கெனத் தனித்துவமான குணாம்சமுடையவர்கள். குழந்தையின் கூத்துப் பாத்திரங்களும் காவிய நாயகர்களே. தத்தமக்கெனத் தனித்துவக் குணாம்சமுடையவர்களே.

வித்தியானந்தன் கூத்து மரபை அவர் பின் வந்தோர் சமூகப் பிரச்சினைகளைக் கூறும் மரபாகப் பின்னாளில் வளர்த்தெடுத்தனர். வடமோடிப் பாணியிலமைந்த சங்காரம், காத்தான் கூத்துப் பாணியிலமைந்த கந்தன் கருணை, ஏகலைவன் என்பனவற்றை இதற்கு உதாரணமாக நாடக வரலாற்றாய்வாளர் குறிப்பிடுவார்.

குழந்தை, வித்தியானந்தன் மரபினைப் பின்பற்றி காவிய நாயகர்களைக் கதாநாயகர்களாக்கியிருப்பினும் சமூகப் பிரச்சினைகளைக் கூறும் கூத்து வடிவிலான நாடகங்களையும் இயற்றினார் என்பது நினைவிற்கொள்ளத் தக்கதாகும்.

நவீன விவசாயம் என்ற நாடகம் எனக்கு வாசிக்கக் கிடைக்கவில்லையாயினும், அத் தலைப்பு அந்நாடகம் சமூகம் சார்ந்த பிரச்சினை கூறும் நாடகம் என்பதனைச் சுட்டி நிற்கிறது.

இவ்வகையில் வித்தியானந்தனையும் அவர் பின் வந்த மரபையும் இணைத்து நிற்கும் ஒரேயொரு மன்னார் நாடகப் பிரதிநிதியாகக் குழந்தை நம்முன் நிற்கிறார் என நாம் ஊகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் தவறொன்றுமில்லை என்றே நான் எண்ணுகிறேன்.

அவரது கூத்துக்கள் தமிழர் போராட்டங்களை மறைமுகமாக வெளிப்படுத்தும் நாடகங்களாகும். தமிழரசுக் கட்சியின் கருத்து நிலைத்தாக்கம் பெற்றவரான குழந்தை தமிழரசுக் கட்சிமேடைகளில் தேர்தல் பிரசாரமும் தமிழர் விடுதலைப் பிரசாரமும் செய்த சிறந்த பேச்சாளர் எனவும் அறிகிறோம்.

இவ்வகையில் தமக்கு வாலாயமான கூத்துக்கலையை நவீன முறையில் சுருக்கி தமிழ் உணர்வுப் பிரசாரம் செய்யவும் குழந்தை பயன்படுத்தினார். இதனை அவர் 1960கள் தொடக்கம் பிற்காலம் வரை தொடர்ச்சியாகச் செய்தார் என்பதனை அவரது கூத்துக்களைக் கால முறைப்படி நோக்குவோர் அறிந்து கொள்வர்.

தமிழ் உணர்விலிருந்து சற்றுமாறி மக்கள் பிரச்சினையையும் அணுகியுள்ளார் என்பதற்கான ஆதாரமே 'நவீன விவசாயம்' எனும் கூத்தாகும்.

பரிசு பெற்ற நாடகங்கள் என்ற பெயரில் வந்த அவரது நான்கு கூத்துக்களும் எழுதப்பட்ட காலம் 1960, 1970 காலப்பகுதிகளாகும். இக்கூத்துக்களில் அவரது கருத்துலகம் என்ன என்பது முன்னரேயே கூறப்பட்டுள்ளது. இக்கூத்துக் களில் அவர் ஒரு கூத்துப் புலவராக நம் முன் விரிகிறார். மரபை மீறாத மரபினடியாக காலத்திற்கு ஏற்ப நேரச் சுருக்கமுடைய நவீன கூத்துக் களைப் படைப்பவராக காணப்படும் குழந்தையின் மனவுலகு மக்கள் நலனாட்டம் நிரம்பியதாக இருந்தது என்பதனை இக்கூத்துக்களின் பல பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு நாடக முடிவிலும் மங்களம் பாடப்படும் போது அவரது மக்கள் நலனாட்டம் புலப்படுகிறது.

இந்தத் தரணியில் அந்தம் வரை புகழ்
சொந்தம் எனவாகிச் சுகமாக வாழுவோம்
(வீரத்தாய்)


பார் ஒங்கும் துன்பம் துயர் நீங்கவே - நாட்டில்
பண்பு அன்பு பொறுமை ஓங்கவே
ஏரோங்கி நம் தொழில் சிறக்கவே - எங்கள்
இன்னல் வறுமை துன்பம் நீங்கவே
(கல் சுமந்த காவலர்கள்)

பாடி ஆடியோர்கள் பண்பாய் வாழ
பாக்கியமும் பெற்று பாரில் நீழ
நாடிச் செல்வம் பெற்று நட்பாய் வாழ
நற்தயை செய்வீரே யேசுநாதா
(இணைந்த உள்ளம்)

இன்னல்கள் நீங்கிடவே - நாட்டின்
எதிர்காலம் ஓங்கிடவே
(வீரனை வென்ற தீரன்)

பார் பொங்க எங்கும் பண்பாய் வாழ்கவே
உண்மை வழி சென்று நாம் - நல்ல
உலகினைப் படைத்திடுவோம்
(யார் குழந்தை)

இவ்வரிகளுக்குள் குழந்தை செபமாலையின் விசால உள்ளம், மக்கள் நலனாட்டம் புலனாகின்றது. உலகத்தில் அனைவரும் செளக்கியமாக வேண்டும். துன்பம் துயரங்கள் நீங்கவேண்டும். இன்னல் வறுமை துன்பம் இல்லாது ஒழிய வேண்டும். பண்பாய் செல்வம் பெற்று வாழவேண்டும். இன்னல் நீங்க வேண்டும். எதிர்காலம் ஓங்க வேண்டும். புதிய நல் உலகு படைக்க வேண்டும் என்று தமது கற்பனை உலகை நம் முன் கொணர்கிறார். அவர் காணும் உலகு பேதமற்ற, மனிதனை மனிதர் அடக்காத அனைவரும் செல்வம் பெற்று பண்புடையோர் வாழும் உலகு. தனது சமகால உலகில் காணப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராகக் கனன்று கொண்டிருந்த அடி உள்ளத்தின் வெளிப்பாடுகள் தான் இவ்வரிகள்.



புனித சில்வேஸ்திரியார் வாசாப்பு. 04.09.2012இல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மரபில் வள்ளுவர் தொடக்கம் கம்பருக்கூடாக பாரதிவரை இக்குரலை நாம் கேட்கிறோம். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்ற வள்ளுவர் வழியில், எல்லோ ரும் எல்லாம் பெற்றுச் செல்வம் எய்தவேண்டும் என்ற கம்பன் வழியில், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற பாரதி வழியில் "இன்னல்கள் நீங்கிடவே நல்ல எதிர்காலம் ஓங்கிடவே" என வாழையடி வாழையென இணைந்து கொள்கி றார் குழந்தை செபமாலை அவர்கள்.

தமிழ்ப் புலவர் மரபில் இரண்டு வித மரபுகளைக் காணுகிறோம். ஒன்று மன்னரையும் அவர் தம் வாழ்க்கைகளையும் பாடிய புலவர் மரபு. மற்றது, மக்களையும் மக்கள் நலனையும் நாடிய புலவர் மரபு. குழந்தை செபமாலை மக் கள் நாடிய புலவர் மரபை தனது மரபாகத் தெரிந்தமை அவரது ஆளுமையின் வெளிப்பாடு. இத்தகையதொரு தெரிவினை அவர் மேற் கொண்டமைக்கான காரணத்தை அவரது சமூக வாழ்க்கைப் பின்னணியிலிருந்துதான் புரிந்து கொள்ள முடியும். ஒரு கலைஞனின் அக மன உலகுக்கும் அவனது வாழ்க்கைப் பின்ன ணிக்கும் இடையில் அத்யந்த தொடர்புண்டு. இவ்வாய்வு தனியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

## குழந்தையின் நாடகங்கள்

குழந்தை எழுதிய கூத்துக்கள் பற்றி இதுவரைகூறப்பட்டதாயினும் கூத்திற்கும் அப் பால் அவர் ஒரு சமூக, சரித்திர, இலக்கிய, இசை நாடக ஆசிரியனாகவும் இருந்துள்ளார்.

பணத்திமிர், பாட்டாளிக் கந்தன், தாகம், காவல் தெய்வங்கள், விண்ணுலகில் நாம், பணமா கற்பா, மனமாற்றம், திருந்திய உள்ளம், இலட்சியவாதிகள், தியாகிகள், புதிய வாழ்வு, இப்படியும் மனிதர்கள், ஒற்றுமையின் சிகரம் போன்ற 17 சமூக நாடகங்களையும், இறை வனின் சீற்றம், தாரும் நீரும், கவரி வீசிய காவ லன், சிலம்பின் சிரிப்பு என நான்கு முக்கியமான இலக்கிய நாடகங்களையும், நல்வாழ்வு, பரதேசி மகன், இலங்கையை கொன்ற இராஜேந்திரன் என மூன்று சரித்திர நாடகங்களையும், புது மைப்பெண், அன்புப்பரிசு, வாழ்வளித்த வள்ளல், கள்வனை வென்ற காரிகை, செங்குருதி போன்ற எட்டு இசை நாடகங்களையும் எழுதியுள்ளார். இவை தவிர அவர் 27 கூத்துக்களை எழுதி யுள்ளார் என்பதும் முன்னர் குறிப்பிடப்பட் டுள்ளது. இவ்வகையில் சமூக, சரித்திர, இசை, இலக்கிய, கூத்து நாடகங்கள் என ஏறத்தாழ 70 நாடகங்களை குழந்தை எழுதியுள்ளார் என்று அறியவருகின்றோம். இவரது நாடகங்கள் அனைத்தும் ஒரு சேரத் தொகுக்கப்படுமிடத்து குழந்தையின் கருத்துலகையும் கலையுலகை யும் தெளிவாக அறியும் சந்தர்ப்பம் நமக்கு ஏற்படும்.

இத்தகவல் அவர் ஓர் ஆற்றுகைக் கலைஞர் மாத்திரமன்றி ஒரு நாடக எழுத் தாளன், அதிலும் நாடகத்தின் பல்வேறு பாணி களிலும் நாடகம் எழுதியவர் என்ற உண்மை யினை எமக்குத் தருகிறது. நாட்டுக்கூத்து மரபு நாடகங்களாக இருபத்தேழினையும் ஏனைய நாடகவடிவங்களில் நாற்பத்தி மூன்றினையும் எழுதிய குழந்தை கூத்து மூலமே தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன் கூத்தினையே தனது அடையாளமாகவும் தக்க வைத்துக் கொள்கிறார். அதனாலேயே இக்கட்டுரை அவ ரது கூத்துலகம் பற்றிக் கூறுகிறது.

இவ்வபிப்பிராயங்கள் அவரது எழுத்துக் களை வைத்துக் கூறப்பட்ட அபிப்பிராயங்களே. அரங்கு இருவகையினது. ஒன்று, செயல் அரங்கு. மற்றது, சொல் அரங்கு. சொல் அரங்கு மேடை, அளிக்கை சம்பந்தமானது. குழந்தை யின் கூத்து அளிக்கை முறை தனியாக ஆராயப் படவேண்டியது. அவரது அளிக்கை முறைமை, அளிக்கை உத்திகள் அதில் பார்வையாளர் பங்கு என்பன நாடகவியல் மாணவர்களால் மேற் கொள்ளப்படவேண்டும். குழந்தை ஒரு கூத்து நெறியாளனாக மாத்திரமன்றி ஓர் ஆற்றுகைக் கலைஞனாகவும் செயற்பட்டவர். தமது இசை யினாலும், நடிப்பினாலும் பல்லாயிரக்கணக் கான ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். அவர் கொள்ளைகொண்ட விதம் பற்றி ஆய்வுகள் அவசியம். இங்கு நாம் எமக்குக் கிடைத்த அவரது கூத்துப் பிரதிகளை வைத்து அவரது கூத்துலகைப் புரிந்து கொள்ள முயற் சித்துள்ளோம். பிரதிகளினூடாக இவர் கூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லகு அடக்கு முறைக்கு எதிரானது, மக்கள் நலனாட்டம் சார்ந்தது என்பது தெரிய வருகின்றது. ஆற்றுகையிலும் இவ்வம்சங்களை நாம் இனம் காண்பது அவசியம். கதைப் பொருளுக்கு ஓர் அரசியல் இருப்பதுபோல் ஆற்றுகைக்கும் ஓர் அரசியல் உண்டு.

சுருங்கச் சொன்னால் குழந்தை செபமாலை மரபு வழி மன்னார் கூத்தை நவீன உலகுக்கு ஏற்ப திசை திருப்பிய முன்னோடி எனலாம். இவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் 1960களில் ஆரம்பித்த புதிய கூத்து மரபினை மரபு இறுக்கத்தோடு தொடர்ந்தவர். இத்தொடர்ச்சியாக வித்தியானந்தன் சிந்தனைகளுடன் பல இடங்களில் ஒன்றித்தும் சில இடங்களில் வேறுபட்டும் செயற்பட்டுள்ளார் போலத் தெரிகிறது.

இப்பார்வையிலான தொடர் ஆய்வுகள் குழந்தை செபமாலையையும் அவரது கூத்துப் பணி தொடர்பான தொடர்ச்சிகளையும், விசேடமாக அவர் கூத்துலகையும் மேலும் புரிந்து கொள்ள உதவும். ■

**"1966ஆம் ஆண்டு மார்கழி 29ஆம் நாள் வியாழக்கிழமை 'வீரகேசரி' பத்திரிகையில், 'கலைக்கழகப் பரிசில் நாடகங்கள் – ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் அவ்வாண்டு கலைக்கழக தமிழ் நாடகக் குழுவினரால் நடத்தப்பட்ட நாடக விழா பற்றிக் கூறப்படுகிறது.**

மார்கழி 16ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து நான்கு நாட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களான தங்கபுரி காவலன் (பாசையூர் வளர்பிறை நாடக மன்றம்), சாளுவப் புயல் (ஆரையம்பதி இளைஞர் நாடக மன்றம்), அந்த நாளும் வந்திடாதோ (மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம்), வீரத்தாய் (மன்னார் முத்தமிழ் கலாமன்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும்), புலந்திரன் களவு (அக்கரைப்பற்று விபுலானந்தர் நாடக மன்றம்) ஆகிய நாடகங்கள் இந்நாடக விழாவில் இடம்பெற்றிருக்கின்றன.

இந்நாடகங்கள் பற்றிய விமர்சனங்களை இக்கட்டுரையில் குறிப்பிட்டிருகிறார்கள். இவ்வரிசையில் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஸ்தாபகரும், வீரத்தாய் நாடகத்தின் தயாரிப்பாளரும், நெறியாளரும், இந்நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தவருமான கலைஞர் கலாபூஷணம் திரு.செ.செபமாலை (குழந்தை) அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரின் வடபாங்கு நாடகமான வீரத்தாய் நடிப்பிலும் கதையமைப்பிலும் சிறந்திருந்தது. பாரதிதாசனின் வீரத்தாய் நாடகக் கவிதையைப் பின்பற்றியமைந்த இந்த நாடகத்தில் காங்கேயனாக வந்த திரு.செ.தம்பிராசாவின் (கலைஞர் செ.செபமாலை –குழந்தை– அவர்களுக்கு தம்பிராசா என்ற பெயரும் உண்டு. இப்பெயர், இவர் பெற்றோர் இவருக்குச் செல்லமாக வைத்த பெயராகும்) நடிப்பு உன்னதம். படைத்தளகர்த்தனாக நடிக்கும் இவரது நடை உடை பாவனைகளனைத்திலும் நயம் பேசுகிறது. வடபாங்கு நாடகமான இந்நாடகம் சபையிலிருந்த பலரது பாராட்டுதல்களுக்கும் உள்ளானது. சலிப்பின்றி முழு நாடகத்தையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. கதைச்சிக்கல்கள் எதுவுமில்லாமல் சரளமாக, விறுவிறுப்பாக நடிப்பைக் கொண்டிருந்தமை, நாடகத்துறைக்கோர் திருப்பம் என்றே கொள்ளல் வேண்டும்..."



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார்ப் பிரதேச நவீன கவிதை முன்னோடி: கவிஞர் குழந்தை



**பேராசிரியர் செ.யோகராசா**
B.A.(Hons),M.A.(Jaffna),Ph.D.(Jaffna)
*மொழித்துறை,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*
*மட்டக்களப்பு.*

ஈழத்து நவீன இலக்கியத் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றிச் சிந்திக்கின்ற போது அவற்றை உருவாக்குகின்ற பின்புலங்களுளொன்றாக, பிரதேசச் செல்வாக்கு காணப்படுவது புலப்படும். அவ்வடிப்படையில் பத்துப் பிரதேசங்களை உப பண்பாட்டு அலகுகளாக இனங்காண்பார் பேராசிரியர் சிவத்தம்பி. இப்பின்னணி நிலை நின்று மன்னார் பிரதேச நவீன கவிதையின் தோற்றம் பற்றி நோக்கும் போது அறுபதுகளில் இங்கு நவீன கவிதை கால் கொள்வதும் அதன் முன்னோடியாக கவிஞர் குழந்தை (கலாபூஷணம் செ.செபமாலை) வெளிப்படுவதும் புலப்படுகின்றது.

ஈழத்தில் நவீன கவிதை நாற்பதுகளளவிலே கால் கொண்டாலும் ஐம்பதுகளிலேயே பரவலான வளர்ச்சி எய்துகிறது. நாற்பதுகளளவிலே யாழ்ப்பாணப் பிரதேசக் கவிஞர்களே பெரும்பான்மையினராக வெளிப்பட்டனர். ஐம்பதுகளிலே நிலை மாறுகின்றது. 'மொழியுணர்ச்சி' என்பது இக்காலக் கவிதையின் முக்கிய போக்காகின்றது. இப்போக்கு பல பிரதேசக் கவிஞர்களையும் முதன்முதலாக ஒன்றிணைக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சச்சிதானந்தம் முதலானோரும் மட்டக்களப்பிலிருந்து கவிஞர் காசி ஆனந்தன், ராஜபாரதி, நீலாவணன், எருவில் மூர்த்தி, ஆரையூர் அமரன், ஜீவா ஜீவரத்தினம், பாண்டியூரன், புரட்சிக்கமால், திமிலைத் துமிலன், வாகரை வாணன், மௌனகுரு முதலானோரும், மலையகத்திலிருந்து சக்தி பாலையாவும், திருகோண மலையிலிருந்து தாமரைத் தீவானும் இவ்வேளை நவீன கவிதையுலகிற்குள் பிரவேசிக் கின்றனர். இத்தகைய சூழலில் மன்னார் பிரதேசம் அறிமுகப்படுத்திய கவிஞராகத் திகழ்பவரே கவிஞர் குழந்தை!.

இக்கால மொழியுணர்ச்சிக் கவிதைகளின் உள்ளடக்கம், தமிழ் மொழிப்பற்று, சிங்கள மொழி எதிர்ப்பு, சிங்கள ஆட்சி எதிர்ப்பு, மொழிப் போராட்டத்திற்கு தூண்டுதல் (சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், பாத யாத்திரை, ஊர்வலம் முதலியன) முதலியனவாக வெளிப்பட்டது. வெளிப்பாட்டு ரீதியில் சினிமா பாடல் மெட்டினைத் தழுவியவனவாக, குறிப்பாக: ஊர்வலப் பாடல்களும், எழுச்சிப்பாடல்களும் காணப்பட்டன.

ஊர்வலப் பாடல் பாடியோருள் மிக முக்கியமான ஒருவர் அண்மையில் காலமான மட்டக்களப்பு பிரதேசத்து ஆரையூர் அமரன். அவரது பாடல்கள் சமகாலச் சினிமா மெட்டுக்களைத் தழுவி எழுந்தன.

உதாரணம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : 'காட்டுக்குள்ளே கண்ட பூவு'**

*மோட்டார் தன்னில் போட்ட சிறி*
*நாட்டைக் கலக்குது - இந்த*
*நாட்டைக் கலக்குது - அதன்*
*சலசலப்பு வேஷங்கண்டு*
*சந்தி சிரிக்குது - இந்த*
*சந்தி சிரிக்குது!*

*(அவ்வேளை சிங்கள சிறி பொறித்த கார்களின் நம்பர் தகடுகள் அழிக்கப்பட்டன)*

கவிஞர் குழந்தையும் சினிமாப் பாடல் மெட்டுக்களிலே எழுச்சிப்பாடல்கள் இயற்றியுள்ளார். உதாரணம்:

**மெட்டு : "கண்ணும் கண்ணும் பேசுவது உன்னால் அன்றோ"**

*நெஞ்சில் எண்ணும் போது வீரம் எங்கேயடா*
*தமிழ் நிலையை - எண்ணி நீ உணர்ந்து எழுந்து பாரடா*
*நிம்மதியாய் உறங்க மனம் வருகுதேயடா*
*உந்தன் நிலையை எண்ணி உயர்ந்து நீயும் எழுந்து பாரடா!*

*சேர சோழ பாண்டியனை மறந்து விட்டாயோ - உன்*
*செந்தமிழ் மானம் தன்னை மறந்து சென்றாயோ*
*சேர்ந்து அறப்போரில் வந்து நிமிர்ந்து நில்லடா - நீ*
*செய்வ தறியாத உண்மை உணர்ந்து செல்லடா*

சினிமா பாடல் மெட்டுக்கள் தவிர, இஸ்லாமியப் பக்திப்பாடல் மெட்டுக்களிலும் கவிஞர் குழந்தை பாடல்களைப் புனைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. உதாரணம்:

**தொகையறா**

*அறப்போரே நம்மைக் காக்கும்*
*அறப்போரே நம்மைக் காக்கும்*

**பல்லவி**

*அநியாயமாக அன்று அடித்தார்களே*
*அண்ணல் செந்தமிழ் காக்கும்*
*அன்பின் வழியாகவே அறப்போர் செய்ய*
*அனைவரும் வாரீர் அன்புடன் நடப்பீர்*

**சரணம்**

*இந்து முஸ்லிம் கிறிஸ்தவ சோதரர்காள்*
*இணைந்தே ஒன்றாய் போராடுவோம்*
*அன்பின் வழியாகவே அறப்போர் செய்குவோம்*
*அனைவரும் வாரீர் அன்புடனே நடப்பீர்*

மொழியுணர்ச்சியால் ஈர்க்கப்பட்டோருள் முஸ்லிம் கவிஞர்களுக்கும் முக்கிய இடமிருந்தமை இவ்வேளை நினைவுகூரத்தக்க விடயமாகின்றது. ஆரையூர் அமரனது பாடல்கள் திருமலைக் குரல், அறப்போர்க் குரல், இதயக் குமுறல் முதலான தலைப்புக்களில் சிறு நூல்களாக வெளிவந்துள்ளன. இவரது பெயர்களோடு ஒற்றுமையுடையனவாக கவிஞர் குழந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்புக்களும் - அறப்போர் அறைகூவல், இன்பத் தமிழன் இதய ஓலம் என்றவாறு காணப்படுகின்றன. (இவ் இருவரது தொகுப்புக்களும் பெறுதற்கரிதாகவிருப்பது விசனத்திற்குரியது)

மொழியுணர்ச்சிக்காக பாடிய கவிஞர்களிடம் பிரதேசப் பற்று, ஊர்ப்பற்று என்பன காணப்படுவதும் தவிர்க்க இயலாததே. ஆரையூர் அமரன், தாமரைத் தீவான் ஆகியோர் தமது பிரதேசம், ஊர் சார்ந்தவையாக பல கவிதைகளை எழுதியிருக்கின்றனர். கவிஞர் குழந்தையும் இவ்வாறான கவிதைகள் எழுதியிருக்கின்றார். 'மாதோட்டம்' (2000) என்ற தொகுப்பிலுள்ள கவிதைகள் அத்தகையன.

உதாரணமாக: 'எழிலுறு எனது கிராமம்' என்ற தலைப்பிலுள்ள கவிதையின் ஆரம்ப பகுதிகள் இவை:

"சீர்பெறும் ஊராம் பாரீர்
சிறந்திடும் தேராம் கேளீர்
பார்பெறும் வளங்கள்
பாங்குடன் விளங்கும் ஊராம்
ஏர்பெறு வளங்கள் யாவும்
எழிலுடன் ஆட்சி செய்யும்
கற்பெறு வளங்கள் பொங்கும்
கண்ணிய முருங்கன் ஊராம்

வானமே முட்டக் கோவில்
வளர்புகழ் எட்ட ஊரில்
தானமே சிறந்து பொங்க
தர்மமே நிறைந்து ஓங்க
மோனமாய் மக்கள் எல்லாம்
முழுவதும் தொண்டு செய்து
கானமாய் தமிழின் கீதம்
களரியில் முழக்குகின்றார்"

எண்பதுகளிலே மொழியுணர்ச்சி என்பது இன உணர்ச்சியாக பரிணாமம் பெற்றதும் தவிர்க்க இயலாத விதத்தில் ஆயுதப் போராட்டமும் உள்நாட்டுப் போரும் வெடித்ததும் அதனால் தமிழ் பேசும் மக்கள் பேரவலங்களை எதிர்கொண்டதும் அனைவருமறிந்த விடயங்களே. இத்தகைய சூழலைப் பிரதிபலிக்கும் கவிதைகளும் கவிஞர் குழந்தையால் எழுதப்படுகின்றன. 'வீதியில் அலைந்து வாழ்வோர் வெற்றியும் பெறுவாராக' என்ற தலைப்பிலே கவிஞர் எழுதிய கவிதையின் சில பகுதிகள் பின்வருவன:

"உண்பதற்கு உணவுமில்லை
உடுப்பதற்கு துணியுமில்லை
மண் வீட்டில் விளக்கு வைக்க
மண்ணெண்ணெய் தானுமில்லை
கண்மணியாம் சேயர்களும்
கல்வி கற்க வளங்களில்லை
திண்ணமதாய் வாழ்வதற்கு
தேசம் தன்னில் துணிவுமில்லை

விண்ணிலே சுற்றி நின்று
வேடிக்கை காட்டல் என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மண்ணிலே மக்கள் தன்னை*
*மதித்திடவில்லை அந்தோ*
*எண்ணிலாக் குண்டு வீசி*
*எத்தனை பேரைக் கொன்றார்*
*புண்ணிலே வேலைப்பாய்ச்சி*
*புதுமையும் காண்பதென்ன!"*

சுருங்கக் கூறின், மன்னார் பிரதேச நவீன கவிதையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் கவிஞர் குழந்தைக்கு முக்கிய இடமுள்ளமை மேற்கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது. எனினும் கிடைத்தற்கரிய அவரது முன்னைய தொகுப்புக்களும் பிரசுரமாகாத அவரது கவிதைகளின் புதிய தொகுப்புக்களும் கைக்கெட்டும்போதுதான் அவரது இடம் மேலும் தெளிவும் வலுவும் பெறுமென் பதனை மனங்கொள்வதவசியம். ■

**திரு. ம.சிமியாம்பிள்ளை**
**கல்விப் பணிப்பாளர், மன்னார் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி**

காலவெள்ளத்தால் கரைந்துவிடாது ஞாலமெல்லாம் கலந்து உலாவும் கலை அறிவால் நிலையுயர்ந்து நிற்கும் 'குழந்தை' ஆசிரியரின் அகிலத்தில் கலைமணம் பரப்பும் கவின் சேவைக்கு ஆசிரியப்பணி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என அன்புடன் ஆசி கூறுகிறேன்.

திரு. குழந்தை அவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக கலைத்துறைக்குச் செய்த தொண்டு அளப்பெரியது. நாடகத்தின் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார், கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோரின் வரிசையிலே வைக்கப்பட வேண்டியவர் திரு.செபமாலை ஆசிரியர் அவர்கள். அன்னார் நாடக ஆசிரியராகவும், நெறியாளராகவும், நடிகராகவும் பல சிறப்புகளைக் கொண்டவர்.

கலையாற்றல்கொண்ட இவர் குப்பையிலே கிடக்கும் குண்டுமணி போல சமூகத்தின் சாக்கடையிலே தள்ளித் தவிக்கும் ஏழை எளியவர்களது வாழ்க்கையையும், படோபம் பிடித்த பணக்காரவர்க்கத்து வாழ்க்கையையும், சுதந்திர வேட்கையால் துள்ளித்துடிக்கும் இளைஞர்கள் யுவதிகள் வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டுவதுபோல நாடகம் மூலம் நாட்டுமக்களுக்கு விருந்து வைத்தார். சரித்திர நாடகம், சமூக நாடகம், இலக்கிய நாடகம், சமய நாடகம் ஆகிய நாடகங்களை ஆக்கித் தந்ததோடு நில்லாது அவரே நடித்து அந்தந்த நாடகங்களை எல்லாம் உயர்ந்த சிறந்த நாடகங்களாக மிளிரச்செய்த பெருமை அவருக்கே சாரும்.

தமிழை இயல் இசை நாடகம் எனப் பகுத்து வழங்கலாம். இயலும் இசையும் தனித்தனியே இயங்குகின்றபொழுதிலும் நாடகம் இயலையும் இசையையும் தன்னகத்துள் சேர்த்துக்கொண்டது பெருமைக்குரியது. ஒரு கதாபாத்திரத்தின் உணர்ச்சிகளையும் குணஇயல்புகளையும் சிறந்தமுறையில் வெளிகாட்ட நாடகம் பெரிதும் உதவும். இத்துணை சிறப்புக்கொண்ட நாடகத்துறையிலே திரு. செபமாலை ஆசிரியர் அவர்கள் பல காலம் உழைத்து திரு. கின்சிலி போன்ற நாடகத்தந்தை என்ற பெயரைப்பெற்று என்றும் அழியாப்புகழை ஈட்டி மங்காத தங்கமாக வாழ்வது எம் எல்லோருக்கும் பெருமை தருகின்றது.

இப்பெரியார் நல்லாசிரியனாக நம் நாட்டு மாணவர்கள் நல்வாழ்க்கை நடாத்த நாள்தோறும் நல்லவனவற்றையும் புகட்டினார். நல்லதிபராக நல்லபல கல்விக்கூடங்களை நயம்பட நிர்வகித்தார். உயர்ந்துவரும் முருங்கன் மகா வித்தியாலயத்தில் உதவி அதிபாராக பல காலம் சேவை செய்ததோடு பல்கி பெருகி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கெல்லாம் இன்முகத்தோடு இறுமாந்து எதிர்கொண்டு வெல்லும் இயல்பினர் இவர். எவ்வாறு கலைத்துறையில் எல்லோரது ஏகோபித்த பாரட்டுக்கும் உரித்தாகின்றாரோ அவ்வாறே வாழ்க்கை முறையிலும் ஆசிரியப் பணியிலும் ஏகோபித்த பாராட்டை பெறுகின்றார். இவரது சேவைகள் இடையறாது பல ஆண்டுகள் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுவதோடு இவரது வாழ்க்கை வளமுற்று செழிக்க என் நல்லாசிகளை மீண்டும் வழங்குகின்றேன்.

**நன்றி: கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் குழந்தை செபமாலையை வாழ்த்த நினைத்தபோது...



**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
B.A.(Hons),M.A.,Ph.D.
*முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

எமது விருப்புக்கும் மதிப்புக்கும் உரிய கூத்துக்கலைஞர் குழந்தை செபமாலை அவர் களின் சேவை நலச் சிறப்புவிழா மலர் ஒன்று வெளிவருவதனை அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். பல்பரிமாண ஆளுமை மிக்க குழந்தை செபமாலையின் பணிகளை உள்ளுந் தோறும் என் உள்ளத்து உருவான சில சிந்தனை களைச் சிறு குறிப்பாக குறிப்பிடுகின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் கலை வரலாற்றிலே கத்தோலிக்கத்துக்குச் சிறப்பான தோர் முக்கியத்துவம் உண்டு. போர்த்துக்கல் நாடு கூத்துக்கலையிலும் சிறப்பான வளர்ச்சி அடைந்திருந்த காலகட்டத்திலேதான் போர்த் துக்கேயர் கீழைத்தேசங்களுக்கு வந்தனர். இலங்கைக்கு வந்த போர்த்துக்கேய குருமார்கள் கல்வியிலும் கலைகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றனர். இச்சிறப்புத் தேர்ச்சிகளை இறை விசுவாசத்திற்கே அர்ப்பணித்தனர்.

இலங்கையிலே கத்தோலிக்கத்தைப் பரப்ப முயன்ற போர்த்துக்கேய குருமார்கள் தாம் கற்ற கல்வியையும் பெற்ற அனுபவத்தையும் மக்களிடம் கொடுத்ததோடு மக்களிடம் பரம் பரை பரம்பரையாக நிலவி வந்த கலை, பண்பாட்டு மரபுகளைத் தாமும் உள்வாங்கிக் கொண்டனர். குருமார்கள் கொண்டும் கொடுத் தும் பெற்றவை புதியதோர் கலைமரபாக இலங்கையிலே நிலைபெறலாயிற்று.

அண்மைக்காலமாக இக்கலைமரபுகள் பற்றிய ஆய்வுகள் நடைபெறுவதனையும் அவதா னிக்க முடிகின்றது. போர்த்துக்கேயகுருமார் அன்று தொடக்கிய இக்கலை மரபு இன்று வரை அறாத் தொடர்ச்சியுடன் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. தமிழ் மண்ணோடு ஒட்டி, தமிழ் மக்களின் வாழ்வியலோடு சங்கமித்து அப்புனி தர்கள் தோற்றுவித்த கலைமரபு இன்று உச்ச நிலையைத் தொட்டு நிற்கின்றது. இந்த உச் சத்தை நிறுவும் சாட்சியாகத் திருமறைக் கலா மன்றத்தினைக் குறிப்பிடலாம்.

எங்கெல்லாம் கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றார்களோ, அதுவும் கத்தோலிக்க தொழிலாளர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல் லாம் கூத்துக்கலை உயிர்ப்புடனேயே வாழ்கின் றது. உண்மையான பக்தி உணர்வோடு, இறை யாசி வேண்டிக் கத்தோலிக்க கலைஞர்கள் மேடையேற்றும் நாட்டுக் கூத்துக்கள் பல வற்றை நான் பார்த்திருக்கின்றேன். கலைஞர் கள் நோன்பிருந்து இறை காணிக்கையாக அரங்கேற்றும் கூத்துக்கள் "நிகழ்த்துக்கலை" என்ற நிலைக்கு அப்பால் ஆண்டவருக்கு அர்ப் பணம் செய்யும் நிகழ்வாகவும் கருதப்படு வதனையும் அவதானிக்க முடியும்.

இலங்கையில் கத்தோலிக்கர்கள் வளர்த்த கூத்துக்கலை தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் பல கலைமரபுகளுக்கு ஊற்றுக்காலாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நல்ல கூத்துக்கலைஞர்களை உருவாக் கிய இம்மரபு அதன் உடனிகழ்வாக அண்ணாவி மார் பலரை உருவாக்கியுள்ளது. அண்ணாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் என அழைக்கப்படும் நாடகாசிரியர்கள் கூத்துக்கலை சார்ந்த பல்வேறு கலைகளிலும் அறிவும் ஆற்றலும் திறனும் உடையவராக இருக்க வேண்டியது அவசியமாகும். அண்ணாவியார் என்ற சொல்லுக்கு ஆசிரியர் என்றும் பொருள். ஆடலும் பாடலும் அமைவரும் புலமையாளனாக அண்ணாவியார் இருப்பார். அண்ணாவியாருக்கு என்றும் சமூகத்திலே நன்மதிப்பு உண்டு. இந்த வகையிலே தான் கூத்துக்கலைஞர் குழந்தை செபமாலையையும் நோக்க வேண்டும்.

அண்ணாவியார் கூத்தோடு தொடர்புடைய எல்லா வாத்தியங்களையும் கையாளத் தெரிந்தவராக இருக்க வேண்டும். பெரும்பாலும் பாரம்பரிய இசைக் கருவிகளிலே இவர்களுக்கு நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் இருக்கும். கூத்தினைத் தொய்யவிடாது வாத்தியங்களைப் பயன்படுத்த அண்ணாவியார் அறிந்திருப்பார்.

அண்ணாவியாருக்கு இசைஞானம் எவ்வளவு முக்கியமானதோ அந்த அளவுக்கு மொழிப் புலமையும் கைவர வேண்டும். பல்வேறு சந்தங்களிலும் பாட்டுக்கட்டுந் திறன் பெற்றிருக்க வேண்டும். யாப்பு நெறிநின்று ஓசை உடைவு பெறாமல் பாட்டுக் கட்டுந்திறனுடைய அண்ணாவிமார்கள் பலரைக் கத்தோலிக்கம் நமக்குத் தந்திருக்கின்றது.

கத்தோலிக்கக் கூத்துக் கலைவழியாகப் புகுவதான கலை மரபுகள் பல வளர்ச்சியடைந்தன எனலாம், சீன்கள், தட்டிகள் இவற்றுக்கான சித்திரங்கள் (ஓவியங்கள்) விதானிப்புக்கள், சோடனைகள், காட்சி அமைப்புக்கேற்ற பின்னணிகள் எனப்பலவாறாகக் கூத்துக்கலையோடு இணைந்து வளர்ந்த கலைகள் பல. இவை பற்றியெல்லாம் அண்ணாவியாருக்குத் தெரிந்திருக்கவேண்டும். 19ஆம் நூற்றாண்டின் கடைக் காலிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அச்சுவேலி ச.தம்பிமுத்துப்பிள்ளை அரங்கேற்றிய கூத்துக்களிலே இவை சிறப்பிடம் பெற்றன என்று அறிய முடிகின்றது. இந்த மரபினை இன்று திருமறைக் கலாமன்றம் பேணுவது குறிப்பிடத்தக்கது.

திரு. குழந்தை செபமாலை அவர்கள் கத்தோலிக்க கூத்து மரபினூடாக மேற்கிளம்பியவர். இயல், இசை, நாடகம் என்று பேசப்படும் முத்தமிழிலும் ஆற்றலும் ஆளுமையும் திறமையும் உடைய இவர் ஓர் பயிற்றப்பட்ட தமிழாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உச்சப் புகழில் விளங்கிய காலகட்டத்திலே அங்கு பயிற்சி பெற்றவர். ஆசிரியப் பணியும் இவரது கலை ஈடுபாட்டுக்குத் தீனி போட்டது எனலாம்.

கலைஞனுக்குரிய எல்லாக் குணாம்சங்களும் இவரிடம் நிரம்பியிருந்தலைத் தரிசித்திருக்கின்றேன். மானுடம் பேணும் மகத்துவம், தாய் மொழிப் பற்று, தாய்நிலப் பற்று என்பவை இவரிடம் இயல்பாகவே சுவறியிருந்தது.

நல்ல கலைஞனாகச், சிறந்த ஆசிரியராக, பொறுப்பான குடும்பத் தலைவராக விளங்கிய திரு. குழந்தை செபமாலை அவர்களின் மகன் வணக்கத்துக்குரிய அன்புராசா அடிகளார் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர். அன்புராசா என்ற பெயருக்கு மிகப்பொருத்தமானவர். அவரின் குரலினிமையிலே நான் கிறங்கிப்போவேன். "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் என்னும் சொல்" என் தேவர் குறளை எனக்கு அடிக்கடி அன்புராசா அடிகளாரின் பணிகள் நினைவூட்டும்.

குழந்தை செபமாலை எனும் மாபெரும் கலைஞனுக்கு என்றும் எனது வாழ்த்துக்கள்! ■

"மகிழ்ச்சி, புதியதென்பு, மதிநுட்பம் ஆகியவை நாடகக் கலையினது அடித்தளக் கூறுகளாகும். நாள் முழுவதும் உழைத்துச் சோர்ந்த மனிதனின் உள இறுக்கத்தை நெகிழ்விப்பது. அடுத்த நாளுக்குத் தேவையான புதிய சக்தியை அவனுக்கு அளிப்பது, அவனது உள்ளத் தூண்டலுக்கு உறுதுணையாக நிற்பது ஆகியவை அவ்வடித்தளக் கூறுகளின் விளக்கமாகும். நாடகம் நன்நெறிப் போதனைகளின் வகுப்புக்கள் அல்ல. மாறாக சுவை உணர்வின் தரத்தை மெல்ல உயர்த்தி மனிதாபிமானமான பிணைப்புக்களைஅவனுள் ஏற்படுத்தி நிற்பது. குழம்பிக் கிடக்கும் ஆத்மாவுக்குள் மென்மேலும் புத்தொளியையும் புதுக்காற்றையும் தோன்றச் செய்வது"

\- ரோலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை

**பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்**
Tamil Pulava Vidvan(Madurai),
M.A.,Ph.D.(London),Ph.D.(Passau).
*இயக்குநர்,*
*திருமறைக் கலாமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*



### பொது

உன் பெயரைக் கூறுகின்ற
அன்னை ஈந்த செபமாலை
உள்ளதையே சொன்னால் நீ
எம் மண்ணில் தபமாலை
சந்திப்போர் வரும் வேளை
பட்டறியும் பொன்மாலை
சமயத்தின் பற்றால் நீ
வற்றாத அருள்மாலை
வாடாப்புகழ் பெற்ற
உனக்கீடோ மலர்மாலை
நாடாய் உன்நயம் பாடும்
நாவலர் செய் பாமாலை

### தனி

1.
அரங்கில் அவன் ஆடுவது
அற்புதத்தின் ஒரு விளக்கம்
ஆடமுடியாதவர்க்கும்
அவன் அசைய வரும் இயக்கம்
ஆணவமே இல்லாத
அடக்கத்தின் உருவானான்
பேணரிய படைப்புக்கள்
பேசும் அவன் ஆளுமையை

2.
பாடுவான் பாட்டமைப்பான்
பண்ணிசையால் மகிழ்விப்பான்
காடுகரம்பையிலும்
கலங்காது தொழிற்படுவான்
கூடும் சிறுவருக்குச்
சிற்றுரைகள் செய்தவர்கள்
தேடும் அறிவுடன் மெய்த்
தெய்வ மொழி ஊட்டிடுவான்

3.
குடும்பம் என்ற பயணத்தில்
திசை காட்டும் ஒளிவிளக்கு
கடும் சொற்கள் அறியாத
கலைச் செல்வன் கரவறியான்
ஒழுக்கத்தின் சான்றுகளை
மெய்ப்பின் ஒரு தலைவன்
வழுவாத தடம் பதித்து
வரலாற்றில் வாழ்ந்திடுவான்

4.
இன்பனுடன் ஆனந்தன்
இசைக்கருவி வல்லுநர்கள்
அன்புக்கு நிகரில்லை
அர்ப்பணிப்பின் நற்பணியில்
திருமகளும் மலர்விழியும்
கயல் விழியும் தமிழோடு
பெருமிதமாய் விளையாடும்
பெரும் குழுமம் கலைக்குடும்பம்

### வாழி

உன் பதிவைச் செய்வதிலே உள்ளத்தில்
மகிழ்ச்சியுண்டு
மென் கலைகள் சிந்தும் உனை
மேதினியோர் போற்றிடுவர்
என்னை யார் கேட்டாலும் நான்
கொடுக்கும் பதில் இதுவே
"அன்னவன் போல் ஒரு குழந்தை
நம்மவருள் உண்டோ சொல்"
■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசப் வாஸ் பணியில் பொதுநிலையினர் பங்களிப்பு:

## இப்பின்புலத்தில் குழந்தையின் கிறிஸ்தவ நாட்டார் கலைச்செயற்பாடுகள்

## - ஒரு பார்வை




**பேராசிரியர் வண. ஞா.பிலேந்திரன்**
B.Th.(Rome),Dip.in Ed.,M.Phil.,Ph.D(Jaffna).
*தலைவர்,*
*கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறைகள்*
*யாழ். பல்கலைக்கழகம்*


### முன்னுரை

கிறிஸ்துவின் பணியிலும், திருச்சபையின் பணியிலும் பொதுநிலையினர் அதிகம் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும். இலங்கைத் திருச்சபையின் வரலாற்றிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கை திருச்சபைக்கு புத்துயிரளித்த அருளாளர் யோசப் வாஸ் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றமைக்கு இலங்கை வாழ் பொது நிலையினர் வழங்கிய ஆதரவும், பங்களிப்பும் முக்கியம் பெற்ற காரணிகளில் ஒன்றாகும். இப்பின்னணியில் இன்றும் திருச்சபையின் பணிக்குப் பல்துறைசார் பங்களிப்பு நல்கி வரும் பலருள், சிறந்த ஒருவராக கலாபூஷணம் ஆசிரியர் குழந்தை அவர்கள் கிறிஸ்தவ நாட்டார் இசை வழி வழங்கும் சேவை பற்றிய சில குறிப்புக்கள் இங்கு இடம் பெறுகின்றன.

இலங்கையில் கத்தோலிக்க விசுவாசமானது போர்த்துக்கேயர் ஆட்சியில் வித்திடப் பட்டு, ஒல்லாந்தர் ஆட்சியில் கலாபனையால் புடமிடப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியின் பிற்கூற்றில் மறுமலர்ச்சி பெற்று வளர்ச்சி கண்டது. ஒல்லாந்தர் ஆட்சியில் பல நிலைகளிலும் முற்றாக அழியும் ஆபத்தை எதிர்நோக்கிய கத்தோலிக்க திருச்சபை புத்துயிர் பெற்றமைக்கும் யோசப் வாஸ் அடிகளின் பணி பாரிய வெற்றியாயமைந்தமைக்கும் பல காரணங்களை முன் வைக்கலாம். இவற்றுள், வாஸ் அடிகளுக்கும், கத்தோலிக்க மக்களுக்குமிடையே நிலவிய ஆழமான உறவே முதன்மையும், அடிப்படையுமான காரணமாகும்.

### யோசப் வாஸ் பிறப்பும், இளமைப் பருவமும்

யோசப் வாஸ் 21 ஏப்பிரல் 1651இல் கிறிஸ்ரோப்பர் வாஸ், மரிய தெ மிரண்டா என்னும் கொங்கோணி மொழி பேசும், பிராமண பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக கோவாவிலுள்ள பெனோலிம் என்னும் இடத்தில் பிறந்தார். எளிமையான இக்குடும்பம் கத்தோலிக்கப் பாரம்பரியங்களை இறுக்கமாகக் கடைப்பிடித்தமையினால் பிள்ளைகளும் விசுவாசத்தில் உறுதி பெற்று வளர்ந்தனர். தந்தையின் ஊராகிய சாங்கோலேயில் ஆரம்பப் பாடசாலைக் கல்வியையும், புனித பவுல் கல்லூரியில் இலக்கணக் கல்வியையும் கற்று, தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பெற்ற புனித தோமஸ் அக்குவைனஸ் உயர்கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இவர் தமது 20ஆவது வயதில் குருத்துவப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து அதற்கான பயிற்சிகளைப் பெற்று 1676இல் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார். 1676 முதல் 1681 வரையிலுமான காலப்பகுதியில் கோவாவில் பணியாற்றும் போதே இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலைபற்றி கேள்வியுற்று இலங்கை செல்வ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குத் தீர்மானித்தார்.[1] வாஸ் அடிகளின் வாழ்வையும், இலங்கைத் திருச்சபையின் வரலாற்றையும் முற்றாக மாற்றியமைத்த இத் தீர்மானமே வாஸ் அடிகளின் வாழ்வில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது.

## திருச்சபையையும், மக்களையும் அன்பு செய்தவர்

இலங்கையில் குருக்களின்றி அல்லலுறும் கத்தோலிக்க மக்களின் அவல நிலையறிந்த வாஸ் அடிகள் எவரது அறிவுரையோ, ஊக்குவிப்போ இன்றி தாமாகவே இலங்கை வருவதற்கு தீர்மானித்தார். இம்மக்கள் ஆயனில்லா ஆடுகளாக அல்லற்பட்டு, நீண்ட காலக் கவனிப்பின்றி, மறையறிவு குன்றியவர்களாக, ஆன்மீக வரட்சியினால் பரிதாப நிலையில் இருந்தனர். இப்பின்னணியில் பல ஆபத்துக்கள், எதிர்ப்புக்கள் மத்தியில் தம்மை இனம்காட்டிக் கொள்ள அஞ்சியவர்களாக, அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்த கத்தோலிக்க மக்களைக் கண்டறிந்து திருவருட்சாதனங்களை வழங்கி, விசுவாசத்தில் உறுதியும் உற்சாகமும் அளிக்கும் பணி இலகுவானதல்ல.

போர்த்துக்கேயர் ஐரோப்பியத் திருச்சபையை, மாறுபட்ட கலாசாரப் பின்னணி பற்றிய சிந்தனையின்றி இலங்கையில் மீள் நடுகை செய்தனர். ஆனால் வாஸ் அடிகள் இந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைமை பிரச்சினைகள், சிந்தனைப்போக்கு, பழக்கவழக்கங்களைப் புரிந்தவராக, ஒத்துணர்வு கொண்டவராக சூழ்நிலைக்கும், மக்களின் தேவைக்கும் காலத்திற்குமேற்ற நல்விடயங்களை உள்வாங்கிய திருச்சபையை நிறுவினார். அவரது பற்றற்ற தூயவாழ்வும், கடவுளின் அன்பை மேலாக வெளிப்படுத்தும் சொற்களும் செயல்களும், மக்கள்மேல் கொண்டுள்ள தூய அன்பும், கரிசனையும் எடுத்துக்காட்டான துறவியாக இனங்காட்டின.

## I. பொது நிலையினர் பங்களிப்பு

வாஸ் அடிகள் 1687 முதல் தனியொருவராகவே இலங்கையில் பணியாற்றினார். வாஸ் அடிகள் சிக்கலான சூழ்நிலையில் வெற்றிகரமாகப் பணியாற்றியமைக்கு பொதுமக்கள் தனிநபர்களாகவும், குழுமங்களாகவும் வழங்கிய ஒத்துழைப்பு முக்கிய காரணிகளிலொன்றாயமைகின்றது. முதலில் தனிநபர்கள் சிலரது பங்களிப்புப் பற்றி நோக்கலாம்.

### 1. யோண் வழங்கிய ஆறுதல்பணி

பயணத்துணைவராக மட்டுமன்றி இறுதி வரையும் வாஸ் அடிகளுக்கு உதவி வழங்கி, கடும் நோயுற்ற வேளையில் உடனிருந்து பராமரித்தவர் பிரமாணிக்கமுள்ள ஊழியன் யோண் என்பவராகும். இவர் வழங்கிய உதவி காலத்தால் என்றும் மறக்கப்பட முடியாதது. இவருக்கும் வாஸ் அடிகளுக்குமிடையே நிலவிய உறவை எஸ்.ஜி.பெரேரா அடிகள் கீழ்க் கண்டவாறு விளக்குகின்றார். "அவரது பிரமாணிக்கமான பணியாளன் யோணை அவர் தனது சொந்தச் சகோதரன்போல நடத்தி வந்தார். கோவாவிற்கு எழுதும் மடல்களில் எல்லாம் அவனைப்பற்றி விசாரித்து எழுதுவார். 'தனது சகோதரன் யோண் வாஸ்' என்றே அவனை அழைப்பார். ஏனென்றால் அவர் அவனுக்குத் தனது குடும்பப் பெயரையே அளித்திருந்தார்."[2] வாஸ் அடிகளின் மறைப்பணியில் உடன் ஊழியன் யோண் பயணத் துணையாளராக மட்டுமன்றி, மக்களுக்கு மறை அறிவை கற்பிப்பவராகவும் உதவியிருப்பார் எனக்கொள்வதற்குப் போதிய சூழ்நிலைச் சான்றுகளுண்டு. இதனால் வாஸ் அடிகளின் மறைபரப்புப் பணியில் யோண் மறை ஆசிரியராகவும் உதவியிருப்பார் எனக் கொள்வது பொருத்தமானது. தொடர்ந்து பவுலோ தெ போரஸ் என்பவரின் பணியை நோக்கலாம்.

### 2. பவுலோ தெ போரஸ் (Paulo de Barros)

யாழ்ப்பாணத்தை அடைந்த வாஸ் அடிகள் உண்மையான கத்தோலிக்கரை இனம் கண்டு, தாம் யார் என்பதனை வெளிப்படுத்த தமது அன்றாட உணவுக்காக இரந்து கொண்டே, தகுந்த சந்தர்ப்பத்தையும் தேடிக் கொண்டே இருந்தார். இவ்வாறான நிலையில் வாஸ் அடிகள் (இரப்பவனாக) நகரில் அலைவதை அறிந்த பவுலோ தெ போரஸ் என்னும் போர்த்துக்கேய கத்தோலிக்கர் வாஸ் அடிகளிடம் உண்மையை வெளிப்படுத்தும்படியும், அவரது பாதுகாப்பிற்கு தாம் உத்தரவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதாக அவர் உறுதியளித்தபோது தம்மை வெளிப்படுத்தினார். பவுலோ தெ போரஸ் ஒல்லாந்தரின் யானை வியாபாரியாகச் செயற் பட்டதால் ஒல்லாந்த அதிகாரிகள் செல்வாக் கைப் பெற்றிருந்ததோடு பொருளாதார நிலையிலும் வசதியோடு வாழ்ந்த ஒரு உத்தம கத்தோலிக்கராவார். வாஸ் அடிகள் தமது அடையாளத்தை வெளிப்படுத்தியபோது மிக அவதானத்துடன் அவரையும் யோனையும் தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்று புகலி டம் அளித்ததோடு, இருவரதும் அனைத்துத் தேவைகளையும் கவனித்து வந்தார். இவரைத் தொடர்ந்து இவரது மகன் அன்ரனி தெ போரஸ் இவ்வாறே செயற்பட்டார். எனினும் ஒல்லாந்த அதிகாரிகள் பின்பு உண்மையை அறிய வந்த போது விக்ரோறி யானோ தெ போரஸ் என்பவருக்கு கடும் தண்டனை வழங்கி பணிநீக்கம் செய்தனர்.

### 3. வாஸ் அடிகள் யாழ்ப்பாணத்திலிருந்து சில்லாலைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பான அயற்கிராமத்தில் வாஸ் அடிகளுக்குப் பாதுகாப்புத் தேட வேண்டியதோர் சூழ்நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் பவுலோ தெ போரஸ் என்பவரின் மிக நெருங்கிய உறவினர்களும் மிக நம்பிக்கையான கத்தோலிக்கர்களும் மட்டுமே திருப்பலியில் பங்கு கொள்ளவும், திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்ளவும் முடிந்தது. அடிகளாரின் பாதுகாப்பு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஏனெனில் சன்மானத்திற்காக சுயநலப்போக்குக் கொண்ட எவரும் காட்டிக்கொடுக்ககூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்தன. மேலும், அடிகளாரின் பணிகள் ஏனைய கத்தோலிக்கருக்கும் கிட்டுவதற்கான வழிவகைகள் பற்றியும் சிந்திக்க வேண்டியிருந்தது. பாதுகாப்பிற்காக அனுப்பும் கிராமம் "பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கரைக் கொண்டதாகவும், வாஸ் அடிகளுக்கு உயிர் ஆபத்து நேரிடுமாயினும், தங்கள் உயிரைக் கொடுத்தும் இவரைக் காத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.'' இப்படியானதொரு இடத்திற்கே இவரை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறானதொரு பொருத்தமான கிராமத்தை யாழ்ப்பாண மக்களிடத்தில் காண்பதற்கு பெரும் சிக்கல் இருக்கவில்லை. அது சில்லாலையாக இருந்தது.

### 4. சில்லாலையில் வாஸ் அடிகள் – மூப்பர் வழங்கிய கடும் பாதுகாப்பு

வாஸ் அடிகள் தங்கிப் பணியாற்று வதற்கு சில்லாலைக் கிராமம் தெரிவு செய்யப் பட்ட செய்தி அக்கிராம மக்களுக்கு அறிவிக் கப்பட்டபோது மிகுந்த பாதுகாப்புடன் சில்லா லைக்கு வாஸ் அடிகளை அழைத்து வருவ தற்கு ஒரு குழு அனுப்பப்பட்டது. வாஸ் அடிக ளின் பாதுகாப்பு, பணி ஒழுங்குகள், தேவை களைக் கவனித்தல் அனைத்து விடயங்களும் சில்லாலை மூப்பரின் பொறுப்பில் விடப்பட்டது. நீண்ட கால அனுபவமுள்ள மூப்பரும் பொறுப் புடனும், நிதானத்துடனும் ஏனைய மக்களின் ஞான வாழ்வில் அக்கறை கொண்டவராகவும் நடந்து கொண்டார் என்பதற்கு ஏடுகள் சான்று பகர்கின்றன.

வாஸ் அடிகளும் அனைத்து விடயங்க ளிலும் மூப்பருக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன், மூப்பரின் வழிநடத்தலில் செயற்பட்டார். ஆரம்பத்தில் திருப்பலியில் பங்கு கொள்வ தற்கோ, திருவருட்சாதனங்களைப் பெறுவ தற்கோ அல்லது வேறு எத்தேவையின் நிமித் தம் குருவுடன் தொடர்பு கொள்வதற்கோ தமது நம்பிக்கை பெறாத எவரையும் அனுமதிக்க வில்லை. பிற்பட்ட காலத்தில் வீட்டிலிருந்து வெளியே செல்வதாயின் மிக நம்பிக்கையான பாதுகாப்புடனேயே அனுப்பி வைத்தார். மூப்பர் வழங்கிய கடும் பாதுகாப்புக் காரணமாகவே இரண்டு வருடங்கள் பாதுகாப்புடன் பணியாற்ற முடிந்தது.

### 5. டொன் பேத்றோ – ஏனைய எழுவர் மரணம்

"தங்கள் உயிரைக் கொடுத்தும் வாஸ் அடிகளைக் காக்க வேண்டும் என்னும் கடும் நிபந்தனையுடனேயே சில்லாலை மக்கள் தங்களுடன் வாஸ் அடிகளை அழைத்துச் சென்றனர். 1689இல் கிறிஸ்து பிறப்பு விழாவன்று இடம்பெற்ற குருவேட்டையின்போது நூற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமானோர் சில்லாலையில் கைதுசெய்யப் பட்டபோதும் வாஸ் அடிகள், யோண் ஆகிய இருவரும் பாதுகாக்கப்பட்டு புத்தளம் வரையும் அழைத்துச் செல்லப்பட்டனர். எனினும் கைது செய்யப்பட்ட டொன் பேத்றோ, மனுவல் டி சில்வா என்போருடன் கைது செய்யப்பட்ட ஏனைய எழுவரும் ஒல்லாந்தப் படையினரால் சாட்டைகளால் தண்டிக்கப்பட்டு சிறிது காலத் தில் மரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவ்வாறு தாம் முன்வழங்கிய வாக்கின்படி தம் உயிரை அர்ப்பணித்தும் தங்கள் குருவின் உயிரைக் காத்தனர்.

இவர்களின் இச்சாவு ஒருபுறம் வாஸ் அடிகளுக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தியிருந் தாலும், அவரது இரண்டு வருட காலப்பணியின் விளைவாக மக்கள் உள்ளத்தில் ஆழமான விசுவாசத்தை உறுதிப்படுத்தியுள்ளார் என்பது தெளிவு. இவ்வாறான விசுவாச சாட்சியம் வாஸ் அடிகளும் பல ஆபத்துக்கள் சிரமங்கள் மத்தி யில் தமது பணியை மேலும் மேற்கொள்வ தற்குச் சிறந்த ஊக்குவிப்பாக அமையும் என்ப தில் சந்தேகமில்லை. இவை போன்ற சம்பவங் கள் தென் கரையோரத்திலும் இடம்பெற்றன.

### 6. தென்கரையோரப் பகுதியில் சிம்மாவோ கொலாசே

சில்லாலை மூப்பரைப் போன்று தென் கரையோரப் பகுதியில் உறுதியான விசுவா சமும், ஆழமான அர்ப்பணமும், செயற்பாட்டில் தீவிரத்துடனும் விளங்கியவர் கொழும்புப் பகுதி மூப்பர், மீனவரான சிம்மாவோ கொலாசே என்பவராகும். இவரிடம் விளங்கிய சான்று வாழ் வைப் பாராட்டி மனுவல் மிரண்டா அடிகள் 1707 இல் எழுதிய கடிதத்தில் பெரும் பாராட்டை வழங்கியுள்ளார். (V.Perniola, Dutch Period, Vol-I, 1983, p.364), இவ்வாறான கத்தோலிக்கரின் துணிவும், சேவையில் காட்டிய ஆர்வமும் அடிக ளுக்கும் ஏனைய ஒரற்றோறியன் குருமாருக்கும் பெரும் ஆறுதலாக அமைந்திருக்கும் என்பதை உறுதியாக கூறலாம்.

### 7. மக்கள் புகலிடம் அளித்தல்

வாஸ் அடிகளும், ஏனைய குருக்களும் மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டபோது ஆபத்துக்கள் மத்தியிலும் அந்தந்த இடங்களில் வாழ்ந்த மக்களோ தங்கள் குடிசைகளில் இவர் களை ஏற்று, புகலிடம் வழங்கி, கண்காணித் துள்ளனர்.

## II. குழுமமாகப் பொது நிலையினர் வழங்கிய பங்களிப்பு

### 1. மூப்பு, அண்ணாவி ஆகியோர் பணி

வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்றோறி யன் சபைக்குருமாரும் மிகக் குறைந்த எண் ணிக்கையினராயிருந்தபோதும் சிறந்த முறை யில் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கியுள் ளனர். மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மூப்பு, அண்ணாவி (உபதேசியார்) என்போரின் உதவியுடன் இக்கிறிஸ்தவ சமூகங்கள் உரு வாக்கப்பட்டன. சமூக அந்தஸ்து பெற்றவர்களை யும் மறையில் ஆழமான பற்றுள்ளவர்களையுமே இப்பணிக்கு நியமனம் செய்தனர்.[3]

காண்க, VPD II, p. 407.

மூப்பர் என்பவர் சமூகத்தின் தலைவ ராகவும், வழிநடத்துனராகவும், பிணக்குகளின் போது நடுநிலையாளராகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) என்பவர் வழிபாடு களின்போது குறிப்பாக ஞாயிறு தினங்களில் வழிபாடுகளை நோயாளருக்காகச் செபித்தல், இறந்தோரின் அடக்கச் சடங்கை நடத்துதல், மறைக்கல்விப் பாடங்களைக் கற்பித்தல், ஆலயங்கள் (கொட்டில் ஆலயங்கள்) உள்ள இடங்களில் அவற்றின் கண்காணிப்பாளராகவும் பணியாற்றினார்.

யோசப் வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்றோறியன் குருமாரின் பணிகளும் தங்கள் பணிகளை திட்டமிட்டுச் செயற்படுத்தவும் படிப்படியாக கிறிஸ்தவ சமூகங்களை உருவாக் கவும் மூப்பர், அண்ணாவி என்பவர்களின் பணி கள் பெரும் உதவியாயமைந்தன.(Bede Baracatta,1991, p.111) மக்களும் இவர்களைத் தம் தலைவர்களாக ஏற்று ஒத்துழைப்பு வழங்கி, மதிப்பளித்தனர். இவர்கள் குருக்களாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்கள் என்பது முக்கிய விடயமாகும். இந்த நடை முறை போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்துள்ளது. வாஸ் அடிகள் சில்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூப்பரின் கண்காணிப்பில் விடப்பட்டமை இதனை எடுத்துக் காட்டுகின்றது.(ஞா.பிலேந்திரன், தொகுப்பாசிரியர், 2011, பக். 61)

மேலும், வாஸ் அடிகள் சில்லாலையில் தங்கிப் பணியாற்றுவது அவரது பாதுகாப்பு, அண்டைய கிராமங்களுக்கு அவரது பணியை ஒழுங்கு செய்வது, தேவைகளைக் கவனிப்பது ஆகிய பொறுப்புக்கள் மூப்பரிடம் ஒப்படைக்கப் பட்டன. வாஸ் அடிகளும் மூப்பருக்குப் பணிந்து கொண்டவராக நடந்துள்ளார். சில்லாலையைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதே முறைமை நடைமுறையில் இருந்துள்ளது.

குருக்கள் பொதுநிலையினருடன் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்வதன் முக்கியத்துவமும், பொதுநிலையினரும் ஆக்கபூர்வமான முறையில் பொறுப்புக்களை ஏற்பதுடன் குருக்களின் பணிகளில் பங்கு கொள்ள வேண்டியதன் தேவையையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

## 2. பொதுநிலையினர் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளல்

வாஸ் அடிகள் தமது பத்து வருடப் பணிக் காலத்தில் தனி மனிதராகவே பணியாற்றினார். பிற்பட்ட காலத்திலும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான ஒரற்ரோறியன் சபைக் குருக்களே இணைந்து கொண்டனர். இருப்பினும் இவரது இலட்சியம் வெற்றி பெற்றமைக்கு இவர் பொதுநிலையினரிடம் கொண்டிருந்த நம்பிக்கையும், அவர்களது ஒத்துழைப்பை நாடியமையும், அவர்களுக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தமையும், மறைப்பணியில் அவர்களையும் ஈடுபாட்டுடன் பங்குகொள்ள வைத்தமையும் ஆகும். இரண்டாம் வத்திக்கான் முன்வைத்த இலட்சிய திருச்சபையினை வாஸ் அடிகள் நிறுவ முற்பட்டு கணிசமான அளவில் வெற்றியும் கண்டுள்ளார். இரண்டாம் வத்திக்கான் சங்க அமர்வுகளில் பொதுநிலையினருக்கு திருச்சபையில் உரிய இடத்தை வழங்க வேண்டும் என்னும் விடயம் வலியுறுத்தப்பட்டது. அதாவது அவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் ஊக்குவித்து எல்லா மட்டங்களிலும் பணிப் பகிர்வை ஏற்படுத்துவது சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களிலொன்றாக அமைந்திருந்தது. எனினும் இச்செயற்பாட்டை 17ஆம் நூற்றாண்டின் முற்கூற்றிலேயே வாஸ் அடிகள் இலங்கைத் திருச்சபையில் நடைமுறைப்படுத்தியுள்ளமை அடிகளார் தூரநோக்குடன் செயற்பட்டமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

“இவரது பணிக்காலத்தில் அண்ணளவாக 70 ஆயிரம் மக்களை இலங்கைத் திருச்சபையில் இணைத்துக் கொண்டதுடன், நாடுபூராகவும் 15 ஆலயங்களும், நானூறு சிற்றாலயங்களும் நிறுவப்பட்டன. இவருடன் பணியாற்றிய சக பணியாளர்கள் வழங்கிய சான்றுகளின்படி “அதிகமான நேரங்களில் மக்களைத்தேடி நெடும் பயணங்கள் மேற்கொள்வார்”. “தமது களைப்பைப் பொருட்படுத்தாது எப்போதும் மக்களின் குறைகளுக்கு ஆர்வத்துடன் செவிமடுப்பார். அவ்வேளைகளில் விசுவாசத்தில் திடமானவர்களை மேலும் உறுதிப்படுத்த கண்டித்துத் திருத்தும் வேளையில் விசுவாசத்தில் பலவீனமானவர்களுக்கு, ஆதரவும் அறிவுரையும் வழங்கி ஊக்குவிப்பார். யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கர் தமக்கே உரித்தான உருவக மொழியில் “இவரைச் சம்மனசு சுவாமி” என்றே அழைத்தார்கள்.

## 3. மறைத்தூதுப் பயணங்களும் மக்கள் புகலிடம் வழங்கலும்

மக்கள் தரிசிப்பிற்கு இலங்கையில் பணியாற்றும் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் யோசப் வாஸ் அடிகள். ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களைத் தரிசிப்பதில் பல ஆபத்துக்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்பகுதிகளில் மாறுவேடத்தில், இரவுவேளைகளில் மட்டும் மக்களைத் தரிசிக்க முடிந்தது. ஒல்லாந்த இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பின் மத்தியிலேயே இவரது இல்லத்தரிசிப்புக்கள் இடம்பெற்றன. வாஸ் அடிகள் வாழ்வில் உடன் பணியாளருக்கான ஊக்கப்படுத்தலும் வழிகாட்டலும் அதிகம் இடம்பெற்றுள்ளமை பற்றிக்கூறும் ஆவணக் குறிப்புக்கள் அதிகம் உள்ளன. 9 செப்ரெம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1705இல் வாஸ் அடிகள் உடன் பணியாளருடன் முதல் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். (V.Perniola, vol–1, 1983, p.297) இதில் இலங்கை முழுவதும் எட்டுப் பணித் தளங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு குரு பொறுப்பாக நியமிக்கப் பெற்றார். வாஸ் அடிகள் தாம் கண்டியில் தங்கியிருந்து, ஒவ்வொரு குருவையும் அவர் தம் பணித் தளத்தையும் தரிசித்து குருக்களையும் மக்களையும் ஊக்கு வித்து தேவைக்கேற்ப உதவி வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி வாஸ் அடிகள் கண்டி நகரை மையமாகக் கொண்டு அங்கிருந்து பத்துக்கும் அதிகமான மறை அறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு தடவைகளும், கொழும்பு நீர்கொழும்பிற்கு மூன்று தடவைகளும், மட்டக்களப்பிற்கு ஆறு தடவைகளும், திருகோணமலைக்கு ஆறு தடவைகளும், புத்தளத்திற்கு எட்டு தடவைகளும், மாதோட்டத்திற்கு நான்கு தடவைகளும் மறை அறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் அனைத்தும் பாதணிகள் அற்ற நிலையில், கால் நடையாக மேற்கொண்ட பயணங்களாகும். சிறந்த மறை அறிவிப்பு முறையாகக் கொள்ளப்படுகின்ற இல்லத்தரிசிப்பு, பங்குத்தரிசிப்பு என்பவற்றின் உச்சப் பயன்பாட்டை இவை சுட்டி நிற்கின்றன. அந்தந்த இடங்களிலுள்ள கிராமங்களைத் தரிசித்தமையும், மக்களை ஊக்கப்படுத்தியமையும், ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் கடும் கண்காணிப்பின் மத்தியில் இடம்பெற்றவை என்பது நோக்கத்தக்கது.

மக்களைத் தரிசிக்க சென்ற வேளைகளில் அவர்களுடனேயே அவர்களின் எளிமையான இல்லிடங்களில் தங்கி அவர்கள் வழங்கியவற்றை உண்டு அவர்களிலே முற்றும் தங்கியிருந்தார். மக்களும் ஒல்லாந்த ஆட்சியாளர்களின் கடும் எச்சரிக்கை மத்தியிலும் அவருக்கு புகலிடம் வழங்கினர். மக்களுடன் நெருங்கிப் பழகுவதன்மூலமே மக்களின் பிரச்சினைகளை அறிந்து, விசுவாச வாழ்வில் ஊக்கப்படுத்த முடியும் என்பதை யோசப் வாஸ் நன்கு அறிந்திருந்தார். மக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவதன் மூலமே அவர்கள் குறை நிறைகளை அறிய முடியும். குருக்களின் பணியில் மக்களைத் தரிசிக்கும்பணி மிக முக்கியமானது.

## 4. தென்பகுதி மக்களின் துணிவான உரிமைப் போராட்டம்

மனுவல் தெ மிரண்டா அடிகளின் ஊக்குவிப்பினால் கொழும்பு வாழ் கத்தோலிக்க மீனவர்கள் தங்கள் வழிபாட்டிற்கு ஒரு கத்தோலிக்க ஆலயமும், வழிபாடுகளை நடத்துவதற்கு ஒரு கத்தோலிக்க குருவுக்கும் அனுமதி வழங்கவேண்டுமென்னும் கோரிக்கையுடன் 200இற்கும் அதிகமானோர் ஊர்வலமாகச் சென்று விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தனர். இவ்வாறு மக்கள் துணிவுடன் செயற்பட்டமை வாஸ் அடிகளுக்கு பெரும் ஆறுதலாக அமைந்திருக்கும். (V.Perniola, vol-1, 1983, p.364)

## 5. மக்களைக் கவர்ந்தமைக்கான காரணங்கள்

வாஸ் அடிகளின் வாழ்வு, பணிகள் பற்றி அறிந்தவர்கள் இவரை 'இறை மனிதன்,' 'தூய வாழ்வு வாழ்ந்தவர்' எனச்சான்று பகர்ந்துள்ளனர். அவருடன் பணியாற்றிய அருட்பணியாளர்கள் மட்டுமன்றி வேற்று மதத்தினரும் இதற்குச் சான்று பகர்ந்தனர். இவர்களில் பௌத்த மன்னர்களான இரண்டாம் விமலதர்ம சூரிய, அவர் மகன் நரேந்திர சிம்ம, கல்வின் மதத்தவரான பேத்ரோ கஸ்போன், திருத்தந்தையின் தூதுவர் சாள்ஸ் ரூணேன் என்பவர்கள் முக்கியமாக கோடிட்டுக் காட்டப்படவேண்டியவர்கள். மேலும் இவரது வாழ்நாட்களில் இவரால் நிகழ்த்தப்பட்ட பல புதுமைகளை எஸ். ஜி. பெரேரா அடிகள் "The life of Blessed Joseph Vaz - Apostle of Sri Lanka" நூலில் குறிப்பிட்டுள்ளார். தென் இந்தியா பாண்டிச்சேரிக்குச் சென்றிருந்த யாழ்ப்பாணத்து கத்தோலிக்கர் ஒருவர் வாஸ் அடிகளினால் நிகழ்த்தப்பட்ட பல அதிசயமான செயல்களைத் தம்மிடம் கூறியதாகத் திருத்தந்தையின் தூதுவர் சாள்ஸ் ரூணேன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது பணிவாழ்வு கத்தோலிக்கருள் மட்டும் முடக்கப்பட்டவையல்ல மாறாக மானிடத்தை ஆழமாக அன்பு செய்தவராகக் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றார். 1697இல் கண்டியில் அம்மை நோய் வேகமாகப் பரவிய காலத்தில் நெருங்கிய உறவினர் நோயாளிகளைத் தவிக்கவிட்டு தப்பியோடிய வேளையில் இவரும், இவரது சகோதரி மகன் யோசப் கா்வாலோ அடிகள் ஆகிய இருவரும் ஆற்றிய பணியின்போது கா்வாலோ அடிகள் அம்மைநோயால் பீடிக்கப்பட்டு மரணித்தபோதும் வாஸ் அடிகள் நோயாளருக்கான தம் பணியைத் தொடா்ந்து மேற்கொண்டமை இவா் மானிடத்தை ஆழமாக அன்பு செய்தவா் என்பதற்குச் சிறந்த சான்றாகும். ஒடுக்கப்பட்டவா்கள், நோயாளா்கள், ஏழைகள் மட்டில் அதிகம் பரிவுகொண்டு காணப்படுகின்றார்.

மக்களுடன் நெருங்கிய உறவை கொண்டிருந்தார். மக்களைத் தரிசித்து, அவா்களின் ஏழ்மையான இல்லிடங்களில் தங்கி, அவா்கள் வழங்குவதையே உண்டு மக்கள் வாழ்க்கைநிலை பற்றியும், குறைகள், நிறைகள் பற்றியும் அதிகம் அறிந்திருந்தார்.

இதற்குத் தமது மறைத்தூதுப் பயணங்களைப் பயன்படுத்தினார். யோசப் வாஸ் அடிகள் காலத்தில் குருக்களுக்கும், மக்களுக்குமிடையே நெருங்கிய உறவு நிலவியுள்ளது. வாஸ் அடிகள் மக்களுக்காக வாழ்ந்த வேளையில், மக்களும் வாஸ் அடிகளில் தங்கி வாழ்ந்தனா்.

## 6. வாஸ் அடிகளின் மறை அறிவு வழங்கற்பணி

இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி உறுதிப்படுத்த வாஸ் அடிகள் கையாண்ட பல்வேறு வழிவகைகளில் மறை பற்றிய தெளிவான அறிவை மக்களுக்கு வழங்குவதற்கு அவா் மேற்கொண்ட செயற்பாடுகள் முக்கியமானவையாகும்.

ஆலயத்திலும், இல்லங்களிலும் சந்தா்ப்பம் கிட்டும் போதெல்லாம் மக்களுக்கு மறை அறிவை வழங்கி, விசுவாசத்தில் தளா்ச்சியுற்றோரை ஊக்குவித்து ஏற்ற வழிநடத்தல்களை வழங்கினார். யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளுக்கு சகல வசதிகளையும் வழங்கி கத்தோலிக்க மறைபற்றிய இலக்கியங்களின் தோற்றத்திற்கும் வழிவகுத்தார்.

## 7. தமிழ் – சிங்கள கிறிஸ்தவ இலக்கியங்களும் – மறைஅறிவு வழங்கலும்

வாஸ் அடிகள் மறை அறிவிப்பை வினைத்திறனுடன் அறிவிக்க பல முயற்சிகளை மேற்கொண்டார். போர்த்துக்கேயா் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஆக்கப்பட்ட தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களில் சந்தியோகுமையோா் அம்மானை, ஞானப்பள்ளு என்னும் இலக்கியங்கள் மட்டுமே அழிவினின்று காக்கப்பட்டுள்ளன. ஏனையவை எவையும் கிடைத்தில. இந்நிலையில் தமிழ், சிங்கள மொழிகளில் இலக்கியங்களை ஆக்கும் பெரும் பொறுப்பை ஏற்று செயற்படுத்தும் திறன் உள்ளவராக யாக்கோமே கொன்சால்வெஸ் (1627 - 1742) அடிகள் கண்டிக்கு அழைத்து செல்லப்பட்டுச் சிங்கள மொழியையும் கற்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

கொன்சால்வெஸ் அடிகள் இரண்டு மொழிகளையும் கற்று சிங்களமொழியில் 22 நூல்களையும் தமிழில் 15 நூல்களையும் எழுதினார். இந்நூல்கள் அடிப்படைச் செபங்கள், ஒழுங்குவிதிகள், விவிலிய மொழிபெயா்ப்பு, விவிலிய வினாவிடை, திருவருட்சாதனங்கள், கோட்பாடுகளுக்கான விளக்கம், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் பற்றிய விளக்கம், புனிதா்கள் வரலாறு, மரியன்னையின் புதுமைகள் என பல விடயங்களை உள்ளடக்கியவையாகக் காணப்பட்டன. மேலும், கொன்சால்வெஸ் அடிகள் கம்மல என்னுமிடத்தில் 12 இற்கும் அதிகமான படியெடுப்போர்; (V.Perniola,vol-11, 1983, pp.351-352) துணைகொண்டு ஒவ்வொரு நூலிலும் 200 - 300 பிரதிகள் படி எடுக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. (S. G. Perera, 1942, pp.117-150)

இவற்றுள் 1730இல் ஆக்கப்பட்ட வியாகுலப்பிரசங்கம் என்னும் நூல் இன்றுவரை மக்கள் மத்தியில் அதிகம் வரவேற்பு பெற்று வருகின்றது. சிங்களம், தமிழ் மொழிகளில் இவா் ஆக்கிய இலக்கியங்களில் 10 நூல்கள் இரண்டு மொழிகளிலும் ஒரேவிடயப்பொருளைக் கொண்டுள்ளன என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. இந்நூல்கள் மறை ஆசிரியா்கள் அதாவது அண்ணாவி, உபதேசி என்போருக்குப் பெரும் பயனுள்ள நூல்களாக விளங்கியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

வளர்ந்தோருக்கான மறை அறிவை அளிப்பதற்கும் சிறந்த கற்பித்தல் ஊடகமாக விளங்கியிருக்கும். மேலும், மக்களுக்கு மறை பற்றிய ஆழமான, பரந்த அறிவை அளிப்பது முக்கியமானது என்பதையும் இலக்கியங்கள் மறை அறிவிப்பில் பெரும்பங்காற்றமுடியும் என்னும் கருத்தினையும் இலக்கியங்களின் ஆக்கம் எடுத்துரைக்கின்றது. யோசப்வாஸ், கொன்சால்வெஸ் அடிகளுக்கு கிடைக்காத அச்சியந்திர யுகத்தில் நாம் உள்ளதும் கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்

## III கிறிஸ்தவ நாட்டார் இசைக் கலையும் ஆசிரியர் குழந்தையும்

வாஸ் அடிகள் காலத்தில் பொது நிலையினர் திருச்சபைக்கு வழங்கிய பணி போன்று இன்றும் பல பொதுநிலையினர் தனி நபர்களாகவும், குழுக்களாகவும் திருச்சபையின் சேவைக்குத் தங்கள் பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். இப்பின்னணியில் திருச்சபையின் பணியில் பல்பரிமாண நிலையில் பங்களித்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியர் கலாபூஷணம் குழந்தை செபமாலை அவர்கள் தமிழ் கிறிஸ்தவ நாட்டார் பாடல்கள் மூலமாக, குறிப்பாக கிறிஸ்தவ துன்பியல் பாடல்கள், திருச்சொரூபப் பவனியின்போது பாடப்படும் 'சுற்றுப்பிரகாரப் பாடல்கள்' ஏனைய பாடல்கள், கவிகள் வழியாகத் தம் பங்களிப்பை சிறப்பாக வழங்கியுள்ளார்; தொடர்ந்து வழங்கி வருகின்றார். மாதோட்டம், முருங்கன் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த பாடகர், நாடகத் தயாரிப்பாளர், நெறியாளர், நடிகர், இசையமைப்பாளர், எழுத்தாளர், பேச்சாளர், சமூக ஆர்வலர் எனப் பன்முக ஆளுமைச் சிறப்புக்களைக் கொண்டவர்.

ஆசிரியர் அவர்களின் கலைசார் ஆளுமைச் சிறப்பிற்கு அரசுசார் நிறுவனங்களால், பல்கலைக் கழகத்தினால், பொது அமைப்புக்களினால், சமய நிறுவனங்களால், பெரியோரால் வழங்கப்பட்ட 'கவிஞர் குழந்தை', 'கலைஞர் குழந்தை', 'முத்தமிழ் வேந்தர்', 'சிறந்த கலைஞர்', 'கலாபூஷணம்', 'திருக்கலை வேந்தன்', 'ஆளுநர் விருது', 'தலைக்கோல் விருது', 'சாஹித்திய விருது', 'கூத்திசைக் காவலன் குழந்தை' என்னும் கௌரவப் பட்டங்கள் சான்று பகர்கின்றன. இவரது பல்துறைசார் பங்களிப்புக்களை இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகள் தெளிவாக விளக்கி நிற்கின்றன. இப்பின் புலத்தில் இவரால் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள, மேலும் வெளியிடப்படவுள்ள இறுவட்டினை மையமாகக் கொண்டு தமிழ் கிறிஸ்தவ நாட்டார் பாடல்களுக்கான இவரது பங்களிப்புப் பற்றிய நயப்புக் கண்ணோட்டத்திலும் இவரது இத்துறைசார் பங்களிப்புக்களை ஆவணப்படுத்தும் இலக்குடனும் இக் குறிப்புக்கள் இடம்பெறுகின்றன.

மன்னார், மாதோட்டப் பிரதேசம் கத்தோலிக்க, கலை, இலக்கியத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பையாற்றியது மட்டுமன்றி, தொடர்ந்தும் இத்துறையின் மேம்பாட்டிற்கு கணிசமான பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றது. எந்தவொரு வரலாற்று நிகழ்வும் அல்லது கலை இலக்கியம் சார் பங்களிப்பும் அது தோன்றி உச்சப் பயன்பாட்டை வழங்கிய சமய, சமூக, கலாசார வரலாற்றுப் பின்னணியில் நோக்கப்படுதலே பொருத்தமானது. கத்தோலிக்க சமயத்திற்கும் சமூகத்திற்கும் கிறிஸ்தவ நாட்டார் பாடல்கள் குறிப்பாகத் துன்பியல் பாடல்கள், திருச்சொரூபப் பவனியின் போது பாடப்பட்ட, பாடப்படுகின்ற கவிகள், திரை விருத்தம் போன்ற கிறிஸ்தவ நாட்டார் பக்திப் பாடல்கள் காலத்தால் வழங்கி வந்த நன்மைகள் மறக்கப்படவோ, குறைவாக மதிப்பிடப்படவோ முடியாதவை. எனினும் இன்று இவற்றிற்கு மக்கள் மத்தியில் காணப்படும் வரவேற்பு, இவற்றின் பயன்பாடு, இன்றைய சமூக, கலாசார பின்னணியில் இவற்றின் எதிர்காலம் தொடர்பாக எழுப்பப்படும் வினாக்கள் அர்த்தமற்றவையென முற்றாகத் தட்டிக்கழிக்க முடியாதவை.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்னும் விடயப் பொருளைக் கொண்டு பாடப் பெற்று, மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்ற இப்பாடல்கள், இன்று படிப்படியாக வழக்கொழிந்து செல்கின்றமை மறுக்க முடியாத உண்மையாகும். இப்பின்னணியில் யதார்த்த நிலையைக் கருத்திற் கொண்டு இப்பாரம்பரியத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தொடர்ந்து பேணுவதற்கு மேற்கொள்ளப் படுகின்ற எந்த முயற்சியும் பாராட்டப்பட்டு, ஊக்கு விக்கப்படுதல் இக்கலை இலக்கிய பாரம்பரி யத்தை காப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற காலத்திற்குப் மிகப் பொருத்தமான செயற் பாடாகக் கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறான எண்ணக்கருவைத் தோற்றுவித்து அதற்குச் செயல் வடிவம், அளித்த அருட்பணி அன்புராசா அமதி அவர்களின் செயற்பாட்டின் தாற்பரி யத்திற்கு இன்றைய சமூகத்திற்கு மேலாக எதிர்காலச் சமூகம் உறுதியுடன் சான்று பகரும்.

இலங்கைத் தமிழ் கிறிஸ்தவ நாட்டார் இசை மரபைக் காக்கவும், எதிர்காலச் சமூகத் திற்கு வழங்கவும், ஆசிரியர் குழந்தை அவர்களின் கலைத் திறமையை வெளிக் கொணர வும், இவற்றின் பயன்பாட்டை காலத்திற்கேற்ற வகையில் மக்களுக்கு வழங்கவும் **"வியாகுல இசைப்பாக்களும் வியாகுலப் பிரசங்கமும்"** என்னும் இறுவட்டு வெளிவந்துள்ளது. இதற்கு மன்னார் ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு, யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயம், அருட்கலாநிதி. ச.ம. செல்வரட் ணம் அமதி ஆகியோர் ஆசியுரை வழங்கியுள் ளனர். இதில் பதிவு பெற்றுள்ள பாடல்களுக் கான குறுகிய விளக்கத்தை அருட்பணி. தமிழ் நேசன் அவர்களும், அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் அமதி அவர்களும் வழங்கியுள்ளனர்.

இவ்விறுவட்டிற்கு ஆசிரியர் குழந்தை யுடன் இணைந்து நாட்டார் பாடல் கலைஞர் கலாபூஷணம் திரு. செ.மாசிலாமணி, செல்வி. தே.தேன்மொழி என்போர் பாடல் வழங்கியுள்ளனர். பின்னணிப் பாடகர்களாக அருட்சகோதரி. செ.எலிசபெத், திரு. ச.குண சீலன், திருமதி. தே.மேரி நீற்றா, செல்வி. தே.தேன்மொழி, தே. கனிமொழி குரல் கொடுத்துள் ளனர். பக்க வாத்தியங்களாக இசைக்கலை மாணி சுந்தர மூர்த்தி கோபிதாஸ் வயலினும், சங்கீதபூஷணம் ம.இராஜசிங்கம் அவர்கள் மிருதங்கமும் வாசித் துள்ளனர். அருட்பணி அன்புராசா அமதி அவர் கள் நெறியாக்கத்தில் இவ்இறுவட்டு ஆக்கம் பெற்றுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள பாடல் களை மூன்று வகையாக நோக்கலாம்.




அ. சிந்தா குலத்திரட்டு என்னும் இலக்கியத் திலுள்ள பாடல்கள்.

ஆ. ஏனைய துன்பியல் பாடல்கள்.

இ. வியாகுலப் பிரசங்கம்.

இலங்கையில் கத்தோலிக்க மறை அறி முகம் பெற்ற காலம் முதல் இன்றுவரை இம் மறையின் கோட்பாடுகள், படிப்பினைகள், போதனைகள், புனிதர் வரலாறுகள், பழைய - புதிய ஏற்பாட்டுச் சம்பவங்கள், என்பவற்றுடன் குறிப்பாக கிறிஸ்துவின் பாடுகள், மரணம் பற்றிக்கூறும் இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றுள்ளன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களில் தோன்றிய கிறிஸ்தவ இலக்கியங்களில் கணிசமானவை நாட்டார் இலக்கியங்களாகவே படைக்கப்பட் டுள்ளன. அதேவேளை, கிறிஸ்தவ மறையின் விசுவாசத்தின் மையப்பொருள், கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றியதாகும். இவ் விடயங்களைக் கருப்பொருளாகக்கொண்டு ஆக்கப்பட்ட இலக்கியங்கள் துன்பியல் இலக்கி யங்கள் என அறியப் பெற்றன. கிறிஸ்து மறையின் கருப்பொருளாகிய துன்பியல் நிகழ் வுகளும், ஒப்பாரி இலக்கியத்தின் பண்புகளும், ஒன்றையொன்று நிறைவு செய்கின்றனவையே.

### அ. சிந்தாகுலத்திரட்டு என்னும் இலக்கியத்திலுள்ள பாடல்கள்.

இதில் இடம்பெற்றுள்ள ஒன்பது பாடல்கள் 'சிந்தாகுலத் திரட்டு' என்னும் துன்பியல் இலக்கியத்திலிருந்து பாடப் பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர் குழந்தை அவர்களே முதன் நிலைப் பாடகராகப் பாடியுள் ளார். 'சிந்தாகுலத்திரட்டு' என் னும் இலக்கியத்தை யாழ். பாஷையூரைச் சேர்ந்த சுவாம் பிள்ளைப் புலவர் கிறிஸ்துவின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடுகளையும் அன்னை மரியாளின் அவலங்களையும் கருப்பொருளாகக் கொண்டு துக்கராகம், தாழிசை, புலம்பல் வடிவங்களில் 1873இல் பாடியுள்ளார். (ஆசுகவி க.வேலுப்பிள்ளை, 1918, பக்.181; மு. சிங்கராயர், 2003, பக். 13) இக்கட்டுரையின் ஆசிரியர் 2000, 2004 ஆகிய ஆண்டுகளில் இவ்விலக்கியத்தை மீள்பதிப்புச் செய்துள்ளார். இதனைப் பயன்படுத்துவோர் நலன் கருதி, 2004ஆம் ஆண்டு பதிப்பில் இப்பாடல்கள் இடம்பெறும் பக்கங்களை இங்கு தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| ஐயையோ.............. | (துக்கராகம்) | பக்.08 |
| ஆதியாதாம்.......... | (துக்கராகம்) | பக்.10 |
| உதிரவேர்............. | (தாழிசை) | பக்.05 |
| சீர்பூத்த................ | (ஒப்பாரி) | பக்.12 |
| கல்லினால்.......... | (தாழிசை) | பக்.08 |
| ஆதிபிதாவை....... | (துக்கராகம்) | பக்.07 |
| நந்துலாவு............. | (தாழிசை) | பக்.10 |
| மருவிலா.............. | (தாழிசை) | பக்.10 |
| என்மகனே........... | (புலம்பல்) | பக்.21 |

(க. மு. சிங்கராயர், *சிந்தாகுலத்திரட்டு*, பதிப்பாசிரியர் ஞா. பிலேந்திரன், 2004)

### ஆ. ஏனைய துன்பியல் பாடல்கள்

'சர்வதயாபர இயேசுவே' என்றும், 'பிழை தீர்க்கிற மந்திரம்' என்றும் பொதுவாக எல்லாக் கத்தோலிக்கர் மத்தியிலும் நன்கு அறியப் பெற்ற இப்பாடல் வியாகுல பிரசங்கம் பாடி முடிவில் பாடப்படுவதுண்டு. வியாகுல பிரசங்கத்தை ஆக்கிய யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளே இதனை இயற்றியுள்ளார். பாடல் மெட்டும் அவரால் அமைக்கப்பட்டதாகவே இருக்க வேண்டும் எனக் கொள்வது சரியான முடிவாகும். கத்தோலிக்கர் மத்தியில் நன்கு பிரபல்யமான இப்பாடல் பெரிய வெள்ளிக்கிழமைகளில் சிலுவை முத்தியின் போதும் ஆசந்தியின் போதும் பாடப்படுவதுமுண்டு. இப்பாடலில் அடங்கியுள்ள பொருளும், பாடலின் மெட்டும் மக்கள் மனத்தில் தங்கள் பாவங்களுக்கான மனம் வருந்தும் நிலையை உருவாக்கும் தன்மை கொண்டது.

'எனது சோபநிறை' என்னும் தாழிசையும், 'நேசமுள்ள' என்னும் புலம்பலும் எங்கு, எவரால் இயற்றப்பட்டவை என்பது பற்றி அறிய முடியவில்லை. இவை கர்ண பரம்பரையாக வந்தவையாகக் கொள்ளப்படுகின்றது.

'எனது சனமே', 'எனது பிரசையே' என்னும் இரண்டு பாடல்களும் ஒரே விடயத்தைக் கருப்பொருளாக் கொண்டே பாடப்பட்டுள்ளன. 'எனது சனமே' என ஆரம்பிக்கும் பாடல் இலத்தீன் மொழியில் நீண்ட காலமாக பாடப்பட்ட (Popule meus) என்னும் பாடலின் மொழிபெயர்ப்பாகும். இது பெரிய வெள்ளிக்கிழமையில் மாலை வழிபாட்டின் போது பாடப்படும் பாடலாகும்.

'ஆவி பதைத்தீர்', 'நேசமுள்ள' என்னும் புலம்பல் பாடல்கள் கர்ண பரம்பரையாக மக்கள் மத்தியில் வழக்கிலிருந்து வருகின்றன. இவற்றை இயற்றியவர்கள், பாடல்களுக்கு மெட்டு அமைத்தவர்கள் பற்றி எதையும் அறிய முடியவில்லை.

### இ. வியாகுலப் பிரசங்கம்

வியாகுலப்பிரசங்கம் தமிழ்மொழியில் 1730இல் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளினால் ஆக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கொழும்பு, ஆகிய பகுதிகளில் வாழ்ந்த கத்தோலிக்கர் கிறிஸ்துவின் பாடுகளை விடயப்பொருளாகக் கொண்டு இவ்வாறானதொரு இலக்கியத்தை ஆக்கும்படி கோரியதற்கமைய அடிகளார் அதை ஆக்கியுள்ளார். 1730–32 ஆண்டுகளுக்கான அறிக்கையின்படி கொன்சால்வெஸ் அடிகள் பல இடங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்களை மாதோட்டத்தில் ஒன்று கூட்டி தாம் ஆக்கிய இலக்கியத்திற்கான விளக்கத்தினையளித்து அதனை பாடிக்காட்டியுள்ளார் என்றும் முடிவுக்கு வரமுடியும். (V. Perniola, Vol-11, 1983, P.249).

எனினும் நாட்டார் பாடல் தன்மைக்கேற்ப காலக்கிரமத்தில் பாடல் மரபில் சிறிய சிறிய மாற்றங்கள் ஏற்பட்டன. பாடல்கள் இராகம், தாளம், மெட்டு வழுவன்றிப் பாடுதற்கு ஐரோப்பிய மரபுப்பாடல்களுக்கோ, கர்நாடக பாடல் வடிவங்களுக்கோ பாடல் சுரங்கள் அல்லது குறிப்புக்கள் *(notes)* எழுதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் சுரங்களுக்கேற்ப எங்கு, எவர் பாடினாலும் ஒரே மெட்டிலேயே பாடப்படும். எனினும் நாட்டார் பாடல்களுக்கு இவ்வாறு வரையறைகள் இல்லை, இதற்கு வியாகுலப்பிரசங்கம் பாடப்படுவதைக் குறிப்பிடலாம்.

வியாகுலப்பிரசங்கம் இன்றுவரை மக்கள் மத்தியில் வழக்கிலிருக்கின்ற, தவக் காலங்களிலும் புனித வாரத்திலும் பல இடங்களிலும் பாடப்படுகின்ற பக்தி இலக்கியமாகும். அதேவேளை இதனை இறுவட்டு வடிவத்தில் சிலர் ஏற்கெனவே வெளியிட்டுள்ளனர். இவ் வரிசையில் மன்னார் - மாதோட்டப் பாடல் மரபையொட்டி கலாபூஷணம், ஆசிரியர் குழந்தை அவர்களும் ஒன்பது பிரசங்கங்களையும் இறுவட்டில் பதித்துள்ளனர். இதனை செபமாலை அன்புராசா அமதி அடிகள் வெளியிட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

## இறுவட்டு பற்றிய நயப்புக் கண்ணோட்டம்

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கிறிஸ்தவ துன்பியல் நாட்டார் பாடல் மரபு படிப்படியாக வழக்கொழிந்து செல்கின்ற இக்காலத்தில் அவற்றிற்கு புத்துயிர் அளித்து நீண்ட காலத்திற்கு இவற்றின் பயன்பாட்டை முன்னெடுக்கும் நோக்குடனும், ஓய்வு பெற்ற ஆசிரியர் குழந்தை செபமாலை அவர்கள் பாடிய இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

கிறிஸ்தவ சமூகத்திற்கு கிறிஸ்தவ நாட்டார் பாடல்கள், குறிப்பாக துன்பியல் கிறிஸ்தவ நாட்டார் பாடல்கள் காலாகாலம் வழங்கி வந்த நன்மைகள் மறக்கப்படவோ, குறைவாக மதிப்பிடப்படவோ முடியாதவை. எனினும் சமூக, கலாசாரப் பின்னணியில் இவ்விலக்கியங்களின் இன்றைய நிலைபற்றி நோக்கும் போது இவற்றிற்கு எவ்வாறான எதிர்கால



முண்டு என்னும் வினாவை எழுப்புவது பொருத்தமானதே. கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்னும் விடயப்பொருளைக் கொண்டு பாடப்பெற்று மக்களின் அமோக வரவேற்பைப் பெற்று வழக்கிலிருந்த இப்பாடல்கள் இன்று படிப்படியாக வழக்கொழிந்து கொண்டே செல்கின்றது. இப்பின்னணியில் யதார்த்த நிலையைக் கருத்திற் கொண்டு இப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து பேணுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற எந்த முயற்சியும் பாராட்டப்பட்டு ஊக்குவிக்கப்படுதல் இக்கலையைக் காப்பதற்கு வழங்கப்படுகின்ற காலத்திற்கேற்ற உதவியாகக் கொள்ளப்படல் வேண்டும்.

பொதுவாக துன்பியல் கிறிஸ்தவப் பாடல்கள் தவக்காலங்களிலும் புனித வாரத்திலும், குறிப்பாக பெரிய வெள்ளிக்கிழமைகளிலேயே பாடும் மரபு நிலவிவந்துள்ளது. அதே வேளையில் இவை இழவு (மரணம்) நிகழ்வுகளின்போது இல்லங்களிலும், மரண ஊர்வலங்களிலும் பாடப்படுவதுமுண்டு. இன்று இப்பாடல்களை விரும்பிப் பாடப் பழகுகின்றவர்களோ, பாடுகின்றவர்களோ மிக மிகக் குறைவு என்பது மறுக்கப்பட முடியாதது. எனினும், இவை இறுவட்டில் பதிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் இவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் தோன்றியுள்ளன. மேலும், இன்று புலம்பெயர்ந்து வாழும் கணிசமான எண்ணிக்கையிலான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றவையாக இவை அமைகின்றன. இவற்றைப் படிப்பதும், படிப்பதைக் கேட்பதும், மக்கள் மத்தியில் பக்தி முயற்சியின் ஒரு செயற்பாடாகவும், மறை அறிவை வழங்கும் ஊடகமாகவும், பயனுள்ள பொழுது போக்காகவும் கணிக்கப்பட்டது. மேலும், கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், செபிப்பதற்கும், தியானிப்பதற்கும் இவ் இறுவட்டின் பயன்பாடு உதவியமை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாத உண்மையாகும்.

பொதுவாக நாட்டார் பாடல்களைப் பாடும்பொழுது சொற்களை பொருள் விளங்கும் வகையில் பிரித்துப் பாடுவது பலருக்கும் சிரமமான விடயமாகும். ஏனெனில் இவற்றில் இறுக்கமான சொற்புணர்ச்சி காணப்படும். மேலும் நாட்டார் பாடல்களை இசைப்போர் பொதுவாக சொற்தெளிவிற்கோ, பொருள் விளக்கத்திற்கோ அதிக முக்கியத்துவம் அளியாது பாடல்களின் இராகத்திற்கே முக்கியத்துவம் அளிப்பது வழக்கம். அத்துடன் நாட்டார் பாடல்களைப் பாடுவோர் பலருக்கும் கேட்கும் வகையில் தம் குரல் வளத்திலேயே நம்பிக்கை கொண்டு சத்தமாகப் பாடுவர். எனினும் ஆசிரியர் குழந்தை அவர்கள் இறுவட்டின் பதிவிற்குப் பாடிய இப்பாடல்களை சொற்தெளிவு, பொருள் விளக்கம் என்னும் விடயங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்துப் பாடியுள்ளமையைக் கவனிக்கக் கூடியதாயுள்ளது. மேலும், இவை கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும், பரிசுத்த கன்னிமரியாளின் வியாகுலங்களையும் மையமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. ஆசிரியர் குழந்தை அவர்கள் பாடல்களின் பொருளை உள்வாங்கி, துக்கராகப் பண்பினை வெளிப்படுத்தும் தன்மையில் பாடியுள்ளமை சிறப்பாக அமைந்துள்ளது.

இயல்பிலேயே இப்பாடல்களுக்குச் செவிமடுக்கும்போது இவர் சிறந்த, இதமான குரல் நயம் கொண்டவரென்பது புலனாகின்றது. இதனால் இது துன்பியலை மையமாகக் கொண்ட பாடலாயிருக்கின்ற போதும் சலிப்பின்றி நீண்ட நேரம் கேட்கக் கூடியதாகவுள்ளது. இதனைக் கேட்போர் உள்ளத்தில் செப உணர்வையும், தியான மனப்போக்கையும் தோற்றுவிக்கின்றது. ஆசிரியர் குழந்தை அவர்களின் கலைத் திறமைகளை வெளிக் கொணரவும், கிறிஸ்தவ சமூகத்திற்கு அதைப் பயனுள்ள முறையில் வழங்கவும் அவரது மகன் அருட்பணி அன்புராசா அவர்கள் இந்த இறுவட்டு ஆக்கத்தை நெறிப்படுத்தியுள்ளார்.

இவ்விடத்தில் மார்ச் திங்கள் 2011இல் **"வியாகுல இசைத்தருக்கள்"** என்னும் பெயரில் கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியத்தில் வழங்கிவந்த துன்பியல் இசைகளின் தொகுப்பினை யாழ். திருமறைக் கலாமன்றத்தினர், கலாபூஷணம் திரு. பேக்மன் ஜெயராசா அவர்களின் நெறியாள்கையில் வெளியிட்டனர். இதில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள விடயங்கள் பேரின்பக் காதல், சிந்தாகுல்திரட்டு, வியாகுலப்பிரசங்கம் என்னும் இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இது பற்றி இங்கு குறிப்பிடுதல் ஆவணப்படுத்தல் பார்வையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

## புனித சந்தியோகுமையோர் 'சுற்றுப் பிரகார' இசைத்தருக்கள்

### (வெகுவிரைவில் வெளியிடப்படவிருக்கும் இறுவட்டு)

இலங்கைத் திருச்சபை வரலாற்றிலே காலாகாலமாகப் திருச்சொரூபப்பவனி மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்ற பக்தி முயற்சியாகப் பேணப்பட்டு வருகின்றது. திருச்சொரூபப்பவனியும், திருச்சொரூப ஆசீரும் திருவிழாவின் உச்ச நிகழ்வுகளாக அமையும். பவனியில் மக்கள் பக்தியுடன் பங்கு கொள்வதற்கு உதவியாக திருச்சொரூபப்பவனியின் போது கவிகள், பாடல்கள், பிரார்த்தனைகள் படிக்கப்படும், சிந்துப்பிராத்தனைகள் பாடப்படும். இவை இன்று யாழ். குடாவின் அநேகமான பங்குகளிலும் வழக்கொழிந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும். எனினும் மன்னார் - மாதோட்டப் பகுதியில் இவை தொடர்ந்து பேணப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இன்று பவனியின்போது பாடப்படும் கவிகள் முன்பு திரை விருத்தங்களாகப் பயன்படுத்தப்பட்டவை என அறிகின்றோம். அதாவது, திரு விழாவிற்கான ஆயத்த மாலை வழிபாடுகளின்போது திருச்செபமாலை, புனிதரின் பிரார்த்தனை செபிக்கப்பட்டு திருப்பலி அல்லது 'வேஸ்பர்' *(Vesper)* வழிபாட்டின் ஆரம்பத்தின் முன் திரை விருத்தம் பாடப்படும். அந்த வகையில் மன்னார் - மாதோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு ஆலயத்தினதும் பாதுகாவலரான புனிதரின் புகழ் பாடுவதாயும், புனிதர் மூலம் இறைவனின் பரிந்துரை வேண்டுவதாயும் அதிக எண்ணிக்கையிலான கவிகள் ஆக்கப்பட்டு அவற்றைப் பாடும் மரபு வழக்கிலுள்ளன. புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய யாகப்பர் புகழ்பாடும் - கவிகள், தாழிசை என்பன நாட்டார் இசை வடிவங்களில் காணப் படுகின்றன. வெகு விரைவில் வெளியிடப் படவிருக்கும் இறுவட்டில் இவ்வாறான பாடல்கள் அடங்கியுள்ளன. இவற் றைக் கலாபூஷணம் குழந்தை அவர்களே பாடியுள்ளார். இவ்விறுவட்டு கத்தோலிக்க பாரம்பரியத்தில் ஆலயத் திருவிழாவின் நிறைவாக இடம்பெறும் திருச் சொரூப பவனியின்போது பாடப்படும் கவிகளாகவும், பாடல்களாகவும் உள்ளன.

இவற்றை ஆசிரியர் குழந்தை அவர் களும், நெருங்கிய உறவினர்களும் இயற்றியுள் ளனர். மேலும், இதில் இடம்பெறும் 'பாமாலை சூடவே', 'சீர்பொங்கு செபதேயின்', 'அடிஅடி யாய் உன்பாதம்', 'அன்போடு உலகையே', ஆகிய கவிகளையும் 'யாகப்பா எம்மைக் காப்ப வரே', 'பெரிய யாகப்பரைப் போற்றுவோம்' என னும் பாடல்களையும் ஏனைய மன்றாட்டுக்களை யும் ஆசிரியர் குழந்தை அவர்கள் இயற்றி யுள்ளார்.

இதில் பாடப்பட்டுள்ள 'திருமருவு வளராடித்திங்கள்', 'பொற்பிலகு கலிலேய', 'வண்டிசைகள் பாடவும்', 'தங்கமணி மவுலி புனை', 'அந்தரம் தனில் லந்த', 'மணிவளகு சென்னல் வினை' ஆகிய கவிகளை இவரது பெரிய தகப்பனார் ம. சந்தான் புலவர் அவர்கள் 1941இல் பங்குனித் திங்கள் பாடியுள்ளார். இவரு றுடன், 'வரைதரை சூழ்களிலேயே', 'பாருலகிலே கலிலேய' ஆகிய இரு கவிகளையும் புலவர் ச. பாவிலு (சீனிப்புலவர்) அவர்கள் பாடியுள்ளார். (இவர் அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களின் தந்தையாவார். இத்தகவல்கள் அனைத்தையும் வழங்கியவர் அருட்திரு. செ.அன்புராசா அமதி அடிகள்)

## நிறைவுரை

இலங்கையில் கத்தோலிக்க மறை அறி முகம் பெற்றகாலம் முதல் பெரும் எண்ணிக்கை யிலான அருட்பணியாளர்கள், துறவிகள், பொது நிலையினர் திருச்சபையின் பணிக்குத் தங்கள் பங்களிப்பை பல்வேறு வழிகளில் நல்கியுள் ளனர். இதில் அருளாளர் யோசவ் வாஸ், அவரது காலத்து பொதுநிலையினர் வழங்கிய பங்க ளிப்பு வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. அவற்றுள் நாட்டார் இலக்கியங்கள், நாட்டார் இசை என்பவற்றின் வழியாக கணிசமான பங்க ளிப்பு இடம்பெற்றுள்ளன. எனினும், இன்று கத் தோலிக்க நாட்டார் வழக்கியலின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றதென்பது கேள்விக் குரிய விடயமே. இப்பின்னணியில் இவற்றின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பொருத் தமான செயற்பாடுகளை மேற்கொள்வது இன்றைய சமூகத்தின் பொறுப்பாகும். இதனால் இவற்றை இறுவட்டில் பதிப்பது மிகப் பொருத்தமான செயற்பாடாகவே தென்படு கின்றது. எனினும் பலரது பெரும் கூட்டு முயற்சியனால் கத்தோலிக்க நாட்டார் இசை மரபை அழிவினின்று காத்து, எதிர்கால சமுகத் திற்குக் கையளிக்க முடியும். ■

### உசாத்துணை நூல்கள்


1. S. G. Perera, *Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka*, Colombo, 2005:

2. V. Perniola, *The Catholic Church in Sri Lanka: The Dutch Period, Vol.1:1658 – 1711*, Tisara Prakasakayo Ltd., Dehiwala, 1983

3. V. Perniola, *The Catholic Church in Sri Lanka: The Dutch Period, Vol.11:1712 – 1746*, Tisara Prakasakayo Ltd., Dehiwala, 1983

4. Bede Barcatta, *A History of the Southern Vicariate of Colombo, Sri Lanka, being also the History of the Apostolate of the Sylvestrine – Benedictine Monks in the Island, Vol.1*, Montefano Publications, Kandy, 1991.

5. S.G Perera, *Life of Father Jacome Gonsalves*, Madurai, 1942.

6. ஞா. பிலேந்திரன், (தொகுப்பாசிரியர்), *இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப் வாஸ், வாழ்வும் பணியும்*, யாழ்ப்பாணம், 2011.

7. ஆசுகவி க. வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, யாழ்ப்பாணம், 1918

8. க. மு.சிங்கராயர், *கூவிப்பறந்த கோகிலங்கள்*, யாழ்ப்பாணம், 2003.


**(Endnotes)**

[1] S.G. Perera, *Life of Blessed Joseph Vaz*, p. 12.

[2] S.G. Perera, *Life of Blessed Joseph Vaz Apostle of Sri Lanka*, 2005, p. 201;

[3] ஞா. பிலேந்திரன் பக். 217




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை செபமாலை அவர்கள் கூத்தியலின் ஒரு பன்முக ஆளுமை

அருள்கலாநிதி அ.பி.ஜெயசேகரம்
Ph.D.(Rome)
*நெய்தல் பணியகம்*
*கச்சேரியடி*
*யாழ்ப்பாணம்.*



## இவரது வாழ்வு ஒரு முன் உதாரணம்!

மனித சமூகவளர்ச்சிப் போக்கிலே ஒவ்வொரு சமூகமும் காலத்தின் தேவைக்கேற்ற வகையில் இயக்கங்களையும் அறிஞர்களையும் புத்திஜீவிகளையும் சமூக செயற்பாட்டாளர் களையும் உருவாக்கிக் கொள்கின்றது. காலத்தின் தோற்றுவாயில்களால் உருவாகின்ற ஆளுமைகள் காலத்தின் உற்பத்திப் பொருளாக மட்டுமன்று காலத்தை உட்புவிப்பையாகவும் அமைந்திருக்கின்றன. தம் காலத்து உள்ளியல்பு களை உறுதியாகப் பிரதிபலிக்கும் ஆளுமைகளே காலத்தை கடந்து நிற்கும் ஆற்றலினையும் பெற்று விடுகின்றன. இவ்வகையாக சமூக வளர்ச்சிக்கு விசைகொடுத்து தகுந்த பங்களிப் பையும் வழங்கிச் செல்கின்றன. அவ்வகையில் மன்னார் மாதோட்டப் பகுதியில் தோன்றிய சிந்தனையாளர், சமூகச் செயற்பாட்டாளர், அண்ணாவியார் வரிசையில் தனித்துவமான முத்திரையை பதித்தவர் 'குழந்தை' என்றழைக் கப்படும் திரு. செ. செபமாலை அவர்கள். ஆற்றல் மிக்க அரசியல்வாதியாக, அண்ணாவி யாராக, கவிஞராக, நெறியாளராக, எழுத்தாள ராக இருந்ததுடன் களத்தில் இறங்கிச் செயற்பட்ட வீரருமாவார். சமூக வாழ்வில் நேர்மையுட னும் சமூக உணர்வுடனும் செயற்படுவோர்க ளுக்கு சமயம், சமூகம், மொழி, கிராமம் ஒரு தடையாக இருக்காது என்பதற்கு இவரது வாழ்வு ஒரு முன் உதாரணம்.


கார்த்திகை 1972 முருங்கன் பங்கைப் பொறுப்பெடுத்த காலம் அது. ஒரு நாள் திருவாளர் செபமாலை அவர்கள் என்னை சந்தித்து வரவேற்று நாட்டு நடப்புக்களையும் பகிர்ந்து கொண்ட நினைவலைகளை மீட்டுப் பார்க்கிறேன். நத்தார் விழாவுக்கான ஆயத்தங் கள் களைகட்டும் நாட்கள் அவை, ஒளிவிழா நிகழ்ச்சிகள் பாடசாலை மண்டபத்தில் அரங் கேறிய நேரம். 'யார் குழந்தை'யென்ற விறுவிறுப் பான நாட்டுகூத்து பார்த்தேன். வியந்தேன். சலமோன் அரசனின் பாத்திரத்தை நடித்த திரு. செபமாலை அவர்கள் வாளைக் கையிலேந்தி தலை கீழாக தனது மகனை துண்டாட எடுத்த கோலம் ஓர் அற்புதம். அக்குறு நாடகம் அவரு டைய கூத்துக் கலைத்துவத்தின் ஒரு பிழிவு. இவ் அளிக்கை எனக்கு கலையில் குறிப்பாக நாட்டுக்கூத்தில் ஒரு நிலைப்பற்றை உருவாக்கிச் சென்றது.

## ஒரு வெகுசன கலையன்

கலை என்பது மனித வாழ்வில் இருந்து தோன்ற அது மனித வாழ்வை செழுமைப்படுத்து கின்றது. வெகுசனங்களை தழுவியதாக இருப் பதுடன் அது அம்மக்களுக்கு சமூகம் பற்றிய புரிதலை உணர்த்தி வைக்கும் ஆற்றிலினையும் பெற்றிருக்கவேண்டும். ஆகவே கூத்துக்கலை யும் இதற்கு விதிவிலக்கல்ல. அறுபது எழுபது களில் தமிழர்கள் மீது கொடூரமான அடக்கு முறைகள் தொடங்கிய காலம், அதை எதிர்ப்ப தற்கான துணிவு வேண்டிய காலம், அடிமை விலங்கிலிருந்து விடுபட விடுதலை தாகிப்புக் காலம். இக்காலத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசிரியர் செபமாலை அவர்களால் எழுதித் தயாரிக்கப்பட்ட இலக்கிய கதைப் பொருளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISBN 978-955-4609-00-6
9 789554 609006

Graphics
Jaffna 0777 446973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட 'வீரத்தாய்', 'கல்சுமந்த காவலர்கள்', 'இணைந்த உள்ளம்' காலத்தின் கண்ணாடியாக அமைகிறது. அத்துடன் மக்கள் வேண்டிநிற்கும் அறநெறி பரம்பலிற்கு விவிலியக் கதைப் பொருளைக் கொண்ட 'வீரனை வென்ற தீரன்', 'யார் குழந்தை' என்பனவாகும். இவ் ஐந்து கூத்துக்கள் போட்டிகளில் வெற்றியீட்டியது மட்டுமல்ல ஒன்றிணைந்த நூல் தொகுதியாக நானாட்டான் பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப் பட்டதும், மேலும் விடுதலை உணர்வு அறநெறி கலந்த மரபுவழி நாடகங் களை: 'இறைவனா புலவனா' (புராணக்கதை), 'நளன் தமயந்தி' (இலக்கியக்கதை), 'விடுதலைப் பயணம்' (விவிலியக் கதை) 1990களின் அரங்குகளில் வலம்வந்து முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினால் அச்சு வாகனம் ஏற்றப்பட்டதும் இவரது கூத்தியலின் பன்முக ஆளுமையை சித்திரிக்கிறது.

## வடபாங்கு கூத்து மரபின் ஒரு முன்னோடி

ஈழத்து கூத்து மரபை வடமோடி தென் மோடி என இரு கூறுகளாக பிரிப்பர். கத்தோ லிக்க கூத்து என்றழைக்கப்படுமளவிற்கு தென் மோடி மரபு பெரும்பாலும் கத்தோலிக்கரால் தழுவி அமைக்கப் பட்டுள்ளது. இத்தென்மோடி மரபு சார்ந்த மன்னார் பிரதேசக் கூத்துக்களை வடபாங்கு, தென்பாங்கு என இருவகையாக பேராசிரியர் வித்தியானந்தன் நோக்குகின்றார். தென்பாங்கு கூத்தானது மாதோட்டப்பாங்கு கூத்து என்றும், தென் மெட்டு என்றும் வெவ் வேறு பெயர்களில் அழைக்கப் படுகின்றது. இது மன்னாருக்கே உரியதான தனித்துவத்தினைக்கொண்டு காணப்படுகின்றது. கிராமிய இசைத் தன்மையை இதன் பாடல்கள் அதிக மாகக் கொண் டுள்ளன.



மன்னார் பிரதே சத்தில் ஆடப்படும் மற் றொரு கூத்துமரபே வட பாங்கு ஆகும். இது யாழ்ப்பாண பாங்கு என் றும், வடபாங்கு என்றும், வடமெட்டு என்றும் வெவ் வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. *(யோன்சன் ராஜ்குமார் யோ., ஆற்றுகை, ஈழத்து கத்தோலிக்க நாடக மரபு, திருமறைக் கலாமன்ற வெளியீடு, டிசெம்பர் 2010.)*

"மன்னாரில் வடபாங்கு கூத்து மரபில் புகழ் பெற்று விளங்குபவர் முருங்கனைச் சேர்ந்த குழந்தை என அழைக்கப்படும் ஆசிரியர் செ. செபமாலை ஆவார். கூத்துப் பாரம்பரியம் மிக்க பரம்பரையில் பிறந்த இவர் பேராசிரியர் வித்தியானந்தனின் கூத்து புத்தாக்க நடவடிக்கையில் கவரப் பட்டு கூத்துத்துறையில் தீவிரமாக இயங் கத் தொடங்கியவர். நடிகராக, நெறியாள ராக, எழுத்தாளராக, பன்முக ஆளுமை யுடன் விளங்குபவர்."

என்று, கூத்தியல் ஆய்வாளர், திரும றைக் கலாமன்ற துணைஇயக்குநர் திரு. யோ. யோன்சன் ராஜ்குமார் யதார்த்தமாக வர்ணிக் கிறார்.

## ஈழவர்களின் தேசிய கலைவடிவிற்கு ஒரு மூலவிசை

ஈழத்துக்கூத்து மரபிற்கு ஓர் உயிர்ப்பை வழங்கியவரென்ற வகையில் பேராசிரியர் வித்தி யானந்தனின் பணி போற்றுதற்குரியது. மத்தியதர வர்க்கத்தினரால் நிராகரிக்கப்பட்டு, கூத்து நாகரி கமற்ற கலை என்ற நிலைப்பாட்டினை மாற்றி அது தமிழர்களின் தேசிய கலைவடிவம் என்ற பிரக் ஞையை ஏற்படுத்தியவர் பேராசிரியர். இதை பல் கலைக்கழக மட்டத்தில் ஆய்வுப் பொருளாக மட் டும் கொள்ளாமல் மக் கள் மத்தியில் ஊடுருவி நிற்பதற்கு திரு. செபமாலை அவர்களின் பங்களிப்பு கவனத் திற்குரியது.

ஈழத் தமிழர்க ளின் தேசிய வடிவமாகிய நாட்டுக்கூத்து எமது சிந்த னைக்கும் மேலாக விலை மதிக்க முடியாதது. துல்லி யமான அழகியல் வாழ்வு ரிமை கொண்டது. இதன் பெறுமானங்கள் ஆடல ரங்க நிகழ்வுகள் மூலம் நம்மவர் வழித்தோன்றல் களிற்கு கடத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்!

மக்கள் மயப்படுத்தப்பட்டதாக, கூத்துக் கலை வாழும் கலையாக வளருவதற்கு காலத் திற்கேற்ப தழுவிஅமைத்தல் காலத்தின் தேவை. இம்மாற்றத்திற்கு வித்திட்டவர் திரு. செபமாலை அவர்கள் என்றால் இது மிகைப்படுத்தப்பட்ட கூற்று அல்ல. அவருடைய கூத்துக்கதை நூல் வடிவாக்கங்கள், குறுங்கூத்து அளிக்கைகள், உள் அரங்குகள் இதற்குச் சான்று பகரும்.

## நாடக முகாமைத்துவ வளவாளர்

இவர் ஒரு நடிகராக, நெறியாளராக, எழுத்தாளராக மட்டுமல்ல அனைவரையும் அணைத்து செயல்படக்கூடிய சிறந்த முகா மைத்துவ வளம் கொண்டவர். நாட்டுக்கூத்து ஒரு கூட்டளிக்கை. பாத்திரங்களின் நடிப்புத் திறன் மட்டுமல்ல அவர்களது சுயம், குண அம்சங்கள், குடும்ப- தொழில்- பொருளாதார பின்னணி, கூட்டுப் பொறுப்புணர்வு அனைத்தும் அறிந்து நெறியாள்கை செய்யும் ஆற்றல் வேண்டற்பாலது. நினைத்ததை செயல் படுத்தும் ஆற்றல் கொண்ட இவர் நாடகம் ஒன்று குறிக்கப்பட்ட நாளில், இடத்தில் மேடை யேற்ற எண்ணினால் அது நடந்து முடியும்.

கலாநிதி எம் மில் கூ என்ற மனோ தத்துவ நிபுணரின் கூற்று திரு. செபமா லைக்கு மிகப் பொருந் தும். "நீ என்ன செய்ய நினைக்கிறாயோ அது மிகச் சுலபம் என்று எண்ணிக்கொள். அது உண்மையிலேயே சுல பமாகிடும்" என்றார். எனவே நேர்மறை எண்ணங்களுடன் செயற்படுவது மாத்திரமல்ல செய்யும் செயலானது சுலபமானது எனவும் எண்ணவேண் டும். எண்ணம் நம்பிக்கை யாய், செயலாய், பழக்க மாய், மனித நிறைவாய் மாறுகிறது.



தனது வாழ்வை கலைக்குள் முழுமை யாக அர்ப்பணித்த அண்ணா வியாரின் கூட்டு அளிக்கை களில் மனித நடத்தைகள் பொருத்த மற்றதாக, முட் டாள்தனமாக இருந்த

போதிலும் அவற்றை சித்திரிப்பதில் வெறுப்பில்லாத அவரது நடையில் எளிமையும், தெளிவும், செறிவும் காணப்பட்டன. அவரது படைப்புகள் ஏழ்கடலையும் புகட்டியது போன்றதொரு அனுபவம். அவரது முகாமைத்துவ ஆளுமை அவரது சிந்தனையிலும் அளிக்கைகளிலும் பளிச்சென்று தெரிகிறது. எனவே நேர்மறை எண்ணங்களை நாம் கொண்டிருந்தால் எதிலும் வெற்றி பெறலாம். மனம் என்பது அற்புதமான வெற்றிகளை கொடுக்கக் கூடிய சக்தி வாய்ந்த உன்னத அமைப்பு என்பதை தனது அனுபவத்தி னால் காண்பித்தவர்.

## பிறப்பால் ஒரு கலைஞன்

கூத்துப் பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்புலம் இவரை கூத்தியல் நாட்டத்திற்கு தள்ளியுள்ளது. லத்தீனில் பழமொழி ஒன்றுண்டு "கவிஞன் பிறக்கிறவன், பேச்சாளன் உருவாகிற வன்" *(Poeta nascitur Orator fit)*. இக்கூற்று இவரில் மெய்மைப் படுத்தப்பட்டுள்ளது. இவ ரால் உருவாக்கப்பட்டு ஆற்றுகைப்படுத்தப்பட்ட கூத்தியல் துணுக்குகள், அவற்றிற்குரிய இயல் பான கதை தழுவிய பாடல் ஆடல்கள், கடின மான தாளப்பின்னல் நிறை கொட்டுகள், அதன் அடிப்படைக் கோட்பாடுகள் தவறாது, பிசகாது துல்லியப் படுத்திச் சமர்ப்பிக்கும் வித்துவத்துவம், இவற் றுக்குள் அனைத்திலும் ஊடாடும் அடிப்படை யான தளம்பலற்ற தெளிந்த மனப்பதிவு. அவரது கலைப்பணி ஒட்டுமொத்த ஆளுமையின் பெறுபேறு. நாடு பூராக அவர் பெற்ற விருதுகள், மக்கள் மயப் படுத்தப்பட்ட கலையரங்குகள் அவரது கலை யடக்கத்திற்கான சாட்சியம்!

'கூத்துக்கதை' ஆக்கம் என்பது ஆற்று கைக்கலை வடிவங்களில் பன்முக ஆளுமை பெற்ற ஒருவரின் மிகப்பெரிய பிரசவம். எனவே அது சார்ந்த அனைத்து அலகு களையும் நிதர்சனப் படுத்தல், கதையின் எண ணக்கருவை துல்லியப் படுத்தல், பாத்திரப் படைப்பு, ஒப்பனை அடை யாளங்கள், இசைநெறிப் பாடு, அரங்கப் பயன்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அனைத்து ஆக்கங்களையும் தனியனாக நெறியாள்கை செய்யக்கூடிய வினைத்திறன் கொண்ட ஓர் அற்புதப் படைப்பாளி!

அவரது பன்முக ஆளுமைக்கு ஊக்கி யாக இருந்த தீவிரம் நேர்- எதிர்மறையாக அலசப்பட வேண்டியதொன்று. தனது அளிக்கைகள் படைப் பாற்றல் கொண்ட உன்னத நிலை எய்துவதற்கும், கலை நுட்பங்களை மிக நுணுக்கமாக பின்பற்று வதற்கும், கொடுத்த வாக்குறுதிகளை தக்கவைப் பதற்கும், தன்னை வருத்திச் செயல்பட்டார். ஒரு சில கட்டங்களில் தனது உடல்நிலை ஈடுகொடுக்க முடியாத அளவிற்குப் பொறுப்புகளைச் சுமந்தார். அத்துடன் அரங்குகள் அளிக்கைகள் செலவுகளை யடைவதற்கு சொந்த பணத்தை தாரைவார்த்து பொருளாதார சுமையுடன் வாழ்ந்ததும் நோக்கற் பாலது. கலையில் கொண்டகாதல் இவ்வித நிலைக்கு தள்ளுமென்பது பட்டறிவு. கலையின் வளர்ச்சிக்கு எளிமை வாழ்வும், வறுமை நிலை யும் தேவை என்பர். ஆனால் நவீன காலத்தில் இந்நிலை தொடரப்படவேண்டுமா? இது தொடர்ந்தால் கலை அழிந்துவிடும் கலையர் களும் அற்றுப்போய்விடுவர். சமூகமாகிய நாம் அவர்களைத் தாங்க வேண்டும்.

கலைக்காக பலவற்றை இழந்து அவ்விழப பில் பிரபஞ்ச மதிப்பீடுகளை எம்முடன் பகிர்ந்து வாழ்கின்ற திரு.செபமாலை அவர்களை நான் அறியக்கிடைத்தது பெரும் பாக்கியமே. ■

"சடங்கிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றது என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் கூட, சடங்கும் நாடகமும் ஒன்றெனக்கொள்ள முற்பட முடியாது. சடங்கு வேறு நாடகம் வேறு. அவை தத்தம் நோக்கங்களால் மட்டுமல்லாமல், அவை தத்தம் செய் முறைமைகளாலும் காணக்கிடக்கின்ற பாங்காலும் வெவ்வேறானவை என்பதை நிறுவி நிற்கின்றன.

நாடகம் சடங்கை நோக்கிச் செல்லவேண்டும் எனக் கூறுவதுகூட அபத்தமான, ஆபத்தான ஒரு கருத்தாகும். மனித முன்னேற்றத்தில் தவறுகள் ஏற்பட்டு விட்டன என்பதற்காக மனிதன் திரும்பவும் குரங்கு மனிதனின் நிலையை நோக்கித் திரும்பிச் செல்லவேண்டுமெனக் கூறமுடியுமா? மக்களோடு நாடகம் நெருக்கம் கொள்ள வேண்டும் என்பதற்காக, நாடகத்தைத் திரும்பவும் சடங்கு நிலைக்குக் கொண்டு செல்வது சரியா?

புதுப்புதுச் சடங்குகளைச் செய்யலாம். அத்தகைய புதுச் சடங்குகள் எத்தனை எத்தனை காலம் தோறும் வந்தவண்ணமுள்ளன. நாடகத்தை நாடகமாக வளர்ந்து செல்ல விடவேண்டியதுதானே. ஏன் பின் நோக்கியபயணம்?..."

**நன்றி: குழந்தை ம.சண்முகலிங்கம், 'முன்னுரை,' மூலநூல்: சி.மௌனகுரு, அரங்கியல், பூபாலசிங்கம் புத்தகசாலை, 2010.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ நாட்டுப்புற இலக்கியத்தின் மீட்புப்பணி



அருள்சகோதரி கலாநிதி மாக்கிரட் பஸ்ரின்
M.Phil.,Ph.D.(Indian Music)
அதிபர், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி, தென் இந்தியா.

**– குழந்தையின் 'வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்' குறுந்தகடு பற்றிய சிறு கண்ணோட்டம் –**

**கி**றிஸ்தவத்தின் வரலாறு என்பது இந்திய மண்ணில் அதிலும் குறிப்பாக தமிழ் மண்ணில் புனித தோமையார் வாழ்ந்த முதல் நூற்றாண்டில் கி.பி.52ஆம் ஆண்டில் தொடங்கு கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

மீண்டும் பல நூறு ஆண்டுகள் கடந்த பிறகுதான் கிறிஸ்தவம் எழுச்சி பெற்று வளர்ந்தது. இருப்பினும் இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்தவம் தழைத்தோங்காமல் இருந்திருக் கலாம். ஆனால் காய்ந்து கருகிவிடவில்லை என்பதுதான் உண்மை.

அப்படி கிறிஸ்தவம் கருகாமல் இருந்த மைக்கு அன்றைய காலத்தில் மக்களின் வாழ்வியலோடு கலந்திருந்த நாட்டுப்புற கிறிஸ் தவப் பாடல்களும், மன்றாட்டு மாலைகளும் ஒரு காரணம் என்று சொல்லலாம்.

பொழுது போக்கு என்பது இன்றைக்கு இருப்பது போல் ஆதிக்கம் செலுத்தாமலிருந்த அன்றைய காலகட்டத்தில் கிறிஸ்துவைப் பற்றிய, புனிதர்கள் சிலரைப் பற்றிய நாட்டுப்புறப் பாடல்களும், மன்றாட்டு மாலைகளும்தான் கிறிஸ்தவத்தை தொய்வின்றி காப்பாற்றி வந்திருக்க வேண்டும். அதனால்தான், அந்த கிறிஸ்தவ நாட்டுப்புறப் பாடல்கள் பழந்தமிழ் செய்யுள் சொற்கள் கலந்த தமிழாக இன்றும் பரிணமிக்கின்றன.

கிறிஸ்தவ இலக்கியத்தின் இந்த வர லாற்று ரீதியான பிரதிபலிப்பு, வளர்ச்சி என்பது தமிழகத்திலும் இலங்கையிலும் ஏறத்தாழ ஒன்று பட்டுத்தான் இருந்திருக்க வேண்டும்.

இதனடிப்படையில் இலங்கை யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த அமலமரித் தியாகிகளின் புனித வளனார் சிறிய குருமடத்தின் அருள் தந்தை செ.அன்புராசா அ.ம.தி. அவர்கள் உருவாக்கியிருக்கும் வியாகுல இசைப்பாக் களும், வியாகுல பிரசங்கமும் என்ற ஒலிக்குறுந் தகடு, பழமை வாய்ந்த கிறிஸ்தவ நாட்டுப்புறப் பாடல்களின் நவீன வடிவமாக நம்மை வசீகரிக் கின்றது.

பாஸ்கா என்று சொல்லப்படுகின்ற கிறிஸ்து இயேசுவினுடைய திருப்பாடுகளின் மேடை நாடகத்தில் பயன்படும் பல்வேறு புலம்பல்கள் இன்றும் வயது முதிர்ந்த பல கிறிஸ்தவர்களால் முணுமுணுக்கப்படுவதனை பார்த்திருக்கின்றேன், கேட்டிருக்கிறேன். ஆனால் இவற்றை ஆவணப்படுத்தும் முயற்சி யில் இந்த ஒலிக்குறுந்தகடு வெற்றி பெற்றிருக் கிறது என்பதில் மனம் நிறைவு கொள்கிறது.

யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் என்ற மூத்த தமிழறிஞர்தான் ஜான், ஜேக்கப், ஜோசப் என்று இருந்த விவிலியப் பெயர்களை எல்லாம், முறையே: யோவான், யாக்கோபு, யோசேப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மாற்றியவர் எனத் தமிழ் உலகில் குறிப்பிடுவார்கள். இத்தகைய தமிழ்த் தொண்டின் பின்புலம் கொண்ட யாழ்ப்பாணத்திலிருந்து கிறிஸ்தவ தவக்கால மரபுவழி துன்பியல் பாடல்களின் தொகுப்பு ஒலிக் குறுந்தகடாக வந்திருப்பது, இலங்கை மண்ணில் தொடர்ந்து வரும் மரபுசார்ந்த உன்னதத் தமிழ் தொண்டாகவே தெரிகிறது.




இதில் பாடியிருக்கும் தலைக்கோல் செபமாலை, நாட்டார் பாடல் கலைஞர் மாசிலாமணி, தேன்மொழி ஆகியோரின் மண்ணுக்கேற்ற குரல் வளம் பாடலுக்கும் அதன் சூழ்நிலைக்கும் உணர்வூட்டுவதாக உள்ளது. கத்தோலிக்க கலை இலக்கியத்தின் தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளின் வியாகுல பிரசங்கம் மனதை உருக்கும் வகையில் அமைந்துள்ளது. பின்னணி வழங்கியோரின் குரல்கள் பக்கபலமாக உள்ளன. இசைக் கலைமணி சுந்தரமூர்த்தி கோபிதாஸ் அவர்களின் வயலின் இசை பாடலுடன் இழைந்தோடி கூடுதல் செறிவூட்டுகிறது.

தமிழகத்தில் பழமையான நாட்டுப்புற கிறிஸ்தவப் பாடல்கள், அச்சு வடிவில் முன்னர் அச்சிடப்பட்டு தற்போது ஒருசில நூல்களில் இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த ஒலிக்குறுந்தகடை பார்க்கும் போது இது போன்ற முயற்சியில் நாம் ஏன் ஈடுபடக்கூடாது? என்கிற உந்துதலை எமக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

எந்த ஒரு கலையும் பார்வையாளர்களுக்கு ஏதேனும் ஒரு உன்னத உணர்வை ஏற்படுத்தினால் அதுதான் வல்ல கலை, நல்ல கலை என்று ஒரு இலக்கண மரபுண்டு. அந்த வகையில் 'வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்' என்ற இந்த ஒலிக்குறுந்தகடு முயற்சி ஒரு வல்ல, நல்ல கலை முயற்சி என்று உறுதியாகக் கூறலாம்.

கிறிஸ்தவ இலக்கியங்களுக்கென்று தனியாக கலைகளஞ்சியம் ஒன்று இல்லை என்று பல்வேறு தமிழறிஞர்கள் குறைப்பட்டுக் கொள்வதை கேட்டிருக்கிறேன். இந்த ஒலிக் குறுந்தகட்டின் உருவாக்கம் கிறிஸ்தவ இலக்கிய மீட்புக்கும், மறு உருவாக்கத்திற்கும் ஒரு நல்ல ஆரம்பமாக அமையுமென்றால் அதுதான் இதன் வெற்றி என்று நினைக்கிறேன்.

நவீனங்கள் மலிந்திருக்கும் இன்றைய காலத்தில் இது போன்ற முயற்சிகள், கிறிஸ்தவ உலகில் எந்த அளவிற்கு வரவேற்பைப் பெறும் என்பது கேள்விக் குறிதான். இருப்பினும் இந்தத் துணிச்சலான முயற்சி போற்றுதற்குரியது.

இம்முயற்சியை பாராட்டி ஊக்குவிக்க வேண்டியது கிறிஸ்தவர் ஒவ்வொருவரின் கடமை. இந்த கடமை உணர்வு மென்மேலும் பெருகவும், இது போன்ற முயற்சிகள் தொடரவும், கிறிஸ்தவ இலக்கியங்கள் சாகாவரம் பெற்று நிலைக்கவும் இறைவனை பிரார்த்தித்து, இப்பெரும் முயற்சிக்காக அருள்தந்தை அன்புராசா அ.ம.தி அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன். ■

"அனுபவம், புத்திக்கூர்மையுள்ள கலைஞர். செ.செபமாலை (குழந்தை) அவர்களை நான் நன்கு அறிவேன். சிறந்த சங்கீத நடன நாடக பற்றுடைய குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது நாடகங்கள் தரமானவை. தகுதி வாய்ந்த நடிகர். நாடகத்தின் மூலம் நடிப்பையும் தலைமைத்துவத்தையும் காத்து வருபவர். 1968இல் இவருக்கு கவிஞர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது."

**பேராசிரியர் சு.வித்தியானந்தன், (29.05.1972)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தலைக்கோல்' விருது பெற்ற மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்துக் கலைஞர் கலாபூஷணம் செ.செபமாலை [குழந்தை]



**கலாநிதி தமிழ்மணி அகளங்கன்**
*ஓய்வுநிலை ஆசிரியர்,*
*வவுனியா.*

*2000ஆம் ஆண்டில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின்போது, எனக்கு கிடைத்த பெரிய விருது, கலாபூஷணம் செ.செபமாலை (குழந்தை) அவர்களைச் சந்தித்தது.*

*அவ்விழாவில் அவ்வாண்டுக்கான 'ஆளுநர்' விருது பெறுவோரில் அவரும் ஒருவராக இருந்தார். அதே விருதைப் பெற அவரருகில் நானும் இருந்தேன்.*

*அவரைப்பற்றி முன்பு நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இருப்பினும் நேரில் சந்தித்ததில்லை. கதைக்க, பழக இனிமையான, திறமை வாய்ந்த ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞரோடு அருகே அமர்ந்திருந்து உரையாடியது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.*

*வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குள் கல்வியிலும், கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகப் பொதுவாகச் சொல்லப்படும் மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் அவரது பிறந்த, வளர்ந்த, வாழ்கின்ற பிரதேசம்.*

*குளத்தோடும், வயலோடும், மரங்களோடும், குயில், கிளி, மயில் எனப் பறவைகளோடும் மிகவும் அழகாகக் காணப்படும் அமைதியான பிரதேசத்தில் அவரது கிராமம் அமைந்துள்ளது. மன்னார் வீதியில் முருங்கன் சந்தியிலிருந்து தெற்கு நோக்கி 1 கி.மீ. வரை சென்றால் முருங்கன் கமம் என்ற அவரது கிராமத்தை அடையலாம்.*

*அங்கிருந்து படித்து ஆசிரியராகி, அதிபராகி, ஓய்வு பெற்ற செபமாலை அவர்களை குழந்தை என்றால் தான் யாவருக்கும் தெரியும். 08.03.1940இல் செபஸ்தியான் என்பவரின் மகனாகப் பிறந்த குழந்தை அவர்கள் நாட்டுக்கூத்தில் மிகவும் திறமை பெற்ற கலைஞர்.*

*வடமோடி, தென்மோடி இரண்டும் தெரிந்தவர். ஆடவும் பாடவும் ஒப்பனை செய்யவும் தெரிந்தவர் என்பதோடு நாட்டுக்கூத்துப் பாட்டுக்களை எழுதவும் தெரிந்தவர். நாட்டுக்கூத்தைத் தயாரிக்கின்ற அண்ணாவியாராகவும் செயற்படுகின்றார்.*

*அவரைப் பாடவைத்து, பல தடவைகள் நாங்கள் கேட்டிருக்கின்றோம். அவரது குடும்பம் கலைக் குடும்பம். அவரும் அவரது துணைவியாரும், பிள்ளைகளும் சேர்ந்து நாட்டுக்கூத்துக்களில் ஆடியிருக்கிறார்கள். நாடகங்களில் நடித்திருக்கிறார்கள். அவரது இளைய சகோதரர் மாசிலாமணி அவர்கள் நாட்டுக்கூத்துப் பாடல்களை அவரோடு போட்டியிட்டு பாடக்கூடிய ஆற்றல் படைத்தவர்.*

*அவரது மகன் அன்புராசா ஒரு பாதிரியார். நல்ல கலைஞர். சில நூல்களை வெளியிட்டவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார்ப் பிரதேச கூத்துக்கள் பற்றி ஆராய்ந்து M.phil பட்டத்துக்கு சமர்பித்துள்ளார். 'ஞானம்' சஞ்சிகையிலும் எழுதியுள்ளார்.

குழந்தை அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த பௌர்ணமிக் கருத்தாடல் நிகழ்வுகளுக்கு அவர் வந்துபோகத் தொடங்கினார். எங்கள் வீட்டில் தங்கிச் சென்றிருக்கிறார்.

ஆண்டுதோறும் அவரது பெருமுயற்சியால் முருங்கனில் நடைபெறுகின்ற கலைவிழாக்களில் இரு தடவைகள் நான் சென்று உரையாற்றி, அவரது உபசரிப்புக்குள்ளானேன்.

நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு, சரித்திர, சமூக, இசை நாடகங்கள் பலவற்றை எழுதி, இயக்கி, நடித்துப் பாடி மன்னாருக்கே தனிப் பெருமையைச் சேர்த்தவர் குழந்தை.

நாட்டுக்கூத்துக் கலை இவருக்கு தந்தை வழி முதுசொம். தந்தையார் நாட்டுக்கூத்து அண்ணாவியார். இவரது தமையனார் ஒரு புலவர். சகோதரர்கள் யாவரும் நன்றாகப் பாடுவார்கள்.

பாடசாலைக் காலத்திலிருந்தே கலை, இலக்கிய ஈடுபாடு கொண்ட இவர், 1964இல் 'முத்தமிழ்க் கலாமன்றம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி கலை நிகழ்ச்சிகளைச் செய்து வருகிறார்.

பாடசாலையில், தமிழ்த்தினப் போட்டிகளுக்காகவும், பொது மேடைக்காகவும், 'கவரி வீசிய காவலன்', 'கண்டி அரசன்', 'நளன் தமயந்தி', 'இணைந்த உள்ளம்', 'மயான காண்டம்', 'கல் சுமந்த காவலர்கள்', 'யார் குழந்தை', 'வீரனை வென்ற தீரன்', 'வீரத்தாய்' முதலான நாடகங்களை நடத்தி பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர்.

இவற்றோடு பல சமூக நாடகங்களையும் எழுதி இயக்கித் தயாரித்து நடித்து மேடையேற்றியுள்ளார். சமூக நாடகம், இலக்கிய நாடகம், சரித்திர நாடகம், இசை நாடகம், கூத்து என 32 ஆக்கங்களை பல தடவைகள் மேடையேற்றியுள்ளார்.

இவற்றோடு எட்டு நூல்களையும் ஆக்கியுள்ளார். 'இன்பத்தமிழின் இதய ஒலம்', 'அறப்போர் அறை கூவல்', 'யாகப்பர் இன்னிசைப் பாடல்கள்', 'நாம் மலர் 1', 'நாம் மலர் 2, 'மரபுவழி நாடகங்கள்', 'மாதோட்டம்' (கவிதைத்தொகுதி) ஆகிய இவற்றோடு, 'பரிசு பெற்ற நாடகங்கள்' என்ற நூலையும் வெளியிட்டார். இது 1998இல் தேசிய சாஹித்திய மண்டலப் பரிசை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

முத்தமிழ் வேந்தர், கலாபூஷணம், திருக்கலை வேந்தன் முதலான பட்டங்களையும், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதினையும் பெற்றவர். பல தடவைகள் பல விழாக்களில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். கிழக்குப் பல்கலைக்கழகம் உலக நாடக தின விழாவை 2005இல் நடத்தியபோது 'தலைக்கோல்' என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது.

மன்னார் மாவட்டத்தில், சாஹித்திய விருது, கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, தலைக்கோல் விருது ஆகிய பெரு விருதுகளைப் பெற்ற சிறப்பு குழந்தை செபமாலை அவர்களுக்கேயுரியது.

வானொலி நிகழ்ச்சிகள் மூலமும், ரூபவாஹினித் தொலைக்காட்சியில் பேட்டி மூலமும் பலருக்கு அறிமுகமான குழந்தை அவர்கள் 67 வயதைக் கடந்த பின்பும் மேடையிலே ஆடிப் பாடி ரசிகர்களை மகிழ்வித்து வருகின்றார்.

சமாதான நீதிபதியும், பல்துறை ஆற்றல் மிக்க கலைஞருமான கலாபூஷணம் செ.செபமாலை (குழந்தை) அவர்களை, பல்லாண்டு வாழ்ந்து கலைப்பணி செய்ய 'ஞானம்' சஞ்சிகை சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றேன். ■

**நன்றி: ஞானம், பெப்ரவரி 2009, 105 ஆவது இதழ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடுபாடுள்ள ஒரு கலைஞன்

**அருள்கலாநிதி யோ.கி.போல் றொகான்**
*B.Th.,Ph.D.(Rome)*
*விரிவுரையாளர்,*
*புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*



**ம**னித வாழ்வு என்பது பல நிகழ்வுகளின் தொகுப்பாகும். சில நிகழ்வுகள் தாமாகவே வந்து சிலரது வாழ்வோடு ஒட்டிக்கொள்ளும். சில நிகழ்வுகள் சிலரது வாழ்வோடு தற்செயல்களாக, விபத்துக்களாக வந்து சேர்கின்றன. பல நிகழ்வுகளை மனிதர்கள் தாமாகவே விரும்பி, சுதந்திரமான தெரிவின் மூலமாக ஏற்றுக்கொள்கிறார்கள். இப்படி தாமாகவே வந்து, ஒட்டிக்கொண்ட, விபத்தாக வந்து சேர்ந்த அல்லது தெரிவின் மூலமாக ஏற்றுக்கொண்ட அனைத்து நிகழ்வு களின் செயலாக்கமே மனித வாழ்வாகும். இப்படிப்பட்ட வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் மிகுந்த ஈடுபாட்டுடன் எதிர்கொள்ளும் மனிதன் தனது வாழ்வை 'வாழ்கின்றான்' என்று கூறலாம். ஈடுபாட்டிலே இருந்து மலருவதுதான் மனித வாழ்வாகும்.

ஒரு மனித செயல் முழுமையான மனித செயலாக மாறுவதற்கு மெய்யியலாளர்கள் இரண்டு இன்றியமையாத பண்புகளை முன் வைக்கிறார்கள். முதலாவது ஒரு மனிதனது சுயபுத்தியின் தெளிவு, இரண்டாவது அவனது சித்தத்தின் முழு விருப்பம். இவ்வாறு புத்தியும், சித்தமும் ஒரு செயலை மனித செயலாக உருவாக்கி, அச்செயலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைக்கு உட்படுத்துகிறது. ஆனால், ஈடுபாடு என்ற அம்சத்தை எடுத்து நோக்கினால் அதற்கு மனித புத்தியும், சித்தமும் மட்டுமல்ல, மாறாக, முழு மனித ஆளுமையுமே இணைவதை அவதானிக்கலாம். சில நிகழ்வுகளில் சில மனிதர்கள் உடலளவில் மட்டும் பங்கேற்பார்கள். அவர்களது மனம் அந்நிகழ்வுகளை விட்டு வெகு தொலைவில் இருக்கும். இதனை புற ஈடுபாடு அல்லது உடலளவான ஈடுபாடு அல்லது கடமை கருதிய ஈடுபாடு எனலாம்.

கல்வி கற்க விரும்பாத ஒரு மாணவனை வகுப்பறையில் வருத்தி திணித்து வைத்திருப்பதைப் போன்றது இது. வேறு சிலர் தங்கள் வாழ்வின் நிகழ்வுகளில் மனதளவில் மட்டும் ஈடுபடுவார்கள். உடலையும் இணைத்து முழு மனித ஆளுமையுடனும் வாழ்வின் நிகழ்வுகளில் பங்கேற்க பல புறக்காரணிகள் அவர்களுக்குத் தடையாக அமையும், உடல் இயலாமை (முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாம். ஆனால் அடைய முடியாது), அச்சம், கூச்சம், இறுமாப்பு போன்ற காரணங்களால் மனதளவான ஈடுபாடு, புறத்தில் வெளிப்படுவதில்லை. முழு மனித ஆளுமையையும் ஈடுபடுத்தி தமது வாழ்வை வாழ்கின்ற, வாழ்வை மலரவைக்கின்ற பலரைக் காண்பது கடினம். அப்படிப்பட்ட சொற்பமானவர்களில் ஒருவர்தான் கலைஞன் குழந்தை மாஸ்ரர்.

செபஸ்தியான் செபமாலை என்ற இயற் பெயர் கொண்ட, ஆனால் எல்லோராலும் குழந்தை மாஸ்ரர் என்று அன்புடன் அழைக்கப்படுகின்ற இவரை நேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பதற்கு முன்னர், பலர் இவரைப் பற்றிக் கூறக்கேட்டிருக்கிறேன். நேரில் சந்தித்த பின்புதான் இவரது ஆளுமையின் முழுமையையும், ஆழத்தையும் கண்டு அறிந்து கொண்டேன். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இயங்கும் தனிநாயகம் தமிழ்மன்றம், ஈழத்துத் தமிழ்க் கூத்துப் பாரம்பரியத்தின் அனைத்துப் பாங்குகளையும் கற்றறிவதிலும், வித்தியாசமான பாங்கிலமைந்த கூத்துக்களை மேடையேற்றுவதிலும் பரீட்சார்ந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் 2004ஆம் ஆண்டு மன்னார்ப் பாங்கிலமைந்த கூத்து ஒன்றினை மேடையேற்ற எண்ணியபோது எனது மனதிற்கு வந்த முதற் கலைஞன் குழந்தை மாஸ்ரர்தான். ஏனையோரது கருத்துக்களைக் கேட்டபோது எல்லோரது கருத்தும் ஏகோபித்ததாக, "குழந்தை மாஸ்ரர்தான் அதற்குச் சரியான ஆள்" என்றமைந்திருந்தது.

தனிநாயகம் தமிழ்மன்றம் தயாரித்தளித்த கூத்துக்கள் எல்லாமே புதிய கதைகளைக் கொண்டவை. ஏற்கெனவே எழுதப்பட்ட, மேடையேற்றப்பட்ட கூத்துக்களை மேடையேற்றுவதைத் தவிர்த்து புதிய கதைகளைக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட கூத்துக்களையே தனிநாயகம் தமிழ்மன்றம் மேடையேற்றி வருகின்றது. இந்தவகையில் மன்னார் பங்கிலமைந்த கூத்து ஒன்றினை மேடையேற்ற முற்பட்டபோது, ஒரு புதிய கதை ஒன்றினை, மன்னார் பாங்கினூடாக கூறமுனைந்தோம். லத்தீன் அமெரிக்காவின் எல்சல்வடோர் நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்து வீரகாவியமான பேராயர் றொமேறோவின் வாழ்வின் கதை, அதே கதைப் பின்புலத்தினைக் கொண்ட வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு, குறிப்பாக தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு பொருந்துகின்ற ஒரு கதையாக இருந்தது. ஏற்கெனவே கவிதை வடிவில் 'மானுடத்தை நேசித்த மகான்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட பேராயர் றொமேறோவின் கதையுடன் குழந்தை மாஸ்டரிடம் சென்றோம்.

எமது நோக்கத்தையும் கதையையும் கேட்டவுடனேயே குழந்தை மாஸ்டர் அவர்கள் காட்டிய ஈடுபாடு எழுத்தில் விபரிக்க முடியாதது. "மன்னார்ப் பாங்கு கூத்து ஒன்றினை பரீட்சார்த்தமாக யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப் போகிறோம். அதுவும் வேதசாட்சிகளின் இரத்தத்தால் எழுதப்பட்டு வளர்ந்த மன்னார்ப் பாங்கின் கலை வடிவம் மூலமாக ஒரு நவீன வேதசாட்சியின் கதையை, மானுடத்தை நேசித்த ஒரு மாமனிதனின் கதையை கூறப்போகிறோம்" என்ற எமது நோக்கத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டி, ஒரு சிறிய குழந்தை போல மாறி மகிழ்ச்சியிலும், பிரமிப்பிலும் துள்ளிக்குதித்த அந்தக் காட்சியை மறக்க முடியாது.

'மானுடத்தை நேசித்த மகான்' என்ற மன்னார்ப் பாங்கிலமைந்த பேராயர் றொமேறோவின் கதையைக் கூறும் கூத்து யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற அரங்கில் 15.05.2004 இல் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் மேடையேற்றப்பட்டபோது பெருந்திரளான ரசிகர்களின் பாராட்டினைப் பெற்றது. இந்தக் கூத்தினைப் பற்றி முதன்முறையாக அவருடன் உரையாடலை ஆரம்பித்த நாள் முதல், கூத்து மேடையேற்றப்படும் வரை இக்கூத்தின் அண்ணாவியாரான குழந்தை அவர்கள் காட்டிய ஈடுபாடு எல்லோரையும் பிரமிக்க வைத்தது. ஒரு மனித செயற்பாட்டிற்கு இருக்க வேண்டிய மனத்தளவிலான ஈடுபாடும், புறத்தளவிலான ஈடுபாடும் குழந்தை மாஸ்ரர் என்கிற கலைஞனிடமிருந்து தாராளமாகக் கிடைத்தமைதான் இந்நாட்டுக் கூத்தின் மிகப்பெரும் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

இக்கூத்திலே, நடித்தவர்கள் எல்லோருமே கட்டிளம் பருவத்தினரான குருமட மாணவர்கள். அவர்களது ஆட்டத்திலே ஒரு சிறுபிழை ஏற்பட்டால் கூட, அரங்குக்கு ஓடிவந்து சரியான ஆட்டமுறையை ஆடிக் காண்பிப்பார். பாடல்களில் சிறு பிசிறல் ஏற்பட்டால் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக சரியான சந்தத்தில் பாடிக் காண்பித்து பிழையைத் திருத்துவார். கூத்தின் அனைத்து விடயங்களிலும் மிகுந்த ஈடுபாட்டைக் காண்பித்து, கூத்து "சிறப்பாக" அமைவதை விட, "மிகச் சிறப்பாக" அமைவதே தனது நோக்கம் என்று அடிக்கடி கூறுவார்.

இவ்வாறு, தான் ஏற்றுக் கொண்ட விடயத்தில் முழுமையான ஈடுபாட்டைக் கொண்ட ஒரு கலைஞனாக குழந்தை மாஸ்டர் அவர்களை நான் கண்டு, அவர்களது ஈடுபாட்டினை அனுபவித்திருக்கின்றேன். ஈடுபாடுள்ள ஒரு கலைஞனுக்கு இச்சிறிய எழுத்துருவாக்கம் மூலமாக எனது நல்வாழ்த்துக்களையும், ஆசியையும் தெரிவித்து நிற்கிறேன். இவரது இத்தகைய உயரிய விழுமியமான 'ஈடுபாடு' அனைவருக்கும் சிறந்த முன்மாதிரியாக அமையும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். ■

**பேராசிரியர் சி.மௌனகுரு**

"பாடசாலை மாணவப் பருவத்திலே (1955) நாடகத்தில் ஈடுபட்ட குழந்தை செபமாலை 1964இல் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் நிறுவி தனது குடும்பத்தை அதில் ஈடுபடுத்துகிறார். முத்தமிழ்க் கலாமன்றச் செயற்பாடுகள் மூலம் குழந்தை மாத்திரமல்ல மன்னார் நாடக மரபும் அகில இலங்கை ரீதியாக அறியப்பட ஆரம்பிக்கிறது.

60களில் மாதோட்டக் கூத்து மரபில் வந்த நானாட்டான் பெஞ்சமின் செல்வத்தின் வழிகாட்டல்களும் 60களில் ஈழத்துத் தமிழ்க் கூத்து மரபை மீழ் கண்டுபிடிப்புச் செய்து பல்கலைக்கழக மட்டத்தில் வளர்த்தெடுத்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரவணைப்பும் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் அரச அதிபராயிருந்து அப்பிரதேசக் கூத்து மரபுகளை அரச துணையுடன் வளர்த்த தேவநேசன் நேசையாவின் ஆதரவும் குழந்தை செபமாலைக்குக் கிடைத்தன. அவரது வீரத்தாய் (1966), கல்சுமந்த காவலர்கள் (1968), இணைந்த உள்ளம் (1972) ஆகிய நாடகங்கள் பரிசுகளைப் பெறுவதுடன் மன்னார் பிரதேசத்துக்கு அப்பாலும் மேடை ஏறுகின்றன. குழந்தை செபமாலை மன்னார் மாத்திரமன்றி இலங்கை அறிந்த கலைஞராகவும் ஆகிறார்.

குழந்தை செபமாலை அவர்கள் நாடக நடிகர் மாத்திரமன்று அவர் ஒரு நெறியாளரும் பாடகரும் நாடக ஆசிரியரும் ஆவார். இப்பன்மைத் திறன் பலருக்கு வந்து வாய்ப்பதில்லை.

தன் நாடகவாக்கத் திறனையும் மன்னார்க் கூத்து மரபின் அறிவையும் துணைகொண்டு மன்னார்க் கூத்து மரபில் அமைந்த சில புத்தகங்களை அவர் உருவாக்கினார். அவரது ஆக்கங்கள் சில பரிசுபெற்ற நாடகங்கள் என்ற பெயரில் 1997இல் வெளிவந்துள்ளன.

மன்னார்க் கூத்தின் ஆழ்ந்த புலமையும் அக்கறையும், கூத்தின் அவைக்காற்று முறையில் நீண்ட கால அனுபவம், தொடர் பயிற்சியும் தீவிரமும், கற்றுக்கொள்வதில் ஆர்வமும் அக்கறையும், பெரியோரிடமும் கற்றோரிடமும் பணிவும் பக்தியும், கூத்தாக்கத் திறனும் கொண்டவர் குழந்தை செபமலை அவர்கள். அவரின் வெற்றிக்கான காரணங்கள் அவரின் அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகளே..."

**நன்றி: செ.செபமாலை, சி.மௌனகுரு, 'முன்னுரை',**
**மூலநூல்: மரபுவழி நாடகங்கள், 1997.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையில் தோய்ந்த மனிதம் கலைஞர் குழந்தை செபமாலை

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
B.A.(Hons),M.Phil.,Ph.D.(English)
*சிரேஸ்ட ஆங்கில விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*செயலாளர்,*
*கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம்,*
*வவுனியா.*



குழந்தை எனும் புனைபெயரில் அறியப் படும் கலைஞர் செபமாலை அவர்கள் ஓர் உண்மைக் கலைஞராகவே தம் வாழ்வை செப்ப னிட்டு வாழ்ந்து வருபவர். ஓர் ஆசிரியராக, அதிப ராக, கல்விச்சேவை ஆற்றிய நிலையில் தனது ஆத்மாவின் இராகத்தை இயல்பாகவே உள் வாங்கி தனது முன்னோர்கள் சிறுபராயம் முதல் வழங்கிய கூத்துச்செல்வத்தை உரிய முறையில் ஒரு முறைமையில் (Informal) கல்விப் பாரம்பரியத்தில் கற்றுத்தேறி அதனை ஆற்றுகை செய்து கொண்டு வருபவர்.

ஒரு கலை முறைமையை அதற்குரிய கலைவிதிகளோடு, பாரம்பரிய குருகுல முறைப் படி கற்றுத் தேறியவர். வழமையான நவீன மேற் கத்தேய கல்வி முறைமை சாராமல், வகுப்பறை சாராமல் தேவாலய முன்றலிலும் கடற்கரை மற்றும் வயல்வெளிகளிலும், மாமரத்தோப்பு களிலும் உறவுகள், நண்பர்கள் புடைசூழ பயிற்சி கள் பெற்றவர். மூத்த கலைஞர்களின் கண்டிப் புக்கள், ஏச்சுக்கள், பேச்சுக்கள், அன்புநிறைந்த பாராட்டுக்கள், தலைதடவல்கள், முதுகுதட்டல் கள், தோள் அழுத்தங்கள், நண்பர்கள் உறவுக ளின் கைகுலுக்கல்கள், கட்டி அணைப்புக்கள் என்று பலவாறான ஆதரிப்புகளுடன் கூத்துக் கலைக் கடலில் முத்துக்குளித்தவர்.

தான் பெற்ற மன்னார் சார்ந்த வடமோ டிக் கூத்துக்கலையை அதற்கேயுரிய பாரம்பரிய ஐதீகக் கதைகளுடன் கிறிஸ்தவ கதைகளையும், புதுமையான புதிய கதைகளையும் கொண்டு ஆக்கி ஆற்றுகை செய்து வளர்த்து வருபவர். தனது இளமைக்கால பயிற்சிக் காலத்தின் பிற்பாடு தானே கூத்துக்கலைப் படைப்புக்களை எழுதி நண்பர்கள், உறவுகள், குடும்பத்தினர் என எல்லோரையும் இணைத்து ஒரு புதிய தலை முறையை ஏற்படுத்தியவர். மனைவி, பிள்ளை களையும் கூத்தில் இணைத்து அதற்கு தனி அந்தஸ்தை சமூகத்தில் பெற்றுக்கொடுத்தவர். ஒருபடி கூடச்சென்று தெய்வீக அந்தஸ்தை அளித்தவர் என்று கூடச்சொல்லலாம்.

மன்னார் முருங்கனின் கலைப்பாரம் பரியத்தை உலகுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளூடு பார்ப்பதற்கு அவரது கலைச்சேவை உதவியுள்ளது. இதனால் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் தலைக்கோல் விருதும், இலங்கை அரசின் கலாபூஷண விருதும், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் விரு தும், நாட்டுக் கூத்து நூலுக்கான சாஹித்திய மண்டல விருதும் அவரை நாடி வந்தன. இலங்கை ரூபவாஹினி தொலைக் காட்சிப் பிரிவு நேர்காணலை செய்து ஒளிபரப்பியது. வயது முதுமையை நாடியபோதும் நாட்டுக்கூத்துக் கலையில் நாட்டம் குறையவில்லை. 2003இல் வவுனியாவில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் இவரது ஆட் டத்தை இரசிக்க வாய்ப்புக் கிட்டியது. "கலையில் தோய்ந்த மனிதம்" ஆக அவர் மிளிர்ந்ததை இன்றும் நினைவு மீட்டிக்கொள்கின்றது.

கலைஞர் செபமாலையின் கலைத் தேடல் தமது மன்னார்க் கூத்துடன் நின்று விட வில்லை. பல்வேறு கலை இலக்கிய கருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்குகள் நடைபெறும் இடங்களில் எல்லாம் கலைஞரைக் காணமுடியும். யாழ்ப்பாண அரங்குகள், கொழும்புத் தமிழ்ச்சங்க மேடைகள், மட்டக்களப்பு பல்கலைக்கழகம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட கருத்தாடல் நிகழ்வுகள் எனப் பல்வேறு கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமது கலைப் பார்வையை விசாலித்துக் கொண்டவர். சக கலைஞர்களுடன் அன்புடன் பழகி தமது புன்னகை மந்திரத்தை மேலும் வியக்கவைக்கும் கலைஞர். அவருக்கு எடுக்கப்படும் பாராட்டு விழா வெற்றிகரமாக சிறப்படைய எமது வாழ்த்துக்களைக் கூறி கலைஞர் குழந்தை செபமாலை இயேசு கிறிஸ்துவின் அருள் வட்டத்துள் தொடர்ந்தும் வாழப் பிராத்திக்கின்றோம். ■

**உயர்திரு. சொ.அமிர்தலிங்கம் S.L.A.S.**
**நானாட்டான் பிரிவு முன்னாள் உதவி அரசாங்க அதிபரும்,**
**கலாமன்றத் தலைவரும்.**

கலையுணர்ச்சி பெருகி கலையார்வம் ஓங்கி வளர்ந்து வரும் இந்நாளில் மாதோட்ட நன்னகரில் முருங்கன் பதியில் பிறந்து, கலைத்தொண்டாற்றிவரும் திரு. செ.செபமாலை அவர்களது திறமையைக் கௌரவித்து பாராட்டுவிழா நடத்துவதையறிந்து, அளவளா மகிழ்வுற்றேன். புனித செயற்பாடுகளின் நிறைவே கலையின் வடிவம். அக்கலைதரும் சுவையின் நிறைவு இத்தரணிதரும் சுவைகள் யாவற்றதும் சிகரமேயாகும். கவின்கலைகளை உள்ளடக்கிய தேனினுமினிய தமிழுக்கு அணிகலன்களான இயல், இசை, நாடகத்தில் வித்தகராக இம்மாதோட்டத்தின் புதல்வராக விளங்கும் கலைஞர் திரு. செபமாலை என்றால் மிகையாகாது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே நமது மாதோட்டத்தில் பிறந்த ஈழத்து பூதந்தேவனார் முதல்வராவர். அவர் வழியிலே பல கலைஞர்களையும் புலவர்களையும் இம்மண் உருவாக்கியுள்ளது. இன்று விழாக் கொண்டாடும் நாயகர் திரு. செ. செபமாலை அவர்களும் ஒருவர். இவர் இயற்றிய கவிதைகள் பலப்பல. அதேபோன்று கவிதைகளை இசைத்து மீட்பதிலும் வல்லவர். திறமையான நடிகர். இவர் எமது பரம்பரைச் சொத்தான நாட்டுக்கூத்தை நெறிவழுவாது பேணிப் பாதுகாத்து இயற்றியும், நடித்தும் நம்மக்கள் உள்ளத்தை கொள்ளை கொண்டவர். 'மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணமும் தூய்மையுற்று பக்தி வெள்ளத்தில் அமிழச் செய்வது நாடகக்கலை' என்பது தேற்றம். இந்நாடகக் கலையை கூத்துப்பாணியிலும், நாடகப்பாணியிலும் மேடையேற்றி, இலங்கை கலாசாரப் பேரவையின் வெற்றிவிருதுகளை எமது பகுதிக்கு ஈட்டிக்கொடுத்தவர். கவின்கலைகளில் மட்டுமல்லாது, சிறந்த நல் ஆசானாகவும் முருங்கன் மகா வித்தியாலயத்தில் மாணவ செல்வங்களுக்கு அறிவொளி புகட்டிவருகின்றார்.

திரு.செமாலை
இன்று உமக்கு ஓர் கலைஞர் விழா
என்றுமது உமக்கு புனிததினம்
அவ்வேளை உம்மை வாழ்த்துவதில்
நமது மக்கள் சார்பில் பெருமையடைகின்றோம்.
வாழ்க நீவிர்!
வையகம் போற்றிட வாழ்க நின்தொண்டு!

**நன்றி: கலைஞர் குழந்தை** பாராட்டுவிழா **சிறப்பு மலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது நாட்டுக்கூத்துக்களால் மக்களை இன்னமும் ஈர்க்கும் கலைஞர் கலாபூஷணம் குழந்தை



**கவிஞர் பி.பி.அந்தோனிப்பிள்ளை**
*ஓய்வுநிலை ஆசிரியர்,*
*ஆத்திக்குளி,*
*மன்னார்.*

'குழந்தை' என்ற பெயரால் அழைக்கப்படும் ஆசிரியர் கலாபூஷணம் செ.செபமாலை அவர்களின் கலை ஆற்றல் பல்துறை தொடர்பானது. எனினும் நாடகத்துறையில் பாட்டு, பேச்சு, நடிப்பு, கூத்து எல்லாம் அடங்கியிருப்பதால் இவரை நாடகக்கலைஞன் என்று அழைப்பதே பொருத்தமானதாகும்.

மன்னார் மாவட்டத்தில் மட்டுமன்றி அகில இலங்கை ரீதியிலும் நாடகத்துறை தொடர் பான பேச்சு எழும் பொழுது கலைஞர் குழந்தையின் பெயர் குறிப்பிடப்படுவது தவிர்க்க முடியாதது.

ஐம்பதுகளிலே முருங்கன் மகா வித்தியாவயத்தில் மாணவனாக இருந்த காலத்திலே பாடசாலையின் இசை, நாடக நிகழ்ச்சிகளிலே பங்கு பற்றித் தனது ஆற்றல்களை வெளிப் படுத்தியவர். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த கிட்டப்பா, சின்னப்பா, தியாகராஜபாகவதர், டி.ஆர். மகாலிங்கம் ஆகியவர்களின் பழைய பாடல்களைக் கேட்டு அப்படியே பாடும் ஆற்றலுள்ளவராக விளங்கினார். ஒலிப்பதிவுச் சாதன வசதியற்ற அந்தக்காலத்தில் எப்போதோ வானொலியில் கேட்கும் பாடல்களை அப்படியே பாடிப் பிரமிக்க வைத்தார். பாடசாலையில் நிகழும் கலை நிகழ்ச்சிகளில் இசை தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக இவரையே ஆசிரியர்கள் விட்டு விடுவார்கள்.

1940ஆம் ஆண்டு பங்குனி மாதம் 08ஆம் திகதி பிறந்த ஆசிரியர் குழந்தையின் தந்தையார் நன்கு மத்தளம் வாசிக்கும் அண்ணாவியார். இவருடைய சகோதரர்கள் மூவர் நன்கு பாடக்கூடிய இசைக்கலைஞர்கள். பாடசாலையில் தொடங்கிய குழந்தையின் கலைப்பயணம், கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் அதன் பின்னர் ஆசிரியராக வெளியேறிய பின்னரும் வேகமாக வளர்ச்சியடைந்தது. ஆரம்ப காலங்களில் இவரது இசை நாடகங்களில் தமிழ்நாட்டின் பழம் பெரும் பாடகர்களின் சினிமா மெட்டுக்கள் இடம் பெற்றன. பிரபலமான இம்மெட்டுக்களை இவர் அனாயாசமாகக் கையாண்டதாலும், பொருத்தமாகக் பயன்படுத்தியதாலும் இவரது நிகழ்ச்சிகள் சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரையும் கவர்ந்தது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை சனச் செறிவு குறைந்த இடமாக இருந்தபடியால் கலையார்வம் உள்ளவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் கலைக்குரிய களம் விரிவடைந்திருக்கவில்லை. இங்கு இந்துக்களால் ஆடப்படும் காத்தவராயன் என்ற கூத்தும், கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களால் ஆடப்படும் புனிதர்களின் வரலாறுகளைக் கொண்ட கூத்துக்களும் கிராமத்துக்குக் கிராமம் ஆடப்படுவது வழக்கம்.

ஐம்பதுகளில் பேராசிரியர்களான வித்தியானந்தன், சிவத்தம்பி ஆகியோரின் முயற்சியினால் நாட்டுக்கூத்துக் கலைக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. ஆசிரியர் குழந்தை இதேகாலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறையில் ஈடுபட்டபோது, கத்தோலிக்க புனிதர்களின் வரலாற்று நாடகங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தன. சிறந்த தாள அமைப்புடைய பாடல்கள் இருந்தன. ஆனால், பலவேறு நாடகங்களிலும் பாடல் மெட்டுக்கள் சிலவே மாறிமாறி வந்துகொண்டிருந்தன. ஆகவே கலைஞர் குழந்தை தமது இசையாற்றலை முழுமையாக வெளிப்படுத்த இராகங்கள், மெட்டுக்களில் புதுமையைப் புகுத்த வேண்டியிருந்தது. மன்னார் மாவட்ட நாட்டுக் கூத்துக்கு புது மெருகூட்டிய பெருமையும் கலாபூஷணம் அவர்களையே சாரும். எந்தச் சமூகத்தையும் புண்படுத்தாத வகையிலும், இசையின் அடிப்படை மரபுகளை மீறாத வகையிலும், புதுமை என்ற வகையில் ஆபாசத்தைப் புகுத்தாமலும் இவர் நாடகத்துறைக்குப் புதுமையைச் சேர்த்துள்ளார்.

சிறந்த பேச்சாளரான கலைஞர் குழந்தை, மாணவப் பருவத்திலேயே தமிழரசுக் கட்சிக் கூட்டங்களிலேயும், தமிழ் எழுச்சி மாநாடுகளிலும் பங்கு கொண்டு உரையாற்றித் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கியுள்ளார். பின்னர் அரசியலில் ஏற்பட்ட விரும்பத்தகாத போக்குகளினால் அரசியல் சாக்கடையில் இருந்து இவர் கழன்று கொண்டது கலைத் துறையின் அதிர்ஷ்டமாகும். கலாபூஷணம் குழந்தை தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கினாலும் மொழிப்பற்று, இனப்பற்றுள்ள ஒரு கலைஞனாகவே வாழ்ந்து வருகிறார். இவரது படைப்புக்கள் பலவும் இவற்றை அடிப்படையாகக் கொண்டவையே.

1964ஆம் ஆண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நாடகங்களையும் இதர கலை நிகழ்ச்சிகளையும் வழங்கி வரும் 'முத்தமிழ் கலாமன்றம்' இவரது ஆற்றலுக்கும் உழைப்புக்கும் சாட்சியாக விளங்கி வருகின்றது. கலைஞர் குழந்தை அவர்கள் எழுதி நடித்து மேடையேற்றிய நாடகங்களையும், அவர் பெற்ற விருதுகளையும் அட்டவணைப்படுத்துவதாயின் அதற்கான தனியான சிறப்பு மலர் வெளியிட வேண்டிவரும். முக்கியமான சிலவற்றைக் குறிப்பிடுவதாயின், 1998இல் அரச இலக்கிய விழாவில் இவரது 'பரிசு பெற்ற நாடகங்கள்' என்ற நூலுக்குச் சாஹித்திய விருது வழங்கப்பட்டது. 1999இல் கொழும்பில் கலாசாரத் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கப்பட்டது. இப்படிச் சாஹித்திய விருது, காலபூஷணம் விருது, ஆளுநர் விருது ஆகிய மூன்றையும் மன்னார் மாவட்டத்தில் பெற்றவர் இவர் ஒருவரே.

ஆன்மீகப் பற்றுள்ள கத்தோலிக்கரான குழந்தை செபமாலை அவர்களின் கலையை ஊடகமாகக் கொண்ட சமயப்பணிகள் மாவட்டமெங்கும் பிரசித்தமானவை. தபசு காலத்தில் பாடப்படும் கிறிஸ்துவின் திருப்பாடுகள் பற்றிய 'பசானை' இந்த வயதிலும் களைப்பின்றிப் பாடுவார். காலஞ்சென்றவர்களுக்கான கல்வெட்டுகளை இன்றளவும் இயற்றிப் பாடி வருகின்றார். இவருடைய சமயப் பணியின் பொருட்டு 02.09.2000 அன்று மன்னாரில் இடம்பெற்ற நாடக விழாவில் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் 'திருக்கலை வேந்தன்' விருது அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பரிசு பெற்ற நாடகங்கள், யாகப்பர் இன்னிசைப் பாடல்கள், மரபுவழி நாடகங்கள், மாதோட்டம் கவிதைத் தொகுதி இவரது நூலாக்கங்களில் சிலவாகும். 'உலக நாடகவிழா' 2005இல் கிழக்கிலங்கைப் பல்கலைகழகம் சிறந்த கூத்துக் கலைஞராக 'தலைக்கோல்' விருதளித்து இவரைக் கௌரவித்தது.

இவரது கலைப் பணியை ஐரோப்பிய நாடான பிரான்ஸில் இவரது இரு புத்திரர்கள் நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது. சினிமாவில் கூட, இசை மெட்டுக்களில் புதிய புதிய மாற்றங்களைப் புகுத்திவரும் வேளையில், கலைஞர் குழந்தையின் நாடகங்களுக்கு இன்றும் சிறியவர் முதல் பெரியவர் வரை ஆர்வம் காட்டுவது அவரது திறமைக்குச் சான்றாகும். ■

**நன்றி: மல்லிகை, செப்ரெம்பர் 2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் முகவரி குழந்தை அண்ணா



**அருட்சகோதரி செ. எலிசபெத், அ.கா.**
B.A.(Hons), S.L.P.S.1
அதிபர்,
புனித சிசிலியா பெண்கள் கல்லூரி,
மட்டக்களப்பு.

**வாழ்வில்** சில வளம் மிகு கொடைகள் கேட்காமலேயே அருளப் பெற்றவை. அத்தகைய இறைவரங்களில் ஒன்று எங்கள் வரகவி 'குழந்தை' அண்ணா.

"நீங்கள் யார்?" என்று யாராவது கேட்டால் என்னைப்பற்றி சொல்வதை விட, "முருங்கன் குழந்தை மாஸ்டர்..." எனக் கூறத் தொடங்கியதும் அவரைத் தெரியாதவர்களே இல்லை எனும் அளவிற்கு மக்கள் மனதில் இடம் பெற்றவர். இவர்தான் எங்களுக்கு முகவரி தந்தவர். எங்களை அடையாளப் படுத்திக் காட்டியவர். அவரின் தங்கை என்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. அவரை சார்ந்தவர்களுக்குப் பேருவகை.

## பிறப்பினால் சிறப்பு

இவருக்கு முன் மூன்று சகோதரர்கள் இறையடி சேர்ந்ததனால் மருதமடு அன்னையிடம் நேர்ந்து பெற்றெடுத்த தவப்புதல்வன் எனப் பெற்றோர் பெருமிதத்துடன் கூறக்கேட்டிருக்கிறேன். எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து குடும்பத்தின் ஒளிவிளக்கு இவரெனக் காண்கிறேன். எங்கள் தந்தையார், பெரிய வசதிகள் இல்லாத பின்புலத்தில் இவரைப் படிக்கவைத்து ஆளாக்கிய பெருந்தகையாவார்.

அவரது கனவுகள் நனவாகிய போது இவர் நல்ல ஆசிரியனாக மட்டுமல்ல, அன்பாளனாக, அறிவாளனாக, இசைப்பிரியனாக, எழுத்தாளனாக, உணர்வுசார் கலைஞனாக, ஊர்போற்றும் நாடகாசிரியனாக, வியத்தகு பாடகனாகப் பன்முக வித்தகனாகப் பரிணமித்தார்.

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக, கலைத்துறையில் கணக்கற்றோரை மூழ்க வைத்து மன்னார் பிரதேசத்தில் கலை ஊற்று பிரவாகித்து ஓட ஆதார சுருதியாக இருந்தவர் கலைஞர் குழந்தை என்றால் அது மிகையாகாது. அவரது வழிகாட்டலில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எந்தத்துறையில் வாழ்ந்தாலும் கலைமுத்திரை பதித்து அவர்கள் தம் வாழ்க்கையைச் செப்பனிட்ட சிற்பியாகத் திகழ்கின்றார்.

## சால்புகளால் சிறப்பு

சிறு வயதினிலேயே சுறுசுறுப்பும் சுட்டித்தனமும் கொண்டவரெனக் கூறக் கேட்டிருக்கிறேன். மிடுக்கான தோற்றம், மேன்மையான சிந்தனை, வேகமான நடை, விறுவிறுப்பான செயற்பாடுகள் கவர்ச்சியான ஆளுமைத்திறன்கள், துடிப்பான தூரநோக்கு, அரவணைப்பான அணுகுமுறைகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டவர் இவர். புதுமையும் புரட்சியும் இவரது தனிப்பெரும் சிறப்பம்சங்களில் ஒன்று.

அண்ணா, விடுமுறைக்கு வீட்டுக்கு வருகிறாரென்றால் வீடு புதுப்பொலிவு பெறும். அவர் தூய்மை விரும்பி. ஆரோக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுபவர். அதிகாலையில் எழுந்து வேப்பங்குச்சோடு குளத்தின் அணைக்கட்டில் வலம்வருவார். இயற்கைக் காட்சிகளை ரசித்து காலைக் கதிரவனுடன் கடவுள் புகழ் பாடி கடமைகளை ஆரம்பிப்பார்.

இல்லத்தில் புத்தக அலுமாரி அவரது விலைமதிக்க முடியாத அரும் பெரும் சொத்து. காளமேகம் முதல் கல்கி, கண்ணதாசன், வான்மீகி, வா.வே.சு. ஐயர், வரதராஜன், பாரதி யாவரும் குடியிருக்கும் கோயிலாக இருந்தது. வாசிப்பதற்கும் யோசிப்பதற்கும் வாழ்க்கையை நேசிப்பதற்கும் நூல்கள் இவருக்கு வழிகோலின எனலாம்.

சிறுத்தொண்டன் பத்திரிகையில் 'வெள்ளிச் செபமாலை' எனும் இவரது சிறுகதை, போட்டியில் முதலிடம் பெற்றிருந்தது. ஆசிரிய கல்விக்கல்லூரிச் சஞ்சிகையான, 'கலைச்சுடர்'இல் இவரது ஆக்கங்கள் பல வெளியாகியிருந்தன. கொழும்புத்துறை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராயிருந்த முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் இவற்றிற்கு அடிகோலி நின்றன.

இயல்பாகவே அன்பானவர். அதீத அறிவுள்ளவர். தேடலில் சளையாதவர். சமூக தொடர்புகளுக்கான சால்புகளைக் கொண்டிருந்தமையால் இவருடைய விசிறிகள் அதிகம். குழந்தை மாஸ்டரைத்தேடி எப்போதும் கூட்டம் இருக்கும். அதனால் எமது இல்லமும் களைகட்டும். தேடி வருவோர் பாட்டு எழுத வேண்டும், பாட்டுப் பழக வேண்டும், பேச்சு எழுதவேண்டும், கவிதை வேண்டும் என நாளாந்தம் வந்தவண்ணமே இருப்பார்கள்.



1965களில்...

எங்கு ஒரு கலை நிகழ்வு, பிரியாவிடை நிகழ்வு, பாராட்டு விழா என எந்த ஒரு விழா நிகழ்ந்தாலும் குழந்தை மாஸ்டரின் படைப்புகளில்லாமல் விழா இருக்காது. நாங்கள் பாடசாலை மாணவிகளாக இருந்து பங்கேற்ற பாடல்களில் நடனங்களில் அவரது கை வண்ணம் பளிச்சிட்டது.

"நல்ல நல்ல தொழில்
செய்திடுவோம் - நாங்கள்
நாணயமாகவே வாழ்ந்திடுவோம் -
இந்த
நாட்டினையே சீர் திருத்தி
நற்பணிகள் ஆற்றிடுவோம்
வாழ்வு மலருதே வாரீர் தாழ்வு
அகலுதே பாரீர்"

இது நூறில் ஒன்று. பாடசாலைகளில், கிராமங்களில், மாதோட்ட மன்னார் பிரதேசத்தில் இவரது கவித்திறன் விரவியிருந்தது. இளம் எழுத்தாளர்களை எழுத்துலகில் உட்புக வைத்தது. பல நூற்றுக்கணக்கான பாடல் வரிகளில் இவரது கவித்துவம் பளிங்கெனத் துலங்கியது.

## பாச நேரங்கள்

எங்கள் குடும்பம் ஒரு விளைநிலம். இரவின் நிலாவின் ஒளியில் அழகிய முற்றத்தில் குடும்பமாக கூடி உறவாடிய பாச வேளைகள் மீட்டுப்பார்க்க வேண்டியவை. தந்தையார், பெரியண்ணா, சகோதரர்கள், மருமக்கள் சேர்ந்து உரையாடும் நேரங்கள் பாடல்கள் இருக்கும் பகிர்தல்கள் இருக்கும், தட்டிக் கொடுத்தல்கள், தேற்றுதல்கள், உறுதிப்படுத்தல்கள், அனுபவப் பகிர்வுகள் என அந்நேரங்கள் அற்புதமானவையாக அமையும்.

இவை சிறியோர் எங்களுக்கு வாழ்க்கைத் தேடலில் அத்திவாரமாகவே ஆகியது. "குடும்பம் ஒரு கோயில்" எனும் வைர வரிகள் வாழப்பட்ட காலம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் குழந்தை அண்ணாவின் குடும்ப கலை வாழ்வு காத்திரமானது. காலத்தினால் அழிக்க முடியாதது. காலம் கடந்தும் அவை வாழும். குடும்பத்தார் அனைவரும் குதூகலமாக கூடி நாடகத்தை முன்னெடுக்கும்போது தினமும் ஒத்திகை இடம்பெறும். அதுவே அரங்கேற்றம் போல ரசிகர்களை ஈர்த்து விடும். வீட்டில் வெளி முற்றத்தில் இடம்பெறும் நாடகம் காண, வீதியில் விசிறிகள் நிறைந்திருப்பர். எங்கள் வீட்டு வேலி மரங்கள், குளம், அணைக்கட்டு, எல்லாமே கலை வாசனை வீசும். கலை வளர்த்த கதையும் சொல்லும்.

அண்ணா நாடகம் எழுதும்போது ஆட்களுக்கேற்றபடி பாத்திரங்களை அமைத்துவிடுவார். நடிப்பார், இசைக்கருவிகள் மீட்டுவார், அவரின் நெறிப்படுத்தும் கலையே அலாதியானது. நடிகர்களின் இயல்புகளுக்கமைய பாத்திர வார்ப்புகள் அமைந்திருக்கும்.

அண்ணனிடம் பயில்வதற்காக பல சகோதரர்கள் தூர இடங்களிலிருந்து மன்றத்தில் இணைந்திருந்தார்கள். எனினும் ஆரோக்கியமான உணர்வுகளோடு ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டன. இவையெல்லாம் இரண்டறக் கலந்துவிட்ட இனிய நினைவுகள்.

## படைப்புகளில் மறை மையம்

பொருள் வளம் குறைந்திருந்தாலும் அருள் வளம் நிறைந்திருந்தது. குழந்தை அண்ணாவின் ஆரம்ப எழுத்தோவியம் 'நல்வாழ்வு' என்ற நாடகம்தான். 30 - 40 பாத்திரங்கள் பங்கேற்று சிறப்பித்த நாடகம் அது. சிறுவர்கள் எங்களுக்கு மகிழ்வு, விநோதம், கொண்டாட்டம்.

புனித யாகப்பரின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு வார்க்கப்பட்ட இப்படைப்பு, பலரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருந்தது.

அவரது விசுவாசம் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. எனவே படைப்புகளில் மறையானது மையம் கொண்டிருந்தது.

**ஒரு மனிதனின் உயர்வுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்ற கூற்று அண்ணி றோஸ்மேரிக்குப் பொருத்தமானது. குழந்தை அண்ணாவின் வாழ்க்கையோட்டத்தின் உந்து சக்தியாக உடன் துணையாக சீர் சேர்த்தவர். தேவையேற்பட்டபோது மேடையேறியும் சாதனை செய்தவர்.**

நம்பிக்கை இழையோடியது. இங்கு சந்தித்த சவால்களையும் மேவிச் சென்று சாதனையாளராகி விடுகின்றார். .

பரதேசி மகன், ஞானசௌந்தரி, புனித லூாசியா, புனித லோறன்ஸ் முனிந்திரன், வாழ்வு தந்த வாஸ், நல்ல சமாரியன், உலகின் ஒளி, அன்று சிந்திய வித்துகள், வாழ்வு அளித்த வள்ளல், உலகை மீட்ட உத்தமன், வீரனை வென்ற தீரன் ஆகிய படைப்புகள் எழுத்தில், இசையில், மேடைகளில், இறை விழுமியங்களைப் பறை சாற்றின.

கோவில் திருவிழாக்களின்போது பாடல்களில் குழந்தை அண்ணனின் கவிவரிகள் ராகமாகி இசை வடிவமாகிவிடும். தனது கம்பீரமான, வசீகரமான குரல் வளத்தைக் கடவுளுக்கு காணிக்கையாக்கியவர். புனித யாகப்பர் பற்றி பாடல்கள் பல யாத்துள்ளார். இராகம் அமைத்துப் பாடியுள்ளார்.

தவக்காலம் என்றால் இவரது 'பசான்' கேட்க பக்தர் கூட்டம் திரண்டு விடும். பரிசுத்தவாரத்தில் அது உச்சக்கட்டத்தை எட்டிவிடும். திருப்பாடுகளின் காட்சி அரங்கேறுவதென்றால் கலைஞரது பங்களிப்பு உயிரோட்டம் மிக்க உந்து சக்தியாகிவிடும்.

அன்று தொட்டு இன்று வரை இந்த உறுதியில் மாற்றமேயில்லை. தனக்குப்பின் இப்பணியை முன்னெடுத்துச்செல்ல ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையை - பரம்பரையை உருவாக்கிய பெருமையும் இவருக்கு உரித்தானது.

## முத்தமிழ் கலாமன்ற ஆரம்ப உறுப்பினர்கள்

அவரது கலை நாட்டம் கடல் போன்றது. எல்லையே இல்லாதது. அதன் வெளிப்பாடாக உருப்பெற்றதுதான் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம். அப்பா செபஸ்தியான் ஓர் அண்ணாவியார். பக்க வாத்தியம் வாசிப்பதில் கை தேர்ந்தவர். மூத்த அண்ணா சீமான் வெண்கலக்குரல் கொண்ட வியத்தகு பாடகர். அடுத்த அண்ணா சந்தியோகு (ரத்தினம்) துடிப்பான நடிகர். வில்லன் பகுதிகளை விறுவிறுப்பாக நடித்தவர். அக்கா மகன் அந்தோனிப்பிள்ளை மற்றுமோர் விசைமிகு நடிகர். அரச வேடங்களில் அரிய தடங்களைப் பதித்தவர். மாசிலாமணி அண்ணா, தலை சிறந்த பாடகனாக, குணச்சித்திர நடிகராக, கலைஞர் அண்ணாவின் கரமாக இயங்கி வந்து, மற்றுமோர் கலாபூஷணமாக இன்று மிளிர்கின்றவர். அண்ணா யேசுதாசன் தந்தையாரின் வழிவந்து, பக்க வாத்தியத்தினை ஒரே நேரத்தில் பல இசைக் கருவிகளை இசைத்து, ஆற்றுகைகளை அசத்தியவர். வேதநாயகம், அக்காவின் மருமகன். ஓவியக்கலையில் வல்லவர். நாடக ஒப்பனைகளுக்கு மெருகூட்டியவர்.

ஒரு மனிதனின் உயர்வுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்ற கூற்று அண்ணி றோஸ்மேரிக்குப் பொருத்தமானது. குழந்தை அண்ணாவின் வாழ்க்கையோட்டத்தின் உந்து



1970களில்...

கலைத்தவசி

சக்தியாக உடன் துணையாக சீர் சேர்த்தவர். தேவையேற்பட்டபோது மேடையேறியும் சாதனை செய்தவர்.

இவ்வாறு 1966-1970 வரை கலாமன்றத்தின் பொற்காலம் மிகக் காத்திரமானது. எங்கள் நேரத்தின் பெரும்பகுதி நாடகங்களிலே மகிழ்ச்சியாக செலவிடப்பட்டது. அது ஒரு மறக்க முடியாத கலைக்காலம். கலையையே உயிர்மூச்சாகக் கொண்ட கலைஞர் குழந்தை அண்ணா, நடிகர்களுக்கேற்றபடி நாடகங்களை அமைத்து விடுவார்.

ஒத்திகைகள், அரங்கேற்றங்கள், போட்டிகள், இதையொட்டிய பயணங்கள், மீளாய்வுகள் தொடர்ந்தன. புத்தாக்கம், புதுப்படைப்பு, எதிலும் மாற்றம் கொண்டுவருவது இவரது சிறந்த சால்புகளில் ஒன்று.

எங்கள் பிரதேசங்களில் பெண்களை முதன்முதலில் மேடையேற்றிய பெருமைக்குரியவர். இங்குதான் ஆரம்ப மன்ற உறுப்பினர்களுள் ஒருத்தியாக பங்கேற்கும் பேறு எனக்கும் கிடைத்தது.

> "வாழ்களம் கலைமகள் வாழ்கவே
> வளர்க செந்தமிழும் வாழ்கவே
> தாழ்வது நீங்கி வாழ்கவே
> தனிப்பேரோடெம் கலை வாழ்கவே.
> முத்தமிழ் மன்ற முழக்கமெல்லாம்
> எத்திசை எங்கும் ஒலித்திடவே
> இத்தரை மாந்தர் களி கூரவே
> உத்தமக் கலைத்தாயடி
> போற்றுவோம்"

என ஒவ்வொரு ஆற்றுகையின் முன் பாடும் போதும் கலையுணர்வின் உச்சிக்கு எங்களை உயர்த்திவிடும்.

'பரதேசிமகன்' நாடகத்தில் சாதாரண தாயாக என்னை அரங்கேற்றி, பின் வாளேந்திய வீரத் தாயாக்கி, புதுமைப் பெண்ணாக உயர்த்தி, அன்புப் பரிசின் நாயகியாக்கி, கல்சுமந்த காவலர்கள், யார்குழந்தை, பணமா கற்பா? இன்னோரன்ன பல நாடகங்களில் நடித்து, நானும் நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நயமாக வலம் வந்த பொன்னான காலம் அது. இந்த அற்புதக் கலைமாமேதையுடன் இணைந்து நடித்த பெருமையை எண்ணி வியந்து பணிந்து நிற்கிறேன்.

விமர்சனங்கள் வராதபடி என் சகோதரர்களுடன் ஈடுகொடுத்து நெறிப்படுத்தியவரும் அவரே. இத்தனைக்கும் மிக மென்மையாகவே நடந்து கொள்வார். அவரது பயிற்றுவித்தல் அலாதியானது. தனிச்சிறப்புடையது. நடிப்போ, நடனமோ, நடையோ, பேச்சோ, சிரிப்போ, சிருங்காரமோ, ஆட்டமோ, அழுகையோ தானே செய்து காட்டி தனக்குரிய பாணியிலே நெறிப்படுத்தும் பண்பு அவருக்கேயுரியது.

'யார் குழந்தை' நாடகத்தில் நீதி கேட்டு வரும் இரண்டு தாய்மாருக்கு உண்மைத் தாயை உலகறியச் செய்வதற்காக தான் பெற்ற செல்ல மகனைத் தானே தலை கீழாகத் தூக்கி, தாயையும் சபையையும் மெய் சிலிர்க்க செய்யும் தத்ரூபக்காட்சிகள் இவரது சிறப்பம்சம். இந்த நாடகம் பிரபல்யமாகிப் பல நூறு தடவைகள் மேடையேற்றப்பட்டது. அவரது மூன்று புதல்வர்களும் இந்த அனுபவம் பெற்று முத்திரை பதித்து கலையுலகின் சுடராக விளங்குகின்றனர்.

இந்த வகையில் இம்மன்றத்தின் இயக்குநராக, தலைவராக, ஆற்றுப்படுத்துனராக கலையுலகை விஸ்தரித்து கலைப் படைப்புகளை தொடர்ந்து முன்னெடுத்து புது உலகம் படைத்த வித்தகராகி விடுகின்றார்.

இவரது புரட்சியில் பூத்த ஒரு புது மலராக இறைபணிக்கு என்னை அர்ப்பணிக்க விரும்பியபோது கலையுணர்விற்கு மேலாகக் கடவுளின் அழைப்பின் பெருமையை அத்தனை பேருக்கும் உணர்த்தி, திடப்படுத்தி, உரியவற்றை உரிய காலத்தில் செய்து, என் வாழ்வுக்கு ஒளியேற்றிய உத்தமரான, இவருக்குத் தலைவணங்கி நிற்கிறேன். தந்தைக்குரிய தியாகம் தொடர தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார்.

**அவரது சுவடுகளிலே கலாபூஷணம், நாடகாசிரியர்கள், நூலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், எழுத்தாளர்கள், மறைபோதகர்கள், கலைஞர்கள், சுவைஞர்கள், தரமான நடிகர்கள், கலாவிற்பன்னர்களாக பிரகாசிப்பது அவரின் உழைப்பிற்கு பலனும் இறைவனுக்கு மகிமையும் அளிக்கின்றது. அந்தவகையில், இன்று ஒரு விதை விருட்சமாகி விட்டது.**

ஆன்மீகத்தில் அடியெடுத்து வைத்த எல்லோருக்கும் இவரது உரமூட்டல்கள் தொடர்ந்து இருந்தது. அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், அருட்பணியாளர்கள் இதற்கு சான்று பகர்வர். இவரது கலைப்பயணத்தில் நான் உடனிருந்த காலம் குறைவு. கண்டு பாவித்த காலம் நீண்டது. ஆனால் எம் மறைப்பணிக்கு கலை வாழ்வு ஒரு மைல்கல்லாக திருப்புமுனையாக அமைந்தது என்பது மட்டும் நிதர்சனம்.

அவரது துணிவு மெச்சத்தக்கது. சந்தித்த சவால்களும் மலைபோன்றவை. ஒருமுறை அவர் கட்டிக்காத்த கலாமன்றம் கூரை ஓலையால் வேயப்பட்டிருந்தது. ஒரு இரவு, யாரோ அதை எரித்துவிட்டார்கள். ஓடிச்சென்று பார்த்து கவலை தோய நின்றபோது அவர் கூறிய வார்த்தை, "மன்றத்தை எரித்து விடலாம். என் மனதை யாராலும் எரிக்க முடியாது." இந்த வகையில் அவர் ஓர் இலட்சியவாதி. எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்.

நூல் வடிவம் பெறாத இவரது பல நாடகங்கள், கூத்துகள் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. ஒவ்வொரு நாடகமும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளன. 50க்கும் அதிகமான வில்லிசைகள் அன்றைய அரங்குகளில் அதிர்வுகளை ஏற்படுத்தி இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை பேணிப் புதுமை புனைந்தவர். கூத்துகளுக்குப் புது வடிவம் கொடுத்தவர். ஓர் இரவுக் கதையை ஒரு மணியில் வடிவமைக்கும் திறனுள்ளவர். கூத்திசைக் கலைஞர் விருதை சுவீகரித்தவர்.

## கல்வியிலே கலைப்பணி

குழந்தை அண்ணா தனது ஆசிரியப் பணியிலும் முத்திரை பதித்தவர். அமுனகல (கம்பளை), அல்லைப்பிட்டி, அடம்பன், அரிப்பு, பொன்தீவுகண்டல், முருங்கன், கற்கிடந்தகுளம் ஆகிய பாடசாலைகள் அவரது அரங்குகளாக அமைந்திருந்தன. உதவி அதிபராக, பின் அதிபராக இருந்தபோதும் கலைப்பணி சிறக்க உன்னிப்பாக உழைத்தவர். சங்கிலியன், மயான காண்டம், இணைந்த உள்ளம், கண்டி அரசன், யார் குழந்தை ஆகிய நாடகங்கள் இதற்குச் சான்றாகும். கலை வடிவங்களை இற்றைப்படுத்தி இங்கிதமாக ஏற்றம் செய்தவர். அதிபராக இருந்த போதும் ஆத்மார்த்தமாக இப்பணி தொடர்ந்தது.

காலத்தின் மாற்றங்கள் உறுப்பினரிடையே கருத்து மாற்றங்களை ஏற்படுத்தியபோதும் கலைக் கவிநிலை குன்றாதவாறு இளம் தலைமுறையினரைக் கொண்டு உயிர்த்துடிப்போடு செயற்பட்டவர்.

சொல்லம்புகள் கண்டு சோரம் போகவில்லை. அச்சுறுத்தல்கள் பல தோன்றியபோதும் அஞ்சவில்லை. சமூக நோய்களைச் சாடி வந்ததால், தான் நோய்வாய்ப்பட்ட போதும் அது இடைக்கால ஓய்வாகவே இருந்தது. இவ்வாறு கலைஞர் குழந்தை அண்ணாவின் கலை வாழ்வும் கலைப்பயணமும் அமைந்திருந்தது.

மேலும் பல கலைக்குழுக்களின் தோற்றத்திற்கு ஆதார சுருதியுமானது.

காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்பர். போர்மேகம் சூழ்ந்திருந்த போதும் வேராக இருந்து விழுதுகளைப் பரப்பி விரவி நிற்கும் இவரை வாழ்த்துவது மிகப் பொருத்தமானது. ஒரு காலத்தில் தனக்குப்பின் இப்பணியை முன்னெடுத்துச் செல்வார்களா எனும் கேள்வி, ஆதங்கம் இவருக்கு இருந்தது. அந்த நியாயமான கேள்விக்கான ஆதங்கத்திற்கான விடையைக் கண்டு நிறைவடைந்தவராக இன்று அவர் மகிழ்கின்றார்.

அவரது சுவடுகளிலே கலாபூஷணம், நாடகாசிரியர்கள், நூலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், எழுத்தாளர்கள், மறைபோதகர்கள், கலைஞர்கள், சுவைஞர்கள், தரமான நடிகர்கள், கலாவிற்பன்னர்களாக பிரகாசிப்பது அவரின் உழைப்பிற்கு பலனும் இறைவனுக்கு மகிமையும் அளிக்கின்றது. அந்தவகையில், இன்று ஒரு விதை விருட்சமாகி விட்டது.

*"The glory of God is man fully living"*

**இறைவன் தனக்குத்தந்த வாழ்வை முழுமையாக வாழ்ந்து இறைவனை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கும் இவரை, இவரோடிணைந்து இறை புகழ் பாடுவோம்.**

குழந்தை அண்ணா எங்கள் வரலாறு. அவர் ஒரு தியாகச்சுடர். ஒளி வீசும் வான் நிலா. உள்ளத்தின் ஆழத்திலிருந்து மானசீகமான நன்றிகளை சமர்ப்பித்து வையத்தில் வாழ்வாங்கு வாழ இவரை வாயார வாழ்த்தி நிற்கின்றோம். ■

"நாடகத்தில் வரும் நிகழ்வுகளுக்கு ஒரேஒரு பொருள்தான் வரவேண்டும் என்பது தவறு: பார்வையாளர் தாமே தேர்தெடுக்கக் கூடியதாய் பலபொருள் பொதிந்தனவாய் - ஏன் முரண்பட்ட பொருள்கள் முதலாய் உடையவனாய் அமைதல் வேண்டும்"

**- றோபேட் உவில்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்தியை மண்மயமாக்கலில் பொதுநிலையினரின் பங்களிப்பு

## – குழந்தையின் கலை இலக்கிய பணியூடான சில குறிப்புகள் –

**அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன்**
B.Th.,S.T.L.(Rome)
*விரிவுரையாளர்,*
*புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*



இவ்வருடம் (2012) ஐப்பசி மாதத்தில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு பின்னைய காலத்தை திருச்சபையில் பொதுநிலையினரின் பொற்காலம் என அழைப்பது மரபு. ஏனெனில் திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் பொதுநிலையினர் இழந்திருந்த இடத்தை கோட்பாட்டு ரீதியாக மீட்டெடுத்த பெருமை இந்தச் சங்கத்தையே சாரும். ஆயினும் திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்பு இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பும் மிகப் பலமானதாகவே இருந்திருக்கிறது. குறிப்பாக 15ஆம் நூற்றாண்டின் பின் மறைபோதக நாடுகளில் கிறிஸ்தவம் பரவத் தொடங்கியபோது அதனை மண்மயமாக்கியதிலும் கிறிஸ்தவ நம்பிக்கையையும் கோட்பாடுகளையும் உள்ளூர் மக்களுக்கு புரியக் கூடிய விதத்தில் சுதேச கலை இலக்கிய வடிவங்களினூடாக வழங்கியதிலும் பொதுநிலையினருடைய பங்களிப்பு அளப்பரியது.

வரலாறு என்பது எப்போதும் அதிகாரம் படைத்தோரால் அதிகாரம் படைத்தோருக்காகவே பதியப்படுவது என்று ஒரு கருத்து உண்டு. வரலாற்றின் முதுகெலும்பாய் இருந்து அதனை முன்நோக்கி நகர்த்தும் சாதாரண மக்கள், அவர்களது பங்களிப்புக்கள் பொதுவாக வரலாற்றின் ஏடுகளில் இருந்து தவறவிடப்பட்டே வருகின்றன. திருச்சபை வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒருமுறை ஓர் இந்து சகோதரர் என்னிடம் கேட்டார், "திருச்சபையில் புனிதர்களாக இருப்போர் அநேகமாக ஐரோப்பியர்களாகவும், ஆண்களாகவும் இன்னும் குருக்கள் துறவிகளாகவும் இருப்பது ஏன்?" என்று. இக்கேள்விக்கான விடை பல விடயங்களை உள்ளடக்க வேண்டிய ஒன்றாக இருந்தாலும் இவ்வினா சுட்டிக்காட்டும் உண்மை ஒன்று உண்டு. அதிகாரத்தில் இருப்பவர்களே எப்போதும் வரலாற்றில் இடம் பிடிக்கின்றனர் என்பதே அது.

அந்த வகையில் தூய சவேரியார் முதல் சுவாமி ஞானப்பிரகாசியார் வரை வரலாற்றுப் பக்கங்களை நிரப்பும் குருக்கள் துறவிகளின் பணி முக்கியமானதேயாயினும் அவர்கள் அப்பணிகளைச் செய்வதற்கு பின்னணியாய் இருந்த பல பொதுநிலையினரின் பங்களிப்பு மீட்டெடுக்கப்படவேண்டிய பெரியதொரு தேவையுள்ளது.

இக்கட்டுரை மேற்சொன்ன திசையில் மிகச்சில குறிப்புக்களை வழங்கும் ஒருசிறு முயற்சியே. எதிர்காலத்தில் கிறிஸ்தவக் கல்விப் புலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும் பல்கலைக் கழக மற்றும் குருமடமாணவர்கள் இத்திசையில் பயணிக்க முன்வருவர் என்ற எதிர்பார்ப்போடு இக்குறிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.

### திருச்சபை வரலாற்றில் பொதுநிலையினர்

தொடக்கத் திருச்சபையில் பல்வேறு பணிகள் காணப்பட்டனவே தவிர பொதுநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினர், திருநிலையினர் என்ற பிரிவு காணப்பட வில்லை. அங்கு உரோமரென்றும், கிரேக்க ரென்றும், ஆண்களென்றும், பெண்களென்றும், அடிமை என்றும், உரிமைக் குடிமகன் என்றும் (கலா 3:28) வேறுபாடு காணப்படவில்லை. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்து வின் ஊழியர்கள். ஆகவே அவர்களுக்கு பற்பல பணிகள் இருந்தன. மூப்பர்களாகவும், சபைக் கண்காணிப்பாளர்களாகவும், உடன் உழைப் பாளர்களாகவும், திருத்தொண்டர்களாகவும், குணமளிப்போர், கற்பிப்போர், இறைவாக் குரைப்போர், பரவசப்பேச்சுப் பேசுவோர், விளக்கமளிப்போர், புதுமைகள் செய்வோர், கைப்பெண்கள் சங்கத்தின் உறுப்பினராகி பணிபுரிவோர் எனப் பலதிறத்தினராகவும் காணப் பட்டனர். ஒட்டுமொத்தத்தில் அவர்கள் அரச குருத்துவத் திருக்கூட்டத்தினராகவும், தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாகவும், கடவுளின் சொந்த மக்களாகவுமே கருதப்பட்டனர். உண்மையில் இன்று திருநிலையினரைக் குறித்துப்பயன்படும் 'கிளேரோஸ்' என்ற கிரேக் கச் சொல் புதிய ஏற்பாட்டில் திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் திருக்கூட்டத்தினர் என விளங்கும் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டது (1 பேது 2:9).

## பொதுநிலையினர் திருநிலையினர் தோற்றம்

இன்று பொதுநிலையினரைக் குறிக்கப் பயன்படும் "லெய்க்கோஸ்" என்ற கிரேக்க சொல் புதிய ஏற்பாட்டில் யூத சமூகத்தில் காணப்பட்ட குருக்கள், சதுசேயர், பரிசேயர் போன்ற உயர் குழாத்தினரைத் தவிர்ந்த 'சாதாரண மக்களைக்' குறிக்கும் சொல்லா கவே பயன்பட்டது. அதனால் தொடக்கத் திருச்சபையைக் குறிக்கும் சொல்லாகவோ அல்லது அதன் ஒரு பகுதியினரைக் குறிக்கும் சொல்லாகவோ இது புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை. மாறாக ஏற்கெனவே சொன்னது போல அனைத்து நம்பிக்கை யாளரும் 'கிளேரோஸ்' என்றே அழைக்கப் பட்டனர். முதன்முறையாக 02ஆம் நூற்றாண் டில் தூய கிளமெண்ட் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில்தான் 'லெய்க்கோஸ்' என்ற சொல் லைப் பயன்படுத்துகிறார். இதன்பின் இவ் வார்த்தைப் பாவனை படிப்படியாக அதிகரிப் பதையும் நாலாம் நூற்றாண்டில் கொன்ஸ்ரன் ரைன் அரசனினால் மிலான் அரசசாசனத்தின் பின் (கி.பி. 325இல் கிறிஸ்தவர்களுக்கு மதச் சுதந்திரம் அளித்த சாசனம்) கிளேரோஸ், லெய்க்கோஸ் எனத் தெளிவாக பிளவுபடுத்தப் பட்ட திருச்சபை தோன்றுவதையும் அவதானிக் கலாம். 'கிளேரோஸ்' ஆயர், குருக்கள் போன்ற ஆட்சியதிகாரம் உரியோருக்கான சொல்லாக வும் 'லெய்க்கோஸ்' இவர்கள் தவிர்ந்த திருமுழுக்கு பெற்ற ஏனைய சாதாரண மக்க ளைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்படுத்தப் பட்டன. இவ்வாறு மிகத் தெளிவாகத் தெரியும் திருநிலையினர், பொதுநிலையினர் எனும் பிளவு தோற்றம் பெற்றது. பொதுநிலையினர் திருச் சபையில் அதிகாரமோ பணிகளோ அற்ற வெற் றுப் பார்வையாளராக மாற்றப்பட்டனர். படிப்படி யாக அதிகரித்த இப்போக்கின் காரணமாக 19ஆம் நூற்றாண்டுவரை பீடத்தின் முன் முழந்தாளிடல், மறையுரை மேடையின் கீழாக அமர்தல், பணப்பையைத் திறந்து காணிக்கை யிடுதல் இவையே பொதுநிலையினரின் கடமை களாக இருந்தன என எழுதுகிறார் கருதினால் ஐடன் காஸ்கெட்.

## சங்கம் தந்த மாற்றம்

இவ்வாறு பொதுநிலையினர் பிற்படுத்தப் பட்ட நிலை உத்தியோக பூர்வமாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் வரை நீடித்தது. ஆயினும் 15ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மறுமலர்ச்சி திருச்சபையின் சீர்திருத்தத்திற்கான அழைப்பு போன்றவற்றின் பின்னணியில் பொதுநிலை யினர் பற்றிய விழிப்புணர்வு படிப்படியாக அதிகரித்து வரத்தொடங்கியது. திருச்சபை என்றால் திருயாட்சியினரே, அவர்கள் மட்டுமே திருச்சபையின் பணியாளர்கள், பொதுநிலை யினர் எப்போதும் பணியைப் பெறும் நிலையி லேயே இருக்க வேண்டும் என்ற கருத்தியலின் வெறுமை படிப்படியாக வெளிக்கொணரப்பட் டது. வேதாகம ஆய்வுகள் தொடக்கத் திருச்சபை யில் காணப்பட்ட பிளவற்ற நிலையையும் எல் லோரும் இணைந்து ஓர் இறைமக்கள் கூட்ட மாய் வாழ்ந்த வகையையும் வெளிக்கொணர்ந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. இந்நிலையில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஓர் அடித்தள மாற்றத்தை இவ்விடயத்தில் கொண்டுவந்தது. 15ஆம் நூற்றாண்டில் இருந்து வளர்ந்து வந்த புதுப்பித்தலுக்கான மாற்றுச் சிந்தனையை உள்வாங்கிக் கொண்ட சங்கம் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் இறைமக்கள் சமூகமே. ஆகவே திருத்தூதுப் பணி என்பது திருமுழுக்குப் பெற்ற அனைவருக்குமே வழங்கப்பட்டுள்ளது. தமது திருமுழுக்கு அருள் பொழிவினால் அவர்கள் அனைவருமே அரச குருத்துவ திருக்கூட்டமாக ஏற்படுத்தப்பட்டு இயேசுக் கிறிஸ்துவின் புனிதப்படுத்தும் பணி, போதிக்கும் பணி, வழிநடத்தும் பணி ஆகிய முப்பணிகளில் பங்கேற்கும் அழைத்தல் பெறுகின்றனர் என முழங்கியது. இவ்வாறு கோட்பாட்டு ரீதியில் பொதுநிலையினருக்கான பொற்காலம் திறக்கப்பட்டது.

## நற்செய்தி அறிவிப்பு நாடுகளில்

மேற்சொன்ன மாற்றங்கள் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்த வண்ணம் இருக்க நற்செய்தியறிவிப்பு நாடுகளில் ஒரு மௌனப்புரட்சி ஆர்ப்பாட்டமின்றி நடந்துவந்தது. 15ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட நாடுகாண் பயணங்கள் வழியாக நற்செய்தியறிவிப்பில் புத்தூக்கம் பெற்ற திருச்சபையின் பணியாளர்கள் குடியேற்ற நாடுகள் அனைத்திலும் கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினர். குடியேறச் சென்ற படைகளோடு குருக்களும் இணைந்து கொண்டனர். குடியேற்ற நாடுகளில் திருச்சபைக்கான பெரும் அறுவடையைக் கண்டுணர்ந்த இவர்களுக்கு சுதேச மொழியும் கலைபண்பாட்டு வடிவங்களும் பெரும் சவாலாய் அமைந்தன. சுதேசிகளுக்கு கிறிஸ்துவை அறிவிக்க சுதேச மொழியாற்றலும் கலைப பண்பாட்டு வடிவங்களில் பரிச்சயம் அவசியப்பட்டது.

இந்நிலையில் அவர்களில் பலர் மொழியையும் கலை இலக்கியங்களையும் தாமே கற்றுத்தேறி பணியாற்ற முயற்சித்த அதே வேளையில் கிறிஸ்தவர்களாக மாறிய பொதுநிலையினரிடம் காணப்பட்ட சுதேச மொழியாற்றலையும் கலை இலக்கிய படைப்பாற்றல்களையும் ஊக்குவிக்க முன்வந்தனர். இதனால் புலமை பெற்றிருந்த பொதுநிலைக் கிறிஸ்தவர்களும் வரகவிகளான பல உள்ளூர், கிராமிய புலவர்களும் தமது ஆற்றல்களை நற்செய்தியறிவிப்புப் பணிக்கு காணிக்கையாக்க சந்தர்ப்பம் பெற்றனர். பல்வேறு விதமான கிராமிய இலக்கியங்களும், பாடல்களும், கலைவடிவங்களும் இவர்களால் தயாரிக்கப்பட்டன. இக்கலையிலக்கிய வடிவங்கள் மூலம் கிறிஸ்தவ கோட்பாடுகளையும், முன்னுதாரணமான புனிதர்களின் வாழ்வையும் நாளாந்த கிறிஸ்தவ வாழ்வுக்கு தேவையான ஒழுக்கவியல் நடைமுறைகளையும் இவர்கள் வெளிக்கொணர்ந்தனர். இந்த வகையில் இவர்களது இத்தகைய முயற்சி திருச்சபையின் வரலாற்றில் பதியப்பட வேண்டிய விடயங்களாக மேலெழுகின்றன. மேற்சொன்ன கலைஇலக்கிய முயற்சிகளை விட ஆலயங்களை அமைத்தல், பராமரித்தல், கற்பித்தல், குருக்களுக்கு உதவி புரிதல் போன்ற பல்வேறு பணிகள் வழியாகவும் அவர்கள் தமது பங்களிப்பை நல்கி உள்ளனர். ஏன் தமது நம்பிக்கைக்கு இறுதிவரை சான்று பகர்ந்து இரத்த சாட்சிகளாகவும் மாறியுள்ளனர். இக்கட்டுரையின் எல்லை கருதி அவர்களது கலை இலக்கியப் பணியே முன்னிலைப்படுத்தப்படுகிறது.

## பொதுநிலையினர் படைத்த தமிழ் இலக்கியங்கள்

16ஆம் நூற்றாண்டிலிருந்தே பொதுநிலைக் கிறிஸ்தவர்களின் தமிழ்மொழி மூலமான பங்களிப்பை காணக்கூடியதாக இருக்கிறது. அடியார் வரலாறு நூலிலிருந்து அலசு என்னும் புனிதையின் வரலாற்றை காயல் நகரப் புலவரான சாந்தகுரூஸ் என்னும் புலவர் விருத்தப்பா வடிவில் பாடினார் என்றும் அதனை தமிழிலே அலசு அம்மானையாக நாட்டுப்புற புலவர் ஒருவர் பாடியுள்ளார் என்றும் பேராசிரியர் பிலேந்திரன் அவர்கள் தமது தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தோன்றிய கிறிஸ்தவ அம்மானை இலக்கியங்களை நோக்கும் போது 1650களில் தெல்லிப்பளையில் வாழ்ந்த பேதுருப் புலவரின் பங்களிப்பு முக்கியமானது. அவர் சத்தியோகு அம்மானையைப் பாடினார். 1700



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் தெல்லிப்பளையைச் சேர்ந்த பூலோக சிங்க நாவலர் முதலியார் திருச்செல்வர் அம்மானையைப் பாடினார். 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புவிமனசிங்கி முதலியார் ஸ்நாபார் செனன் யுவான் அம்மானையைப் பாடினார்.

இன்றுவரை 70க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ அம்மானைகள் பாடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடும் பேராசிரியர் கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொழுது போக்காக, மரண வீட்டில், தவக்காலத்தில் இவ்வம்மானை இலக்கியங்கள் எவ்வாறு பயன்பட்டன என விளக்குகிறார். (காண்க. கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் ப. 85-92) இத்தகைய இலக்கியங்களை தமது கிறிஸ்தவ வாழ்வின் தேவைகருதி பல பொதுநிலையினரே ஆக்கியிருந்தனர். இலைமறைகாயாக இருந்து இயங்கிய அவர்களது பங்களிப்புக்கள்தான் கிறிஸ்தவம் துடிப்பாக இயங்க காரணமாய் இருந்ததென்பதை நாம் மனங்கொள்ளவேண்டும்.

ஞானப்பள்ளு யாழ்ப்பாணத்தில் தோன்றிய இன்னுமொரு உயர் கிறிஸ்தவ இலக்கியமாகும். ஆயினும் இதன் ஆசிரியர் யார் என்பது உறுதியில்லை. அகச்சான்றுகளின் படி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க பொதுநிலையினர் என்பது தெளிவாக உள்ளது. இது சந்தியோகு அம்மானை பாடிய தெல்லிப்பளை பேதுருப்புலவராகவே இருக்கலாம் என்பது ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களின் துணிபு, ஏட்டுவடிவில் இருந்த இந்த இலக்கியத்தை தொகுத்து 1909 இலும் பின்பு 1928 இலும் பதிப்பித்து பேணியவர்களும் பொதுநிலையினரே.

பொதுநிலைக் கிறிஸ்தவர்கள் தமது கலை இலக்கிய ஆற்றலால் திருச்சபைக்கு எத்தகைய பணியை ஆற்றி வந்தனர் என்பதற்கு 'இரட்சணிய யாத்திரிகம்' எழுதிய எச். கிருக்ஷ்ணப்பிள்ளை ஒரு சிறந்த முன்னுதாரணமாவார். வைகூஷ்ணவ குடும்பத்தில் பிறந்து சிறுவயது முதலே இலக்கிய பரிச்சயமுடையவராகத் திகழ்ந்த இவர் கிறிஸ்தவத்தின்பால் கவரப்பட்ட போது 'பரதேசியிக்கு மோட்ச பயணம்' என்கின்ற யோண் பன்யனின் நூலைத்தழுவி இப்பெரும் காப்பியத்தை வடிவமைத்தார். இதைவிட வேறுபல நூல்களை இயற்றியும் பதிப்பித்தல் முயற்சிகளை மேற்கொண்டும் கிறிஸ்தவ இலக்கியத்தின் வழி நற்செய்தி அறிவிப்புக்கு பங்களிப்புச் செய்த ஒப்புயர்வற்ற பொதுநிலையினராக இவர் திகழ்கின்றார்.

## பொதுநிலையினரின் கூத்துக்கலையும் கிறிஸ்தவமும்

மேற்சொன்ன பிரபந்த மற்றும் காப்பிய இலக்கியங்களில் கிறிஸ்தவத்தை பாடுபொருளாக்கிய பொதுநிலையினருடைய பங்களிப்பு ஒரு புறம் இருக்க நாட்டார் கலைவடிவமாகிய கூத்துக்கலை வழியாக அவர்கள் கிறிஸ்தவ நற்செய்தியறிவிப்பிற்கு ஆற்றிய பங்கு மிகப் பெரிதானது. தமிழ் மக்களுக்கே உரித்தான ஆடல் பாடல் இரண்டும் இணைந்த கூத்துக் கலை தமிழ் மக்களால் மிகவும் விரும்பப்பட்ட ஒரு வடிவமாகவும் காணப்பட்டதனாலே இதன் வழியாக கிறிஸ்தவ கருத்துக்களைப் பரப்புவது மிக இலகுவானதாக இருந்தது. இது பாமர மக்களின் கலைவடிவமாக காணப்பட்டதனாலே பெருந்தொகையினரைச் சென்றடைவதற்கு மிகவும் உகந்த வடிவமாகவும் காணப்பட்டது. ஓரிரவு, ஈரிரவு, மூன்று இரவுகள் என இக் கூத்துகள் ஆடப்படுவதும் அதனை மக்கள் விரும்பி ரசிப்பதும் பொதுநிலையினர் பலர் விரும்பி இதில் ஈடுபடுவதற்கு காரணமாயிற்று. நாவாந்துறை அண்ணாவியார் திரு.வின்சன்டிப் போல் தமது யூதாததேயு நாட்டுக் கூத்துப் பிரதியின் முன்னுரையில் குறிப்பிடுவது போன்று "புனிதர்களின் வரலாற்றை பாடியும் நடித்தும் காண்பிப்பதும் ஒருவிதத்தில் போதனையாகும்" என்ற மனநிலையுடனேயே இவர்கள் இக் கலையில் ஈடுபட்டனர்.

இந்நாட்டுக் கூத்து கிறிஸ்தவ கலை இலக்கிய வடிவங்கள் யாழ்ப்பாணத்திலும், மன்னார் மாதோட்டப் பகுதிகளிலுமே அதிகமாக தோன்றி வளர்ந்திருப்பதை அறியக் கூடியதாக உள்ளது. பாசையூரைச் சேர்ந்த சுவாம்பிள்ளைப் புலவர் 1810இலே அந்தோனியார் நாடகத்தை எழுதியுள்ளார். இதுவே யாழ்ப்பாணத்தில் தோன்றியவற்றுள் கிடைக்கப்பெற்ற முதல் நாடக நூலாகின்றது. இதற்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு முன்பே மன்னார் மாதோட்டப் பிரதேசங்களில் நாட்டுக்கூத்துக்கள் எழுதப்பட்டும் ஆடப்பட்டும் வந்தன என்பதனை நானாட்டனைச் சேர்ந்த பெஞ்சமின் செல்வம் "மன்னார் – மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம்" என்கின்ற நூலின் மூலம் முன்வைக்கின்றார். இதன்படி மாதோட்டத்தில் தோன்றிய கத்தோலிக்க புலவர்களுள் லோறன்சுப்பிள்ளைப் புலவர் காலத்தால் முத்தியவராகக் கணிக்கப்படுகின்றார். இவர் பாடிய இந்நூல் மூவிராசாக்கள் வாசாப்பு என அறியப்படுகிறது. இவர் 1700களில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இவர்கள் மரபிலே வந்த எண்ணிறந்த புலவர்கள் நாட்டுக்கூத்துக்களையும், வாசகப் பாக்களையும், இசைநாடகங்களையும் தமிழில் பாடியும் மேடையேற்றியும் வந்துள்ளனர். இவர்கள் அனைவரையும் பட்டியலிடுவது இக்கட்டுரையின் வரம்பிற்கு புறம்பானது எனினும் இவர்களது பங்களிப்புக்கள் ஊர் ஊராக பிரதேசம் பிரதேசமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. இவர்கள் ஆக்கியுள்ள பல நூற்றுக்கணக்கான நாடகங்களில் மிகச் சிலவே அச்சேறி அடுத்தவர்களின் கைகளுக்கு எட்டியிருக்கின்றன. மிகப்பெரும்பாலானவை காற்றுக்கும், மழைக்கும், கறையானுக்கும் இரையாகி இருப்பது கவலைக்குரிய விடயமே.

## கலைஞர் செபமாலையும் நற்செய்தியறிவிப்பும்

மேற்சொன்ன மிகநீண்டதொரு பொது நிலைப் பாரம்பரியத்தில் வந்த ஒரு வகை மாதிரியாகவே நான் திரு. செபமாலை அவர்களின் கிறிஸ்தவத்துக்கான கலையிலக்கியப் பங்களிப்பை நோக்குகிறேன். ஒரு பொதுநிலைக் கலை இலக்கியக்காரனாக கிறிஸ்தவ கருத்துக்களை உடைய நாடகங்களை எழுதியும், நடித்தும், நெறிப்படுத்தியும், பங்களிப்புச் செய்தது மட்டுமல்லாமல் தனது தளத்திலிருந்து தமிழ் மக்களின் மரபுவழிக் கலைகளைப் பேணுவதன் மூலம் தமிழுக்கும் தமிழுலகத்துக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். இவரது மரபுவழி நாடகங்கள் என்ற நூலுக்கு வழங்கிய ஆசியுரையில், "ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டு கல்விப் பணிக்கு மத்தியிலும் கலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் குழந்தை அவர்கள், பழமை மிக்க நாட்டுக் கூத்துக் கலையில் இவரது திறமை மிக்க உயர்வானது. மேடை ஏறிய இவரது பல நாட்டுக்கூத்துக்கள் பரிசினைப் பெற்றதோடு சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராகவும் இவரை இனம் காட்டின, 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை' நிறுவி முப்பது ஆண்டுகளுக்கு (இற்றைக்கு 48 ஆண்டுகள்) மேலாக கலைப்பணி புரிந்து வந்ததிலிருந்து இவரது கலையாற்றலையும் பணி ஆர்வத்தையும் சமயப்பற்றையும் நாம் புரிந்து கொள்ளலாம்." என்று குறிப்பிடுகிறார் திருமலை மட்டுநகர் ஆயர் யோ.கிங்ஸ்லி சுவாம்பிள்ளையவர்கள்.

இவருடைய நாடகங்கள் இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன. 'பரிசு பெற்ற நாடகங்கள்', 'மரவு வழி நாடகங்கள்' என்ற பெயர்களில் இரண்டு நூல்களாக எட்டு நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 'பரதேசி மகன்' என்ற வசன நாடகத்தையும், 'திருந்திய உள்ளம்' என்கின்ற நாட்டிய நாடகத்தையும் கையெழுத்துப் பிரதிகளில் காணக் கிடைத்தது. சமூக நன்னெறியைப் போதிக்கும் ஆக்கங்களாக இவை காணப்படுகின்றன. தமிழரெம் பாரம்பரிய மரபுகளிலிருந்து எழுந்து வரும் நாடகங்கள், கிறிஸ்தவ நாடகங்கள், சமூக நன்னெறி நாடகங்கள் என்பன இவற்றுள் காணப்படுகின்றன. இவற்றை விட பல மரபுவழிக் கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்களை இவர் பாடியும், நெறிப்படுத்தியும் வந்துள்ளார்.

இந்த உயர்ந்த கலையுள்ளத்தை நேரடியாக சந்தித்து கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்பு இன்னும் எனக்கு கிடைக்காத போதிலும் அவருடைய எழுத்துக்களிலும் அவரைப் பற்றி மற்றோர் சொல்லக் கேட்டும் அவர் பாடிய இறுவட்டுக்களைக் கேட்டும் அறிந்து கொண்டதன் அடிப்படையில் பொதுநிலைக் கிறிஸ்தவ கலை இலக்கியப் பாரம்பரியத்தில் எமது சமகாலத்துக்கு சற்று முன்பிருந்தே ஜொலிக்கும் ஒரு வைரமாகவே இவரை நாம் கருத வேண்டும். இவரது முதுமைக் காலத்தில் இவரது பல்துறை ஆளுமையை வெளிக்கொணரும் ஒரு நூல் வெளிவருவது மிகவும் மகிழ்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியது. வரலாற்றின் மறுபக்கத்தில் அதனைத் தாங்கியிருக்கும் இத்தகையோரது பங்களிப்புக் கள் நிட்சயம் பதிவு செய்யப்பட வேண்டியவை.

## நிறைவாக

ஆயர் தியோகுப்பிள்ளை அறங்கொடை நினைவுப் பேருரை வரிசையில் அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் கலை இலக்கியம் மற்றும் சமயப்பணிகளைப் பற்றிய சிறந்த உரையொன்றை பேராசிரியர் சிவலிங்க ராஜா அவர்கள் வழங்கியிருந்தார். அக்காலத் தில் தம்பிமுத்துப்பிள்ளை என்னும் ஒரு பொதுநிலையினர் தமிழுக்கும் சமயத்துக்கும் ஆற்றிய தொண்டு தொடர்பாக ஆய்வு நிலைப்பட்டு அவர் வழங்கிய உரையினைச் செவிமடுத்தபோது எமது தமிழ்த் திருச்சபையின் வரலாற்றில் இவ்வாறு அரும்பங்களிப்புச் செய்த பொதுநிலையினர் பற்றிய கவனக்குவிப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற எண் ணம் மனதிலே தோன்றியது. உண்மையில் திருச்சபையின் முதுகெலும்பாக இருந்து அதன் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் பெரும் பங்காற்றும் இத்தகைய பொதுநிலையினர் பலர் தமது படைப்புக்களை கையெழுத்துப் பிரதிகளாகவே தொடர்ந்தும் வைத்திருக்கும் அவலத்தை வேதனையோடு நினைக்கிறேன். இவை அச் சேற்றப்படுவதும் அவர்களது பங்களிப்பு வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படுவதும் அவசி யமாகும்.

எமது மறைமாவட்டத்தில் இயங்கும் கிறிஸ்தவ பத்திரிகைகள் இத்தகையோரது பங்களிப்பை மாதம் ஒரு கலைஞர் என்ற அடிப் படையிலோ வேறு விதமாகவோ பேட்டிகள், கட்டுரைகள் மூலம் அறிமுகம் செய்வது ஒரு சிறந்த செயற்பாடாக அமையும். பொதுநிலை அமைப்புக்கள் தம் மத்தியில் சிதறிக்கிடக்கும் இத்தகைய முத்துக்களை வெளிக்கொணர்ந்து அறிமுகம் செய்ய முன்வரவேண்டும். கல்விப் புலத்தில் இயங்கும் இளம் தலைமுறையினர் கிராமம் கிராமமாக சிதறிக் கிடக்கும் இத்தகைய பொதுநிலைக் கலைஞர்களை வெளி உலகிற்கு கொண்டுவர அர்ப்பணத்தோடு உழைக்க வேண்டும். நிறுவனரீதியாக இவர்களது ஆக்கங் களில் சிறந்தவை ஆவணப் படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இத்தகையோர் வழியிலே இன்னும் பல பொதுநிலையினர் உருவாக வேண்டும். கடந்த காலங்களில் காணப்பட்ட பொதுநிலையினரின் இத்தகைய பங்களிப்பு பொதுநிலையினரின் பொற்காலம் என அழைக்கப்படுகின்ற இக்காலத்திலே அருகிக் காணப்படுவது கவலையளிக்கிறது. இத்திசையில் வீச்சோடு நடைபோட இளம் தலைமுறையினர் முன்வர வேண்டும். திரு. செபமாலை (குழந்தை) இன்னும் அவரை யொத்த எத்தனையோ முன்னோடிகளின் தடம் பதித்து தமது கலையுள்ளத்தாலும் இலக்கிய ஆற்றலாலும் கிறிஸ்துவுக்கு சான்று பகர பற்பல பொதுநிலையினர் இன்னும் இன்னும் முன் வருவார்களாக. ■

### உசாத்துணை நூல்கள்


1. அமலச்சந்திரன், ஆ, பொதுநிலையினர் தலைமைப்பணி, தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு, திருச்சி,2007.
2. ஞானமுத்து பிலேந்திரன், தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம், 2009.
3. அன்புராசா செபமாலை, மன்னார் மாதோட்டம் கத்தோலிக்க நாடகங்கள், அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2007.
4. செபமாலை, செ. பரிசு பெற்ற நாடகங்கள், நானாட்டான் பிரதேச கலாச்சார பேரவை, 1997.
5. ……, மரபுவழி நாடகங்கள், முருங்கள் முத்தமிழ் கலாமன்றம், 1998.
6. பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம், நானாட்டான், 1918


"ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்! உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்! உம் இல்லத்தில் உம் துணைவியார் கனிதரும் திராட்சைக் கொடிபோல் இருப்பார்..."

(தி.பாடல் 128:1–3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிகர புதுமைகளைப் படைப்பவர் குழந்தை



**பேராசிரியர் அகஸ்ரின் சூசை**
**[ஆனந்தன்]**
B.A.(Hons),Dip.in.Ed.,M.Phil.,Ph.D.
*புவியியல்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

'குழந்தை மாஸ்ரர்' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படுகின்ற இந்த சாதாரண மனிதர் - ஒப்பற்ற ஓர் அற்புதமான கலைஞர். மன்னார் பிரதேசத்தில் இவரை அறிந்திராதவர் எவரும் இல்லை. தமிழர் தாயகத்தில் குழந்தை மாஸ்ரரை அறியாத கலைஞர்களும் இல்லை எனலாம். அந்தளவிற்கு கலைத்துறையில் சாதனைகள் பல படைத்து தனக்கென அழியாத முத்திரை பதித்துக்கொண்டவர்.

நான் அறிந்த வரையில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக கலைத்துறையில் கலைக்காக தன்னை அர்ப்பணித்து - கலைத்துறையை வளர்த்தெடுத்து இந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த ஒரு சிறந்த கலைஞர் ஆவார். இவர் ஆடாத மேடையுமில்லை, போடாத வேடமும் இல்லை என்ற அளவுக்கு பல சரித்திர, இலக்கிய, சமூக நாடகங்களையும், நாட்டுக்கூத்துக்களையும் அரங்கேற்றி மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த முன்னணிக் கலைஞர்களில் இவரும் ஒருவர் என்பதில் மிகையில்லை.

இவர் சிறந்த கலைஞராகத் திகழ்ந்தமையினால் நீண்ட காலமாக நான் இவரை அறிவேன். இவரது அறிமுகம் 1987ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே எனக்குக் கிட்டியது. இவரது சொந்த ஊரான முருங்கன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியபோது இவரது பிள்ளைகள் எனது மாணவர்களாக இருந்த காரணத்தினாலும், கலைஞர் அவர்கள் அதிபராக அயற் பாடசாலை ஒன்றில் பணியாற்றியமையினாலும் இவருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இன்றுவரை அவரிடம் எனக்குத் தனிமதிப்புண்டு. அவரும் என்னுடன் மதிப்பும், மரியாதையும் கொண்டுள்ளதையும் நன்கு அறிவேன்.

கலைத்துறையில் இவரது ஈடுபாடு வித்தியாசமானது. இவரது பணியோ தனித்துவமானது. புரட்சிகரமாக எதையாவது செய்து புதுமை படைக்கவேண்டும் என்ற இவரது எண்ணம் 'யார் குழந்தை' என்ற நாடகத்தின் மூலம் நிரூபணமாகியது. பலரும் வியக்கும் வண்ணம் யார் குழந்தை என்ற நாடகத்தில் வரும் மன்னன், உண்மையை வெளிக்கொண்டுவர குழந்தையை வாளால் வெட்ட முனையும் காட்சி அது. தனது சொந்தக் குழந்தையை நடிக்கவைத்து குழந்தையின் காலைப் பிடித்து தலைகீழாகத் தொங்கவிட்டு குளறக் குளற வாளால் வெட்ட முயல்வதுபோன்ற ஒரு காட்சியை மேடையேற்றினார். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அந்த நாடகம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.

இந்நாடகத்தை பார்த்து ரசித்த எனது பாடசாலை அதிபர் திரு. அதிரியான் மார்க் (பாலசிங்கம் மாஸ்ரர்) அவர்கள், நான் 09வது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கையில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலக்கிய பாடம் கற்பித்துக்கொண்டிருந்த வேளையில், நாடகங்கள் தொடர்பாகக் கதைக்கையில் யார் குழந்தை நாடகத்தை தான் பார்த்து மெய்சிலிர்த்துப் போனதாகவும், "நாடகம் பார்க்க வேண்டுமாயின் குழந்தையின் நாடகமே பார்க்கவேண்டும். அவன்தானடா உண்மையான கலைஞன்" என்று மேசையில் அடித்து உணர்ச்சிவசப்பட்டவராகக் கூறியது இன்றும் எனது ஞாபகத்தில் வருகிறது.

எனக்கு இன்னொரு ஞாபகம் 1965 - 1970இற்கு இடைப்பட்ட காலப் பகுதியாக இருக்கவேண்டும்; முருங்கன் பாடசாலையில் இவர் மேடையேற்றிய 'திருந்திய உள்ளம்' என்ற நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் வில்லன் வேடத்தில் - துவக்குடன் இறுதியில் வருவதுபோன்ற ஒரு காட்சி;

"பொன்னெழில் பூத்தது புதுவானில்
வெண்பனி தூவும் நிலவேநில்..." என்ற எம்ஜிஆரின் பாடலை எப்போது கேட்டாலும் குழந்தை மாஸ்ரரின் திருந்திய உள்ளம் என்ற நாடகமே என் நினைவுக்கு வருவதுண்டு. அக்காலத்து எம்ஜிஆர், சிவாஜி நடித்த படங்களைப் பார்ப்பதுபோன்ற ஓர் உணர்வு இந்நாடகத்தின் மூலம் கிடைத்தது.

இவர் பல நாட்டுக்கூத்துக்கள், நாடகங்கள் மற்றும் வில்லுப்பாட்டுக்களை மேடையேற்றியுள்ளதை அறிவேன். ஆயினும் இவரது ஒருசில கூத்துக்களையும் நாடகங்களையுமே எனக்குப் பார்க்கச் சந்தர்ப்பம் கிட்டியது. இலக்கிய, சமூக நாடகங்களைத் தவிர திருப்பாடுகளின் காட்சிகளில் இவரும் முக்கிய பாத்திரம் ஏற்று பிலாத்துவாக நடித்ததையும் நினைத்துப் பார்க்கிறேன். முருங்கன் ஆலயவளவில் நடைபெற்றபோது ஏராளமானோர் கண்டு களித்தனர். எனக்கும் இதனைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மேலும், முருங்கன் மகா வித்தியாலயத்தில் நான் ஆசிரியராக கடமைபுரியும் காலங்களில் தபசு காலத்தில் வாசிக்கப்படும் வியாகுல பிரசங்கம், குழந்தை மாஸ்ரர் அவர்களால் வாசிக்கப்படும்போது மயான அமைதி நிலவும். இசையோடு வாசிக்கப்படும் அந்தப் பிரசங்கம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

பல இடங்களிலும் பெரிய வெள்ளி பிரசங்கத்தை பலரும் வாசிக்க கேட்டிருக்கிறேன். இந்தப் பிரசங்கத்தை வாசிப்பதில் இவருக்கிணை எவரும் இல்லை என்பது எனது கருத்து. அண்மைக் காலங்களில் இவரது இந்தப் பிரசங்கங்கள் ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்டு வீடுகளில் - தபசு காலங்களில் ஒலிக்கப்படுவதையும் கேட்டிருக்கிறேன். இந்தப் பிரசங்கங்களோடு ஒப்பாரி பாடல்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு போடப்படுவதையும் கேட்டுள்ளேன். இவைகள் பேணிப் பாதுகாக்கப்படுவது அவசியம் என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

இன்னொரு மறக்கமுடியாத சம்பவம் ஒன்றுண்டு. நான் முருங்கன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமை புரிகின்ற காலங்களில்தான் எனது முதுகலைமாணி பட்டத்தினை நான் யாழ். பல்கலைக் கழகத்தில் பெற்றிருந்தேன். இதைச் சிறப்பிக்கும் முகமாக முருங்கன் பாடசாலையும், முருங்கன் சமூகமும் பாராட்டுவிழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழா மேலும் சிறக்க குழந்தை மாஸ்ரர் அவர்கள் மாணவர்களைக் கொண்டு ஒரு மணிநேர நாட்டுக்கூத்து ஒன்றை


1979இல் 'யார் குழந்தை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றி அவ்விழாவைச் சிறப்பித்தார். பெருந்தொகையான மக்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். எனது பெற்றோரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். இதனூடாக இவர் என்னிடம் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார் என்பதை எண்ணும்போது எனது மனம் மகிழ்வடைகின்றது. அவர்மீது நான் கொண்டிருந்த மதிப்பும் உயர்ந்தது.

கதை எழுதுவோனாக, வசனகர்த்தாவாக, இயக்குநராக மட்டுமல்லாது பாடலாசிரியராக, பாடகராக, நடிகனாக, நாட்டுக்கூத்து விற்பனராக, இசைக் கருவிகளைக் கையாள்வதில் கைதேர்ந்தவராக, மொத்தத்தில் கலைத்துறையில் சகலகலா வல்லவனாகத் திகழ்ந்துள்ளதை நான் மட்டுமல்ல இந்த நாடே அறியும். இந்தத் தேசத்தில் கலையை இவர் வளர்த்தெடுத்ததோடு மட்டுமல்லாது தனக்குப் பிறகும் கலையைத் தொடர்ந்து நடத்த பலரையும் உருவாக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1970களின் முன்னான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் பிரதேச கலைவிழா போட்டிகள் மிக மும்முரமாக நடைபெறுவதுண்டு. எல்லாக் கிராமங்களிலுமுள்ள கலாமன்றங்கள் நாடகம், நாட்டுக்கூத்துக்களை போட்டிக்குக் கொண்டுவருவது வழக்கம். நானும் வங்காலை வளர்கலை மன்றத்தின் நாடகங்களில் சிறிய பெண் பாத்திரமேற்று நடித்ததுண்டு. குழந்தை மாஸ்ரரின் முத்தமிழ் கலாமன்றமும் நாடகங்களை அரங்கேற்றியது. நான் மேக்கப் போட்டு நின்றபடியால், சபையிலிருந்து குழந்தை மாஸ்ரரின் நாடகங்களை பார்க்கும் சந்தர்ப்பம் தவறவிடப்பட்டது. இரு தடவைகள் இவ்வாறு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தும் பார்க்கமுடியாமல் போய்விட்டது.

கலைவிழா போட்டியெனில் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் நிச்சயம் களம் இறங்கும். இது ஏனைய மன்றங்களுக்கும் தெரியும். ஏனைய மன்றங்களுக்கு ஒரு கலக்கம் - பயம் ஏற்படுவது எனது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை. அந்தளவுக்கு முத்தமிழ் கலாமன்றத்தின் ஆற்றல் அமைந்திருந்தது.

முத்தமிழ் கலாமன்றம் ஒரு சிறிய குழு. தகப்பன் - மகன் குழந்தை மாஸ்ரர், இவரது மனைவி, இவரது சகோதரர்கள், தகப்பன் - மருமக்கள், குழந்தைகள் என்று தனது குடும்பத்தினரையே பின்னணியாகக் கொண்டது. ஆடல், பாடல், நடிப்பு மட்டுமல்ல வாத்தியக் கருவிகளை இயக்குவதிலும் வல்லவர்கள். சுருக்கமாகச் சொன்னால் பஞ்சபாண்டவர்கள்போல வருவார்கள். அதிரடி கலைநிகழ்ச்சிகளை நடத்தி, பரிசில்களைத் தட்டிச்செல்வதுடன், ரசிகர்களின் ஏகோபித்த கரகோசங்களையும், ஆதரவையும் பெற்றுக்கொள்வதும் இவர்களது வரலாறு. ■

"திருஞான மறையின் தீபம்என்னவே திகழும் சந்யோகு
அருள்மேவு அப்பர் மீது அலங்கார இசையின் பாவால்
பொருள்மேவு நகர் முருங்கன் புலவர் கண்மணியாய் தோன்றும்
திருமேவு குழந்தை என்போன் தரித்தனம் பனுவல் மானால்"

**புலவர் க.மரிசால்பிள்ளை**
**பெரிய கட்டைக்காடு, நானாட்டான், மன்னார்.**

**நன்றி: குழந்தை. இயாகப்பர் இன்னிசைப் பாடல்கள் (1967)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் கலைப்பயணத்தில் வழிநடந்த கலைஞர்கள்



**திருமதி செ. றோஸ்மேரி**
*முருங்கன்,*
*மன்னார்.*

**இ**க்கட்டுரை, குழந்தை செபமாலை அவர்களுடன் கலையுலகில் பயணித்த ஆரம்பகால உறுப்பினர்களைப் பற்றிய சிறு குறிப்புக்களைத் தர விளைகிறது. குழந்தை செபமாலை 'புனித இயாகப்பர் நாடக மன்றம்' என்ற அமைப்பை 1961இல் உருவாக்கி அதன்பின் கலை ஆர்வமுள்ள அனைவரையும் இணைத்துக் கொள்ளும் நோக்கோடு மேற்சொன்ன மன்றத்தின் பெயரை இன, மத வரையறைகளைக் கடந்து 'முருங்கன் முத்தமிழ் கலா (நாடக) மன்றம்' என 1964இல் உருமாற்றினார். மன்றமாக இயங்கத் தொடங்கியதில் இருந்து இவருடன் கலை உலகில் ஈடுபட்ட ஆரம்பகால கலைஞர்கள் பற்றிய குறிப்புக்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

## ம.செபஸ்தியான் (முருங்கன்)



மிகச்சிறந்த ஒரு மத்தள அண்ணாவியார் ஆவார். முருங்கன் முத்தமிழ் கலா (நாடக) மன்றச் சிப்பிகளில் ஒருவர். புனித சந்தியோகுமையோர் நாடகம், சன்னீக்கிலார் நாடகம், எண்டிறிக் எம்பரதோர் நாடகம், பக்கோமியான் வாசாப்பு, ஞானசௌந்தரி வாசாப்பு ஆகிய நாடகங்கங்களுக்கு அண்ணாவியாக இருந்து பழக்கி மேடையேற்றி உள்ளார். 06.06.1967இல் முருங்கனில் நடந்த மன்னார்ப் பிரதேசக் கலைவிழாவில் அண்ணாவிமார் வரிசையில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் 'சிறந்த அண்ணாவி'யாகக் கௌரவிக்கப்பட்டவர். குழந்தை செபமாலையின் தந்தையாவார்.

## செ.மாசிலாமணி (பிலேந்திரன்)



மிகச் சிறந்த பாடகர், குணச்சித்திர நடிகர், 'ஆர்மோனியம்' வாசிப்பதில் வல்லவர். கலாபூஷண, ஆளுநர் விருதுகளையும் 'இறைக்கலை வேந்தன்', 'வாழ்நாள் சாதனையாளன்' ஆகிய பட்டங்களையும் பெற்றவர். நாட்டார்பாடல் கலைஞராவார். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களுள் முக்கியமானவர். காலநடை அபிவிருத்தி போதனாசிரியராக 37ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற அரசபணியாளன். பல நாடகங்களை அண்ணாவியாகவிருந்து நெறிப்படுத்தி வருபவர். குறுந்தட்டுகளில் பாடி உள்ளார். இவர் குழந்தையின் இளைய சகோதரன் ஆவார்.

## ப.அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)



முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறந்த கலைஞன். முத்தமிழ் கலாமன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் முக்கியமான ஒருவர். சிறந்த நடிகரும் நிர்வாகியுமாவார். பல்வேறு நாடகங்களில் அரச வேடங்களில் அரிய தடங்களைப் பதித்துப் பிரகாசித்தவர். விவசாய போதனாசிரியராக பணியாற்றியவர். முருங்கள் கிறிஸ்து அரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திலும்,புனித இயாகப்பர் ஆலயத்திலும் பொறுப்பான பணிகளில் இருந்தவர். சமூக அமைப்புக்களில் பதவி வகித்து கணிசமான பங்களிப்பைச் ஆற்றி அமரத்துவம் அடைந்துவிட்டார்.

## செ.சீமான் (முருங்கன்)



நீண்டகால கலையனுபவம் வாய்ந்த கலைஞன். வெண்கலக் குரல்கொண்ட வியத்தகு பாடகரும் சிறந்த நடிகரும் ஆவார். கலாமன்றத்தின் ஆரம்ப நாட்களில் இருந்து இற்றைவரை மன்றத்துக் கலை நிகழ்வுகளுக்கு முழு ஆதரவு வழக்குபவர். மன்றத்தின் இக்கட்டான காலகட்டங்களில் எப்போதும் கைகொடுத்து உதவியவர். இயல்பாகவே நகைச்சுவை உணர்வு மிக்கவர். நாடகங்களில் பல பாத்திரங்களை ஏற்று நடித்தவர். கடின உழைப்பாளி. எந்தச் சூழலுக்கும் இசைந்து கொடுத்து செயற்படும் திறமை படைத்தவர்.

## செ.வேதநாயகம் (ஆவணம்)



நானாட்டான், ஆவணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓவியக் கலையில் வல்லவர், ஒப்பனைக் கலைஞர். முருங்கன் முத்தமிழ் கலாமன்ற தொடக்க காலத்திலிருந்தே நாடக, கலை நிகழ்ச்சிகளுக்கான ஒப்பனைகளையும், அலங்கார வேலைகளையும் செய்து வருபவர். பல நூறு நாடகங்கள் இவரின் ஒப்பனைக் கைவண்ணத்தால் சிறப்புற்றிருக்கிறது.

## செ.யேசுதாசன் (முருங்கன்)



முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பிரசித்திபெற்ற பின்னணி இசைக்கலைஞர் ஆவார். மத்தளம், தபேலா,டோல்கி, பொங்கோஸ், சிம்பல்ஸ் ஆகிய வாத்தியங்களை ஒரே நேரத்தில் வாசிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவர். குணச்சித்திர நடிகர். பெண் வேடங்களில் நடித்து நாடகங்களைச் சிறப்பித்தவர். ஓய்வுநிலை அஞ்சல் அலுவலகர். தொடர்ந்து இசைக்கலைஞராக இயங்கிக் கொண்டிருப்பவர். குழந்தையின் இளைய சகோதரன் ஆவார்.

## சீ.இம்மானுவேல்



காத்தான்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியர். ஒப்பனை, ஓவியம், அலங்காரம் என இவரின் கைவண்ணம் நாடகங்களிலும் கலை நிகழ்வுகளிலும் சிறப்புச் சேர்க்கும். மன்றத்தின் தொடக்க காலங்களில் இருந்தே குழந்தையுடன் சேர்ந்து கலைப்பயணங்களில் பயணித்த கலைஞன். எந்த நாடக ஆற்றுகைக்கும் இம்மானுவேல் ஆசிரியர் அவர்தம் மனைவியுடன் வந்துசேர்ந்து சிறப்பிப்பவர்.

## செ.சந்தியோகு (இரத்தினம்)



மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர். வில்லன் பாத்திரங்களை ஏற்று விறுவிறுப்பாக நடித்தவர். வீரத்தாய், கல்சுமந்த காவலர்கள், புதுமைப்பெண் ஆகிய நாடகங்களில் நடித்து பெருமை பெற்றவர். 1990களில் புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து இறைபதம் அடைந்துவிட்டார். இவர் குழந்தையின் இன்னுமொரு இளைய சகோதரனாவார்.

## அருள்சகோதரி செ.எலிசபேத்



மன்னார் மாவட்ட நாடக மேடைகளில் முதன்முதலாக பெண் பாத்திரங்களை ஏற்று நடித்த பெண் என்ற பெருமை பெற்றவர். மன்றத்தின் ஆரம்பகால நடிகையாவார். 1965களில் மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு, கிளிநொச்சி போன்ற இடங்களில் நடைபெற்ற நாடக விழாக்களில் முக்கிய பெண் பாத்திரங்களை ஏற்று மிகச் சிறப்பாக நடித்து நாடகங்களைச் சிறப்பித்தவர். இவர் ஒரு அருள்சகோதரி ஆவார். தற்போது மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரி அதிபராகப் பணியாற்றுகிறார். குழந்தையின் இளைய சகோதரி ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமதி ம.செபஸ்தியம்மா (பேபி)



மன்றத்தின் நீண்டகால நடிகை ஆவார். நாடகங்களில் பெண் பாத்திரங்களில் நடிக்க ஆளில்லாத சந்தர்ப்பங்களில் கைகொடுத்து உதவியவர். சிறந்த நடிகையும் பாடகியும் ஆவார். யார் குழந்தை, புதுமைப்பெண், அன்புப்பரிசு, வாடியமலர் போன்ற நாடகங்களில் நடித்துப் பெருமை பெற்றவர். 1990களில் புலம்பெயர்ந்து சென்று இந்தியாவில் வாழ்ந்து வருபவர்.

### திருமதி. தேவதாசன் மேரிறீற்றா (றீற்றா)



ஆவணத்தைப் பிறப்பிடமாகவும் நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமத்தை வாழ்விடமாகவும் கொண்டவர். சிறந்த நடிகையும் பாடகியும் ஆவார். சிறுவயதில் இருந்தே நடனங்களிலும் நடிப்பிலும் ஈடுபட்டு வந்தவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஆரம்பகால நாடகக் கலை நிகழ்வுகளில் பின்னணிப் பாடல்களில் பங்களிப்புச் செய்தவர்.

### திருமதி.நவரெத்தினம் (சோதி)



ஆவணத்தைப் பிறப்பிடமாகவும் நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்டவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஆரம்பகால கலை நிகழ்வுகளில் குறிப்பாக வீரத்தாய், கல்சுமந்த காவலர்கள், அன்புப்பரிசு போன்ற நாடகங்களில் பின்னணிப் பாடல்களில் உதவியவர்.

### ச.வெற்றிநாயகம்



நானாட்டான் ஆவணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞன். முத்தமிழ் கலாமன்ற வளர்ச்சிக்கு உறுதுணையாய் திகழ்ந்தவர். சமுதாய வளர்ச்சிக்குப் புரட்சிகரமாகச் செயலாற்றியவர். உறவுகளை உயிராய் மதித்து வளர்த்தவர், மேன்மைப்படுத்தியவர். அமரத்துவம் அடைந்துவிட்டார்.

### ச.அந்தோனிப்பிள்ளை (ஆவணம்)



வீரத்தாய், கல்சுமந்த காவலர்கள், தாரும் நீரும் போன்ற நாடகங்களில் நடித்துப் பாராட்டைப் பெற்ற கலைஞராவார். அரச பாத்திரங்களை ஏற்று நடிக்கக்கூடிய தோற்றத்தையும் ஆளுமையையும் உடையவர். புனித சந்தியோகுமையோர் நாடகம், சில்வேஸ்திரியார் வாசாப்பு, ஞானசௌந்தரி வாசகப்பா ஆகியவற்றில் சிறப்பாக நடித்தவர். தனது பாடலினாலும் நடிப்பினாலும் பலரது பாராட்டையும் பெற்றவர்.

### செ.வஸ்தியாம்பிள்ளை (முருங்கன்)



வீரத்தாய், புதுமைப்பெண் போன்ற நாடகங்களில் நடித்த கலைஞர். நாடகங்களுக்கு மேடை ஆயத்தங்களை சிறப்பாகச் செய்பவர். தனது இளமைக் காலத்திலிருந்தே மன்றத்துடன் இயங்கியவர். 1990களில் புலம்பெயர்ந்து இந்தியா சென்று வாழ்ந்து இறைபதம் அடைந்துவிட்டார்.

### ச.சிங்கராசா



முருங்கன், இசைமாலைத்தாழ்வைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞன். நன்றாகப் பாடும், 'ஆர்மோனியம்' வாசிக்கும் ஆற்றல் படைத்தவர். நாடகங்களை எழுதியும், அண்ணாவியாக இருந்து நாடகங்களை நெறிப்படுத்தியும் வருபவர். ஒப்பனைக் கலையிலும் ஈடுபாடு உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச.பிரகாசம்



முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞன். சிறந்த குரல்வளம் கொண்டவர். திறமையாகப் பாடும் ஆற்றல் படைத்தவர். தரமான நடிகரான இவர், பாடல்களைப் புதுமையாக மெருகூட்டி பாடக்கூடிய சங்கீத ஞானம் உடையவர். இவர் இறைபதம் அடைந்துவிட்டார்.

## ச.குணசீலன் (ஆவணம்)



இளமைப் பருவத்தில் இருந்து மன்றத்தின் வளர்ச்சிக்காக உழைப்பவர். திறமையாகப் பாடும், நடிக்கும் ஆற்றல் உடையவர். தொடர்ச்சியாக மன்றத்து கலை, நாடக நிகழ்வுகளில் ஈடுபாட்டோடு உழைத்து வருபவர். புனித சந்தியோகுமையோர் நாடகம், புனித சில்வேஸ்திரியார் வாசாப்பு போன்ற பெரிய நாடகங்களில் அரச பாத்திரங்களை ஏற்று சிறப்பாக நடித்தவர். நாடகங்களில் உதவி நெறியாளராக இருந்து நாடகங்களை இயக்கி வருகின்ற கலைஞன். ஒரு கிராம சேவையாளர் ஆவார்.

## திருமதி. வேதநாயகம் அருளம்மா



முருங்கனைப் பிறப்பிடமாகவும் நானாட்டான் ஆவணத்தை வாழ்விடமாகவும் கொண்டவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஆரம்ப காலங்களில் கலை நிகழ்வுகளில் நடனத்தின் மூலம் சிறப்புச் சேர்த்தவர். நல்வாழ்வு நாடகத்தில் நடனம் ஆடி பெருமை பெற்றவர்.

## பா.ஆசீர்வாதம் (செல்லத்துரை)



முருங்கனைப் பிறப்பிடமாகவும் மன்னார் நகரினை வதிவிடமாகவும் கொண்ட கலைஞன். முருங்கன் முத்தமிழ் கலாமன்ற தொடக்க காலங்களில் நாடகங்களில் நடித்து சிறப்புச் சேர்த்துள்ளார். கலையார்வம் கொண்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். புலவர் பாவிலு அவர்களின் மூத்த புதல்வனாவார்.

## பீ.பொன்னம்பலம்



மன்னாரைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வாழ்விடமாகவும் கொண்ட கலைஞன். சிறந்த நிர்வாகி. ஓய்வுநிலை அரசபணியாளர் ஆவார். வீரத்தாய், புதுமைப்பெண், பரதேசிமகன் போன்ற நாடகங்களில் நடித்துப் பாராட்டைப் பெற்றவர். கலையில் ஆர்வமும், நாட்டமும் உடையவர்.

## ம.கிறகோரி



முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறப்பாக நடிக்கக்கூடிய கலைஞன். வீரத்தாய் நாடகத்தில் நடித்தவர். பிற்காலத்தில் குறும் நாடகங்களிலும், குறும் படங்களிலும் நடித்து ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்ற சிறந்த நடிகராவார்.

## திருமதி. பர்னாந்து தார்சீலம்மா



முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர். திருந்திய உள்ளம் நாடகத்தில் குணச்சித்திர நடிகையாக நடித்தவர். கலை நிகழ்வுகளில் பின்னணியில் நின்று உழைக்கின்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீ.யோவான் (முருங்கன்)



சிறப்பாக நடிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவர். கடின உழைப்போடு கலையையும் வளர்த்துக் கொள்பவர். இவரின் சிறப்பம்சம் என்னவென்றால் கடின பயிற்சிகளை மேற்கொண்டு எதிர்பார்க்கப்படும் தரத்தினை வெளிக்கொணர்பவர். வீரத்தாய், கல்சுமந்த காவலர்கள், யார் குழந்தை, வாழ்வளித்த வாஸ் போன்ற நாடகங்களில் நடித்து பலரது பாராட்டைப் பெற்று வளர்ந்துவரும் கலைஞன்.

### திருமதி. மகேஸ்வரன் சோதிமலர் (முருங்கன்)



நன்றாகப் பாடும் திறமை கொண்ட ஒரு நடிகை. பாடசாலைக் காலத்திலும் அதன் பின்னரும் பல நாடகங்களிலும் கலை நிகழ்வுகளிலும் பங்கெடுத்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டு இருப்பவர்.

### மக்சிமஸ் லெம்பட்

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மன்றத்தின் சில முக்கிய நாடக ஆற்றுகைகளில் ஒப்பனைக்குப் பங்காற்றி இருப்பவர். சிறப்பாக 1966இல் வீரத்தாய் நாடகம் கொழும்பில் கலைக்கழகப் பரிசுபெற்ற போதும், 25.04.1979இல் பிரதமர் ஆர்.பிரேமதாசா மன்னாருக்கு வருகைதந்தபோது ஆற்றுகை செய்யப்பட்ட யார் குழந்தை நாடகம் அரங்கேறியபோதும் ஒப்பனைக்குச் சிறப்பாக உதவியவர். நாடகம் எழுதியும் நெறிப்படுத்தியும் உள்ளார். ஆசிரியராக அதிபராகப் பணிசெய்து இறைவனடி சேர்ந்த கலைஞன்.

### எஸ்.எம்.சுவாந்து

சுவாந்து மடுறோட் கட்டையடம்பனைச் சேர்ந்தவர். முத்தமிழ் கலாமன்ற ஆரம்ப காலங்களில் சில நாடகங்களில் நடித்தவர். அமரத்துவம் அடைந்துவிட்டார்.

### ச.ஜாகத் அலிகான் (மன்னார்)

முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்ற ஆரம்ப காலங்களில் நடித்துப் பெருமை சேர்த்த கலைஞன். பாட்டாளிக் கந்தன், திருந்திய உள்ளம் போன்ற நாடகங்களில் சிறப்பாக நடித்தவர். இயல்பாக நடிக்கும் திறன் படைத்தவர்.

### பே.யக்கோபு (ஆவணம்)

இனிமையான பாடகரும் நடிகரும் ஆவார். மன்றத்தின் ஆரம்பகால நாடகங்கள் சிலவற்றில் நடித்தவர். 'மத்தளம்' அண்ணாவியாராகிய இவர், நாடகங்களை பழக்கியும் நெறிப்படுத்தியும் உள்ளார். அமரத்துவம் எய்திவிட்டார்.

இவர்கள் மன்றத்தின் முதல் தலைமுறையினர் எனலாம். இவர்களில் ஒருசிலர் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். ஏனையவர்கள் ஓய்வுநிலையில் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மற்றயவர்கள் இன்னும் தொடர்ந்து இயங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். மேற்சொன்னவர்களோடு தமிழகத்தில் இயக்குநராகவும் நடிகராகவும் விளங்கும் திரு.நடராசா, திரு.சிவகுரு, ஒப்பனைக்கு எப்போதும் உதவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமரர் பெஞ்சமின் ஐயா, இளமைக்காலத்தில் நாடகங்களில் பங்கேற்று காலம்சென்ற திருமதி விமலநாதன் றீற்றம்மா, செல்வன் சீ.விஜயானந்தன் ஆகியோரையும் நன்றியுடன் நினைக்கின்றோம்.

இந்த வரிசையில் வைத்து நினைவுகூரப்பட வேண்டியவர்கள்தான் புலவர் மரியான் சந்தான், அவர்மகன் ச.பாவிலு, தொ.சவிரிமுத்து (ஆவணம்), ச.பறுனாந்து (முருங்கன்), பி.யோசவ் (மன்னார்) போன்றவர்கள். புலவர் மரியான் சந்தான் அவர்கள் குழந்தை செபமாலையின் பெரிய தகப்பனார் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே புனித சந்தியோகுமையோர் முதல் இரவுக்கதையையும், புனித அருளப்பர் நாடகத்தையும், புனித சந்தியோகுமையோர் சுற்றுப்பிரகாரப் பாடல்களையும், புனிதரின் பெயரில் சில அழகான கவிகளையும் எழுதியவர். இவரே குழந்தையின் புலமைக்கு உந்துசக்தியாக இருந்து செயற்பட்டவர். அடுத்து, புலவர் ச.பாவிலு அவர்கள் புனித சில்வெஸ்திரியார், புனித அந்தோனியார், புனித யாகப்பர் ஆகிய வாசாப்புக்களையும் 'அன்னை இட்ட திலகம்' என்ற நாட்டுக்கூத்தையும் எழுதியவர் ஆவார். குழந்தையுடன் பல்வேறு வகையில் கலைப்பணியில் ஈடுபட உதவியவர். இவரே அருள்திரு கிறிஸ்து நேசரண்டம் (தமிழ்நேசன்) அவர்களின் தந்தையாவார்.



*வி.நீற்றம்மா*

இன்னும், என் தந்தையார் அமரர் தொ.சவிரிமுத்து, என் மைத்துனர் ம.பறுனாந்து போன்றவர்கள் நல்ல மனம்படைத்த கலை ஆர்வம் கொண்ட பெரியவர்கள் ஆவர். தங்கள் தாராள உள்ளத்தால் தியாகத்தால் மன்றத்தை வளர்க்க உதவிய பெருந்தகைகள் இவர்கள். இவ்வாறு பலரின் ஒத்துழைப்புக்களும் ஊற்சாகப்படுத்தல்களும் குழந்தையின் கலைவாழ்வில் பல உயரிய மேன்மைமிக்க சாதனைகளைப் படைக்க வழிகோலிநின்றன. அவர்களை எல்லாம் நன்றியோடு நினைவுகூருகின்றோம்.



*ச.பாவிலு*

மேலும், ப.தேவராசா, ப.சந்தியோகு (மனோகரன்), ப.அற்புதரா ா, சீ.இசிதோர், அ.யூட் புனிதராஜ் (செல்வம்), மி.அமலதாஸ், சீ.ஜெயசீலன், சி.நித்தியானந்தன், ப.றெனாட் தயானந்தன், ப.அன்ரன் அஜந்தறூபன், அ.அமிர்தராஜன், யோ.அமலநாதன் (ஜீவன்), தா.டெனில், திருமதி இம்மனுவற்பிள்ளை யுஸ்தினா, தேவதாசன் பிலோமினா (றதி), திருமதி பாலச்சந்திரன் சாந்தினி, பி.றேசலின், திருமதி சுரேந்திரன் ஜெயமலர் (வளர்), திருமதி செந்தில்குமார் நீருஜனி, திருமதி யூட் புனிராஜ் (கில்டா), திருமதி திருமகன் லின்டா சகாயமலர், ம.அனிற்றா அருள்ராணி, திருமதி சந்தியோகு திருமகள், திருமதி ஒஸ்மன் சாள்ஸ் மலர்விழி, திருமதி நிக்ஸ்ன் கயல்விழி, ச.திவின் சாகித்தியன்... போன்றவர்களையும் குறிப்பிட விரும்புகிறோம். இளம் தலைமுறையினராகிய இவர்கள் தொடர்ந்து கலைப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடுவதை எண்ணி மகிழ்கிறோம், பாராட்டுகிறோம்.



*தொ.சவிரிமுத்து*

அதேவேளை, பிரான்ஸ் நாட்டில் வாழும் எமது பிள்ளைகளான ஆனந்தன், இன்பன், ராஜன், பிரபு, செலின் போன்றவர்கள் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து எமது புலம்பெயர் மக்களிடையே ஆற்றிவருவதை மகிழ்ச்சியோடு எண்ணி நிறைவடைகிறோம். இறைவனுக்கு நன்றிகூறுகிறோம்.



*ச.பறுநாந்து*



பிரான்சில் நம் கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியவாதிக்கோர் இலக்கணம்

**எம். எம். சியான்**
M.Sc.,M.Ed.(Jaffna)
*வித்தியாதீபம், சேவாஜோதி*
*வலயக் கல்விப்பணிப்பாளர்*
*மன்னார்.*



**மா**தோட்டக் கலைக்கோர் செபமாலை
மன்னார் மண்ணுக்கின்று புகழ்மாலை.
அண்ணாவி செபஸ்தியான் அறிவாலே
விண்ணுயரக் குழந்தைக்கு புகழ்மாலை.

சங்கீதம் நடனம் நாடகம்
சரித்திரத்தில் நிலைத்த நாட்டுக்கூத்து
சங்கத் தமிழ் கிடைத்த நாயகன்
இலக்கியவாதிக்கோர் இலக்கணம்.
குழந்தைக்கு வெள்ளை மனம்
குழந்தைக்குப் பிள்ளை மனம்
சீர்காழியாய், தியாக ராஜனாய்
சின்னப்பா தேவராய் வடிவெடுப்பார்
வாய் திறந்து பாடி அவர்களுக்கு
உயிர் கொடுப்பார்.

மேடைகளில் பேசுவார்
கோயில்களில் பாடுவார்
நாடகம் தயாரித்து
நடித்தும் காட்டுவார்
சமூக நாடகம் சரித்திர நாடகம்
சமய நாடகம் வசன நாடகம்
கட்டுரை கவிதை எல்லாம்
கட்டுருவாகிக் குழந்தைக்
கடலில் அலையாய் வீசும்
எழுபது நாடகம் தொன்னூறு கல்வெட்டு
எண்ணிலடங்கா பிரியாவிடைப் பாடல்
நல்லாசான் பணியில் நாமறிந்த உண்மை

இத்தனைக்கும் சொந்தமான அதிபர் செபமாலை இன்றும் குழநதை. வெள்ளை மனம், சிரித்த முகம், சீரிய உயர் பண்பு, மக்களை அரவணைக்கும் மாண்பு, அடக்கம், அர்த்தமுள்ள பார்வை, நேரிய நடை, வீரிய மொழி நடை, சமூகச் சீர்கேடுகளை சாத்வீக வழியில் வெல்ல நினைக்கும் போக்கு! இத்தனை அம்சங்களையும் கூத்துக் கலையால் இலங்கையில் இருந்து பாரிஸ் வரை பரிணமிக்கச் செய்த பெருமகன்.

கலைகள் மனித வாழ்வின் நிஜங்கள். கலைஞர்கள் நிஜங்களை நிதர்சனமாக்கும் சிற்பிகள். நான் கண்ட குழந்தை கலைக் குடும்பத்தின் வாரிசு. இவரது சகோதரர் கலாபூஷணம் மாசிலாமணி ஆளுநர் விருது பெற்ற கலைஞன். சகோதரர் யேசுதாசன் மிருதங்கம் வாசிப்பதில் வல்லவர். அருட்சகோதரி எலிசபத் தேசிய பாடசாலை அதிபராக இருந்து கலையையும், கல்வியையும் வளர்த்தெடுப்பவர். குழந்தை தன் பிள்ளைகளையும் கலையுடன் இணைத்த பெருமைக்குரியவர். திருமகள், மலர்விழி நல்லாசிரியைகள். திருமகள் நாடகமும் அரங்கியலும் போதிப்பதில் வல்லவர். கயல்விழி வங்கி ஊழியர். மருமக்கள் அதிபராக, வைத்தியக் கலாநிதியாக இருப்பினும் கலை வளர்க்கும் காவலர்களாக திகழ்வதை அவதானிக்க முடிகின்றது.

இவரது மகன் ஆனந்தன், இன்பன் ஆகியோர் பிரான்சில் வாழ்கின்ற போதிலும் தந்தையின் கலைவளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்து உதவுவதைக் காணமுடிகின்றது. குரு மட அதிபர் அன்புராசா அவர்கள் சமயப் பணிகளுக்கு மத்தியிலும் பல நூல்களை எழுதியதோடு, தந்தையின் கலைவாழ்வு பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரத்தை, சாதனைகளை நூல் வடிவாக்கம் செய்யும் பணியில் தன்னை இணைத்துள்ளார்.

நாற்பதில் பிறந்த குழந்தை ஐயா, அறுபத்து மூன்றில் அதாவது இருபத்து மூன்று வயதிலே திருமணம் செய்த கலைஞன். கலைஞனுக்கு இதுவும் ஓர் அழகுதான். அவரது மனைவி றோஸ்மேரி. இந்த ரோஜாதான் குழந்தை ஐயாவை இன்றுவரை ராஜாவாக வைத்திருக்கும் கலைமகள். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். ஒரு கலைக் குடும்பத்தின் ஒளிவிளக்காய், உயிர் நாடியாய் றோஸ்மேரியம்மா இருந்து வழிநடாத்திய பாங்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆரவாரமில்லாத சாதனைகளின் தாயாக அவரைக் காண்கின்றேன்.

கலையும் பண்பும் முருங்கன் மண்ணிலிருந்து முழு இலங்கைத் தீவிற்கும் பரவும் வகை செய்த கலைச் செம்மல் குழந்தை அவர்கள், ஆளுனரை, அமைச்சர்களை வாழ்த்தி வில்லிசைப்பதில் வல்லவராகவும் திகழ்ந்தார். மாற்றங்களுக்கேற்ப மானுட மனங்களை ஆற்றுப்படுத்தும் இவரது கலைப் பணிகளைப் பின்பற்றி நாமும் முன்னேற முயல்வோமாக. இவரால் உருவாக்கப்பட்ட நாடகங்கள் கூத்துக் கலைகள், கலாசாலைகள், கலாமன்றங்கள் மூலம் உயிரூட்டப்படல் வேண்டும். ஏனெனில் ஓர் இலக்கியவாதிக்கு ஓர் இலக்கணமாகக் குழந்தை ஐயாவை நான் பார்க்கின்றேன். ■

**அதிபர் உயர்திரு. மக்சிமஸ் லெம்பட்**

**முருங்கன் மகா வித்தியாலயத்தில் 1979ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01ஆம் (முதலாம்) திகதி நடந்த பரிசளிப்பு விழாவின் போது மன்னார் மாவட்ட அமைச்சர் உயர்திரு எம்.ஈ.எச்.மஹ்றூப் பிரதம விருந்தினராகச் சிறப்பித்திருக்கிறார்.** அப்போதைய அதிபர் திரு.மக்சிமஸ் லெம்பட் அவர்களால் அதிபர் அறிக்கை வாசிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் மாணவர், பரீட்சை உயர்தர வகுப்புக்கள், கட்டட உபகரணம், நீர்த் தொட்டி, தளபாடங்கள், விளையாட்டு, கலை, சாரண சாரணிய இயக்கங்கள், சமயம், கழகங்கள், ஆசிரியர் குழாம், பாடசாலை மாணவர்கள், தேவைகள் ஆகிய தலைப்புக்களில் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்.

இவ்வறிக்கையின் இரு இடங்களில் திரு.செ.செபமாலை (குழந்தை) ஆசிரியர் அவர்களைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். கலை என்ற உபதலைப்பில், "மன்னார் மாவட்டத்தில் கலையைப் பொறுத்தளவில் அதாவது இயல், இசை, நாடகம் என்ற முத்துறையிலும் முருங்கன் மகா வித்தியாலயம் முன்னணியில் திகழுகின்றது" எனத் தொடங்கி, "எனது பாடசாலையில் கலையின் உன்னத வளர்ச்சிக்கு முதன்மையாக நின்று உழைத்துவரும் அகில இலங்கைப் புகழ் பெற்ற குழந்தை ஆசிரியர் எனது உதவி அதிபர் திரு.செபமாலை அவர்களையும் இந்நேரத்தில் பாராட்டுகிறேன்" என அப்பகுதியில் குறிப்பிடுகிறார்.

இதே அறிக்கையில் ஆசிரியர் குழாம் என்ற பகுதியில் இரண்டாம் தடவையாக, "எனது ஆசிரியர் குழாமினை நான் நினைக்கும் போது பூரண திருப்தி உள்ளவனாக இருக்கிறேன். இவர்களனைவரும் என் தலைமையின் கீழ் மிகவும் ஒற்றுமையாகவும் அமைச்சலுடனும் செயல்ப்படுவதையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன். எனது உதவி அதிபர் திரு.செ.செபமாலை எனக்கு பக்கபலமாக எனது காரியங்கள் அனைத்திலும் கைகொடுத்து உதவி வருவதற்கு நான் என்றும் அவருக்கு நன்றியுடையவன்" என இவரின் பணிவையும், ஆசிரிய அர்ப்பண சேவையையும் கோடிட்டுக் காட்டிப் பாராட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நதியின் இடையறாத பாய்ச்சலாக ஓடிய கலைஞர் குழந்தை



**தமிழ்நேசன் அடிகள்**
B.Th.(Rome)
*'மன்னா' ஆசிரியர்,*
*'மறையருவி' இயக்குநர்,*
*மன்னார்.*

**க**லைஞர் குழந்தை ஒரு கரு (கலை) மேகம்! கடந்த ஐம்பது ஆண்டுகளாக மழை பொழிந்த இந்த மேகம் இன்று ஓய்வுகண்டுள்ளது. கலைஞர் குழந்தை ஒரு நதி! இடையறாத பாய்ச்சலாக ஓடிக்கொண்டிருந்த அந்த நதி இன்று தேக்கம் கண்டுள்ளது. அதேவேளை அந்த மேகம் மழைபொழிந்த இடங்கள், அந்த நதி பாய்ந்து பரவிய இடங்கள் இன்று செழிப்புற்று பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

காலம் தன் கடமையைச் சரிவரச் செய்து கொண்டிருக்கின்றது. இலட்சிய வேட்கையோடு இடையறாது இயங்கிக் கொண்டிருந்த பலர் காலத்தின் கட்டளைக்குப் பணிந்து சாய்வு நாற்காலியில் ஓய்ந்து கிடக்கின்றார்கள். கலைஞர் குழந்தையும் அந்த வரிசையில் இணைந்துவிட்டார்.

கலைஞர் குழந்தையினது வாழ்வையும், பணியையும் பதிவுகளாக்கவேண்டும் என்று எடுக்கப்பட்ட இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை தமிழ் கலை இலக்கிய வரலாற்றுப் பின்புலத்திலிருந்து நோக்கினால்தான் புரிந்து கொள்ள முடியும். தமிழில் இலக்கியப் படைப்புக்கள் பெற்ற முக்கியத்துவத்தை இலக்கியப் படைப்பாளிகள் பெறவில்லை. சங்க காலம் தொடக்கம் இன்றுவரையும் இதுதான் நிலைமை. உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த ஒப்பற்ற தமிழ் இலக்கியமாகிய திருக்குறள் பெற்ற முக்கியத்துவத்தை திருவள்ளுவர் பெறவில்லை. காரணம் திருவள்ளுவர் எத்தனையோ விடயங்களைப் பற்றி எவ்வளவோ எழுதிவைத்தார். ஆனால் தன்னைப்பற்றி எதையுமே அவர் எழுதிவைக்கவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களும் திருவள்ளுவரைப் பற்றி எந்தக் குறிப்பையும் எழுதிவைக்கவில்லை. இதனால் திருவள்ளுவரைப் பற்றிய ஒருசில 'கட்டுக் கதைகள்'தான் உலவுகின்றன. இந்த நிலைமைதான் பெரும்பாலான புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளன. எனவே கலைஞர் குழந்தை அவர்களின் கலை உலக வாழ்வைப் பதிவுசெய்வதென்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

அவருடைய வாழ்வும் பணியும் ஒரு திறந்த புத்தகமாக உள்ளது. இதிலிருந்து இன்றைய இளம் சந்ததியினர் பல வாழ்க்கைப் பாடங்களைப் படிக்கலாம்.

நான் குருத்துவக் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்து பயிற்சி பெற்ற காலங்களிலும் சரி, குருவாக வந்த ஆரம்ப நாட்களிலும் சரி, என்னை, எனது ஊரை, எனது பின்புலத்தை அறியாதவர்கள் அதை அறியும் ஆவலோடு "நீங்கள்...?" என்று கேள்வி எழுப்பினால் சுற்றிவளைக்காமல் சுருக்கமாக என்னை அறிமுகப்படுத்த, அடையாளப்படுத்த நான் சொல்வது, "முருங்கன் குழந்தை மாஸ்ரர் எனக்கு சித்தப்பா முறை" என்பதாகும். இந்த அறிமுகத்தோடு அவர்கள் **'எல்லாவற்றையும்'** புரிந்துகொள்வார்கள்.

நான் சிறுவனாக இருந்தபோது குழந்தை மாஸ்ரர் இரவுப் பொழுதுகளில் எமது வீட்டிற்கு வந்து எனது தந்தையாருடன் மணிக்

கணக்காகப் பேசிக்கொண்டிருப்பார். அந்த வயதில் அவர்களுடைய உரையாடலின் முழு விபரங்களும் எனக்குப் புரிய நியாயமில்லை. குழந்தை மாஸ்ரர் ஆசிரிய மாணவனாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் படிக்கின்ற காலம் தொட்டே விடுமுறைக்காக வீட்டிற்கு வரும் பொழுது தவறாமல் எனது வீட்டிற்கு வருவார் என்பதை எனது தாயார் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

அந்த வகையில் எனது குடும்பத்தினரும் நானும் அவரோடு கொண்டிருந்த உறவையும் தொடர்பையும் வெளிப்படுத்துவதாக இக் கட்டுரை அமைகின்றது.

எனது பாடசாலைக் காலத்தில் அவருடைய கலைப் பயணத்தில் நானும் ஒரு சிறு பையனாக இணைந்திருந்த அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன். நான் முதல் முதலில் கொழும்புக்கு சென்றதும், திருகோணமலைக்கு சென்றதும் இவருடன்தான்.

அது 80களின் தொடக்கம். அருட்தந்தை பி. யேசுறாஜா அடிகளார் முருங்கன் பங்குத்தந்தையாக இருந்த காலம். இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதி! நான் முருங்கன் பங்கு ஆலய பீடப்பணியாளர் சபை யில் இணைந்து இருந்தேன். அப்போது இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி மற்றும் கத்தோலிக்க சிறுவர் உலகம் ஆகிய நிகழ்ச்சிகளை செய்து கொண்டிருந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த மலர் வேந்தன் (இன்றுவரை அவர்தான் செய்கின்றார்). அருட்தந்தை யேசுறாஜா அடிகளாரின் வேண்டுகோளின் பேரில் குழந்தை மாஸ்ரர் பீடப் பணியாளர்களுக்கு ஒரு வானொலி நாடகம் பழக்கி னார். அந்த வானொலி நாடக ஒலிப்பதிவுக்காகவே நானும் சக மாணவர்களும் முதன் முதலாக கொழும்பு சென்றோம். இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன வளாகத்துக்குள், கட்டடத்திற்குள் போன போதுதான் குளிரூட்டப்பட்ட அறை (A/C Room) எப்படி இருக்கும் என்பதை முதன் முதலாக தெரிந்து கொண்டேன்.



முருங்கனில் இருந்து புகைவண்டி ஊடாக கொழும்பு சென்ற நான் தலைநகரின் தனித்துவமான அதிசயங்களை ஆச்சரியத்தோடு பார்த்தேன், பரவசப்பட்டேன். இன்று நூற்றுக்கணக்கான தடவைகள் கொழும்புக்கு போய்வந்தாலும் அன்றைய சிறுவயது முதல் பயணம் - குழந்தை மாஸ்ரர் அழைத்துச் சென்ற அந்தப் பயணம் - இன்றும் என் மனக் கண் முன் பசுமையாகவே உள்ளது.

முருங்கன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது தமிழ்த்தின போட்டிக்காக குழந்தை மாஸ்ரர் எமது வகுப்பு மாணவர்கள் சிலருக்கு 'குழுப்பாடல்' பழக்கினார். நான் உட்பட அக்குழுவில் இடம்பெற்றவர்கள் பெரிய பாடகர்கள் அல்ல. ஆனாலும் எப்படியோ அக்குழுப்பாடல் மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியது. "ஆனந்தம் பெற்று மகிழ்வோம்" என்ற அந்த கர்நாடக பாடலின் தொடக்க அடிகள் இன்றும் மனதில் நிற்கின்றது. மாகாண மட்ட போட்டி திருகோணமலையில் இடம்பெற இருந்தது. குழுப்பாடல் பயிற்சி மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. "ஒழுங்காக பாடல் பயிற்சிக்கு வராவிட்டால் திருகோணமலைக்குக் கூட்டிக்கொண்டு போகமாட்டேன்" என்று அவர் அடிக்கடி கூறும் எச்சரிக்கை வார்த்தை எம்மை கதிகலங்கச் செய்யும். பாட்டுப் போட்டியில் இடம் எடுப்பதல்ல எமது அக்கறை. திருகோணமலைக்கு போவதுதான் எமது இலட்சியம். அந்த வாய்ப்பை தவற விட்டுவிடக் கூடாது என்பதற்காக ஒழுங்காக எல்லாரும் பயிற்சிக்கு வந்தார்கள். திருகோணமலைக்கு புகைவண்டியில் பயணமானோம். போட்டியில் பங்கெடுத்தோம். இடம் கிடைத்ததைப் பற்றி நினைவில்லை (இடம் கிடைத்திருந்தால் நிச்சயம் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கும்). திருகோணமலையில் திரையரங்கில் "காதலிக்க நேரமில்லை" என்ற படம் பார்த்த நினைவு அப்படியே பசுமையாக இருக்கிறது.

குருமடத்திற்கு செல்லவேண்டும் என்ற எண்ணம் - ஆசை சிறுவயதுமுதலே எனக்குள் இருந்தது. ஆனால் எப்போது சேர்வது, எங்கே சேர்வது, எப்படிச் சேர்வது என்ற விபரங்கள் எல்லாவற்றையும் நான் அறிந்திருக்கவில்லை. எனது வகுப்புத் தோழன் ஒருவர் குருமடத்திற்கு போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தபோது அதை அறிந்த குழந்தை மாஸ்ரர் என்னை அழைத்து எனது குருமட நுழைவு பற்றி விசாரித்தார். எனது வகுப்புத் தோழன் குருமடத்திற்கு போக ஆயத்தம் செய்த விடயம் எனக்குத் தெரியாது. குழந்தை மாஸ்ரர்தான் அதுபற்றி எனக்குத் தெரிவித்து நானும் அந்த வருடமே குருமடத்தில் சேர என்னை ஊக்குவித்தார்.

சிறிய குருமடத்தில் படிக்கும் காலத்திலும்சரி, பெரிய குருமடத்தில் படிக்கும் காலத்திலும் சரி விடுமுறைக்காக நான் வீடு வரும்போது ஒவ்வொரு தடவையும் நான் அவரைச் சென்று சந்திப்பது வழக்கம். அப்போதெல்லாம் அவர் நிறைய அறிவுரைகள் கூறுவார். சந்திப்பின் முடிவில் நான் விடைபெற்றுச் செல்லும்போது மறக்காமல் எனக்கு பணமும் தந்து அனுப்பிவிடுவார்.

எனது தியாக்கோன் பட்டத்திற்கு முன் அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் நான் வாழும் சமுதாய அமைப்பின் தன்மையை இனங்காட்டியிருந்தார். அத்துடன் என் மட்டிலான தனது நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். அவருடைய அக்கடிதம் என்னை நம்பிக்கையின் எல்லைக்கோடுகளுக்கு இழுத்துச் சென்றது எனலாம். 15 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட அக்கடிதம் இன்றும் எனது கோப்பு ஒன்றினுள் உயிர்த்துடிப்போடு ஒளிந்து கொண்டிருக்கின்றது. அது இதுதான்:

> "அன்புள்ள மகனுக்கு, 07.01.1997இல் நீர் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்படுவது கண்டு முதலில் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். எமது சமுதாயத்தில் முதல் குருவாக இருக்கின்ற உமக்கு எல்லா நலன்களையும் நல்ல அருளையும் இறைவன் அளிப்பாராக! சாதி வெறிபிடித்த சமுதாய அமைப்பில், நசுக்கப்பட்ட கூட்டமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நமது மத்தியில் நீர் திருநிலைப்படுத்தப்பட்டு உயர்வடையும் நிலை பலருக்கு பலவித தாக்கங்களைக் கொண்டுவரும். எனவே நீர் உண்மையின் ஒளிவிளக்காக, உன்னத தேவனின் அருட்சோதியாக விளங்குவீர் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு..."

**முருங்கனின், மன்னார் மாதோட்டத்தின் கலை வளத்திற்கு குழந்தை மாஸ்ரர் ஒரு அடையாளத்தைப் பெற்றுத்தந்தார். அந்த வகையில் அவர் முருங்கனின், மன்னார் மாதோட்டத்தின் முகவரியாகத் திகழ்கின்றார். "கால் மணிக்குள் கல்வெட்டு, விரல் நுனியில் நல் மெட்டு" என்று இவரைப் பற்றி எழுதப்பட்ட கவி வரிகள் உண்மைதான்.**

குருவாக வந்தபின்னரும்கூட முருங்கன் பக்கம் பணியின் நிமித்தம் செல்லும்போதெல்லாம் அவரை நான் சென்று பார்ப்பது வழக்கம். அந்த வேளைகளில் எல்லாம் நாம் இருவரும் பல விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவோம். தனது காலத்திற்குப் பின்னர் முருங்கனின் இந்தக் கலைப் பணிகளை யார் முன்னெடுப்பார்? என்ற ஆதங்கம் அந்தவேளைகளில் அவரிடம் இருந்ததை நான் அவதானித்தேன்.

90களில் மன்னார் மாவட்டம் முழுவதும் இடம்பெயர்ந்து இந்தியாவுக்கும் மடுவுக்கும் சென்ற காலம் அது. முருங்கனில் இருந்த எனது வீட்டாரும் மன்னாரில் இருந்த எனது சகோதரங்களின் குடும்பத்தினரோடு இணைந்து இந்தியாவிற்கு செல்வதற்காக அவசர அவசரமாக முருங்கனில் இருந்து வெளியேறினர். காட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை கடல் பாதையென பல 'கள்ளப் பாதைகள்' ஊடாக முருங்கனில் இருந்து மன்னாருக்குச் சென்றனர். கையில் தூக்கக்கூடிய அளவு பொருட்களை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக (எகிப்தில் இருந்து இஸ்ராயலர் புறப்பட்டது போன்று) வெளியேறினர். பெறுமதியான பல பொருட்களை வீட்டிலே விட்டுவிட்டுத் தான் அவர்கள் சென்றனர். எனது தந்தையாரின் விலைமதிப்பற்ற நாடகக் கொப்பிகளும் அதில் அடங்கும். ஒரு கலைஞனுக்குத்தான் இன்னுமொரு கலைஞனின் உணர்வுகள் மற்றும் உழைப்பின் பெறுமதி விளங்கும் அல்லவா? எனது குடும்பத்தினர் வீட்டைக் காலிசெய்து விட்டு சென்ற சில நாட்களுக்குப்பின், "சீனியண்ணனின் (எனது தந்தையாரை அவர் அப்படித் தான் அழைப்பார்) நாடகக் கொப்பிகளை வீட்டுக்காறர் கொண்டுபோய் இருக்க மாட்டார்களே" என்று சிந்தித்த குழந்தை மாஸ்ரர் எனது வீட்டிற்கு சென்று அந்தக் கொப்பிகளைக் கண்டுபிடித்து எடுத்து - பக்குவமாகக் கட்டி - தனது வீட்டில் பல ஆண்டுகள் அவற்றை வைத்துப் பாதுகாத்து எனது தம்பியிடம் அவற்றைக் கையளித்தார். அக்கொப்பிகள் இப்போது எனது பாதுகாப்பில் உள்ளன. அந்த நாடகங்களை ஒரு நூலாகத் தொகுக்கின்ற முயற்சிகளை நாம் செய்துகொண்டிருக்கின்றோம்.

ஒரு வீடு அழிந்தால் மீண்டும் கட்டி எழுப்பி விடலாம். காணி, பூமி, சொத்து சுகங்களை இழந்தால் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரு புலவனின் எழுத்துப் பிரதிகள் அழிந்துபோனால் மீண்டும் பெறமுடியுமா? இப்படிப்பட்ட இழப்புக்களைத்தானே 'ஈடுசெய்ய முடியாத இழப்புக்கள்' என்று அழைக்கின்றோம். எனது தந்தையாரின் எழுத்துப் பிரதிகளை மீட்டுத்தந்த அந்த கைங்கரியத்தை நானும் எனது குடும்பத்தினரும் எக்காலத்திலும் மறக்க மாட்டோம்.

எந்த ஒரு வெற்றியாளனுக்கும் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்ற உண்மை இவருக்கும் பொருந்தும். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்தானே! இவருடைய அன்பு மனைவி இவருடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்த இணைபிரியாத துணைவி. 'வாழ்க்கைத் துணைவி' என்பதற்கு வரைவிலக்கணம் இவர்தான். அன்பும், அக்கறையும் கொண்ட தாய்க்குலத்தின் முகவரி அவர். உண்மையில் அவருடைய தாய்மைக்குரிய உயர்ந்த பண்புகளைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். சிக்கலான, சிரமமான விடயங்களைக்கூட பண்பாக, பக்குவமாக, பிறர் மனம் நோகாமல் எடுத்துரைக்கும் - இன்றைய உளவியலாளர்கள் சிலாகித்துப் பேசும் "வன்முறையற்ற தொடர்பாடல்" (Non – Violent Communication) கலையை இவர் அன்றே அறிந்திருந்தாரோ என எண்ணத் தோன்றுகிறது.

கலைஞர் குழந்தையின் கலையுலக சாதனைகளைப்பற்றி பலரும் வியந்து, நயந்து பேசும்போது கலைக்காக அவர் கொடுத்த விலையைப்பற்றி பெரும்பாலும் எண்ணிப் பார்ப்பதில்லை. அவருடைய நீண்ட நெடிய கலைப்பயணத்தில் ஒரு பக்கம் பேரும் புகழும் வந்து குவிந்தாலும் மறுபக்கம் அவர் சுமந்த சிலுவைகளும் சிக்கல்களும் அநேகம். அவர் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள், அவருக்கு அவ்வப்போது ஏற்பட்ட சுகவீனங்கள், அவருடைய கலை முயற்சிகளுக்கு போதிய ஒத்துழைப்பு கிடைக்காதபோது அவர் அனுபவித்த மன அழுத்தங்கள் என அவர் நடந்த சிலுவைப் பாதையில் சீரேன் ஊர் சீமோனாக அவருடைய துணைவியாரும் அவருடைய சிலுவைகளைத் தூக்கி நடந்தார்.

முருங்கனின், மன்னார் மாதோட்டத்தின் கலை வளத்திற்கு குழந்தை மாஸ்ரர் ஒரு அடையாளத்தைப் பெற்றுத்தந்தார். அந்த வகையில் அவர் முருங்கனின், மன்னார் மாதோட்டத்தின் முகவரியாகத் திகழ்கின்றார். "கால் மணிக்குள் கல்வெட்டு, விரல் நுனியில் நல் மெட்டு" என்று இவரைப் பற்றி எழுதப்பட்ட கவி வரிகள் உண்மைதான். அவருடைய கலைப் படைப்புக்கள் காயப்பட்ட மனதிற்கு நல்ல மருந்தாகும். அவரிடம் இருப்பது ஏராளம், அவருடைய மனமும் தாராளம்.

நீங்கள் வளமான ஓர் ஆறு
எங்களுக்குக் கிடைத்த பெரும் பேறு
வாழவேண்டும் வருடங்கள் நூறு. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண்ணுக்கு முகவரிதந்த குழந்தை செபமாலையின் நாடகங்கள்

**- ஒரு பார்வை -**

**யோ. யோண்சன் ராஜ்குமார்**
B.A.(Jaffna)
நாடக கலாவித்தகர், நாடக வித்தகர்,
பிரதி இயக்குநர்,
யாழ்.திருமறைக் கலாமன்றம்



ஈழ மண்ணில் கலைக்குப் புகழ் பெற்ற பிரதேசங்களில் மாதோட்டமும் ஒன்று. மன்னார் என்று அழைக்கப்பட்டாலும் மாதோட்டம் என்ற தொன்மைப்பெயரால் அடையாளப்படுத்தப்படும் இப்பிரதேசம், பல புலவர்களை, கலைஞர்களை, இம் மண்ணிற்கு ஈந்த பிரதேசமாகும். லோறஞ்சுப்புலவர், சந்தியோகுப்புலவர், வெள்ளைப்புலவர், குருகுல நாட்டுத்தேவர், கித்தாம்பிள்ளைப் புலவர்... என்று 17ஆம் நூற்றாண்டில் இருந்து எத்தனையோ புலவர்களைத் தந்த இந்த மண்ணின் மரபு வேரூற்றில் இருந்து "மரியான் சந்தான்" என்ற புலவரின் பெறாமகனாகவும், திரு. செபஸ்ரியானின் மகனாகவும், முருங்கன் பிரதேசத்தில் தோன்றிய 'குழந்தை' செபமாலை அவர்கள் ஐந்து வயதிலேயே நாடகத்துறையில் நடிகனாக நுழைந்தவர். ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக பல்வேறு பாடசாலைகளிலும் பணியாற்றிய அதே வேளை, கலையை தன் ஜீவ மூச்சாகக் கொண்டு கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஓய்வின்றி கலைச் சேவை புரிந்து வருபவர். நடிகனாக, நாடக ஆசிரியனாக, நாடகத் தயாரிப்பாளனாக, நெறியாளனாக, பாடகனாக, இசைக் கலைஞனாக, கவிஞனாக, இலக்கிய கர்த்தவாக, பன்முக ஆளுமைகளுடன் பணியாற்றி வரும் இவரது கலைச்சேவைகளினாலும், ஆளுமைகளாலும் மன்னார் மண் மகிமை பெற்றுள்ளமையை யாரும் மறுக்கமுடியாது. பதியப்பட வேண்டிய இவரது வரலாற்றுச் சுவடுகளில் இவரால் எழுதி நெறிப்படுத்தப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களும் மிக முக்கியமான முதுசங்களாகும். அந்நாடகங்கள் சிலவற்றை தேர்ந்து, அவற்றின் பால் ஒரு மேலோட்டமான பார்வையைச் செலுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குழந்தை செபமாலையின் நாடகங்கள்

பல்வேறு கலைச் செயற்பாடுகளிலும் இவர் கால்பதித்துச் செயற்பட்டாலும் 'நாடகம்' தான் இவரது ஆதார சுருதி. தான் மட்டுமன்றி தனது சகோதரர்கள், சகோதரிகள், மனைவி, பிள்ளைகள் என அனைவரையும் தன்னோடு உடன் பங்காளிகள் ஆக்கிக் கொண்டு தனது நேரங்கள், பொருளாதாரம் போன்ற அனைத்தையும் நாடக் கலைக்கான சேவையாக அர்ப்பணித்து அறுபது வருடங்களுக்கு மேல் இடையறாத் தொடர்ச்சியுடன் இயங்கிவரும் இவருக்கு 'நாடகம் ஒரு தவம்' என்று தான் கூறமுடியும். அறுபதுகளுக்குப் பின்னர் மன்னாரின் நாடகமென்றால் அது 'குழந்தை மாஸ்டரின்' நாடகங்கள் தான் என்று சொல்லப்படுமளவுக்கு அவை மன்னார் மாவட்டத்திலும், மாவட்டம் கடந்தும் புகழ் பெற்றன. நாடகத்துறையில், நடிகனாக, நாடக ஆசிரியனாக, நெறியாளனாக பல்வேறு தளங்களிலும் இயங்கிய இவரது ஒவ்வொரு ஆளுமைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புனித சில்வேஸ்திரியார் வாசாப்பு, 04.09.2012இல்...

வேண்டியவை. அந்த வகையில் இக்கட்டுரையினூடாக அவரது 'நாடக எழுத்தாக்கப் பணியை' அவர் ஆக்கிய நாடக எழுத்துருக்களினூடாக ஒரு பார்வைக் கோணத்திற்குட்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ள குழந்தை செபமாலையின் அறுபதுக்குட்பட்ட நாடகப் பிரதிகளே கிடைக்கப்பெற்றுள்ளன. அவை முழுவதையும் ஆழமாக நோக்குவதென்பது சாதாரணமானதல்ல. எனவே அவை பற்றிய மேலோட்டமான பார்வை வீச்சினூடாக அவரது நாடகங்களின் முக்கியத்துவங்களை முன்வைக்க விரும்புகின்றோம்.

இவரது நாடகங்கள் பல்வகைத் தன்மையானவையாகவும், காலத்தோடு பேசியவையாகவும் காணப்படுகின்றன. அதனால் அவரது நாடகங்களை அவற்றின் வடிவம் சார்ந்தும், அவை பேசும் பாடுபொருள் சார்ந்தும் இருவேறு தளங்களில் நோக்க முயலுகின்றோம்.

## குழந்தை செபமாலை கையாண்ட நாடக வடிவங்கள்

அறுபதுகளில் இருந்து பல்வேறு நாடகங்களையும் படைத்துவரும் இவர் தனக்கென்று தனியே ஒரு வடிவத்தினை கையாண்டவரல்ல. காலத்தோடும், மக்களின் ரசனைகளோடும் தொடர்புபட்டு நியமங்களாக புகழ் பெற்றிருந்த எல்லா வடிவங்களையும் கையாளக்கூடிய ஆளுமை பெற்றிருந்தார். அறுபதுகளுக்குப்பின் செல்வாக்குப் பெற்றிருந்த எல்லா நாடக வடிவங்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். அவர் கையாண்ட நாடக வடிவங்களை பின்வருமாறு நோக்க முடியும்.

### 01. இயற்பண்பு நாடகங்கள் / கலையரசு சொர்ணலிங்கத்தின் பாணியிலமைந்த நாடகங்கள்

இவர் ஒரு நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தில் பிறந்த கலைஞனாக இருந்த போதிலும், இவரது ஆரம்ப கால நாடக ஆக்கங்கள் இயற்பண்பு சார்ந்த நாடக ஆக்கங்களாகவே காணப்படுகின்றன. அதற்கு காரணம்: ஈழத்தில் நவீன நாடக வடிவம் என அழைக்கப்பட்டது. கலையரசு சொர்ணலிங்கம் அறிமுகம் செய்த இயற்பண்பு நாடக வடிவமாகும். பம்மல் சம்பந்த முதலியாரை பின்பற்றிய கலையரசு சொர்ணலிங்கம் தனது லங்கா சுபோத விலாச சபையினூடாக உரை நடைசார்ந்த இயற்பண்பு நாடகங்களை மேடையேற்றிய போது அது கல்வி சார்ந்த மத்தியதர வர்க்கத்தினால் அதிகம் மதிக்கப்பட்டது. நீண்ட காலத்தில் இப்போக்கே பிரதான போக்காகவும் காணப்பட்டது.

குழந்தை செபமாலை அவர்கள் முதன் முதலில் எழுதி நெறிப்படுத்திய நாடகமாக 'பாட்டாளிக் கந்தன்' நாடகத்தினைக் குறிப்பிடுவார். அந்நாடகம் மட்டுமன்றி, இப்படியும் மனிதர்கள், அல்லி, கண்ணகி, நல்வாழ்வு போன்ற பல நாடகங்களை இம்மரபுக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். இத்தகைய நாடகங்கள் கதாநாயகர்களை மையப்படுத்திய கதைப் பொருளைக் கொண்டதாகவும், உரையாடல்களில் செம்மையான மொழிப் பிரயோகம் கையாளப்பட்டும், பொருத்தமான இடங்களில் பாடல்கள் வரப்பட்டவையாகவும் காணப்படும். அதேவேளை, இலக்கியக் கதைகள், வரலாற்றுக் கதைகள் போன்ற பலவும் இம்மரபில் எழுதப்பட்டிருக்கும். உதாரணமாக: 'நல்வாழ்வு' என்னும் நாடகத்தை எடுத்து நோக்கும் போது, இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யாகப்பரின் வரலாற்றின் சில பகுதிகளைக் கூறுகின்ற நாடகம். 'எரிமோஸ்' எனப்படும் கற்பனை மந்திரவாதி பாத்திரத்தினை வில்லனாகச் சித்திரித்து யாகப்பருக்கு எதிரான சதியில் அவன் தோற்பதும், இறுதியில் ஏரோது மன்னனைக் கொண்டு அவரைக் கொலை செய்வதும் கொலையின் பின் எரிமோஸ் மனமாற்றமடைந்து, இயேசுவின் வழியை பின்பற்றுவதுமான கதை அமைப்புடன் காணப்படும் இந்நாடகத்தில், சாதாரண சமுக பாத்திரங்களும் தோன்றும். யாகப்பரின் போதனைகள் பாடல்களிலேயே அமைந்திருக்கும்.

"இஸ்பானியா நாட்டின் எழிலரசியே,
ஜெகதலத்தை ஆளும் ஈஸ்வரியே,
பரமேஸ்வரியே, பாதத்தண்டே
உன் பக்தன் பூசிக்கின்றான்..."

என்றவான செம்மையான மொழிப்பாவனையும் அதே வேளை சாதாரண சமுகப்பாத்திரங்கள் பேச்சுமொழி கலந்து பயன்படுத்தும் பண்பு காணப்படுகின்றது.

## 2. தி.மு.க. பாணியிலமைந்த நாடகங்கள்

இயற்பண்பு நாடக மரபானது பின்னர் தி.மு.கவின் நாடகப் பாணிக்குத் திரும்பியமையை தமிழ் நாட்டிலும், இங்கும் அவதானிக்கலாம். ஒரு காலகட்டத்து நாடக ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தி.மு.க. பாணியிலமைந்த நாடகங்களையே அதிகம் எழுதினர். தமிழ் நாட்டில் 'திராவிட முன்னேற்றக்' கழகமானது எழுச்சி பெற்றதன் பின், அண்ணாத்துரை, கருணாநிதி, திருவாரூர் தங்கராசு போன்ற பலர் நாடகங்களை சமுக மாற்றத்துக்கான சக்தியாகப் பயன்படுத்தி, பிரமாணியத்திற்கும், மூடக் கொள்கைகளுக்கும் எதிரான சமுக சீர்திருத்த நாடகங்களை மேடையேற்றியதோடு எதுகை, மோனை, சிலேடை, தொடரோசை வார்த்தைகள், நீண்ட உரையாடல்கள் போன்ற பலவற்றையும் கையாண்டு கவர்ச்சிகரமான மொழிப் பிரயோகத்திற்கூடாக நாடகங்களை மேடையேற்றினர். இந்நாடகப் போக்கினால் கவரப்பட்ட பலர் இத்தகைய போக்குகளை பின்பற்றி நாடகங்களை மேடையேற்றினர்.

குழந்தை செபமாலையின் ஆரம்பகால நாடகங்களில் பல தி.மு.க பாணியிலமைந்த நாடகங்களெனலாம். சமுகச்சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட, இலக்கிய, வரலாற்றுக் கதைகளையும், சமுகக் கதைகளையும் இவரும் அத்தகைய பாணியில் எழுதி மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது. கண்ணகி, சிலம்பின் சிரிப்பு போன்ற பல நாடகங்களை இப்போக்கிற்கு உதாரணமாகக் கூறலாம். புனிதர்களின் வராலாற்றுக் கதைகளையும், சமுகப்பிரச்சினைகளையும், இலக்கிய வரலாற்றுக் கதைகளையும் இத்தகைய பாணியில் எழுதி அமைத்துள்ளார். இலங்கை கொண்ட இராஜேந்திரன், நாடகத்திலுள்ள பின்வரும் உரையாடலை இம்மரபுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும்.

"தோள்கள் துடிக்கின்றன, வாள்கள் சிரிக்கின்றன
துரோகிகளைப் பிடிக்க வேண்டும். சேரபாண்டியரை
வென்ற நாம், இமயம் வரை எழில்கொடி நாட்டிய நாம்,
கன்னட சாளுக்கிய மன்னர்களைப் போரிலே
வென்ற நாம், கடாரம் முதல் பல நாடுகளை வென்ற
நாம்...."

உரையாடல் மட்டுமன்றி, தமிழ்மீதான பற்று, சமுக சீர்திருத்தக் கருத்துக்கள் என பலவற்றையும் இத்தகைய நாடகங்கள் கொண்டிருந்தன.

## 03. நாட்டுக்கூத்துக்கள்

மன்னார் மண்ணின் பெருமைக்குரிய வடிவமாகவும், குழந்தை செபமாலையின் தனித்துவத்தினை அடையாளப்படுத்திய வடிவமாகவும் காணப்படுவது 'நாட்டுக்கூத்து' ஆகும். ஆரம்பத்தில் இயற்பண்பு நாடகங்களிலும், உரை நடை நாடகங்களிலும் தீவிரமாக ஈடுபட்ட இவரை கூத்தின்பால் பயணிக்கச் செய்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன். அறுபதுகளில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் கிராமமட்டத்தில் கிடந்த கூத்து வடிவத்தினை புத்தாக்கம் செய்து, பல்கலைக்கழக அரங்கிற்கு கொண்டு வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் எழுச்சியோடு அண்ணாவி மாநாடுகள், கூத்துப்போட்டிகள், கூத்து மேடையேற்றங்கள் போன்ற பலவற்றையும் மேற்கொண்டார். பல கூத்து நூல்களை அச்சு வாகனம் ஏற்றினார். குறிப்பாக, மன்னார் மண்ணின் என்றிக் எம்பரதோர், மூவிராசாக்கள், ஞானசௌந்தரி போன்ற கூத்துக்களையே முதலில் அச்சுருவாக்கினார். இத்தகைய எழுச்சியினால் உந்தப்பட்ட கூத்துக் கலைஞர்களில் ஒருவராகவே குழந்தை செபமாலை கூத்தரங்கினைப் பற்றிக் கொண்டார். மாதோட்ட கூத்து மரபின் பாரம்பரியத்தில் உதித்த இவர், புகழ்பூத்த 'மரியான் சந்தான்' புலவரின் பெறாமகனாக, பாலப்பருவத்திலிருந்து கூத்தாடிய இவர் அம்மரபில் முழுமையாக இறங்காதிருந்தவர். பேராசிரியரின் உந்துதலுடன் ஆழ இறங்கியது மட்டுமன்றி அளப்பரிய சிறப்புடைய முப்பதுக்கும் மேற்பட்ட கூத்துக்களைப் படைத்து, அவற்றை ஆக்கியும், அரங்கேற்றியும், ஆடியும் சிறப்புச் சேர்த்துள்ளார்.

குழந்தை செபமாலையின் நாடகங்களில் அதிக சிறப்புப் பொருந்தியவையாகக் காணப்படுபவை அவரது கூத்துக்களே. சிறந்த 'கவிஞராக' காணப்படும் இவரின் கவித்துவம், மரபுவழி கூத்துக்களை அடியொற்றிய ஆக்கங்களால் செழுமை பெற்றன.

மன்னார் பிரதேசத்தின் பெருவழக்காக, வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு ஆகிய கூத்து மரபுகள் காணப்படுகின்றன. ஆனால் குழந்தை செபமாலை அவர்கள் வடபாங்கு கூத்துக்களுடனேயே அதிக பரிச்சயமுடையவராக இருந்துள்ளார். ஒருசில கூத்துக்கள் வேறு கூத்துக்களின் தாக்கங்களுடன் எழுதப்பட்டிருந்தாலும் பெரும்பாலான கூத்துக்கள் வடபாங்கு மரபிலேயே எழுதப்பட்டுள்ளன. இவர் எழுதிய கூத்துக்களில் பல்வேறு சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.

01. கட்டிறுக்கமான கதை சொல்லும் பாங்கினை முனைப்பாக்கி கூத்துக்களை ஆக்கியுள்ளார். அதாவது நேரச்சுருக்கத்துடனும் நேரடியான கதை சொல்லும் பண்பிற்கேற்ப கூத்தினை நகர்த்தியுள்ளார்.

02. எளிமையானதும் அதேவேளை கவித்துவமானதுமான பாடல்கள் மூலம் சாதாரணர்களுக்கும் கூத்து விளங்கத்தக்க ஒன்றாக மாற்றியுள்ளார்.

உதாரணம்:

"கலையூட்ட விட்டவன் கயவனாய் மாறியே
காதலை தூண்டிவிட்டான்
நிலைநாட்ட வேண்டிடும் நேர்மையை அங்கவன்
நேராகத் தள்ளிவிட்டான்
சிலை நாட்ட வேண்டிடும் சிறப்புறும் கலைகளை
சிந்தனையால் தீய்த்துவிட்டான்
தலைகாட்ட இங்குமே தகுதியும் இல்லையே
தக்கவழி சொல்லுவீரே..."

03. புராண இதிகாசக் கதைகள் மட்டுமே அதிகமாக ஆடப்பட்டு வந்த கூத்து மரபில் அதன் எல்லை கடந்து எல்லா வகையான கருப்பொருளிலும் கூத்துக்களை ஆக்கி மேடையேற்றியுள்ளார்.

உதாரணம்:

(1) விவிலியக் கதை
புனித செபஸ்ரியார், யார் குழந்தை, வீரனை வென்ற தீரன்.

(2) புராணக்கதை
ஏகலைவன்

(3) ஐம்பெருங்காப்பியம்
குண்டலகேசி, அன்புப் பரிசு.

(4) கற்பனைக்கதை
காதல் வென்றது, திருந்திய கமக்காரன்.

(5) வரலாற்றுக்கதை
கைமுனு எல்லாளன், சங்கிலியன், கண்டி அரசன்.

(6) சமகால அரசியல் கதை
தாகம், எரிந்த மெழுகுவர்த்திகள்.

(7) பிரச்சாரக் கதை
யப்பானிய விவசாயம், காசநோய், மடமையைக் கொழுத்துவோம்.

04. கூத்துக்களை வெறுமனே மரபுவழி வடிவம் என்பதற்கப்பால் அவற்றினை சமுகத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி சொல்லும் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

05. கூத்துக்கள் பாடல்களை உரையாடல் ஊடகமாக கொண்டிருப்பவை. அரிதலாகவே ஊட்டுவசனங்கள் பயன்படுத்தப் படுபவை. ஆனால் இவர் தேவை கருதிய இடங்களில் பாடலோடு உரையாடலை அதிகப்படுத்தியுள்ளார்.

06. மரபுவழிக் கூத்துக்குரிய காப்பு, கட்டயகாரர் வரவு, பாத்திரவரவுகள், சபைத்தருக்கள், கதைநகர்வு, மங்களம் போன்ற வடிவ அமைப்பினை பல கூத்துக்களில் பின்பற்றி இருந்தாலும் தேவை கருதி சிலவற்றை தவிர்த்தும் கதை சொல்லும் பாங்கிற்கு முதன்மை அளித்துள்ளார். உதாரணமாக: கட்டியகாரன் பாத்திரம் எல்லாக் கூத்துக்களிலும் பயன்படுத்தப்படாமையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு கூத்துமரபினை எந்தளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்கு பயன்படுத்தியுள்ளமையும், அவற்றில் பரீட்சார்த்தங்களை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர் எழுதிய கூத்துக்களில், கல்சுமந்த காவலர்கள், யார் குழந்தை, வீரத்தாய், இறைவனா புலவனா, புனித லோறன்ஸ், தமயந்தி, யாழ்குழந்தை, கைமுனு எல்லாளன் போன்ற கூத்துக்கள் மிகச் சிறந்த ஆக்கங்களாக காணப்படுகின்றன. அதுமட்டுமன்றி அரைமணி நேரம் முதல் நான்கு மணித்தியாலம் வரை மேடையேற்றக்கூடிய கூத்துக்களை படைத்துள்ளார். இவர் எழுதியுள்ள கூத்துக்களில் எட்டுக் கூத்துக்கள், இரண்டு நூற் தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பரிசு பெற்ற நாடகங்கள் (1997), மரபுவழி நாடகங்கள் (1998))

## 04. இசை நாடகங்கள்

ஈழத்தில் அதிக செல்வாக்குப் பெற்ற மற்றொரு நாடக வடிவம்: 'ஸ்பெஷல் நாடகம்' என அழைக்கப்படும் 'இசைநாடகம்' ஆகும். கூத்துக்களை மிஞ்சிவிடும் அளவில் இசைநாடகத்தின் செல்வாக்கு ஈழத்தில் காணப்பட்டது. குழந்தை செபமாலை அவர்கள் அந்த வடிவத்தினையும் விட்டுவைக்கவில்லை. சின்னவன் வென்றான், வாழ்வளித்த வள்ளல், கள்வனை வென்ற காரிகை, மயான காண்டம், கண்ணகி, அன்புப்பரிசு, செங்குருதி, சிலம்பின் சிரிப்பு... போன்ற பத்துக்கும் மேற்பட்ட இசை நாடகங்களை எழுதியுள்ளார்.

சங்கராதாஸ் சுவாமிகள் வழியில், நடிகமணி வி.வி.வைரமுத்து வரை வளர்ச்சி பெற்ற இசை நாடகத்தின் பாரம்பரியத்தினை இவரது நாடகங்கள் ஓரளவு அனுசரித்துச் சென்றாலும் பல்வேறு தனித்துவங்களையும் வேறுபாடுகளையும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன. அதாவது மரபுவழி இசை நாடகப்பாடல்கள் மட்டுமன்றி கர்னாடக மெட்டில் அமைந்த பழைய சினிமா பாடல் மெட்டுக்கள், கிராமிய மெட்டுக்கள் போன்ற பலவும் இவரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி தேவையான இடங்களில் அதிக உரையாடல்களையும் இணைத்துள்ளார். ஏற்கெனவே இசை நாடகமாக ஆடப்பட்டு வந்த அரிச்சந்திர மயான காண்டம், கோவலன் கண்ணகி போன்றவற்றினை திரும்பவும் எழுதியது மட்டுமன்றி புதிய கதைகளையும் எழுதியுள்ளார். அம்பிகாவதியின் கதையை 'அன்புப்பரிசு' என்னும் பெயரிலும், புனித யோசப்வாஸ் முனிவரின் வரலாற்றினை 'வாழ்வளித்த வள்ளல்' என்ற பெயரிலும் இசை நாடகமாக இயற்றியுள்ளார். அந்த வகையில் இவரது இசை நாடகங்கள் தனித்துவம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கவையாக உள்ளன.

**05. நாட்டிய நாடகங்கள்**

இயல்பிலே கவியாற்றல் நிறையப் பெற்றமையாலும், நாடக வடிவத்தினையும், அளிக்கை நுட்பங்களையும் நன்கு கைவரப்பெற்றமையினாலும் நடன நாடகங்களை ஆக்குவது கூட குழந்தை செபமாலை அவர்களுக்கு சாதாரண விடயமாக காணப்பட்டுள்ளது. இவரது 'கண்ணகி' 'ஒளிபிறந்தது' 'ராமன் சீதை' 'வாழவைப்போம்' போன்ற நாட்டிய நாடகங்கள், இவரது ஆக்கச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டுக்களாக உள்ளன. இலக்கிய கதைகளை மட்டுமன்றி கிறிஸ்தவக் கதைகளையும் (ஒளி பிறந்தது) சமகால போராட்ட வாழ்வியல் கதைகளையும் (வாழவைப்போம்) கூட நாட்டிய நாடகமாக ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**06. சமகால நாடகங்கள் / யதார்த்த நாடகங்கள்**

குழந்தை செபமாலை அவர்களின் நாடகங்களில் அவரின் கொள்கைச் சிறப்பையும், சமுகம் பற்றிய அவரது பார்வையையும் விடுதலை உணர்வையும் வெளிப்படுத்தி நிற்பவை அவரது சமூக யதார்த்த நாடகங்களாகும். எரிந்த மெழுகுவர்த்திகள், என்று தணியும் தாகம், அழியாத வித்துக்கள், தொடரும் பயணங்கள் போன்ற இவரது நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இந்நாடகங்களுக்கூடாக போருக்குள் வாழ்ந்த மக்களினதும் போராளிகளினதும் வாழ்வனுபவங்கள் பதியப்பட்டுள்ளன.

ஒரு முழுமையான யதார்த்தப் பாணிக்குரிய பேச்சு, மொழிப்பாவனையை அதிகம் கையாளாமல் பேச்சு மொழியையும், செம்மையான மொழியையும் கலந்து தனது நாடகங்களில் பயன்படுத்தியுள்ளார்.

"நாம் என்ன கோழைகளா, அல்லது கோழிக் குஞ்சுகளா? கொள்கைப்பற்றுடையவர்கள், கொண்ட லட்சியத்தைக் காப்பவர்கள், கொஞ்சும் தமிழ் அன்னையை கொலுவேற்றத் துடிப்பவர்கள், எங்கள் தமிழ் மண்ணில் எதிரிகள் நடமாடுவதை எதிர்ப்பவர்கள், எதற்கும் அஞ்சாதவர்கள்...."

(தொடரும் பயணம்)

என்றவாறான உணர்ச்சி ததும்பும் உரையாடல்களை இக்கூத்துக்களில் அதிகமாக கையாண்டுள்ளார்.

மொத்தத்தில் இவர் கையாண்ட பல்வேறு நாடக வடிவங்களுக்குள்ளாலும் நின்று நோக்குகையில், அவர் பல்வேறு வடிவங்களையும் காலத்தோடு ஒட்டியவையாக பயன்படுத்தியிருந்தாலும் அவை அனைத்தினோடும் தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டு, தான் சமுகத்திற்கு காலத்தே கூறவேண்டியவற்றை கொள்கைப்பாட்டோடு நின்று கூறிய சிறப்பினைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அவர் கையாண்ட எல்லா வடிவங்களிலும் 'கூத்து' வடிவமே அவரது தனித்துவத்திற்கு சான்று பகர்ந்து நிற்கின்றது.

## குழந்தை செபமாலையின் நாடகப் பாடுபொருள்கள்

குழந்தை செபமாலை அவர்கள் பல்வேறு நாடக வடிவங்களையும் தன் வயப்படுத்தி நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார் என்பதனை ஏலவே நோக்கினோம். அந்நாடகங்களில் அவர் எடுத்துக் கொண்ட கருப்பொருளையும் கதைப் பொருளையும் நோக்கும் போது அவர் பல் மூலங்களிலிருந்தும் தனக்கான கதைப்பொருள்களை தெரிவு செய்துள்ளார்.

**01. விவிலியம் சார்ந்த கதைகள்**

இவர் ஒரு கிறிஸ்தவராக, ஆசிரியராக, பக்தியுள்ள கலைஞனாக வாழ்ந்து வருபவர். இவரது வெளிப்பாட்டுச் சமுகமாக கத்தோலிக்க சமுகமே அதிகமாக இருந்த காரணத்தினால் இவர் அதிகமாக திருவிவிலியக் கதைகளை தனது நாடகங்களில் பயன்படுத்தியுள்ளார்.

உதாரணமாக:

யார் குழந்தை - நாட்டுக்கூத்து
வீரனை வென்ற தீரன் - நாட்டுக்கூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்பயணம் - நாட்டுக்கூத்து
நல்ல சமாரியன் - நாட்டுக்கூத்து
செங்குருதி - நாட்டுக்கூத்து
நல்வாழ்வு - நாட்டுக்கூத்து
உலகை மீட்ட உத்தமன் - நாட்டுக்கூத்து
சின்னவன் வென்றான் - இசைநாடகம்
ஒளியை நோக்கி - சமுக நாடகம்

போன்ற நாடகங்கள் அனைத்தும் விவிலியக் கதைப் பொருளைக் கொண்டமைந்துள்ளன. சாலமோன் மன்னனின் தீர்ப்பு, தாவீது கோலியாத்தின் கதை, மோயிசனின் விடுதலைப் பயணம், நல்ல சமாரியன் உவமை, யாகப்பரின் வரலாறு, கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சி... போன்ற பலவும் மேற்கூறப்பட்ட நாடகங்களுக்கான பொருளாகியுள்ளமையை அவதானிக்கலாம். இக்கதைகளின் கருப்பொருள்களில் விடுதலை உணர்வும், அநீதிக்கான போரும், நேர்மையான வாழ்வொழுக்கமுமே அதிகம் மையங்கொண்டிருப்பதனை நோக்க முடியும்.

## 02. புனிதர்களின் வரலாறு

விவிலியக் கதைகளுடன் இணைந்ததாக நோக்கத்தக்க வகையில் கத்தோலிக்க புனிதர்களின் வரலாறுகளும், அல்லது வரலாற்றின் சில பகுதிகளும் இவரால் நாடகங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. புனித லோறன்ஸ் (நாட்டுக்கூத்து), புனித செபஸ்ரியார் (நாட்டுக்கூத்து) உலகை மீட்ட உத்தமன் (நாட்டுக்கூத்து) றொமைறோ (நாட்டுக்கூத்து) ஒளி காட்டிய உத்தமன் (ச.நா) போன்ற நாடகங்களை இவற்றிற்கு உதாரணங்களாக கூறலாம். இந்தப் புனிதர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒவ்வொருவரும் உண்மைக்காகப் போராடி, அநீதியாகக் கொல்லப்பட்டவர்கள். உலகை மீட்ட உத்தமன், நாடகம், முத்திப் பேறு பெற்ற இலங்கை அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட 'யோசவ்வாஸ்' முனிவரின் வரலாற்றின் சில பகுதிகளை கூறுவது 'றெமைரோ', ஆயர் றொமைரோ லத்தின் அமெரிக்க இராணுவ ஒடுக்கு முறைக்கு எதிராக போராடி உயிர் நீத்த வரலாற்றினைக் கொண்ட நாடகம். இந்த நாடகங்களின் கருப் பொருள்களும், யுத்தத்திற்குள் வாழ்ந்த மக்களின் உணர்வுகளுக்குள் நின்று உறவாடக்கூடிய உண்மையின் தரிசனங்களாய் அமைந்த நாடகங்கள்.

## 03. புராண, இதிகாச, இலக்கியக் கருப்பொருள்கள்

குழந்தை செபமாலை அவர்கள் இயல்பிலேயே தமிழில் தீவிர பற்றுக் கொண்டிருந்தவர் மட்டுமன்றி, தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் கொண்டு விளங்குகின்றார். அதனால் தனது அதிக நாடகங்களை இலக்கியக் கதைப் பொருள்களில் இருந்து தெரிவு செய்துள்ளார்.

உதாரணமாக:

1. கல்சுமந்த காவலர்கள் (நாட்டுக் கூத்து) - சிலப்பதிகாரத்தில் இருந்து எடுக்கப்பட்டது. சேரன் செங்குட்டுவனுடன் தொடர்புபட்டது.
2. இறைவனா புலவனா (நாட்டுக்கூத்து) - திருவிளையாடல் புராணத்தில் இருந்து எடுக்கப்பட்டது. தருமி, நக்கீரருடன் தொடர்புபட்டது.
3. தமயந்தி (நாட்டுக்கூத்து) - நளவெண்பாவில் இருந்து எடுத்தாளப்பட்டது. நளன் தமயந்தியின் வரலாறு.
4. குண்டலகேசி (நாட்டுக்கூத்து) - ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய குண்டலகேசியிலிருந்து எடுக்கப்பட்டது.
5. ஏகலைவன் (நாட்டுக்கூத்து) - மகாபாரதத்தின் கிளைக்கதையில் இருந்து எடுக்கப்பட்டது.
6. கண்ணகி, சிலம்பின்சிரிப்பு (இசைநாடகம்)- சிலப்பதிகாரத்தில் இருந்து எடுக்கப்பட்டது.
7. வீரத்தாய் (நாட்டுக்கூத்து) பாரதிதாசன், நாடகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

இவ்வாறு பல்வேறு இலக்கியங் களிலிருந்தும் இவரது நாடகங்களுக்கான கதைப்பொருள் பெறப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நாடகங்களுக்கூடாக தமிழின் பெருமையும், வீரமும், ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டமும், அறம் தவறியவரின் அழிவும், குருபக்தியும், கற்பின் பெருமையும் என பல்வேறு அறக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**04. வரலாற்றுக் கதைப்பொருள்கள்**

வரலாற்றுக் கதைகளையும், இவர் தனது நாடகங்களுக்காக கையாண்டுள்ளார். உதாரணமாக:

1. பூதத்தம்பி (நாட்டுக்கூத்து)
2. கைமுனு எல்லாளன் (நாட்டுக்கூத்து)
3. சாம்ராட் அசோகன் (நாட்டுக்கூத்து)
4. இலங்கை கொண்ட இராஜேந்திரன் (இசை நாடகம்) போன்ற நாடகங்களைக் கூறலாம்.

அவர் எடுத்தாண்ட இந்த வரலாற்றுக் கதைகள் முதலாக, சமகால யுத்தமும், தமிழர்களுக்கெதிரான போரும், கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கெதிரான நாயகர்களையே இந்நாடகங்களுக்கூடாக முன்நிலைப்படுத்தினார்.

**05. சமூகக் கதைப் பொருள்கள்**

குழந்தை செபமாலை எழுதிய 15க்கும் மேற்பட்ட நாடகங்கள், சமுக நாடகங்களாக, நடைமுறை வாழ்வியலை வெளிப்படுத்திய நாடகங்களாக அமைந்தன. உதாரணமாக: இப்படியும் மனிதர்கள், நல்வாழ்வு, பணமா கற்பா, மனமாற்றம் போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம். இந்நாடகங்களில் குடிவெறிக்கெதிரான கருத்துக்கள், பெண் ஒடுக்குமுறைகளுக்கெதிரான சிந்தனைகள், ஆன்மீகமும் வாழ்வும் முரண்படுவதன் விமர்சனங்கள், பெற்றோரை மதித்தல், ஊதாரித்தனத்திற்கெதிரான கருத்துக்களென சமுக ஒழுக்கங்களை வலியுறுத்துகின்ற கருப்பொருள்களாக அமைந்திருந்தன.

சமுகக் கதைப்பொருள்களில் தனித்துவமாக இவரால் எழுதப்பட்ட சில நாடகங்கள், விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்ற நாடகங்களாகவும், அரசியல் விமர்சனத்தைக் கொண்டவையாகவும், ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் குரல்களாகவும், போராளிகளின் தற்கொடைகளை போற்றுகின்ற படைப்புக்களாகவும் காணப்பட்டன. உதாரணமாக: எரிந்த மெழுகுவர்த்திகள், என்று தணியும், தாகம், அழியாத வித்துக்கள், தொடரும் பயணங்கள், காவல் தெய்வங்கள், அன்னையின் ஆணை, என்மகன் மாவீரன், வாழவைப்போம் போன்ற நாடகங்களை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். சமகால மாந்தரோடு, வரலாற்றுக் கதாபாத்திரங்களை, இணைத்தும், இவர் எழுதிய 'எரிந்த மெழுகுவர்த்திகள்' இத்தகைய நாடக ஆக்கங்களில் சிறப்பானதாக காணப்படுகின்றது. பண்டாரவன்னியன், தந்தை செல்வநாயகம், சங்கர் (சத்தியநாதன்), மில்லர் போன்ற பலர் இந்நாடகத்தில் காலங்கடந்து நின்று சங்கமிக்கின்றனர்.

தொகுத்து நோக்கும் போது, குழந்தை செபமாலை என்ற முற்போக்குச் சிந்தனையும், சமுக நலனோம்பும் எண்ணக் கோலங்களும், தமிழ்மொழி, பண்பாடு என்பவற்றில் தீவிர பற்றும், பிறர் ஈன நிலை கண்டு துள்ளும் இதயமும், நல்ல கிறிஸ்தவனுக்குரிய இயல்புகளும் கொண்ட மனிதனின் எண்ணங்களும், சிந்தனைகளும் வெளிப்பட்டு நிற்கின்ற களங்களாக அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் மிளிர்கின்றன. நாடகங்களி னூடாகப் பாய்கின்ற அவரது சிந்தனையோட்டங்களை அவரது உரையாடல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. பதச்சோறாக சிலவற்றை நோக்கலாம்.

❖ கிறிஸ்தவ மார்க்கத்திலும், மத ஒழுக்கத் திலும் முழுமையான நம்பிக்கையை நாடகங்கள் காட்டி நிற்கின்றன.

உதாரணம்:

"சத்தியத்தை காத்து நாமும் சரியான
வழியில் செல்வோம்
இத்தரை தன்னில் எழிலான மார்க்கம்
காண்போம்
உத்தமன் கிறிஸ்து தந்த ஒளிதனையே
பின்பற்றி வாழ்வோம்"

(றொமைரோ)

❖ தமிழ் மொழி மீதும், தமிழ்மண் மீதும் கொண்டிருந்த பற்றினை இந்நாடகங்கள் வெளிப்படுத்தின.

உதாரணம்:

"திட்டிப் பேசி எங்கள் தீந்தமிழை தூற்றவோ
முட்டிமோதி எங்கள் முழுவீரம் போக்கவோ
தீரனே உனை வெல்ல தீந்தமிழ் படையின்று
திட்டமாய் வழிவகை செய்திடும் பாராய்"

(கைமுனு–எல்லாளன்)


"... தமிழ்ப் பண்பின் ஒழுக்கம் துலங்க, தமிழ்க்கலை வளர எங்கும் கலைக்கூடம் எங்கும் திறந்த வெளி அரங்குகள் அமைக்க வேண்டும். தமிழ் மக்களின் இசை நாட்டியம், நாடகம் கிராமியக் கலைகள் வளர நாம் பாடுபட வேண்டும்"

(இலங்கை கொன்ற இராஜேந்திரன்)

❖ பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளன.

"பெண்கள் தான் நாட்டின் கண்கள் பெண்களால் தான் எத்தனையோ காரியங்களை சாதிக்க முடியும்"

(மடமையை கொழுத்துவோம்)



❖ 'குடிவெறி' போன்றவற்றுக்கெதிரான கருத்துக்கள்.

"மதுவையருந்தி போதையில் புவியை மறக்கும்
மந்திக் கூட்டமே மதுவில் என்ன இன்பத்தைக்
காணுகிறீர்கள்...
மது அரக்கனால் பீடிக்கப்பட்ட குள்ளநரிகளே
நீங்கள் அடையும் இலாபம் என்ன..."

(மனமாற்றம்)

❖ சாதி, சீதன ஒடுக்கு முறைகளுக்கு எதிரானதும், சமத்துவத்தினை வலியுறுத்துவதுமான கருத்து வெளிப்பாடுகள்

"உங்கள் காதல் வளர நான் வாழ்த்துகிறேன்,
உங்கள்
காதலின் மூலம் சீதனக் கொடுமை ஒழியட்டும்.
அடிமைப்பட்ட
பெண்கள் இன்று அழகு நிகர் சமுதாயமாக
உருவாட்டும்.
சாதி ஒழியட்டும் சமத்துவம் பெருகட்டும்."

(நல்ல முடிவு)

"இறைவன் எல்லோருக்கும் ஒன்று தான்
ஏழைகளுக்கும் அவர்தான் பணம் படைத்தவர்
களுக்கும் அவர்தான்..."

(இப்படியும் மனிதர்கள்)

❖ சமாதானத்தினை வலியுறுத்தும் சிந்தனைகள்.

"ஒற்றுமையின் மூலமும் சமாதானத்தின் மூலமும் நாம் ஒரு விடயத்தை சாதிக்க முடியும். சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் குடும்பத்தில் மலர வேண்டும். குடும்பத்தில் மலர்ந்தால் அது அந்த ஊரையே மாற்றும். ஊரில் மலரும் போது அது அந்த நாட்டிலே மலரும்"

(ஒற்றுமையின் சிகரம்)

❖ நாட்டுப் பற்றும், தமிழ்த்தேசியம் தொடர்பான அசையாத கொள்கையும் கொண்ட

"போர்முனையில் சென்று பல
புல்லர்களை அழித்துவிட்டு
புயலாக வந்த மகன்
பூமி தன்னில் சாய்ந்து விட்டான்"

"வீரமோடு நாமும் செல்வோம் செல்வோம்
வெற்றி வாகை சூடி மகிழ்வோம் மகிழ்வோம்
தீரமோடு போர்தனையே செய்வோம்
தேசமாம் தமிழீழம் தன்னை காணுவோம்....."

(காவல் தெய்வங்கள்)

போன்ற பலவற்றையும் தொகுத்துக் கூறலாம்.

'நாடக ஆக்கங்கள்' என்ற வகையில் இவரது எழுத்துப் பிரதிகள், எடுத்துக் கொண்ட பாடுபொருளை சொல்வதிலும் கருத்துக்களை வலியுறுத்துவதிலும் முன்னின்ற அளவுக்கு அதன் கலைத்துவ, இலக்கிய செழுமையில் முழுமை கொண்டவை எனக்கூறமுடியாது. பாத்திர உருவாக்கம், கதைவளர்ச்சிப் போக்கை திட்டமிடுதல், மிகப்பொருத்தமான மொழிக்கையாட்சி, எடுத்துக் கொண்ட வடிவத்தை முழுமை செய்தல் போன்றவற்றில் சற்றுப்பலவீனமான பண்புகளைக் கொண்டிருந்தாலும் கருத்து வெளிப்பாடுகளினால் நாடகங்கள் முன்னிற்கின்றன. அதேவேளை, இவரே நெறியாளனாகவும், நாடக எழுத்தாளனாகவும் காணப்பட்ட காரணத்தினால் இந்நாடகங்களின் முழுமை அவற்றின் மேடையேற்றங்களிலேயே வெளிப்பட்டிருக்கும். அதன் ஆற்றுகை சார் மதிப்பீடுகள் மூலமே அவற்றின் செழுமையை தரிசிக்க முடியும். ஆனால் நாட்டுக் கூத்துக்களைப் பொறுத்தவரையில் அவரது நாடகப் பிரதிகள் தரம் மிக்க படைப்புக்களாக தரமுயர்ந்து நிற்கின்றன. குறிப்பாக நூல்வடிவம் பெற்றிருக்கும் கூத்துக்கள் மிகச் சிறந்த ஆக்கங்களாக காணப்படுகின்றன.

## முடிவுரை

நிறைவாக, ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கலையை தன் சுவாசமாகக் கொண்டு வாழ்ந்து சாதனை செய்திருக்கும் குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணியானது சாதாரணமானதல்ல. 'இறைவன் தனக்களித்த தாலந்துகளை' அதி உச்சமாக பயன்படுத்திய கலைஞனாகவும், கலைக்காக பலவற்றையும் இழந்தாலும் தன் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள் என அனைவரையும் தன்னுடன் இணைத்து நின்று சவால்களையும், சிக்கல்களையும் தான் கொண்ட குறிக்கோளை தளர்த்தாத சக்திகளாக்கி, சாதனை படைத்து நிற்கும் இவரது அனுபவ முத்துக்கள் பதிவு செய்யப்பட வேண்டியவை. சிறப்பாக பல்வேறு காலகட்டங்களையும் தன் நாடக எழுத்தாளுமைக்கூடாகப் பதிவு செய்த இவரது நாடக எழுத்தாக்கங்கள் நூல்வடிங்களைப் பெறுவதும், பேணிப்பாதுகாக்கப்படுவதும், கட்டாயமான சமூகத் தேவையாகும். அரங்க வரலாற்றை ஆய்வு செய்பவர்களும், அரங்கியல் மாணவர்களும், இவரது ஆளுமையை கற்பதும், அனுபவங்களை பதிவதும் அவர்களின் துறைசார் முக்கிய பணியாகும். ஏனெனில் 'மன்னார் மண்ணில் இருந்து, பல்வேறு நாடக வடிவங்களை கையாண்டும், பல்வேறு வாழ்வியல் சோகங்களை பதிவு செய்தும், மரபு வழிக்கூத்துக்கு மீள்வடிவம் கொடுத்தும் அம்மண்ணுக்கு முகவரி கொடுத்து நிற்கின்ற' குழந்தை செபமாலையின் அரங்கப் பணியானது வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகும். ■

"முயற்சி என்பது இதயத்துள் உண்டாகும் உணர்ச்சி மட்டுமன்று,
ஆற்றலைக் கிளப்பும் ஒரு தூண்டுகோல் அது" – தாகூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை மாஸ்ரரின் அரங்கவாழ்வு



திருமதி நவதர்ஷினி கருணாகரன்
B.A.(Hons),M.A.(India),Dip.in.Production Operation(England)
*விரிவுரையாளர்,*
*நாடகமும் அரங்கக்கலைகளும், நுண்கலைத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

*'சமூகத்தினுள் மனிதனும் மனிதனுள் சமூகமும் இருக்கிறது. உண்மையான சமூக உறவுகளைப் புரிந்து கொள்ளாத வரைக்கும் உண்மையான உளவியல் தன்மையுடன் கூடிய படைப்பொன்றை மேடையில் உருவாக்க முடியாது.*

*அந்தச் சமூக உறவும் அவ்வுறவினால் ஏற்படும் ஆணையுரிமையும் அவர் எதுவாக இருக்கிறாரோ அதுவாகவே அவரை வைத்திருக்கும் அதேவேளையில் அவர் எதுவாக இல்லையோ அதிலிருந்தும் அவரைப் பாதுகாக்கும். இது தண்ணீருக்குள் மீன் வாழ்வதைப் போலவும் மீன் தண்ணீரில் இருப்பதனையும் ஒத்ததாகும்"*

- ARTHUR MILLER, "The Shadows of the Gods"

ஒரு நாடகாசிரியனுக்கும் சமூகத்திற்குமான உறவு பற்றி அமெரிக்க நாடகாசிரியர் ஆதமில்லர் மேற்கண்டவாறு கூறுவதனைப் போன்றதே, மன்னார்ப் பிரதேச மக்களது வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாக திரு. குழந்தை செபமாலை அவர்களது அரங்க வாழ்வு அமைந்திருப்பதைக் கருதமுடியும்.

'குழந்தை மாஸ்டர்' என மன்னார்ப் பிரதேச மக்களால் அழைக்கப்படும் திரு. செபமாலை அவர்கள் 1940.03.08இல் மன்னார் முருங்கனில் பிறந்தார். 1958/59ஆம் ஆண்டுகளில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். இவர் எழுதிய முதலாவது நாடகம் 'பாட்டாளிக் கந்தன்' (1960) என்பதாகும். தொடர்ந்தும் எழுபதிற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியும் தயாரித்தும் வந்துள்ளார். இவற்றுள் உரையாடற்பாங்கில் அமைந்த நாடகங்களே ஆரம்பத்தில் எழுதப்பட்டிருப்பினும், கூத்துக்களே இவர் எழுதிய நாடகங்களில் அதிகமானவையாகும். இவரை அரங்க ஆளுமையாக உருவாக்கிய இரண்டு முக்கியமான அம்சங்களாவன:

1. மன்னார்ப் பிரதேசத்தில் செறிவாகப் பயில்நிலையிலிருந்த கூத்துப் பாரம்பரியம்.

2. ஆசிரிய பயிற்சிக் காலப்பகுதியில் பல்வேறு நாடகங்களைப் பார்ப்பதனூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்.

இவ்விரு அனுபவங்களும் தொடர்ச்சியானதும் தற்புதுமையானதுமான அரங்க முயற்சிகளில் இவர் ஈடுபடுவதற்கு உந்துசக்தியாக அமைந்தன எனலாம். ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலைகள் அனைத்திலும் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். உதாரணமாக; அல்லைப்பிட்டி, அடம்பன், இசைமாலைத்தாழ்வு, அரிப்பு, பொன்தீவுகண்டல், முருங்கன், கற்கிடந்தகுளம் போன்ற கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் பல்வேறு நாடகங்களை எழுதித் தயாரித்து பயிற்சி அளித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடகங்களைத் தயாரிப்பதற்கான நிதியை பெரும்பாலும் தனது சொந்தப் பணத்திலிருந்தே செலவிட்டிருக்கிறார். இது சிலவேளைகளில் குடும்பத் தினரைப் பாதித்திருந்தாலும்கூட குடும்பத்தினரின் பூரண ஆதரவுடனேயே நாடகங்களைத் தயாரித்திருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் இவரது பிள்ளைகளும் மனைவியும்கூட இந்நாடகங்களில் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நாடகத் தயாரிப் பிற்காகவே தனது பொழுதனைத்தையும் மாணவர் களுடனும், ஏனைய அரங்கக் கலைஞர்களுடனும் செலவிட்டிருக்கிறார். சிறந்த ஆசிரியராகவும் அதேவேளையில் அர்ப்பணிப்புடைய அரங்கக் கலைஞராகவும் வாழ்ந்த இவரது வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.


1965களில்...

1961ஆம் ஆண்டிலிருந்து முருங்கன் புனித யாகப்பர் மன்றத்தினரால் தேவாலயத்தில் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றினார். பின்பு 1964ஆம் வருடம், மதம் சமூகம் என்ற வரையறைகளைத் தாண்டி முருங்கன் முத்தமிழ் (நாடக) கலாமன்றத்தினை நிறுவி நாடகங்களைத் தொடர்ச்சியாக மேடையேற்றினார்.

## குழந்தை செபமாலை அவர்களின் நாடக எழுத்துருக்கள்

நாடக பாடத்தினை (Dramatic text) என்பதனை பல்வேறு வழிகளில் வரைவிலக்கணப்படுத்திக் கொள்ளமுடியும். நாடகங்களை அதன் எழுத்து நிலையில் நாடக பாடமாவும் அதேவேளையில் நாடகம் அதன் அளிக்கை நிலையில் ஆற்றுகையாகவும் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக இந்திய மரபில் நாடக பாடங்கள் 'ரூபக' என அழைக்கப்படுகிறது. நடிகரால் 'உரு' கொடுக்கப்படுவதனாலேயே அவை ரூபக எனப்படுகிறது (S.A.K Durga 1979,14). இப்பண்பினை நவீன காலத்தில் தமிழ் மரபில் எழுதப்பட்ட நாடகங்கள்கூட பின்பற்றியிருப்பதனைக் காணமுடியும். அதாவது வாசிப்பு நிலையிலன்றி ஆற்றுகை நிலையிலேயே நாடகபாடம் 'பூரணத்துவம்' அடைகிறது எனலாம்.

இவ்விடத்தில் பிரபல நாடக வரலாற்றாசிரியர் பிலிப்சரளி குறிப்பிடுவது போன்று இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பாரம்பரியமாகப் பயிலப்பட்டுவரும் அரங்குகளும் அவற்றின் ஆற்றுகைகளும் ஒருபோதும் மேலைத்தேய அரங்குகளைப் போன்று நாடகபாடத்தினை(எழுத்துருவினை) மையமாகக் கொண்டு பார்க்கப்படுவதில்லை (Phillip.B.Zarrilli 2007,p.457) என்ற கருத்து குழந்தை செபமாலை அவர்களது நாடகங்ளைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும்.

(இக்கட்டுரை குழந்தை செபமாலை அவர்கள் எழுதிய நாடகபாடங்களில் வரலாற்று நாடகங்கள் பற்றிய சிறு குறிப்பினைத் தரமுயல்கிறது. அவற்றுள் இரு நாடகங்களான வாழ்வு தந்த யோசப்வாஸ் மற்றும் அன்று சிந்திய வித்துக்கள் ஆகிய இரு நாடகங்களையும் சற்று விரிவாக விளங்கிக்கொள்வதனூடாக இவரது வரலாற்று நாடகபாடங்களைப் புரிந்துகொள்ள முயல்கிறது).

குழந்தை செபமாலை நாட்டுக்கூத்து, சமூக நாடகம், இசை நாடகம், வரலாற்று (சரித்திர) நாடகம், நாட்டிய நாடகம், கவிதை நாடகம் என ஏறக்குறைய எழுபத்திமூன்று நாடகங்கள் வரை எழுதி ஆற்றுகை செய்திருக்கிறார் என அறியக்கூடியதாக இருக்கிறது. மாணவனாகப் படிக்கின்ற காலத்திலும் பின்னர் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆசிரியர் கலாசாலையிலும் நாடகங்களில் நடித்தும், சிறுசிறு நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார். எனினும், 1960ஆம் ஆண்டிலிருந்து எழுதப்பட்ட நாடகங்களே கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இவர் எழுதிய நாடகங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு அவை எழுதப்பட்டுள்ள காலஒழுங்கில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாட்டுக்கூத்துமரபு நாடகம் | இசைநாடகம் | உரையாடற்பாங்கு நாடகங்கள் | ஏனையவை |
|---|---|---|---|
| வீரத்தாய் (நூலுருவில்) 1964 | கள்வனை வென்ற காரிகை 1964 | பாட்டாளிக் கந்தன் 1961 | கண்ணகி 1972 (நாட்டிய நாடகம்) |
| நவீன விவசாயம் 1964 | நல்வாழ்வு 1961 | பணத்திமிர் 1961 | ஒளி உதயம் 1985 (நாட்டிய நாடகம்) |
| வாழ்வு தந்த | மனமாற்றம் 1962 | திருந்திய உள்ளம் 1961 | ஒளியை நோக்கி 1990 (கவிதை நாடகம்) |
| யோசவ்வாஸ் 1966 | தோரணமாளிகை 1967 | இலட்சிய வாதிகள் 1962 | வாழவைப்போம் 1998 (நாட்டிய நாடகம்) |
| கல் சுமந்த காவலர்கள் (நூலுருவில்) 1967 | திருந்திய கமக்காரன் 1967 | தியாகிகள் 1963 | |
| இணைந்த உள்ளம் 1967 | புதுமைப்பெண் 1967 | பரதேசி மகன் 1964 | |
| நளன் தமயந்தி 1967 | அன்புப்பரிசு 1968 | பணமா? கற்பா? 1965 | |
| அல்லி 1967 | முதல் குடும்பம் 1975 | வாடிய மலர் 1967 | |
| யப்பானிய முறை விவசாயம் 1968 | சிலம்பின் சிரிப்பு 1975 | என்று தணியும் 1968 | |
| யார் குழந்தை? (நூலுருவில்) 1969 | சின்னவன்வென்றான் 1980 | காசநோய் 1970 | |
| இறைவனா? புலவனா? (நூலுருவில்) 1972 | ஒளி பிறந்தது 1985 | மலர்ந்த காதல் 1970 | |
| தாரும் நீரும் 1973 | ஞான சவுந்தரி 1992 | பாசத்தின் பரிசு 1970 | |
| குண்டலகேசி 1975 | இறைவனின் சீற்றம் 1972 | உலகின் ஒளி 1976 | |
| விடுதலைப் பயணம் 1978 | | பாலுணவு 1980 | |
| கவரிவீசிய காவலன் 1980 | | ஒருமலர் சிரித்தது1980 | |
| காதல் வென்றது 1980 | | மறைந்த இயேசு 1980 | |
| மயான காண்டம் 1982 | | தாகம் 1992 | |
| வீரனைவென்ற தீரன்1983 | | நல்ல முடிவு 1994 | |
| புனித செபஸ்தியார் 1985 | | இப்படியும் மனிதர்கள் 1995 | |
| புனித லூசியா 1985 | | விண்ணுலகில் நாம் 1995 | |
| பூதத்தம்பி 1992 | | சமாதானம் மலரட்டும் 2002 | |
| காவல் தெய்வங்கள் 1995 | | ஏகலைவன் 2005 | |
| அழியாத வித்துக்கள்1995 | | ஒற்றுமையின் சிகரம் | |
| அன்று சிந்திய இரத்தம் 1996 | | கண்ணகி | |
| எரிந்த மெழுகுவர்த்திகள் 1996 | | இயாகப்பர் | |

(தகவல்: வண. பிதா செபமாலை அன்புராசா - குழந்தை செபமாலை அவர்களின் புதல்வர்)

பொதுவாக இந்நாடகங்கள் தலைப்புகள் நாடகத்தின் விடயப் பொருளைக் கோடிகாட்டி நிற்கிறது. அத்துடன் நாடக வடிவம் சார்ந்த பிரக்ஞை தொடர்பான சர்ச்சைக்குள் சிக்கிக்கொள்ளாது எத்தகைய விடயப்பொருளையும் நாடகமாக்கக்கூடிய பண்பினை இவரது படைப்புகளில் காணமுடிகிறது. உதாரணமாக நவீன விவசாயம் (1964) எனும் நாடகம் நாட்டுக்கூத்து வடிவில் எழுதப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தனது சமகாலத்துப் பார்வையாளர்களைக் கருத்திற்கொண்டே இவர் நாடகங்களை எழுதியுள்ளார் என்பதற்கு இவரது நாடகங்களில் காணப்படும் பின்வரும் பண்புகள் சான்றுகளாயுள்ளன.

❖ **நாடகங்களில் கையாளப்பட்டுள்ள மொழிநடை** - எளிமையான மொழியில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக கூத்துகள், இசைநாடகங்களில் இடம்பெறும் செந்தமிழ் சாதாரணமாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது

❖ **நாடகம்பேசும் விடயப்பொருள்** - பொதுவாக ஏற்கெனவே பிரபல்யமான பாரம்பரியக் கதைகள், புனிதர்கள், அரசர்களின் வாழ்க்கை வரலாறுகள் மற்றும் சமகால விடயங்கள் என எது அவர்சார்ந்த மக்களுக்குத் தேவைப்பட்டதோ அதையே மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரங்கில் வெளிப் படுத்தினார்.

❖ **நாடகத்தின் காலஅளவு** - பெரும்பாலான நாடகங்கள் ஒரு மணித்தியாலத்துக்கு உட்பட்டவையாகவும், ஒருசில நாடகங்கள் இரண்டு மணித்தியாலங்களிற்கு உட்பட்டதாகவே எழுதப்பட்டிருக்கின்றன.

இவைதவிர இவரால் எழுதப்பட்ட நாடகங்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விடயம், இலங்கையின் இனமுரண்பாடுளோடு தொடர்பானதும் தமிழ்ப் போராட்ட வரலாறுகளை நாடகத்தின் விடயப் பொருளாகக்கொண்ட நாடகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். உதாரணமாக; மன்னார்ப் பகுதியில் பொறுப்பாக செயற்பட்ட விக்ரர் என்பவரின் வரலாறு நாடகமாக்கப்பட்டுள்ளமையினைக் குறிப்பிடலாம். இந்நாடகபாடங்களும் இணைத்துக் கொள்ளப்படும் பொழுதே இப்பட்டியல் பூரணமடையும்.

## குழந்தை செபமாலை அவர்களின் வரலாற்று நாடகங்கள்

வரலாற்று நாடகம் (Historical play), முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பதிவுசெய்யப்பட்ட வரலாற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தி எழுதப்படும் நாடகபாடங்களாகும். இவை பொதுவாக வரலாற்றுக் கதைகள், சம்பவங்கள், ஒழுங்கு குறித்த கால ஒழுங்கு என்பனவற்றைக் குறித்து நிற்கும். பொதுவாக உண்மையான வரலாற்றுச் சம்பவங்களில் கவனத்தைக் குவித்து நிற்கும்.

இந்த புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் குழந்தை அவர்கள் நாடக வடிவில் ஆய்வு செய்துள்ள வரலாறுகளை பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. கத்தோலிக்க மதம் சார்ந்த வரலாறுகள் (உலகளாவிய ரீதியில்).
2. உலக அரசியல் வரலாறுகள்.
3. இலங்கையின் தமிழ் மற்றும் சிங்கள அரசர்களது வரலாறு.
4. இலங்கையில் இனமுரண்பாடுகள் தொடர்பான உண்மைச் சம்பவங்களின் (தமிழ்ப் போராட்ட) பதிவுகள்.

மேற்கூறப்பட்ட வரலாறுகள் கூத்து, இசைநாடகம், உரையாடற் பண்பு கொண்ட நாடகங்கள் என அனைத்த வடிவங்களிலும் தமிழில் எழுதப்பட்டுள்ளன. இந்நாடகங்கள் அனைத்தும் தனி ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை பிரதான பாத்திரமாகக் கொண்டு கதைச்சூழ்வு அமைக்கப்பட்டுள்ளமை பொதுவான பண்பாகக் காணப்படுகிறது.

பாத்திரங்கள் அனைத்தும் வரலாற்று நிகழ்வுகளோடு தொடர்புடையவை. சில சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் கற்பனைப் பாத்திரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நாடகபாடத்தில் வரலாற்றோடு தொடர்புடைய குறித்த ஒரு சம்பவத்தில் மட்டும் கவனக்குவிவினை வைத்து அச்சம்பவம் பிரதானமாக அழுத்தம் பெறும்வகையில் நாடகங்கள் அளவில் சிறியனவாகவும் எளிமையான மொழிநடையிலும் எழுதப்பட்டுள்ளன. கதைப்பின்னல் எளிமையான பண்பு கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாட்டுக் கூத்துமரபு நாடகம் | உரையாடற்பண்பு கொண்ட நாடகங்கள். |
|---|---|
| வாழ்வு தந்த யோசவ்வாஸ்1966 | இலங்கை கொன்ற இராஜேந்திரன் 1966 |
| கண்டி அரசன் 1981 | உலகை மீட்ட உத்தமன் 1970 |
| புனித லோறன்ஸ் முனிந்திரன் 1985 | ஒளிகாட்டிய உத்தமன் (புனித அந்தோனியார்) 1970 |
| கைமுனு எல்லாளன் 1986 | சாம்ராட் அசோகன் 1980 |
| புனித லூாசியா 1990 | தொடரும் பயணம் 1995 |
| பூதத்தம்பி 1992களில் | இயாகப்பர் |
| அழியாத வித்துக்கள் 1995 | |
| அன்று சிந்திய இரத்தம் 1996 | |
| புனித செபஸ்தியார்1983 | |

வரலாறு என்பது கணப்பிரசன்னம் அல்ல. அந்தக் கணப்பிரசன்னத்தைப் பதிவில் கொண்டு வரும்போது அதுவே வரலாறாகின்றது. "நாடக ஆற்றுகை" நிகழ்ந்தது என்ற குறிப்பானது வரலாறு, ஆனால் வெறுமனே அவ்வாறு கூறுவதை விட அந்நாடக ஆற்றுகையின் நாடகபாடம் மற்றும் அவை தொடர்பான ஆதாரங்களுடன் இந்நாடகம் நிகழ்ந்தது என்று கூறுவது மிகவும் சிறந்த வரலாற்றுப் பதிவாக இருக்கும். நாடகங்களை வரலாற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது அவை இருவகையில் தொடர்பு பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

1. நாடகபாடங்கள் அந்நாடகங்கள் எழுந்த காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவுகளாகவும் காணப்படுகின்றன.

2. பதிவு செய்யப்பட்ட/வாய்மொழி வரலாறுகள் நாடக எழுத்துரு வடிவில் உருவாக்கப்படுதல்.

குழந்தை செபமாலை அவர்கள் எழுதிய வரலாற்று நாடகங்கள் இரண்டாவது பிரிவினுள் அடங்குகின்றன. இவை பெரும்பாலும் கிறிஸ்தவ மதம் தொடர்பான வரலாறுகளை நாடக எழுத்துரு வாயிலாக குறிப்பிடுவதாகவே காணப்படுகின்றது. எனினும் குறிப்பாக இலங்கையின் இனமுரண்பாடுகள் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளாக எழுதப்பட்ட நாடகங்கள் தமிழர்களின் அடையாளமாக இலங்கைத் தமிழர்களது அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான சமகாலத்தினைப் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகையதாக உடன்நிகழ்கால வரலாறுகளை நாடக எழுத்துரு வடிவில் பதிவுசெய்திருக்கும் முன்னோடி என இவரைக் குறிப்பிடலாம். வரலாற்றினைப் பதிந்து கொள்ளும் ஊடகமாகவும் நாடகத்தினைப் பயன்படுத்தியிருக்கிறார். அது முழுமையான வரலாற்றை இவரது சமூகம் சார்ந்த, இனத்தின் வரலாறு சார்ந்த அக்கறையினையே இவரது பதிப்புக்கள் கூறி நிற்கின்றன. குழந்தை செபமாலை அவர்கள் எந்தெந்த வேளையில் எந்தெந்த விடயங்கள் பதியப்பட வேண்டுமோ அந்தந்த கால கட்டங்களில் ஒரு வரலாற்றாசிரியராகவும் செயற்பட்டு அவற்றினைப் பதிவு செய்திருக்கிறார்.

## "வாழ்வு தந்த யோசவ்வாஸ்"

காலணித்துவத்தின் வருகையானது அல்லது அதன் பாதிப்பானது ஆட்சி அதிகாரங்களில் மாத்திரமல்லாது நாட்டின் இறைமை, கலை, கலாசாரம், மதம், மற்றும் ஒவ்வொரு துறைகளிலும் தனது செல்வாக்கினை செலுத்தியிருக்கிறது. மக்களின் கலாசார விடயங்களில் மதம் அது சார்ந்த நம்பிக்கைகள் மிகவும் முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் புத்தமதமும் இந்து மதமும் மாத்திரமே இருந்த இலங்கையில் கிறிஸ்தவ மதத்தின் பரம்பலானது பெரிய விடயமாகக் காணப்பட்டது. பாதிரியார்கள் கிறிஸ்தவ மதப் போதனைகளைத் தமது பேச்சுக்களின் மூலம் மக்களிடையே பரப்பினர். ஆனால், அப்போது ஆட்சியிலும் அதிகாரத்திலும் இருந்தோர் அம்மதத்தின் பரம்பலை ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

யோசவ்வாஸ் எனும் நாடகத்தில் 17ஆம் நூற்றாண்டில் (ஒல்லாந்தர் காலம்) கிறிஸ்தவ மதபோதகராக யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களில் போதனைகளில் ஈடுபட்ட யோசவ்வாஸ் எனும் கிறிஸ்தவ மதகுரு மதபோதனைகளின்போது எதிர்கொண்ட சவால்களும் அச்சவால்களை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொண்ட முறைமையும் சித்திரிக்கப்படுகிறது. சம்பவங்களை தொடராக்கி அவை ஒன்பது காட்சிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. நாடகம் செந்தமிழில் எழுதப்பட்டுள்ளதுடன் பொருத்தமான இடங்களில் பாடல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இப்பாடல்கள் குறித்த ஒரு கூத்துப்பாடலின் மெட்டாகவோ அல்லது சினிமாப் பாடலின் மெட்டாகவோ அமைக்கப்பட்டிருக்கிறது. குறித்த பாடலின் மெட்டைப் பற்றிய விபரங்கள் அடைப்புக்குறியினுள் இடப்பட்டிருக்கிறது. இந்நாடகத்தினூடாக குறித்த இச்சமூகத்தினருடைய வரலாறு மக்களுக்கு மீள நினைவூட்டும் ஊடகமாகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்நாடகம் கிறிஸ்தவ சமயத்தின் மேன்மையைக் கூறுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நாடகத்தின் பாத்திரப் படைப்புகள் பண்புப் பாத்திரங்களாகும். அவை கிறிஸ்தவ சமூகத்தின் குறியீடுகளாக அல்லது கிறிஸ்தவ சமூகத்தை பிரதிபலிப்பனவாகவே காணப்படுகின்றன பாத்திரங்களுடாகவே நாடகம் நகர்கிறது. இப்பாத்திரங்கள் வரலாற்றுப் பாத்திரங்களும் சில பொருத்தமாக புனையப் பட்டவையாகும்.

நாடகம் முழுவதுமே கிறிஸ்தவமத போதனையில் பங்குகொள்ளும் உணர்வினை ஒத்ததாக அமைகிறது. உதாரணமாக,

***"புத்தியோடு வாழ்வதற்கு பரமன் துணைதானே வேண்டும்.***
***சத்தியத்தைக் காத்து என்றும் சாந்தி அன்பு மலர்ந்திடவே,***
***இறைவனே நீர் அன்பு கூருவீர்"***

போன்ற பாடல்களும் குறிப்பிட்ட சிலவகையான சந்தங்களின் பயன்பாடும் மதபோதனை போன்ற உணர்வு நாடகம் முழுவதிலும் விரவியிருப்பதற்கு பெரிதும் உதவுகிறது. இந்நாடகம் கிறிஸ்தவர்களின் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகி மீண்டும் பிரார்த்தனையிலேயே நிறைவடைகிறது.

இந்நாடகத்தில் தயாரிப்பு மற்றும் அரங்க நெறியாள்கைக்குத் தேவைப்படும் குறிப்புகள் பெருமளவில் இடம்பெறாமைக்கு முக்கிய காரணம் இவர் தானே நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து தயாரித்திருந்தமை எனலாம். எனினும் இவை பதிப்புகளாக வெளிவரும்போது இத்தகைய குறிப்புகளை இணைத்துக்கொள்வது எழுத்துருவினைப் புரிந்து கொள்வதனை இலகுபடுத்தி நிற்கும் எனலாம்.

"வாழ்வு தந்த யோசவ்வாஸ்" என்ற இந்த இசை நாடகமானது கிறிஸ்தவ சமூகவாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு தமிழ் தளத்தில் படைக்கப்பட்டு ஆற்றுலை செய்வதற்குரிய ஒருசிறந்த நாடகமாகக் காணப்படுகின்றது எனலாம்.

### "அன்று சிந்திய வித்துக்கள்"

வரலாறுகளை நாடக எழுத்துருக்களாக பதிவு செய்யும் பிறிதொரு முயற்சியே 'அன்று சிந்திய வித்துக்கள்' எனும் நாடகமாகும். இந்த நாடகம் இலங்கையில் போத்துக்கேயரின் காலத்தில் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவிக்கொண்ட, மன்னார்ப் பிரதேசத்தைச் சோந்த கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்து அரசனால் (சங்கிலி செகராசசேகரன்) தண்டிக்கப்பட்ட வரலாற்றைக் கூறுகிறது. இந்நாடகத்தினை எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட உசாத்துணை பற்றிய விபரங்களும் எழுத்துருவில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நாடகம் நேரடியாகவே கிறிஸ்தவ மதம் பற்றிய எதிர்புணர்வையும், இதன் காரணமாக சங்கிலி மன்னனால் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவியவர்கள் கொலைசெய்யப்படுதல் என்ற சம்பவத்தைச் சுற்றியே கதைப்பின்னல் இடம்பெறகிறது. செந்தமிழிலான உரையாடலினால் எளிமையான முறையில் இந்நாடகம் ஆக்கப்பட்டிருக்கிறது.

பிரதானமாக பாத்திரங்களினூடாகவே வரலாற்றுக்காலம் மீள்படைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. சங்கிலி மன்னனின் அரச சபை, கிறிஸ்தவ மதபோதகர்களின் போதனை என்பன நடத்தப்பட்ட கொலை எவ்வளவிற்குக் கொடூரமானது என்பதனைச் சித்திரிக்கிறது. சங்கிலி மன்னனது அரச சபையின் பெருமையும், கிறிஸ்தவ போதகரது மதபோதனைகளையும் விபரமாக நான்கு காட்சிகளில் சித்திரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது (இறுதிக்காட்சியில்) மிகச்சிறிய அளவில் மட்டும் கொலைச்சம்பவம் விபரிக்கப்பட்டிருப்பினும் இப்பகுதியே மனதில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைத்துள்ளமை சிறந்த உத்தியாகும்.

அரங்கத் தொடர்பாடலில் பார்ப்போரிடம் உணர்வுத் தாக்கத்தினை ஏற்படுத்துதல் என்பது முக்கியமானதாகும். அந்தவகையில் குழந்தை செபமாலை அவர்களுடைய நாடகங்கள் அதன் எழுத்துரு நிலையிலேயே இத்தகைய உணர்வு ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பீற்றர் புருக் குறிப்பிடுவது போன்று, 'நாடகம் கணநேரக் கலையாகும், பார்வையாளர் மட்டுமே சாட்சிகளாவர். அதாவது அரங்க அளிக்கை எவ்வாறிருந்தது என்ற ஞாபகங்களின் பதிவுகள் மட்டுமே. அவர்கள் அரங்கிலிருந்து எதனைப் பெற்றுக்கொண்டார் என்பதே'. இவ்வனுபவம் குழந்தை செபமாலை அவர்களின் நாடகங்கள் வழங்கியமைக்கு மன்னாரிப் பிரதேச மக்களே நேரடியான சாட்சிகளாவர்.

## முடிவுரை

வரலாறுகளும் அவற்றின் ஞாபகங்களும், வரலாறு மற்றும் கலாசார செல்வாக்கிற்குட்பட்டவை. எனவேதான் வரலாற்றின் அம்சங்கள் பலவழிகளில் ஞாபகப்படுத்தப்பட்டும் பதிவுசெய்யப்பட்டும் அழிக்கப்பட்டும்கூட நினைவுகூரப்படுகின்றன. அத்துடன் அவை கடந்த காலங்களை நினைவுகூருதல் என்பதற்கு அப்பால் இவை குறித்த சமூகத்தின் அடையாளம் இருப்பு என்பவற்றுடனும் நெருங்கிய தொடர்புடையவை. செபமாலை குழந்தை அவர்களது நாடகங்கள் தான் சார்ந்துள்ள சமூகத்தின் இருப்பினை பலவழிகளிலும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

ஈழத்து அரங்க வரலாற்றில் கத்தோலிக்க மதம்சார்ந்த அரங்க வெளிப்பாடுகளின் பங்களிப்பு தொடர்பாக ஆய்வுகள் போதுமானதாக இல்லை எனலாம். மொழிபெயர்ப்பு நாடகங்களின் தயாரிப்பு, மதம்தொடர்பான விடயங்களைக் கூறுவதற்கு உள்ளூர் அரங்க மரபுகளைத் தற்புதுமையுடன் பங்களித்தமை, விரத காலங்களில் கிராமம் முழுவதும் பங்குகொள்ளும் ஆற்றுகைகள் என இவ்வாய்வுப் பட்டியல் நீண்டு செல்லும். இத்தகைய ஆய்வுகள் நடத்தப்படும் பொழுதே குழந்தை அவர்களின் அரங்கப் பங்களிப்பை வெளி உலகம் அறியும்.

அத்துடன் இவரது பணி ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதொன்றாகும். இவரது அரங்குசார் செயற்பாடுகள் மேலும் ஆழமாக ஆய்வுசெய்யப்பட வேண்டும். அத்துடன் நாடகபாடங்கள் (எழுத்துருக்கள்) அவற்றின் தயாரிப்புக் குறிப்புகளோடு வெளியிடப்படுமாயின் அது அரங்கு சார்ந்தோருக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

'சமூகத்தின் இருப்பு என்பது அச்சமூகம் பற்றிய நினைவுகளால்/ஞாபகங்களால் உருவாக்கப்பட்டது, யதார்த்த உலகத்தில் மனிதர்கள் தனித்தவமான பண்புகொண்டவர்கள்' என ஒஸ்கார்வைல்ட் கூறுவதுபோன்று தான் வாழும் சமூகத்தின் இருப்பினைப்பேணும் வழிகளிலொன்றாக அரங்கினைக் கையாண்டவர் திரு.செபமாலை அவர்கள் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


* செபமாலை அன்புராசா, அ.ம.தி, மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள், தொடர்பகம் யாழ்ப்பாணம், 2007
* குழந்தை செபமாலை, 'அன்று சிந்திய வித்துக்கள்', 1996
* குழந்தை செபமாலை,'வாழ்வு தந்த யோசவ்வாஸ்', 1966
* தவச்செல்வி ராசன், 'வாழ்வு தந்த யோசவ்வாஸ்' ஆற்றுகை விமர்சனக் கட்டுரை 2012 (unpublished)
* Durga.S.A.K, The Opera in South India, Delhi, 1979
* Mick Wallis and Simon shepherd: Studying Plays: 2nd edition 2002, A member of the Headline Group London.
* Phillip Zarrilli, Bruce Mc conachie, Gary Jay Williams, Carol Fisher Sorgenfrei, Histries of thatre Glaxco, 2006
* Schechner Richard, Performance Theotry, Routledge, Newyork/London, 2009





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று நிற்கும் கலைஞர் நம் குழந்தை மாஸ்டர்

**பி.மரியதாஸ்**
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்,
பெரிய கட்டைக்காடு,
மன்னார்.



## முகவுரை

இவ்வுலகில் வாழ்க்கைப் பயணம் எப்படியானது என்பதை பயணித்துக் கொண்டிருக்கின்ற - அனுபவித்துக் கொண்டிருக்கின்ற - சுமந்து கொண்டிருக்கின்ற மனிதப் பிறவிகள் ஒவ்வொருவரும் அறிவர். இந்த வேடிக்கைப் பயணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அமைந்து விடுகின்றது. தான் தோன்றிய குலம், கோத்திரம், சூழ்நிலை, குடும்பப் பின்னணி, பிறந்த மண், கற்ற கல்வி, புரியும் தொழில், அமையும் வாழ்க்கைத்துணை ஆகியன ஒருவரது வாழ்வை நிர்ணயித்து வாழ்வுப் பயணத்துக்கு உதவியும் உந்துதலும் அளிக்கின்ற காரணிகளாய் அமைகின்றன.

மனிதப்பிறவி மகத்தானது. இறைவன் எமக்கு அருளியது. பிறப்பு தொடக்கம் இறப்பு வரை ஒருவர் புரியும் அனைத்து செயற்பாடுகளும் அவற்றின் தாக்கங்களுமே அவர் வாழ்வில் பெற்றுக்கொள்ளும் இவ்வுலக சான்றிதழ்களுக்கு காரணமாய் அமைகின்றன. இந்தச் சான்றிதழ்கள்தான், ஒருவர் தன் நாட்டிலும் பிரதேசத்திலும் வாழ்கின்ற மக்கள் மத்தியில் - மக்கள் மனங்களில் அவரைக் கொலுவோச்சி வைத்துப் புகழும் காரணிகளாகவும் அளவுகோல்களாகவும் அமைந்து விடுகின்றன.

இங்கு நான், புகழ் பூத்து வாழ்ந்து கொண்டிருக்கும் நல்ல மனிதர் ஒருவருக்கு எனது சான்றிதழ்களை வழங்கும் சந்தர்ப்பமும் களமும் கிடைத்தமையையிட்டு மகிழ்வதோடு இறைவனுக்கு நன்றி கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எனக்கு அகவை அறுபத்து மூன்று. மனிதனின் சராசரி ஆயுள் நிலையைக் கடந்து விட்டேன். ஆறு தசாப்தங்களுக்கு மேல் வாழ்ந்திட அருள் பாலித்த இறைவன் கிருபையை நன்றியுடன் நினைத்து மகிழ்கின்றேன். என் வாழ்வில் - என் பணியில் எத்தனையோ மனிதர்களைச் சந்தித்திருக்கின்றேன். அன்னை, தந்தை, அருமைச் சகோதரர்கள், அயலவர், உறவினர், அன்பு மனைவி, அவர் தந்த செல்வங்கள், வாரிசுகள், அதிகாரிகள், சக பணியாளர்கள் என்று இன்னும் வாழ்வுப் பயணத்தில் சந்திக்கும் பல்வேறு மக்கள். இத்தனை வகைகளிலும் வாழ்வில் என்னால் மறக்க முடியாத சில நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் உறவாடிய வகையில் மறக்க முடியாத பல நிகழ்வுகள் இருக்கின்றன.

என்னால் மறக்க முடியாத நல்ல மனிதர்களில் ஒருவர்தான் குழந்தை மாஸ்டர். இவரைப் பற்றி என் மனதில் புதைந்துள்ள அபிப்பிராயங்களையும் செய்திகளையும் பிறருக்குக் கூறவேண்டிய ஆவலையும் கடப்பாட்டையும் பற்றி அடிக்கடி சிந்தித்து வந்துள்ளேன். ஏனெனில், நல்ல மனிதர்களின் வாழ்வையும் விழுமியங்களையும், அறியாதவர்களும் அறிய வைப்பதால் பயனுண்டு. பலரது நல்வாழ்வுக்கு அவை வழிகாட்டலாம். முன் மாதிரிகையாகவும் உதாரணமாகவும் அமையலாம் அல்லவா? எனது ஆவல் பூர்த்தியாவதற்கான சந்தர்ப்பத்தை ஒருவர் ஏற்படுத்தினார். அவர் வேறு யாருமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மகனான அருட்பணியாளர் அன்புராசா அ.ம.தி. அவர்கள்தான். அடிகளாருக்கு எனது அன்பு கலந்த நன்றிகள்.

குழந்தை மாஸ்டர் முருங்கன் கிராமத்தின் சொத்து. மாதோட்ட மண்ணின் சொத்து. மன்னார் மாவட்டத்தின் சொத்து. தமிழ் மக்கள் அனைவரதும் மனங்களில் கொலுவிருக்கும் சொத்து. மொத்தத்தில் தமிழ்த் தாயின் சொத்து. வயது எழுபத்திரண்டு அகவையுள்ள இந்த நல்ல மனிதரைப் பற்றிய எனது மதிப்பீடுகளை மூன்று கால கட்டங்களில் வைத்துக் குறிப்பிட விரும்புகின்றேன். ஏனெனில் கடந்த இரண்டு தசாப்தங்களாக அவரும் நானும் அன்னியோன்னியமான நண்பர்கள்.

## 1. 1961 தொடக்கம் 1990 வரையிலான காலப்பகுதி

எனது பாடசாலைக் கல்வியில் தரம் 07 ஆம் வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்த காலம். கல்வி மூலமும் கல்விசார் செயற்பாடுகள் மூலமும் நாங்கள் கல்வி கற்ற கிராமப் பாடசாலையிலிருந்து சற்று வெளியுலகுக்கு வந்து சம்பவங்களையும் பிற மனிதர்களையும் அறியும் வாய்ப்புக்கள் ஆரம்பமாகின. கத்தோலிக்க திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்டத்தினால் வெளியிடப்பட்ட 'சத்திய வேத



1960களில்

பாதுகாவலன்' என்னும் மாத சஞ்சிகையை வாசிக்கும் வாய்ப்பை எமது பாடசாலை (மன்/சூரியகட்டைக்காடு றோ.க.த.க.பா) அதிபரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோண்பிள்ளை பேராசான் எமக்கு ஏற்படுத்தித் தந்தார். இந்தச் சஞ்சிகையை வரிக்கு வரி தப்பாது வாசிப்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். இந்தப் பத்திரிகை தாங்கிவரும் ஆக்கங்களின் கீழ் அவற்றை ஆக்கியோர் நாமம் இடம்பெற்றிருக்கும். செ.தம்பிராசா குழந்தை, சந்தியோகுமையோர் கோயிலடி, முருங்கன் என்னும் முகவரி அடிக்கடி இடம்பெறுவதுண்டு. முருங்கன் எமது கிராமத்துக்கு அண்மித்திருந்தமையால் இந்த எழுத்தாளர் பெயர் என் மனதில் பதிந்து விட்டதுடன் இவரைப் பார்க்க வேண்டும் - அறிய வேண்டும் என்னும் எண்ணக்கரு ஏற்பட்டு விட்டது. இன்னும் வெளி உலக நிகழ்வுகளைச் செவி வழியாகக் கேட்கும் நிலைமைகளும் உருவாகின.

பாடசாலையின் இணைப் பாட விதான செயற்பாடுகளின் நிமித்தம் நாம் வெளியிடங்களுக்கு ஆசிரியர்களால் அழைத்துச் செல்லப் படுவதுண்டு. இதில் உடற்கல்வி, விளையாட்டுத் துறையை முக்கியமானதாகக் குறிப்பிடலாம். 1962ஆம் ஆண்டில் மெய்வல்லுனர் நிகழ்வுகளில் எமது பாடசாலை மாணவர்கள் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிய ஆரம்பித்தனர். வட்டாரப் பரடசாலைகளின் நிகழ்ச்சிகள் முருங்கன் வைத்தியசாலை மைதானத்தில் நடத்தப்பட்டு அதில் திறமை காட்டியோர் அடுத்த நிலைப் போட்டிக்காக வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபெறக் கூட்டிச் செல்லப்பட்டோம். மன்னார் மாவட்டத்தின் பல பாடசாலைகளில் இருந்தும் மாணவர்கள் ஆசிரியர்களுடன் இ.போ.ச. பஸ்வண்டியில் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். மன்/அடம்பன் றோ.க.த.க.பாடசாலையிலிருந்து சில மாணவர்களைப் போட்டிக்காக அழைத்துக் கொண்டு வெள்ளைவேட்டி - சேட் அணிந்திருந்த இளம் ஆசிரியர் ஒருவர் நாம் சென்ற பஸ்வண்டியில் வந்து கொண்டிருந்தார். பார்வைக்குச் சாந்தமானவராகவும் முக மலர்ச்சி கொண்டவராகவுமிருந்த அவர், தன் மாணவர்களின் வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டும் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா விளையாட்டு மைதானத்தில் இவரது மாணவர்களால் பல திறமைகள் வெளிக் கொணரப்பட்டன. இவரது பாடசாலைசார் விடயங்களுக்கு நிர்வாகிகளால் ஒலிபெருக்கி மூலம் செபமாலை ஆசிரியர் என அழைக்கப் படுகின்ற போதுதான் இவர்தான் செபமாலை மாஸ்டர் என என்னால் புரிந்து கொள்ள முடிந் தது. எமது ஆசிரியர்களும் இவருடன் உரையாடி யதை அவதானித்ததிலிருந்து செபமாலை மாஸ்டர்தான் தம்பிராசா மாஸ்டர். செபமாலை மாஸ்டர்தான் குழந்தை மாஸ்டர் என அறிந்து கொண்டேன். மனதில் மகிழ்ச்சி. சிறு மாணவ னான எனக்கு ஒரு பேராசானுடன் உரையா டவோ பழகவோ அப்போது வாய்ப்புக் கிடைக்க வில்லை.

1963ஆம் ஆண்டு நான் முருங்கன் கிறிஸ்து அரசர் பாடசாலையில் (மன்/முருங்கன் ம.வி.) மாணவனாகச் சேர்ந்தேன். எமது கிராமத் திலிருந்து தினமும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலை சென்றுவருவேன். சக மாணவர்களு டன் மன்னார் - மதவாச்சி வீதியில் முருங்கன் நோக்கிச் செல்லும்போது, குழந்தை மாஸ்டர் முருங்கனிலிருந்து அடம்பன் நோக்கி துவிச்சக் கர வண்டியில் எம்மைக் கடந்து செல்வார். அவரது கடமையுணர்வை அதிகாலையில் அந் தத் துவிச்சக்கர வண்டியின் வேகம் சுட்டிக் காட்டும்.

1963 தொடக்கம் 1965 வரை முருங் கனில் கல்வி பயின்ற நான், சிலவேளைகளில் சக மாணவர்களுடன் பாடசாலை விடயமாக இவரது இல்லப் பக்கம் செல்வதுண்டு. பல தடவை ஒரு விவசாயியாக இவரை வயலில் கண்டுள்ளேன். மடித்துக் கட்டிய சறம், அரைக்கை பெனியன், தலையில் முண்டாசுடன் சேற்று வயலில் வரம்பு வெட்டிக் கொண்டி ருக்கும் காட்சியை நாம் சற்றே தரித்து நின்று பார்த்து இரசித்ததுண்டு. இளைஞரான குழந்தை மாஸ்டருக்குத் திருமணமாகி அன்பின் பரிசாகக் குழந்தை கிடைத்திருந்த காலம். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் நிமித்தம் நாம் பாடசாலையில் தங்கி நின்று கல்வி கற்பதுண்டு. அவ்வேளை வார இறுதி நாட்களில் முருங்கன் குளத்துக்கு குளிக்கச் செல்வதுண்டு. குளத்தை அண்மித்துள்ள இவரது வீட்டிலிருந்து இனிமை யான பாடல் சத்தம் கேட்கும். தன் மகனைத் தாலாட்டிப் பாடும் இவரது இன்னிசையில் மயங்கி நாம் குளக்கரையில் அமர்ந்திருந்து பாடலை இரசித்து மகிழ்வது இன்றும் மறக்க முடியாத நிகழ்வாகவுள்ளது.

குழந்தை மாஸ்டர் அவர்கள் ஒரு கலைக்குடும்ப வாரிசு. குடும்பத்தில் தந்தையார் திரு. செபஸ்தியான், தமையன் திரு. சீமான், தம்பிமார் திரு. மாசிலாமணி (பிலேந்திரன்), திரு.யேசுதாசன், தங்கை எலிசபெத் (கார்மேல் சபை அருட்சகோதரி, மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் கல்லூரி அதிபர்), அக்கா மகன் திரு. அந்தோனிப்பிள்ளை, குழந்தை மாஸ்டரின் மனைவி றோஸ்மேரி அக்கா, அவரின் சகோதரர் திரு. குணசீலன் ஆகிய முக்கியஸ்தர்களையும் இன்னும் பலரையும் உள்ளடக்கி முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தை உருவாக்கியி ருந்தார். இக்கலாமன்றத்தினரின் கலை நிகழ்ச் சிகள் மேடை நாடகம், வில்லிசை, நாட்டியம், கதாப்பிரசங்கம் ஆகிய வடிவங்களில் மாவட்டத் திலும் நாடளாவிய ரீதியிலும் மேடையேற்றம் பெற்று மக்கள் மனங்களைக் கவர்ந்து பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்று வந்தன.

மன்னார் மாவட்டத்தின் அரச அதிப ராகவிருந்த திரு. தேவநேசன் நேசையா அவர் கள் கலை ஆர்வத்துடன் கலைக்குத் தொண்டு செய்த ஓர் அதிகாரி ஆவார். மன்னார் மாவட் டத்தில் பிரதேச கலாமன்றத்தை உருவாக்கி 1967, 1968, 1969 காலப் பகுதிகளில் மாபெரும் கலை விழாக்களை நடத்தினார். 1967இல் முருங்கன் செம்மண்தீவிலும் 1968இல் அடம்ப னிலும் நடத்தப்பட்ட கலை விழாக்கள் மூன்று தினங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது. நாடளா விய கலைக்கழகங்கள் பங்கேற்றமை, பல அறிஞர்கள், அமைச்சர்கள் கலந்து சிறப்பித் தமை, போட்டி முறையில் நிகழ்ச்சிகள் அமைந் திருந்தமை, பேராசிரியர்கள் வித்தியானந்தன், சண்முகதாஸ் போன்றோரின் நேரடி வழிப்படுத் தல்கள் ஆகியவற்றால் இவ்விழாக்கள் சிறப்பாய் அமைந்ததுடன் மக்களால் இன்றும் மறக்க முடியாதவையாகவுள்ளன. இக்கலை விழாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில், குழந்தை மாஸ்டரின் முத்தமிழ்க் கலா மன்றத்தினரின் நாடகங்கள் முதன்மை இடங்களைப் பெற்றதுடன், மக்களாலும் பிரமுகர்களாலும் பாராட்டப் பெற்றன. இவரது குடும்ப உறுப்பினர்களே பாத்திரங்களை ஏற்று நடித்தமையும், உடையலங்காரம் தொடக்கம் பல்துறை நெறியாள்கைகளையும் மன்றத்தினரே கையாண்டமையும் சிறப்பான அம்சங்களாகும். அனைத்தும் குழந்தை மாஸ்டரின் நெறிப்படுத்தலாகவே அமைந்திருந்தன. பாடசாலைக்கல்வி முடித்து வேலை வாய்ப்பைத் தேடித்திரிந்த நான் இவற்றையெல்லாம் ஆவலுடன் கண்டு களித்தமையை மறக்க முடியாதுள்ளது. இந்தக் கலை விழாக்கள் மூலம் குழந்தை மாஸ்டரின் திறமைகளும், புகழும் எல்லா இடங்களுக்கும் பரவியதுடன் எல்லோராலும் வியந்து போற்றிப் பேசப்படும் ஒருவராகக் குழந்தை மாஸ்டர் விளங்கலானார்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற களியாட்ட அரங்கங்களிலும் இவரது கலை நிகழ்ச்சிகள் இல்லாவிட்டால் அது சோபையளிக்காது. இவரது ஆக்கமும் திறமைகளும் இவர் சார்ந்திருந்த பாடசாலைகளின் மாணவர்கள் மூலம் கல்விப்புலம் சார் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அரங்கேறிப் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றன. வட்டார, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் இவ்வகைச் செயற்பாடுகள் இடம் பெற்று வந்தன.

குழந்தை மாஸ்டர் விளையாட்டுத் துறையிலும் தலை சிறந்து விளங்கிய ஒரு வீரராகப் பரிணமித்தார். பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டு விழாக்களின் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும் குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் திடீரென நுழைந்து பங்குபற்றி முன்னணி வீரராகப் பரிசுகள் பெற்றவர். முருங்கன் பொதுசன விளையாட்டுக் கழக உறுப்பினராகவிருந்து மாவட்ட மட்ட கரப்பந்து, கால்பந்துப் போட்டிகளிலும் சிறப்பாக ஆடிப் பாராட்டுக்கள் பெற்றவர்.

1970ஆம் ஆண்டில் நான் ஆசிரியர் சேவையில் இணைந்த பின்னரும் குழந்தை மாஸ்டருடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. எமது கடமை நிமித்தம் தூரத்திலுள்ள பணித்தளங்களுக்குச் சென்று விடுவதால் அவ்வப்போது நடைபெறும் ஆசிரியர்கள் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் சந்தித்துப் புன்னகைப்பது மட்டும் இடம் பெற்றுவந்தது. 1982இல் எனக்கு அதிபர் பதவி கிடைத்த பின்னர், அதிபர்கள் கூட்டம், வட்டார மட்டத்திலான இணைப்பாட விதான செயற்பாடுகள் தொடர்பான நிகழ்ச்சிகள் என்பன இவரை அணுகுவதற்கான சிறு சிறு வாய்ப்புகளாகப் பச்சைக்கொடி காட்டின.

## 2. 1991 தொடக்கம் 2000 வரையி லான காலப்பகுதி

அரசின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பு மாறுதல்களின் ஓர் அம்சமாக 1986இல் கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பு நடைமுறைக்கு வந்தது. பதினொரு பாடசாலைகளை உள்ளடக்கிய முருங்கன் கொத்தணியின் பிரதி அதிபராகவும் மன்/கற்கடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலையின் அதிபராகவும் குழந்தை மாஸ்டர் கடமையாற்றிக் கொண்டிருந்தார். நாட்டில் அசாதாரண சூழ்நிலைகள் நிலவிய காலம் அது. பிரயாணக் கஸ்டங்கள், அனுமதிப் பத்திர நடைமுறைகள், தரைப்பாதைகள், புகையிரதப் பாதைகள் மூடப்பட்டு மாற்றுப் பாதைகள், கடல் வழிப் பாதைகள் என்பன மக்களுக்கு கஷ்டங்களைத் தந்து கொண்டிருந்த காலம் அது. முருங்கன் கொத்தணி அதிபராக இருந்த அமரர் திரு. செபமாலை அவர்களும், மன்/முருங்கன் ம.வி. பிரதி அதிபர் திரு. சூசையப்பு அவர்களும் கொழும்பிலிருந்து கடல் மார்க்கமாகத் திரும்பி வந்து கொண்டிருந்த போது வங்காலையில் அகால மரணமெய்தினர்.



1990களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவம் 1991 மாசி 17ஆம் திகதி நடை பெற்றது. இதனால் மன்/முருங்கன் ம.வி. அதிபர் பதவி, முருங்கன் கொத்தணி அதிபர் பதவி, மன்/முருங்கன் ம.வி. பிரதி அதிபர் பதவி என்பன வெற்றிடமாகின.

மன்/சூரியகட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை அதிபராகக் கடமை புரிந்து கொண் டிருந்த எனக்கு அப்போதைய மன்னார் மாவட் டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ்.வேதநாயகம் அவர்களால் மன்/முருங்கன் ம.வி. அதிபராகவும் முருங்கன் கொத்தணி அதிபராகவும் உடன் பொறுப்பேற்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டது. பணிப்புரைக்கமையக் கடமைகளை ஏற்பதற் காகச் சென்றேன். பாடசாலையில் ஆசிரியர் களும் மாணவர்களும் ஏற்கெனவே நடைபெற்ற நிகழ்வுகளால் கலவரமும் பயமும் அடைந்த நிலையில் காணப்பட்டனர். பல ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோருடன் அச்சம் காரண மாக மடு திறந்த நிவாரண நிலையம் நோக்கி இடம் பெயர்ந்து சென்றிருந்தனர்.

என்னை உருவாக்கிய பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்கச் சென்றபோது என்னை இன்முகம் கொண்டு தலைமை தாங்கி நின்று வரவேற்ற நல்ல மனிதர் குழந்தை மாஸ்டர்தான். இந்த நிகழ்வு இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது. அந்நியோன்னிய பழக்கங்கள் எம்மிடையே இல்லாதிருந்தும் பலகாலம் நெருங்கிப் பழகியவர் போன்று என்னை ஆசிரியர் கள், மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைத்து ஆசிகூறி, தெம்பும் ஊட்டினார். கடமை ஏற்பு முடிந்த பின்னர் தன் பாடசாலைக் கடமை யின் நிமித்தம் சென்று விட்டார். அன்று முதல் நான் அப்பாடசாலையின் அதிபர் பதவியை வகித்த காலம் வரை தினமும் தன் கடமை முடித்து திரும்பும்போது எனது பாடசாலை அலுவலகம் வந்து நிர்வாக விடயங்களைக் கலந்துரையாடுவார். அவரிடமிருந்து வழிகாட்டு தல்களையும் பல அனுபவங்களையும் நான் பெற்றுக்கொள்ள இந்தச் செயற்பாடு உறுது ணையாய் அமைந்தது.

போர்ச் சூழலில் அகப்பட்டிருந்த மன் னாரின் பெரு நிலப்பரப்பு பிரதேசம், நிர்வாக மையமாக விளங்கிய மன்னார் நகரிலிருந்து சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலை யில் விளங்கியது. மடுத்திருப்பதியில் அமைந் திருந்த நலன்புரி நிலையத்துக்கு பெரும்பாலான மக்கள் புகலிடம் தேடிச் சென்றிருந்தனர். நான் எனது கடமைகளை இலகுவாக முடிப்பதன் பொருட்டு மன்/முருங்கன் மகா வித்தியால யத்திற்குரிய விடுதி ஒன்றில் குடும்பத்துடன் வசித்து வந்தேன். மன்னார் நகரிலிருந்து கடல் மார்க்கமாக விடத்தல்தீவு ஊடாக வரும் சகல நிர்வாக அலுவலர்களும் மடு நலன்புரி நிலையத் திலேயே உப அலுவலகங்களை அமைத்து செயற்பட்டு வந்தனர். எமது மாவட்டக் கல்வி அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்று மடு நலன்புரி நிலையத்தில் அமைந்திருந்தது. பெரு நிலப்பரப்பில் உரிய இடத்தில் இயங்கிக் கொண் டிருந்த ஒரேயொரு கொத்தணியாக முருங்கன் கொத்தணி விளங்கியது. ஏனையவை யாவும் மடு நலன்புரி நிலையத்தை நோக்கி நகர்ந்திருந்தன.

வாரத்தில் இரண்டு தடவையாவது கொத்தணி அதிபராகிய நான் மடு சென்று அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. குழந்தை மாஸ்டர் என்னிடம் வந்து கூறுவார். “நீங்கள் தனியாக மடுவுக்குச் செல்ல வேண் டாம். பக்கத் துணையாக நானும் வருகிறேன்” என்று. அவரது அன்பான கோரிக்கையை என்னால் மறுக்க முடியுமா? இருவரும் காலை யில் அவரவர் மிதி வண்டியில் மடு நோக்கிய பயணத்தை ஆரம்பிப்போம். மாலையில்தான் முருங்கன் திரும்புவோம். இடையில் பல தரிப்பி டங்கள், பலமுறை தேநீர் சிற்றுண்டிகள். கடமை சார்ந்ததும் தனிப்பட்டதுமான பல்வேறு விடயங் களையும் இருவரும் மனம்விட்டுப் பேசிச் சுவாரஸ்யமாகப் பயணத்தை முடிப்போம்.

1994இல் கொத்தணி அமைப்பு முறை மாறி முருங்கனில் நானாட்டான் பிரதேச கல்வி அலுவலகம் ஆரம்பிக்கப்படும் வரை இவ்வித மாக இருவரது நட்பும் செயற்பாடுகளும் இடம் பெற்றன. எமது பதவிகளில் கொத்தணி அதிபர், பிரதி அதிபர் என்ற நிலைமாறி உதவிக் கல்விப் பணிப்பாளர் - அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி - அதிபர் என்ற நிலைகள் ஏற்பட்டாலும் இரு வரும் நண்பர்கள் என்ற நிலையையே முதன் மைப்படுத்தி உறவாடி வந்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தணி அமைப்பு முறையிலும், கல்விக்கோட்டம் என்ற முறையிலும் எனது தலைமையில் வருடாந்தம் தமிழ்மொழித் தினம், ஆங்கிலமொழித் தினம், விளையாட்டுப் போட்டிகள், குழு விளையாட்டுக்கள் ஆகியன பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படுவதுண்டு. இவ்வித செயற்பாடுகளில் பக்கபலமாக நிற்பது, ஆலோசனைகள் வழங்குவது, தீர்ப்புகள் வழங்குவது, தலைமையேற்பது போன்ற பல விடயங்களிலும் குழந்தை மாஸ்டரின் பங்களிப்பு கனதிமிக்கதாக அமைந்திருக்கும்.

எம் இருவரிடையேயும் ஏற்பட்ட நட்பு வளர்ந்து குடும்ப உறுப்பினர்களிடையேயும் பரஸ்பர நட்புகள் உருவாகி இரு குடும்பங்களும் அன்பும் பாசமும் கொண்டு பழகும் சூழ்நிலைகள் ஏற்பட்டன. தனது குடும்பத்தில் நிகழும் சகலவித நற்காரியங்களிலும் தன் உறவுகளை அழைப்பது போல் எம்மையும் அழைத்து உபசரிப்பார். குழந்தை மாஸ்டரின் மூத்த மகன்மார் இருவரும் பிரான்ஸ் நாட்டின் பிரஜைகளாவர். அவர்களது அழைப்பின் பேரில் இவர் கொழும்பு சென்று வருவது வழக்கம். கொழும்பு சென்று திரும்பியவுடன் முதல் வேலையாக என்னை வந்து சந்திப்பார். பல்வேறு செய்திகளையும் எடுத்துக் கூறுவார். தான் இங்கு இல்லாதபோது நடந்த விடயங்களை ஆர்வத்துடன் என்னிடம் கேட்டு அறிந்து கொள்வார். பழவகை, இனிப்புப் பண்டங்களை எனது பிள்ளைகளுக் கென்று வாங்கி வந்து கொடுத்து மகிழ்வார். எனது மகனிடம் அதிக பாசம் வைத்து அன்பாக அழைத்துக் கலந்துரையாடிப் புத்திமதி கூறுவார்.

நாட்டுச் சூழ்நிலையில் சிறிது மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது. 1997ஆம் வருட ஆரம்பத்தில் எனது குடும்பத்துடன் நான் சொந்தக் கிராமத்துக்குத் திரும்பிவிட்டேன். கடமையின் நிமித்தம் தினமும் முருங்கன் வருவதால் கடமை முடிந்த பின் தினமும் அவரை வீட்டில் சென்று சந்திக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொண்டேன்.

### 3. 2000 தொடக்கம் இற்றை வரையிலான காலப்பகுதி

*08.03.2000* திகதியிலிருந்து குழந்தை மாஸ்டர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். கடமைசார் விடயங்களில் பக்க பலமாக நின்ற ஒரு நண்பனின் பணி ஓய்வு எனக்குச் சற்று கவலையையும் செயற்பாடுகளில் தளர்ச்சி நிலையையும் ஏற்படுத்தியமையை என்னால் உணர முடிந்தது. அரச சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தாலும் அவரது கலைச் சேவை தொடர்ந்து கொண்டேயிருந்தது. தன் மனைவி, மக்கள், சகோதரர், உறவினர்களுடன் மேடையேறி நடித்துவந்த கலைஞர் தற்போது மகள் வயிற்றுப் பேரனுடன் மேடையேறி நடிப்புத் திறனைக் காட்டத் தொடங்கினார். பேரன் சாகித்தியனையும் இணைத்துக் கொண்டு கலைப் படைப்பொன்றை மேடையேற்றினார். புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற அருட்பணி விமல்ராஜ் அ. ம.தி அவர்களின் குருத்துவ திருநிலைசார் வைபவத்தில் மேற்காட்டிய காட்சியை நான் கண்டு களித்தேன். இதுவும் ஒரு மறக்க முடியாத நிகழ்வாகவுள்ளது.

பணி ஓய்வின் பின்னர் குழந்தை மாஸ்டர் தன் மனைவி றோஸ்மேரி அக்காவுடன் பிரான்ஸ் தேசம் செல்லும் வாய்ப்பை இறைவன் அவருக்கு அருளியிருந்தார். குழந்தை மாஸ்டரின் கலைப் புகழ் அவரது மக்கள் மூலமாக பிரான்ஸ் தேசத்திலும் இன்னும் புலம் பெயர் தமிழர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் நாடுகளிலும் பரப்பப்பட்டுக் கொண்டு வருகின்ற நல்ல செய்தியையும் இவ்வேளையில் குறிப்பிடவிரும்புகிறேன். பிரான்ஸ் தேசத்தில் குழந்தை மாஸ்டர் தம்பதிகள் தங்கியிருந்தபோது அங்குள்ள புலம்பெயர் தமிழர்களால் அவருக்கு பாராட்டு விழா ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்த மகத்தான நிகழ்வுகளை காணொளி மூலம் கண்டுகளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்துடன் அவரது மூன்றாவது புதல்வன் அருட் பணி அன்புராசா அ.ம.தி. அவர்கள் பிரான்ஸ் நாட்டில் லூர்து திருத்தலத்தில் மூன்று ஆண்டு கள் ஆன்மீகப் பணி புரியும் அழைப்புப் பெற்றவர் என்பதும் மகிழ்ச்சிக்குரியதே. உண்மையிலேயே இவ்வித உன்னதநிலை இறைவனால் ஆசீர் வதிக்கப்பட்டவர்களுக்கே கிடைக்கும் பாக்கிய மாகும். குழந்தை மாஸ்டரும் குடும்பமும் இறை வனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதற்கு இது சாட்சியம் பகர்கிறதல்லவா?

கால ஓட்டத்தில் வயது முதிர்ச்சி காரண மாகக் குழந்தை மாஸ்டரால் கலைச் சேவைகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையை யிட்டுத் தமிழ்த்தாய் கவலை கொண்டுள்ளாள். இருப்பினும், அவரது சேவைகளை அவரது மக் கள், சகோதரர்கள், மருமகன் திரு. சந்தியோகு அதிபர் ஆகியோர் தொடர்ந்து ஆற்றி வருவது தமிழ்த்தாய்க்கு ஆறுதலைத் தருகின்றது.

குழந்தை மாஸ்டர் றோமன் கத்தோ லிக்க பரம்பரையில் உதித்தவர். ஆழ்ந்த விசுவாச மும் ஈடுபாடும் காட்டி வந்துள்ள உத்தம கத்தோ லிக்கராவார். அவரது குடும்ப உறுப்பினர்கள் எவரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. விசுவாசத்தில் இவரது உண்மைத்துவத்தை விளக்க ஒரு சிறு சம்பவம். மகன் அன்புராசாவை குருமடத்தில் இணைக்கும் முயற்சியில் ஈடுபட் டார் குழந்தை மாஸ்டர். மகனைக் குருமடத் துக்கு அழைத்துச் செல்கின்றார். பயணத்தின் போது இவரது அபிமான ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அவரிடம் தன் மகனைக் காண்பித்து இவர் குருவாக வர ஆசைப்படுகிறார். இவருக்கு உங் கள் ஆசீரையும் வாழ்த்துக்களையும் தந்து புத்திமதி கூறுங்கள் என அன்புரிமையோடு கேட்கிறார். அவ்வாசிரியர் மகனைப் பார்த்து அப்போது கூறுவார், "மகனே நீ ஒரு குருவாக வருவதை நான் விரும்பவில்லை. நீ ஒரு நல்ல குருவாக வரவேண்டும் என விரும்பி ஆசிக்கி றேன்" என்று. இந்த நிகழ்வை குழந்தை மாஸ்டர் அடிக்கடி என்னிடம் கூறிப் பெருமைப்படுவார்.

தனது கலைச் சேவைகளால் திரும றைக்கும் இறைவனுக்கும் அளப்பரிய பணிகள் புரிந்துள்ளார். புனித யாகப்பர் ஆலய துணைப் பங்கில் இவரது குடும்பமும் உறவுகளும் என்ற முறையில் அருட்பணியாளர்களாக நால்வரும், அருட்சகோதரி ஒருவருமாக அழைப்பு பெற்றுள் ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

குழந்தை மாஸ்டருடையவும் புனித யாகப்பர் ஆலய மக்களதும் விசுவாச சொத்தும் கலைப் பொக்கிஷமுமாக விளங்குவது புனித சந்தியோகுமையோர் நாடகம். இரண்டிரவுக் கதையாகும். தங்கள் மூதாதையோரான புலவ ரால் ஆக்கப்பட்டதெனப் பெருமையாகக் கூறுவார். இதனைப் பேணிப் பாதுகாத்து மேடை யேற்றிப் பக்தியுடன் இறை புகழ்பாடிக் கொண்டா டுவதில் முக்கியமானவர் குழந்தை மாஸ்டர் தான். இந்நாடகத்திற்கான நெறியாள்கை, ஆடல் தருக்கள், பக்க வாத்தியங்கள், பிற்பாட் டுக்கள், அலங்காரங்கள் யாவும் இவரது தலை மையிலும் வழிகாட்டலிலும் நடைபெறுவது ஆச்சரியம் மிக்க ஒன்றாகும். இந்த நாடகத்தைத் தன் தலைமையில் ஆறு தடவைகள் மேடை யேற்றியிருப்பதாகக் கூறிப் பெருமைப்படு கின்றார்.

குழந்தை மாஸ்டர் என்னும் தனி மனி தனைப் பல்வேறு பரிமாணங்களில் நம்மால் பார்க்கவும் புரிந்து கொள்ளவும் முடிகின்றது. இவர் பிறப்பினால் ஒரு தமிழர். செம்மையாகத் தமிழை வளர்த்த செந்தமிழர். இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைகளையும் அன் னைக்கு அணிவித்த முத்தமிழ் வித்தகர். நாவன்மை கொண்டு தமிழோசை முழங்கினார் எனவே நாவலர். கவி மாலைகளால் தமிழை அலங்கரித்த கவிஞர்- பாவலர். பலதையும் பத்தையும் நாடகமாகப் படைத்த புலவர். கூத்து மேடைகளில் ஆடல்தரு பாடினார் எனவே அண்ணாவி. பல்வேறு காலங்களில் பல படைப் புக்களை வெளிக்கொணர்ந்த ஒரு படைப்பாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களை எடைபோட்டு விளக்கம் தரும் இலக்கியவாதி. நடிப்பாற்றலை மேடைகளில் எண்பித்த நடிகர். வீணை வித்துவான். மிருதங்க வித்துவான். குரல் வளத்தினால் மக்கள் மனங் களை வென்ற பாடகர். மேடைகளில் முழங்கும் பேச்சாளர். ஒப்பனைத்திறன் மிக்க ஒப்பனை யாளர். போட்டிகளில் தீர்ப்புக் கூறும் நடுவர். கதைகளை ஆக்கியளித்துள்ள கதாசிரியர். நாடகங்களை ஆக்கியுள்ள நாடகாசிரியர். நூல்களை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ள நூலாசிரியரும், பதிப்பாசிரியரும் ஆவார். மேற் காட்டிய அத்தனை திறன்களின் கூட்டுவடிவம் தான் கலைஞர் குழந்தை. வாழ்க்கைப் பயணத்துக்குத் தேர்ந்தெடுத்த துறைகளால் விவசாயி - ஆசிரியர் - அதிபர். குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் சமூக- சமய நிறுவனங்களுக்கும் தலைமையேற்கும் தலைவர். விசுவாச வாழ்வுக் குச் சாட்சியம் பகன்று நிற்கும் உத்தம கத்தோ லிக்கர். அரசு இவருக்கு அளித்த பட்டம் 'சமா தான நீதவான்', கலை இலக்கியப் பேரவை தந்த கௌரவம் 'கலாபூஷணம்'.

பழகுவதற்கு இனிமையான பண்பாளன். உள்ளம் தன்னில் எளிமை மிளிரும் ஒரு குழந்தை. குழந்தை மாஸ்டர் நீடிய ஆயுளும் சுக வாழ்வும் பெற்றிட இறைவனை வேண்டி என் சான்றிதழை நிறைவு செய்கின்றேன். ■

## முருங்கன் வாழ் கலைஞர் 'குழந்தை' அவர்களைப் பாராட்டி முருங்கன் மகாவித்தியாலயம் வழங்கும் பாமாலை

சீரான வயல்கள் போராக விளைந்திடும்
ஊரான முருங்கனிலே - நல்ல
சீராளன் செபஸ்தியான் பேராளப் பிறந்திட்ட
தாராளன் அரங்கினிலே - தினம்
போராடும் உள்ளங்கள் நீராகக் குளிர்ந்திடக்
காராளன் கரந்தனிலே - புகழ்
ஓராயிரம் படைத்து நேராக நிலைப்பதைப்
பார்காணும் நிரந்தரமே.

நீலவானிலே நீந்திடும் நிலவெனக்
கோலமிட்ட குழந்தை —அவன்
பால வயதிலே பாங்கான கலைகள்
ஞாலமிட்ட எந்தை — எந்தக்
காலமீதிலும் காந்த முழவென
ஒலமிட்ட விந்தை - கலை
மூலவேரிலே மூழ்கித் திளைத்த
(சா) ஜாலமிட்ட சிந்தை.

கானக்குயிலெனக் கானம் பயிலும்
ஞானக்குழந்தையாகி — கலை
மோனத்திருந்து தானமளிக்கும்
கோன் அக்கண்டியனாகித் - தன்
மானம் திறம்பாது பெண்மானம் காக்க
யார் குழந்தையாகி - அன்
பான பரிசாகப் பொன்னாரம் தந்தானே
கவரி வீசிய காவலனாகி.

ஏங்கிடும் இதயமெல்லாம் நீங்காது நிறைந்து
தாங்கிடும் துங்கவன் - கலை
தேங்கிடும் தீஞ்சுவைத் தெங்கென
ஓங்கிடச் செய்வான் - புகழ்
வீங்கிடும் வெங்கலி பங்கமுற்று
ஆங்கு தூங்கிடும் - எனவே
பாங்குற நாங்களும் சங்கொலி முழக்கி
ஓங்குற வாழ்த்துதும்.

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
மகா வித்தியாலயம்,
முருங்கன்.

*நன்றி:*
*கலைஞர் குழந்தை பாராட்டுவிழா சிறப்பு மலர், 27.07.1982*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசமுகன் குழந்தை



**பி.எம்.செபமாலை**
*முன்னைநாள் மன்னார் மாவட்ட சபைத் தலைவர், ஆட்காட்டிவெளி, மன்னார்.*

உலகில் பிறக்கின்ற அத்தனை குழந்தைகளும் இயல்பாக பல திறன்களை ஒருங்கமையப் பெற்றவர்களாக திகழ்கின்றனர். ஆனால் இத்திறமைகளை இனம் கண்டு, அர்ப்பணிப்போடு, சரியான பாதையில், நுட்ப நுணுக்கங்களை அறிந்து, உயர் பயிற்சி பெறுகின்ற போது, அத்துறையில் மற்றவர்களைவிட விஞ்சி உயர்ந்து நிற்பதை காண்கின்றோம். இத்தகையோர் தங்கள் திறன்களுக்கேற்ப, உலக மட்டத்திலோ, தன் நாட்டிலோ அல்லது அவர் வாழும் பிரதேசத்திலோ சாதனையாளர்களாகக் கணிக்கப்படுகின்றனர். கலைத்துறையில் நாட்டிலும், தான் வாழும் பிரதேசத்திலும் உயரிய சாதனைகள் பல படைத்தவர்தான் பெருமைக்குரிய ஆசிரியர் குழந்தை அவர்கள். ஒரு பிறவிக் கலைஞரான இவர் சாதித்த சாதனைகளுக்கு மதிப்பளித்து அரசும், பல நிறுவனங்களும், கிழக்குப் பல்கலைக்கழகமும், பல சமூக அமைப்புகளும் பல பட்டங்களையும் விருதுகளையும் வழங்கி மதிப்பளித்திருப்பது பாராட்டத் தக்கதாகும். இவர் திறமைகளை மன்னார் மாவட்ட மக்கள் பார்த்து, வியந்து மகிழ்ந்து வாழ்த்துகின்றனர்.

சிறந்த பண்பாளரான குழந்தை, இறை நம்பிக்கை கொண்ட ஒரு கனவான் ஆவார். இவர் கடந்துவந்த வாழ்க்கைப் பயணத்தின் ஒவ்வொரு பருவத்திலும், மிகச் சிறப்பாகக் கடந்து வந்ததாக உணர்கின்றேன். மாணவனாக, ஆசிரியராக, அதிபராக, கணவனாக, தந்தையாக என ஒவ்வொரு பருவத்திலும் பொறுப்புக்களை நன்குணர்ந்து, அர்ப்பணிப்போடு செயல்பட்டு வெற்றி கண்டவர். தந்தையாக கல்வியின் மகத்துவத்தை நன்குணர்ந்து பிள்ளைகள் கல்வியில் மாத்திரமின்றி, சிறந்த பண்புகளோடு ஒழுக்கத்திலும் உயர வழிகாட்டி வளப்படுத்தியவர். இதன் பயனாக, குருவாக, ஆசிரியர்களாக, வங்கிப் பணியாளராக, இருவர் வெளிநாட்டிலும் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் வகையில், பிள்ளைகள் தலை நிமிர்ந்து நிற்பது பாராட்டுக்குரியதாகும்.

## முதற்சந்திப்பு

நான் முதன் முதலாக ஆசிரியர் குழந்தை அவர்களை ஒரு வித்தியாசமான சூழலில் பார்க்க நேர்ந்தது. இன்னும் அந்நிகழ்வு என் மனதில் பசுமையாக இருந்து கொண்டு இருக்கின்றது. 1956ஆம் ஆண்டு நாட்டின் பிரதமராக திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா தேர்தலில் தெரிவு செய்யப்பட்டார். இவர் ஆட்சி அமைத்து 53 நாட்களுக்குள் சிங்களம் அரச கரும மொழியாக சட்டம் இயற்றப்பட்டது. அப்போது தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக இருந்த திரு. S.J.V. செல்வநாயகம் அவர்கள் தலைமையில், இச்சட்டத்தை எதிர்த்து பல சாத்வீகப் போராட்டங்கள் தமிழ் அரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக வடகிழக்கில் அரசின் செயற்பாடுகள் இயங்கவிடாது மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டுநகர் போன்ற தமிழ் மாவட்டங்களில் அரச செயலகத்திற்கு முன்பாக இவை நடைபெற்றன. மன்னாரிலும் அப்போதைய பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் அமரர் திரு. V.A. அழகக்கோன் தலைமையில் மிக எழுச்சியாக நடைபெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக எமது பகுதி மக்கள் சென்றபோது, மாணவனாக இருந்த நானும் பார்ப்பதற்கு கூடச் சென்றேன். மன்னார் கச்சேரிக்கு முன்பாக பெரும் கூட்டம். மக்கள் வீதி ஓரத்தில் அமர்ந்து இருந்தனர். அங்கு ஒரு இளைஞன் தமது சிம்மக் குரலில் எழுச்சிப் பாடல்களை உணர்ச்சியோடு பாடிக் கொண்டிருந்தான். அவருடைய குரல் வளமும், அவர் பாடிய பாங்கும், அங்கு கூடி இருந்தோரை மெய்மறக்கச் செய்தது. நானும் அப்பாடல் களைக் கேட்டு வியப்படைந்தேன். பின்பு நான் எனக்குப் பக்கத்தில் இருந்த பெரியவரிடம், "இவர் யார்? இவருடைய பெயரென்ன?" என்று கேட்டேன். அவர் "இது முருங்கன் பொடியன், பெயர் தெரியாது" என்றார். பல வருடங்களின் பின்புதான் இவர் ஆசிரியர் குழந்தை என்பதை தெரிந்து கொண்டேன். இந்த முதற் சந்திப்பில் அவரை ஒரு சிறந்த பாடலாசிரியராக, இசைய மைப்பாளராக, பாடகராக இனம் கண்டு கொண்டேன்.

## இரண்டாம் சந்திப்பு

1976ஆம் ஆண்டில் மாந்தை வடக்கு கிராம சபையின் தலைவராக நான் பதவி வகித்த போது, கலைஞர்களை ஊக்குவித்து கௌரவப் படுத்த வேண்டும் என்ற நோக்கோடு, கலை விழாவை மூன்று நாட்கள் மாவட்ட ரீதியில் நடத்துவதென சபையால் தீர்மானிக்கப்பட்டது. இவ்விழாவில் நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப் பாட்டு என பல நிகழ்ச்சிகளை போட்டி நிகழ்ச் சியாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி போட்டிகளில் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி கலாமன்றங்கள் போட்டி யிட்டன. குறிப்பாக வங்காலையை சேர்ந்த அமரர் திரு. மக்சிமஸ் லெம்பேட் ஆசிரியரின் கலாமன்றம், மன்னார் பட்டினத்தை சேர்ந்த அமரர் திரு. சூசைநாயகம் (நாவாண்ணன்) அவர்களுடைய கலாமன்றம், இசைமாலை தாழ்வு திரு. சிங்கராசா, அடம்பன், காத்தான் குளத்தை சேர்ந்த அமரர் இம்மனுவல் ஆசிரியர் அவர்களின் கலாமன்றம், முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் சார்பாக குழந்தை ஆசிரியரென பல மன்றங்கள் பங்கேற்றன.

அரங்கேற்ற நாளன்று, நிகழ்ச்சிகள் ஒன்றை ஒன்று விஞ்சும் வகையில், போட்டிகள் கடுமையாக இருந்தது. நாடகங்கள் நடந்து கொண்டிருக்கையில் ஆசிரியர் குழந்தை தனது குழுவினரை மேடைக்கு அருகாமையில், ஒரு மறைவான இடத்தில் ஒன்று கூட்டி இருந்தார். அங்கு கூத்துமுறைகள் என இறுதிநேர நினை வூட்டல்களை விளக்கிக் கொண்டு இருந்தார். அந்நேரம் நான் மேடைக்கு அருகாமையில் அமர்ந்திருந்ததால், இதை பார்த்து ரசிக்கக் கூடியதாக இருந்தது.

அடுத்து குழந்தை அவர்களின் 'யார் குழந்தை' என்னும் நாடகம் மிக விறுவிறுப்பாக நடந்தது. உச்ச காட்சி தொடங்கியது. ஒரு குழந் தைக்கு இரு தாய்கள் உரிமைகோரி போட்டி போட்டனர். அரசன் தீர்ப்பு வழங்குகின்ற கட்டம். ஒரு நடிகை பச்சிளம் பாலனை கையில் ஏந்திக் கொண்டிருந்தாள். அரசன் (குழந்தை) கையில் வாளோடு நின்றவர் திடீரென குழந்தையின் காலைப்பிடித்து தலைகீழாகத் தூக்க, குழந்தை வீரிட்டு அலற, குழந்தையை இரண்டாக பிளக்க வாளை ஓங்க, சபை விக்கி விறைத்தது. திடீரென மயான அமைதியானது. ஊசி விழுந்தால் கேட்கு மளவிற்கு அமைதி. அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்திய காட்சியை என்றும் மறக்கமுடியாது. இறுதியில் ஆசிரியர் குழந்தையின் நாடகத்திற்கு முதற் பரிசு வழங்கப்பட்டதாக நினைக்கின்றேன்.

இந்த நாடகத்தினூடாக குழந்தை அவர்

**பிற்போக்கு சக்திகளால் ஏற்படுத்தப் படுகின்ற தடைகள், அடக்குமுறைகள் போன்றவற்றை உடைத்தெறிந்து தகர்க்கும் ஆற்றல் கல்வி ஒன்றிற்கு மாத்திரமே உண்டு. இந்த உண்மையை நன்குணர்ந்த ஆசிரியர் குழந்தை, அவர் தந்தை போன்ற பெரியோர்கள் கல்வி என்ற ஆயுதத்தைக் கொண்டு சகல தடைகளையும் உடைத்தெறிந்து வெற்றி கண்டுள்ளனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பல திறமைகளை, ஆற்றல்களை வெளிக் கொணர்ந்ததை அறியக் கூடியதாக இருந்தது. ஒரு சிறந்த தயாரிப்பாளரை, கதாசிரியரை, அண்ணாவியாரை, நடிகரை, வாத்தியக் கலை ஞரை, ஒப்பனையாளரை இனங்காண அரிய வாய்ப்பாக அமைந்ததை என்றும் மறக்க முடியாது.

## மூன்றாம் சந்திப்பு

1990களில் ஆட்காட்டிவெளி பங்கில், அதுவரை உதவிப் பங்குத் தந்தையாக இருந்த அருள்பணி பெனோ அலெக்சான்ரர் தற்காலிக பங்குத் தந்தையாக ஆயர் அவர்களினால் நியமிக்கப்பட்டார். தபசு காலத்தில் 06ஆவது வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமை பரப்புக்கடந் தான் கர்த்தர் கோயில் திருநாளாகும். இத் தினத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் ஒன்று சேரும் திருநாளாகும். தபசு காலத்தில் வரும் இன்னாளைச் சிறப்பிக்க திருப் பாடுகளின் காட்சியை, அன்றிரவு நடத்த பங்குத் தந்தை விருப்பம் கொண்டார். இது விடயமாக பங்குச்சபையைக் கூட்டி தனது விருப்பத்தை எடுத்துக்கூறினார். பங்குச்சபை உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதாவது இப்படி ஒரு பெரிய திட்டத்தை 25 நாட்களுக்குள் செய்து முடிக்க முடியுமா? என தங்கள் ஆதங்கத்தை பங்குத் தந்தையிடம் வெளியிட்டனர். பங்குத்தந்தையும், நாட்கள் போதாது என்பதை அரை மனதோடு ஏற்றுக் கொண்டார்.

அக்கூட்டத்தில் கலந்துகொள்ள என் னையும் பங்குத்தந்தை அழைத்திருந்தார். அங்கு கூறப்பட்ட கருத்துக்கள் திருப்பாடுகளின் காட்சியை பிற்போடுவதற்கு சாதகமாக இருந் ததை அறியக் கூடியதாக இருந்தது. அப்போது நான் பங்குத் தந்தையிடமும் உறுப்பினர்களி டமும், "25 நாட்களுக்குள் சிறப்பாக செய்து முடிக்கலாம். சரியாகத் திட்டமிட்டு, எல்லோரும் ஒத்துழைத்தால் எம்மால் முடியும். இது எமது பங்கின், பங்குத் தந்தையின் சாதனையாக அமையும்" என்றேன். இக்கருத்தை பங்குத் தந்தை உட்பட உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

திருப்பாடுகளின் காட்சிக்குரிய வசனப் பிரதி, இயக்குநர் யாரென கேள்வி எழுந்தது. உடனே நான், "தற்போதைய சூழலில் ஆசிரியர் குழந்தை அவர்களே மிகப் பொருத்தமானவர்" என, எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். மறுநாள் பங்குத் தந்தை ஆசிரியர் குழந்தையை நேரடி யாகத் தொடர்பு கொள்வதென தீர்மானிக்கப் பட்டது.

மறுநாள் பங்குத்தந்தை அவரை நேரடி யாகத் தொடர்பு கொண்டு, எமது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தபோது அவரும் சம்மதம் தெரிவித்தார். பின் அவர் தன்னிடமிருந்த திருப்பாடுகளின் காட்சி வசனப் பிரதியோடு மாலை பங்கு தந்தையோடு வந்து சேர்ந்தார். இது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அன்றிரவே தனிப்பட்ட பாத்திரங்களுக்குரிய வசனப் பிரதிகள் இரவிரவாக அச்சிடப்பட்டு அடுத்த நாள் நடிகர்களை இனம்கண்டு, தேர்ந்து, மூன்றாம் நாள் நடிப்பு பயிற்சி தொடங்கியது. பாடல்களுக்குப் பொறுப்பாக குழந்தை அவர்களின் சகோதரர் திரு. பிலேந் திரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அவருக்குத் துணையாக பெனோ அடிகளாரும், பங்குப் பாடகர் குழாமும் இணைக்கப்பட்டது. எல்லா வேலைகளும் பிரிக்கப்பட்டு பொறுப்புகள் கொடுக்கப்பட்டன.

மேடை 110 அடி நீளத்தில், சிறப்பாக அமைக்கப்பட்டது. இதற்கு தேவையான இரும்பு குழாய்கள், பரல்கள் போன்றவற்றை மடுக்கோ வில் பரிபாலகராகவிருந்த அருட்தந்தை ஸ்ரனி பிலிப் அவர்கள் தந்துதவியதோடு, பெரிய மின் பிறப்பாக்கி இயந்திரத்தையும் தந்துதவினார்.



1997இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்று விதைகள் உற்பத்தியாளர் நிறுவனம், பாடசாலைகள், உழவு இயந்திர உரிமையாளர்கள் என பலரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது.

நாங்கள் எண்ணியபடி 25ஆம் நாள் ஆட்காட்டி வெளி ஆலய முன்றலில் திருப்பாடுகளின் காட்சிகள் அரங்கேறியது. மிகவும் குறுகிய நாட்களுக்குள் இவ்வளவு பிரமாண்டமாக ஒழுங்கமைத்தது பெரிய சாதனையாகும். நிகழ்ச்சி தரமாகவும், சிறப்பாகவும் இருந்ததாக பலரும் பாராட்டினர். இப்பாராட்டுகளுக்கெல்லாம் முக்கிய பங்களிப்புப் செய்த ஆசிரியர் குழந்தை அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். ஒவ்வொரு நாளும் தவறாது குறித்த நேரத்திற்கு வருகை தந்து, பொறுப்போடு தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டதை பங்கு மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். அவர் திருப்பாடுகளின் காட்சியை நெறிப்படுத்தியதோடு, உடைகள், திரைகள் போன்ற பல பொருட்களை தந்துதவியதோடு, நடிகர்களின் ஒப்பனைக்கும், அவர் குழாம் செய்த உதவிக்கும் நன்றி கூறுகின்றோம்.

இந்நிகழ்ச்சியூடாக தன்னை ஒரு சிறந்த இயக்குநராக இனம் காட்டிக் கொண்டதை பெருமையாக வாழ்த்துகின்றேன். இன்றைய விஞ்ஞான யுகத்தில் கல்வியும், நுண் அறிவும், தொழில் நுட்ப நுணுக்கங்களும் மிகப் பாரிய அளவில் விருத்திகண்டு வருகின்றது. அன்றாடம் ஏதோ மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. இம்மாற்றங்களை எதிர்கொள்ள எம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும். மிக வேகமாக செயற்பட வேண்டியுள்ளது. இதன் காரணமாக உலகில் அன்றாடம் நடைபெறுகின்ற அனைத்தையும், ஏன் நாம் தெரிந்து கொள்ள நினைக்கின்ற எவற்றையும் நாம் வீட்டில் இருந்து அறிந்து, தெளிந்து கொள்கின்ற வாய்ப்புக்கள் சகலருக்கும் கிட்டியுள்ளது. இப்படியான சூழலிலும் தெற்காசிய உபகண்டத்தில் இன்றும் பழமை வாதமும், ஏற்றத்தாழ்வுகளும், சமூக ரீதியான தடைகளும், அடக்குமுறைகளும், எதிர்ப்புகளும் இருந்துகொண்டு இருப்பது கவலைக்குரியதாகும்.

பிற்போக்கு சக்திகளால் ஏற்படுத்தப்படுகின்ற தடைகள், அடக்குமுறைகள் போன்றவற்றை உடைத்தெறிந்து தகர்க்கும் ஆற்றல் கல்வி ஒன்றிற்கு மாத்திரமே உண்டு. இந்த உண்மையை நன்குணர்ந்த ஆசிரியர் குழந்தை, அவர் தந்தை போன்ற பெரியோர்கள் கல்வி என்ற ஆயுதத்தைக் கொண்டு சகல தடைகளையும் உடைத்தெறிந்து வெற்றி கண்டுள்ளனர்.

சமூகத்தில் பல உயரிய பொறுப்புக்களை ஏற்று முன்னிற்பது மகிழ்ச்சியான விடயம் மாத்திரமின்றி, ஏனையோருக்கு முன்மாதிரியாக திகழ்கின்றனர். இந்த எழுச்சியின் காரணமாக படிப்படியாக வளர்ச்சிகண்டு, இன்று அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அதிபர், ஆசிரியர், அரச ஊழியரென பல துறையில் பரந்து விரிந்து, உயர்ந்து செல்வதை பாராட்டுகின்றேன்.

பிறவிக் கலைஞனான ஆசிரியர் குழந்தை அவர்கள் கலைத்துறைக்கு கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ளதை பெருமையோடு பாராட்டுகின்றேன். அவரிடம் பத்துக்கு மேற்பட்ட திறமைகள் ஒருங்கே அமையப் பெற்றிருந்ததை, நான் நேரடியாகப் பார்த்து, கேட்டு, ரசித்து அறிந்து கொண்டேன். இத்தனை திறமைகளோடு பல விருதுகளைப் பெற்றிருந்தாலும் என்றைக்கும் பெருமை பாராட்டாமல் தன்னடக்கம் கொண்ட கண்ணியவான். எனவே இவரை பாராட்டி கௌரவிப்பது எம் எல்லோருக்குமுள்ள பெரும் கடனாகும்.

ஆசிரியர் குழந்தை அவர்களின் பாராட்டு விழாவிற்கு முன்னின்று உழைக்கும் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். ஒருவருக்கு எடுக்கப்படும் பாராட்டு விழா அவர் முகதாவில் நடைபெறுவதே சிறப்பாகும். இந்த நல்ல சந்தர்ப்பத்தில் மீண்டும் ஆசிரியர் குழந்தை அவர்களை பாராட்டுவதோடு, அவர் நலத்துடன் இன்னும் பல்லாண்டுகள் வாழ இறை ஆசி வேண்டி எனது எண்ணக் குவியலை நிறைவு செய்கின்றேன்.

"தசமுகன் குழந்தை வாழ்க" ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை செபமாலை பாடிய கல்வெட்டுக்கள்



**செ.இன்பராஜா**
*இசையமைப்பாளர்,*
*பிரான்ஸ்*

*'**கல்வெட்டு**' என்ற சொல்லானது பல பொருள்படுகிறது. அவற்றில் ஒன்று, இறந்த ஒருவரின் நற்செயல்களை, அவரின் ஆளுமைப் பண்புகளை, அவரின் பெறுபேறுகளை, அவரின் குடும்ப சிறப்புக்களை தொகுத்துப் பாடுவதாகும். அமரத்துவம் அடைந்தவர் சமூகத்திற்கோ அல்லது அவர் சார்ந்த அமைப்பிற்கோ-நிறுவனத்திற்கோ செய்த பணிகளை இறந்தவரின் அடக்க நாளில் அல்லது இறந்து 08ஆம், 31ஆம் நாளில் வியந்து பாடுவதைத்தான் 'கல்வெட்டு பாடுதல்' என்று அழைக்கிறார்கள். குழந்தை அவர்கள் பாடிய கல்வெட்டுக்கள்.*

*01. வீ.ஏ.அழகக்கோன், மன்னார், 28.11.1973*
*02. க.மரியதாஸ் சீராழன், மன்னார், 03.04.1979*
*03. ஜோண் மார்க், மன்னார், 29.12.1981*
*04. ம.பெஞ்சமின் செல்வம், நானாட்டான், 28.01.1982*
*05. ச.மரிசால்பிள்ளை, கட்டைக்காடு, 25.02.1982*
*06. செ.அக்னேஸ், ஆவணம், 10.04.1982*
*07. செ.மொத்தம் போல், நறுவிலிக்குளம், 12.04.1982*
*08. பிறிஜெற் ஜெயராசசிங்கம், பரிகாரிகண்டல், 19.05.1984*
*09. பே.செபமாலை இராசையா, மணக்குளம், 22.10.1984*
*10. ச.சவியல், முருங்கன், 24.10.1984*
*11. அன்னம்மா, மன்னார், 26.10.1984*
*12. செ.அருமைறஞ்சன், பரியாரிகண்டல், 15.09.1985*
*13. இம்மானுவேல் ஆசிரியர், காத்தான்குளம், 09.03.1986*
*14. ச.வெற்றிநாயகம், ஆவணம், 21.07.1986*
*15. மெக்சிமஸ் லெம்பேட், வங்காலை, 28.01.1987*
*16. ரி.சிமியோன் அதிபர், சூரியகட்டைக்காடு, 17.04.1988*
*17. க.வித்தியானந்தன், தெல்லிப்பளை, 28.01.1989*
*18. வி.மனுவல், ஆவணம், 13.04.1990*
*19. பே.சூசைப்பிள்ளை, கற்கிடந்தகுளம், 04.12.1990*
*20. மரியநாயகம், இசைமாலைத்தாழ்வு, 09.08.1993*
*21. அந்தோனி குரூஸ், மடு, 08.01.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அகுஸ்தீன் சோசை, மடு, 03.10.1993

23. ஆசிரியர் மரியதாஸ் பீரீஸ், சூரியகட்டைக்காடு, 18.05.1994

24. அந்தோனிக்குருஸ் தபால்அதிபர், நானாட்டான், 08.01.1995

25. செபமாலை, பொன்தீவுகண்டல், 23.01.1996

26. மாதடிமை சூசை, மாவிலங்கேணி, 01.01.1996

27. பி.திருச்செல்வம், முருங்கன், 04.02.1996

28. கொன்ஸ்ரன்ரைன், இசைமாலைத்தாழ்வு, 01.05.1996

29. அந்தோனி கொடுதோர், கற்கிடந்தகுளம், 14.08.1996

30. செபமாலை வில்சன் அதிபர், பாலையடிப்புதுக்குளம், 10.01.1997

31. ப.அன்னம்மா, முருங்கன், 12.08.1998

32. சவிரி அந்தோனியா, மாவிலங்கேணி, 04.04.1999

33. அந்தோனி சோசை, வங்காலை, 04.09.2000

34. நீ.சந்தியாப்பிள்ளை, ஒலிமடு, 06.06.2000

35. அரியதாஸ், பரிகாரிகண்டல், 07.10.2000

36. பறுனாந்து கந்தையை, மன்னார், 23.01.2000

37. தொ.சவிரிமுத்து, ஆவணம், 06.01.2001

38. யோ.சுவர்னாள், கல்நாட்டி, 06.04.2001

39. ஆர்.யே.யோசப் அதிபர், மன்னார்

40. பேதிரு கயித்தான், பொன்தீவுகண்டல், 30.04.2001

41. சூசைப்பிள்ளை வேதநாயகம், பள்ளங்கோட்டை, 08.07.2001

42. விசுவாசம்சந்தி முத்தையா, ஆவணம், 23.06.2001

43. சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ், மன்னார், 09.02.2002

44. இலாசர் சீமாம்பிள்ளை, இசைமாலைத்தாழ்வு, 02.04.2002

45. அந்தோனிப்பிள்ளை செபஸ்தியம்மா, முருங்கன், 2002

46. செல்வவிநாயம் மாணிக்கராசா, முருங்கன், 26.01.2003

47. பேனாட் ஞானசேகரம், மாவிலங்கேணி, 22.04.2003

48. பேதுரு சலோமை, பரிகாரிகண்டல், 19.05.2003

49. சந்தியோகு சூசைதாசன் சம்பா, கற்கிடந்தகுளம், 30.06.2003

50. தங்கராணி இராவரோதயம், வண்ணாங்குளம், 06.07.2003

51. சுவக்கினிப்பிள்ளை சந்தாம்பிள்ளை, பள்ளங்கோட்டை, 22.07.2003

52. சீமாம்பிள்ளை செபமாலை, காத்தான்குளம், 03.11.2003

53. யக்கோப்பிள்ளை மரியம்மா, சூரியகட்டைக்காடு, 26.12.2003

54. மிக்கேல் பிலிப்பு(ஐயாச்சி), முருங்கன், 06.02.2004

55. நாகமுத்து சடாச்சரன், முருங்கன், 29.02.2004

56. சவிரிசராம் யோசேப்பு, முருங்கன், 03.04.2004

57. சூசை கபிரியேல், மாவிலங்கேணி, 12.06.2004

58. பாவிலு சந்தாக்குட்டி, முருங்கன், 22.07.2004

59. கபிரியேல் தமியான் (சீனிப்புலவர்), இசைமாலைத்தாழ்வு, 13.08.2004

60. 02ஆம் அருள் சின்னப்பர் திருத்தந்தையின் அஞ்சலி, மன்னார், 08.04.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. வில்லியம் சிந்தாத்திரை, பறப்பாங்கண்டல், 29.05.2005
62. ம.தியோகுப்பிள்ளை, பொன்தீவுகண்டல், 02.09.2005
63. பத்தினாதன் சவீனம்மா, அரிப்புத்துறை, 15.10.2005
64. பிலிப்புநேஸ்பிள்ளை, இசைமாலைத்தாழ்வு, 04.12.2005
65. ஆரோக்கியம், ஒலிமடு, 28.12.2005
66. நாவண்ணன், மன்னார், 18.04.2006
67. போல்குணசேகரம், முருங்கன், 18.07.2006
68. கிறகோரிப்பிள்ளை செபமாலை, உமநகரி, 27.08.2006
69. நேசம்மா சந்தான், ஆவணம், 08.11.2006
70. ஜெசீலன் டலிமா, வங்காலை, 29.11.2006
71. நா.பாக்கியராசா, சிறுக்கண்டல், 24.05.2007
72. ந.பிச்சைப்பிள்ளை (யோசவ்), கூமாப்பற்று, 13.02.2007
73. செ.எதிர்மன்னசிங்கம், புதுக்கமம், 17.05.2007
74. ய.சகாயநாதன், ஆவணம், 16.04.2007
75. திரேசம்மா, கங்காணிதீவு, 23.08.2007
76. தொ.சந்தான், பிடாரிகுளம், 19.08.2007
77. பே.இராக்கினியம்மா, முருங்கன்பிட்டி, 30.08.2007
78. ம.ஜேறோம், தோட்டவெளி, 01.09.2007
79. அருட்சகோதரர் ஜேம்ஸ், மட்டக்களப்பு, 25.09.2007
80. செபமாலை, கங்காணிதீவு, 15.12.2007
81. வீ.எம்.டபரேரா (அரிப்பு), ஒல்லிமடு, 19.12.2007
82. வி.றீற்றம்மா, முருங்கன், 31.01.2008
83. அந்தோனிப்பிள்ளை, அளவக்கை - புதுக்குடியிருப்பு, 03.02.2008
84. பிச்சைக்குட்டி திருச்செல்வம், பனங்கட்டிக்கொட்டில், 13.02.2008
85. ஆரோக்கியம் பிலிப்பு, பொன்தீவுகண்டல், 23.04.2008
86. கந்தையா இராசையா மாக்கஸ், நானாட்டான், 28.05.2008
87. டி.அந்தோனிப்பிள்ளை, முருங்கன், 14.06.2008
88. ச.ஜேட்றூட் அழகேஸ்வரி, முருங்கன், 28.06.2008
89. சிமியோன், புத்திரகண்டான், 16.11.2011
90. பிறேமரட்ன, முருங்கன்பிட்டி, 08.08.2012

**மன்னார் மாவட்ட அமைச்சரின் ஆசிச் செய்தி**

காலத்தால் கரைந்து விடாத கலைஞர்களுக்கு கவின் விழா எடுத்துக் களிகொள்வது கருத்தொருமித்த காரியமாகும். இந்நிலையில் எமது நாட்டுக்காகக் கலைச் சேவையில் தம்மை அர்ப்பணித்து, மன்னார் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கலை ஆரஞ் சூட்டி மாநகரின் புகழைப் பலரறியப் பறைசாற்றிய குழந்தை அவர்களை கலைச் சேவையில் மின்னும் சூரியனென இன்னும் புகழ்மிக வாழ்த்துகிறேன்.

எம்.ஈ.எச்.மஹ்றூப்

**நன்றி: கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை என்னும் கலைக்குன்று !



**கலைவாதி கலீல்**

S.L.E.A.S.

*முன்னைநாள் உப பீடாதிபதி,*

*தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி.*

**எ**னக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது...

சுமார் முப்பது வருடங்கள் இருக்கலாம். அக்காலத்தில் எனது பிறந்தகமான மன்னார்ப் பட்டிணத்தில் மூர்வீதியில் வசித்து வந்தேன். ஆசிரியத் தொழில் புரிந்தேன்.

அந்த நாட்களில் நான் இலங்கை வானொலியில் ஒரு தொடர் நிகழ்ச்சியை நடத்தி வந்தேன். அந்த நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து அறிவிப்பும் செய்வது நான் என்பதால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கொழும்பு செல்வேன். இரண்டாம் வகுப்பு புகையிரத ஆசனச் சீட்டு வானொலி நிலையத்திலிருந்து எனக்கு அனுப்பிவைக்கப்படும் (இப்போதெல்லாம் அவ்வாறு இல்லை). கொழும்பில் டொரிங்டன் சதுக்கத்திலுள்ள வானொலி நிலையம் சென்று நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்வேன். திரும்பும் போது சிறிய ஒரு சன்மானமும் (பணம்) புகையிரத பயணச்சீட்டும் வழங்குவார்கள். இப்போது சன்மானமும் கூட வழங்கப்படுவதில்லை.

ஒரு முறை வானொலி நிலையத்தில் எனது நிகழ்ச்சியை நடாத்தி முடித்துவிட்டு முன்கூடத்துக்கு வந்தேன். அங்கே, குழந்தை மாஸ்ரர் அமர்ந்திருந்தார். “என்ன விடயம்?” என்று கேட்டேன். “நாட்டுக்கூத்து தொடர்பான ஓர் உரையாடலுக்காக வந்தேன்” என்றார். “குழந்தை! எப்போது ஊர் திரும்புகிறீர்கள்?” என்று கேட்டேன். “இன்றிரவே...” என்றார் குழந்தை. “நானும் இன்று தான் திரும்புகிறேன். இருவரும் ஒன்றாகவே சென்று விடுவோம்” என்று கூறினேன்.

அந்த நாட்களில் இலங்கையில் ஒரே யொரு வானொலி நிலையம்தான் இருந்தது. அதுவும் அரச கட்டுப்பாட்டில், இந்நிலையம் கறுவாத்தோட்டத்தில் பல ஏக்கர் காணியில் வெகு நேர்த்தியாகவும் கலை நயத்துடனும் கட்டப்பட்ட ஒரு பாரிய கட்டடத்தொகுதி ஆகும். பல பெரிய, சிறிய ஒலிப்பதிவுக் கூடங்களைக் (*studios*) கொண்டது. ஒரு துளிக் காற்றுக்கூட உட்புகமுடியாதபடி, (*sound proof*) தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்டவைகளாகும். குமாரதுங்க கலையகம் எனப்படுவது சுமார் 300 பார்வையாளர்கள் அமரக்கூடிய கலையகமாகும். கலையகத்தின் தடித்த கதவுகளைத் திறப்பதற்கே முட்டை குடிக்க வேண்டும். இப்போதெல்லாம் மூலைக்கு மூலை தனியார் வானொலி நிலையங்கள்... ஒரு சிறு அறைக்குள் இருந்தே அனைத்தையும் முடித்து விடுகிறார்கள்.

கோட்டைப் புகையிரத நிலையத்தில் தலைமன்னார் நோக்கிச் செல்லும் புகைவண்டியில் நானும் குழந்தையும் ஒரு வசதியான பெட்டியில் ஏறி அமர்ந்து கொண்டோம். அது இரவுப் புகையிரதம், காலையில்தான் மன்னாரைச் சென்றடையும். எம்மோடு மூவினத்தவர்கள் பலரும் அமர்ந்திருந்தனர்.

நானும் குழந்தையும் கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாடு தொடர்பாகவும் மன்னாரின் பாரம்பரியக் கலைகள், மன்னாரிலுள்ள கலை இலக்கியவாதிகளின் எதிர்காலம் பற்றியெல்லாம் பேசிக் கொண்டும் விவாதித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுமிருந்தோம். தூங்கவே இல்லை. எமக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு சிங்கள அன்பரும் எம்முடன் இணைந்து கொண்டார். அவருக்குத் தமிழ்மொழி புரியாது. அவர் ஒரு கலைஞர் - பாடகரும்கூட என்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு உற்சாகமா கவும் பொறுமையாகவும் பயன்மிக்க வகையி லும் எங்கள் பிரயாணம் தொடர்ந்தது.

வேகமாக ஓடிக்கொண்டிருந்த புகை வண்டி அனுராதபுர புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அப்போது நேரம் கிட்டத்தட்ட 12.00 மணியிருக்கும். நள்ளிரவு! தலைமன்னாரில் இருந்து கொழும்பை நோக்கி வரும் 'இந்தோர்ட் சிலோன் எக்ஸ்பிரஸ்'க்கு வழிவிடும் முகமாகவே எமது புகைவண்டி நிறுத்தப்பட்டது. அந்த நாட்களில் ராமேஸ்வரத்துக்கும் தலைமன்னா ருக்கும் இடையே படகுச்சேவை (கப்பல் சேவை) இருந்தது என்பதைக் கவனத்திற் கொள்க. இந்நகரிலிருந்து இந்தியாவுக்கான பயணக்கட்டணம் மிகக் குறைவு. வாரத்தில் மூன்று அல்லது நான்கு தினங்கள் கப்பல் சேவை நடைபெறும். ஆனால் ஏழு தினங்களும் எக்ஸ்பிரஸ் வண்டி ஓடும்.

கொழும்பிலிருந்து பொல்காவலை வரை தான் இரட்டைப்பாதை. அதன் பின்னர் தலைமன்னார் வரை ஒற்றைத் தண்டவாளம் தான்! வரும் புகைவண்டிக்கு வழிவிடுவதற்காகத் தான் இந்தத் தரிப்பு...

ஒரு மணித்தியாலம் புகைவண்டியி லேயே அமர்ந்திருக்க வேண்டும். என்ன செய் வது? பொழுது போக வேண்டுமே! ஏதாவது செய்தாக வேண்டும். உடனே குழந்தை இழுத்து விட்டார் ஓர் கர்நாடகப் பாடலை! உச்சஸ்தாயிலி ருந்து எழுந்த அந்தக் கணீரென்ற கம்பீரக்குரல் அந்த விசாலமான புகையிரத நிலையத்தையே அதிர வைத்தது. குழந்தை பாடும்போது சிங்கள நண்பர் தாளம் போட்டார். பாடல் முடிந்ததும் சிங்கள நண்பரும் பாடினார். கரகோஷம் வானைப் பிளந்தது. அவரது பாடல் முடிந்ததும் நானும் 'ஏதோ' பாடினேன். நாங்கள் மூவரும் மாறி மாறிப் பாடிக்கொண்டிருக்க பெட்டிக் குள்ளும் பெட்டியைச் சுற்றியும் பெரிய பட்டா ளமே கூடிவிட்டது. புகையிரத நிலைய அதிபரும் தனது இருக்கையைவிட்டு எழுந்து வந்து இதனைப் பார்த்து ரசித்தார்.

உண்மையில் ஒரு கூத்துக் கலைஞ னுக்குத் தேவைப்படும் கட்டுமஸ்தான உடல் வாகு, இராஜகளை பொருந்திய முகலாவண் யம், வெண்கலக்குரல் இவை அனைத்தும் அமையப் பெற்றவர்தான் குழந்தை மாஸ்ரர்.

எனது வாழ்க்கைச் சக்கரத்தில் இடம் பெற்ற மறக்க முடியாத சம்பவங்களில் இதுவும் ஒன்று. இதனை நான் கூறிவைப்பதற்குக் கார ணம் உண்டு.

அனுராதபுரம் போன்ற முற்றுமுழு தான சிங்களப் பிரதேசத்தில் ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும், ஒரு சிங்களவரும் இணைந்து பாடி மகிழ்வதும் அதனை சிங்கள மக்கள் சூழ நின்று பார்த்து இரசிப்பதும் - ஒரு பௌத்தனும், ஒரு கிறிஸ்தவத் தமிழனும், ஒரு முஸ்லிமும் இப்படி அன்னியோன்யமாக நெருங்கி உறவாடுவதும், ஒன்றாய் உணவருந்துவதும் அந்த நாட்களில் இருக்கத்தான் செய்தது. பச்சை தமிழன் ஒருவ னுடைய பாட்டை சிங்கள மக்கள் ரசித்திருக் கிறார்கள். அந்த அன்னியோன்யம், புரிந்து ணர்வு, விட்டுக்கொடுப்பு, ஒருவர் மீது ஒருவர் ஐயம் கொள்ளாமை இவையெல்லாம் இன்று எங்கே ஓடி ஒளித்துக்கொண்டன...

அன்றைய தினமும் அதற்கு முன்னரும் பின்னரும் இற்றைவரை என்னை வெகுவாகக் கவர்ந்த என் நேசத்துக்குரிய ஒரு பெருங் கலைஞர்தான் 'குழந்தை மாஸ்ரர்' என்று நான் பிரியத்துடன் அழைக்கும் செபமாலை மாஸ்ரர். அவரை நான் ஒரு மாஸ்ரராக - ஆசிரியராக பார்க்கவில்லை. பெருங் கலைஞனாகவே காண்கிறேன். வாண்மை மிக்க ஆசிரியர், அதிபர் என்பது வேறு விடயம்.

கலைக்கு மதமில்லை, மொழியில்லை, இனமில்லை, குலமில்லை என்பதற்கு முன் னைய சம்பவம் ஒரு சான்றாகும்.

இவர் குடும்பமோ கலைக் குடும்பம். இவரது தந்தையார் மத்தளம் வாசிப்பதில் கைதேர்ந்த அண்ணாவியார். இவரது சகோதரர் மூவர் நன்கு பாடக்கூடிய இசைக் கலைஞர் களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் ஆரம்பகால இசை நாடகங்களில் தமிழகப் பழம்பெரும் பாடகர்களின் பிரபலமான சினிமா மெட்டுக்கள் இடம்பெற்றன. எனவே மக்களை நன்கு கவர்ந்தன. காலப் போக்கில் ஒரே பாணியிலான மெட்டுக்களை மாற்றியமைத்து, இராகங்கள் - மெட்டுக்களில் புதுமையைப் புகுத்தினார். மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்துக் கலைக்கு புது மெருகூட்டிய பெருமை குழந்தையையே சாரும் எனில் அது மிகையல்ல. அத்தோடு நாடகத்துறைக்கு புதுப்புனல் பாச்சினார். 1964இல் ஆரம்பிக்கப் பட்ட 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' நாடெங்கும் புகழ் பரப்பியது. இற்றைவரை மங்காதும் உள்ளது. வீரத்தாய், யார் குழந்தை, கல் சுமந்த காவலர்கள், புதுமைப்பெண், வீரனை வென்ற தீரன், அன்புப்பரிசு, பரதேசி மகன், இறைவனா புலவனா? போன்ற நாடகங்கள் இலங்கை நாடக வரலாற்றில் இன்றும் பேசப்படும் நாடகங்களாகும்.

பல்வேறு விருதுகளை வென்றுள்ள குழந்தை மாஸ்ரர் மிகப் பெறுமானம் மிக்க நான்கு விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. சாஹித்திய விருது, கலாபூஷண விருது, ஆளுநர் விருது, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய 'தலைக்கோல்' விருது என்பவையே இந்நான்கு விருதுகளுமாகும்.

கலையே உலகு, கலையே இலட்சியம், கலையே வாழ்க்கை என்ற கொள்கைக்கொப்ப வாழ்ந்துவரும் ஒருசிலரை நான் கண்டிருக்கிறேன். அவர்களுள் முதன்மையானவராக நான் குழந்தை மாஸ்ரரைப் பார்க்கிறேனெனில் அது மிகைப்பட்ட கூற்றல்ல. ■

**செ.செபமாலை (குழந்தை) ஆசிரியரின் பரிசு பெற்ற நாடகங்கள் என்ற நூலுக்கு 1997ஆம் ஆண்டு வழங்கிய வெளியீட்டுரையில்,** "குழந்தை மாஸ்ரர் என்று அழைக்கப்படும் ஆசிரியர் திரு.செ.செபமாலை அவர்கள் மன்னார் மாவட்ட கலையுலகில் நன்கு அறியப்பட்டவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை ஸ்தாபித்து முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு மேலாக கலைப் பணி ஆற்றி வருபவர். மாதோட்டத்ததின் பாரம்பரிய நாட்டுக்கூத்து முறைமைக்கு புதுமெருகேற்றிய புலவராவார்.

இவரது ஆக்கங்கள் பல அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளிலும் பரிசில்களைப் பெற்றுள்ளன. நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு மத்தியுலும் இன்றும் தொடர்ந்து கலாமன்றத்தை கட்டுக்கோப்புடன் வழிநடத்தி வருகின்றார்" எனக் குறிப்பிடுகிறார்.

**மேலும், திரு.செ.செபமாலை அவர்களின் மாதோட்டம் என்ற கவிதை தொகுப்பிற்கு வழங்கிய உரையில்,** "... ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் செபமாலை (குழந்தை) அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரிய பணியோடு கலைப் பணியையும் இடையறாது ஆற்றி வந்தவர். ஆசிரிய பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் அவரது படைப்பாற்றல் தொடர்கிறது." எனக் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்தக் குழந்தை ?



**எஸ். ஏ. சில்வா**
*ஒய்வுபெற்ற ஆசிரியை,*
*லண்டன்.*

**மொ**ழியையும் கலையையும் இரு கண்களாகக்கொண்டு தம் வாழ்நாள் பூராக தன்னை ஒப்படைத்த கலைஞன். மலையின் உச்சியில் ஒளி வீசிய சமூக நாடகங்களை, காலப்போக்கில் சீர்திருத்த வாதியாகி, தன் சிந்தனையில் விரிந்த கருப்பொதிகளை காவியங்களாக்கி பார்ப்போர் மனங்களை கொள்ளை அடித்த கவிஞன்தான் இந்தக் குழந்தை மாஸ்ரர்.

சிரிப்பே இல்லாத முகங்கள் பல. எந்நேரமும் சிரித்த முகத்துடன் வரவேற்போர் சிலர். இவர்களில் 'குழந்தை' என்னும் கலைஞன் ஒருவன். பெருமையற்ற வாழ்க்கை, புன்சிரிப்பு, நடையில் வேகம், கலைமூச்சு இவைகளைத் தன்னகத்தே கோர்த்து வைத்திருக்கின்ற கலாபூஷணம். சொல்லப்போனால் இவரைப் பற்றியும் இவரது கலை வளத்தைப் பற்றியும் பலவிதமாக புகழாரம் சூடி; சிறப்பாக மலர் வெளியிட்டும் மாலை கோர்த்துவரும் அறிஞர்கள், வித்துவான்கள், மேதைகள், சமுதாயப் பேராசான்கள், ஆயர்கள், அருள்தந்தையர்கள், கலைஞர்கள் அனைவருடைய புகழைப் பெற்று பெருமையில்லாது இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் அற்புதச் சிற்பி.

01.06.1973 அன்று இவரை முதன்முறையாக நான் சந்தித்தேன். குழந்தை என்னும் பெயரைக் கேள்விப்பட்டேன். இவரது நாடகங்கள், கூத்துக்கள், வில்லுப்பாட்டுக்கள் எல்லாம் பார்த்து ரசித்தேனேயொழிய இவரைத் தெரியாது. இவர் அதிபராக மன்/இசைமாலைத் தாழ்வு பாடசாலையில் கடமைபுரிந்த காலம் அது. எனது முதல் நியமனக் கடிதத்துடன் கடமை அலுவலகத்துள் புகுந்த என்னை, "வாருங்கள் ரீச்சர்! கடிதம் வந்திருக்கு. நீங்கள்தானா கூஞ்ஞை ரீச்சர்" என்று மிக அன்பொழுக விசாரித்த ஞாபகம் இன்றும் என் மனக்கண்முன் இருக்கின்றது.

ஒருவித கலக்கத்துடன் சென்ற எனக்கு இவரது அணுகுமுறை ஆனந்தத்தைக் கொடுத்தது. "நீங்கள்தானா இந்த நாடகங்களெல்லாம் நடித்துக்காட்டும் குழந்தை" என்று ஆதங்கத்துடன் கேட்டேன். "ஆம்... ஆம் என்ன நாடகம் பார்த்தீர்கள்?" என்று விசாரித்தார். "யார் குழந்தை, வீரத்தாய், சிலம்பின் சிரிப்பு..." என்று சொன்னேன். ஆறு மாதங்கள்தான் இவருடன் கடமை புரிந்தேன். ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முடிந்த பின்பும் இவரை மன்/முருங்கன் மகா வித்தியாலயத்தில் பதில் அதிபராக இருந்த நிலையில் சந்தித்தேன்.

இங்கு மறைந்த வேதநாயகம் அதிபராக இருந்தார். எனக்குக் 'குழந்தையை'க் கண்டதும் மிகவும் சந்தோஷம். அதிபர் வேதநாயகம் மிகக் கண்டிப்பானவர். அவருக்கு ஆசிரியர்கள் பிந்திவருவது பிடிக்காது. ஒருமாதிரியாகப் பார்ப்பார். ஆசிரியர் அனைவருக்கும் சரியான பயம். பேசிப்போடுவார். எங்கள் குழந்தை ஒருமாதிரி சமாளித்துப் போடுவார். குழந்தை அலுவலகத்தில் நின்றால் பயமில்லாமல் ஒப்பம் வைக்கலாம். நேரத்தையும் முந்திப் போடலாம். கடைக்கண்ணால் பார்ப்பார். "நெடுக இப்படிச் செய்யவேண்டாம்" என்று சொல்லுவார். ஆசிரியர்கள் அனைவருக்கும் இவரை நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கும். எங்களுக்காக அதிபரிடம் பலமுறை ஏச்சு வாங்குவார். ஆனாலும் வேதநாயகம் இவரில் நம்பிக்கையும் மதிப்பும் உள்ளவர்.

பாடசாலைக்கு வரும் கலை சம்பந்தமான போட்டி நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள் அனைத்தையும் குழந்தையிடம் ஒப்படைத்துவிடுவார். குழந்தையும் அவைகளைப் பொறுப்பேற்று; நடனம், கோலாட்டம், கும்மி போன்றவைகளை என்னிடம் தந்துவிடுவார். எனக்கும் கலைத்துறையில் ஆர்வம் இருந்தபடியால் பொறுப்பேற்று, பாடல்களை அவர்மூலம் பதிவுசெய்து பழக்கி மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் என எல்லா இடங்களுக்கும் போட்டிக்குக் கொண்டுசென்று வெற்றியுடன் நடைபோட்ட காலங்களும் உண்டு. எந்த வேளையிலும், என்ன உதவி கேட்டாலும்; முடியாது, நேரமில்லை என்று சொன்னதே கிடையாது. இந்த இசை மேதையை என்னால் மறக்கவே முடியாது. அப்படியான காலம் இனி வரவும்முடியாது.

இன்னும் கூறப்போனால், எங்கள் ஊர் மக்கள் அனைவரும் முருங்கன் பிட்டியில் குழந்தையின் நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து என்றாலே திரண்டு வந்துவிடுவார்கள். இவர் உடுப்பு போட்டு மேடைக்கு வந்துவிட்டார் என்றால், கொட்டகை அதிர சீட்கை ஒலி, கரகோஷம் சிறிதுநேரம் அடக்கவே முடியாது. அவர் சபையில் "வந்தேனையா வந்தனம் தந்தேனையா" என்று பாடினாலே காணும்; பாயில் படுத்திருந்த குளவி, கிழவி, குமரிகள் எல்லோரும் "குய்யோ" என்று எழுந்துவிடுவார்கள். யார் யாருக்கு என்ன பாத்திரம் பொருத்தமானதோ, அதை அவரவர்களுக்கு கொடுத்து நடிகர்களை உசார் நிலையில் வைத்துவிடுவார். எல்லோரின் மனங்களையும் தமதாக்கிக்கொண்டு வழிப்படுத்தும் கலைப்பொக்ஷம்.

கலைவிழாவில் ஏற்படும் செலவுகளையும் தாமே பொறுப்பேற்று நடத்திச் செல்லும் கெட்டிக்காரன். நற்கருத்துக்களை சிதறாமல் சமூதாயத்திற்கு நாடகங்கள் மூலம் அள்ளி வழங்கிய சிந்தனைச் சிற்பியாவார். நிகரில்லாத கவித்துவன். மாணவர்களிடமும், தன் நடிகை, நடிகர்களிடமும் அன்பைப் பெற்ற ஒரு சிறந்த நல்லாசிரியன். கோபத்தை இவர் முகத்தில் காண்பது அரிது. ஆனால், மாணவர்களை நாடகத்தில் வழிப்படுத்தும்போது யாராவது தவறு செய்துவிட்டால் பேசமாட்டார். "என்னடா நீ" என்று அவருடைய பார்வையால் அதனை மெருகூட்டிவிடுவார். மாணவர்களிடம் பழகும் முறை வித்தியாசமானது. தனது ஆளுமையால் திசைதிருப்பிப் போடுவார். பெருமை, புகழ், பட்டம், பதவி இவைகளை விரும்பமாட்டார்.

இனி இவருடைய குடும்பத்தைப் பொறுத்தவரையில்; என்னோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்கள் எல்லோரும் குட்டிக் கலைஞர்கள் என்றுதான் கூறவேண்டும். றோஜா மலர் எப்படி மணம்பரப்பி நிற்குமோ, அதேபோன்று மணம்பரப்பி நிற்கும் மனைவி றோஸ்மேரி. மக்களுடைய பெயர்ப் பட்டியலைப் பார்த்தால் தமிழ் மணம் கமகமக்கும். ஆனந்தன், இன்பன், அன்பன்; பெண்களில் திருமகள், மலர்விழி, கயல்விழி. பிள்ளைகளுக்கு வைத்துள்ள பெயர்ப் பட்டியலிலும் தமிழ் கலை நடனம் புரிகிறது.

அன்பன் என்பவர் எனது மாணவன். தனது அடிப்படைக் கல்வியை என்னிடமே பெற்றுக்கொண்டவர். இன்று இவரை எண்ணி பெருமையடைகிறேன். இறைவனுக்கு சேவை செய்யும் குருவாக இருக்கின்றார். என்னால் நம்பவே முடியாமல் போனது. ஒருமுறை என்னைத் தேடியே என் வீட்டுக்கு வந்தபோதுதான் நான் அடையாளம் கண்டு கொண்டேன். நிகரில்லா மகிழ்ச்சி. என் மாணவன் ஒரு குருவாக மாறிவிட்டார். ஆண்டவரே உமக்கு மகிமை உண்டாவதாக என்று கூறி ஆசீர் பெற்றேன். பிரான்ஸ் லூட்ஸ் நகரில், லூட்ஸ் அன்னையின் ஆலயத்தில் பணிபுரிந்து தாயகம் திரும்பியிருக்கின்றார். இவரைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்கள் பாக்கியவான்கள். இவருடைய குணமாக்கல் வழிபாட்டில் இவருடைய செப வல்லமையைக் கண்டேன். இவருடைய பிரசங்கம் ஆவியின் வல்லமையால் வெளியானதை லூர்து நகரில் அன்னையின் ஆலயத்தில் கண்டேன். இவரை இறைவன் நிறைவாக ஆசீர்வதித்து ஆவியின் வல்லமையைக் கொடுக்க இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் தமது சகோதரர்களுடன் நடைபோட்ட இந்த மாமனிதன் ஒரு சத்திரசிகிச்சைக்கு உட்பட்டதால், உள்ளத்தில் இளமையுடனும், கலைத்தேவியின் கடாட்சத்துடனும், வாடிய முகத்துடனும், புன்சிரிப்புடனும் இருப்பதைக் கண்டேன். இவருக்கு ஒரு சத்திர சிகிச்சை செய்ததாக அறிந்தேன். எனவே, வீட்டில் அவரைச் சந்திக்கச் சென்றேன். என்னைக் கண்டதும்; என் அருகில் வந்து "வாருங்கள் ரீச்சர். சுகமாக இருக்கின்றீர்களா?" என்று என்னை விசாரித்தார். நானும் அவருடைய சுகநலன்களை விசாரித்தறிந்தேன். முன்னைய கலகலப்பு மறைந்துவிட்டது. கலைத்தேவியின் நளினம் மட்டும் நடமாடியதை உணர்ந்தேன். எனக்கு உங்கள் குரலைத் திரும்பவும் கேட்கவேண்டும்போல இருக்கின்றது. ஒரு பாடல் பாடுங்கள் என்று கேட்டேன். பெருமையையோ, புகழையோ விரும்பாத அந்தக் கலைச்சிகரம், "நான்பெற்ற செல்வம் நலமான செல்வம் தேன்மொழி பேசும் சிங்காரச் செல்வம்..." என்ற பாடலைப் பாடினார். என் செவிகளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஐம்பது வருடங்களுக்கு மேலாக கலைப்பயண வாழ்வில்; கவிஞர், நடிகர், நாடக ஆசிரியர், நெறியாளர், நாட்டுக்கூத்து அண்ணாவியார். இப்படியாகப் பலதுறைகளிலும் தனது பெயரை ஊன்றிப் பதிவுசெய்திருக்கும் முது கலைஞர் நீண்ட ஆயுளும், நற்சுகபெலனும் பெற்று நிறைவுடன் வாழவேண்டும் என்று இறை ஆசீர் வேண்டி நிற்கிறேன். ■

**ஆயர் மேதகு யோ.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை...**

"ஆசிரியரும் கலைஞருமாகிய திரு.செ.செபமாலை (குழந்தை) அவர்களை நான் நீண்ட காலமாக அறிவேன். நாட்டுக்கூத்துத் துறையில் அவர் அடைந்துள்ள உயர் நிலை போற்றுதற்குரியது. கலை ஆற்றல் அவருக்கு இயல்பானது. அவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பம். கலை உணர்வு அவரது இரத்தத்துடன் ஊறியது. அவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரிடமும் இவ்வாற்றலைக் காணலாம்.

ஆசிரியக் கடமையாற்றிக்கொண்டு கல்விப்பணிக்கு மத்தியிலும் கலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் குழந்தை அவர்கள். பழமை மிக்க நாட்டுக்கூத்துக் கலையில் இவரது திறமை மிக உயர்வானது. மேடை ஏறிய இவரது பல நாட்டுக்கூத்துக்கள் பரிசில்களைப் பெற்றதோடு சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராகவும் இவரை இனங்காட்டின.

'முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை' நிறுவி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைப்பணி புரிந்து வருவதிலிருந்து இவரது கலை உள்ளத்தையும் பணி ஆர்வத்தையும் சமயப் பற்றையும் நாம் புரிந்துகொள்ளலாம்" **என திரு.செ.செபமாலை அவர்களால் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மரபுவழி நாடகங்கள் (வடமோடி நாட்டுக்கூத்துக்கள்) என்ற நூலுக்கு வழங்கிய ஆசியுரையில் குறிப்பிடுகிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை உள்ளம் கொண்ட குழந்தைக் கலைஞர்



**ச. சரவணமுத்து**
*ஓய்வுநிலை ஆசிரியர்,*
*முன்னாள் சிரேஸ்ட போதனாசிரியர், தொலைக்கல்வி,*
*யாழ். மாவட்டம்.*

குழந்தை தம்பிராசா என்று அன்பாக அழைக்கப்படும் திரு. எஸ்.செபமாலை, தான் நினைத்ததைச் செய்து முடிக்கக்கூடிய அசாத்திய ஆற்றலும் வல்லமையும் பொருந்திய ஒரு மனிதர் என்பதில் சந்தேகமில்லை.

இயல்பாகவே குழந்தை உள்ளம் கொண்ட குழந்தைக் கலைஞரின் வரலாற்றுப் பதிவுகளைத் தொகுத்து நூல் வெளியீடு செய்யப்படுகின்ற இத்தருணத்தில், நூலாசிரியருடன் எனக்குள்ள நட்புறவினை மீட்டாய்வு செய்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மையில் குழந்தை மாஸ்டர் ஒரு வரலாறுதான். வெறுமனே பதிப்பித்து வைக்கப்பட வேண்டியவர் அல்ல, சமுதாயத்தால் படிக்கப்பட வேண்டியவர்.

நான் மன்னார் இ.போ.ச உத்தியோகத்தராக ஏழு ஆண்டுகள் கடமையாற்றியபின் 1973 செப்ரெம்பர் 07ஆம் திகதி மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக நியமனம்பெற்று கடமையாற்றிவந்த காலத்தில், நடிகர் சின்னப்பா போன்ற உருவத்தோற்றத்துடன் முருங்கன் குளக்கட்டினூடாக ஒருவர் இராஜநடையுடன் எப்போதும் சென்றுவந்ததை அவதானித்து இவரொரு தமிழ் சட்டம்பியாராகத்தான் இருக்கவேண்டுமென எண்ணிக் கொண்டேன்.

ஆயினும் அவரது உடை அக்காலத்து தமிழ் சட்டம்பியாரைப் போலல்லாமல் சாதாரண அரைக்கை சேட்டும் வேட்டியுமாக இருந்ததையும் அவதானித்திருந்தேன்.

முருங்கன் மகா வித்தியாலயத்தில்தான் அப்போது முசலி வட்டாரக் கல்வி அதிகாரியின் காரியாலயம் இருந்தது. இக்காரியாலயத்தில் தான் அதிபர்களுக்கான கூட்டம் நடைபெறுவது வழக்கம். ஒருநாள், அங்கே நடந்த கூட்டத்திற்கு வந்திருந்த கற்கடந்தகுளத்து றோ.க.த.க. பாடசாலை அதிபரான குழந்தை மாஸ்ரர் என்று அழைக்கப்படும் திரு. எஸ்.செபமாலை அவர்களை வட்டாரக் கல்வி அதிகாரியின் உதவியாளான எனது நண்பன் முத்தரிப்பு வீ.எம்.டபரேரா அவர்கள் எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவருடைய சிரித்தமுகமும் பணிவான தோற்றமும் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

பின்னர் நான் குடும்பத்துடன் இவருடைய அயல்வீட்டில் பெரிய சீமானின் வீட்டில் வசித்துவந்தேன். அப்பொழுது அவருடன் பழகும் சந்தர்ப்பம் அதிமாகக் கிடைத்தது. எங்களுடைய நட்பும் வளர்ந்தது. குழந்தை மாஸ்ரர் பெற்ற குழந்தைகள் அத்தனைக்கும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் பேறும் எனக்குக் கிடைத்தது.

எமது மகா வித்தியாலயத்தில் அதிபராக திருமதி நவரெட்ணராஜா அவர்கள் இருந்த சமயத்தில் குழந்தை அவர்கள் எமது பாடசாலைக்கு மற்றலாகி வந்தார். அதன்பிறகுதான் குழந்தை அவர்கள் ஒரு பெரிய நாடகக் கலைஞனாகவும் விளங்கியதை அறிந்துகொண்டேன். அவரின் நெறியாள்கையில் எத்தனையோ நாடகங்கள் பாடசாலை மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தேறின. அவருடைய நடிப்பு, பாட்டு, வசனம், பேசும் ஆற்றல் எல்லாவற்றையும் சுவைத்தின்புற்றேன்.

அவர், அவருடைய மனைவி, பிள்ளைகள் எல்லோரும் நடித்த 'யார் குழந்தை' என்ற நாடகத்தைப் பார்த்து நான் வியந்தேன். அவரும் அவருடைய மகன் இன்பனும் நடித்த 'தாவீதும் கோலியாத்தும்' என்ற நாடகத்தைப் பார்த்து மெய்மறந்து ரசித்தேன்.

எழுபது பிற்பகுதியில் முருங்கன் கிறிஸ்துராசா ஆலயத்தில் நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சியில் குழந்தை அவர்கள் யூதர்களுடைய மதத்தலைவராக வில்லன் பாத்திரத்தை எடுத்து மிக அற்புதமாக நடித்தார். இவரா, இப்படி மிகவும் கொடிய பாத்திரத்தின் உருவமாக மாறினார் என்று வியக்குமளவிற்கு தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியிருந்தார். இவையெல்லாம் முருங்கன் உருவாக்கிய அருங்கலைப் பொக்கிசமாக குழந்தை அவர்கள் மிளிர்ந்தார் என்பதற்கான சான்றுகளாகும்.

வங்காலையைச் சேர்ந்த திரு. மக்சிமஸ் லெம்பேட் கொஞ்சக்காலம் முருங்கன் மகா வித்தியாலய அதிபாரகக் கடமையாற்றினார். அவரும் ஒரு சிறந்த நாடகக் கலைஞர். குழந்தையும் மக்சிமஸ்சும் ஒருவருடைய திறமைக்கு மதிப்புக் கொடுத்து முருங்கனில் முத்தமிழ் வளர்த்தார்கள்.

பாடசாலை மட்டத்திலும் வட்டார மட்டத்திலும், கலையில் முருங்கன் உன்னத நிலையிலிருந்தது. ஆசிரியர் தினத்தை யொட்டி 'வில்லியம் ரெலா' என்னும் நாடகத்தை மக்சிமஸின் நெறியாள்கையில் முசலி வட்டாரத்தின் ஆசிரியர்கள் அரங்கேற்றினார்கள். அந்த நாடகத்தில் குழந்தை அவர்கள் இராணுவ அதிகாரியாக மிகவும் சிறப்பாக நடித்து பலரது பாராட்டையும் பெற்றார்.

குழந்தை மாஸ்ரர் தனது குடும்பத்தை, உற்றாரை, அயலவர்களை மிகவும் நேசித்தார். தனது பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அக்கறை காட்டிவந்தார். இவரது பிள்ளைகள் பலர் பட்டம் பெற்று தொழில் பார்க்கிறார்கள். தனது கடைசி மகன் அன்பை இறைபணிக்கு ஒப்படைத்திருக்கிறார். அவர்தான் யாழ். மாவட்டத்தில் அருட்பணி செய்யும் அருட்தந்தை அன்பு அடிகளாராவார். ஒரு மகளை தனது சொந்த மருமகனுக்கு விவாகம் செய்து களிப்படைந்தார். அவருடைய பிள்ளைகள் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள்.

சிறந்த கல்வியாளனாகவும், சிறந்த கலைஞனாகவும் திகழ்ந்த குழந்தை அவர்கள் சிறந்த ஒரு விவசாயியாகவும் விளங்கினார். விதைப்புக் காலங்களிலும், அறுவடைக் காலங்களிலும் எம்.ஜீ.ஆர் போல மாட்டுவண்டியில் தலைப்பாக்கட்டுடன் பார்க்கின்ற அழகு ஒரு தனியழகாகும். மனித நேயமிக்கவரான குழந்தையவர்கள் அறுவடை முடிந்தவுடன் தனியே வாழும் யாழ்ப்பாண ஆசிரியர்களை தனது வீட்டுக்கு அழைத்து விருந்து பரிமாறும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முருங்கனில் தொடங்கிய ஊழிகாற்று பல உயிர்களையும் காவு கொண்டு ஊழித்தாண்டவமாடிய வேளையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முருங்கன்பிட்டி மக்களுடன் குழந்தையும் இணைந்து உணவுதந்து அடைக்கலம் தந்து காப்பாற்றியதை என்றைக்கும் மறக்கமுடியாது.

நல்ல குடும்பத்தலைவராக, கலைஞராக, இறைபக்தியாளராக விளங்கியவரான மனிதநேயமுள்ள குழந்தை தம்பிராசா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திரு. எஸ்.செபமாலை நீடுவாழ்கவென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். ■

"மரணம் வருமுன் வாழ்வையும், நோய் ஏற்படுமுன் சுகநலத்தையும், வேலைப்பழு வருமுன் ஓய்வையும், முதுமை வருமுன் செல்வத்தையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்"

–நபி (ஸல்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'குழந்தை'யின் வார்த்தையில் 'குழந்தை'!




**அருள்பணி செ.அன்புராசா அ.ம.தி.**
B.Th.(Rome),M.Phil.(Jaffna).
*அதிபர்,*
*புனித வளனார் அ.ம.தி. சிறிய குருமடம்,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*


**பதித்தவர்:** அருள்திரு செ.அன்புராசா அடிகள்

**பகிர்ந்தவர்:** குழந்தை செபமாலை

**பகிர நினைவூட்டல்களைச் செய்தவர்கள்:** குழந்தை செபமாலை அவர்களின் மனைவி றோஸ்மேரி, மூத்த நாட்டுக்கூத்துக் கலைஞர் செபஸ்தியான் சீமான் (குழந்தையின் மூத்த சகோதரன்), பின்னணி இசைக் கலைஞர் செபஸ்தியான் யேசுதாசன் (யேசு - குழந்தையின் இளைய சகோதரன்) ஆகியோர்.

**பதிப்பித்தது:** 15-17.06.2011, 27-29.11.2011, 20-23.12.2011, 30-31.01.2012, 28.02.2012, 16.05.2012, 03-04.09.2012

## தொடக்கத்தில்...

**கேள்வி: ஐயா, ஏறக்குறைய 50 வரிச காலமா தமிழ், சமூக, சமய, ஆசிரியப் பணிகளச் செய்துவாறீங்க. அதுகளப் பற்றிச் சொல்லமுடியுமா?**

எங்க தொடங்கி எங்க முடிக்கிறது என்றதுதான் தெரியல்ல. நீங்க கேளுங்க, நான் சொல்லுறன். என்ன... அர்ப்பணிப்பும், தியாகமும், கடவுள் நம்பிக்கையும், கடின உழைப்பும் இருந்தா எதையும் சாதிக்கலாம்.

**கேள்வி: அர்ப்பணிப்பு, தியாகம், கடின உழைப்பு எண்டு சொன்னீங்க ஐயா, அதை எப்பிடி நீங்க உங்கட வாழ்க்கையில கொண்டிருந்தீங்க?**

இப்ப பாருங்க, எதை செய்தாலும் அதில ஒரு விருப்பம் இருக்க வேணும். அதை நல்லா செய்யவேணும் என்ற எண்ணம் இருக்க வேணும். சும்மா ஏனோ தானோ எண்டோ அல்லது கடமைக்காகவோ செய்யப்படாது. முழுமனத்தோட ஒரு காரியத்த செய்வம் எண்டா அதில வெற்றி நிச்சயம்.

**கேள்வி: கடின உழைப்பு எண்டு சொன்னீங்க. அதுக்கு, ஒரு உதாரணம் சொல்லுங்களன் ஐயா?**

இப்ப நான் ஒரு நாடகம் போடுறன் எண்டா, அல்லது ஒரு கலை நிகழ்ச்சிய செய்யிறன் எண்டா நல்லா 'றியேசல்' (rehersal) பாக்காம நான் செய்யமாட்டன். அதுவும் ஆகக் குறைந்தது இருபத்தஞ்சு, முப்பது தடவை பாக்காம நிகழ்ச்சிய நான் மேடையேற்றினது இல்ல. அந்த அளவுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பாப்பன். பயிற்சி இல்லாம நான் ஒண்டையும் செய்யிறதில்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: இந்தப் பயிற்சிய, சின்ன நிகழ்ச்சி பெரிய நிகழ்ச்சி எல்லாத்துக்கும் ஒரே மாதிரித்தான எடுப்பிங்க?**

அதென்ன சின்ன நிகழ்ச்சி பெரிய நிகழ்ச்சி! நல்ல கதையா இருக்கு! எல்லா நிகழ்ச்சிகளும் எனக்கு ஒண்டுதான். சின்ன நிகழ்ச்சி எண்டாலும் ஆட்கள்தான் பாக்கிறாங்க, பெரிய நிகழ்ச்சி எண்டாலும் ஆட்கள்தான் பாக்கிறாங்க. எந்த நிகழ்ச்சியையும் தரமாக செய்யும் போதுதான் அதை மக்கள் ரசிப்பாங்க.

அத்தோட நாம சொல்லுற செய்தி மிக முக்கியமானது. அது போய்ச் சேரவேணும் எண்டா அதுக்குப் போதிய ஆயத்தம் - பயிற்சி அவசியம். அத்தோட ஒரு நிகழ்ச்சிய செய்யும் போது நேரக்கட்டுப்பாடு மிக முக்கியமானது. கடைசி நேரம் மட்டும் இருக்கக்கூடாது. நேரகாலத்தோடே பயிற்சிகள தொடங்கி நிகழ்ச்சிக்கான ஆயத்தங்கள செய்யவேணும். இவை எல்லாம் சேரும் போதுதான் நிகழ்ச்சியில தரம் இருக்கும். அதத்தான் மக்களும் வரவேற்பாங்க.

**கேள்வி: இவ்வளவு காலமா தொடந்து பல்வேறுபட்ட பணிகளச் செய்யிறீங்க. இப்ப என்ன உணர்றீங்க?**

மனதில நிறைஞ்ச சந்தோஷம், திருப்தி இருக்கு. இவ்வளவு காலத்துக்குள்ளயும் சொத்துக்களத் தேடிறதண்டா, எவ்வளவோ தேடிச் சேத்திருக்கலாம். என்னோட படிச்சாக்கள், என்னப் போல வேல செய்த ஆட்கள், இண்டைக்கு பெரும் பொருளோடையும் சொத்துக்களோடயும் இருக்கிறாங்க. ஆனா, நான் அப்பிடி தேட முயற்சிக்கல்ல. நான் உழைச்சதில பெரும் பகுதிய கலைகளுக்காக், சமூகத்திற்காக செலவழித்தேனே தவிர, இவற்றிலிருந்து நான் உழைக்கயில்ல. ஆனா, நான் நல்ல சந்தோஷமா இருக்கிறன். எனக்கென்ன குறை?

## சிறுபராயத்தில் ...

**கேள்வி: சின்ன வயதில, உங்கள படிக்க உற்சாகம் ஊட்டிய ஆட்களச் சொல்ல முடியுமா?**

அப்பு (அவர் தந்தை செபஸ்தியான்) பட்டம்கட்டியர் (கூமாப்பற்றைச் சேர்ந்த அமரர் திரு.ஐயாச்சி அவர்களின் மாமனார்), சந்தான் வாத்தியார் (அமரர் லோறன்ஸ் மொத்தம் சந்தான் என்பவர் சிறுக்கண்டல் ஊர்ப் பெரியவர்) போன்றாக்கள் எனக்கு படிக்க ஆர்வம் ஊட்டினார்கள். ஒருமுறை வாய்க்கால் வெட்டிக் கொண்டிருந்தன். 'என்னடா புல்வா' என்று சொல்லி தலையில் லேசாக் தட்டினார் பட்டங்கட்டியார். நான், 'போடா ... மகனே' எனத் தூசண வார்த்தையால பேசிவிட்டன். என்ர வாய் பார்க்க இப்பிடி அடிக்கடி செய்வாங்க. சின்ன வயதில் நல்லா தூசணம் சொல்லுறதெண்டு சொல்லுறாங்க! அப்பிடிச் சொன்னது எனக்கும் ஞாபகம் இருக்கிது (எனத் தலையையாட்டி புன்முறுவலுடன் ஏற்றுக் கொள்கிறார்).

**கேள்வி: பள்ளிக்கூடம் படிக்கிற காலத்தில நல்லா படிப்பில முன்னேற உதவியவர்களச் சொல்ல முடியுமா?**



றெகேசன் யோசப் மாஸ்ரரை (ஆசிரியர்) வாழ்க்கையில மறக்க ஏலாது. உண்மையில நாங்க பள்ளிக்கூடத்தில படிச்சி முன்னுக்கு வாறதுக்கு அவர்தான் முக்கிய காரணம். அத்தோட வில்வராச சிங்கம் சுவாமியயும் மறக்க ஏலாது. நான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் போக அவர்தான் காரணம். அவர் இல்லாட்டி எனக்கு அந்த வாய்ப்பு கிடைச்சி ருக்காது. ஏனெண்டா, அந்தநேரத்தில ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்குப் போக, 18 வயது முடிஞ் சிருக்க வேணும். அப்ப எனக்கு 18 வயதுக்கு 03, 04 மாதம் கிடக்கு. அதனால, வில்வராசசிங்கம் சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளிடம் சென்று கதைச்சு, என்னை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில அனுமதிக்கச் செய்தார். பிறகு, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில ஆயர் தியோகுப்பிள்ளை, எங்கள விளையாட்டில, கலையில, தமிழில, மறை ஆர்வத்தில உருவாக்கிவிட்டார்.

**கேள்வி: படிப்பிக்கிற காலத்தில...?**

படிப்பிக்கிற காலத்தில அடம்பனில நான் சந்தித்த மன்னார் யோசப் மாஸ்ரர் (ஆசிரியர்) முக்கியமானவர். அவர் என்னுடைய ஆரம்ப ஆசிரிய வாழ்க்கையில பல விதத்தில உருவாக்கிவிட்டவர். அடுத்ததா, நாவாந்துறையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை மாஸ்ரர் (ஆசிரியர்). நான் இண்டைக்கு இப்பிடி இருக்கிறன் எண்டா, இவங்கட உற்சாகம், ஆதரவு, அர்ப்பணிப்பு, வழிகாட்டல்தான் என்பதை உண்மையில மறக்க முடியாது.

## குடும்பத்தில்...

**கேள்வி: உங்கட சின்ன வயதில, உங்கட குடும்பத்துப் பொருளாதார நில எப்பிடி இருந்தது?**

நான் பள்ளிக்கூடத்தில படிக்கிற காலத்தில அண்ணனைப் (திரு.செ.சீமான்) போல வண்டில் அடிச்சி விறகு வித்தாக்கள் இந்த மாவட்டத்தில யாருமே இருக்கமாட்டாங்க. அண்ணனோட விறகெடுக்க நானும் காட்டுக்குப் போவன். ஒரு நாளைக்கு ஐந்து வண்டில்களாவது விறகுக்குப் போகும். பள்ளமடு காணச்சென்று விறகு கொண்டுவருவம். அண்ணன் ஒரு நாளைக்கு 02 முறை விறகடிப்பார். பள்ளமடு அந்தோனியார் கோயிலுக்குப் போய் பிறகு விறகுக்கு போவம். பள்ளமடுக் கோயில், பள்ளமடுக்குளம் எங்கட கதை சொல்லும்.

இதவிட, நானும் அண்ணனும் நிலவு வெளிச்சத்தில உழுவம். பகல்ல பள்ளிக்கூடம், இரவில வயல்ல உழவு வேல. இப்பிடித்தான் வெள்ளாமை செய்வம். இப்பிடி, சின்ன வயதில நல்லா கஸ்ரப்பட்டு வேலைசெய்தம். பிறகு நான் படிக்க வெளிக்கிட, சீமாண்ணன்தான் (செபமாலை குழந்தையின் அண்ணன்) குடும்பத்துக்காக கஸ்ரப்பட்டு உழைச்சார்.

**கேள்வி: வெள்ளாமை (வேளாண்மை) செய்யிறது, விறகு அடிக்கிறதவிட வேற என்ன உழைப்பு இருந்தது ஐயா?**

அப்பு (செபமாலை - குழந்தை அவர்களின் தந்தையார் செபஸ்தியான் அண்ணாவியாரை செபமாலை,'அப்பு' என்றுதான் அழைக்கிறார்.) ஆட்கள் மடுவுக்கும் மடுறோட்டுக்கும் இடையில 'பஸ்' ஓட்டம் குறைவான அந்தக் காலத்தில 'கேள்வு அடிப்பார்'கள்.'கேள்வடித்தல்' அல்லது 'கேள்வு அடித்தல்' என்டா, வண்டில்ல ஆட்களை கூலிக்குக் கொண்டுபோய் விடுவதத்தான் அப்பிடிச் சொல்லுறது. அதாவது, மடுமாதாவிடம் போறதுக்கு 'றெயினில' (train) வந்து மடுறோட் 'ஸ்ரேசன்'னில் (Railway Station) இறங்குகிறவர்களை மடுவுக்கு வண்டில்ல கூட்டிச் செல்வதத்தான் 'கேள்வடித்தல்' என்பார்கள். இதுவும் ஒரு உழைப்பாக அப்பு செய்து வந்தார். இந்தக் கேள்வடித்தல, அப்பு, மணக்குளத்து இராசையா போன்றவர்கள் கொஞ்சக் காலமாக செய்து வந்தார்கள்.

**கேள்வி: வீட்டில அப்பையா, பெத்தா (செபமாலை குழந்தையின் தந்தை, தாய்) நீங்க நாடகம் போடுறதுக்கு எப்பிடியான ஆதரவு தந்தாங்க?**

நாடகங்கள் போட அப்பு முழு ஆதரவு தந்திருவார். நாடகமெண்டா அப்புவுக்கு சரியான விருப்பம். அம்மாவுக்கும் விருப்பம்தான், ஆனா அப்புவப்போல இல்ல. ஒரு நாடகத்தில,'இந்த நாட்டில எப்படித்தானோ நாங்க இன்பமாய் வாழலாமோ தெரியல்லையே: அப்படிப் பாத்தா இப்படி இருக்கு, இப்படிப் பாத்தா அப்படி இருக்கு, எப்படிப் பாத்தாலும் எல்லாம் இருக்கு!...' என பாட்டு ஒன்று வருது. இப்பாடலை நாடகத்தில பாடி நடித்த நடிகன் அலிக்கான் என்பவர்தான். அவற்ர தாய், நாடகம் நடிச்சி மூன்றாம் நாளில இறந்து போனா. இது காணாதா அம்மாவுக்கு! அம்மா,'இவன் சும்மா கிடக்காம, நாடகம் பாடிப் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரையும் கொல்லப்போறான்' எனப் பேசித் தள்ளினா (எனச்சொல்லிச் சிரிக்கிறார்).

**கேள்வி: அப்பையாவும் நல்லா மத்தளம் வாசிக்கும் எண்டு ஒருக்கா சொன்னீங்களே ஐயா...**

ஐயோ... அப்பு (செபமாலையின் தந்தை செபஸ்தியான்) மத்தளம் நல்லா வாசிக்கும். எத்தன இடங்கள்ள அப்புவுக்கு பாராட்டுக் கிடச்சிருக்குத் தெரியுமா? வித்தியானந்தனே (பேராசிரியர் சு.வித்தியானந்தன்), அப்புவ நேரடியாப் பாராட்டி இருக்கிறார். அத்தோட, பொறுத்த நேரத்தில, இக்கட்டான கட்டங்கள்ள மத்தளம் வாசிக்க கைகொடுத்தது அப்புதான். என்ன... (சிரித்துக் கொண்டே சொல்கிறார்) அப்பு காலையில மத்தளத்தை எடுத்தா பின்னேரம் மட்டும் ஒரே அடிதான். அம்மாவோ,'இந்தக் கொள்ளையில போயிருவான் வேலைவெட்டி இல்லாம இத அடிச்சிக்கிண்டு கிடக்கிறான்' எண்டு பேச்சித்தள்ளுவா (என சொல்லிக்கொண்டு வாய்விட்டுச் சிரிக்கிறார்.).

**பாட்டினில்...**

**கேள்வி: நிறைய பழைய பாட்டுக்கள அப்பிடியே பாடுறீங்க ஐயா. எப்பிடி உங்களால முடிஞ்சது?**

1950கள்ள முருங்கன் 'பஜார்'இல (சிறிய நகர்) ஓ.மு. என்று சொல்லப்படுற ஒரு முஸ்லிம் ஆள், தேத்தண்ணிக் கடை வைச்சிருந்தார். அவர் நம்மோட சரியான நேசம். எங்கட்ட றேடியோவே இல்லாத காலம் அது. ஓ.மு.விடம் 'கிறமபோண்' இருந்தது. எனக்கோ பாட்டுக் கேட்க அலாதிப் பிரியம். காலையில சாப்பிட்டுட்டு வெளிகிட்டு விடுவன். கடைக்குப் போக, ஓ.மு.வும் 'கிரம போண்'ணை என்னிடம் தந்து விடுவார். பாட்டுகளை எழுத பென், பேப்பர் எல்லாம் கொண்டு போவன். இருந்து, 'கிறமபோண்'ணைப் போட்டு, போட்டு பாட்டுக்களை எழுதி படிக்கப் பழகிவிடு வன். இடைகிடையே ஓ.மு.வினுடைய சூடான 'பிளேன் ரீ'யும், சூடான வடையும் பசியப் போக்கி விடும். என்னெண்டு படிச்சன், எப்பிடி பள்ளிக்கூடம் போனன், எப்பிடி 'பாஸ்'பண்ணினன் எண்டு இப்ப தெரியாம இருக்கு. சில நேரங்கள்ள, நேரம் போறதே தெரியாம இருந்து, ஓ.மு.கடைய மூடப்போகும்போதுதான் நானும் நின்று கடையைப் பூட்டிவிட்டு வெளிக்கிடுவன். அப்பிடி, பாட்டிண்டா ஒரு பைத்தியம்தான். அந்தநாள் பாட்டுக்களும் அப்பிடி! படிச்சாதிரும்ப ஒருக்கா படிக்கச் சொல்லும். தியாகராஜா பாகவதர், பி.யு.சின்னப்பா, ரி.ஆர்.மகாலிங்கம், கே.ஆர்.இராமசாமி, ராஜகுமாரி ஆக்கள் பாடின அந்தக்காலத்து பாட்டுக்கள் ஒன்றையும் விடுறதில்ல.

**கேள்வி: இதைவிட வேற எப்பிடி பழைய பாட்டுக்கள அப்பிடியே பழகினீங்க ஐயா?**

இதைவிட வேறென்ன? தியெட்டர்தான். 'தியெட்டறில' வாற ஒரு படத்தையும் விடமாட்டன். படம் பாக்கப் போகும்போது 'தியெட்டறில' படப் பாட்டுப் புத்தகமும் விற்பாங்க. அதை வாங்கிக் கொண்டுதான் தியெட்டருக்குள்ள போவன். பிறகு அந்தப்பாட்டுக்கள பாடிப்பாடி பழகிக் கொள்வன். இந்தப் பாட்டுக்கள், நான் எழுதின இசை நாடகங்களுக்கு, வில்லுப்பாட்டுக்களுக்கு, வாழ்த்துப்பாக்களுக்கு மெட்டுக்களாகப் போட பெரிய உதவியா இருந்தது. அப்பிடி, அப்ப வாங்கின அவ்வளவு படப்பாட்டுப் புத்தகங்களும் இப்பவும் கிடக்குது.

**கேள்வி: அப்பிடி எத்தன பாட்டுப் புத்தகங்கள் கிடக்குது?**

நிறையக் கிடந்தது. ஐம்பத்தேழாமாண்டு வெள்ளத்தில நூறு, இருநூறு புத்தகங்களுக்கு மேலாக அழிஞ்சி போச்சிது. அதுக்குப் பிறகு வாங்கிச் சேர்த்து 1600 புத்தகங்கள் அளவில கிடக்குது.

**கேள்வி: மற்றது இத்தனை பழைய பாடல்களையும் ராக, தாளம் பிசகாமப் பாடுறது கஸ்ரமெல்லா ஐயா?**

அது பயிற்சியால வாறதுதான். இப்ப 60 வருசத்துக்கு மேல தொடந்து பாடிவாறன் எண்டா பார்த்துக்கொள்ளன். எந்த அளவுக்கு பயிற்சி எடுக்கிறமோ, அந்த அளவுக்கு சாரீரம் (குரல் வளம்) நல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். சும்மா இப்பத்தே பாட்டுக்களப் போல 'நாக்கு மூக்கா நாக்கு மூக்கா...' எண்டு படிச்சிற்றுப் போற பாட்டுக்களா அந்தக்காலத்து பாட்டுகள்!



**கேள்வி: அடம்பனில படிப்பிக்கும்போது...**

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முடிச்சி அல்லப்பிட்டியில 04, 05 மாதம் படிப்பிச்சிற்று அடம்பனுக்குத்தான் மாற்றலாகி வந்தன். 1960 தொடக்கம் 1963கள் வர அடம்பனில் படிப்பிச்சன். அப்ப இளம் வயது. அரசியல் கூட்டங்களுக்குப் போவது, சத்தியாக்கிரகங்கள்ள பங்கெடுக்கிறது, மன்னார் 'ரவுண்' (town) ணில் படம் பார்க்கச் செல்வது என நான் வீட்டிற்கு வருவது சரியான குறைவு. இப்படிப்போய் வேறெங்காவது திருமணத்தையும் செய்துவிடுவன் என எண்ணினதால ஞானம் அக்காட அத்தான் (தனது அக்காவின் கணவன் அமரர் திரு.பறுனாந்து அவர்கள்) கொஞ்ச நாளா, முருங்கனில இருந்து வந்து பள்ளிக்கூட 'கேற்றிற்'றில் (Gate) நிண்டு என்னை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவார். அவர் உண்மையில் பள்ளிக்கூடம் போய் படிக்காத ஒரு பெரிய பண்பாளன்தான்.

**ஊரினில்...**

**கேள்வி: உங்கட கலை ஈடுபாட்டுக்கு ஊரில எப்பிடியான வரவேற்பு இருந்தது?**

பழைய சங்கவீடு இருக்கிற இடத்திலதான் நாங்க நாடக மன்றத்துக்கு ஒரு கொட்டில் போட்டிருந்தம். நாலு கப்புகள் நட்டு மண்போட்டு உயர்த்தி, மேடை போட்டிருந்தோம். அதிலதான் நாடகம் போறது. மேடைக்குப் பின்னால ஒரு சிறிய அறையும் இருந்தது. இதற்கு அத்திவாரம் வெட்டும்போது, பத்தி (மனுவல் பத்திநாதன், இப்போது பிரான்சில் வாழ்ந்து வருகிறார்) கூட இருந்து உற்சாகம் தந்தார். 'தம்பிராண்ண, தம்பிராண்ண' (தம்பிராசா என்ற பெயரும் செபமாலை – குழந்தை அவர்களுக்கு இருக்கிறது. மனுவல் பத்திநாதன், 'தம்பிராசா அண்ணன்' என்று கூப்பிட்டுக் கூப்பிட்டு, 'தம்பிராசா அண்ணன்', 'தம்பிராண்ண' என மருவியது.) என்று, அப்பயிருந்து இப்ப மட்டும் பத்தி சரியான உதவி. இந்த விசயத்தில நல்லா ஒத்துழைப்பான். எனினும், ஊரில சிலருக்குப் பொறாமை. "இவன் தன்னிஸ்டத்துக்கு ஆட்சிப்படுத்திறான்" என எதித்தாங்க. நான் நினைக்கிறன் 5, 6 மாதங்கள் இந்த நாடக மன்றக் கொட்டகை இருந்திருக்கும். அதுக்குப் பிறகு, யாரோ அதற்கு நெருப்பை வைத்து எரிச்சி விட்டாங்க. அந்த நேரத்தில, 'மன்றத்துக் கம்புதடிகள எரிக்கலாம், என் மனதை எரிக்க முடியாது' எனக் கூறியது இப்பவும் ஞாபத்தில இருக்கிது. அப்பிடி, எதிர்ப்புக்களையும் தாண்டித்தான் நாங்க வளந்தோம்.

**கேள்வி: 1960களின் முற்பகுதியில நாடகங்கள் எப்பிடி போடத் தொடங்கினீங்க?**

அந்த நாட்கள்ள நாடகம் எழுதிறது தொடக்கம், அதனைப் பழக்கிறது, பணம் செலவழிக்கிறது, 'நோட்டீஸ்' (சுவரொட்டிகள்)அடிக்கிறது, அவைகளை ஒட்டுறது, எல்லாத்தையும் நானே பாக்க வேண்டிய நிலை. மற்றவர்களும் உதவி செய்தாங்க. இருந்தாலும் ஒன்றைத் தொடங்கினால் அதைச் செய்து முடிக்கவேணும். அதனால, ஒரு காரியத்த தொடங்கினா என்ன, என்ன செய்ய வேண்டுமோ அவை அத்தனையையும் செய்து முடிப்பன். ஒன்றையும் யோசிக்காம ஓடிக்கொண்டே இருந்தன். நாடக 'நோட்டீஸ்' (சுவரொட்டிகள்) ஒட்ட இரவு எட்டு மணியளவில 'நோட்டீஸ்'களையும், பசச்சட்டியையும் தூக்கிக்கொண்டு வெளிக்கிட்டா செம்மண்தீவு, உயிர்த்தராசன்குளம், உயிலங்குளம், கட்டைக்காடு, நானாட்டான், அளவக்கை, புத்திரகண்டான், மாவிலங்கேணி போன்ற இடங்களுக்கு சைக்கிள்ள சென்று, 'நோட்டீஸ்'கள ஒட்டிவிட்டு, வீடு திரும்ப இரவு 11, 12 மணியாயிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிக்கல்களில்...**

**கேள்வி: அந்த நாட்கள்ள எப்பிடியான பிரச்சனைகள உங்கட கலை வாழ்க்கையில சந்திச்சிங்க?**

பணப் பிரச்சனை ஒரு பெரிய பிரச்சனதான். ஆள் பற்றாக்குறை அடுத்த பிரச்சன.

**கேள்வி: பணப் பிரச்சனைய எப்பிடி சமாளிச்சிங்க?**

எப்பிடிச் சமாளிக்கிறது? அன்று தொடக்கம் இன்று வரை பணப்பிரச்சன பிரச்சனதான். நம்மட காசுகளப் போட்டு ஒரு மாதிரி இழுத்துக் கொண்டு போறதுதான். சில வேளைகள்ள காசுகள் மாறிக்கிண்டு (கடன்வாங்கி) போய் பிறகு கொடுப்பதும் உண்டு. இன்னும் சில சந்தர்ப்பங்கள்ள அம்மாட (தன் மனைவியின்) நகைகள கொண்டே அடைவு வச்சி, காசு மார்றதும் (பெறுவதும்) உண்டு. என்ன செய்யிறது? ஒரு காரியத்த தொடங்கினா முடிக்கத்தானே வேணும். காசப் பாத்து கலையச் செய்யாம இருக்க முடியுமா?

உடனே செபஸ்தியான் யேசுதாசன் (செபமாலை அவர்களின் இளைய சகோதரன், இயல்பாகவே நகைச்சுவை உணர்வுடையவர்), 'கலைக்காக தலையையும் கொடுக்கிற ஆள்தானே நீ!...' எனச் சொல்லுகிறார். (எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

**கேள்வி: ஆள் பற்றாக்குறைய எப்பிடி நிவர்த்தி செய்திங்க?**

இருக்கிற ஆட்கள வைச்சுக்கொண்டுதான். யார் யார் நாடகத்தில நடிப்பாங்க என வைச்சுக் கொண்டுதான் பாத்திரங்கள அமைப்பது வழக்கம். எந்த அளவுக்கு குறைவாக பாத்திரங்கள வைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைச்சிப் போடுவன். ஏனெண்டா, நாடகத்துக்கு நடிக்க வாறன் எண்டு சொன்ன ஆளும், திடீர் என வராமல் போய்விடும். அதனால எல்லாப் பாத்திரத்தையும் ஒருசிலராவது நடிக்கக் கூடிய ஆற்றல் பெறக்கூடியதாக பழக்கிப் போடுவன்.

அதனால, திடீர் என யாரும் வரமுடியாதபோது மற்றய ஆட்களப் போட்டு அல்லது வேற பாத்திரம் நடிக்கிற ஒரு ஆளப் போட்டு நாடகத்த நடத்தி முடிச்சிருவன். இப்படியான சந்தர்ப்பத்தில எல்லாம் அம்மா (தன் மனைவி செ.றோஸ்மேரி அவர்களைக் குறிப்பிடுகிறார்) நல்லாக் கைகொடுப்பா. அப்பிடி எத்தின சந்தர்ப்பத்தில அவ கைகொடுத்திருப்பா, எத்தின இடத்தில மேடையேறி இருப்பா!!!

அடுத்தது, நாடகத்தில தம்பி (தனது இளைய சகோதரன் கலாபூசணம் செ.மாசிலாமணி - பிலேந்திரன் அவர்களைக் குறிப்பிடுகிறார்) பெட்டியில ('சர்ப்பினா'வைக் குறிப்பிடுகிறார்) இருந்தா, நான் மேடையில நிற்பன். தம்பி மேடையில எண்டா, நான் பெட்டியில இருப்பன். அதற்கு ஏற்றாற் போலதான் பாத்திரங்களையும் எழுதுவன்.

இதே மாதிரித்தான் மத்தளம் வாசிக்க, யேசு (தன் இன்னுமொரு இளைய சகோதரன் - பின்னணி இசை வித்தகர் செ.யேசுதாசன் அவர்களைக் குறிப்பிடுகிறார்) இல்லாத இட்த்தில அப்பு (தன் தந்தை அண்ணாவியார் செபஸ்தியான் அவர்களைக் குறிப்பிடுகிறார்) அற்புதமா வாசிச்சி அந்த இடைவெளிய நிவர்த்தி செய்திருவார்.

மத்தளம் வாசிக்க வெளிக்கிட்டா, யேசுவுக்கும் (தன் இளைய சகோதரன்) அப்புவுக்கும் (தன் தந்தையார்) ஒரே சண்டைதான்! (சிரித்துக் கொண்டே தொடர்கிறார், ஏனையவர்களும் பழைய நினைவுகளை இரைமீட்டி சிரிக்கிறார்கள்) 'நீ என்னடா வாசிக்கிறா?' என யேசுவைக் கேட்க, 'நீ சும்மா இருப்பா! எனக்கு வாசிக்கத் தெரியும்' எண்டு யேசு அப்புவுக்குச் சொல்லும்.

(செபமாலை — குழந்தையின் மூத்த சகோதரன் சீமான் தொடர்கிறார்) 'சிலவேளைகள்ள, நல்ல முஸ்பாத்தி (பகிடி) நடக்கும்! 'நீ என்னடா வாசிக்கிறா?' எண்டு அப்பு கேட்க, 'அப்ப இந்தா நீதான் வாசி' எண்டு யேசு மத்தளத்த தூக்கிக் கோபத்தில அப்புட்ட குடுத்திற்று போயிருவான். இப்பிடி, நிறைய முஸ்பாத்திகள் (பகிடிகள்) நடக்கிறதுதான்'.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கேள்வி: வேற யார் யாரை உங்கட கலை வாழ்க்கையில் நினைவுகூருவீங்க?**

எத்தன பேர் எண்டு சொல்லுறது தம்பி.

அப்புவ (**செபஸ்தியான்**) மறக்க ஏலாது. எல்லா இன்ப துன்பங்கள்ள நிண்டு ஈடுகுடுத்த ஒரு ஆள்.

அம்மா (மனைவி **றோஸ்மேரி**) இல்லாட்டி ஒண்டையும் நினைச்சுப் பாக்கேலாது. எல்லாத்துக்கும் என்னோட துணை நிற்கிற ஆள்.

அண்ணன் (**சீமான்**) இல்லாத ஒரு நிகழ்ச்சி இருக்காது. என்ன வேலையோ, துன்பமோ நிகழ்ச்சிக்கு வந்திரும். அண்ணனப் போல ஆட்கள் அப்பவும் இல்ல, இப்பவும் இல்ல, எப்பவும் இல்ல. நிண்டு புடிச்சதும் அண்ணந்தான். இப்பவும் நிண்டு புடிக்கிறதும் அண்ணன்தான்.

பிலேந்திரன் (**மாசிலாமணி**) கலை நிகழ்ச்சிகள்ள எனக்கு வலது கைபோல. தம்பி (பிலேந்திரன்) வீணை வாசிக்கவோ, பாடவோ, நடிக்கவோ எந்தப் பாத்திரத்திற்கும் அவன் பொருத்தமா இருப்பான். திறமையா செய்வான்.

பின்னணி இசை எண்டா யேசுதான் (**யேசுதாசன்**). ஒரே நேரத்தில பல இசைக் கருவிகளை நல்லா வாசிப்பான்.

பாலசிங்கம் (அமரர் **ப.அந்தோனிப்பிள்ளை** – பாலசிங்கம்) நல்லா நடிகும். அத்தோட மற்ற சமூக வேலைக்ள்ள, கோயில் அலுவல்கள்ள நல்லா என்னோட நிண்டுபுடிச்சிது. இன்னும் இருந்து வேலைசெய்ய வேண்டிய ஆள்! என்ன செய்யிறது? அவருக்கு வாழ்க்கை அவ்வளவுதான்!

மற்றது காத்தான்குளத்து இம்மனுவல் மாஸ்ரர் சரியான உதவி. நாடகம் எண்டு சொல்லிவிட்டால் போதும்! மனுசன் அடுத்தநாள் மனிசியோட இங்க நிப்பார். இவரோட சேர்ந்து வேதம் (ஒப்பனைக் கலைஞர் திரு.வேதநாயகம்), தங்கச்சி (அருள்சகோதரி எலிசபேத்), வேவி, றீற்றா, சோதி, இரத்தினம், கிரகோரி, தங்கராசா, வெற்றி, அந்தோனிப்பிள்ள, குணசீலன், ஏன் மாமா (தன் மனைவியின் தந்தையார் அமரர் சவிரிமுத்து) சரியான உதவி. மாமா மிக கஸ்ரமான கட்டங்கள்ள சரியான உதவிகளச் செய்தவர். வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார். அப்பு (தன் தந்தையைக் குறிப்பிடுகிறார்) போல நாடகம் எண்டா சரியான உதவி. இப்பிடி எத்தனையோ பேரக் குறிப்பிட்டுக் கொண்டு போகலாம்.

## நாடகங்களில்...

**கேள்வி: நாடகங்கள எப்பிடி போடுவீங்க?**

நாடகங்கள எப்பிடி போடுவீங்க எண்டா!... (புன்முறுவல் செய்து கொண்டு) நினைச்ச உடன போடுவன். 'நோட்டிஸ்' அடிக்கிறதும், நாடகம் பழகிறதும், கலைவிழா வைக்கிறதும்தானே கொஞ்சக் காலமா வேல. காசப்பற்றி யோசிக்கிறதில்ல. தொடங்கீருவன். தொடங்கினா, முடிக்கத்தானே வேணும். சம்பளம் எடுக்கிறதும் தெரியாது, காசு போறதும் தெரியாது. இப்பிடியே கொஞ்சக் காலம் பறந்துது.



**கேள்வி: அதுசரி, நாடகங்கள எப்பிடி எழுதுனீங்க?**

எப்பிடி எழுதுனீங்க எண்டா? மெட்டுகள் எல்லாம் கைவசம். கதைகள் தெரியும். எப்பிடி எப்பிடி பாத்திரம் அமைய வேணும் எண்டு எல்லாம் தெரியும். பிறகென்ன, ஒரு இரவு விடியவிடிய இருந்து எழுதிப் போடுவன். நாட்டுக்கூத்தா இருந்தாலென்ன, இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமா இருந்தாலென்ன, சமூக நாடகமா இருந்தாலென்ன, நாட்டிய நாடகமா இருந்தாலென்ன: விசயங்கள் தெரிஞ்சா எழுதவேண்டியதுதானே.

**கேள்வி: நாடகங்களுக்கு 'மேக்கப்'பற்றி ஒருக்கா கதைக்கும்போது சொன்னீங்களே ஐயா?**

நாடகம் என்டால் இம்மனுவல் மாஸ்ரர் (காத்தான்குளத்தைச் சேர்ந்தவர்) எல்லாத்தையும் விட்டுட்டு வெளிக்கிட்டிருவார். மனிசியையும் கூட்டிக்கிண்டு வந்திருவார். அருமையான மனுசன். என்னோட நிறைய ஈடுபாடு கொண்டவர். நாடகங்களுக்கு 'மேக்கப்' (ஒப்பனை) செய்யிறது அவரும் வேதமும்தான் (திரு.வேதநாயகம் நானாட்டான், ஆவணத்தைச் சேர்ந்தவர்). அதில இரண்டு பேருமே சரியான கெட்டிக்காரங்க. இரண்டு பேரும் செய்யாத 'மேக்கப்'பா!

**கேள்வி: நாடகப் போட்டிகளுக்குப் போய் நடந்த சம்பவங்கள் சிலத சொல்லுங்களன் ஐயா?**

1972ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில நாடகவிழா ஒண்டு நடந்தது. 32 நாடகங்கள் போட்டிக்கு வந்தன. ஏறக்குறைய 07 நாட்கள் நாடகப்போட்டி நடந்தது. மன்னாரிலிருந்து எங்கட மன்றம் ஒன்றுதான். நான் முதல்நாளே போயிற்றன். போய், மற்ற மன்றங்கள் செய்வதை எல்லாம் பார்த்து, அதப்பற்றிய ஒரு மதிப்பீட்டைச் செய்து, எப்படி நம்முடைய நாடகத்தைச் சிறப்பாச் செய்யலாம் எண்டு சில யுக்திகளைக் வைச்சிருந்தன். நாடகப்போட்டிக்கு முதல் நாள் நம்மட குழுவினர் வந்து சேர்ந்தார்கள். அங்க வைச்சி சில மாற்றங்களை செய்து அரங்கேற்றினோம். 32 நாடகங்கள்ள 06 தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்குள போட்டி நடத்தப்பட்டு முதல் 03 இடங்களில'அன்புப்பரிசு' என்ற எங்கட நாடகத்துக்கு 02வது இடம் கிடைச்சது.''அப்பிடி, நாடகம் எண்டா, அப்பிடியே போய் நின்டிருவன்.

(இப்படி உரையாடிக் கொண்டிருந்த போது செபமாலை குழந்தையின் அண்ணன் செ.சீமான் அவர்கள் தொடர்கிறார்.) ''நானாட்டானில சொக்கலிங்கம் ஐயா உதவி அரசாங்க அதிபரா இருந்த காலத்தில அடிக்கடி நாடக விழாக்கள வச்சார். ஒரு தடவை, நானாட்டானில ஒரு நாடக விழா நடந்தது. 'இறைவனா புலவனா?' என்ற நக்கீரரின் கதைய நாடகமாகச் செய்தம். நக்கீரனாக நான்தான் நடிச்சன். நாடகத்தில ஒரு இடத்தில தீப்பொறிகள் பறக்க வேணும். அதுக்குப் பொறுப்பா தங்கராசாவைத்தான் (அமரர் திரு.தங்கராசா என்பவர் முருங்கனில் வசித்து வந்தவர். பின்னர் நாட்டின் அசம்பாவித சூழலில் இந்தியா சென்று வாழ்ந்து வந்தார்) விட்டது. மண்ணெண்ணைய வாய்குள்ள வைச்சி ஊதி நெருப்பு உண்டாக்க வேணும். அப்பிடி வாறபோது, என்ர உடுப்பில நெருப்புப்பட்டு உடுப்பு எரியிது. நான் நடிப்ப விடயில்ல, தம்பி (செபமாலை - குழந்தை) பாட்ட விடயில்ல! (இவ்வாறு சொல்லிக் கொண்டு வாய்விட்டுச் சிரித்துக் கொண்டு தொடர்கிறார்) என்னெண்டு விடுறது? தொடந்து நடிச்சதுதான். அரைவாசிச் சனம் நெருப்பு எரிஞ்சதப் பாத்து எழும்பி ஓடிற்றுது.

அப்பிடி நாடகம் எண்டா தம்பியோட (செபமாலை - குழந்தை) சேந்து எல்லா இடமும் நாங்க நாய்க்குட்டி மாதிரி திரிஞ்சதுதான். லேசான காரியமா? 40, 50 வருசமா தம்பி போட்ட நாடகங்களையும், செய்த கலை நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிகளுக்கு செலவழிச்ச செலவுகளையும் நினைச்சிப் பாத்தா! சூ... சூ... (ஆச்சரியத்தோடு கூறுகிறார்). எப்பிடி இவ்வளத்தையும் இவ்வளவு காலமா செய்து முடிச்சான் எண்டு நினைக்கிறபோது, அடே அப்பா? சதிரமே நடுங்குது. தம்பி, (குழந்தை – செபமாலை) யாருக்கும் வாக்குக் குடுத்திற்றான் எண்டால், ஒருதரும் ஒண்டும் செய்யஏலாது. நாடகமோ அல்லது வேற நிகழ்ச்சியோ போட்டுத்தான் தீருவான். எங்கட சொல்லு கேக்க மாட்டான். வேறென்ன, அவனோட நாங்களும் போறதுதான்.

**பெரியோர்களுடன்...**

**கேள்வி: பேராசிரியர் வித்தியானந்தன்ர காலத்திலதான் நம்மட கூத்துக்கள் வெளிஉலகுக்கு தெரியவந்தது என்ற கருத்து இருக்குது. அது பற்றி என்ன**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறீங்க?

ஐயோ! அவர்தானே எங்கட நாடகங்கள வெளி உலகத்துக்கு கொண்டுவந்தவர். அவர் இல்லாட்டி எங்கட நாடகங்களும் நாங்களும் வெளியில வந்திருக்க மாட்டம். எங்கட நாடகங்கள வெளியிடங்கள் பலவற்றுக்கு கொண்டுபோக வழிசெய்தார். அத்தோட எங்கட நாடகங்கள கிராமத்து ஆட்கள் மட்டுமல்லாம அறிஞர் பெருமக்களும் பார்த்து ரசிக்கச் செய்தவர் அவர்தான்.

உண்மையில அவரின் ஆதரவும் ஆசிர்வாதமும் எங்களுக்கு நிறைய இருந்தது. 67ஆம் 68ஆம், 69ஆம் ஆண்டுகள எங்களுக்கு ஒரே நாடகம்தான். ஒரு இடம் மாறி மற்ற இடத்தில நாடகம் நடக்கும். அடேயப்பா... அந்த நாட்கள் திரும்ப வருமா? அப்பிடி வந்தாலும் நீங்க நிண்டு புடிப்பீங்களா? (எனக் கேட்டுவிட்டு புன்முறுவல் பூக்கிறார்).




**கேள்வி: அப்பிடியெண்டால், பேராசிரியர் வித்தியானந்தனுக்குப் பிறகா நாட்டுக்கூத்துக்கள் அரைமணி நேர, ஒரு மணிநேர கூத்துக்களாக சுருக்கப்பட்டன?**

பேராசிரியர் வித்தியானந்தன் நாடகங்களப் போடுறதுக்கு முன்பே நான் குறுகிய ஒரு மணித்தியால, இரு மணித்தியால நாடகங்களப் போடத் தொடங்கீற்றன். முதன் முதல் பெரிய அளவில செம்மந்தீவுத் தியட்டறில 1961ஆம் ஆண்டு நல்வாழ்வு என்ற நாடகத்த அப்படித்தான் போட்டன். அதுபோல, கல்சுமந்த காவலர்கள், வீரத்தாய், அன்புப் பரிசு போன்ற நாடகங்கள 1964, 1965ஆம் ஆண்டுகள்ளே அரங்கேற்றீற்றன். என்ன, வித்தியானந்தனுக்குப் பிறகு இன்னும் உத்வேகத்தோட இந்த நாடகங்களச் செய்தம். அத்தோட, படித்தவர்கள் மட்டத்தில எங்களுக்கான அங்கீகாரம் கிடைச்சிது.

**கேள்வி: பேராசிரியர் வித்தியானந்தனோட உங்களுக்கு தொடர்பு இருந்ததா ஐயா?**

அவரோட எனக்கு நிறையத் தொடர்புகள் இருந்தது. மனிசன் எல்லாத்துக்கும் நேரடியாக் கடிதங்கள் எழுதும். அவர் எழுதிய கடிதங்கள் இன்னும் என்னுடைய 'பயில்'லில் கிடக்குது. எங்களுடைய நாடகங்களை திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்கள்ள பல தடவைகள் மேடையேற்றி இருக்கிறார். நான் நினைக்கிறன், 1965ஆம் ஆண்டளவில இருந்து அவருடனான தொடர்புகள் நிறைய இருந்தன. 1972ஆம் ஆண்டு ஆவணி மாதம் என நினைக்கிறன் யாழ்ப்பாணத்தில இலங்கை கலாசார பேரவையினால் வித்தியானந்தன் தமிழ் நாடகக் கருத்தரங்கு ஒண்டு நடத்தினார். அதில 'மரபுவழி நாடகங்கள்' பற்றி உரையாற்ற என்னையும் அழைச்சிருந்தார். மௌனகுரு (பேராசிரியர் மௌனகுரு) அவர்களும் அன்று இதே விடயத்தில உரையாற்றியது ஞாபகம் இருக்குது.

அப்பிடி, வித்தியானந்தன் எங்கட கலைத் தொண்டுகள நல்லா அறிஞ்சு, அவற்றை அந்தக் காலத்திலேயே நன்கு பயன்படுத்தினார். நான் பாடவோ அல்லது நடிக்கவோ மேடையேறினால் 'இந்தா தம்பிராசா வந்திற்றான்' என்று என்னுடைய பாடலிலும் நடிப்பிலும் லயித்துப் போய் இருப்பார். இதற்கெல்லாம் நன்றிக்கடனாக அவர் 1989இல் இறந்த போது மன்னாரில இருந்து சென்று, அவரது இறுதி நிகழ்வில கலந்து கொண்டதோடு,'கல்வெட்டு'ம் பாடினன். உண்மையில, அந்த மனிசன மறக்கேலாது. அவர் காலத்தில மன்னாரில் கலைவிழா நடந்தது போல இதுவரையில நடக்கயில்ல. அத்தோட பேராசிரியர் வித்தியானந்தனோட சிவத்தம்பியும் வருவார். அவரும் நல்ல ஆதரவு தந்தார். மௌனகுருவோடயும் நல்ல தொடர்பு இருக்குது. அவரே நாட்டுக்கூத்துக்கள எழுதுவார், திறமா நடிப்பார். இந்தத் துறையில நல்ல கெட்டிக்காரன். காரை சுந்தரம்பிள்ளையையும் தெரியும். நாட்டுக்கூத்துகள அவரும் எழுதுவார், நடிப்பார். அவரும் ஒரு அருமையான கலைஞன். இவர்களோட பழகக் கிடச்சது பெரிய பாக்கியம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: பேராசிரியர் வித்தியானந்தனவிட, வேறு யார் யார் இந்த நாட்டுக்கூத்துகள, நாடகக் கலைய குறிப்பா மன்னாரில வளரச்செய்த ஆட்கள்?**

அந்த நாட்கள்ள, நான் நினைக்கிறன் 1967, 1968 ஆண்டுகளா இருக்கவேணும். மன்னார் அரசாங்க அதிபரா இருந்தவர் தேவநேசன் நேசையா. நானாட்டான் பகுதி உதவி அரசாங்க அதிபரா இருந்தவர் சொக்கலிங்கம். இரண்டு பேருமே கலைக்கு நல்ல ஆதரவு. இவங்கட காலத்தில 1967, 1968, 1969ஆம் ஆண்டுகள்ள நாடக விழாக்களுக்கு குறைவில்ல. நேசையாவும் சொக்கலிங்கமும் எங்கட கலை ஈடுபாடுகள பல தடவைகள் பல இடங்கள்ள சொல்லியிருக்கிறாங்க, பல மேடைகள்ள பேசியிருக்கிறாங்க. அவங்கட காலந்தான் மன்னாரின் 'நாடகப் பொற்காலம்' என்று சொல்லலாம். உண்மையில, சொக்கலிங்கம் ஐயா நல்ல பேச்சாளன். அதனால அவருக்கு, நாங்க எங்கட மன்றத்தால (முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்) 'சொல்லின் செல்வம்' என்ற பட்டம்கூடக் கொடுத்தோம். அதுக்குப் பிறகு அவர் 'சொல்லின் செல்வம் சொக்கலிங்கம்' என்றுதான் அழைக்கப்பட்டார்.

**மறக்க முடியாதவை?...**

**கேள்வி: உங்கட கலைபயணத்தில தொடக்க காலத்தில நடந்த உங்களால மறக்க முடியாத சம்பவம் இருக்கா ஐயா?**

மறக்கக் கூடிய சம்பவங்களா? என்ன செய்யிறது, வயது மறக்க வைக்கிது! 1961ஆம் ஆண்டில, என நினைக்கிறன். 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்','இயாகப்பர் நாடக மன்றம்' என்ற பெயரில இயங்கிக்கொண்டிருந்த காலம். மன்ற வளர்ச்சிக்காக நிதி சேர்க்கும் எண்ணத்தோடு முருங்கன் செம்மண்தீவு 'தியெட்டறில', 'நல்வாழ்வு' என்ற நாடகத்த 02 காட்சிகளா போட்டிருந்தம். 'ரிக்கற்' விற்பனைய, 'தியெட்டர்' பொறுப்பாளரிடமே விட்டுட்டன்: நம்பிக்கையினாலதான். எங்கட நாடகத்துக்கு அந்த நேரமே நல்ல மவுசு (வரவேற்பு) இருந்தது. சரியான சனம். 02 காட்சிக்கும் 'தியெட்டர்' நிரம்பிய சனம். எங்களுக்கு நல்ல சந்தோசம். ஆனா, நடிச்சி முடிஞ்சி கணக்கு பாத்தா, கொஞ்ச 'ரிக்கட்ருக்கு'தான் கணக்குக் காட்டப்பட்டது. அது மட்டுமில்லாம," 'ரிக்கட்' பணம், 'தியெட்டர்' வாடகைக்குக்கூட போதாது!" என கைவிரித்தார் பொறுப்பாளர். அதனால, நாங்க 'மனேஞருக்கு' (manager) மேலதிகமா பணம் கட்டவேண்டி இருக்கிறதா சொல்லிவிட்டார். பணம் கட்டாம நான் வெளிக்கிட முடியாத நிலை! உடனே, அப்பு (தந்தையார்) வீட்டுக்குப் போய் வெள்ளாமை (வேளாண்மை) செய்து நெல் விற்ற காசு வைச்சிருந்தது. அதைக் கொண்டு வந்து கொடுத்து, என்னை மீட்டு எடுத்தார். எங்கட மன்ற வளர்ச்சிக்காக பிரமாண்டமான அளவில, அந்த நேரத்தில, எடுத்த முதல் முயற்சியே இப்படி எண்டால் மிச்சம் எப்பிடி இருந்திருக்கும்! அப்ப எனக்கு வயது 21.

**கேள்வி: நாடக அல்லது வேற கலை நிகழ்ச்சிகளுக்குப் போகிறபோது நடந்த சுவையான சம்பவங்கள் ஏதாவது...?**

ஒரு தடவை, பூந்தான் யோசேப்பு முருங்கனுக்கு வந்தார். செல்வத்தான் (தன் அக்கா திரேசம்மாவின் கணவர்), பிரகாசத்தார் (அமரர் திரு.ச.பிரகாசம்) ஆட்கள், 'தம்பி, தம்பிராசா, இவர் பூந்தான் யோசேப்பு நாடகம் போட இங்க வாறாரா? ஆவங்கட நாடகம் இருக்குதா? அவங்களோட நாங்க நடிக்கேலுமா?' எண்டு என்னட்ட மீண்டும் மீண்டும் கேட்ருற்று, 'இவன் தம்பிராசா சொன்னாலும் கேக்கமாட்டான். இவனோட ஒண்டும் செய்ய ஏலாது' எண்டு மற்றாக்களிடம் சொன்ன சம்பவம் ஞாபகம் வருது.

இன்னுமொரு தடவை, அன்புப் பரிசு நாடகத்தை துணுக்காய் கொண்டுபோய் இருந்தம். வரவேற்பு நிகழ்வுக்கு தவில் நல்லா வாசிச்சதைப் பாத்துவிட்டு அப்பு (தன் தந்தையார்), 'தம்பி இந்த இடத்துக்கு நாம எல்லாம் வரலாமா?' என்றார். நான், 'அப்பு நாம வந்தது தவில் வாசிக்க இல்ல, நாம வந்தது நாடகம் நடிக்க,' என்று சொல்லி அவர்களை நான் உச்சாகப்படுத்த வேண்டி இருந்தது. அப்பிடி இருந்தும், 'இவன் நம்மட மரியாதையை கெடுக்கத்தான் இங்க கூட்டிவந்திருக்கிறான்!' என்றது. இப்பிடி, சில வேளைகள்ள நல்ல திறமைகள வச்சிக்கொண்டே பின்னிற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: நாடகத்தின் ஊடாக சமுதாயத்துக்கு என்னசெய்தியச் சொன்னீங்க அல்லது என்னசொல்ல விளைந்தீங்க?**

சமுதாய சமத்துவத்தச் சொன்னேன். அடிமைத்தனங்களும், அடக்குமுறைகளும் ஆரோக்கியமான சமுதாயத்திற்கு ஆகாது என்ற செய்தியை சொன்னேன். சமுதாயத்தில் விழிப்புணர்வை உருவாக்க முனைந்தேன். அடிமைப்படுத்தப்பட்ட நம் மக்களின் விடுதலை வேண்டினேன். பெண் விடுதலையின் ஊடாக ஆண் - பெண் உறவை சீர்படுத்த விரும்பினேன். இவ்வாறு கல்வியையும் கலையையும் அகிம்சை ஆயுதமாக பயன்படுத்தினேன். அவ்வளவுதான்.

**அரசியலில்...**

**கேள்வி: சத்தியாக்கிரக காலத்தில என்ன ஐயா நடந்தது?**

அடேயப்பா, அது இன்னுமொரு வரலாறு. அத (அதை) என்னெண்டு சொல்லுறது! சத்தியாக்கிரகக் காலம் சங்கடமான காலந்தான். 1960ஆம் ஆண்டளவில இருக்கவேணும். படிப்பிக்கிறது அடம்பன், சாப்பாடு கச்சேரியடி, படுக்கிறது அழகக்கோன் வீடு! இப்படியே கொஞ்சக் காலம் போச்சிது! ஒருநாள் விடியப்புறம் அழகக்கோன் வந்து, 'இறைவன் என்னை ஆட்கொள்ளப் போகிறார்' எண்டார். நாங்க,'இவர் என்ன சொல்லுறார்,' என அங்கலாய்த்துக் கொண்டிருக்க, 'ஆமி' தடார் மடார் எண்டு திடீரென வந்து பாஞ்சான். பளீர்... பளீர்... என கண்டமாதிரி அடிவிழுந்துது. அங்கயிருந்த எல்லாரையும் தங்கட வாகனத்துக்குள்ள அள்ளிப்போட்டான். அவன் அடிக்க அடிக்க, 'தூக்கு மேடை பஞ்சு மெத்தை, தூக்கு மேடை பஞ்சு மெத்தை, தூக்கு மேடை பஞ்சு மெத்தை...' என சொல்லிக்கொண்டுதான் போனம்.

விடத்தல்தீவுக்கு போறதுக்கு முன்னுள்ள நாயாத்துவெளியில எல்லாரையும் இறக்கிவிட்டு, 'ஒடுங்க, ஓடுங்க' எண்டாங்க. கால்நடையாக வீட்டுக்கு வந்து சேந்தம். அப்பிடி வாற வழியில, நம்மட உடையாரும் (அமரர் எஸ்.எம்.சுவாந்து) வந்தார். அவரிடத்தில, 'ஐயா எப்பிடி இருக்கிறீங்க?' என்று கேட்க,'வேசமக்களா! உங்களாலதான் நான் அடிவாங்கினன்' என கோபப்பட்டுப் பேசினார். இப்பிடி, அந்தக் கொஞ்ச நாட்கள் எப்பிடி விடியிது, எப்பிடிப் பொழுது படுது எனத் தெரியாமல் போனது. எனக்கு வீட்டில பேச்சு விழுந்தாலும் அப்பு நல்ல ஆதரவு. அத்தோட பெரியப்பா (சந்தான் புலவர்), அவர உங்களுக்குத் தெரியாது. அவர் எனக்கு நல்ல ஆதரவு. அப்புட்ட (தன் தந்தையிடம்), 'அவன விடு, அவன் நல்லா வருவான். அவனுக்கு ஒண்டும் வராது' என எப்போதுமே உற்சாகப்படுத்துவார்.

இந்த சத்தியாக்கிரகத்துக்கு எழுதின பாட்டுத்தான் 'அறப்போரே நம்மைக் காக்கும்' என்ற பாட்டு. இந்தப் பாடலை, ஓர் இஸ்லாமிய பக்திப்பாட்டு மெட்டில் எழுதினன். இந்தப் பாட்டு, அப்ப மட்டும் இல்ல இப்பவும் மக்களால நினைக்கப்படுகிற ஒரு பாட்டு:

**தொகையறா**

அறப்போரே நம்மைக் காக்கும் - நல்ல
அறப்போரே நம்மை காக்கும்

**பல்லவி**

அநியாயமாக அன்று அடித்தார்களே
அண்ணல் செந்தமிழ் காக்கும் தோழர்களே
அன்பின் வழியாகவே அறப்போர் செய்திடுவோம்
அனைவரும் வாரீர் அன்புடன் நடப்பீர்

**சரணம்**

இந்து முஸ்லிம் கிறிஸ்தவ சோதரர்காள்
இணைந்தே நாம் ஒன்றாகப் போராடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழியாகவே அறப்போர் செய்குவோம்
அனைவரும் வாரீர் அன்புடன் நடப்பீர்

அறப்போரே நம்மைக் காக்கும்...

(எனப் பாடிக் காட்டுகிறார். செபமாலை, குழந்தையுடன் சேர்ந்து அவரின் அண்ணன் சீமான் அவர்களும், மனைவி செ.றோஸ்மேரி அவர்களும் பாடுகிறார்கள்).

**கேள்வி: இதே மாதிரி வேற'அறப்போர்' பாட்டுக்கள் எழுதுனீங்களா ஐயா?**

நிறைய எழுதினன். ஒண்டு ரண்டத் தவிர மற்றதுகள் ஞாபகத்தில இல்ல. 'கண்ணும் கண்ணும் பேசுவது உன்னால் அன்றோ' என்ற பாட்டு மெட்டில ஒரு பாட்டு எழுதினன்.

நெஞ்சில் எண்ணும்போது வீரம் எங்கேயடா
தமிழ்நிலையை எண்ணி நீ உணர்ந்து எழுந்துபாரடா
நிம்மதியாய் உறங்க மனம் வருகுதேயடா
உந்தன் நிலையை எண்ணி உணர்ந்து நீயும் எழுந்துபாரடா

சேர சோழ பாண்டியனை மறந்துவிட்டாயோ – உன்
செந்தமிழ் மானம் தன்னை மறந்துசென்றாயோ
சேர்ந்து அறப்போரில் வந்து நிமிர்ந்து நில்லடா – நீ
செய்வதறியாத உண்மை உணர்ந்து செல்லடா

இந்த நாட்கள்ளதான்'அறப்போா அறைகூவல்' என்ற நூல் வெளியீட்டைச் செய்தன்.

**கேள்வி: ஐயா, திருகோணமலை பாத யாத்திரையப் பற்றிச் சொல்லுங்களன்?**

திருகோணமலை பாதயாத்திரை அறிவிக்கப்பட்டு விட்டது. வவுனியாவுக்கு பஸ்சில போய் அங்க இருந்து முல்லைத்தீவு சென்று, முல்லைத்தீவில இருந்து கடற்கரை வழியா ஒரு கிழமையா கால்நடையில திருகோணமலை போனோம்.

நம்மட பகுதிகள்ள இருந்து 50, 60 பேரளவில யாத்திரையில பங்கெடுப்பதாக பெயர் கொடுத்தாலும், இரண்டு பேர்தான் போனம். சந்தான் வாத்தியார் (அமரர் லோறன்ஸ் மொத்தம் சந்தான்) சந்தான் அவர்களும் நானும் பங்கேற்றம்.

**கேள்வி: நாடகம், நாட்டுக்கூத்துக்கள விட, வேற எவ்வகையான கலை நிகழ்ச்சிகள செய்தீங்க?**

நாடகத்திலே அண்ணாவிமரபு நாடகம், இசை நாடகம், சமூக நாடகம், நாட்டிய நாடகங்களையும், வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், இசை உரைச்சித்திரம், பாட்டுக் கச்சேரி போன்றவைகள செய்வம். இவற்றை விட நான் தனிப்பட்ட ரீதியாக: வரவேற்பு, பிரியாவிடை, திருமண, குருப்பட்ட பாராட்டு பத்திரங்கள் வாசித்து அளிப்பது, இறந்தவர்கள் பற்றி கல்வெட்டு பாடுவது, ஏதாவது முக்கிய தினங்கள ஒட்டி நடைபெறும் விழாக்கள்ள ஏதாவது ஒரு நிகழ்ச்சிய எல்லாருமே எதிர்பார்ப்பார்கள். சும்மா எண்டு இருக்க விடமாட்டார்கள். ஒண்டு முடிய ஒண்டு வந்துகொண்டே இருக்கும்.

**கேள்வி: ஒரு தடவ 'சமா' எண்டு சொன்னீங்களே ஐயா...?**

அது, நம்மட இயாகப்பர் திருநாள் முடிய 'சமா' நடக்கும். இது 50ஆம், 60ஆம் ஆண்டுகள்ள என்று சொல்லலாம். அதுக்கு முன்னுக்கும் நடந்திருக்க வேண்டும். வேற கோயில்களில் 'சமா' நடைபெற்றதில்ல. நம்மட கோயில்ல மட்டும்தான். இதற்கு குருமாரும் தடைபண்ண மாட்டாங்க. 'சமா' பார்க்க நிறையப்பேர் வெளியிடங்கள்ள இருந்து வருவாங்க. அதுவே ஒரு திருவிழாதான். இப்பிடி ஒரு நிகழ்ச்சி இல்லாட்டி இன்னொரு நிகழ்ச்சி வந்து கொண்டே இருக்கும். அப்பிடி வராட்டி, நாங்க நிகழ்ச்சிகள போடுவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: பல தடவைகள் மன அழுத்தத்தினால நோயுற்று இருந்திருக்கிறீங்களே ஐயா. அதுபற்றி இப்ப என்ன நினைக்கிறீங்க?**

என்ன செய்யிறது? என்னுடைய கடும் ஈடுபாட்டாலதான். எத்தனைக்கு எதிரா போராட வேண்டியிருந்திது தெரியுமா? உண்மையில, இந்த வருத்தம் எந்தப் பகையாளிக்கும் வரக்கூடாது. மன்னார் யோசப் மாஸ்ரர், 'குழந்தை, உம்முடைய சக்திக்கு அப்பால செயற்படுவதால இந்த வருத்தம் உமக்கு வந்தது' என்பார். உண்மையில, இந்த நேரங்கள்ள எனக்கு கைகொடுத்தது அப்பு (செபஸ்தியான்), மாமா (தொம்மை சவிரிமுத்து), என்ட சகோதரங்கள், அம்மாட சகோதரங்கள், உறவினர், ஒருசில நண்பர்கள்தான். இப்பிடியான நேரத்தில எல்லாம், மாமா (தொம்மை சவிரிமுத்து) வந்து கிழமை கணக்கில வீட்டில தங்கி நிற்பார். தம்பியாட்கள் (தன் சகோதரர்கள்), பத்தியாட்கள் (ஒன்றுவிட்ட சகோதர்கள்), இங்கால வெற்றியாக்கள் (தன் மனைவியின் சகோதரர்கள்) மறக்க ஏலாது. இப்படியான நேரங்கள்ள வெற்றி (அமரர் ச.வெற்றிநாயகம்), மரியநாயகம் (இப்போது பிரான்சில் வாழ்ந்து வருகிறார்) என்னோடே கூடத்திரிவாங்க. அப்பப்பா, நினைக்க இப்பிடி எல்லாம் நடந்ததா எண்டு இருக்கு! இதனால, எவ்வளவ இழந்திருப்பன்!

**கேள்வி: இப்ப ஐயா, இவ்வளவு காலமா உங்களால முன்னெடுக்கப்பட்ட பணிகள் எதிர்காலத்தில தொடரப்படுமா?**

தொடரத்தானே வேணும். இருக்கிற ஆட்கள் தொடருவாங்க. தொடர வேணும்.

**கேள்வி: என்னண்டாலும், உங்களுக்குப் பிறகு நீங்க செய்த மாதிரி செய்யிறதுக்கு ஒருதரும் இல்ல எண்டு பொதுவா ஆட்கள் சொல்லிக் கொள்ளுறாங்க. அது பற்றி என்ன நினைக்கிறீங்க?**

அப்பிடி எதிர்பாக்க ஏலாதுதானே. நான் செய்த மாதிரி செய்ய ஏலாது, செய்யத் தேவையுமில்ல. ஒவ்வொரு ஆளும் தங்களுக்கு தங்களுக்கு ஏற்றாற்போல செய்ய வேண்டியதுதான். எல்லாத்தையும் இறை நம்பிக்கையோட நம்மட புனித யாகப்பரின் பாதுகாவல்ல செய்துகொண்டு போகவேண்டியதுதான். ■

**'குழந்தை'யைப் பற்றி, கட்டுரை**

**வெளியிட்ட பத்திரிகைகளும் - சஞ்சிகைகளும்.**

| | |
|---|---|
| வீரகேசரி | - 29.12.1966, 25.09.2009. |
| தினக்குரல் | - 20.03.2008 |
| ஈழநாதம் (மட்டுநகர்) | - 01.07.2005 |
| உதயன் | - 12.08.2012 |
| ஈழமுரசு (பிரான்ஸ்) | - 19-25.09.2009 |
| மன்னா | - புரட்டாசி, 2000 |
| ஆற்றுகை | - டிசெம்பர் 2004 (இதழ் 12) |
| மல்லிகை | - செப்ரெம்பர் 2006 |
| ஞானம் | - பெப்ரவரி 2009 |
| முற்றம் | - 2007 (இதழ் 34) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து வளர்ந்து வளர்த்து வாழ்வித்த எங்கள் ஐயா !



செ. ஆனந்தன்
*பாரீஸ்,*
*பிரான்ஸ்.*

**'உப்பு இல்லாவிட்டால்தான் உப்பின் அருமை தெரியும், அப்பன் இல்லாவிட்டால்தான் அப்பனின் பெருமை புரியும்'** என்பது, ஒரு தமிழ்ப் பெருமொழி.

உலகத்தின் பெரும் நகர்களில் ஒன்றான பாரீஸ் நகரில் இருந்துகொண்டு, இந்த வரிகளின் ஆழ அகலத்தையும், நன்மை தீமைகளையும் சிந்தித்துப் பார்க்கிறேன். புதுவகையான மாதிரிகள் (Fashion) விதம்விதமாக, ஒவ்வொரு நாளும் வெளிவரும் நகரங்களில் ஒன்றாக பாரீஸ் இருக்கிறது. காலையில் பாரீஸில் வெளிவந்த ஒரு புதிய மாதிரிகை, அல்லது புதிய வடிவங்கள், உலகம் முழுவதும் சுற்றி, அதே தினம் மாலை வேளையாகும் முன்னே பழைய மாதிரிகையாக, அல்லது பழைய வடிவங்களாகவே, பாரீஸில் உள்நுழைகிறது என்பார்கள். 'மாதிரிகைகளின் தலைநகரம்' என்றழைக்கப்படும் அளவிற்கு பெயர் பெற்றது இந்நகர்.

அத்தகைய வேகமும், கலைநயமும் உள்ள இடமாக விளங்குகிறது. கட்டடக்கலையாக இருந்தாலென்ன, சிற்பக்கலையாக இருந்தாலென்ன, ஓவியக்கலையாக இருந்தாலென்ன, ஆடல், பாடல், இசை, சமையல் என்று வருகின்ற எக்கலை வடிவங்களாக இருந்தாலும், பாரீஸுக்கென்று ஒரு தனி இடம் இருக்கிறது.

பாரீசில் நகரில் இருக்கின்ற Sacre cœur, Gorge Pompidou, Notre Dame, Saint Michel, போன்ற பல இடங்களிலெல்லாம் இசைக்கலைஞர்கள் வாத்தியங்கள் மீட்டுவதும், ஓவியர்கள் ஓவியங்கள் வரைவதுமாக கலைநயங்களைக் காணமுடியும். இருந்தும் 1985, 1986ஆம், ஆண்டுகளோடு ஒப்புநோக்கும்போது, தற்போது கொஞ்சம் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகில், கலைஞர்களும் படைப்பாளிகளும் அருகிக்கொண்டு வருகிறார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. இருந்தும் இமயத்தைத் தொடும் சாதனையாளர்களைக் கண்டு, மனம் கொஞ்சம் ஆறுதல் அடைகிறது.

என்னதான் அவசரமாக உலகம் உருண்டுகொண்டு இருந்தாலும், என்னவிதமான புதிய வரவுகள் வந்தாலும், தங்களுடைய அடையாளத்தை, தொன்மையான கலைவடிவங்களை பேணிக்காப்பது, நம்மை வியக்க வைக்கிறது. பாரீசின் மையப்பகுதியில், 1875ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட OPERA என்கின்ற கலைமண்டபம், பிரஞ்சு மக்களின் கலை உணர்விற்கும், அவர்களின் தொன்மக் கலைகளைக் காப்பதற்கும் சான்றாக காட்சி தருகிறது. இந்தகலை மண்டபத்தின் வேலைப்பாடுகளும், கட்டட அழகும் காண்போரை வியக்கவைக்கும். ஆனால் நாமோ மேலைத்தேய மோகத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமிருக்கும் நல்ல பல பொக்கிசங்களையும், அடையாளங்களையும் மறந்துவிடுகிறோம், சில இடங்களில் மறுதலித்தும்விடுகின்றோம் என்பதுதான் கசப்பான உண்மை.

தாய் மண்ணைவிட்டு பிரிந்துவந்து 10 வருடங்களின்பின், என்னுடைய தாய் தந்தையரை தாய்லாந்தில் சந்தித்த அனுபவம் கிடைத்தது. அப்போது என்னுடைய அனுபவங்களையும், ஆதங்கங்களையும் என்னுடைய 'ஐயா'வுடன் பகிர்ந்துகொண்டேன். அப்போது புதிய நாடக வடிவங்களையும், நான் மேடையேற்றிய நாடகங்கள்பற்றியும் பேச்சுவந்தது. அப்போது ஐயா உறுதியாக ஒரு வார்த்தை சொன்னார். **"நீங்கள் என்ன புதிய நாடகங்கள் செய்தாலும், எங்களுடைய மரபுக்கூத்து நாடகங்களையும் செய்யுங்கள். அவைகள் உங்களை அடையாளம் காட்டும். அதுவே போதும்"** என்று சொன்னார். உண்மையில் இந்த வார்த்தைகளின் முழு அர்த்தங்களையும், பொருள்களையும் முழுமையாக உணர்ந்துகொள்ள எனக்குப் பல வருடங்கள் பிடித்தன. இவ்வாறு எம்முடைய தனித்துவங்களையும், அடையாளங்களையும், விளங்கிக்கொள்ளாது, மிகப்பெரும் தொகையான மக்கள் எம்மண்ணிலே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறோம்.

ஆனால், துரதிஸ்ரவசமாக நம்முடைய அடையாளங்களும் கலைவடிவங்களும், முறைசார் வடிவங்களாக ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங்களாக, வடிவமைக்கப்படவில்லை என்பது கவலையான ஒரு விடயம். நம்முடைய கலைவடிவங்களுக்கே உரிய ஒரு சிறப்பு, வாய்மொழியாகவும் எழுதப்படாத வடிவங்களாகவும் இருப்பதுதான். ஆனால் அந்தச் சிறப்பே எம்முடைய கலைவடிவங்கள் நலிவடைய, அல்லது சீரமைக்கப்படாமல் இருக்கக் காரணமாய் அமைந்துவிட்டன.

இன்று இந்த குறைபாடு உணரப்பட்டு பல்கலைக்கழகங்களிலும் இதர அமைப்புக்களிலும், இதுசம்பந்தமாகச் சில பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவது, மனதுக்கு சற்று நிம்மதி தருகிறது. வாழ்க்கையின் பொருளும் இரசனையும் நமது மண்ணுக்குச் சிறப்பானது, தனித்துவம் வாய்ந்தது, மிகவும் பழமைவாய்ந்தது. நம்முடைய மண்ணிலே அமைந்திருக்கின்ற, கோவில்களும் சிற்பங்களும் கலை வடிவங்களும் அதற்குச்சான்று. ஆனால் நம்மில் எத்தனைபேர் இவற்றை உணர்ந்து இருக்கிறோம்?

**நமது கலைகளை முதலில் நாம் காதலிக்கவேண்டும். பின்பு அக்கலைகளை நாம் கற்றுக் கொள்ளவேண்டும். அப்போது நம்கலை தானாகப் பாதுகாக்கப்படும்.** தனித்துவமான அடையாளங்கள் கொண்டவையே, தொன்மையான இனமாக கருதப்படுகிறது. ஆகவே எங்கள் அடையாளங்களை இழந்தால், நம்மை நாம் ஒரு தொன்மையான இனமாக கருதமுடியாது.

உலகிலே இருக்கின்ற பலநாடுகளில் இருந்தும், பல்வேறு காரணங்களுக்காக பல வகையான இன மனிதர்களும் புலம்பெயர்ந்து வந்து, ஒன்றாகச் சேர்ந்து வாழுகின்ற நகரங்களிலே பாரிஸும் ஒன்றாக இருக்கிறது. அப்படி வந்து வாழுகின்ற மக்கள் தத்தமது அடையாளங்களையும்,



1979இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு உடைகளையும், பழக்க வழக்கங்களையும், அவர்களின் கலை அடையாளங்களையும், தத்தமது மொழிகளையும் கூட, இங்கே பாதுகாத்து வருகிறார்கள். எந்த ஒரு அந்நிய இன மனிதனும், இன்னுமொரு அந்நிய மனிதனைக் கண்டுபழகும்போது, **"உங்களுடைய நாடு எது?, உங்களது மொழியென்ன?, உங்களுடைய உணவு என்ன?, உங்களுடைய உடைகள் எப்படியானவை?, உங்களுடைய கலை வடிவங்கள் என்ன?..."** என்ற தேடலுடனேயே தொடங்குகிறது. அந்த அளவுக்கு உலகம் சுருங்கிவிட்டது.

அத்தோடு அடுத்தவர்களையும் அவர் அடையாளங்களையும் மதிக்கும் மனப்பாங்கும் வந்திருக்கிறது. ஆனால் நாம், நம்முடைய அடையாளங்களை மறந்தவர்களாக, நம்முடைய அடையாளங்களை தரம் குறைந்தவையாக நாமே பார்ப்பவர்களாக இருப்பது, நமக்கு நன்மை தராமல் போவதோடு நமது இருப்பையும் கேள்விக்குறியாக்கிவிடும். ஆகவே நம்முடைய அடையாளங்கள், நமக்கு மிகவும் முக்கியமானவை ஆகின்றன.

நான் பிறந்து என் அம்மாவிடம் பால் குடித்துக் கொண்டு, வாழ்வை உணரத் தொடங்கும் பொழுதே, கூத்துப் பாட்டுக்களையும், கூத்தையும், கேட்டும் பார்த்தும் வளரக்கூடிய சூழல் கிடைத்தது. ஏறக்குறைய 1968க்கு பிற்பாடு, எங்கள் வீட்டு முற்றத்திலேயே நிலவு ஒளியோடும் ('பெற்றோல் மக்ஸ்' ஒளியும் சேர்ந்து) தினமும் இரவு வேளைகளில், கூத்து ஒத்திகைகள் நடக்கும். எனது அப்பையா மரியான் செபஸ்ரியான் ஒரு அண்ணாவியாராக இருந்ததாலும், என்னுடைய ஐயா இந்தத் துறையில் தேர்ச்சி பெற்றவராகவும், திறமை வாய்ந்தவராகவும், ஆளுமை உள்ளவராகவும் இருந்தபடியால், முருங்கன் முத்தமிழ் கலாமன்றதை அமைத்து, பல படைப்புக்களைச் செய்து அரங்கேற்றிக் கொண்டிருந்த காலமது.

ஐயாவினுடைய சகோதரர்களான திரு.சீமான், திரு.இரத்தினம், நாட்டார் பாடல் புகழ் திரு.மாசில்லாமணி, திரு.யேசுதாசன், சகோ. எலிசபெத், திரு.பாலசிங்கம், ஆகியோர் ஆணிவேர்களாக இருந்திருக் கிறார்கள். புலவர் பாவிலு, வித்துவான் சூசை, திரு.சவிரிமுத்து, திரு.பறுனாந்து போன்ற ஊர் பெரியவர்களின் ஆசீர்வாதமும், ஒரு காரணமாக இருந்தது.

நான் பிறப்பதற்கு ஒரு வருடங்களுக்கு முன்பு, இந்தக் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எனவே, எனது ஐயாவிற்கு முதற் குழந்தையாக இந்த முத்தமிழ் கலாமன்றத்தை நான் பார்க்கின்றேன். ஓர் ஆர்மோனியம்,டோங்கி, பொங்கோஸ், உடுக்கு, கஞ்சீரா, கடம், இன்னும் வேறு வகையான சிறு சிறு வாத்தியங்களுடனும் ஆரம்பமாகும் கலாமன்ற கீதமான, "வாழ்க எம் கலைமகள் வாழ்கவே... வளர்க செந்தமிழும் வாழ்கவே" என்ற பாடல் முத்தமிழ் கலாமன்றம், நாடகத்தை தொடங்கப் போவதைப் பார்வையாளர்களுக்குக் கட்டியம் கூறி நிற்கும். ஒழுக்கம், பணிவு, ஒற்றுமை, கூட்டுமுயற்சி, நம்பிக்கை, துணிவு, போன்ற நற்பண்புகளை எனக்குச் சொல்லித் தந்தது இந்த மன்றமே.

5, 6 வயதாக இருக்கும் போதே கைத்தாளம் போடுவதும், நாடகப் பிரதி பார்ப்பதோடும் எனது பணி தொடங்கியது. நாடகப் பிரதிகளோ வசனங்களோ ஒத்திகைகளோ இல்லாது மேடையேறும் இந்தக் கால நாடகங்களோடு, குறைந்தது 30, 40 தடவைகளுக்கு மேல் ஒத்திகை பார்க்கப்பட்டு, நாடகத்தில் வருகின்ற எல்லா நடிகர்களுக்கும் எல்லா வசனங்களும், எல்லா பாடல்களும் மனப்பாடம் செய்யப் பட்ட நிலையிலும், மேடையில் நாடகத்தைப் பார்க்காது, நாடகப்பிரதியில் வைத்த கண் வாங்காது, நாடகப் பிரதியைப் பார்க்க என்னைப் பழக்கியதும் இந்த முருங்கன் முத்தமிழ் கலாமன்றமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின உழைப்பே, கலை வடிவங்கள் செழுமையாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்பதை எனக்கு கற்றுத் தந்ததும் இந்த முருங்கன் முத்தமிழ் கலாமன்றமே. ஆயிரம் பேரைக் கொண்டு கலை வடிவங்களை அமைப்பதை விட, ஐந்து ஆறு பேர்களின் ஆற்றல்கள், அவனியில் ஆழமாகப் பதிந்துவிடும் எனக் கற்றுத்தந்தது. மன்னார் மாவட்ட அளவிலும், அகில இலங்கை ரீதியாகவும் பல முதற் பரிசில்களைப் பெற்றிருக்கிறது. இலங்கை வானொலியிலும் தடங்களை பதித்திருக்கிறது.

விரல் விட்டு எண்ணக் கூடிய ஒப்பனைக் கலைக் கலைஞர்களான, ஆவணத்தைச் சேர்த்த திரு வேதநாயகம், அடம்பனைச் சேர்ந்த அமரர் ஆசிரியர் திரு.இம்மானுவல் போன்றோருடன், திரு.பெஞ்சமின் செல்வம் போன்ற பெரியோர்களும் அணிசேர்ந்து இருக்கின்றார்கள். கலாநிதி. வித்தியானந்தன், உதவி அரச அதிபர் 'சொல்லின்செல்வம்' சொக்கலிங்கம், மறைந்த மெதடிஸ்த சபைப் போதகர் ஜெயராஜசிங்கம், இவர்களின் ஊக்கமும், உற்சாகமும், மன்றத்தின் கலைப் பயணத்தில் துணைநின்றன. இவைகளெல்லாம் எனக்கு பெரும் பலம்தருவனவாக அமைந்தன.

1990இல் என்னுடைய முதலாவது நாட்டுக்கூத்தாக **'தாவீது கோலியாத்'** அமைந்தது. வேதாகமத்திலிருந்து எடுத்த கருவாக இருந்ததாலும், எனது ஐயாவினால் ஏற்கெனவே மேடையேற்றப்பட்டதாலும், எனக்கு இது இலகுவாக இருந்தது. 'இனிக்கும் இரவினிலே' என்ற கலை நிகழ்ச்சிக்காக இது பாரீஸில் மேடையேற்றப்பட்டது. இதனை மேடையேற்ற முருங்கனைச் சேர்ந்த கலைஞர் பிலிப்தேவா, அத்தனை முயற்சிகளையும் செய்திருந்தார்.

1992இல் **'அழியட்டும் இச் சந்ததிகள்'** என்ற நாட்டுக்கூத்தை, பரிட்சார்த்த முயற்சியாக சமூகக் கருவை கதையாகக்கொண்டு இக்கூத்தை வீடியோ மலருக்காகச் செய்திருந்தோம். இதனை செய்து முடிக்க, மறைந்த பெரும் கலைஞன் கிறகோரி தங்கராசா அவர்கள் ஆதரவு தந்திருந்தார். பலருடைய பாராட்டையும் பெற்றிருந்தது.

1996இல் **'நகர்வுகள்'** எங்களுடைய கூத்து வடிவம் மாறாமல், இன்றைய அரசியல் பாத்திர நகர்வுகளுடன், அன்றைய கதையாகிய கண்ணகி சிலைக்கு கல் சுமந்த கதையும், இணைந்து வந்ததால் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது. இக்கதைக்கு மூல காரணம், எனது ஐயாவினுடைய 'கல் சுமந்த காவலர்கள்' என்ற நாட்டுக்கூத்தின் கருவையும், காட்சி மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாட்டுக்கூத்தாகும்.

1999இல் **'சங்காரம்'** என்ற கூத்து, கவிதையும் உரையும் கலந்தது. கூத்துவடிவத்துடன் இன்றைய அரசியல் பாத்திர நிகழ்வுகளை கூறிநின்றது. இதன் ஆட்டங்களும், விறுவிறுப்பாக மாறும் காட்சிகளும், மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன.

2000இல் **'ஏகலைவன்'** தொலைக் காட்சிக்காக இலண்டனைச் சேர்ந்த பரிட்ரர் யோசப் அவர்களின் உதவியோடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டது. இதன் வெற்றிக்கு ஈழத்தின் நாடகத்துறையிலும், சினிமாத் துறையிலும் முன்னோடிகளில் ஒருவரான எ.ரகுநாதனும் பங்குகொண்டது, எமக்கு வெற்றிக்கனியை இலகுவாக்கியது. இதனை எனக்குக் கிடைத்த மாபெரும் சந்தர்ப்பமாகவே பார்க்கிறேன்.

2001இல் **'மனிதம்'**, கூத்தும் உரையும் கலந்து, மனிதத்தைப் பற்றிய புதிய சிந்தனையாக, ஒளிவிழாவிற்கு மேடையேற்றப்பட்டது.

2004இல் **'ஆசை'** எங்களுடைய சிறுவர்களை வைத்து இயக்கிய கூத்து. இது எனக்கும், அவர்களுக்கும் ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது.

2006இல் **'வங்காலைப் பதிவு'**, 2008இல் **'தூரம்'** கூத்து வடிவத்துடன் அன்றைய வன்னி நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இவ்வாறாக அன்றைய அனுபவங்கள், இங்கு எனக்கு கைகொடுக்கின்றன. இருந்தும், சொந்த மண்ணிலே எங்கள் உடன்பிறப்புக்களுடன் இணைந்து, கலை நிகழ்வுகள் செய்யவில்லையே என்ற ஏக்கம் மனதை வாட்டத்தான் செய்கிறது. இடையில் வந்த போர்க்கால துயர்களும், நாட்டு நிலமைகளும் அனைத்து நிறுவனங்களையும், அனைவரது செயற்பாடுகளையும் ஆட்டித்தான்போட்டன. இத்தகைய நிலமைகளுக்குள்ளும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் தனது செயற்பாட்டை நிறுத்திக்கொள்ளாமல், நாட்டு நிலமைகளையும் கருத்திற்கொண்டு, தனது செயற்பாட்டை நிறுத்தாது இயங்கி வந்தது பாராட்டுக்குரியது.

இந்தமன்றம், ஏறத்தாழ 50 வருடங்களை இலகுவாக கடந்து வரவில்லை. தடைகளையும் சோதனைகளையும் தாண்டி, வெற்றிகளையும் தோல்விகளையும் ஏற்று, நிதானமாகவும் உறுதியாகவும் இந்த 50 வருடங்களைக் கடந்து வந்திருக்கிறது.

**இது எமக்கு ஒரு முன்மாதிரிகையை தருவதாகவும், உற்சாகத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. அத்தோடு ஒரு சவாலையும் சொல்லாமல் சொல்லிச் செல்கிறது. இதனை எங்களுடைய இளைய சந்ததியும், பெற்றவரும், பெரியவர்களும், கூடிநின்று சாதிப்பார்களா?**

இன்று, இன்னும் பல உறுப்பினர்களையும், பெரியவர்களையும் கொண்டுள்ள இம்மன்றம் ஆற்றவேண்டிய பணியும், கடந்து செல்லவேண்டிய தூரமும், பெறவேண்டிய பரிசுகளும், சாதிக்கவேண்டிய சாதனைகளும் காத்துக்கிடக்கின்றன. காலம் நல்ல விடைகூறுமா? ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை - மன்னார் கலைச்சொத்து



**அருள்பணி எஸ்.ஏ.பொன்சியன், அ.ம.தி.**
B.A.(Hons), B.Th.(Rome), M.Ed.(Jaffna),
அதிபர்,
புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை.

'குழந்தை' என அன்பாக அழைக்கப் படும் செபமாலை ஆசிரியர் அவர்கள் மன்னார் மாவட்ட கலையுலகிற்கு கிடைத்த மாபெரும் சொத்தாவார். 1960களில் துடிப்புள்ள இளைஞனாக தமிழ் அரசுக் கட்சியோடு சேர்ந்து, சத்தியாக்கிரகம் உட்பட பல நிகழ்ச்சிகளிலே கட்சிக்காக உற்சாகமாக உழைத்ததன் காரணமாக, கட்சியின் மூத்த உறுப்பினர்களால் செல்லமாக 'குழந்தை' என அழைக்கப்பட்டார். அன்போடு சூட்டப்பட்ட இந்தப் பெயரையே தனது கலையுலகப் பிரவேசத்திற்கான புனை பெயராகத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டார். ஆக்கங்கள், எழுதும்போதும், வானொலி நிகழ்ச்சிகளிலும் 'குழந்தை' என்ற பெயரையே உபயோகித்தார். பெற்றோரால் அன்போடு சூட்டப்பட்ட செபமாலை என்னும் பெயரோடு 'குழந்தை' என்னும் பெயரையும் இணைத்துக் கொண்டார்.

குழந்தை ஆசிரியரை இரு வழிகளில் அறியும் வாய்ப்பு இக்கட்டுரை ஆசிரியருக்குக் கிட்டியது.

1) 1989இல் 'மன்னார் நாட்டுக்கூத்து – ஓர் ஆய்வு' என்ற இளங்கலைமாணி பட்டப்படிப்பின் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான நேர்காணலில், கலைஞர்களில் ஒருவராக.

2) குரு நண்பன் அருட்தந்தை அன்புராசாவின் தந்தையாக.

குழந்தை அவர்களின் நாடகங்கள் பற்றி ஆய்வுக்காகத் திரட்டப்பட்ட தகவல்களிலிருந்தும், குழந்தை ஆசிரியரிடமிருந்தும், அவரோடு கலைத்தொடர்பு கொண்டிருந்தவர்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை ஆக்கப் படுகின்றது. குழந்தை ஆசிரியரின் கலைவாழ்வுத் தடயங்கள் பலவற்றுள் ஒருசிலவற்றையாவது பதிவு செய்வதே இக்கட்டுரை ஆசிரியரின் நோக்கமாகும்.

1940இல் பிறந்த குழந்தை அவர்கள் பள்ளிப் படிப்பின்போதே கலையில் ஆர்வம் கொண்டு கிராம வளர்ச்சிக்கான நிதிசேகரிப்பு கலை நிகழ்வுகளிலும், பாடசாலை ஆசிரியராக தமிழ்விழா மற்றும் போட்டிகளுக்கான நாடகங்களையும் ஆக்கியுள்ளார்.

அடம்பன், முருங்கன், கற்கடந்தகுளம், அரிப்புத்துறை, பொன்தீவுகண்டல், இசைமாலைத்தாழ்வு ஆகிய இடங்களில் பணியாற்றும்போது கண்டியரசன், கவரி வீசிய காவலன், யார் குழந்தை, வீரத்தாய், இலங்கை கொண்ட இராஜேந்திரன் போன்ற நாடகங்கள் பல மட்டங்களிலே பரிசைத் தட்டி சென்றுள்ளன. இப் போட்டி நாடகங்களிலே சவேரியார் பெண்கள் கல்லூரி, சித்தி விநாயகர் பாடசாலை, வங்காலை புனித ஆனாள் வித்தியாலயம், பேசாலை, நானாட்டான் போன்ற பல பாடசாலைகள் வழமையாக நாடகப் போட்டிகளில் பங்கு பற்றும் பாடசாலைகளுள் சிலவாகும். மன்னாரைப் பொறுத்தவரை இப்பாடசாலைகள் தமக்கேயுரிய கலைப் பாரம்பரியத்தையும், வினைத்திறன் மிக்க மனிதவளத்தையும் பின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணியாகக் கொண்டு கலைவளர்க்கும் பாடசாலைகளென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குழந்தை ஆசிரியர் பணியாற்றிய மேலே குறிப்பிட்ட பாடசாலைகள் எல்லாம் பின்தங்கிய நிலையில் இருந்த சிறிய பாடசாலைகளாகும். இவ்வாறாக வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்ட பாடசாலைகளிலிருந்து சகல வளமும் நிறைந்த நகரப் பாடசாலைகளோடு போட்டியிட்டு முதல் நிலையடைதல் என்பது பலத்த சவால் கொண்ட செயற்பாடாகும். குறைந்த வளங்களைக் கொண்டு உயர் விளைதிறனை (effectiveness) பெற்றுக் கொள்ளுதல் என்பது ஓர் ஆசிரியரின் வினைத்திறனை (efficiency) எடுத்துக்காட்டும் செயற்பாடாகும். அர்ப்பணிப்பும் வினைத்திறனும் ஒருங்கே அமைந்த ஆசிரியர்களை இன்றைய காலத்தில் காண்பது மிக அரிதாகவேயுள்ளது என்பது இன்றைய ஆசிரிய சமூகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும்.

போட்டி நாடகங்களிலே முதல்நிலை வகித்து பெற்றுக்கொண்ட வெற்றிக் களிப்பைவிட பொறாமை, பக்கச்சார்பு போன்ற எதிர் மனப்பாங்குகளால் பின்னிலைக்கு தள்ளப்பட்ட கசப்பான நிகழ்வுகளால் ஆழமாக மனம் நொந்துபோன பல சந்தர்ப்பங்கள் குழந்தை ஆசிரியருக்கு சாதாரணமாகிப்போன விடயங்கள். ஆனால் இவ்வாறான நிகழ்வுகள் மாணவர்கள் மத்தியில் விரக்தியையும், வரட்சியையும் ஏற்படுத்தின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தனது விருப்பு வெறுப்பான மனவெழுச்சிகளைக் கடந்த நிலையில் மாணவர்களுக்கு ஊக்கலை (Motivation) வழங்கும் உத்திகளையும் நல்லாசிரியன் என்ற முறையில் குழந்தை அவர்கள் நன்கறிந்து பயன்படுத்தினார். கற்றல் கற்பித்தலிலும், பாடசாலை நிர்வாக முறைமையிலும் அவருக்கிருந்த புலமைசார் அனுபவத்தையும், முதிர்ச்சியையுமே இது காட்டுகின்றது.

1964இல் முருங்கன் முத்தமிழ் கலாமன்ற உதயத்தின் முன்பும் பின்பும் பல நாடகங்களை குழந்தை மேடையேற்றியதற்கான சான்றுகள் உள்ளன. நல்வாழ்வு, இணைந்த உள்ளம், கல்சுமந்த காவலர்கள், அன்புப் பரிசு, நெற்றிக்கண், வீரத்தாய், யார் குழந்தை போன்ற நாடகங்கள் இவற்றுட் சில உதாரணங்களாகும்.

குழந்தை அவர்களை கலைப்பித்தன் என்று அழைப்பது எந்த வகையிலும் தவறாகாது. கலைக்காக எதையும் இழக்க அவர் தயாராகவிருந்தார். கலைக்காக தனது குடும்பப் பொறுப்புக்களோடு பேரம்பேசுகின்ற நிலைக்குக் கூட அவர் சென்றிருக்கின்றார். ஊன் உறக்கமின்றி ஓயாது கலைக்காக உழைத்ததன் காரணமாக உடல் உள ஆரோக்கியத்தையும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதற்கு பல சம்பவங்களைப் பட்டியலிடலாம்.

'யார் குழந்தை' என்ற அவரது நாடகத்தில் குழந்தையை வாளால் கொலை செய்ய முற்படும் காட்சி தத்ரூபமாக அமையவேண்டும் என்பதற்காக, பலரின் எதிர்ப்புக்களின் மத்தியிலும், தனது சொந்த மகனை (அருட்தந்தை அன்புராசா) அக்காட்சியில் பயன்படுத்தினார். இவ்வாறு கலைக்காக எந்தச் சவால்களையும் எதிர் கொள்ளத் தயாராகவிருந்தார்.

குழந்தை ஆசிரியர் விமர்சனக் கணைகளால் எளிதில் வீழ்த்தப்படக்கூடியவரல்ல. தனது பெயர், புகழ் போன்ற உயர் தன்னியல் கௌரவம்சார் (High self - esteem) விடயங்களைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்பவரல்ல. கலை வாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றைப் பொறுத்தவரை தனக்கேயுரிய தனிவழி ஒன்றைத் தேர்ந்து அதன்வழி நடந்தவர். இக்கொள்கையே அவரது கலைப் படைப்புகளுக்கு தனித்துவத்தைக் கொடுத்தது எனக் கொள்ளலாம்.

1963-1965 வரை கம்பளையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த வேளையில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்ட கர்ணன் போர், வாலி வதை, இலங்கேஸ்வரன் போன்ற நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பு குழந்தை ஆசிரியருக்கு கிட்டியது. இருந்தும் இக்காலத்திற்கு முன்பிருந்தே அதாவது 1961களிலிருந்தே நல்வாழ்வு, வீரத்தாய், இணைந்த உள்ளம், கல்சுமந்த காவலர்கள் போன்ற நாடகங்களைக் குழந்தை ஆக்கத் தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது. இதையறிந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் குழந்தை ஆசிரியரோடு நெருங்கிய கலைத் தொடர்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1972இல் இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக்குழு பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடத்திய தமிழ் நாடகக் கருத்தரங்கில் 'மன்னார் மரபு வழி நாடகங்கள்' என்ற தலைப்பில் யாழ். பொது நூலகத்தில் செ. தம்பிராசா (இப்படி ஒரு பெயரும் குழந்தைக்கு உண்டு) என்ற பெயரில் கருத்துரை வழங்கியுள்ளார். இவரோடு திரு. த.சண்முகசுந்தரம் B.A., திரு. சி.மௌனகுரு B.A. (தற்போது இவர் பேராசிரியராவார்) ஆகியோரும் கருத்துரை வழங்கியுள்ளனர். நாடகங்களை ஆக்கி நடிக்கின்ற ஒரு கலைஞராக மட்டுமல்ல மன்னார் நாட்டுக்கூத்தைப் பற்றிய ஆழமான கல்விசார் புலமையையும் குழந்தை கொண்டிருக்கின்றார் என்பதையே இது புலப்படுத்துகின்றது.

மன்னார் நாட்டுக் கூத்துக்களின் தனித் தன்மையை 'மன்னார்ப் பாங்கு' என குறிப்பிட்டுக் கூறியவர் பேராசிரியர் சு.வித்தியானந்தனாவார். மன்னார் நாட்டுக்கூத்துக்களை பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குழந்தை முக்கிய இடத்தை வகிக்கின்றார் எனக் குறிப்பிடலாம்.

கல்வெட்டு அழகான பழமை வாய்ந்த ஓர் இலக்கிய வடிவம் ஆகும். இறந்தோர் நினைவாக அவர்களது சிறப்புக்களைப் பாடுபொருளாகக் கொண்டு இயற்றப்படுவதாகும். குழந்தை கல்வெட்டு இயற்றிப் பாடுவதில் வல்லவர் என்பது பலர் அறியாத விடயமாகும். 1973இல் அமரத்துவமான அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் அழகக்கோன் அவர்களின் நினைவாக மன்னார் நகர மண்டபத்தில் குழந்தை அவர்களினால் முதற் கல்வெட்டுப் பாடப்பட்டது. இற்றை வரைக்கும் ஏறக்குறைய 90 கல்வெட்டுக்களை குழந்தை பாடியுள்ளார். 1989ஆம் ஆண்டு தை மாதம், 21ஆம் திகதி மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மரணச்சடங்கில் கலந்து தனது இறுதி அஞ்சலியை கல்வெட்டாக பாட வேண்டுமென்ற ஆதங்கத்தோடு குழந்தை தெல்லிப்பளை சென்றார். 'யார் குழந்தை?' குழந்தைக்கும் வித்தியானந்தனுக்கும் என்ன உறவு? என்பதை அறியாத ஏற்பாட்டாளர்கள் கல்வெட்டுப் பாட இடமளிக்க மறுத்ததையும், இறுதியில் தனது முயற்சி கைகூடியதும், வித்தியானந்தனுக்கு கல்வெட்டுப் பாடியது வாழ் நாளில் தனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவும் குழந்தை மன நிறைவுடன் நினைவு கூறுகின்றார்.

சினிமாப் பாடல்களிலே குழந்தைக்கு அலாதி பிரியமுண்டு. பத்து வயதிலிருந்தே (1950இல்) சினிமாப் பாடல்களைச் சேகரித்து வருகின்றார். இவரிடத்தில் தற்போது ஏறக்குறைய 1600 சினிமாப் பாடல் வெளியீடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. சினிமாப் பாடல்களிலிருந்து தனது இசை நாடகங்களுக்கான மெட்டுக்கள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டதாகக் கூறுகின்றார்.

அருட்தந்தை அன்புராசாவின் ஒருங்கிணைப்பில் குழந்தை அவர்களால் பாடப்பட்ட 'வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்', மன்னார் கலை வடிவங்களைப் பேணும் முயற்சிகளில் ஒன்றாகக் கருத இடமுண்டு. தந்தையின் கலைவடிவச் சிறப்பினை ஆவணப் படுத்தும் அருட்தந்தையின் முயற்சி பாராட்டுக் குரியது. இது தனிநபர் ஒருவரது கலைச் சிறப்பினை வெளிக்கொணரும் முயற்சி மட்டுமல்ல, மன்னார்ப் பாரம்பரியக் கலைவடிவங்களை ஆவணப்படுத்தும் தொலைநோக்கோடு கூடிய முயற்சியாகவும் அமைகின்றது எனலாம்.

பன்முக ஆளுமையைக் கொண்ட குழந்தையுடைய கலைப் படைப்புக்களின் பண்புக் கூறுகள் கலையுலகிற்கு மென்மேலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

நாடகக் கலையுலகில் சிரஞ்சீவியாகத் திகழும் இவ்வாறானவர்களை வாழும்போதே பாராட்டிக் கௌரவிக்கின்ற பண்பும், பாரம்பரியமும் எம்மிடையே மென்மேலும் வளர்க்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. சிறப்பாக மன்னார், மாதோட்ட பாரம்பரியக் கலைகளை மெருகூட்டி பாதுகாத்து வளர்க்கும் மனப்பாங்கு இளங் கலைஞர்கள் மத்தியில் உருவாக வேண்டும். இதுவே இக்கலைகளின் எதிர்கால சந்ததியினருக்கான கையளிப்புக்கும், நீண்ட கால இருப்புக்கும் மிக அவசியமானதாக அமைகின்றது எனக்கொள்ளலாம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப்பணி ஊடாக கலைத்தாய்க்குப் பணிபுரிந்தவர்



**தேசகீர்த்தி எஸ். மரியாம்பிள்ளை**
*(சமாதான நீதிவான்)*
*ஓய்வுபெற்ற அதிபர்,*
*சூரியகட்டைக்காடு,*
*மன்னார்.*

## முகவுரை

உலகத்திலே பிறக்கின்ற உயிர்களுள் உன்னதமான பிறவி மனிதன். மனிதப்பிறவி என்ற வேசத்தை தாங்கிய ஒவ்வொருவரும் வாழ்வியலில் தம்முடைய நிலையான தளத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு வாழ்வெனும் ஓட்டச் சக்கரத்தில் யார் தலைமகன் என்றே ஓடுகின்றோம். ஆனால் நிலையற்ற வாழ்வில் விதியெனும் திசைகாட்டி வாழ்வை வழிப்படுத்துவதாக வாழ்வியலாளர்கள் கருதுகிறார்கள். நிலையாமையின் நீட்சியையும் நிச்சயத்தின் வீழ்ச்சியையும் அறியாமையின் அகம்பாவத்தையும் அனுதினமும் அனுபவிப்பவராய் மனித சமுதாயம் மாறிவிடுகிறது. எனவே காலம் சிலரை மட்டுமே கட்டுமரமாக்கி கரையேற்றி செல்லுகிறது. பலரை காரியம் முடிந்த பின் கருவேப்பிலையாகிவிடும். ஆனால் கலைஞன் இதில் விதிவிலக்கானவன். காலத்துள் வாழ்ந்து காலத்தையும் பதிவு செய்பவன். அந்த நிலைமையே இவனை கலைஞனாக்கி விடுகின்றது. அத்துடன் பல சோதனைகளையும் வேதனைகளையும் வறுமையையும் புறக்கணிப்பையும் சமூதாய தளத்து விமர்சனத்தை தாண்டியே தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. எழும்போது தாங்க வருபவர்கள் விழும்போது தாங்குவதில்லை.

அந்த வகையில் வடஇலங்கையிலே கூத்துக்கலைக்கு பேர்பெற்ற மாவட்டமாகிய மன்னாரில் வரலாற்று புகழ்மிக்க மாதோட்ட நகரில் இருந்து வடமோடி, தென்மோடிக்கு அப்பால் மாதோட்ட கூத்தை இயல்பான கிராமிய வழக்கு மொழியுடன் யாவரையும் உள்ளத்தினால் உணர்வுடன் கருதுகோளை பேச்சு மொழியாக்கி வீச்சாக்கி வீறு நடையிட ஐந்து தசாப்தத்திற்கு மேலாக தன்னிலை தவறாமல் தமிழ் நிலை மாறாமல் எந்நிலையிலும் கலையோடு காலத்திற்கும் கலைநயத்துக்கு வாழும் போதே வாழ்வை வரவேற்று வாழ்த்தும் பின் நவீனத்துவ முற்போக்கு செயலூக்கவாளர்களைப் பாராட்டுகின்றேன்.

## கலைப்பணியில் கலைஞர் குழந்தை

மன்னார் மாவட்டத்தின் கலைத்துறையில் ஒரு வரலாறு படைத்தவர் கலைஞர் குழந்தை. இவரது கலைத்துறையின் ஆரம்ப வளர்ச்சி பற்றி எனக்கு தெரிந்த அளவில் இன்றைய சமுகத்தினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் தெரிவிக்க வேண்டியது எம்மைப் போன்றவர்களின் கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையில் பார்த்த ரசித்து அனுபவித்த சில விடயங்களை இக்கட்டுரையில் கோடி காட்ட விரும்புகின்றேன். தம்பிராசா மாஸ்ரர் என்று அழைக்கப்படுகின்ற செபமாலை ஆசிரியர் முருங்கனை பிறப்பிடமாகக் கொண்டு முருங்கனிலேயே கல்வி பயின்று கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி முடித்து ஆசிரியர் நியமனம் பெற்று அல்லைப்பிட்டி பாடசாலையில் கல்வி கற்பித்து தற்போது இளைப்பாறிய அதிபராக இருக்கின்றார். இது இவரது ஆசிரிய பணி. இப்பணியையே ஊடகமாகப் பயன்படுத்தி கலைத்தாய்க்கு பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கலைப்பணியை நோக்கினால் தகப்பன் ஓர் நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவர் மூலமாக பெற்ற பாடல்களும் இசைகளும் தாளங்களும் இவரது இப்பணியை ஆரம்பிக்க உற்சாகமூட்டியது. சிறு வயதில் இருந்தே கோவில் பாடல்களிலும் நாடக களரிகளிலும் பக்க பலமாக இருந்து தந்தையோடு செயற்பட்ட வர். 1960களில் நடைபெற்ற தமிழர் சத்தியாக் கிரக (சாத்வீக) போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் பெரும் பங்கு வகித்தவர். அவ் வேளையில் மக்களின் உணர்வலைகளைத் தூண்டும் விதத்திலும் மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையிலும் ஏராளமான பாடல் களை இயற்றியும் பாடியும் பணி செய்தார். தந்தை செல்வாவின் பிரசார கூட்டங்களில் பாடி பாராட்டைப் பெற்றவர். அந்நேரமே இப்பாடல் களை புத்தகங்களாக்கினார். அறப்போர் அறை கூவல், இன்பத்தமிழன் இதய ஓலம் என்ப வையே அவ்விரு புத்தகங்களாகும். இதன் படைப்பாளி குழந்தை. அன்றிலிருந்து குழந்தை என்ற புனைப்பெயரில் ஆக்கங்கள் பலவற்றை உருவாக்கி வெளியிட்டு வந்தார். இதனாலேயே இவர் அன்றிலிருந்து குழந்தை மாஸ்ரர் என அழைக்கப்படுகின்றார்.

பாடசாலை வாழ்க்கையில் கலைத்து றையை ஆரம்பித்தவர். தனது சொந்த ஊரி லேயே, 'புனித யாகப்பர் நாடக மன்றம்' ஒன்றை ஆரம்பித்தார். தனது சொந்த உறவுகளோடு செயற்பட்டார். காலப்போக்கில் இன,மத பேத மின்றி எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று, 'முருங்கன் முத்தமிழ் கலா மன்றம்' என்ற பெயரில் மன்றத்தை இயக்கினார். சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக கலைத் தொண்டு ஆற்றி வருகின்றார். இம்மன்றத்தின் இயக்குநர் இவர் என்ற படியால் எல்லாவற் றையும் தானே பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்றார். இயல் இசை நாடகமென்ற முத்து றைகளிலும் பெயர் பெற்று விளங்குகின்றது இம்மன்றம் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். இவருடைய பாடல்கள், வில்லிசைகள் , இசை நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை கேட்டு இன்புற ஏராளமான மக்கள் விழாக்களில் கூடு வது கண்கூடு. விழாக்குழு ஏற்பாட்டாளர்கள், மக்கள் இறுதி வரை நின்று ரசிக்க வேண்டும் என்பதற்காக இம்மன்றத்தின் நாட்டுக் கூத்துக் களை இறுதி நிகழ்ச்சியாக அமைப்பது சாதார ணமான ஒரு செயலாகும்.

மன்னார் நாட்டுக் கூத்துக்களை பல வேறு புலவர்கள், அண்ணாவிமார்கள் அரங் கேற்றியிருந்தாலும் நல்ல முறையில் மக்கள் உணர்ந்து ரசிக்கும் வண்ணம் வெளிக்கொ ணர்ந்த பெருமை குழந்தையையே சாரும். மன்னார் மாவட்ட நாடக மேடைகளில் பெண் பாத்திரம் பெண்ணே தோன்றி நடிக்க வேண்டும் என அறிமுகப்படுத்தியவர் கலைஞர் குழந்தை அவர்களே. அதற்காக தங்கையையே ஒரே மேடையில் பாடி, ஆடி நடிக்கச் செய்தவர். அவர் தற்போது மட்டுநகர் புனித சிசிலியா தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரி செ.எலிசபேத் ஆவார். இவரைத் தொடர்ந்து பல பெண்கள் நடிக்கின்றார்கள்.

மன்னார் பாங்கு (மாதோட்ட) நாட கங்களை வரையறையோடு தாள ராகங்களைச் சீர் செய்து அவைக்காற்றும் முறையில் இவ ருக்கு நிகர் இவரே. இவருடைய அர்ப்பணிப் பான தியாகம் நிறைந்த கலைத்தொண்டு இவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கு மட்டு மல்ல மன்னார் மாவட்ட மக்களுக்கும் உத்வே கத்தை அளித்தது. இதனால் கிராமங்கள் தோறும் பல கலாமன்றங்கள் உருவாகின. பல கலைஞர்கள் உருவாகினர். பல கலைப் படைப் புக்கள் அரங்கேறின. பல நாடக நெறியாளர் கள், ஒப்பனைக் கலைஞர்கள் உண்டாகினர். இது இவருக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

கலாபூசணம், சாஹித்திய விருது, முத்த மிழ் வேந்தன், திருக்கலை வேந்தன், ஆளுநர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காவலன் போன்ற விருதுகளைப் பெற்ற இவர் எட்டுக்கு மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார். தற்போது நடைபெறுகின்ற நாட்டுக் கூத்துக் களரிகளில் இவரது கலைப்பணியை பாராட்டி இவருக்குப் பொன்னாடைகள் போர்த்துவது ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. அந்த அளவிற்கு தொடர்ந்து கலைப்பணி புரிகிறார்.

பாஸ்கு காலத்தில் பாடப்படுகின்ற வியாகுலப் பிரசங்கம் இவரது குரலில் கோவில்களில் பெரும்பாலும் இசைக்கப்படுகின்றது. இது மக்கள் மனங்களில் இறை சிந்தனையை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இதை விட இறந்தவர்கள் பற்றிய கல்வெட்டுக்கள், திருமண வாழ்த்துக்கள் எழுதி, பாடி, தன் புலமையை பன்முகப்படுத்தியவர்.

கலையில் சிறந்த அனுபவமும் நிதானமும், பொறுமையும் கொண்ட இவர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைத்தொண்டு புரிந்துள்ளார். மன்னார் நாட்டுக்கூத்துக்களை அகில இலங்கை ரீதியில் மேடையேற்றி மன்னார் மக்களின் கலைப் பாரம்பரியத்தை நாடறியச் செய்த காலத்தால் அழியாத கலங்கரை விளக்கான நிறை புலமையாளனை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன், மேன்மையடைகின்றேன். வாழ்க வையகத்தில் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க கலை... ■




"எத்தனை விதமான கலைகளைத் தற்காலத்தில் நாம் கற்று வந்தாலும் எமது முன்னோரால் பேணிப் பாதுகாக்கப்பட்ட கலையான கூத்துக்கலையை நாம் மறந்து விடக் கூடாது. ஏனெனில் அதுதான் எமக்குரிய அடையாளம். எமது தேசியக் கலைவடிவமும் அதுவே. இந்தக் கலையை ஆவணப்படுத்தல், ஆய்வுசெய்தல், கலைஞரைக் கௌரவித்தல் என்பதற்கும் மேலாக நாட்டுக்கூத்துக் கலையை நிகழ்கலையாகத் தொடர்ந்தும் வைத்திருக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்"

**ஆசிரியர் குழந்தை செபமாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாள் கூத்தவை

ஏ. ரகுநாதன்
பாரீஸ்,
பிரான்ஸ்.



### மேற்குலகிற்கு வந்த நம் தமிழ் தாய்க் கலைக்கு வாழ்த்து

மொழிக்கு முன் பிறந்தது அபிநயக் கலை, அது மலர்ந்து மொழியாகி, தமிழாகி, தமிழ் மொழியின் தாய்க்கலை 'கூத்தாகி' வாழ்க்கைக்கு விழியாகி, வழியாகி சிறந்தது.

அப்படிப்பட்ட கூத்துக் கலையை "நாம் நாகரிகம் கண்டுவிட்டோம் இது எதற்கு என்று" நம்மவர் பலர் மறக்க, அல்லது மறைக்க முயன்ற காலத்தில் நம் மரபுவழிக் கலையை அழியாமல் காத்த கலைப் பெருமக்களுக்கு தலை தாழ்த்தி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது தமிழினம். அப்படி இலங்கையில் கலை வளர்த்த, காத்த, பெருமக்களில் திரு.செபமாலை (குழந்தை) அவர்கள் குறிப்பிடத்தக்கவர். இலங்கை எங்கும் தன் கலையுடன் பயணப்பட்ட இவர், கலைக்கான பதிவுகளாக பல அரிய நூல்களையும் படைத்துள்ளார்.

ஆசிரியத் தொண்டு, ஆலயத் தொண்டு, மக்கள் தொண்டு, கலைத் தொண்டு என மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தியாகக் கலைஞர் திரு. செ. செபமாலை. கலையே தன் மூச்சு, கலையே தன் வாழ்வு, கலையே தன் தேடல் எனக் கலையில் தொன்மையும், பன்மையும், புதுமையும் படைத்த ஓர் அருங்கலைஞர் கவிஞர் திரு.செ.செபமாலை.

இலங்கையில் கலை வரலாற்றை ஆய்ந்து, ஒருங்கிணைந்து, நவீனப்படுத்திய, பேராசிரியர் அமரர் சு.வித்தியானந்தன் அவர்கள் முன்னிலைப்படுத்திய, பெரும் கலைஞர்களில் திரு.செபமாலையும் குறிப்பிடத்தக்கவர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், வட்டுக்கோட்டை, மூதூர் எனக் கூத்துக்கலை செறிந்து வளர்ந்த நாட்களில் ஈழத்து நாடகத் தந்தை 'கலையரசு' சொர்ணலிங்கம் ஐயாவையும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களையும் வட்டுக்கோட்டை சிவன் கோவில் வீதியில் பிரத்தியேகமாக அரங்கேற்றிய வட்டக்களரி அமைப்பிலான 'அர்ச்சுனன் தபசு' என்ற அற்புத கூத்துக்கு கலையரசு ஐயாவின் காரில் சாரத்தியம் செய்ததையும், அப்படி ஈழத்தின் பெரும்பான்மையான கலைஞர்களைத் தரிசிக்கும் பாக்கியமும் பெற்ற கலையரசுவின் மாணவனாகும் பேறுபெற்றவன் நான்.

நவாலியிலிருந்து வட்டுக்கோட்டைக்கு நாம் மூவரும் ஐயாவின் மகள் சாரதாவின் சோமசெற் காரில் காரோட்டியாகப் பயணித்ததையும், பேராசிரியப் பெருமான் சு.வித்தியானந்தன் அவர்கள் திரு.செபமாலையைப் பற்றி மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்துரைத்த வார்த்தைகள் ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் ஆகிவிட்ட போதும் இன்றும் என் மனதில் இனிக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு அரும் கலைஞனுக்கு பாரிஸில் வாழும் எங்கள் கலைக் கண்மணிகள் விழா எடுப்பது பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர்களுக்கு எனது நன்றிகள்.

மன்னார் மாவட்டத்தில் முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.செபமாலை பாரம்பரியமாகக் கலை வளர்த்த ஒரு கலைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவரது தமிழ்ப் பற்றுக்கும் கலைப் பற்றுக்கும் அவர் தம் பிள்ளைகளுக்குச் சூட்டிய ஆனந்தராசா, இன்பராசா, அன்புராசா என்ற பெயர்களே சான்றாகும்.

அவர்கள் மூவரும் இன்று பிரான்ஸில்தான் வசிக்கின்றார்கள். அன்பிலும், பண்பிலும், உழைப்பிலும் சிறந்தவர்களான அவர்களில் மூத்தவரான ஆனந்தன் ஒரு பன்முகக் கலைஞர். அடுத்தவர் இன்பம். இவர் கலையுடன் இசையிலும் சாதித்தவர். மூன்றாமவரான அன்பு கலையுடன் எழுத்திலும், இறை பணியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இப்படிப்பட்ட நன்மக்களை கலைக்கும் தமிழுக்கும் தந்த திரு.செபமாலை அவர்களை 1947 முதல் நாடக திரைப்படக் கலையில் ஒரு பற்றுள்ளவனாக வணங்குகின்றேன்! அவரை விட வயதில் மூத்தவனாக வாழ்த்துகின்றேன்!!

சாஹித்திய விருதுடன் 'கலாபூஷணம்' என வரிசைப்படுத்தும் பட்டங்களாலும், பாராட்டுக்களாலும், சீராட்டப்பட்ட எழுத்தாளர், கலைஞர், கவிஞர், திரு.செபமாலை அவர்களை நீடுழி வாழ்த்தி "நல்லதை எங்கு கண்டாலும் பாராட்டு. அப்படிப் பாராட்டும்போது அந்த நல்லதை நீயும் கற்றுக்கொண்டாய் என்று அர்த்தம்" எனக்கூறி கலைஞர்களின் ஐக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும், வழிகாட்டிய கலைப் பெருமகன் 'கலையரசு' சொர்ணலிங்கம் ஐயா குறிப்பிட்ட நாம் பார்த்துக் கேட்டுக் கற்றுக் கொள்ளவேண்டிய அற்புதக் கலைஞர்தான் திரு.செபமாலை.

கலைக்கும், வாழ்க்கைக்கும், தனக்குத் துணையான, தூணான, இணையான, தன் அருமை மனைவியுடன் உலகக் கலைகளின் தரிப்பிடமான பாரிஸ் நகருக்கு வந்ததற்கு வரவேற்புக் கூறி! அவருக்கு விழா எடுக்கும் நல்ல கலை உள்ளங்களுக்கு மீண்டும் நன்றி கூறுகின்றேன்.

திரு. செபமாலையின் குழந்தைகளுக்கு ஒரு வேண்டுகோள். இந்தச் சிறியவனின் பேராசை! இந்த அற்புதக் கலைஞனை எப்படியேனும் நம்முடனே பாரிஸில் நிரந்தரமாகத் தங்க வைத்தீர்களானால் நாமும் நம் இளைய தலைமுறையினரும் அவரிடம் ஆசி பெற்று அவரிடம் கலையும் கற்றுச் சிறக்க! தமிழ் வளர்க்க! உதவியவர்களாக தமிழ் நெஞ்சங்கள் உங்களை வணங்கும். ■

**நன்றி: கூத்திசைக்காவலன் – மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் – 2009**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையூடாக மறைவளர்த்த மறைபரப்பாளர்



அருள்திரு. இ. அகஸ்ரின் புஸ்பராஜ்
*B.Th.(Rome)*
முருங்கன் மறைக்கோட்ட முதல்வர்
பங்குத்தந்தை,
நானாட்டான், மன்னார்.

**ம**னித வாழ்வும் அவனது மகத்தான செயற்பாடுகளும் இறைவன் தந்த அன்புப் பரிசு. இன்று உலகம் அறிவியல் யுகத்தில் வீறுநடை போடும் இக்காலத்தில் அதன் பயன்பாடும் மகிழ்ச்சியும் மனிதர்களுக்கேயானாலும் அதன் மகத்துவமும் மகிமையும் படைத்தவனுக்கே சொந்தம். அந்த வகையில் உலகின் நீள்வரலாற்றுப் பகிர்வில் கோலோச்சுகின்ற பலரில் எம் மதிப்பிற்குரியவரும், ஆசிரியருமான திருவாளர் செபமாலை (குழந்தை மாஸ்ரர்) அவர்களும் ஒருவர் என்பதை எண்ணும்போது நெஞ்சம் பெருமையில் விம்மித் தணிகின்றது. இவரின் சிறப்புக்களின் தொகுப்பை குடும்பத்தார் இணைந்து புத்தகப் பொக்கிசமாக வடிவமைக்கும் வரலாற்று முயற்சியில் இப்பட்டறிவாளரின் வாழ்வுப் பரிமாணத்தின் சில விடயங்களை சுருக்கமாகக் காணவிழைகின்றேன்.

## குடும்பம் ஒரு கோவில்

"வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்" என்பதற்கேற்ப இவர் பிறந்த வீடும், புகுந்த வீடும் இவரை எளியவராகவும், இனியவராகவும், சிறந்த பண்பாளராகவும் ஆக்கின. இவரைப் புகழக் காரணம் இவர் கட்டிய அழகிய குடும்பக் கோயிலாகும். அறுவரை நற்பிள்ளைகளாகப் பெற்று நற்பண்பாளர்களாகப் பேணி அதில் அன்புராசாவை அமலமரித் தியாகியாக்கிய மாமனிதர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குடும்பப் பெருமையுடன் கௌரவத்துடன் வாழும் இவரின் பிள்ளைகளின் வாழ்வு இவர் சிறந்த குடும்பத் தலைவர் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது.

## ஆசிரியப்பணியில் களம் அமைக்கின்றார்

இவரின் சாதனை வரலாற்றில் அலலைப்பிட்டி றோ.க. பாடசாலை முதல் நியமனமாகவும் கற்கடந்தகுளம் ஓய்வு கொடுப்பதும் வரலாற்றுப் பதிவாகும். இடைக்காலங்களில் பல பாடசாலைகளிலும் ஆசிரியராக, அதிபராக, கல்வி புகட்டிய மாண்பை என்னவென்று சொல்வது. கல்வி மட்டுமா? கல்வியுடன் கலையையும் இணைத்து ஆசிரிய மிடுக்குடன் மாணவ சமூகத்தை தூக்கி நிறுத்திய சாதனை வீரன் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

## தொடரும் ஆன்மீகப்பணி

கலையுடன் கல்வியும் இணைந்ததால் ஆன்மீகப் பணியும் முறுக்கேறியது. கலையூடாக மறைவளர்ப்பது கலைஞனுக்கு இலகு வாய்ப்படவே கலை நிகழ்வுகளில் கொடி கட்டிப் பறந்தார். கலையூடாக மறைவளர்த்த மறைபரப்பாளர் எனலாம். கிறிஸ்தவ கால இலக்கியப் பாடல்கள், கரோல் பாடல்கள், வியாகுலப் பிரசங்கம், ஒப்பாரி, புலம்பல், தாழிசைகள், யாவும் இவரது குரலுக்கு வளம் சேர்த்தன.

## கலையுடன் சமூகப்பணி

மனிதன் ஒரு சமூகப் பிராணியாய் இருப்பதால்தான் சமூகப்பணியின் தேவையும், முக்கியத்துவமும் முன்னுரிமை பெறுகின்றது. தன் கலை ஆற்றலை சமூக நிகழ்வுகளுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நல் விழுமியங்களை பரப்பும் நோக்கு டனும், சமூக கொண்டாட்டங்களுக்கும் பயன் படுத்தி சமூகப்பணி ஆற்றியுள்ளார். பெரிய சிறிய கலைநிகழ்வுகளுடன் திருமண, துறவற, சேவை நல ஏனைய கொண்டாட்ட நிகழ்வுகளில் வாழ்த் துப்பாக்கள், இறந்தவர்களுக்கான கல்வெட்டுக் கள் இயற்றிப் பாடுதல், நோயாளருக்காக இறை வனை வேண்டி "பதிகம்" பாடுதல் என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

## காலத்தால் அழியாத கலைப்பணி

காலத்தைக் காட்டும் கண்ணாடி இலக் கியம். இலக்கியம் மூலம் ஒரு கவிஞன் வாழு கின்றான். வாழ்விக்கின்றான். உயரிய சிந்தனை கள், சமூக மாற்றுக் கருத்துக்கள், முற்போக்கு சிந்தனைகள், விழிப்புணர்வுகள் தான் வாழும் சமூகத்தைச் சென்றடைய கவிஞனின் பேனா சக்திக்கு ஆற்றலுண்டு. "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த நோக்கில் இவரது பார்வை அமைந்திருந்தது. வேறு மொழி பேசுபவர்கள் கூட எம் கலைஞனின் சிறப்பை இரசிப்பதையும், செய்தியை கெட்டியாக பற்று வதையும் கண்டிருக்கின்றோம்.

இக்காலப்பணியில் சிறப்பாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை நிறுவி அதன் தலைவராகவும், நடிகராகவும், நெறியாளரா கவும், நாடக ஆசிரியராகவும், எழுத்தாளரா கவும், கவிஞராகவும், அண்ணாவியாராகவும், புலவராகவும் தன்னை இனம் காட்டியுள்ளது மன்னாருக்கு பெருமை சேர்க்கிறது.

மன்னார் மாதோட்ட நாட்டுக் கூத்துக் கள்; வடமோடி, தென்மோடி கலந்த நாட்டுக் கூத்துக்கள், சமூக சரித்திர நாடகங்கள், இசை நாடகங்கள், கதா பிரசங்கங்கள், வில்லிசைகள், பட்டி மன்றங்கள் என அவரின் கலை வலைப் பின்னல் அகலக்கால் பதித்துச் செல்கின்றது. இதில் பொதிந்திருக்கும் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் இவர் தனது கலைப்பணியை முருங்கனுக்குள்ளோ, மன்னாருக்குள்ளோ முடக்கிவிடவில்லை. மாறாக அகில இலங்கை ரீதியாக கலைக்குக் களம் அமைத்தார். "கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்" என்பார்கள். இவர் உருவாக்கிய இவரின் பிள்ளைகள் இக்கலையை ஐரோப்பாவில் பிரான்ஸ் நாட்டில் மன்னார் நாட்டுக் கூத்துக்களையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்துவது பாராட்டத் தக்கது.

## கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடுது

"யாதும் ஊரே யாவருங் கேளீர்" என்ற கொள்கை இவருக்கு மட்டுமல்ல இவரின் வழித் தோன்றல்களுக்கும் இரத்தத்தில் ஊறியுள்ளது போலும். "தேன் மதுரத் தமிழோசை உலகமெல் லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் பாடல் காதில் ஒலித்துச் செல்கின்றது. கடல் கடந்து, புலம் பெயர் வாழ் தமிழர் மத்தியில் கலைச்செயலை ஊக்குவிக்க வேண்டும் என்றும் எண்ணத் தோன்றுகிறது. ஐரோப்பாவை பனி மூடுவதைப்போல் புலம்பெயர் வாழ் எம்மவரின் கலாசாரத்தை ஐரோப்பிய கலாசாரம் மூடிவிடும் இக்காலத்தில் நாடு கடந்த கலைச்சேவை தமிழுக்கும் தமிழருக்கும் புகழ் சேர்க்கும் என நம் பத் தோன்றுகின்றது. "தமிழ் இனி மெல்லச்சா கும்" என பயந்த பாரதிக்கு, இல்லை 'தமிழ் இனி வளம் சேர்க்கும்' என்று கூறத்தோன்றுகிறது.

## அரசியல் பணி

மனிதர்களுக்கு சேவை செய்யும் மிக வும் சக்தி வாய்ந்த அமைப்புகளில் அரசியலும் ஓர் அலகாக இருக்கின்றதென்று அனைவரும் அறிவர். அதனால்தான், அரசியல் தவறு அன்று. அரசியல் வேறு மனித வாழ்வு வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாதென்றே கூற லாம். ஒரு தனி மனிதனின் அபிவிருத்திக்கும், பாதுகாப்பிற்கும், உரிமைகளைப் பெறுவதற்கும், நீதியைப் பெறுவதற்கும், குறைகளை நிவர்த்தி யாக்குவதற்கும், நிர்வாகம், பணம், அதிகாரம் சார்ந்த அலகு அரசியல்தான். ஆனால் நாட்டு அரசியல் இதற்கு எதிர்மாறாக இருப்பது மட்டு மல்ல இவ்வரசியலை நகர்த்தும் பெரும்பான் மையான அரசியல்வாதிகளால் தான் குழப்ப மும், போரும், மனித உரிமை மீறல்களும் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் மட்டுமல்ல சர்வதேசமும் நுணுக்கமாக அறிந்து இருக்கின்றது.

ஆரம்பகால எம் தமிழ் அரசியல் ஒரு குடைக்குள் தமிழரை ஒன்று சேர்த்து எம் சுய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணய உரிமைக்காக உழைத்தது என்றால் அது பொய்யாகாது. அவ்வேளையில்தான் தந்தை செல்வா, அமரர் அமிர்தலிங்கம் மற்றும் ஏனைய தமிழ் தலைவர்கள் நடத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் தமிழ் சத்தியாக்கிரக சாத்வீக போராட்டங்களிலும் இவர் பாடல்களை இயற்றிப் பாடியுள்ளார். இப்பாடல்கள் "அறப் போர் அறைகூவல்", "இன்பத் தமிழன் இதய ஒலம்" எனும் நூல்களாக இசை முழக்கம் செய்கின்றன. இவர் ஆசிரியராக இருந்ததால் "செபமாலை" என தன் பெயரை அடையாளப் படுத்த இருந்த நடைமுறைச் சிக்கலால் தன்னை. "குழந்தை ஆசிரியர்" என இனம் காட்டினார். அதனால்தான் இவர் பெயர் "குழந்தை மாஸ்டர்" என வடிவம் பெற்றது என அறியும்போது தமிழர் போராட்டத்தில் குதிப்பவர்களுக்கு இன்னுமொரு பாதுகாப்புப் பெயர் வழங்கப்பட்டது என்பதை குழந்தை மாஸ்டர் எண்பிக்கிறார். இவரின் கலைப்பணி அரசியலிலும் சிறப்பாக எமது போராட்டத்தில் இணைந்தது என்பது இரட்டிப்பு மகிழ்வாகிறது. அதனாலோ என்னவோ அருட்பணி அன்புராசா அடிகளாரும் "சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடரை" மன்னா பத்திரிகையில் எழுதுவது அத்தனை துறைகளையும் தம் பிள்ளைகள் தொடர்கிறார்கள் எனும் நிறைவால் அவர் மகிழ வேண்டுமென எண்ணத் தோன்றுகின்றது.

## சாதித்த குழந்தை

சரித்திர நாயகனின் சாதனை வரலாற்றைப் புரட்டும்போது செய்திகள் எமக்கு திகட்டுமளவிற்கு இருப்பதால் இவர் காத்திருந்து சாதித் தவைகள் பற்றி புளகாங்கிதம் அடைகின்றேன்.

தாலந்து உவமை சிகரம் அடைந்து சிறக்க வேண்டுமென்றுதான் கற்பிக்கின்றது. குழந்தை மாஸ்ரரை ஆண்டவர் ஆற்றலினால் அணி செய்தார். ஆற்றலோடு ஆறி அமர்ந்தவரல்ல, அவர் ஆழ்கடல் ஓடி திரவியம் சேர்த்தார். அதனால்தான் மன்னார் மாவட்டத்தில் முதன் முதலாக சாஹித்திய விருது, மாகாண விருது, ஆளுநர் விருது, தலைக்கோல் விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

## முடிவாக

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைப்பணி பல களங்களில் புரிந்து ஓய்வாகி அதனை இரைமீட்கும் குழந்தை மாஸ்ரருக்கு அனைத்தையும் சுருக்கியும் உள்ளடக்கியும் சிறப்பான ஒரு புத்தகம் அமைக்கும் முயற்சியை பாராட்டுகின்றோம். இம்முயற்சி இவரின் பெருமை பாடுவது மட்டுமல்ல கலைஞர் ஒருவன் கௌரவிக்கப்படுகிறான், கலைகளின் திறமையும் வெற்றியும் வரலாற்றில் வடிவம் பெறுவதோடு இவர்மேல் இவரது குடும்பத்தாரும் நண்பர்களும் கொண்டுள்ள அன்பும் கரிசனையும் வெளிக் கொணரப்படுகின்றன எனப் பல அம்சங்கள் இதில் பொதிந்துள்ளன.

கலை ஆற்றலை எதற்கெல்லாம் பயன்படுத்தலாமோ அதற்கெல்லாம் பயன்படுத்தி தானும் பயன் கண்டு பிறருக்கும் பணி செய்தார். இக்கலையை தன்னுடன் பிள்ளைகள், உறவினர்கள், ஊரார், வெளியார் என பரவலாக்கியமை வேறோர் அம்சமாகின்றது.

தன் கலை, தன் ஊர், தன் சொந்த பந்தம் என்று இல்லாமல் பலருக்கும் பரவ வித்திட்ட சிறப்பு இவரை மேன்மை மிகு கலைஞர் ஆக்குகின்றது. பாராட்டுகின்றோம்.

நிறைவாக, இன்னும் பல ஆற்றல் மிக்க கலைஞர்கள் வழிபடுத்தப்படாமையாலும், செல்வாக்கு இன்மையாலும், வறுமை நிலையிலும், சாதிக்க முடியாமையாலும் முன்னேற முடியாமலும் போயுள்ளனர் என்பது உண்மை. இவ்வகையோரை தூக்கி நிறுத்தும் பொறுப்பு பொது மக்களிடம்தான் உள்ளது. அத்துடன் அனைத்து கலைஞர்களும் ஒன்று சேர்ந்தால் கலையுலகம் வீரத்துடன் களைகட்டும் என்பது துணிவு. ஆனால் சில கலைஞர்களுக்கிடையே உள்ள போட்டியும், பொறாமையும், பேரும் புகழும் வித்துவச் செருக்கும், அவர்களின் உயர்வையும் உயர்ந்த கலைப் பண்புகளையும் கீழ் நோக்கி தள்ளுகின்றது என்பது கசப்பான உண்மையே. அனைத்து கலைஞர்களும் தோழமை உணர்வுடன் செயற்பட்டு கலைஞர் குழந்தையைப் போல இமயம் ஏற வேண்டுமென்பதே எமது விண்ணப்பம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கூத்துக் காவலன் கலாபூஷணம் 'குழந்தை' செ.செபமாலை



**வண்ணை தெய்வம்**
*பாரீஸ்,*
*பிரான்ஸ்.*

*நாடகத்தின் தந்தைகளான சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார், கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோர் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர் குழந்தை செபமாலை அவர்கள்.*

*"ஐயா சிறுவன் என்மேல் மனம் இரங்காதா?" என்ற ஒரு பழைய பாடலைப் பாடியபடி ஓர் ஐந்து வயதுச் சிறுவன் மேடையில் தோன்றுகின்றான். அப்பொழுது அந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தெரியவில்லை பிற்காலத்தில் இவன் ஒரு நாடகச் சிற்பியாக மிளிரப் போகின்றான் என்கின்ற உண்மையின் ரகசியம்!*

*1945இல் முருங்கன் கிறிஸ்தவ அரசினர் பாடசாலையில் ஆரம்பக்கல்வி. 1955இல் கல்விப் பொதுச் சாதாரண பரீட்சைத் தேர்வு. 1957இல் ஆசிரியர் கலாசாலைப் படிப்பிற்குத் தேர்வு. 1959இல் ஆசிரியர் படிப்பை முடித்துக் கொண்டு 1960இல் ஆசிரியர் பணியைத் தொடங்குகின்றார்.*

*இதைப் படிப்பவர்களுக்கு இது வெறும் ஆண்டுக் கணக்குத்தான். ஆனால் உருண்டோடிய இந்த வருடங்களுக்குள் அன்று ஐந்து வயதில் ஏழைச் சிறுவனாக மேடையேறிய அந்தச் சிறுவன் இன்று அறிவை வளர்த்துக் கொண்டதோடு நின்றுவிடாமல் சிறந்த கலைஞனாகவும் தன்னை உருவாக்கிக் கொள்கின்றான். அந்தக் கலைஞன்தான் குழந்தை செ.செபமாலை.*

*நாற்பது வருடங்களுக்கு மேலான கலைப்பயண வாழ்வில் கவிஞர், நடிகர், நாடகாசிரியர், நெறியாளர், நாட்டுக்கூத்து அண்ணாவியார். இப்படியாக பலதுறைகளிலும் தனது பெயரை ஊன்றிப் பதிவு செய்து வைத்திருக்கும் ஒரு முது கலைஞர் இந்த குழந்தை செபமாலை அவர்கள்.*

*பல கலைஞர்களுக்கு அவர்களின் சொந்தப் பெயர்களைவிட பட்டப் பெயர்களே நிலைத்து விடுகின்றன! அதைப் போலவே இவரோடு நிலைத்துக் கொண்ட பெயர்தான் "குழந்தை".*

*பணிவான பேச்சுடன், பெரியவர்களுக்கு இவர் கொடுக்கும் மரியாதை மட்டுமல்ல குழந்தைகள் போல அனைவரிடத்திலும் அன்போடு பழகும் குணமும் ஒருங்கே கொண்டதனால் எல்லோரும் இவரை குழந்தை என்றே அழைக்கத் தொடங்கினார்கள். அதுவே இவரது பெயராகி விட்டது. இன்று செபமாலை என்றால் தெரியாது. குழந்தை என்றால்தான் எவரும் எளிதாகத் தெரிந்து கொள்வர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை செபமாலை அவர்களைப் பற்றி எழுதுவதற்கு இந்தச் சிறியோனுக்கு சிறிதேனும் தகுதி இல்லை என்பது எனக்குத் தெரியும். கல்விமான்கள் பெரியோர்கள் கலை விற்பன்னர்கள் எல்லாம் இவரைப்பற்றி சொல்லியவை சிலவற்றைப் பதியவைப்பதே என்நோக்கம்.

"திரு.செபமாலை அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளாக கலைத்துறைக்கு செய்துவரும் தொண்டு அளப்பரியது! நாடகத்தின் தந்தைகளான சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார், கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோர் வரிசையில் வைக்கப்பட வேண்டியவர்" (திரு. அ.சிமியோன்பிள்ளை, கல்விப்பணிப்பாளர், மன்னார், 1982).

"அனுபவம் புத்திக் கூர்மையுள்ள கலைஞர் செபமாலை (குழந்தை) அவர்களை நான் நன்கு அறிவேன். சிறந்த சங்கீத, நடன, நாடகப் பற்றுடைய குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது நாடகங்கள் தரமானவை. நாடகத்தின் மூலம் நடிப்பையும் தலைமைத்துவத்தையும் காத்துவருபவர்" (பேராசிரியர் சு.வித்தியானந்தன்,1972).

வணக்கத்திற்குரிய ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, ஜீவோதயம் இயக்குநர் அருள்திரு.ஜீ.என்.ஜெயராஜசிங்கம் எனப்பல அறிஞர்கள் பல நூல்களில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை படிக்கும்போது இந்த முதுபெரும் கலைஞனைப் பற்றி என்னால் என்ன எழுத முடியும் என எண்ணிக் கொண்டுதான் இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

நாற்பது வருடங்களுக்கு மேலாக 'முருங்கன் முத்தமிழ் கலாமன்ற'த்தைக் கட்டிக் காத்து வரும் குழந்தை அவர்கள் நாடகங்கள் நாட்டுக் கூத்துக்கள் மட்டுமல்ல 'அறப்போர் அறைகூவல்', 'நாம் – 1, 2', 'இன்பத்தமிழின் இதயஒலம்', 'மாதோட்டம் கவிதைத் தொகுதி', 'மரபுவழி நாடகங்கள்', 'பரிசு பெற்ற நாடகங்கள்' இப்படியாக இன்னும் பல நூல்களையும் எழுதியிருக்கின்றார்.

இவர் நெறியாள்கை செய்து அரங்கேற்றிய நாடகங்களில் வீரனை வென்ற தீரன், யார் குழந்தை, விடுதலைப் பயணம் ஆகிய நாடகங்கள் விவிலிய கருத்துக்களை உள்ளடக்கியதாகும். பழமையான மரபுக் கூத்துக்களின் வழியில் இவை அமைந்திருந்தாலும் காலத்தின் தேவை அறிந்து கூத்து மரபில் வராத வசனங்களையும் அத்துடன் சேர்த்து இளைய சந்ததியினரும் கூத்துக்களை பார்க்கும் வண்ணம் புதுமையான முறையில் உருவாக்குவதில் இவர் வல்லவராவார்.

1966இல் இவரால் அரங்கேற்றப்பட்ட வீரத்தாய் என்னும் நாடகம் பின்னர் கொழும்பிலும் மேடையேற்றப்பட்ட போது முன்னாள் துணைவேந்தர் அமரர் வித்தியானந்தன் அவர்களின் அனுசரணையுடன் பரிசு பெற்றதும் குறிப்பிடத்தக்கது. 1968இல் அரங்கேற்றிய கல் சுமந்த காவலர்கள் என்ற நாடகம், மன்னார் பிரதேச கலைவிழாவில் முதற்பரிசு, 1972 இல் முருங்கனில் நடைபெற்ற கலைவிழாவில் இணைந்த உள்ளம், இப்படிப் பரிசு பெற்ற நாடகங்களின் வரிசையே அதிகம் என்பதும் பெருமைக்குரிய விடயம்.

இலங்கை அரசின் கலாசாரப் பேரவையால் 'கலாபூஷணம்' விருது பெற்ற குழந்தை செபமலை அவர்களுக்கு கடந்த 10.06.2005 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக நாடக தின விழாவில் 'தலைக்கோல்' என்னும் விருது வழங்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் ஆறு பிள்ளைகளில் ஆனந்தன், இன்பன், அன்புராசா ஆகிய மூன்று பிள்ளைகள் பிரான்ஸில் வாழ்ந்து வருகின்றார்கள். திருமகள், மலர்விழி, கயல்விழி ஆகிய பெண் பிள்ளைகள் தாயகத்திலேயே வாழ்ந்து வருகின்றார்கள். தந்தையார் ஆற்றிவரும் நாட்டுக்கூத்து கலையுடன் இசைத்துறையை வளர்ப்பதிலும் பிரான்ஸில் வாழ்ந்து வரும் ஆண் பிள்ளைகள் இருவர் ஆற்றி வரும் பங்களிப்பும் அளப்பரியது. இவர்களின் கலைப்பணி தொடரட்டும். ■

**நன்றி: கூத்திசைக்காவலன் – மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் – 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வான மதிப்பீடுகளைக் கொண்டவர்



அருள்தந்தை. பி.யேசுறாஜா
பங்குத்தந்தை.
புனித செபஸ்ரியார் பேராலயம்,
மன்னார்.

நான் சிறுவனாய் இருந்த காலப்பகுதியில் கலைஞர் குழந்தை கலை உலகிற்கு அளித்துக்கொண்டிருந்த ஆக்கங்கள் எண்ணிலடங்காதென்பதை நன்கறிவேன். தனது சிந்தனைகளை எழுத்து வடிவில், செயல் வடிவில், மேடை நிகழ்வுகளில் நடித்தமை மற்றும் இயக்கியமை ஊடாக, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் தனது ஆக்கங்களை ஒலி, ஒளி பரப்பியதனூடாக பல இலட்சக்கணக்கான ரசிகர்களின் உள்ளங்களைத் தொட்ட ஒருவர் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

நான் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவனாய் உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் பாடசாலை விடுமுறைக்கு வீடு வருவது வழக்கம். அக்காலப் பகுதியில் மன்னார் மாவட்ட அரச அதிபராய் இருந்தவர் கலைப்பற்றுடைய திருவாளர் தேவநேசன் நேசையா அவர்கள். அதே காலத்தில் நானாட்டான் உதவி அரசாங்க அதிபராய் இருந்தவர் 'சொல்லின் செல்வம்' என்னும் கௌரவம் தாங்கிய திருவாளர் சொக்கலிங்கம் அவர்கள். இருவரும் கலையில் வல்லவர்கள் என்ற காரணத்தினால் நானாட்டன் உதவி அரசாங்கப் பிரிவு மட்டத்தில் நானாட்டானில் ஆண்டுதோறும் கலை நிகழ்வுகளை நடத்தி வந்தனர்.

நானாட்டான் உதவி அரசாங்க பிரிவுக் குட்பட்ட பல கிராமங்களில் இயங்கிவந்த கழகங்கள் நாடகங்களைக் கொண்டுவந்து மேடையேற்றுவது வழக்கமாயிருந்தது. அந்த வகையில் ஒருமுறை இடம்பெற்ற கலைவிழா நிகழ்வானது மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. பெருந்தொகையான ரசிகர்கள் மைதானத்தில் குழுமி இருந்தனர். பல கழகங்களின் கலைநிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக மேடையேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அடுத்ததாக மேடையேறவிருப்பது முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் வழங்கும் 'யார் குழந்தை நாடகம்' என அறிவிப்பாளர் ஒலிபெருக்கியில் அறிவித்தவேளையிலே விண்ணையே துளைக்கக்கூடிய வகையில் ரசிகர்களின் உற்சாகம் பொங்கிய குரலோசையும், கைதட்டலும், படபடவென வெடித்த பட்டாசுகளின் ஓசையும் இன்றும் என் மனக்கண்முன் நிற்கின்றது.

'யார் குழந்தை' நாடகமும் ஆரம்பித்து விட்டது. விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. சாலமோன் அரசனின் நீதி நெகிழாத சம்பவத்தைச் சித்திரித்துக் காட்டும் நாடகம்தான் 'யார் குழந்தை'. சாலமோன் அரசனாக நடித்தவர் வேறு யாருமல்ல, குழந்தை மாஸ்ரரே. உயிருடனிருந்த குழந்தைக்காக தாய்மார் இருவரும் உரிமைகோரியவாறு குரலெழுப்பியவண்ணம் இருந்தவேளையில் சாலமோன் அரசன் பச்சிளம் குழந்தையைத் தலைகீழாக ஒற்றைக்காலில் உயர்த்திப் பிடித்தவண்ணம் மறுகையில் கூரிய வாளை ஏந்திய நிலையில் நிற்க, குழந்தை பீறிட்டு அழ, அக்காட்சியைக் கண்ணுற்ற குழந்தையின் உண்மைத்தாய் ஓலமிட்டு அழ, மைதானத்தை நிரப்பியிருந்த ரசிகர்கள், குறிப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத் தாய்மார்கள் கண்ணீர்விட்டு அழுத காட்சியை எவராலும் மறக்கமுடியாது. மைதானமே கொஞ்சநேரம் கிடுகிடுத்துப்போனது. சாலமோன் அரசன் பாத்திரத்தை ஏற்று நடித்த கலைஞர் குழந்தையின் நடிப்புத் திறனே அன்று மைதானத்தில் குழுமியிருந்தோரை நிலை குலைய வைத்தது. அவர் தன்னை கலைஞர் குழந்தையாகவோ, குழந்தை மாஸ்ரராகவோ வல்ல, உண்மையான சாலமோன் அரசனே தான் என்ற உணர்ச்சி வசப்பட்டு நடித்ததே அதற்குக் காரணம்.

நான் முருங்கன் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய காலத்தில் கலைஞர் குழந்தையிடம் கண்டுகொண்ட நற்பண்புகள் ஏராளம். அவைகளுள் ஒன்றினைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வருகிறேன். கலைத்திறன் கொண்ட ஒருவர் யாராகவிருப்பினும், அதிலும் சிறப்பாக கலைநிகழ்வுகளை இயற்றுகின்ற, இயக்குகின்ற ஒருவர் எப்பொழுதும் கலை உலகில் தன்னை உயர்ந்தவராகத்தான் கணிப்பிடுவார். அவர் கலைநிகழ்வொன்றில் பாத்திரமொன்றை ஏற்று நடிக்கும் கட்டத்திலும், அக்கலைவிழாவில் இயக்குநருக்குச் சமமானவராகவோ அல்லது மேலானவராகவோதான் தன்னைக் கணித்துக்கொள்வார். ஆனால், கலைஞர் குழந்தை அப்படியானவரல்ல. இயக்குநர் தன்னைவிட வயதிலும், அனுபவத்திலும் குறைந்தவராக இருப்பினும் அவ்வியக்குநருக்கு முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்து அவருக்குக் கொடுக்கவேண்டிய கௌரவத்தையும் மரியாதையையும் அறிந்து செயற்படுகின்ற ஓர் உயர்ந்த மனிதன் என்பதை நான் நன்கு அறிவேன். அவரிடத்திலே பரந்த மனநிலை, பொறுமை, தாழ்ச்சி, புரிந்துணர்வு, எல்லோரோடும் இணைந்து செயற்படுகின்ற தன்மை போன்ற உயர்வான மதிப்பீடுகளைக் காண முடிகின்றது. இப்படிப்பட்ட வள்ளலைப் பாராட்டி வெளியிடப்படும் மலரில் எனது மனப்பதிவுகளையும் ஏற்க முன்வந்த மலர்க்குழுவினருக்கு எனது நன்றிகள். குறிப்பாக கலைஞர் குழந்தை மட்டில் உள்ள எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு எனக்கு வேண்டுகோள் அனுப்பிய அருள்தந்தை பா. நேசன் அடிகளாருக்கும் நன்றிகூறி நிற்கின்றேன். ■

**ஆயர் மேதகு யோ.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை...**

"ஆசிரியரும் கலைஞருமாகிய திரு.செ.செபமாலை (குழந்தை) அவர்களை நான் நீண்ட காலமாக அறிவேன். நாட்டுக்கூத்துத் துறையில் அவர் அடைந்துள்ள உயர் நிலை போற்றுதற்குரியது. கலை ஆற்றல் அவருக்கு இயல்பானது. அவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பம். கலை உணர்வு அவரது இரத்தத்துடன் ஊறியது. அவருது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரிடமும் இவ்வாற்றலைக் காணலாம்.

ஆசிரியக் கடமையாற்றிக்கொண்டு கல்விப்பணிக்கு மத்தியிலும் கலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் குழந்தை அவர்கள். பழமை மிக்க நாட்டுக்கூத்துக் கலையில் இவரது திறமை மிக உயர்வானது. மேடை ஏறிய இவரது பல நாட்டுக்கூத்துக்கள் பரிசில்களைப் பெற்றதோடு சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராகவும் இவரை இனங்காட்டின. 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை' நிறுவி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைப்பணி புரிந்து வருவதிலிருந்து இவரது கலை உள்ளத்தையும் பணி ஆர்வத்தையும் சமயப் பற்றையும் நாம் புரிந்துகொள்ளலாம்"

**நன்றி: முன்னுரை, மூலநூல்: செ.செபமாலை, மரபுவழி நாடகங்கள், 1997.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாப் புகழ் படைத்த கலைக் குடும்பம்

**டேவிட் ராஜேந்திரன்**
*பிரான்ஸ்*



இலங்கை வானொலியின் பொற்காலமான 70ஆம் ஆண்டுகளின் போது எனது வானொலிப் பணிப் பயணங்களில் நான் சந்தித்த பிறவிக் கலைஞரான செபமாலை மாஸ்ரருக்கு, உலகக் கலைகளின் உயர் பீடமான பரிஸ் நகரில் இன்று விழா எடுக்கப்படுகின்றது. இந்த பொன்னான வேளையில் அவரதும் அவர் குடும்பத்தவரினதும் கலைப் பணிகளுக்கு வாழ்த்துக்கள் வழங்கிக் கௌரவிக்கும் அரிய விழாவில் பங்கு பெறும் வாய்ப்பளித்தமைக்காக விழா ஏற்பாட்டாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது நீண்ட கால இலங்கை வானொலிப் பணியின், கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பதவியின் போது, 75ஆம் ஆண்டளவில் நான் சந்தித்த எழுச்சி மிக்க மாபெரும் கிராமிய இசைக் கலைஞர், குழந்தை மாஸ்ரர் என்று அனைவரும் அன்புடன் அழைக்கும் செபமாலை மாஸ்ரர். சிறீலங்காவில் தமிழ் பேசும் அத்தனை பட்டினங்கள் கிராமங்கள் தோறும் பயணம் செய்து தரமறிந்து நிகழ்ச்சிகளை நேரடியாக பதிவு செய்து ஒலிபரப்புச் செய்து வந்த பணியின் போது குழந்தை மாஸ்ரரையும் அவரது குடும்பத்தினரையும் முதன் முதலாக முருங்கனில் அவர்களது வீட்டில் சந்தித்தேன். அது முதல் அவரதும் குடும்பத்தினரதும் கிராமியப் பாடல்கள், நாட்டுக் கூத்துப் பாடல்கள், ஓரங்க நாடகங்கள் எனப் பல்வேறுபட்ட உயர்தரமான கலை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியதில் அவர்களது கலைத் திறனை நாடறிந்து கொண்ட பெருமையில் ஒரு சிறுபங்கை நானும் அவர்களது அனுமதியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

புலம்பெயர் வாழ்வின்போது செபமாலை மாஸ்ரரின் மூத்த இரண்டு புதல்வர்கள் இருவரையும் புகழ்பெற்ற கஞைர்களாக பரிஸ் நகரில் சந்தித்தபோது, அவர்களது அபார கலையுலக வளர்ச்சி கண்டு ஆனந்தம் கொண்டேன். சின்னஞ்சிறு குட்டிக் கலைஞர்களாக முதன் முதலில் முருங்கனில் நான் கண்ட இருவரும் அரும்பெரும் கலைஞர்களாக அபார வளர்ச்சி பெற்றிருந்தது எனக்கு உண்மையில் அதிசயமளிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் புலிக்குப் பிறந்தவர்கள்.

அந்நாட்களில் நமது நாட்டில் கலையுலக அங்கீகாரமாகக் கருதப்பட்ட இலங்கை வானொலி புகழை குழந்தை மாஸ்ரருக்குப் பெற்றுத் தருவதற்கு சின்னஞ்சிறு பாலம் அமைத்தேன் என்னும் காரணத்துக்காக அவரை வாழ்த்த வயதும் தகுதியும் அற்ற என்னையும் வாழ்த்த அழைத்த விழா ஏற்பாட்டாளர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று வரையில் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக விளங்கும் குழந்தை மாஸ்ரரும் அவரது குடும்பத்தினரும் அனைத்து நலனும் பெற்று நீடூழி வாழ இறைவன் பேரருளை இறைஞ்சி நிற்கின்றேன்.

வாழ்க வளமுடன் பல்லாண்டு

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாதோட்டம் தந்த 'மாபெரும் கலைஞன்' செபமாலை 'குழந்தை'



**வணபிதா செபமாலை அன்புராசா, அமதி**
ஆன்மகுரு, லூர்து திருத்தலம்,
பிரான்ஸ்.

## கலைக் களஞ்சியமாம் மன்னார் மாதோட்டம்

மன்னார் மாதோட்டம் கிராமிய கலைகளால் நிறைந்துள்ள ஒரு பிரதேசமாகும். இக்கிராமிய கலைகளுள் முதலிடம் வகிப்பது நாட்டுக் கூத்தாகும். ஏனென்றால் ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, கோயில் கோயிலாக இப்பாரம்பரிய கலைவடிவம் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது. மக்களின் வாழும் கலை வடிவமாக அதாவது நிகழ்கலையாக நாட்டுக் கூத்து பாடப்பட்டு, ஆடப்பட்டு வரப்படுகின்றது என்றால் அதன் பெருமை கிராமிய மக்களையே சென்று சேரும்.

நாட்டுக்கூத்து இன்று ஈழத்தின் தேசிய கலை வடிவமாக அறிஞர்களால் கோடிட்டுக் காட்டப்படுகின்றது என்றால் அதன் தனித்துவமும், சிறப்பும் உண்மையில் ஆழமாகக் கூர்ந்து நோக்கப்பட வேண்டும்.

1950களில் தேசிய மட்டத்திலான கொள்கைகள் முதன்மைப் படுத்தப்பட்டபோது கலாசார பண்பாட்டு கருவூலத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்யும் தேடலும் முன்னிலைப்படுத்தப்பட்டது. இப்பின்னணியில்தான், "ஈழத்தமிழருக்கு என ஒரு நாடக வடிவம் இருக்க வேண்டுமெனில் அது நாட்டுக்கூத்து மரபுதான்" என்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமிழரின் தேசிய மூலத்தின் தேடலில் கண்டுணர்ந்தார்.

கிராமப் புறங்களில் ஒதுங்கிக் கிடந்த நாட்டுக்கூத்தினை மீட்டெடுத்து, அணிசெய்து அதன் சிறப்பினை அறிஞர் உலகிற்கும், வெளி உலகிற்கும் கொண்டுவர காரணமாய் இருந்தவர்களுள் பேராசிரியர்களான க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, நீ.மரிய சேவியர் அடிகளார் ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியர்கள் ஆவர்.

ஈழத்தின் கலையுலக வரலாற்றில் மன்னார் மாதோட்டம் தனித்துவமான சிறப்பிடம் பெறுகின்றது என்பது நாடக ஆய்வாளர்கள், அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்ற ஆய்ந்தறிந்த முடிவாகும். அதிலும் சிறப்பாக நாடகம், நாட்டுக் கூத்து என்று பேசப்படுகின்ற போது, ஆராயப் படுகின்ற போது மன்னார் மாதோட்டம் இக் கலைகளை பெற்றெடுத்து, பாலூட்டி, சீராட்டி, வளர்த்தெடுத்து, ஆளாக்கி உயர்நிலையில் நிலைநிறுத்தியது என்றால் அதற்கு இப்பிர தேசங்களில் தொடர்ந்து ஆற்றப்படும் ஆற்றுகைகளே சான்றாகும்.

மன்னார் மாதோட்டம், "செந்நெற் களஞ்சிய மாதோட்டமாகவும் மன்னார் கலையின் களஞ்சியமாகவும் காட்சியளிக்கின்றது. கிராம மக்கள் வளர்த்த அழகுக் கலையாகிய நாட்டுக்கூத்து இன்னமும் இங்கு ஆடப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் இக்கலையைத் தமது நல்வாழ்வுக்கு உதவும் கருவிகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். இதனைத் தமது சமய வாழ்க்கையோடு பின்னிப்பிணைத்து வளர்த்து நிறைமனம் பெற்று வாழுகின்றனர்" என சு.வித்தியானந்தன் மன்னார் மாதோட்ட மக்களின் சமூக வாழ்வுடனும், மறை வாழ்வியலோடும் கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக நாட்டுக்கூத்து கலந்திருக்கின்றது என்பதை எடுத்தியம்புகின்றார்.

## கலைத்தொட்டிலில் வளர்ந்தவர் 'கலைஞர் குழந்தை'

இத்தகைய ஒரு கலைத்தாயின் மடியில் பிறந்து, கலைத்தொட்டிலில் வளர்ந்தவர்தான் மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த செபமாலை 'குழந்தை' ஆசிரியர் அவர்கள். இவரின் கலைவாழ்வு பாடசாலைப் பருவத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. இதற்கு வித்திட்டவர்கள் இவரின் தந்தை அண்ணாவியார் செபஸ்தியான் மற்றும் இவரின் ஆரம்பகால ஆசிரியர்களான அமரர்களான நீக்கிலாப்பிள்ளை, றோசேன் யோசப், அருள்திரு வில்வராசசிங்கம், அ.ம.தி. பேரருள்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோராவர்.

பள்ளிப்பயிற்சி, தொடர்ந்து இவரின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (1958-1959) அனுபவம் என்பன கிராமிய நாட்டுப்புறக் கலைகளில் இவர் வளரவும், இக்கலைகளை வளர்க்கவும் தூண்டுகோலாய் அமைந்தன.

இற்றைக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகால செபமாலை "குழந்தை" அவர்களின் தமிழ், கலை, சமய, சமூகப் பணிகளை வெவ்வேறு கோணங்களிலே நோக்கவும், பகுத்துப் பார்க்கவும், ஆய்வு செய்யவும் வேண்டிய தேவை இருக்கின்றது (அதனைச் செய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று). ஏனென்றால் இந்த நீண்ட அரைநூற்றாண்டுக் காலப் பகுதிகளில் தொடர்ந்து உயிர்த்துடிப்போடு இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருந்த -இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஆக்கபூர்வமான பண்பாட்டு, பன்முக, ஆளுமை உடைய தலைசிறந்த கலைஞனாகவே இவரைப் பார்க்க வேண்டி இருக்கின்றது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் இவரைப்பற்றிக் கூறுகின்ற போது, "அனுபவம், புத்திக்கூர்மையுள்ள கலைஞர், செ.செபமாலை (குழந்தை) அவர்களை நான் நன்கு அறிவேன். சிறந்த சங்கீத நடன நாடக பற்றுடைய குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது நாடகங்கள் தரமானவை. தகுதிவாய்ந்த நடிகர். நாடகத்தின் மூலம் நடிப்பையும் தலைமைத்துவத்தையும் காத்து வருபவர். 1968இல் இவருக்கு 'கவிஞர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது" என்கின்றார்.

## பன்முக ஆளுமையுடையவர்

இவர், குரல்வளம் மிக்க இனிமையான பாடகர் ஆவார். காலத்தால் அழியாத பாடல்களைப் பாடிய கலைமாமணிகளான சீர்காளி கோவிந்தராஜன், தியாகராஜா பாகவதர், பி.யு. சின்னப்பா போன்றவர்களின் பாடல்களை பதிவுக் கருவிகளைப் பார்க்கக்கூட முடியாத காலத்தில் அதாவது 1970, 1980களில் வானொலியில் கேட்டு அப்படியே பாடும் திறமையும், சாரீரமும் கொண்டவர்.

சிறந்த பேச்சாளர். மேடைப் பேச்சுக்கள், பொதுக்கூட்டங்கள், சமூகக் கொண்டாட்டங்கள், ஆலயத் திருநாட்கள், பாடசாலை விழாக்கள் போன்றவைகளில் இவரின் பேச்சாற்றல் புலப்படும்.

நல்ல நாடக தயாரிப்பாளர், நாடகங்களை எழுதி அவற்றைப் பயிற்றுவித்து தானும் தேவையைப் பொறுத்து பாத்திரமேற்று நடிப்பது, நெறிப்படுத்துவது என இவரின் நாடக வித்துவம் வெளிப்படும். நாட்டுக்கூத்து, சமூகநாடகம், சமயநாடகம், இசைநாடகம், வசனநாடகம், வரலாற்றுநாடகம் எனக் கைதேர்ந்தவர்.

கட்டுரைகள், கவிதைகள், கல்வெட்டுக்கள் போன்றவைகளை எழுதும் நல்ல எழுத்தாளன். எழுத்துக்கேற்ற இசையமைப்பு, இசைகேற்ப பாடும் திறன் இவற்றை ஒருங்கே இணைக்கப் பெற்றவர்.

இவருடைய நூல்களாக, 'அறப்போர் அறைகூவல்' (1966), 'இன்பத்தமிழின் இதய ஓலம்' (1966), 'யாகப்பர் இன்னிசைப் பாடல்கள்' (1966), 'நாம்' மலர்-1(1967), 'நாம்' மலர் - 11 (1989), 'பரிசு பெற்ற நாடகங்கள்' (1997), 'மரபு வழி நாடகங்கள்' (1998), 'மாதோட்டம்' - கவிதைத் தொகுதி (2000) ஆகியவையாகும். சுமார் 60 நாடகங்களையும், 90 வரையிலான கல்வெட்டுக்களையும், கும்மி, கோலாட்டம், வரவேற்பு – பிரியாவிடைப் பாடல்களாக 100க்கு மேற்பட்ட பாடல்களையும் எழுத்துப் பிரதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் வைத்திருக்கின்றார்.

நல்லாசிரியராய் பணியாற்றியவர். தான் சார்ந்த சமூகத்தின் இதயமாய் இருந்து இன்னும் இயங்கிக் கொண்டிருக்கின்றார். இதனால், பல கல்லெறிகளையும் வாங்கியிருக்கின்றார். எனினும் அவற்றையெல்லாம் படிக்கற்களாக மாற்றி வளர்ந்து உயர்ந்து நிற்பது தான் இவரின் தனிப்பெரும் சிறப்பாகும்.

1960இல் சாதாரண குழுக்களாக நாடகங்களை அரங்கேற்ற ஆரம்பித்து அதன் தொடர்ச்சியாக 1964ஆம் ஆண்டில் 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' கருவாகி, உருவாகி இற்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகளாக அதனைக் கருத்தோடு காத்து இயக்கிவருகின்றார். எத்தனையோ மன்றங்கள் புதுமழைக்குப் புற்றீசல்கள் போல தோன்றுகின்றன. ஓரிரு ஆண்டுகளில் ஒருசில நிகழ்வுகளோடு மறைந்து போகின்றன. ஆனால், இம்மன்றத்தைத் தொடர்ந்து ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களாக இயக்கிவரும் இவரின் தலைமைத்துவம் உண்மையில் வியக்கத்தக்கது.

பழைய ஒரு வீணைப்பெட்டி, ('சர்ப்பினா' அதனுடைய வயதும் ஏறக்குறைய இவருடைய வயதை ஒத்ததே!), இரண்டு தாளங்கள், எப்போதோ வாங்கிய ஒரு "டோல்க்கி", நாடகத்திற்காக தைத்த சில நாடக உடுப்புக்கள், ஒரு சில முகப்பூச்சு மைகள், இன்னும் சில நாடக ஆபரணங்கள்... இவைதான் இவரின் சொத்துக்கள்! இவற்றை வைத்துக்கொண்டு எத்தனை இடங்களுக்குச் சென்றிருப்பார், எத்தனை நாடக நிகழ்ச்சிகளை நடத்தியிருப்பார், எத்தனை போட்டிகளில் வெற்றியீட்டி இருப்பார்! நினைத்தால் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

## எப்புலத்தில் இப்பன்முக ஆளுமையில் உருவானார்

எந்தவித மேற்படிப்பும், சிறப்புப் பயிற்சியும் இல்லாமலேயே இப்பேர்ப்பட்ட பன்முக ஆளுமையில் தம்மைத் தாமே உருவாக்கிக் கொண்டார். இவற்றுக்கான வாய்ப்பு வசதிகள் எதுவும் கிடைக்காத சூழலிலும் தன்னம்பிக்கையோடு இவ்வாற்றல்களிலே வளர்ந்திருக்கின்றார்.

இவை எல்லாவற்றையும் பொருளாதாரப் பலம் சிறிதளவேனும் இல்லாத ஒரு சூழலில் நிறைவேற்றி இருக்கின்றார். தன் ஆசிரிய வருமானத்தை வைத்துக்கொண்டு பல கலை நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கின்றார். இதனையும் கடந்து கடன் வாங்கியும் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து இருக்கின்றார் என்றால் இவரின் பொருளாதார நிலைபற்றி இலகுவாக சில முடிவுகளுக்கு வந்துவிடலாம் அல்லவா!

இப்பின்னணியில்தான், "கலைஞர் குழந்தை அவர்கள் கலைத் தொண்டிற்காக இன்பம், சுகம், பணம், பொருள் யாவையும் தியாகம் செய்வதை அறிந்தவர்கள் ஒரு சிலரே" என்று 1982ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 27ஆம் நாள் இவருக்கு முருங்கன் பாடசாலை அபிவிருத்தி சபையால் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் அருட்திரு ஜெயராஜசிங்கம் அடிகளார் குறிப்பிடுவது மேற்சொன்ன விடயத்தை உறுதிப்படுத்துகின்றது.

உடல், பொருள், ஆவியோடு இவரின் ஆயுள் முழுவதையும் அர்ப்பணித்திருக்கின்றார் என்றால் அவரோடு வாழ்ந்தவர்கள், வளர்ந்தவர்கள், இவரை நன்கு அறிந்தவர்கள் இதற்கு சாட்சியம் பகர்வார்கள். அடுத்து, முக்கிய விடயம் யாதெனில் இவர் சார்ந்த சமூகப் பின்னணியாகும். இதனை நோக்கும்போது விவிலியத்தில் கூறப்படும் தாவீதைப் போல இவர் ஒரு சின்னஞ்சிறு மனிதர்தான்! இருப்பினும், தன் இலக்கின்மீது கொண்டுள்ள தன்னம்பிக்கையும், மன உறுதியும் செபமாலை 'குழந்தை' அவர்களை செயல்வீரனாக ஆக்கியிருக்கின்றது.

ஆளணிப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக அன்று தொடக்கம் இன்று வரையும் இருந்துகொண்டே இருந்திருக்கின்றது. எனினும் இவ்விடயம் புரட்சிகளையும், புதுமைகளையும் இவர் கலைப்பயணத்தில் புகுத்தியிருக்கின்றது. உதாரணத்திற்கு ஒன்று, இரண்டை இங்கு குறிப்பிடுகின்றேன்.

1979ஆம் ஆண்டு மன்னார் நகரில் ஓர் அரச தலைவர் பங்கெடுக்கும் நிகழ்வில் நாடகம், வில்லுப்பாட்டு ஆகியவை அரங்கேற்ற உறுதியளித்தாயிற்று. ஆயினும் நிகழ்வு நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் ஒருசில நாட்களுக்கு முன்பதாக முக்கிய மான கலைஞர்கள் சில காரணங்களுக்காகப் பங்கேற்க மறுத்துவிடுகின்றார்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், கலையின் மீது கொண்ட தாகத்தாலும் இந்நிகழ்வுகளை நடத்தியே தீருவதென்ற முடிவுக்கு வருகின்றார். தானே பிரதான பாத்திரமேற்று அரசனாக நடித்ததோடு, தன் தந்தையார், தன் மனைவி, மகன்மார், தன் தமையன், தமையனின் மகள், மேலும் ஒருசில உறவினர்கள் ஆகியோரை வைத்து அந்நிகழ்வுகளை நடத்திக் காண்பித் திருக்கின்றார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அசாதாரண துணிவும், எப்படியும் சாதிக்க வேண்டும் என்ற மன உறுதியும் இவருக்குள் வந்துவிடுகின்றது.

1990களில் நாட்டின் பயங்கரமான சூழலில்கூட ஒருவகை அசட்டுத் துணிவோடு தொடர்ந்து கலைச் செயற்பாடுகளை செய்தி ருக்கின்றார். இடம் பெயர்ந்திருந்த நிலையிலும் இவரின் கலைநிகழ்வுகள் சாதாரணமான காலத்தைப்போல நகர்ந்தன என்றால் இவரின் கலைப் பயணத்திற்கு ஏது தடையாக இருக்க முடியும்?

2006, 2007ஆம் ஆண்டுகளில் இவரோடு இணைந்து கலை நிகழ்வுகளில் ஏனையவர்கள் செயற்பட முடியாத சூழலினாலும் காரணங் களினாலும் தன்னுடைய ஆறு வயதுடைய பேரனை மட்டும் வைத்துக்கொண்டு ஆறு, ஏழு மேடைகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கின்றார் என்றால் மிகுதியை கணக்கிட்டுப் பார்க்க வேண்டியதுதானே!

## பல நெருக்கீடுகளுக்கு உள்ளானார்

இப்படித் தொடர்ச்சியாக ஈடுபடும் வேளைகளில் பல தரப்பட்ட, பல வகைப்பட்ட நெருக்கீடுகளுக்கு உள்ளாகி பலமுறை நோய் வாய்ப்பட்டிருக்கின்றார். எனினும், இவை யெல்லாம் "தியேட்டர்"இல் சினிமாப்படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது கடலை வாங்கிச் சாப்பிடக் கொடுக்கப்படும் இடை வேளைகள் போலத்தான் இவருக்கு! இடை வேளை முடிந்ததும் கதை இன்னும் காரசார மாக நகர்ந்து செல்வது போல இவரின் கலைப் பயணமும் தொடர்கதையாய்த் தொடரும். இப்படியாக, உடல் சுகத்தையும், பொருளாதாரத் தையும் நிறைய நிறையவே இழந்திருக்கின்றார். இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் இவருக்கு ஆதர வாகத் தொடர்ந்து இருந்து வந்தவர்கள் இவரின் மனைவி செபமாலை றோஸ்மேரி, குடும்பத்தி னர், உறவினர், கலையுலக நண்பர்கள் என லாம்.

## நிறைவாக...

ஆக, இவற்றுக்கு அப்பால் சென்று நோக்கும்போது சுமார் ஐம்பது ஆண்டுகளாக தமிழ், கலை, சமய, சமூகப் பணிகளில் இடை விடாமல் இயங்கிக் கொண்டு இத்தனை சாதனைகளை சாதிப்பதற்கான காரணங்கள் என்ன என்று சிந்திக்கும் போது இவர் தம் இலட்சியத்தில் கொண்டிருக்கின்ற அர்ப்பணிப்பு, அதற்காகச் செய்கின்ற தியாகம், அதனை அடைய மேற்கொள்ளுகின்ற அயராத உழைப்பு, எல்லாம் நிறைவேறும் என்று இறைவனில் கொண்டிருக்கின்ற நம்பிக்கை என்பவைதான் என்று கூறலாம்.

இப்பேர்ப்பட்ட மகத்தான அர்ப்பணிப்புக் களை தம்மொழிக்காக, கலைக்காக தான் வாழும் சமூகத்திற்காக மேற்கொண்டதனால் கலாவித்தகர் யோண்சன் ராஜ்குமார் குறிப்பி டுவது போல இன்று இவரை ஒரு "மாபெரும் கலைஞர்" ஆக பார்க்கவேண்டி இருக்கின்றது.

அதனால்தான், கவிஞர் குழந்தை (1968), கலைஞர் குழந்தை (1982), முத்தமிழ் வேந்தன் (1994), கலாபூஷணம் (1999), திருக் கலை வேந்தன் (2000), தலைக்கோல் (2005) போன்ற கௌரவங்களைப் பெற்றிருக்கின்றார். பற்பல மேடைகளில் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கிப் பாராட்டப் பெற்றிருக்கின் றார். சாஹித்திய (1998), மாகாண (1999), ஆளு நர் (2000) விருதுகளைப் பெற்றவர் ஆவார். இவ் வாறு, "தேசத்தினதும் திருச்சபையினதும் பாராட்டுக்களைப் பெற்றவர்" என மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண் டகையால் வாழ்த்தப் பெறுகின்றார் (2005). ■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெ டுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கன் மண்ணின் மூத்த மைந்தன்

திருமதி சிறில் மரியதாசன் பப்சி
B.Com.,M.Ed.(Jaffna)
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



'குழந்தை'
என்ற வார்த்தையுடன்
எனது நினைவுச் சுவடிகளில்
பூத்திடும் நினைவுகள்
இருவர் சார்ந்தவை.
முதலாமவர்,
யாழ்ப்பாணத்தில்...
நாடகப் பேராசான்
இளமைக் கால அறிவுத் தேடற் களத்தில்
நாடகக் கலையைப்
பார்க்க, இரசிக்க, ஆய்ந்தறிய
அரிச்சுவடியாய் அமைந்து வாழும்
பெருமகன்
குழந்தை சண்முகலிங்கம்.

இரண்டாமவர்
முருங்கனில்...
எமது குடும்பம் என்ற சிறு தோட்டம்
அரும்பாகி உருவான காலகட்டம்
'குழந்தை மாஸ்டர்'
அறிமுகமானார், அனுபவமானார்.

ஈழத் திருநாட்டின்
இனியதோர் மரபுக் கலையாய்
இன்றுவரை இன்றுவரை வளர்ந்திருக்கும்,
எம்மை ஓர் இனமாய்
என்றும் நிலைத்திருக்க...
உலகிற்கு வெளிப்படுத்த...
முன்னோர் படைத்தளித்த
மூத்த கலையாம் கூத்துக்கலை.
அதன் மண் மணம் மாறாமல், மரபு பிறழாமல்
காத்துவரும் களமாக
மாதோட்டப் பிரதேசம்.

நாடகம் படிப்பதென்றால்
நாளுமொரு சந்தோஷம்
ஊர் கூடி விழாவெடுத்து
சடங்குகள் சம்பிரதாயங்களுடன்
சட்ட திட்டங்கள் வரையறைகளுடன்
கலையைக் கடத்திவரும் காவலர் பலர்.
கலை வளர்ப்போர் சிலர்
சிலருள்ளும் முதிர்ந்த முத்தாய்
'குழந்தை மாஸ்டர்'.

காலத்தின் தேவையாய்
கலை வளர்த்துவரும்
கட்டாயக் கணங்களிலே
இயல்பாய்
கலையே வாழ்வாய்
கலையே வழியாய்
கலையே குடும்பமாய்
கலையே கல்வியாய்
கலையே ஆன்மீகமாய்
கலையே சமூகமாய்
கலையே யாதுமாய்
தன்னையே அர்ப்பணித்து
தடம் பதித்த
தமிழ் அறிஞர்
'குழந்தை மாஸ்டர்'.

பங்குத் திருச்சபையின்
பெயர் போற்றும் பங்குமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குச் சபையினிலே
பழம் பெரும் உறுப்பினன்.
ஒளி விழாவோ,
வரவேற்போ,
பங்குப் பெருவிழாவோ
பார்த்ததொரு
கணத்தினிலே...
கவியியற்றி, எடுத்தியம்பி
நிகழ்வை இனிதாக்கும்
செஞ்சொற் செல்வமாய், களஞ்சியமாய்
முருங்கன் மண் தந்திட்ட
முதுபெரும் கனவு மகன்
'குழந்தை மாஸ்டர்'.

கண்ணியமாய்க் கல்வியினைப் பெற்றிட்ட
நல்லாசிரியர் அவர்,
அதிபர் சேவையிலே, அற்புதமாய்ப் பணி
புரிந்தார்.
கல்விப் புலம் சார்ந்தும்
கற்றறியா மக்களுக்கு,
ஆய கல்வியினை
அடிப்படையாய் ஊட்டிவிட
அரும்பெரும் செயல்கள், பல புரிந்தும்
பல வினைகள் செய்திட்ட
மூத்த கல்வியாளர்
முதுபெரும் அதிபர்
'குழந்தை மாஸ்டர்'.

படைப்பாற்றல் வாய்ப்பதில்லை பலருக்கும்
விழிமூடித் திறக்கையிலே
வியப்பான படைப்புகள் உருவாக்கும்
வல்லமையை
வழங்கிய வேத முதல்வனுக்கு
விருப்பாய் பணி புரிந்தார்.

இறை கொடுத்த தாலந்தை
மண்ணில் புதைத்து வைக்காமல்
பத்தாய், நூறாய், பல்கிப் பெருக்கி
பண்புடனே வழங்கியவர்.
தன்னைப் பார்க்கும் எவரிடமும்
'படைத்தல்' பெருக வழி சொல்வார்
ஊக்கல்
எனும் உளவியற் கோட்பாட்டை
தான் சார்ந்த ஊரவர்க்கு
ஒப்பற்ற செம்மையுடன் வழங்கி

நானோட, நீயோட, ஊரோட
உலகோடோடி...
பந்தயத்தில் வெற்றி பெற்றார்.
பரிசதனைப் பெற்றிட்டார்.
மேன்மையாய் வாழ்ந்திருந்தார்
மாண்பதனைப் பெற்றெடுத்தார்.

வாழ்வோடு மட்டுமல்ல கலை படைத்தார்,
சாவீடும் சார்ந்தோங்கும் கவி எடுத்தார்.
ஊரினிலே உன்னதமாய்
வாழ்ந்து மரித்த பெருமக்கள்
புகழ்தனை எடுத்தியம்ப,
கல்வெட்டாய் சமரகவி தொடுத்து
சாதனையும் புரிந்திட்டார்.

மூத்தோரை நாம் பார்த்து
பின்பற்ற வழிகள் பலவுண்டு,
பெரியோனின் வாழ்வினிலே
சாகாக் கவி படைத்த கவிஞனுக்கோ
சாவில்லை
நின்று நிலைத்திடுவர்.
ஓங்கு புகழ்
தமிழ்மொழி உள்ளளவும்
நம் கவியும் அப்படியே
சந்தேகம் நமக்கில்லை.

'குழந்தை மாஸ்டர்'
குடும்பமது ஓர் கோவிலாய்
பல்கலைக்கழகமுமாய்
பார்ப்போர் மெச்சுகின்ற பண்புடை கதம்பமாய்
பாரினிலே வாழ்வதனைப்
பார்ப்போர் புரிந்திடுவர்.
சம்சார சாகரத்தில்
மூழ்கி எடுத்த
முத்துக்கள் ஆறு வகை
மாஸ்டரின் கைவண்ணம் வளர்த்தெடுத்த
வித்தைகளால்
ஆன்மீகப் பணி புரியும்
அன்புக் குருவாய்
திருச்சபையின் நற்கனியாய்
ஓர் மைந்தன்.

திரை கடலோடியும் திரவியம் தேடிட
புலம் பெயர்ந்த இரு மைந்தர்,
இவ்வுலகிற்காய் வாழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை வளர்த்தெடுத்து ஒளியேற்ற
ஆசிரியர் இருவர்.
வங்கியிலே சேவைதனை வழங்கிவரும்
ஓர் நங்கை
உலகத் தோட்டத்தில் உழைக்கின்றார்.
உண்மை வழி வாழ்கின்றார்.
பெருமகனின் அரிய
வெற்றிகளின் பின்னால்
அன்பாய் ஆதரவாய்
சின்னப் புன்சிரிப்புடனே
குடும்ப அகல்விளக்கு
அன்பான அம்மா
அனைத்துச் செயல்களுக்கும்
அரவணைக்கும் கரமாய்...
ஆண்டவர் தம் மக்களுக்கு வழங்கும் ஆசி இது
அன்பான மனைவி வீட்டின் உட்புறத்தில்
குழந்தைகளோ... ஒலிவக் கிளைகளென...
உன்னைச் சுற்றி நிற்பர்.
ஊர் போற்ற நின் வாழ்வு
ஆசி நிறையப் பெற்றதுவே
அனைவருமே உரைப்பர்.

'யார் குழந்தை' நாடகத்தை
நாற்றிசையும் எடுத்துரைத்து
நலமுடனே நெறிசெய்து
பெற்ற பெயர் 'குழந்தை'
சாலமோனின் ஞானத்தை
எடுத்தியம்பும் குழந்தை அவர்
தன் பேரக் குழந்தையையே
மேடையிலே நடிக்கவைத்தார்.
சாஹித்திய விருததனை
பெருமையுடன் பெற்ற மாஸ்டர்
பேருவகை கொண்டவேளை
பிறந்தவனும் சாஹித்தியனாய்
ஆறாம் மாதத்தில் குழந்தையாக
நடித்திட்டான்.
பரம்பரையின் செல்வாக்கு
திறன்களை கடத்திவிட
குடும்பமது குவலயத்தில்
குன்றின்மேல் விளக்காக...
தந்தை மகற்காற்றும் உதவிகளை
அவையினிலே முந்தி இருக்கச் செய்துவிட
மக்களோ தந்தைக்கென ஓர் உதவி
செய்கின்றார்.
இவன் பெற்ற பேறென்ன?
எனும் வினாவை
வியப்புடனே எழுப்பினரே...

கண்ணியமாய் வாழ்ந்து
வாழ்வாலே உதாரணமாய்
வாழும் பேராசான் தன்
பெருமையினைச் சொல்லிவிட
சிறியோர் யாம்
எடுத்த முயற்றி இது
பெருங் கடலின் நீரைச்
சிப்பியினால் சேகரித்து
இறைத்துவிடல் கூடுமோ?
வரலாற்றின் வரிகளிலே
பதியப்படும் 'குழந்தை மாஸ்டர்'
வாழ்ந்த காலத்திலே
சிறுபொழுது
அவருடனே பழகிடவும்
அனுபவங்கள் பெற்றிடவும்
எம் போன்றோர் சிலருக்கு
இனியதொரு சந்தர்ப்பம்
கிடைத்ததுவும் மகிழ்ச்சியாம்
பெற்ற அனுபவத்தைப்
பகிர்ந்து கொள்ளல்...
அதைவிடவும் பேறுண்டோ?

வாழ்க!
முருங்கன் மண்ணின் மூத்த மைந்தன்
தன்னிகரில்லா கவி படைக்கும் கலைமைந்தன்
நாடகத்தை நல்லவிதமாய் வளர்த்தெடுத்து
நவீன உலகிற்கு வழங்கி வைத்த
நல்லதோர் நெறியாளன்
சிம்மக் குரலினிலே பாட்டிசைத்த சேயோன்
திருச்சபையின் செல்வன்
திசை எட்டும் புகழ்பெற்று
வாழ்வினிலே வளம் பெற்ற நிறைவுடனே
நூறாண்டு வாழ...
இறையாசி என்றும் அவருடனே இருக்கும்.
வாழ்க! என்றும் வாழியவே!! ■

."எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

– பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைச் சிரிப்பும் கள்ளமற்ற பேச்சும்

கு. பரராசா
பிரான்ஸ்



கலைஞர் செ.செபமாலை ஐயா ஒரு நாட்டார் பாடற் கலைஞர், நாட்டுக்கூத்து அண்ணாவியார் என்பதை உலகம் அறியும். கிடைத்தற்கரிய பெரும் புகழொன்று அவரைத் தேடிச் சென்றடைந்த போது அவரையறிந்த மேலும் பலருள் நானும் ஒருவனானேன்.

ஆனந்தன், அவருடைய இளைய சகோதரர் இன்பம், அவர்களுடைய மாமனார், நண்பர்கள் ஆகிய கலைஞர்கள் பாரிசு நகரில் மேடையேற்றிவரும் பல நாட்டுக் கூத்துக்கள், தொன்று தொட்டு அசைந்தாடிவரும் கலையருவியொன்றின் பராமரிப்பாளர்கள், உரிமையாளர்கள், வாரிசுகள் அவர்கள்தான் என்பதை நிலைநிறுத்துகின்றன என்றால் மிகையல்ல.

தமிழர்களின் சொத்தான அழகிய நாட்டுக்கூத்துக் கலை ஏறக்குறைய ஐந்நூறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்நிய ராட்சிகளின் கீழ் நலிந்து, அழிந்து போகும் நிலையில், மீட்கப்பட்டு, இயன்ற அளவிற்கு வளர்த்தெடுக்கப்பட்டு இன்றைய சந்ததிகளின் கைகளில் தரப்பட்டிருக்கிறது. அது ஒரு சில பேருள்ளம் கொண்ட கலைஞர்களதும், பேராளர்களதும், அவர்களது மூதாதையரதும் தொன்று தொட்டுத் தொடரும் உழைப்பின் பயனே தவிர வேறெதுவுமில்லை. அப்படியான தகைமையுடன், இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னிலைக் கலைஞர்கள் சிலருள் ஒருவர் செபமாலை ஐயா அவர்கள்.

ஆயிரத்துத்தொழாயிரத்து அறுபத்தியொன்றில் மேடையேற்றம் கண்ட அவரது கலைவாழ்வு சமூகத்திற்கு நயமான பல படைப்புக்களைத் தொடர்ச்சியாக அளித்து வந்திருக்கின்றது. கிடைத்தற்கரிய பல பட்டங்களையும், பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுத் தந்திருக்கிறது. இதனால் எமது மண் பெருமை கொள்கிறது.

"ஆனந்தன்ரை அப்பா வந்திருக்கிறார். கேள்விப்பட்டியளோ?"

"இதொரு முறையான சந்தர்ப்பம். விடக்கூடாது. ஆளைப் போய் உடனடியாக் காணோணும்."

"நீங்களும் நானும் கிழடுகள். போய் காணுறதிலை ஒரு பிரயோசனமும் இல்லை பரா. பார்க்கலாம். பாட்டுக் கேக்கலாம். பரவசப் படலாம். அதோடு சரி. ஆனால் விசயமே அதுக்குப் பிறகுதானே தொடங்குது"

"குழந்தைப் பொடியள் ஒரு பட்டாளம் போகோணும். ஆடத் தெரிஞ்ச பொடியள், பாடத்தெரிஞ்ச பொடியள், கலையிலை ஆசையுள்ள இளம்பொடியள் எல்லாரும் போய் இப்படியான பெரிய கலைஞர்களைக் கண்டு பேசிக் கலந்து, நேரங்காலம் வசதிப்பட்டு வந்தாப் படிச்சு, அவையளட்டை என்னென்ன இருக்கோ அவ்வளவையும் பசுக்கன்று மாதிரிக் கறந்து எடுத்துப் போடவேணும். அதுகும் இஞ்சை... வெளிநாடுகளிலை பிறந்து வாழுற எங்கடை பிள்ளையளுக்கு இப்படியான விசயங்கள் கட்டாயம் தேவை... இந்தப் பழசுகளும் புதுசுகளும் சந்திக்கேக்குள்ளதான் எங்களுக்கு இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான அந்த குடுக்கல் - வாங்கல் நடக்கும்."

இவையெல்லாம் நண்பர் முகுந்தனிடமிருந்து தொலைபேசி மூலம், பலரோடு எனக்குமாகப் பரிமாறப்பட்ட, கருத்துக்கள் அல்ல, உண்மைகள். பல விடயங்கள் போல், இந்த விடயத்திலும் நண்பர் முகுந்தனின் குரல் என் மனதின் குரலாகவே ஒலித்தது.

சில இளைஞர்களுடன் பேசியதில் அவர்களுக்கும் இம்மாதிரி விடயங்களில் நாட்டம் இருப்பது புரிந்தது. எனவே எமக்கு வேலை குறைவு. முதலில், நாட்டியம், கவிதை, நாடகம், குறும்படங்கள் என பல்துறைகளில் ஈடுபாடு கொண்டவரும், மக்களிடையே நன்கு பரிட்சயமானவருமான இளம் கலைஞர் திரு. சதாப்பிரணவனையும் அழைத்துக்கொண்டு, முகுந்தனும் நானும் ஐயா செபமாலை அவர்கள் தங்கியிருந்த, அவரது மூத்தமகனான, கலைஞர் ஆனந்தன் வீட்டிற்குச் சென்றோம்.

ஆனந்தனின் அன்னையார், பாரியார், அக்கையர், குழந்தைகள் உட்பட அத்தனை பேரும் எம்மை வரவேற்று உபசரித்தனர்.

கலைஞர் ரகுநாதன் அண்ணனும் முன்னேற்பாட்டின்படி ஏற்கெனவே அங்கே வந்திருந்தார்.

ரகுநாதன் அண்ணன் தவிர ஏனையவர்கள் கலைஞர் செபமாலை ஐயாவை அப்போது தான் முதல் முறையாகக் காண்கிறோம். அவருடைய இளையமகன் இன்ப(ம்)த்தைப் பார்ப்பது போல் இருந்தார். அவருக்கு குழந்தை என்று இன்னுமொரு பெயர். அந்த வெள்ளைச் சிரிப்பிற்கும் பேச்சின் கள்ளமின்மைக்கும் அந்தப் பெயர் அழகுதான்.

குழந்தை..!! ஆனால் வயசு எழுபது. முன்பு மிகவும் திடகாத்திரமான வைரம் பாய்ந்த உடலுக்குச் சொந்தக்காரர் என்பது தெரிந்தது. ஆனாலும் அந்நேரம் சற்று நோயுற்று இருக்கிறாரென்பதைச் சொல்லாவிட்டால் அறிந்திருக்க மாட்டோம். இரவு ஒன்பது மணிக்கே அவர் நித்திரைக்குச் சென்று விடவேண்டியது அவசியம். இது வைத்தியருடைய அறிவுறுத்தல்.

இருந்தாலும் எங்களது வேண்டுகோளுக்கு இணங்க ஒரு பாடல் பாடினார். பாட்டோடு பாடும் விதத்தையும், அதாவது, மெட்டு மேலெழும் போதிலும் சற்றும் பிசிறு இல்லாது, மூச்சிளைக்காது, நிதானமாக, குரல் ஒரே சீராக இருக்கப் பாடும் இலாவகத்தையும் சேர்த்து இரசித்தோம்.

ஐயர்வின் பெயர்தான் குழந்தை. நாங்களோ அனுபவத்தில் குழந்தைகள். ஐயாவின் பாடல்களையோ கலானுபவத்தைப் பற்றியோ குறிப்பிடும் தகுதி, ஆற்றல் எமக்குக் கிடையாது என்பதே உண்மை. எனவே எமது சொற்களில் எமது இரசனை, வியப்புகள் என்பன மட்டுமே வெளிப்படும்.

அந்த வயசிலும் உடல் உபாதை தரும் அவ்வேளையிலும் தன்னைத் தேடி வந்தவர்களை மகிழ்விக்கப் பாடுவதென்பது அக்கலையையும், மக்களையும் மனதார நேசிக்கும் உண்மைக் கலைஞர்களால் மட்டும்தான் முடியும்.

*05-07-2009* இல் நடைபெறவிருந்த ஆறலும் ஆற்றுப்படுத்தலும் நிகழ்ச்சிக்கு அதன் பொறுப்பாளரால் பணிக்கப்பட்டபடி, ஒரு அரைமணி நேர நிகழ்ச்சியை ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தது.

மேலும் சிறார்கள் மட்டத்தில் ஒரு நாட்டுக்கூத்துப் பட்டறை, முடியுமானால் சில நாடகங்கள், இன்னும் முடியுமானால் தொலைக்காட்சிகளுக்கு வாராவாரம் ஒரு நாட்டுக்கூத்துத் தொடர்... இப்படி எங்களிடம் இன்னும் எவ்வளவு அவசர தேவைகள் உண்டு.

ஆனால் ஒருசில தவிர, எல்லாவற்றையும் அவரிடம் அப்போது போட்டுடைக்கவில்லை. ஒரு காரணம்; சுகயீனம். மற்றது, அவர் தன் பாரியாரோடு தனது ஊருக்கே திரும்புகிறார் என்கிற செய்தி.

எனவே ஐயாவையும் இளம் கலைஞர்களையும் ஒரு காமிரா முன் சந்திக்க வைப்பது என்கிற ஏற்பாட்டோடு திரும்பினோம்.

பிள்ளைகளையும், பேரர்களையும் கொஞ்ச வந்தவர்கள். கெஞ்சினாலும் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கப் போவதில்லை என்பது புரிந்தது. இலங்கை வாழ்வின் ஆபத்துக்களைக் கண்ணாற் கண்ட பின்பும், மன்னார் மண்ணின் அந்தப் புழுதி வாசத்தோடு கலந்த மூச்சை இழக்க அவர்கள் தயாராயில்லை.

செபமாலை ஐயாவின் கலையுலக வெற்றிகளுக்கு இந்த உணர்வுதான் முக்கியமான அடிப்படை போலும். இந்த உணர்வுதான் அவருடைய மூதாதையர்களைக் கூடக் காலங்காலமாக ஒரு நதியின் இடையில்லாத பாய்ச்சலாக இயங்க வைத்திருக்கிறதோ.

நதியானது சுதந்திரமாகத் தனது எல்லைகளைத் தானே தீர்மானிப்பது போல, இந்தக் கலாநதியும் காலத்திற்கேற்றவாறு தனது பாய்ச்சல்களைத் தானே தீர்மானித்தபடி சந்ததிகள் பல தாண்டி, உருண்டோடி வந்து இவரது கரங்களைச் சேர்ந்திருக்கின்றது. இவரும் தவறாது அதனை அழகூட்டுகிறார்.

சொந்தமண் மீதான உறுதியான காதலிலிருந்து ஒரு கலைஞனுடைய கலைத்துவத்திற்கு யதார்த்தமாகப் பாய்ந்து வரும் ஆக்கசக்தி அவ்வாக்கத்தின் உன்னதத்தை உறுதி செய்வது யாவரும் அறிந்ததே. அவனது ஆக்கங்களின் மீது அவனை ஆயுட்காலம் வரை களைப்பின்றிச் செயற்பட வைப்பதும், அத்தகைய ஆக்கங்களை உச்சநிலை வரை கொண்டு செல்வது கூட மீண்டும் அதே காதல்தான் என்பது ஐயாவின் கலைவாழ்விலிருந்து நாம் பெறும் மேலதிகப் படிப்பனவு.

பொருளாதாரம் போன்ற, இலகுவில் தீர்க்க முடியாத பிரச்சினைகளால் இப்படைப்புகளின் செப்ப நிலைகளில் சிறுகுறைகள் ஏற்படலாம். ஆனால் அதனுள் ஓர் உயிர்த்துடிப்பு தொடர்ந்து அதிர்ந்து கொண்டேயிருக்கும். எங்கள் காற்று வெளியின் நச்சுகளை வடிகட்டும் பாடல்கள், படைப்புகள் அத்தனையும் இதற்கு உதாரணங்கள்தானே.

செபமாலை ஐயாவின் 'வியாகுலப் பிரசங்கம்', அவருடைய தம்பி 'நாட்டார் பாடற் கலைஞர்' திரு. மாசிலாமணி அவர்களுடன் சேர்ந்து பாடிய "பாரம்பரிய தவக்காலத் திருப்பண்கள்" ஆகியவற்றில் சில இறுவெட்டுக்களைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்தப் பாடல்கள் அத்தனையும் யேசு பிரான் மாந்தர்களுக்காகப் பட்ட பாடுகளையும், யேசுவின் புகழையும் பாடுவன.

கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, வேற்று மதத்தினர், மத நம்பிக்கை அற்றவர்கள் கூட மத எல்லைகளுக்கு அப்பால் இப்பாடல்களைக் கேட்டு, இரண்டறக் கலந்து ரசிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. வயலின், கிளாறிநெற், ஆமோனியம் போன்ற வாத்தியங்கள் மிக மென்மையாக வாசிக்கப்பட்டுள்ளன. தபேலா, மிருதங்கம் போன்ற தாளவாத்தியங்களும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன.

மெட்டின் இயல்பான பரபரப்பற்ற, நிதானமான, அமைதியான அசைவுகள் அதில் இயைந்து உயிர்க்கும் மனித உணர்வுகள் - வாழ்வனுபவம் குரலில் இரண்டறக் கலந்து விடுவதாற் பெறப்படும் மெருகு - இவை எல்லாம் சேர்ந்து பாதாளக் கரண்டிபோல் ஆழ் மனதையே கிளறி விடுகிறது.

ஆனால் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க, கிளர்ந்தெழும் உணர்வுகளின் காயங்களை அது ஆற்றிக் கொண்டேயிருக்கிறது. அளவான ஒலியளவில் மனசுக்கு மருந்தாகிறது.

கலைஞர் செபமாலை ஐயாவிடம் இருப்பதும் ஏராளம். அவர் மனசும் தாராளம். எனவே புலத்திலும் சரி, புலம் பெயர் மண்ணிலும் சரி இளையோருலகம் தேடிச் சென்று அவரிடமுள்ளதைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

கலைஞர் செபமாலை ஐயாவின் கலைவாழ்வினால் பயனடைந்த பல இலட்சம் மக்களில் ஒருவனாக, எனது வயசு, தகுதி என்பவற்றைக் கடந்து, அவர் நோய்நொடி நீங்கி அவரது பாரியாரோடு நீடுழி வாழவேண்டும், மீண்டும் மீண்டும் பிரான்சு வந்து பூட்டப்பிள்ளைகளையும் கொஞ்ச வேண்டும், தமிழ் கூறும் நல்லுலகிற்கு இந்தக் கருமேகம் அவ்வப்போது மழைமழையாய் பொழியவும் வேண்டுமென்று மனதார வேண்டுகின்றேன். ■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகருக்கு வாழ்த்துக்கள்



த. தயாநிதி
பிரான்ஸ்

ஓங்கி உயர்ந்த வாழ்வில்
தாங்கிய பாத்திரம் கலைஞன்.
தூங்கிய பொழுதுகள் குறைவு.
வாங்கிய விருதுகளால்...
இவருக்கு பெருமையா! இல்லை
இவரால் விருதுகளுக்குப் பெருமையா?
இவ்வாறு தேட வைக்கும்
அற்புதக் கலைஞர் இவர்.
யார் இந்தக் குழந்தை?
இப்படிக் கேட்டால் திகைப்பா?
உண்மையில் இது தேடலில்லை.
செபமாலை ஐயாவின் நாடகங்களின்
பெயர்களில் ஒன்று இது.
அரங்கேறிய பின்னர் இவரோடு
குழந்தை ஒட்டிக் கொண்டது.
ஊர் முழுக்க குழந்தையாகி
குழந்தை ஆசிரியராகி விடுகின்றார்.
பண்டைய கலைகளின் சிதைவில்
இருந்து நாட்டுக் கூத்தினை
காத்தவர்களில் இவரும் ஒருவராவார்.
கூத்தின் தாக்கம் இவரையும்
அண்ணாவியாராக்கி விடுகின்றது.
போகாத ஊர்கள் இல்லை.
ஏறாத மேடைகளும் இல்லை.
கலையால் கூறாத செய்தியுமில்லை.
பார்த்தவர்கள் மனங்களில் பதியமாகி
வாழும் வல்லவர் இவர்.
தனது முன்னோடி தந்தையே
எனக் கூறி அவைதனில்
முந்தி இருக்கச் செய்த
முத்துக் குழந்தை இவர்.
சத்தியம் இவரது மெய்ப்பொருள்.
வித்தைகள் பயிற்சியின் விளைபொருள்.
ஒத்திகை இவரது பிராணன்.
குரல் வளம் இறை வரம்.
பரம் பொருளின் பக்தன்.
ஆன்மீகத்தில் அளவிலாப் பற்று.
இறைபணிக்கு இளைய மகனை
ஈய்ந்த பாரி. அருட் தந்தையாக்கிய
அரும் பெரும் தந்தை இவர்.
கை எழுத்தில் தலை எழுத்தை
அறிவது போல் இவரின்
பிள்ளைகளைப் பார்த்தால்
இவரைத் தெரிந்திடலாம்.
தங்களின் றோல் மொடல்
ஐயா தான் எனச்சொல்லிடும்
பிள்ளைச் செல்வங்கள் ஆனந்தன்,
இன்பம், புலத்துக்கு வாய்த்த
பெரும் புதையல்கள்...
தந்தை வழி பெரும்
கலைப் பணி புரியும்
வல்லவர்கள்.
மனைவியே இவரது வெற்றிகளின்
உந்து சக்தி உண்மையின்
தரிசனமானவர்.
கால் மணிக்குள் கல் வெட்டு
விரல் நுனியில் நல் மெட்டு
இட்டுப் பாடும் திறனுக்குரியவர்.
வாழ்க பல்லாண்டு வாழியவே!
வாழ்த்தும் வாய்ப்பு என்
வாழ்வின் படிக்கட்டு... ■

**நன்றி : கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞானி செபமாலை குழந்தை



**எஸ். சந்தியாப்பிள்ளை**
ஓய்வு பெற்ற அதிபர்,
கங்காணிதீவு,
நானாட்டான்,
மன்னார்.

இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா, அன்றைய பிரதம மந்திரி ஆர்.பிரேமதாசா, முன்னாள் வட கிழக்கு மாகாண ஆளுநர்கள், அமைச்சர்கள், மன்னாரில் வெவ்வேறு காலங்களில் கடமையாற்றிய அரச அதிபர்கள், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் சு.வித்தியானந்தன், யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள், இறைபதமடைந்த அருட்திரு. ஜி.என். ஜெயராஜசிங்கம் அடிகள் (ஜீவோதய இயக்குநர், முருங்கன் மெதடிஸ்த சபை) மன்னார் மாவட்ட முன்னாள் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு.பி.எம் செபமாலை, மறைந்த மாதோட்டப் புலவர் ம.பெஞ்ஜமின் செல்வம் (நானாட்டான்) போன்ற குறிப்பிடத்தக்க தலைவர்கள், பெரியார்கள் இவரின் கலைப்பணியைப் பாராட்டி பற்பல ஆண்டுகளில் விழாக்களிலும், நிகழ்வுகளிலும், விருதுகளும் பரிசில்களும் அளித்து பொன்னாடை அணிவித்து கௌரவித்துள்ளார்கள்.

இவருடைய மக்கள் இருவர் (ஆனந்தன், இன்பன்) லண்டன், பரீஸ் போன்ற இடங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்கள். இதனால் ஐரோப்பிய தமிழ் கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 2009இல் குழந்தையின் கலைப்பணியைப் பாராட்டி இவருக்கு 'கூத்திசைக் காவலன்' என்ற பட்டத்தினை வழங்கி பொன்னாடை போர்த்தி விழா எடுத்துள்ளது.

'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' என்ற மன்றத்தை உருவாக்கி 48 ஆண்டுகளாக அதை நிர்வகித்து இயக்குநராகவும், நடிகனாகவும், ஒப்பனைக் கலைஞனாகவும், சகல பணிகளையும் மேற்கொண்டு நிகழ்வுகளை சிறப்புறச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே. நூற்றுக் கணக்கான நல்ல கலைஞர்களை உருவாக்கியுள்ளார். தற்போது இவர் உடல் தளர்ந்த நிலையிலும் கலை நிகழ்ச்சிகளில் தானும் பங்கு கொள்ள வேண்டும் என்ற தாகம் அவரது பேச்சிலும் செயலிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் இவரது கைவண்ணத்தில் பல கலைஞர்கள் உருவாகி உள்ளார்கள் என்பது வெள்ளிடை மலை. இவர் மூலம் அரங்கேறிய நாடகங்கள் வீரத்தாய், கல் சுமந்த காவலர்கள், யார் குழந்தை போன்றவை இன்னும் மக்களின் மனங்களில் நின்று நிலைக்கின்றன. என்னைப் பொறுத்த வரையில் இவர் ஒரு பிறவிக் கலைஞன். ஒரு 'கலைஞானி'. இவர் மாதோட்ட மண்ணுக்குரிய ஒரு கலைச் சொத்து.

மன்னார் மாதோட்ட நாட்டுக் கூத்துக் கலையை நல்ல முறையில் அரங்கேற்றி ஈழத்தின் பல பாகங்களிலும் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றவர். இதனால் ஈழத்துக் கலையுலகம் பெற்ற ஒப்பற்ற கலைஞன் என திருமறைக் கலாமன்ற முக்கிய இணைப்பாளரில் ஒருவர் கூறியுள்ளார். பல நூல்களை, நாட்டுக் கூத்துக்களை புத்தக வடிவமைத்துள்ளார்.

இதைவிட இறைபணியைச் செய்வதற்கென இவரது மகன் அருட்தந்தை அன்புராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ.ம.தி) அவர்களை இறைவன் தேர்ந்தெடுத்துள்ளார். இது இவரது ஆன்மீகப் பணிக்கு கிடைத்த அரும்கொடை என்றே கூறவேண்டும். வியாகுலப் பிரசங்கங்கள், பாரம்பரிய தவக் காலப் பாடல்களை இவரது சகோதரர் கலாபூஷணம் செ.மாசிலாமணியுடன் இணைந்து இறுவட்டுக்களாக வெளியிட்டுள்ளார்கள்.

மன்னார் மாவட்டத்தில் அதுவும் மாதோட்ட மண்ணில் பிறந்தவர் ஆசிரியர் செபமாலை - கலைஞர் குழந்தை அவர்கள். சிறு வயதில் இருந்தே இறைவனால் இவருக்கு கிடைத்த கொடையைக் கொண்டும் தனது தகப்பனாரின் பணியைப் பின்பற்றியும் சமய, சமூக நிகழ்வுகளில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு கலைக்காகவும் இறைவனுக்காகவும் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்து வந்தவர்.

இவர் ஆசிரியர் பணியில் ஈடுபடமுன்னரே மறை நிகழ்ச்சிகளிலும் கலை நிகழ்ச்சிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு வாழ்ந்தார். இவர் கற்பித்த பாடசாலைகளில் இவரது மாணவர்கள் கலை நிகழ்வுகளில் முதன்மை பெற்று அனைவரினதும் பாராட்டுக்களைப் பெறுவர். நாடகம், நாட்டுக் கூத்து, வில்லுப் பாட்டுக்கள், இசை நாடகங்கள் போன்றவற்றில் பாடசாலை, கோட்ட மட்ட, மாகாண மட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்து பரிசில்களை பெறச் செய்த ஒரு திறமை வாய்ந்த கலை வளம் மிக்க ஆசிரியர். கல்வித் திணைக்களத்தைப் பொறுத்த வரையில் எல்லோருடனும் அன்புடனும், பண்புடனும் பழகும் இனிய இயல்பைக் கொண்டவர். இவரிடம் பயின்ற மாணவர்கள் குருக்களாகவும், பதவிநிலை உத்தியோகத்தர்களாகவும், அருட்சகோதரர், அருட்சகோதரிகளாகவும் தற்போது பணிகள் ஆற்றிக் கொண்டு வருகின்றனர். இவரது எளிமையான வாழ்வும், துணிச்சலான கலைப் பணியும் மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்ல அகில இலங்கை ரீதியிலும் இவரை மதிக்கப் படுகின்ற மாமனிதராக மிளிரச் செய்துள்ளது.

கல்விப் பணியும் கலைப்பணியும் ஒருங்கே இணைந்து செய்த இவரை கல்வித் துறையிலே மாணவர்கள் தொடக்கம் ஆசிரிய சமூகம், அதிகாரிகள் வரையில் செபமாலை மாஸ்டர் என்பதை விட குழந்தை மாஸ்டர் என்றே தன்னை இனம் காட்டியுள்ளார். இவர் ஒரு சிறந்த ஓட்ட வீரனுமாவார். இவ்விடயத்தில் ஒரு நிகழ்வை குறிப்பிட விரும்புகின்றேன். நாங்கள் இருவரும் இளம் ஆசிரியர்கள். நானாட்டான் மகாவித்தியாலயத்தில் முருங்கன் வட்டார விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டி. நான் சுமாராக ஓடக்கூடியவன் என்பதால் சற்றே இறுமாப்பு. போட்டி தொடங்கியது. பரிதாபம் என்னால் பிடிக்கவே முடியவில்லை. கடைசி நிமிடத்தில் ஒரு அடி இடைவெளியில் குழந்தையை முந்த வேண்டியிருந்த அந்த வினாடிப் பொழுதை என்னால் மறக்க முடியாத நினைவுகளில் ஒன்றாகப் பார்க்கிறேன்.

1983-84 காலப் பகுதியில் மன்/முருங்கன் மகாவித்தியாலயத்தில் குழந்தை பிரதி அதிபராகவிருந்த காலத்தில் நான் உதவி ஆசிரியராக கற்பித்து வந்தேன். சக ஆசிரியர்களுடன் அன்பாக பழகுவதுடன் ஒரு நடுநிலையாளராக பிரச்சினைகளை அணுகி தீர்த்து வைப்பதும் மற்றவர்களின் நேரிய கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பதும் அவரின் பெரும் தன்மையை காட்டிநின்றது.

இவருடைய பணிவும், அன்பும், எளிமையும், திறமையும், முயற்சியும், கடின உழைப்பும் இவரை ஓர் ஒப்பற்ற கலைஞனாக விளங்கச் செய்கின்றது. இவர் மேலும் பல்லாண்டுகள் கலைப்பணி புரிய வாழ்த்துகின்றேன். அதிபராக இருந்து ஓய்வுபெற்ற நிலையிலும் நூற்றுக் கணக்கான கல்வெட்டுக்களை பாடி மக்களின் துயர் பகிருவதில் கருத்தாய் இருந்தவர்- இருப்பவர்.

இறைவன் நிறை ஆசீர் அளித்து மேலும் மேலும் இளம் தலைமுறையினருக்கு ஆலோசனை அளித்து கலைப்பணியை இவர் தொடர இறையாசீர் வேண்டி பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். ■

"என்னை இறைவன் படைத்தனன் தன்னை நன்கு தமிழ் செய்யுமாறே"

– **திருமந்திரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்திசை வித்தகன் - செபமாலை பன்முக பண்பாளன்



**எம்.அரியநாயகம்**
*எழுத்தாளர்,*
*நாடக ஆசிரியர், அரங்க நெறியாளர்,*
*பிரான்ஸ்.*

*கூத்திசை பற்றியும், கூத்திசைக் கலைஞர்கள் பற்றியும், பலகலை வேந்தன் சில்லையூர் செல்வராஜனுடன் உரையாற்றும்போது மன்னார் முருங்கனில் செபமாலை – குழந்தை என்று அவர் அடிக்கடி உச்சரித்ததும் எனது நினைவிற்கு வந்தது.*

*1500களில் போர்த்துக்கேயரின் வருகையைத் தொடர்ந்து எமது தொன்மைக் கலைவடிவமான கூத்திசை புத்துயிர் பெற்றது. "மனித உழைப்பிலிருந்தே கலைகள் தோன்றுகின்றன" என்ற மார்க்சிய அறிஞர் ஜோர்ஜ் தொம்சனின் கூற்றுப்படி எமது தாயகத்தின் கரையோரப் பகுதிகளை அணிமித்து வாழ்ந்த உழைக்கும் மக்களிடம் இக்கலை வடிவம் போய்ச் சேர்ந்தது. அதனைப் பாரம்பரியமாகவும், பரம்பரை பரம்பரையாகவும், பாதுகாத்து முகம் தெரியாமலேயே மறைந்துபோன ஒப்பற்ற கலைஞர்களின் அயராத உழைப்பினாலேயே இன்றுவரை கூத்துக் கலை வாழ்ந்து கொண்டிருக்கின்றது.*

*தமிழர்களை உலகளாவிய ரீதியில் உயர்த்திக் காட்டக்கூடிய விலை மதிப்பற்ற முத்தான இக்கூத்துக் கலையை பாடி, ஆடிப், பாதுகாத்து வருபவர்களுள் முருங்கனில் முத்தாய்ப்பாய்த் திகழ்பவர் "கூத்திசை வித்தகர்" செபமாலை - குழந்தை அவர்கள்.*

*பரம்பரை, பரம்பரையாகக் கூத்திசையை மிகவும் நேசித்து அர்ப்பணத்தோடு ஆற்றிவரும் குழந்தையின் குடும்பத்தார்க்கு ஈழத்துக் கலையுலகம் என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.*

*__1970__களில் என எண்ணுகின்றேன். அப்போது வவுனியா புனித அந்தோனியார் தேவாலயத்தின் பங்குத் தந்தை பிலிப் பொன்னையா அவர்கள் யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சிகளை நெறிப்படுத்தி அரங்கேற்ற உதவுமாறு என்னை அழைத்திருந்தார்.*

*60 நடிகர்கள் வரை மிக அகன்ற அரங்கில் பங்குகொள்ளும் மிகப் பிரமாண்டமான காட்சி நிகழ்வு! அதில் பெரியகுரு என்னும் கைப்பாசின் முக்கிய பாத்திரமொன்றிற்கு பாலா என்பவரைத் தேர்ந்தெடுத்தோம். மூன்று, நான்கு தினங்களின் ஒத்திகையை அடுத்து பாலா என்னிடம் வந்து, தான் அந்தப் பாத்திரத்தில் நடிக்க விரும்பவில்லை என்றும் வேறு யாரையாவது நடிக்கவைக்கும் படியும் கேட்டுக் கொண்டார். எனக்கு வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது!*

*காரணம் கேட்டேன். அவர் சொன்ன பதில், "எங்கள் காட்சி நிகழ்விற்கு ஒரு வாரம் முன்பு முருங்கன் தேவாலயத்திலும் திருப்பாடுகளின் காட்சியை அரங்கேற்ற போகின்றார்கள். குழந்தை செபமாலை மாஸ்ரர் அதனை இயக்குவதோடு பெரியகுரு கைப்பாசாகவும் நடிக்கின்றார். அவர் ஓர் உயர்வான, உன்னதமான கலைஞர், மிகச் சிறந்த நடிகர். அவர்போல என்னால் நடிக்க முடியாது..." என்றார். அவருடைய அந்தப் பயமும், மரியாதை கலந்த பதிலும், குழந்தை ஆசிரியரைப் பற்றி நான் அறிந்திருந்ததைவிட மேலும் அவர் பற்றி தெரிந்து கொள்வதற்கான ஆவலைத் தூண்டியது!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், துணைவியார், உடன் பிறந்தோர், உறவினர், என்றில்லாமல் இன்று குழந்தையின் பிள்ளைகள் (செ.ஆனந்தன், செ.இன்பன்) பேரப்பிள்ளைகள், மருமக்கள் என நெருக்கடிகள் மிகுந்த புலம்பெயர் வாழ்விலும் இக்கலையை ஈடுபாட்டுடன் நிகழ்த்தி வருவது இவர்கள் இக்கலையை வளர்ப்பதை தங்கள் குடும்பப் பணியாக ஏற்றிருப்பதற்குச் சான்று பகர்கின்றது.

பாடகர், நடிகர், கவிஞர், எழுத்தாளர், இயக்குநர், ஆசிரியர் எனப் பன்முகத் திறமை கொண்டவர் குழந்தை அவர்கள். 1964இல் "முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்" அதனை நிறுவி, தாம் கற்றுக்கொண்ட கலைச் செல்வங்களை எல்லாம் கற்பித்து, புதிய புதிய கலை முகங்களை இன்றுவரை உருவாக்கி வரும் பெருமை இவருக்குரியது.

எழுபது வயதைத் தொட்ட பின்பும் இவரது வெண்கலக் குரல் தளராது இனிக்க இனிக்க இசை பாடுவது இவரது அயராத உழைப்பிற்கு இறைவன் கொடுத்துள்ள ஒரு வரம் என்றே சொல்ல வேண்டும்.

ஈழத்து நாடகவியலாளர்களாலும், மேன்மைக்குரியோர் பலராலும், கலைஞர்கள், ஆர்வலர்களாலும், பாராட்டுக்களைப் பெற்றவர்! பெறுபவர்! கலை உலகின் பல்வேறு போற்றுதல்களுக்குரிய பரிசில்களைப் பெற்றவர்!. சமூக அக்கறையால், ஆன்மீகப் பணியால், அன்பால், இசையால், நடிப்பால், பலபல நூறு மனங்களின் மரியாதையைப் பெறுபவர்.

தாமே எழுதி இயக்கிய இரு கூத்திசை நாடக நூல்களை அச்சேற்றி கலை உலகிற்கு பெரும் சொத்தாகத் தந்திருப்பவர்! கூத்திசை ஆர்வலனாகவும், இசை விரும்பியாகவும், இருக்கும் எனக்கு அண்மையில் இவரைச் சந்திக்கவும், பக்கத்தே இருந்து இவர் பாடக் கேட்டுச் சுவைக்கவும் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

ஆரோக்கியமான உடல் நலத்தோடு இன்னும் பல ஆண்டுகள் இவர் பணி தொடர வேண்டும் என்ற பேரவாவுடன் அனைத்துக் கலை உள்ளங்கள் சார்பாகவும் நிறைந்த மனதோடு வாழ்த்துகின்றேன். ■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**




"...எந்த நிகழ்ச்சியையும் தரமாக செய்யும் போதுதான் அதை மக்கள் ரசிப்பாங்க. அத்தோட நாம சொல்லுற செய்தி மிக முக்கியமானது. அது போய்ச் சேரவேணும் எண்டா அதுக்குப் போதிய ஆயத்தம் - பயிற்சி அவசியம். அத்தோட ஒரு நிகழ்ச்சிய செய்யும் போது நேரக்கட்டுப்பாடு மிக முக்கியமானது. கடைசி நேரம் மட்டும் இருக்கக் கூடாது. நேரகாலத்தோடே பயிற்சிகள தொடங்கி நிகழ்ச்சிக்கான ஆயத்தங்கள செய்யவேணும். இவை எல்லாம் சேரும் போதுதான் நிகழ்ச்சியில தரம் இருக்கும். அதத்தான் மக்களும் வரவேற்பாங்க"

**ஆசிரியர் குழந்தை செபமாலை**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் குழந்தையா? தந்தையா?



**அருள்பணி. பெனோ சில்வா**
B.Th.(Rome)
*பங்குத்தந்தை,*
*செட்டிகுளம், வவுனியா.*

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்று சொல்வார்கள். முருங்கன் பங்கைச் சேர்ந்த குழந்தை மாஸ்ரர் அவர்கள் 'இறைக்கலை மைந்தனாக' வாழ்ந்த ஓர் உயர்ந்த கலைஞன் ஆவார். அவரோடு பழகிய காலங்கள் வாழ்வில் மறக்கமுடியாதவை.

1994ஆம் ஆண்டு நான் தியாக்கோனாக பணி செய்த காலங்களிலே 'தேவ அழைத்தல் தினத்தை' மறை மாவட்டம் முழுவதிலும் கொண்டாட நாம் 'வேதசாட்சிகளின் நாட்டுக் கூத்தை' முதன்முறையாக மன்னார் மண்ணில் அரங்கேற்றப் புறப்பட்டோம். முருங்கன் பங்கிலே நம் அருட்சகோதரர்கள் தங்கிநின்று பயிற்சி பெற்றபோது குழந்தை மாஸ்ரர் அவர்களும், 'யோசவ்வாஸ்' நாட்டுக்கூத்தைப் பழக்கினார். அவரே யோசவ்வாஸாக நடித்தார். அவரது ஆற்றலும், கலைமேல் அவர்கொண்ட பற்றும் எமக்கு ஒரு முன்னுதாரணமானது. அது மாத்திரமன்றி நாங்களும் எவ்விதமான பயிற்சிகளைப் பெறவேண்டும் என்று அவர் எமக்கும் சில பயிற்சிகளை, அறிவுரைகளைத் தந்து வழி நடத்தியது, உண்மையிலேயே அவரது உயர்ந்த உள்ளத்தை வெளிக்காட்டியது.

## ஆள்காட்டிவெளி பங்கு

1995ஆம் ஆண்டு நான் குருவாகி, முதல் உதவிக் குருவாக ஆட்காட்டிவெளி பங்கில் பணியாற்றிய காலம். அது ஒரு போர்க் காலம். 'இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை' மேடையேற்றுவோம் என்று பங்கு மக்கள் இணைந்தபோது எனது நினைவுக்கு வந்த பொருத்தமான கலைஞன், குழந்தை அவர்கள் தான். போர்க்காலத்திலே நாம் செல்லக்கூடிய பாதை கட்டுக்கரை குளம் ஊடாகச் செல்லும் முருங்கன் பாதை ஒன்றுதான். இரவு பகலாக குழந்தை மாஸ்ரர் அவர்களை மோட்டார் சைக்கிளில் நான் ஏற்றி வருவேன். பயிற்சி முடிய நள்ளிரவாகும். ஒருநாள் நாம் பயணித்தபோது போரின் கொடுமையில் மாண்டு இரத்த வெள்ளத்தில் பார்த்த அந்த இறந்த உடல்கள் பல இன்று பார்த்ததுபோல உள்ளது. என்ன அதிசயம்...? நான் பயந்தாலும், "நாளையும் வருவேன், பயிற்சி கொடுப்பேன்... இதெல்லாம் என்ன?..." என்ற வார்த்தைகள், எமது திருப்பாடுகளின் காட்சிக்கு வெற்றியைத் தந்தது.

## அளவக்கைப் பங்கு

2000ஆம் ஆண்டு நான் அளவக்கை பங்கின் பணியாளனாக இருந்த காலத்தில், முருங்கன் கோட்டத்தில் முருங்கன், கற்கடந்த குளம், அளவக்கை இணைந்த ஒரு 'திருப்பாடுகளின் காட்சிக்கு' தயாரானோம். மீண்டும் குழந்தை மாஸ்ரரின் தயாரிப்புத்தான். அற்புதமான ஆன்மீக நிகழ்வாக அமைந்தது.

## சமூகத் தொடர்பு, கலை கலாசார மையத்தில்

மன்னார் மறை மாவட்டம் 25 ஆண்டு நிறைவில் புதியதொரு குழந்தையைப் பெற்றெடுத்தது. தனியொரு பணி மையமாக 2007இல் மலர்ந்தபோது குழந்தையினதும், அவரது குழுவினரினதும் கலைப்பணிகள் சொல்லமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதவை. ஒரு நண்பனாக, தந்தையாக, எமக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டியதை நினைக் கிறேன்.

2010இல் மீண்டும் 'உயிர்ப்பின் நம்பிக் கையில்' என்ற பெயரில் இயேசுவின் திருப்பாடு களை முருங்கன் கோட்ட கலைஞரோடு, தாழ்வுபாடு பங்கும் இணைந்து, தோட்டவெளி, ஆள்காட்டிவெளி, வேப்பங்குளம், முருங்கன் ஆகிய நான்கு மறைக்கோட்டங்களிலும் அரங் கேற்றியபோது அவரின் முக்கிய பங்களிப்பு கிடைத்தது. கலை இறைவனுக்குரியது, 'கலை வழி இறைவழி' செல்வோம் என்ற கலைஞர் குழந்தையின் வாழ்வு உண்மையிலேயே மகத் தானது.

## சர்வமத அமைப்பிலே

மன்னார் மறை மாவட்டத்தில் சர்வமத அமைப்பும், சமூக தொடர்பு மையத்தில் இணைந்தே இருந்தது. இந்தப் பணியையும் குழந்தை அவர்கள் விட்டுவைக்கவில்லை! சர்வமத நிகழ்வுகளிலே தம்முடைய கலையூ டாக மத இணக்கத்திற்கும், ஒன்றுபட்ட வாழ் விற்கும், தமது பிரசன்னத்தால், கலை நிகழ்வுக ளால் மதங்களைக் கடந்து மனித உறவை வளர்த்து விட்டார். நிச்சயமாக அவரது பணி யும், அவரது கலைக்குழுவின் பணியும் மன்னார் மண்ணில் மறக்க முடியாத பதிவுகளைச் செய் திருக்கிறது.

2011இல் நாம் தாழ்வுபாடு பங்கோடு இணைந்து 'வெள்ளியில் ஞாயிறு' என்ற பெயரில் மீண்டும் நான்கு மறைக்கோட்டங்களிலும், தாழ்வுபாடு, ஆட்காட்டிவெளி, உயிலங்குளம், கோமரசங்குளம் ஆகிய இடங்களிலும் அரங் கேற்றினோம்.

என்னுடைய சின்ன அனுபவத்திலே 10 தடவைகளிலே இயேசுவின் பாடுகளை அரங் கேற்றி இருக்கிறேன். இயேசுவின் வாழ்வை கலையாக நடிப்பது இலகுவானது. ஆனால் மனித இதயங்களை தொட்டு மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது ஒரு நற்செய்தி அறிவிப்பு என்ற அனுபவத்தைத் தந்தவர் குழந்தை மாஸ்ரர் அவர்கள்தான், அவரது எழுத்துக்கள்தான் என்பதற்கு சான்று பகர்கின்றேன்.

அவர் குழந்தையா? தந்தையா?... இரண்டுமேதான்... அவரை வாழ்த்தி விடைபெறு கின்றேன். ■

நிலையான சரதமறை நீடுழி வாழ்வாங்கு
நேர்பெற்றோங்கி நீ நிலத்தில் மரிவயிற்றில்
நித்தியனாய் உத்தமனாய் நிகரொன்றில்லா
மலையான தேவசுதன் மனமுவந்த சீடர்களில்
மகிமை போந்த மங்காத தீபமாய் மன்பதையோர்
அடிபரவும் மாண்புள்ளாளன் அலையான
அருள் பெருகும் அற்புதன் சந்தியோகையர்
அடியை வேண்டி அன்பரெலாம் படித்து மனம்
அகமகிழ பாக்களால் அமைத்திட்டானால்
கலையான கவிபொழியும் கார்மேகம் போன்றுளான்
கவின் முருங்கன் கற்ற தமிழாசிரியன்
கவிக்குழந்தை என்ற பெயர்க்கலைஞன் மாதோ.

புலவர் ம.பெஞ்சமின் செல்வம்
நானாட்டான், மன்னார்

நன்றி: இயாகப்பர் இன்னிசைப்பாடல்கள் (1967)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ கலைகள் வளர சேவையாற்றிய கலைஞன்

**சி.ஸ்ரனிஸ்லாஸ்**
B.A.,Dip.in.Ed,(Jaffna)
ஆசிரியர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



கலை இலக்கிய உலகில் ஆசிரியர் திரு. செபஸ்தியான் செபமாலை (குழந்தை) அவர் களை அறியாதவர்கள் இருக்க முடியாது. மன்னார் மாவட்டத்தில் கலைகள் களைகட்டு வதற்கும், நாடகம், நாட்டுக்கூத்து போன்றவை மங்காது மக்களின் மனதில் இடம் பிடிப்பதற்கும் பங்காற்றியவர்கள் பலர். அவர்களுள் இத்துறை யில் தனக்கென தனித்துவமான ஓர் இடத்தைப் பிடித்திருப்பவர் ஆசிரியர் செபமாலை குழந்தை என்று கூறின் அது மிகையாகாது. அவரது கலைத்துறை பற்றியும் அத்துறைக்கு அவர் அயராது ஆற்றிய பணிகள் பற்றியும் பலர் விளக் கம் தருகின்ற இச்சமயத்தில் நான் அதிலிருந்து சற்று விலகி அவரது கல்வித்துறை, சமூகத் துறைசார்ந்த பணிகள் பற்றி பகிர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சிறுவயதில், அடம்பன் றோமன் கத்தோ லிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஓர் ஆசிரி யராகக் கண்ட அனுபவம். தமிழ்ப் பாடத்தை படிப்போர் மனதில் ஆழமாகப் பதியும்படி கற்பிப் பதில் ஆசிரியர் அவர்கள் தனித்துவம் மிக்கவ ராக விளங்கினார். ஆசிரியர் மட்டில் மாணவர் கள் விருப்பம் அதிகரிக்க அவரது அதிகாரமற்ற, அடக்குமுறையற்ற, அன்பான அரவணைப்பான கற்பித்தல் முறை பெரிதும் துணை நின்றது. “எழுத்தறிவிப்பவன் இறைவனாவான்” என்ற முதுமொழிக்கிணங்க சிறார்களாகிய நாம் அவரை இறைவனாகக் கண்டு வணங்கினோம். மேலாக அவர் மாணவர் எம்மேல் காட்டிய பிரதிபலன் பாராத சேவையில் திளைத்தோம்.

ஓர் ஆசான் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இவர் ஓர் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டினார். ஒவ்வொரு மாணவன் மட்டிலும் தனியான அக்கறை கொண்டவராக அம்மாணவனின் குடும்ப விபரங்களைக் கேட்ட றிந்தது மட்டுமன்றி அக்குடும்ப அங்கத்தவர் களுடனான தனது தொடர்புகளை வலுப்படுத் திக் கொண்டார். அவ்வாறான உறவு நிலைகள் இன்றும் ஒரிருவருடன் தொடர் கதையாக தொடர்கின்றது. அதற்கு நானும் எனது குடும் பத்தினரும் சிறந்த உதாரணம்.

இறைவனால் கொடுக்கப்படும் கொடை களில் மிகச் சிறந்தது நட்பு. “செயற்கு அரிய யாவுள நட்பின்” என்று கேட்கும் வள்ளுவனின் வினாவுக்கு நட்பு, நட்பு என்றுதான் சொல்ல முடியும். அத்தகைய நட்புக்கு உதாரண புருஷ ராக அக்கால கட்டத்தில், ஒருவரைக் காட்ட முடியுமென்றால் இவரையே கூறலாம். தன் இனத்தை மாத்திரமல்லாது தமிழ் இனத்தையே மறந்துவிடாத பெருந்தகையாளன் எமது அன்பிற் குரிய ஆசிரியர்.

இவ்வுலகில் இணையில்லாத் தொழில் ஆசிரியத்தொழில். வேறெந்தத் தொழிலோடும் சற்றும் ஒப்பிட்டுக் கூற முடியாத அளவிற்கு ஆசிரியர் பணி பண்பானது, பணிவானது, பக்குவ மானது. இத்தகைய சமூக அந்தஸ்த்துப் பெற்ற ஆசான் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டு மென்பதற்கு சில வரையறைகள் உண்டு. அறிவில் சிறந்தவராகவும், நேர்மை தவறாது கடமையை ஆற்றுபவராகவும், அன்பு, நீதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம், சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, நடுவுநிலைமை, புதியன வழங்குதலில் தனிச் சிறப்பு என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அதனால்தான் சான்றோர் மாதா, பிதா, குரு தெய்வம் என்பதில் தெய்வத்துக்கு முதல்படியாக ஆசிரியரை வைத்துள்ளனர். இத்தகைய குணங்களை தன்னகத்தே கொண்டுள்ளவராக ஆசிரியர் அவர்களை நான் காண்கிறேன். இது விடயங்களில் அவரது பண்புகளை சுவைத்து மிருக்கின்றேன்.

"ஒரு நாட்டின் எதிர்காலமே வகுப்பறைக்குள் தான் அமைகிறது" என்று கூறுகிறார் கல்வியல் அறிஞர் கோத்தாரி என்பவர். மாணவர்கள் தாம் வாழும் வீடு, குடும்பத்திலிருந்து பல்வேறு நடத்தை கொண்டவர்களாக ஆசிரியரிடம் வந்தடைகின்றார்கள். தாய்க்கு நிகரான அன்புடன் அச்செல்வங்களின் மனநிலை, தேவைகள் அறிந்து கல்வி புகட்டுவதே ஆசிரியரின் கடமையும் பொறுப்புமாகும். பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து வரும் பிள்ளைகளை அறிந்து கல்லைக் கனியாக்குவதும், முள்ளை மலராக்குவதும் ஆசிரியரைப் பொறுத்தே அமைகிறது.

ஆசிரியன் பெற்றோராக, நண்பராக, வைத்தியராக, வழிகாட்டியாக, ஆலோசகராக, முகாமையாளராக செயற்பட வேண்டுமே யொழிய தண்டிப்பவராக இருக்கக்கூடாது. ஆசிரியர் அவர்கள் பிரம்பால் மாணவர்களை பிரமைப்படுத்தியது கிடையாது. தண்டனை வழங்கி மாணவர்களை வழிப்படுத்தியது தெரியாது. நட்புடன், அன்புடன் மாணவர்களை அணுகி அன்பு செலுத்திய நினைவுகளே இனிக்கின்றன.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்பது வள்ளுவப் பெருந்தகையின் பொன் வாக்கு. ஆசிரியர் தோன்றினார். ஆசிரியராக வேரூன்றினார். பலருக்கு நிழல் தந்தார். அறிவுப் பசி போக்கினார். எடுத்த காரியத்தை நேர்த்தியாகவும் வெகு விரைவாகவும் செய்து முடிக்கும் வாண்மை பெற்றவராக விளங்கினார். தாம் அழிய நேர்ந்தாலும் பிறர் துயர் துடைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட பெருந்தகையாளர்கள் இருப்பதால்தான் உலகு இயங்குகிறது. ஒருவன் அல்லலுற்ற காலத்தில் அவன் அல்லலை நீக்கி, சமூகத்தின் அறிவுப் பசியைப் போக்கி அனைவருக்கும் நன்மையையே செய்த இவர் எம்மூர் மருத்துவரல்லவா?

கலை என்பது ஒரு சமூக, அழகியல் நிகழ்வு ஆகும். ஒருவர் தான் அனுபவித்த உணர்வை பிறருக்கு வியாபிக்கச் செய்வதே கலையின் செயல். கலைஞன் ஒரு சமூகத்தின் ஓர் அங்கத்தவனாக, ஒரு சமூகப் பிராணியாக வலம் வருகின்றான். அவன் தன் சமூகத்துடன் கொண்டுள்ள உறவின் தன்மைக்கேற்பவே ஆக்கங்களை ஆக்குகின்றான். அதாவது வாழும் காலமும் சமூக நிலைமைகளும் அளிப்பன பற்றியே கலைஞனால் அனுபவிக்க முடிகிறது.

மனிதனது சமூகப் பிணைப்புக்கள், உறவுகள், குறிப்பிட்ட சூழலில் மனிதர்களது வாழ்க்கை நடவடிக்கைகள், அன்றாடப் பிரச்சினைகள், சம்பவங்கள் போன்ற சமகால சமூகம் தரும் அனுபவங்கள் கலைஞனது ஆக்க நுண்திறன்களைப் பாதிக்கின்றன. அந்தவகையில் ஆசிரியர் தனது பணி வாழ்வின் அனுபவங்களைக் கொண்டு தனது வாழ்நாளில் கலைத்துறைக்கு ஆற்றிய பணிகளும் மறப்பதற்கில்லை. தமிழ் வாழ, கலைகள் வளர கலைஞனாக அவர் ஆற்றிய சேவைகள் காலத்தால் அழியாதவையாகும். பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய கலைக் காவியமாகும்.

"ஆண்டவரே உமது வல்லமையில் அரசர் பூரிப்படைகின்றார். நீர் அளித்த வெற்றியில் எத்துணையோ அவர் அக்களிக்கின்றார். அவர் உள்ளம் விரும்பியதை நீர் அவருக்குத் தந்தருளினீர். அவர் வாய்விட்டுக் கேட்டதை நீர் மறுக்கவில்லை.

உண்மையில் நலமிகு கொடைகள் ஏற்றி நீர் அவரை எதிர் கொண்டீர். அவர் தலையில் பசும் பொன்முடி சூட்டினீர். அவர் உம்மிடம் வாழ்வு வேண்டி நின்றார். நீரும் முடிவில்லா நீண்ட ஆயுளை அவருக்கு அளித்தீர். நீர் அவருக்கு வெற்றியளித்ததால் அவரது மாட்சிமை பெரியதாயிற்று" (தி.பா. 21: 1-4).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஒரு மனிதனை உருவாக்கும் போது ஒரு நோக்கத்துடனேயே உருவாக்கி, பலதரப்பட்ட திறமைகளை அளித்து, அம்மனிதன் ஊடாக தமது நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றார். ஆசிரியர் அவர்களை உருவாக்கிய போதும் பல போற்றப்படக்கூடிய திறமைகளை அவருக்கு அளித்ததன் மூலமும் இறைவன் தனது நோக்கத்தை அடைந்து விட்டான் என எண்ணத் தோன்றுகிறது. "இதனை - இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற குறளின் வழிகாட்டலின் படியும் இறை சித்தத்தின் படியும் இறை வழிநடத்தலின் படியும் ஆன்மிக வாழ்வில் அவர் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையிலும் அவர் தன் பயணத்தைத் தொடர்ந்தமையால் இன்றும் இறைமகனின் மகன் என்ற மகிழ்ச்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மேலும், இவரின் நல்லறச் செயல்களுக்கு துணைபோகும் அன்பு மனைவி, மக்கள் அவருக்கு இறைவனால் வழங்கப்பட்ட மிகப் பெருஞ் செல்வங்களாகும். இல்லறத்தில் அமைதியும் ஆனந்தமுமே ஆசிரியரவர்கள் வையத்துள் வாழ்க்கையை நிறைவாக்கியது என்பதே யாமறிந்த மாபெரும் உண்மையுமாகும். ஆசிரியர் அவர்கள் எதிர்காலத்தில் மேலும் சாதனைகள் பல படைக்க, தமிழ் பேசும் எம்மினத்தவர்க்கு இனிய தமிழ் மகனாக இனிதே பல சேவைகள் புரிய இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அவர் பாதம் சமர்ப்பிக்கின்றேன். ■

---



***"நாம் எத்தனை வகையான சமூக, நாட்டிய, நவீன நாடகங்களையும் செய்யலாம். ஆனால் நம்மை அடையாளப்படுத்துவது நாட்டுக்கூத்துத்தான். நாம் அறிமுகமானதும் நாட்டுக்கூத்தால்தான்."***

**குழந்தை செபமாலை**

**அதிபர் உயர்திரு எஸ்.வேதநாயகம்...**

**1981ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 18ஆம் (பதினெட்டாம்) திகதி முருங்கன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக மன்னார் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.எம்.சிமியாம்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்துள்ளார்.** பாடசாலை அதிபர் திரு எஸ்.வேதநாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அதிபர் அறிக்கையில், "மேலும் மாண்புமிகு பிரதமர் மன்னாருக்கு வந்தபோது எமது மாணவர்கள் கவினுறு கலை நிகழ்ச் சிகளை வழங்கி அந்நாளைச் சிறப்பித்தமையையும் குறிப்பிட விரும்புகின்றேன். இவற்றிற் கெல்லாம் அடிநாதமாக இருந்து எமது பாடசாலையின் கலை வளர்ச்சிக்காக உழைத்து வருபவரும், எனது உப அதிபருமான திரு. எஸ்.செபமாலை அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு, அவருக்குதவியளிக்கும் ஆசிரியைகள் திருமதி எஸ்.ஏ.சில்வா, செல்வி ஐ.தம்பையா ஆகியோருக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்" என விதந்துரை செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட குழந்தை மாஸ்டர்



**ப.செபமாலை எமில் குலாஸ்**
*ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*மன்னார்.*

"குழந்தை மாஸ்டருடைய நாடகம் நடக்கிறதாம், சிறந்த நாடகமாம், பல பரிசுகள் பெற்றவராம், கலை நிகழ்வென்றால் சிறப்பான நிகழ்ச்சியாகத்தான் இருக்கும்" என்று பலரும் சொல்லி என் காதால் கேட்டிருக்கின்றேன். அப்படியான ஒரு மாஸ்டரைக் காணவேண்டும் என்று பல நாட்களாக நான் ஆசைப்பட்டேன். அதற்கமைவாக எனது ஆசிரிய நியமனம் 1971இல் நிகழ்ந்தபோது முருங்கன் மகா வித்தியாலயத்தில் கடமை ஏற்றபோது அவரும் அங்கு கடமை ஆற்றிக்கொண்டிருந்தார். அங்கு விசாரித்த போது, 'இவர்தான் குழந்தை மாஸ்டர்' என்று எனக்குச் சொன்னார்கள். அரைக்கை ஷேட்டும், வேட்டியும் உடுத்தியிருந்தார்கள். அவரை அணுகி, "நீங்கள் தானே குழந்தை மாஸ்டர்" என்று கேட்டபோது "ஆம்" என்று கூறினார். நானும், "வங்காலை அதிபர் பர்ணபாஸ் குலாஸ் அவர்களின் மகன்" என்று சொன்ன போது, "அப்படியா! உங்கள் அப்பா எங்கள் ஆசிரியர் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியானவராய் இருந்திருக்கிறாரே. அவரின் மகனா? அவரும் இப்பாடசாலையில் கடமை ஆற்றியிருக்கிறார். அவரைப் போல நீங்களும் ஒரு சிறந்த ஆசிரியராக வளர வேண்டும்" எனத் தட்டிக்கொடுத்தார்கள்.

நானும் அவரிடம், "சேர் உங்கள் கலைத்திறமையைப் பற்றிப் பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். உங்கள் நாடகம், வில்லுப்பாட்டு என்பவைகளைப் பார்க்க வேண்டும் என்று பல நாட்களாக ஆசையாய் இருக்கிறது. எப்போது உங்களது நாடகங்களை என்னால் பார்க்க முடியும்" என்றெல்லாம் ஆவலாய்க் கேட்டேன். அவர் அவைகளைப் பற்றி எல்லாம் பெரிதாகக் கூறாமல், "எனக்கு ஒரு மன்றம் உண்டு, அந்த மன்றத்தை மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்து வருகின்றேன். கலை கலாசார நிகழ்வுப் போட்டிகள் வரும் போது நாங்கள் பங்கு பற்றுவோம்" என்று கூறினார். எனினும் எனது முருங்கன் பாடசாலைக் கடமை குறுகியகாலம், ஒரு வருடமாய் இருந்தபடியால் அவரது கலை கலாசார நிகழ்வுகளைக் கண்டு ரசிக்க முடியாத துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது.

பிற்பாடு நாங்கள் ஆசிரியர்கள், ஆசிரிய சங்கக் கூட்டங்களில் கண்டு கொண்டாலும் இவருடைய கலைத் திறமையை ஒட்டி இவருடன் கதைத்து நாடகங்களைப் பற்றிய சில நுட்பங்களையும், பாடல் இராகங்களையும் கேட்டுக்கொள்வேன்.

ஆசிரியர்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களை அவர் ஒரு போதும் தவறவிடமாட்டார். பல கூட்டங்களில் கலந்து கொண்டாலும் தன்னுடைய கலைத்திறனுக்குக் கிடைத்த வெற்றிகளையோ, பரிசுகளையோ, யாரும் பாராட்டினாலும் அதைப் பெரிதுபடுத்தி தற்பெருமை கொண்டதை நான் கண்டதில்லை.

ஆசிரியர்கள் ஞான ஒடுக்கம் மடுவில் நடந்தபோதெல்லாம் தவறாமல் சமூகம் கொடுத்திருக்கிறார். திருப்பலி வேளையின் போதோ, வேறு வேளைகளிலோ சற்றும் தயங்காமல், பாடல்களை ஆரம்பித்து பாடி முடிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர் பங்குபற்றினாலும் சரி பங்கு பற்றாவிட்டாலும் சரி அப்பாடல்களை பிழை யின்றிப் பாடுவார். அத்தகைய பாடல் புத்த கங்கள், ஆயத்தங்களுடன்தான் எப்போதும் இருப்பார்.

இவ்விடைப்பட்ட காலங்கிளில் நான் பார்த்து ரசித்த நாடகங்கள் இரண்டு. ஒன்று கோவலன் கண்ணகி, மற்றையது யார் குழந்தை. கோவலன் கண்ணகி நாடகம் 1990 ஆக இருக்கலாம். கண்ணகி மதுரையை தன் சீற்றத்தால் எரிப்பதை நாடக அரங்கிலே அதற் கென ஒரு விசேட திரை அமைத்து அதை எரித் துத் தத்ரூபமாக காட்டப்பட்டவேளை எனக்கு உண்மையில் பாடசாலை அரங்கில் நெருப்புப் பிடித்து விடுமோ என்ற பய உணர்வு ஏற்பட்டது.

அதைப்போல் யார் குழந்தை என்ற நாடகத்தையும் ஒரு போட்டி நிகழ்ச்சியின்போது பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அதுவும் 1990ஆம் ஆண்டளவில் ஆகும். அப்போது குழந்தையை வெட்டும் காட்சியில் குழந்தையைத் தூக்கி வீசும் காட்சி. அதில் குழந்தை வீசப்பட்டது. அது உயிரற்ற குழந்தை யல்ல நிஜமான குழந்தை. யார் குழந்தை நாடகத்தில் வீசப்பட்ட குழந்தை யாருடைய குழந்தையோ சில வேளைகளில் குழந்தை மாஸ்ரருடைய சொந்தப் பிள்ளையோ தெரிய வில்லை. நானும் குழந்தை வீசி வீழ்ந்தபோது உண்மையில் பயந்து போனேன். குழந்தைக்கு ஏதும் ஆகிவிடாத விதத்தில் நாடகங்களை மேடை ஏற்றும் திறன் அவருக்கு இருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு கலை நிகழ்வுப் போட்டி என்றால் பல மாதங்களாக நடிகர்களை வரச்செய்து இரவிரவாகப் பயிற்சி வழங்கி தன்னுடைய நேர காலங்களை கலைக் கெனவே அர்ப்பணித்துள்ளார்.

இவருக்கு இறைவன் வழங்கிய கொடை கள் நான்கைச் சிறப்பாகக் கூறலால் கவிதைகள் எழுதும் திறன், எழுதிய கவிதைக்கு இசை வடிவம் கொடுக்கும் திறன், கவிதை ராகத்தை ஆர்மோனியத்தில் வாசிக்கும் திறன், தான் நடிக்க இருக்கும் பாத்திரத்திற்கேற்ப தோற்றம், நடிப்பை அமைத்துக் கொள்ளும் திறன்.

பாடசாலையிலோ, பங்கிலோ, சமூகத் திலோ, வரவேற்பு நிகழ்வோ, பிரியாவிடை நிகழ்வோ, எதுவாயிருந்தாலும் பாடலை, கவிதையை, சொற்பொழிவுகளை எழுதுவதற்கு அதிக நேரம் தேவைப்பட்டிருக்குமோ தெரிய வில்லை. குறுகிய நேரத்தில் அமைத்துக் கொள் வார். அந்நிகழ்வுகளை உரியவர்கட்கு பழக்கிக் கொடுப்பார்.

ஆசிரியர் குழந்தை ஒரு **Sports - man.** ஒரு முறை 1975 அல்லது 1976ஆக இருக்கலாம். ஆசிரியர்களின் விளையாட்டுப் போட்டி நானாட் டான் விளையாட்டு மைதானத்தில் நடைபெற் றது. 100 மீற்றர் ஓட்டம். பல ஆசிரியர்கள் பங்குபற்றினர். ஆசிரியர் குழந்தை அவர்களும் பங்குபற்றினார்கள். இறுதித்தூரத்திலே கடும் போட்டியாக இருந்தது. இருவருக்கிடையில் ஒருவர் ஆசிரியர் எஸ்.சந்தியாப்பிள்ளை, அடுத் தவர் இந்தக் குழந்தை மாஸ்டர். மிகவும் கடுமையான போட்டி. யார் வெல்லுவார் என்ற ஆதங்கம் பார்வையாளர்கள் மத்தியில். இருவ ருக்கும் பலத்த கரகோசம் கிடைத்தது. இறுதி யாக ஆசிரியர் திரு.சந்தியாப்பிள்ளை சிறிது நூலிடை மீற்றருக்கும் குறைவான இடைவெளி யிலேயே முந்தியிருப்பார் என எண்ணுகிறேன். இப்படி அவர் பங்குபற்றும் போட்டிகளில் வெற்றியே பெறுவார்.

கடந்த ஐந்து வருடங்களுக்குள் வியாகுல பிரசங்கம் ஆலயங்க்ளிலே ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பப்படுகிறது. மிகவும் அருமையாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலி பரப்பப்படுகிறது. தரமான தயாரிப்பு என்றே கூறவேண்டும். இதற்கு இவரின் பங்களிப்பு மகத்தானது.

இவருடைய விருந்தோம்பல் தன்மை என்னை மிகவும் கவர்ந்திருந்தது. அவரது பாடசாலைக்குச் செல்கின்ற வேளைகளில் மிகவும் அன்பாய் வரவேற்று உபசரிப்பார். அதேபோல் அவரது வீட்டிற்கும் பல தடவைகள் சென்றிருக்கின்றேன். சலிப்பின்றி சிற்றுாண் டிகள், உணவு வகைகளை இன்முகத்துடன் வழங்கி உரையாடுவார். அவரது துணைவி யாரும் ஆசிரியரது குறிப்பறிந்து வருபவர்களை உபசரிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கொத்தணி அதிபராகப் பாடசாலையைத் தரிசித்த போதெல்லாம் அதிபருக்குரிய பாங்குடன் கடமைகளைச் செய்து கொண்டிருப்பார். அவரது காலத்தில் பாடசாலையில் லீவு எடுப்பது அரிதாகக் காணப்பட்டது. தனது சுகவீனம் அல்லது வீட்டில் யாரினதும் சுகவீனம் என்றால் மட்டும்தான் லீவு எடுத்திருப்பார் என நினைக்கின்றேன்.

அவரது வாழ்க்கையில் ஆசிரிய அதிபர் கடமைகளை ஒழுங்காகச் செய்த படியினாலே இறைவன் அவரை நன்கு ஆசீர்வதித்து ஒரு குருவை, இரண்டு ஆசிரியர்களை என்று அனைத்துப் பிள்ளைகளையும் நல்ல நிலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இவரது வாழ்க்கை கலையென்றே நினைக்கின்றேன். கலையை எப்படி வளர்க்கலாம் என்ற எண்ணமே மனதில் ஓடிக் கொண்டிருந்தது. அவரது கடும் உழைப்பிற்குச் சான்றாக அவர் பல பட்டங்கள் பெற்றிருக்கிறார்.

கலையை அவரிடமிருந்து பிரிக்க முடியாது என நினைக்கின்றேன். நித்திரையிலும், கனவிலும்கூட தனது மன்றத்தை வளர்க்கும் சிந்தனையைத்தான் கொண்டிருப்பார் என நினைக்கின்றேன். இவரது கலை நிகழ்ச்சிகள் எமது மன்னார் மாவட்டத்தை இலங்கை நாட்டில் ஒரு பிரபல்யமாக ஆக்கியுள்ளது. எத்தனையோ இவரின் கலை நிகழ்வுகள் பல இடங்களில் மன்னாரைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு பரிசுகளையும் தட்டிக்கொண்டு மன்னார் மாவட்டத்திற்கு புகழ்தேடிக் கொடுத்துள்ளன.

இவரது கலையார்வத்தாலும் கடும் முயற்சியாலும் எமது மாவட்டம் இலங்கை மட்டத்தில் பெயர் எடுத்திருக்கின்றது.

வாழ்க இவரது முயற்சி,
வளர்க இவரது பணி. ■

**பீ. எம். செபமாலை**
**தவிசாளர், மன்னார் அபிவிருத்திச்சபை.**

## ஆசிச் செய்தி

ஆசிரியர் 'குழந்தை' என்றால் மன்னார் மாவட்டம் நன்கு தெரிந்த சிறந்த கலைஞன். முருங்கனில் முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கி, அதன்மூலம் இலங்கையின் பலபாகங்களிலும் நாடக, நாட்டுக் கூத்துக்களை மேடை ஏற்றி, எமது மாவட்டத்தின் கலைத்திறனை வெளி இடங்களுக்கு எடுத்துக்காட்டி பல பரிசில்களைப் பெற்ற பெருமை இவருக்குரியது.

நாடகத் துறையில் மட்டுமல்லாது, கவிதை, கட்டுரை, இலக்கியத் துறையிலும் இவர் தனது பங்கைச் சிறப்பாகச் செய்துள்ளார். 1961ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது இவரது உணர்ச்சிகரமான பாடல்கள் போராளிகட்கு உந்துசக்தியாக விளங்கின. இந்த சத்தியாக்கிரகத்தின் மூலம்தான் குழந்தை எனும் புனைப்பெயர் உருவாகியது.

புலவனாக, ஆசிரியனாக, கலைஞனாக, நாடக நடிகனாக திரு. குழந்தை அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டுகள் பல. கலையார்வம் கொண்ட தமிழ்ப்பேசும் மக்கள் மனதில் 'குழந்தை' என்றும் குழந்தையாக வாழட்டும். இவரது கலை இலக்கியப்பணி தொடர, எனது வாழ்த்துகள்.

வாழ்க கலை!
வளர்க கலைத்தொண்டு!

**நன்றி: கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் கொடுத்த வரம் கலைக் குழந்தை

**ச.யேசுதாசன்**
*B.Ph.,B.Th.(Rome)*
மனிதநேயப் பணியாளன்,
கற்கிடந்தகுளம்,
மன்னார்.



## முன்னுரை

திரு. செபமாலை குழந்தை அவர்கள் 1983 தொடக்கம் 2000 வரை கற்கிடந்த குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக கடமையாற்றியபோது அவரின் குணாதிசயங்கள் சிறப்பம்சங்கள் பலவற்றைப் பார்க்கவும், கேட்கவும், அனுபவிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அக்காலப் பகுதியில் எனது அம்மாவின் தகப்பனார் நான் வீட்டில் ஏதும் குழப்படி செய்தால் நேரடியாகவே பாடசாலை வந்து இவரிடம் முறைப்பாடு செய்யுமளவுக்கு மக்களுடன் நெருக்கமானவராக இருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய காலத்தில் இரண்டு வருடங்கள் பெற்ற அறிவு, அனுபவம் அனைத்தும் தனியானவை. அவற்றுக்கான பிரதிக்கடனாக இம் முயற்சியை வழங்குவதில் பெருமையடைகிறேன். அத்துடன் இவருடைய திறன், பயன், சேவை அனைத்தையும் தென்படும் கோணத்தில் மாத்திரம் நோக்கி அவற்றின் விசாலத்தை குறுக்கிடாது பல திசைகளில் நோக்குவதற்கான முயற்சியின் இயலாமையால் விளைந்ததுதான் இச்சிறிய தொகுப்பு.

இவரின் கலைத்தொண்டு பற்றி எனக்கு மட்டுமன்றி கலைவளம் கொண்ட கனவான்கள் யாவரும் அறிவார்கள். ஆனால் இப்பெரியவரின் தமிழ்தொண்டு பற்றி அறியவேண்டுமென்ற ஆர்வம் ஏதோ ஒரு ஊக்குவிசையினால் உந்தப்பட்டமையால் உதயமான சிந்தனையின் போக்கில் அவருடைய வீட்டை நோக்கி 09.10.2011 மாலை புறப்பட்டேன். புலப்பட்ட விடயங்களும் கீழே பதிவாக்கப்பட்டுள்ளன, வரலாற்றை நினைவாக்கிக் கொள்வதற்காய்.

## பாடசாலைப் பணி

எமது பாடசாலை கலைத்துறையில் மிளிர்வதற்காக அரும் பாடுபட்டவர்களில் இவர் முதன்மையானவராக கருதப்பட வேண்டியமைக்கு பல ஆதாரங்களும், காரணங்களும் நிலைத்திருக்கின்றன. இவருடைய 'ஒளி பிறந்தது' எனும் நாட்டுக்கூத்து நாடகத்தில் நான் ஏரோது பாத்திரமேற்று நடித்த நினைவுகள் கண்ணுக்குள் நிழலாடுகிறது இப்போ. 'தம்பி பாட்டு இருக்கணும் அல்லது கூத்து இருக்கணும்' எனும் வழிப்படுத்தல் விழிகளை விரிக்கிறது. இவருடைய குரலின் இனிமையும், கூத்தின் லயமும் சிறுவர் எங்களைப் பிரமிக்கச் செய்தது. அன்றைய நிகழ்வுகளை இன்று நினைவுகளால் மீட்டுகையில் இதயம் இப்பொழுது இறைவனைத் துதிக்கிறது. அற்புதமான அந்த அனுபவங்களை பாக்கியமாய் கருதுகிறேன். மாகாண மட்டத்திலான நாடகப்போட்டி, பாட்டுப்போட்டி என்பவற்றுக்கு ஆயத்தப்படுத்துவதற்கு பாடசாலை நேரம் போதாதபோது அனைத்து மாணவ மாணவிகளையும் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று இரவு முழுவதும் பழக்கி, உணவு தந்து, உறங்கச் செய்து முழுத்திருப்தியுடனே மறுநாள் அழைத்துச் செல்லும் அர்ப்பணிப்பாளர். நாடகம், பாட்டு என்பவற்றை பழகிய பிற்பாடு இடைநிறுத்திவிடும் மாணவர்களின் பின்னால் சென்று பணிவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அழைத்து நிற்கும் பண்பாளன், பெருந்தகை. கலையில் களைத்திடாமல் வெற்றியில் திழைத்திடாமல் கொடுப்பதில் முழுமையை எதிர்பார்க்கும் திறமையாளன் என்பதற்கான ஆதரங்கள் இவை.

இவருடைய காலப்பகுதியில் எமது பாடசாலை மாணவ மாணவிகள் பல்வேறுபட்ட நாடகப்போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொண்டதுடன் பலதரப்பட்ட மேடையேற்றங்களையும் கண்டமைக்கான வரலாற்றுச் சான்றுகள் பலவுள்ளன.

இதற்கும் மேலாகச் சொல்வதானால் இவருடைய காலப் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் தமிழ் விழாவிற்கும் திருகோணமலை, மட்டக்களப்பு என்று மாணவர்கள் சுற்றிவந்தார்கள். கலைக்குள் வளர்க்கப்பட்டார்கள். கூத்துக்கலையினை ஆர்வமுடன் கற்றுக்கொண்டார்கள். கலை உலகத்திற்கு பல மாணவர்கள் அறிமுகம் செய்யப்பட்டமையால் ஆர்வம் நிறைந்த சில மாணவர்களுக்கு கலை உலகம் சிறப்பானதாய் அமைவதற்கான அத்திவாரமானது.

17 வருட பணிக்காலத்தில் கலைத் துறையில் மட்டுமன்றி கற்றல், விளையாட்டு என்று பல துறையிலும் மாணவர்களை வளர்த்தெடுப்பதற்காய் கடுமையாக உழைத்தார். வருடாந்த விளையாட்டுப் போட்டியினை தவறாது நடத்தி வெற்றி கண்டார். அழைக்கப்பட்ட அதிகாரிகள் சமூகமளிக்கத் தவறினாலும் முன்னெடுத்த செயற்பாட்டினை செய்து முடிப்பதில் தீவிரமானவர் என்பதை உணர்த்திய சந்தர்ப்பங்களும் உண்டு. எமது கிராமத்தின் இன்றைய இளையோர் விளையாட்டுத்துறையில் விற்பனர்களாய் விளங்குவதற்கு இவருடைய பங்களிப்பும் இருந்துள்ளதை மறுக்க முடியாது.

## மக்களுக்கான கலைப்பணி

தனது பாடசாலைப் பணிக்கு அப்பால் எமது கிராமத்து மக்களின் பாரம்பரிய வாசாப்பான 'சற்பிரசாத வாசாப்பு' அரங்கேற்றத்துக்கான ஆக்கமும் ஊக்கமும் வழங்கியவர். கற்கடந்தகுளம் தொடர்பான நாடக அனுபவங்கள் பற்றி அவரிடம் கேட்டபோது, "முன்னேற்றப்



பாதையை நோக்கி நகர்வது தென்பட்டது. மந்தநிலையில் இருந்தது. அவ்வளவு தீவிரம் இல்லை. நான் வெளியேறிய காலப்பகுதியில் மிக்க ஆர்வமாகவும் ஆச்சரியப்படத்தக்க வகையிலும் கலையில் தென்பட்டார்கள்."

பாடசாலையில் இருந்து வெளியேறிய பிற்பாடும் இவருடைய கலைத்தொடர்பு எமது கிராம மக்களுடன் இருந்தது. சற்பிரசாத வாசாப்புக்கான கூத்துப் பழக்கத்திற்கு அழைக்கப்பட்டார். அரங்கேற்றத்திற்கு பல தடவைகள் பின்னிருந்து ஊக்கம் கொடுத்ததை மறக்க மாட்டார்கள் ஊரவர்கள்.

## மக்களுக்கான ஆன்மீகப் பணி

பாடசாலை, கிராமத்து மக்களின் கலை வாழ்வு என்பவற்றினையும் தாண்டி அவர்களின் ஆன்மீக வாழ்விலும் பங்கெடுத்துள்ளமை இக்கிராமத்து மக்களின் பரந்துபட்ட வாழ்வோட்டத்தில் இவரின் பங்களிப்பு புலனாவதற்கு ஆதாரமாய் இருப்பது.

தற்போது எமது கிராமத்து தூசையப்பர் திருவிழாவுக்கான சுற்றுப்பிரகார வேளையில் பாடப்படும் கவி வரிகள், கருத்துடன் எழுதி இறையைக் கவரும் இராகம் பொருத்தி பெருக்குடன் ஆசீர் இக்கிராமத்தில் இறங்க இறைஞ்சியவர்.

இன்று இக்கிராமத்து மக்கள் கலையில் எழுச்சியும், கல்வியில் உயர்ச்சியும், விளையாட்டில் உத்வேகமும் கொண்டிருப்பதற்கு தமது உழைப்பினை உரமாக்கி உறுதியான அத்திவாரமிட்டவர்களில் இவரும் ஒருவர் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப்பணி

கலை எனும் உலகுக்குள் மாத்திரம் உலா வரும் கதாநாயகனாக, கனவானாக நான் அறிந்திருப்பதுபோல் பலரும் அறிந்திருப்பதில் சந்தேகமில்லை. அந்த சோகத்தைக் கலைத்து இன்றைய தலைமுறையை அன்றைய வரலாற்றுக்கு அழைத்துச் செல்கிறேன்.

வருத்தம் அவரைப் பீடித்து ஞாபகத்தை பறிப்பதற்காக போராடிக்கொண்டிருந்தாலும் உள்ளத்து உறுதியால் நினைவுகளை சுமந்து வாழும் அதிசயத்தை வார்த்தைகளால் நிதர்சனமாக்கினார். சாதனையாளர்களால் சாதிக்கப் பட்ட சாதனைகளை அடைவதற்கான போராட்டத்தில் ஏற்பட்ட அனுபவங்களை அந்தச் சாதனையாளர்களின் நேரடிப்பகிர்தலுக்கு செவிமடுக்கும்போது அவர்களின் உணர்வுகள், நினைவுகள் அத்தனையும் உயிர்பெறுகிறது. அந்தவகையில் தமிழுக்கும், தமிழ் மக்களின் உரிமை வாழ்வுக்கும் தான் ஆற்றிய பணிகளை மேற்கொண்ட அர்ப்பணங்களை அருகிருந்து கேட்டபோது மயிர்க்கணுக்கள் விறைத்துக் கொண்டன.

உரிமை மறந்தவர்களாய், அநீதருக்கு துணையானவர்களாய் அறிவிழந்து மனிதர்கள் வாழ்ந்த காலத்தில் நாளைய தலைமுறை தலை நிமிர்ந்து தன்மானத்துடனும், முழு உரிமையுடனும் வாழ்வதற்கு நடத்தப்பட்ட அறப்போர், நீதிப்போர் அத்தனையிலும் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணம் செய்தமையை அறிந்தபோது உருவான ஆச்சரியம் என் ஆர்வத்தை அதிகரித்தது.

"கிட்டத்தட்ட 1959ஆக இருக்க வேண்டும். திருகோணமலை யாத்திரை. முருங்கனில் இருந்து வவுனியா சென்று அங்கிருந்து முல்லைத்தீவு போய்ச் சேர்ந்தோம். முல்லைத் தீவில் ஏராளமான மக்கள் கூடினார்கள். அவர்கள் விறைச்ச தலையர்கள், இவர்களைப் போலவா! அங்கிருந்து திருகோணமலை நோக்கி நடையில் புறப்பட்டோம். அரசு கடுமையான எதிர்ப்பு. அரச பத்திரிகைகள், ஊடக அறிக்கைகள் இந்த நடவடிக்கையினை நிறுத்துமாறு எச்சரித்தன. உரிமைப் போரின் உண்மையை உலகுக்கு வெளிப்படுத்த எடுக்கப் பட்ட இம்முயற்சியில் பின்நிற்காது திருகோணமலை அடைந்து மகஜர் கொடுத்தோம்" என்றார்.

"1960இல் எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அக்காலப்பகுதியில் வீட்டுக்கே வருவதில்லை. காலையில் பாடசாலை. மாலை அப்படியே மன்னார் கச்சேரி வாசலுக்கு முன் பாக முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இருப்பேன். ஒருமாதம் வரை நடந்தது. அங்கு எனது பாடல் குழுமியி ருந்த அனைவரையுமே நன்கு கவர்ந்திருந்தது. அறப்போருக்கு பலரையும் ஈர்த்தது.

***நல்ல அறப்போரே நம்மைக் காக்கும்.***
***அநியாயமாக அன்று அடித்தார்களே.***
***அண்ணல் செந்தமிழ்காக்கும் தோழர்களே***
***அன்பின் வழியாகவே அறப்போர் செய்கு வோம்.***
***அனைவரும் வருவீர். அன்புடன் மகிழ்வீர்.***

இப்பாட்டுக்கு அப்போது இருந்த மரியாதையே தனி" என்று உணர்வு பூர்வமாய் பாடி முடித்தபோது என் எண்ணத்துள் உருவான நினைவுகள் ஏராளம்.

## முடிவுரை

கலை உலகிற்குள் பிரவேசிக்கமுன் தமிழ் உலகிற்குள் உரிமைக்கான போராட்டங் களில் உண்மையாய் உழைத்தமைக்கு தமிழ்த் தாய் கொடுத்த ஆசீர்வாதங்களில் ஒன்றுதான் கலைவளம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லா தளவுக்கு கலைத்துறையில் உயர்ச்சியும், பிரசித்தமும் பெற்றமையால் நிரூபணம். கலை தந்த குழந்தைக்கும், குழந்தை தந்த கலைக்கும் இந்தக் கலையுலகம் தலைசாய்த்து வணங்கு கின்றது.

**வாழ்க கலை வளர்க கலை**
**வாழ்வாங்கு ஓங்கும் கலை**
**மிளிர்க கலை ஒளிர்க கலை**
**ஒய்யார மானக்கலை**
**ஓயாது உழைத்தவரை உயர்வாக**
**நிறுத்திய கலை**
**ஓய்ந்திருக்கும் நேரமிதில்**
**நெஞ்சார வாழ்த்தும் கலை** ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் கலைப்பொக்கிஷம், மன்னாரின் சொத்து.



**இ.கி.அ.ஜோண் பொஸ்கோ**
*(அகில இலங்கை சமாதான நீதவான்)*
*பிராந்திய இணைப்பாளர்,*
*திருமறைக் கலாமன்றம்*
*மன்னார்.*

**ம**ன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் முருங்கன் பெற்றெடுத்த மைந்தன் கலைஞர் செமாலை குழந்தை. அவர்களின் கலை வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படுத்தி அதன் பெறுபேறுகளையும் மதிப்பீடுகளையும் மீளாய்வுகளையும் பெற்று தனித்துவமான கலைகளை அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் சொல்லும் நூலாக இது அமையும் என்பது எங்கள் பேரவா.

குழந்தை மாஸ்டர் என்ற பெயர் 1964 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மன்னார் வாழ் மக்களினால் உச்சரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றதென்றால் அவற்றில் ஏதோ உள்ளது என்பது உண்மை. இந்த வகையில் நானும் சிறுபராயம் முதல் இவரது பெயரைக் கேள்விப்பட்டுள்ளேன். இவரால் மேடையேற்றப்பட்ட வீரத்தாய், யார் குழந்தை, கல்சுமந்த காவலர்கள் போன்ற நாடகங்களும், முருங்கனிலே அரங்கம் செய்யப்பட்ட திருப்பாடுகளின் காட்சியிலே கைப்பாஸ் பாத்திரமேற்று இவர் நடித்ததும் இன்னும் என் கண்முன்னே நிற்கிறது. இவரது சுறுசுறுப்பான, வேகமான, தாள நடைக்கேற்ப போடும் கூத்தும் இவர் மேடைகளில் முழக்கமிடும் ஆணவ ஆவேச சிரிப்பொலிகளும் பாத்திரங்களுக்கேற்ப எடுப்பான தோற்றமும் என்னைக் கவர்ந்தது.

இவரது நடிக்கும் திறனும் ஆடும் திறனும் நானும் அவ்வாறு ஆகவேண்டும் என என்னைத் தூண்டியது. கடந்த காலங்களில் போயா தின நிகழ்வுகளில் பிரதேசங்களிலுள்ள திறந்த வெளி அரங்குகளில் கலைநிகழ்வுகள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. அதிலும் அடம்பன், முருங்கன் போன்ற திறந்த வெளி அரங்குகளில் குழந்தை மாஸ்ரரின் நாட்டுக் கூத்துக்கள், வில்லிசைகள் நடைபெறுகிற தென்றால் மக்களெல்லாம் முண்டியடித்து அலைஅலையாக ஆவலோடு செல்வார்கள் அந்தளவிற்கு மக்களின் மனதைக்கவரும் அளவிற்கு நடிப்பாலும், இசையாலும், பாடல்களாலும் மயக்கும் திறன் கொண்டவர்.

இப்படி கலையார்வம் கொண்ட இந்த பெரிய மனிதர் குழந்தை மாஸ்ரரோடு எப்படி உறவாடலாம் என்று ஏங்கிய காலமும் இருந்தது. எப்போது இப்படி ஒரு சந்தர்ப்பம் வரும் என்று இருந்த வேளையில் 1999ஆம் ஆண்டு மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக் கலாமன்றத்திற்கு 2000ஆம் ஆண்டு அதன் வளர்ச்சிக்காக நிதி தேவைப்பட்டது. இதற்கு கலைநிகழ்வுகள் மூலம் நிதி திரட்ட யோசித்த வேளையில் குழந்தை மாஸ்டரின் நாட்டுக் கூத்தை மேடையேற்றி நிதியை பெறுவதற்காக அவரை நாடினோம். அவரும் எவ்வித மறுப்புமின்றி 'கல்சுமந்த காவலர்கள்' என்னும் நாட்டுக் கூத்தை மேடையேற்றுவதற்கு சம்மதம் தெரிவித்தார். மன்னார் நகர மண்டபத்தில் இந்த நாடகம் அரங்கம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து அவருடனான தொடர்பு எமக்குக் கிடைத்தது.

தொடர்ந்து எமது மன்னார் மன்றத்தின் நிர்வாக சபையிலே செபமாலை குழந்தை அவர்களை இணைக்க வேண்டும் என்ற அவாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தந்தை பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளாரின் அனுமதி கேட்டபோது, "குழந்தை மாஸ்ரரா! மன்னாரின் கலைப்பொக்கிஷம், மன்னாரின் சொத்து. இப்படியான பெரியவர் களை சேர்த்து மன்னாரின் கலையை வளர்க்க உதவுங்கள்" என்றார். ஒரு உத்வேகம், மாஸ்ர ரிடம் சென்று உரையாடினோம் "அதற்கென்ன வருகிறேன், ஆனால் இடைநடுவில் விட்டுவிடா தீர்கள், தொடர்ந்து செய்வோம். இயலுமான வரை உதவிகளைச் செய்கிறேன்" என்று எம்மை தட்டிக் கொடுத்து தமது சம்மதத்தினை தெரிவித் தார். இதனைத் தொடர்ந்து 2003ஆம் ஆண்டில் நிர்வாகசபை உறுப்பினரானார். மன்னார் மாவட்ட கலைஞர்களை இணைத்து மன்றத் தினால் உருவாக்கப்பட்ட கலைஞரவையின் தலைவரானார். ஆலோசனைச் சபையின் உறுப் பினரானார். எமது கலைக் குடும்பத்தில் ஒருவரா னார். மன்றத்தின் வளர்ச்சிக்கு ஓர் அங்கமா னார். இவரது ஆலோசனைகள், புத்திமதிகள் மன்றத்தை நல்ல முறையில் இயக்குவதற்கு பலம் சேர்ந்தன.

இவரிடத்தில் நான் பல நற்பண்புகளை கற்றுக்கொண்டேன். அதில் ஒன்றை எடுத்துக் கொண்டால், ஒரு நிகழ்விற்கு அழைப்பு விடுத் தால் குறிப்பிட்ட நேரத்திற்கு அரை மணித்தி யாலத்திற்கு முன் நிற்பதும், இவ்வழைப்பை மதித்து கனம் பண்ணி சமூகமளிப்பதும், வரா விட்டால் தகவல் கொடுத்து அனுப்புவதும் இவ ரது சாலச்சிறந்த பண்பாகும். இதை நான் முன் உதாரணமாக மற்றவர்களுக்கு எடுத்துச் சொல் லுவதும் உண்டு. இதுமட்டுமல்ல குழந்தை என்ற பெயருக்கும் பொருத்தமானவர். குழந்தை உள்ளம் படைத்தவர். சிறுவரானாலும் சரி பெரிய வரானாலும் சரி அன்புடனும் பண்புடனும் பழகும் பண்பாளர்.

இவர் மன்றத்துடன் இணைந்து அவரது சொந்த ஆக்கங்களை, மன்னாரின் கலை வடிவங்களை யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற மாவட்டங்களிலே அரங்கம் செய்து பெருமை சேர்த்தார். அந்தவகையில் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் 'கல்சுமந்த காவலர்கள்', கொழும்பு பம்பலப்பிட்டி கதிரே சன் மண்டபத்திலே 'குண்டலகேசி' நாட்டுக் கூத்தும், வவுனியா இலக்கிய விழாவில் 'புது மைப் பெண்' என்ற நாடகமும் எமக்கும், எமது மன்றத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்ந்தன.

இவரது கடந்தகால அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அதில் கஷ்டங்கள், துன்பங்கள், துயரங் கள் மத்தியிலும் கலைநிகழ்வுகளை அரங்கம் செய்வதற்காக தனது ரேடியோவை விற்றும், நகைகளை அடைவு வைத்தும் கலையை வளர்த்துள்ளார் என்றால் இவரது கலையார்வம் எப்படி என்று சொல்லத் தேவையில்லை. இவரது கலைவளர்ச்சிக்கு தனது அன்பு மனைவி பக்க பலம் என்று அடிக்கடி கூறுவார்.

இவருடைய கலைத்துறையிலே நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. அதில் ஒன்றை எடுத்துக்கொண்டால்; நாடகம் எழுதும்போது குறைந்தளவிலான பாத்திரங்களை உள்வாங்கி அரங்கம் செய்வது. காரணம் கேட்டபோது நாடகத்தை பழக்குவதற்கும், முகாமை செய்வ தற்கும் இலகுவாய் இருக்கும் எனக் கூறுவார். இதை நானும் என் கலை வாழ்வில் அனுபவமாக பெற்றுக் கொண்டேன். இப்படியான பல்துறை களிலும் கலையார்வம் மிக்கவர். சிறியோர் முதல் பெரியோர் வரை இவரது நிகழ்வுகளால் கவரப்பட்டுள்ளனர்.

மன்னார் நகர மண்டபத்தில் திருமறைக் கலாமன்றம் நடத்திய கலை நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் அவர்கள் 'திருக்கலை வேந்தன்' என்னும் விருது வழங்கியும், பொற்கிளி வழங்கியும் கௌரவித்தார். அத்தோடு மன்னார் திருமறைக் கலாமன்றமும் மன்னாரில் கலாபூ ஷணம் விருதுகளைப் பெற்ற கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி பரிசுகள் வழங்கி கௌர வித்த நிகழ்வில் திரு.செபமாலை குழந்தையும் ஒருவர். கலைஞர்களை கௌரவித்த இந்த நிகழ்வு எமக்கு மனநிறைவைத் தந்தது.

மன்னார் மாவட்டத்தில் கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, சாஹித்திய விருது, தலைக்கோல் விருது ஆகிய நான்கையும் பெற்றவர் என்ற பெருமை கலைஞர் குழந்தை அவர்களையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்ல கலையை ஊடகமாகக் கொண்டு சமயப்பணிகள் மாவட்டமெங்கும் பிரசித்தமாகின. உதாரணம் திருப்பாடுகளின் காட்சிகள் அரங்கேற்றம், திருப்பாடுகள் பற்றிய பிரசங்கம், ஆலயத் திருவிழாக்களில் அரங்கம் செய்யும் கலைநிகழ்வுகளைக் கூறலாம். மற்றும் இறந்தவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி கல்வெட்டுப் பாடிக் கொடுப்பதும் இவரது கலைச்சேவையாகும்.

இறுதியாக இவரின் அர்ப்பணிப்புக்கும், ஆற்றலுக்கும், உழைப்புக்கும் 1964ஆம்ஆண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்ட முத்தமிழ் கலாமன்றம் ஒரு சாட்சியாக விளங்குகின்றது.

இவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் எமது மாவட்டத்தின் கலைவடிவங்களை பேணிக்காத்து, புத்தூக்கம் கொடுத்து உழைக்க முன்வருமாறு கேட்டு சந்தர்ப்பம் வழங்கிய மலர்குழுவிற்கு மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் சார்பில் நன்றிகள் கூறி நிற்கின்றோம்.

"வாழ்க கலை, வளர்க நம்பணி"

"கலைவழி இறைபணி" ■

**அருள்திரு. G.N. ஜெயராஜசிங்கம்**

(இயக்குநர், ஜீவோதயம் இளைஞர் அபிவிருத்தித் திட்டம், முருங்கன்.)

அவர்களின் ஆசிச் செய்தி

முருங்கனைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆசிரியர் செ.செபமாலை அவர்களை சென்ற பதின்மூன்று ஆண்டுகளாக அறிவேன். அவர் என்னுடன் அறிமுகமானதே அவரது கலைச்சேவையின் மூலமாகவே. அன்னாரது படைப்புக்களை மேடைகளில் கண்டு களிப்புற்ற நான் அவருடன் பழகவேண்டும் என்று தூண்டப்பட்டேன். குழந்தை உள்ளம் கொண்ட குழந்தை மாஸ்டர் பழகுவதற்கு நல்ல பண்பாளர். இவர் ஒரு நாடக ஆசிரியனாகவும், வசனகர்த்தாவாகவும், சிறந்த நடிகனாகவும், சங்கீத வித்துவானாகவும், சிறந்த பேச்சாளராகவும், இயக்குநராகவும் மேடைகளில் செயல்படுவதைப் பார்க்கும்போது இவருக்கு இறைவன் அளித்த ஒப்பற்ற கொடைகளை நாம் கண்டுகொள்ள முடிகிறது. இவரது திறமைகளைப் பயன்படுத்த எவர்தான் முன்வந்தாலும் மறுக்காமல் தன்னை ஒறுத்து மற்றவர்களைத் திருப்திப்படுத்தும் சிறந்த சேவை மனப்பான்மை உள்ளவர்.

மன்னார் மாவட்டத்தில் குழந்தை மாஸ்டரது சிறந்த கலைப்படைப்புக்களை காணதோர்கள் இல்லை என்றே சொல்லவேண்டும். அன்னாரது 'யார் குழந்தை' என்ற நாடகம் முருங்கனில் பல ஆண்டுகளுக்கு முன்பு முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தின் முன்றலில் மேடையேற்றப்பட்ட போது அதனைக்கண்டு களித்த மட்டக்களப்பு பிரமுகர்கள், மட்டுநகரில் நடைபெறவிருந்த மாவட்ட கலைவிழாவிலும் அதனை மேடையேற்ற வருமாறு அழைப்புவிடுத்து, அதனை நிறைவேற்றி வைத்தது இவரது சிறந்த படைப்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு. குழந்தை மாஸ்டரது நாடகம் மேடையேற்றப்படுகிறது என்றால் அதனைக்காண குழந்தைகள் முதல் குடுகுடு கிழவர் வரை குதூகலித்துச் செல்வர்.


கலைஞர் குழந்தை அவர்கள் கலைத்தொண்டிற்காக இன்பம், சுகம், பணம், பொருள் யாவையும் தியாகம் செய்ததை அறிந்தவர்கள் ஒருசிலரே. இத்தியாக புருஷருக்கு, கலைச்செல்வனுக்கு விழாவெடுத்து, அன்னாரை ஊக்குவிக்க முன்வந்த விழாக் குழுவினரை என்னால் பாராட்டாமல் இருக்கமுடியாது. சேவையாற்றுவோரை இகழ்ந்து உரைக்கும் பலர் மத்தியில், புகழ்ந்து உரைத்து உற்சாகம் ஊட்டவும் சிலர் இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

**நன்றி: கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை மாமா என் குருநாதர்



**அருள்தந்தை ப.விமல், அ.ம.தி**
B.Th.(Rome)
*இத்தாலி*

**என்** சிறுவயது முதல் இப்போதைய கணம்வரை என் குருநாதராய் இருக்கின்ற கலைஞர் கலாபூஷணம் குழந்தை பற்றிப் பகிரக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மனமகிழ்வடைகின்றேன். இவர் பற்றி ஏற்கெனவே சில ஆக்கங்களை எழுதியுள்ளேன். எனினும் மீண்டும் எழுதுவதில் பேரானந்தம்.

குழந்தைமாமா என் தாயாரின் சொந்தத் தம்பியாவார். கலைக்குடும்பத்தின் வாரீசாவார். இவர் குடும்பத்திற்கும் எம் குடும்பத்திற்குமிடையே மிக நெருங்கிய உறவுத்தொடர்பு உள்ளது. என் அம்மா 'தம்பிராசா தம்பிராசா' என்று சகோதர பாசத்தோடு இவர் வீடு தேடிச்செல்வதை என் அம்மா உயிரோடு இருந்த காலத்திலே அவதானித்திருக்கிறேன்.

கலைஞர் குழந்தை அவர்களும் 'அக்கா அக்கா' என்று எங்கள் வீடு தேடி வருவதையும் அவதானித்திருக்கின்றேன். கலைஞர் குழந்தையுடைய சோகம் நிறைந்த பின்புலங்களில் எம் பெற்றோரும் சகோதரரும் உடனிருந்தார்கள் என்பதையும் அறிவேன். இவரும் எனது அம்மா அப்பாவின் மீது அதிக மரியாதையுடன் கடைசி வரை இருந்தார் என்பதையும் மறுக்கமுடியாது.

கலைஞர் குழந்தை கலைத்துறையில் ஈடுபட்டபிறகு அவருக்கு அதிகமான பெயர்கள் அவரைக் கௌரவப்படுத்த கொடுக்கப்பட்டன. ஆனால் நான் சிறியவனாக இருந்தபோது ஊரில் 'செபமாலை மாஸ்டர், குழந்தை மாஸ்டர், தம்பிராசா, தம்பிராசா அம்மான்' என்றே அழைக்கப்பட்டார். நானும் சிறியவனாக இருந்தபோது இவரை 'குழந்தை மாமா' என்றும் இப்போது 'தம்பிராசா அம்மான்' என்றும் அழைக்கின்றேன்.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் எனது மானசீகக் குருவாக இருந்து வருகிறவர் குழந்தை மாமா. அவரை அருகிருந்தும் தூரத்திலிருந்தும் இரசித்திருக்கின்றேன், வியந்திருக்கின்றேன். அவரைப் போலவே எதிர்காலத்தில் வரவேண்டுமென்று குறிக்கோளோடு இருந்திருக்கின்றேன். நான் சிறியவனாக இருந்தபோது அவருக்குப் பாராட்டுவிழா வைத்தார்கள். அப்பொழுது நான் அவருக்கு மாலை அணிவித்தேன். அப்பொழுதே எனக்கும் அவரைப்போல் வரவேண்டுமென்று உந்துதல் ஏற்பட்டது.

அவரது பன்முக ஆற்றல்கள், தெய்வ நம்பிக்கை, எளிமை, விடாமுயற்சி, மக்களின் இன்பதுன்பங்களில் பங்கெடுக்கும் இயல்பான குணம், கவர்ச்சிகரத் தோற்றம், மேடைகளில் பாத்திரமாகின்ற தன்மைகள், இசைக்கருவிகளை இலாவகமாக மீட்டுகின்ற திறன்கள், கணீரென்ற குரல், சோர்வடையா மனம், நேரம் தவறாமை, அடக்கம், அர்ப்பணிப்பு என்பவை இன்று வரை நான் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களாகவே கருதுகின்றேன். அவை, என் இதயத்தில் இன்றும் ஆழமாக பதிந்துமிருக்கின்றன.

## அவரது மேடை நாடகங்களில் நான்

எனக்கு ஒன்பது வயதிருக்கும்போது முதன்முதலில் ஒளிவிழா நாடகத்தில் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இடையராக' ஒரு பாத்திரத்தில் நடிக்க தந்தமையின் ஊடாக நானும் அவரது நாடக ஆற்றுகைக்குள் உள்வாங்கப்பட்டேன். எனக்கு முன்பதாக என் சகோதரங்கள், உறவினர்கள் அவரது நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நாடகத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட 'இடையர் நாமும்மை புகழ்ந்தேற்ற வந்தோம்' என்ற பாடல் இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

அதனைத் தொடர்ந்து அவரது பரதேசி மகன், வீரனை வென்ற தீரன், கண்டி அரசன், யார் குழந்தை, மற்றும் இசைநாடகங்கள், வில்லுப்பாடல்கள், பாட்டுக் கச்சேரிகள் என்பவற்றில் நடித்தும், பின்னணி இசைக்கலைஞராகவும், பாடகராகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கின்றேன். அந்த நாட்களை மறக்கவே முடியாது, என்றும் பசுமையான நினைவுகள் தான். குழந்தை மாஸ்ரரின் நாடகங்கள் போட்டிக்கு வருகிறதென்றால் ஏனைய போட்டியாளர்களுக்கு நடுக்கமும், பதற்றமும் எழக்கூடிய அளவிற்கு அவரது நாடகங்கள் தகுதியும், தரமும் வாய்ந்ததாய் இருந்திருக்கின்றன.

## எனது வாழ்க்கை நாடகத்தில் அவர்

எனது வாழ்க்கையில் என் இளமைப் பருவம் பல துன்பியல் அனுபவங்களை கொண்டதாக அமைந்திருந்தது. வாழ்க்கையில் பல கசப்பான அனுபவங்களைத் தாண்டி பயணிக்க வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் எனக்கு அருகிருந்து வழிகாட்டியவர் குழந்தை மாமா.

1. நான் குருமடம் போவதாக அவரிடம் சொன்னபோது அவர் என்னிடம், "விமல் நீ தொடர்ந்து இந்த கலை முயற்சிகளை முன்னெடுப்பாயென எண்ணியிருந்தேன். ஆனால் நீ குருமடம் போகின்றாய். தேவ அழைத்தலைத் தட்ட முடியாது. ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டோடும், பிரமாணிக்கத்துடனும் இருக்க வேண்டும்" என்று வாழ்த்தி அனுப்பினார். அதனை மறக்க முடியாது.

2. நான் ஏற்கெனவே என் தந்தையை இழந்திருந்தும் என் குருமட வாழ்க்கையின் போது என் தாயை இழக்க நேரிட்டபோது அவர் என்னை தனியே அழைத்துச் சொன்ன வார்த்தைகள் இன்னும் நெஞ்சிலே பதிந்திருக்கின்றன. "விமல், உனக்கு யாருமே இல்லையென்று கவலைப்படக் கூடாது. உனக்கு நாங்க இருக்கிறோம். நீ படிப்பிலே கவனத்தை செலுத்து" என்று அனுப்பி வைத்ததை இன்னும் மறக்க முடியாது.

3. நான் எனது முதலாவது வாக்குத்தத்தத்தை பண்டாரவளையிலே கொடுத்தபோது யாருக்கும் அறிவிக்க நான் விரும்பாதிருந்த போதும் குழந்தை மாமாவும் மனோகரண்ணனும் அங்கு பல சிரமங்களுக்கு மத்தியிலே சமூகமளித்ததை மறக்க முடியாது.

4. குருமடத்திலிருந்து விடுமுறைக்கு வீடு வருகிறபோது அவர் அடிக்கடி சொன்ன புத்திமதிகளை மறக்க முடியாது. இவ்வாறாக பலவற்றை அடிக்கிக்கொண்டே போகலாம்.

## என்னுடைய வளர்ச்சியில் அவருடைய பங்கு

1. நான் சிறுவயதிலே பேச்சுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அவரே காரணமாக இருந்திருக்கிறார். எனக்கான பேச்சுப் போட்டி எழுத்துருக்களை அவரே தயாரித்துக் கொடுத்து என்னை வெற்றியடைச் செய்திருக்கிறார். அவற்றை நன்றியோடு நினைக்கின்றேன்.

2. நான் அவரது வீட்டுக்குச் செல்கிற பொழுது என்னை அமர்த்தி 'ரேப் றெக்கோடரை' (Tape Recorder) இயக்கி பழம் பெரும் பாடல்களைக் (உதாரணம்: தியாகராஜ பாகவதர்) கேட்கும்படி என்னைத் தூண்டி எனக்குள்ளே இசை ஆர்வத்தை வளர்த்து விட்டிருக்கிறார்.

3. என்னை தனது வீட்டுக்கு அடிக்கடி கூப்பிட்டு தான் வாசித்து முடித்த புத்தகங்களை, சஞ்சிகைளை தந்து என்னை வாசிக்கத் தூண்டியிருக்கிறார். ஆதலால் சிறுவயதிலேயே எனக்குப் பல சஞ்சிகைகள், புத்தகங்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் பெயர்களை அறிந்திருந்தேன். இவ்வாறு வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலே தூண்டிவிட்ட பெருமை அவரையேசாரும்.

4. ஒரு புதுவருடத்தன்று எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தபேலா செற்'றினை அன்பளிப்பாகத் தந்து பழகும்படி சொன்னார். அதனூடாகவே அந்தக் கருவியை நானே பழகி பிற்காலத்தில் ஒரு தபேலா, டோல்கி இசைக்கலைஞராக மாற முடிந்தது.

5. இன்னுமொருநாள் 'ஆர்மோனியம்' என்ற இசைக்கருவியை எனக்குத் தந்து அதனை பழகும்படி சொன்னார். அதன்பிறகே எனக்கு ஆர்மோனியம் என்ற இசைக்கருவியின் மீது அதிக ஈடுபாடு வந்ததை மறக்கமுடியாது. இவ்வாறு பல வழிகளில் என்னுடைய வளர்ச்சியில் ஈடுபாட்டோடு இருந்ததை நினைத்துப் பார்க்கின்றேன்.

## இவர் ஒரு சகலகலாவல்லவன்

என்னைப் பொறுத்த வரையில் குழந்தை மாமா ஒரு சகலகலாவல்லவன். தனக்கென ஒரு தனிப்பாணியை உருவாக்கியவர். அவர் ஓர் ஏகலைவன். தானாகவே பல விடயங்களை பார்த்தும், வாசித்தும், பழகியும் தன்னை வளர்த்துக்கொண்டவர். கலையே அவரது மூச்சு. இடம்பெயர்வு நாட்களில் மக்கள் தம்மோடு பல பொருட்களை, விலைமதிக்க முடியாத செல்வங்களை எடுத்துச்செல்வது வழக்கம். இவரோ முதலில் தூக்குவது ஆர்மோனியத்தைத்தான். அந்தளவிற்கு கலையில் ஈடுபாடு கொண்டவர்.

## இவரது பன்முக ஆளுமையின் சில கூறுகள்

1. நாட்டுக்கூத்து, இசைநாடக, நாட்டிய நாடக, நவீன நாடக எழுத்துரு தயாரிப்பவர். இவரது நாடக அமைப்புகள் எதுகை மோனையுடன், தமிழ் இலக்கிய சுவையோடிருப்பதை இலகுவில் அறியலாம். இவரது எழுத்துக்களில் நவரச வீச்சுக்களை இனங்காணலாம்.

2. நடிகர் - நடிகர் என்கிறபோது எந்தப் பாத்திரத்தையும் நடிக்கக் கூடிய திறமை அவருக்கு அதிகமாகவே இருந்தது. எந்தப் பாத்திரத்தையும் நடிக்க அவர் தயாராயிருந்தார். அவர் என்னோடு பேசுகிறபோது திரைப்பட நடிகர்களான ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன் போன்றோர் உந்துதலாக இருந்த தாக சொல்லியிருக்கிறார்.

3. நெறியாளர் - சிறந்த நாடக நெறியாளர். இவர் நெறிப்படுத்தும் நாடகங்களில் விறுவிறுப்பையும், தொய்வில்லாமல் நாடகம் செல்வதையும் நன்கு அவதானிக்கலாம்.

4. பாடகர் - கணீரென்ற குரல். உச்சஸ்தாயி, கீழ்ஸ்தாயி எல்லாம் இவரது குரல் இலாவகமாக சென்றுவரும். சினிமாப் பாடல்களைப் பார்த்து அப்படியே பாடக்கூடிய திறமை அவருக்கிருந்தது. குரலை நன்கு பாதுகாத்துக் கொள்வார். நாடகப் பாடல்களை இரவிரவாகத் தொடர்ந்து பாடக்கூடிய வல்லமை அவருக்கிருக்கிறது. அவர் 'பசாம்' பாடுகிறபோது மக்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள்.

5. கவிஞர் - இரு கவிதை நூல்களையும், அதிகமான கவிகளையும் எழுதியிருக்கிறார். அவை அனைத்தும் மரபுரீதியான கவிதைகளே. பல கவிகளை ஆலயத் திருவிழாக்களுக்கு பாடக்கூடியதாக எழுதியுள்ளார்.

6. வில்லிசைக்கலைஞர், இசைக்கச்சேரி அமைப்பாளர் - நான் அவரோடு பல வில்லிசைகளில், இசைநிகழ்ச்சிகளில் கலந்திருக்கிறேன்.

7. ஒப்பனைக் கலைஞர், எழுத்தாளர், இலக்கிய ஆர்வலர்.

8. இசைக்கருவிகளை மீட்டும் இசைக் கலைஞர் (ஆர்மோனியம், தபேலா, டோல்கி, பொங்கோஸ்)

9. முருங்கன் முத்தமிழ்க் கலாமன்ற இயக்குநர், நிர்வாகி.

10. ஆலயசபை நிர்வாகி. சமூகத் தொண்டன், ஆசிரியர், அதிபர். இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம்.

எனக்காக நான் ஒரு வரலாறு எழுதுவோனாக இருந்தால் என் சுயசரிதைப் புத்தகத்தின் முதல் பக்கங்கள் முழுவதையும் நிறைப்பது இவர் பெயராகத்தான் இருக்கும். நான் இப்போது கலையில் ஆர்வமுள்ளவனாக இயங்குகின்றேன் என்றால் என்னுள் இயங்குவது நானல்ல என் குருநாதர் குழந்தை மாமாதான். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட செபமாலை அதிபர்



**பேதுரு பாக்கியநாதன்**
*அதிபர்,*
*மன்/கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலை,*
*முருங்கன், மன்னார்.*

*"எண்ணிரண்டு ஆண்டுகளாய்*
*எம்மிடையே பணியாற்றி*
*எம்மக்கள் மனம் குளிர*
*எமக்காய்ப்பல சேவை செய்த*
*ஏந்தலே குழந்தையே வாழ்க நீர் என்றும்*
*கலைக் குழந்தையாய்"*

*2000ஆம் ஆண்டு திரு. செபமாலை அதிபர் அவர்கள் கற்கிடந்தகுளம் பாடசாலையிலிருந்து இளைப்பாறிச் செல்லும்போது அவருக்குக் கற்கிடந்தகுளம் பாடசாலைச் சமூகம் தமது ஆலயத்தில் நடத்திய பிரிவுபசார விழாவின் போது சிறுமியொருவர் வாழ்த்திப் பாடிய வாழ்த்தின் சில வரிகள் இவை.*

*இந்த வாழ்த்திற்குரிய ஆசிரியர் தம்பிராசா, செபமாலை குழந்தை அவர்களை ஆரம்பத்தில் இருந்து நினைத்துப் பார்க்கிறேன்.*

*"ஒரு பிடி மண்ணை எடுத்துத்தான் - தேவன்*
*உருவமுள்ள மனிதனாக்கினான்"*

*இந்தப் பாடல்தான் அதிபர் அவர்களை எனக்கு அறிமுகமாக்கியது. இப்பாடல் ஒரு வில்லிசையாக அவர் பாடியதைக் கேட்ட எனக்கு வயது அப்போது பத்து.*

*அக்காலத்தில் தம்பிராசா மாஸ்ரரின் (திரு. செபமாலை) பாட்டு, கூத்து என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். மேற்படி வில்லிசைப் பாடலை, வில்லிசையைப் பற்றி எனது வீட்டாரும் அயலவரும் பாராட்டிப் பேசியதைக் கேட்ட எனது உள்ளத்திலே இந்தப் பாடலின் அடிகள் ஆழமாகப் பதிந்துவிட்டன.*

*எமது முருங்கன் மெதடிஸ்த தேவாலயத்தில் வருடக் கடைசி இரவு வழிபாடு 'விழிப்பிரவு' ஆராதனையாக நடைபெறுவது வழக்கம். மார்கழி 31 இரவு பழைய வருடத்தைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறியும், புதிய வருடத்தை வரவேற்பதற்கும் கூடியிருக்கும் அந்த நேரத்தில் இந்த வில்லிசை இடம்பெற்றது.*

*1972 அல்லது 1973 ஆம் ஆண்டு மார்கழி என நினைக்கிறேன். அக்காலப் பகுதியில் எமது சேகர முகாமைக்குரு, இறையடி எய்திய அமரர் ஜி.என்.ஜெயராஜசிங்கம் அவர்களின் நட்பான அழைப்பின்பேரில் முருங்கன் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி ஜெயசீலன் அவர்களின் ஏற்பாட்டில் திரு. செபமாலை அவர்களின் தலைமையில் சகோதரர் மற்றும் உறவுக் கலைக் குழுவினர் இவ்வில்லிசையினை இசைத்தனர். இதற்கு மிருதங்கம் இசைத்தவர் அவரது தந்தை அமரர் செபஸ்தியான் அவர்கள் என்று நினைக்கிறேன். என்னைப்போன்ற சிறுவர்களுடன் ஆலயத்தினுள் இரவு 10 மணியளவில் நடந்த நிகழ்வை முன்வரிசையில் அமர்ந்து ரசித்துக்கொண்டிருந்தது ஞாகபமிருக்கிறது. அந்நிகழ்விலிருந்துதான் ஆசிரியர் அவர்களை எனக்குத் தெரியும்.*

*முருங்கன் மகா வித்தியாலயத்தில் அவரிடம் கற்று இருக்கிறேன். அவரது நாடகத்தில் நடித்திருக்கிறேன். அவரது நெறியாள்கையில் 'இறைவனின் சீற்றம்' எனும் கூத்தில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வடமாகாணப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் நடித்து 02ஆம் இடத்தைப் பெற்றமை நினைவிருக்கிறது.

நாட்டுக்கு நாடு கல்விக் கொள்கைகள் வேறுபடுகின்றன. எமது நாட்டில் ஆசிரியராவதற்கு உரிய அடிப்படைத் தகமைகள் இருந்தால் அச்சேவையில் இணைய முடியும். அதன்பின்னரே ஆசிரியர்கள் பயிற்றப்படுகின்றனர். அமெரிக்கா போன்ற நாடுகளில் இசைக்கருவி மீட்டல் கலை போன்றனவும் தகமைகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய கொள்கை எமது நாட்டில் காணப்பட்டிருந்தால் ஆசிரியர் அவர்கள் 'அரை' வயதில் பெற்ற 'கலாபூஷண விருது' போன்ற விருதுகள் இளவயதிலேயே கிடைத்திருக்கும்.

நான் உட்பட பலர் சிறுவயதில் எமது தமிழ் வரலாற்றுக் கதைகளைத் தெரிந்துகொண்டது இவரது நாடகங்கள் மூலமாகத்தான். ஏனெனில், இவரது ஆக்கங்கள் அனைத்தும் சரித்திர தமிழ் வரலாறுகளை நேரடியாகவே கூறுவதாகக் காணப்பட்டன. நாம் கற்றுக் கொள்ளவேண்டிய சிலப்பதிகாரம், நளவெண்பா, சங்க இலக்கியக் கதைகள், தமிழ் அரசர்களின் வரலாறுகள் என்பனவற்றை நாடகமாக எழுதி நடிக்க வைத்ததன் மூலம் கலையினையும், தமிழ் அறிவினையும் வளர்க்க இவர் உதவினார்.

"பார்த்தேன் விளங்கவில்லை. கேட்டேன் புரியவில்லை, செய்து பார்த்தேன், கற்றுக் கொண்டேன்" என்ற கல்வியிலாளரின் கருத்துக்கள் இதனை அறியாத காலத்திலேயே செயற்படுத்தப்பட்டுவிட்டது. அத்துடன் வேதாகமத்தில் உள்ள சம்பவங்களும் இவர் மூலமாக நாடகமாக எழுதப்பட்டு மக்கள் முன் வைக்கப்பட்டு தேவ சத்தியம் பரப்பப்பட்டது. இவரது நாட்டுக்கூத்தினைப் பார்த்தவர்களது வாயில் அதிலுள்ள பாடல்கள் அடிக்கடி மீட்டப்படுவது உண்டு.

நான் பதில் அதிபராக கடமையாற்றிய காலங்களில் சகோதரப் பாடசாலை அதிபராக இவருடன் பல விடயங்களில் பங்குபற்றியிருக்கிறேன். அவர் மூலமாக பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். இப்பாடசாலையில் எனது கடமையினைப் பொறுப்பேற்றபோது, அதிபர் அவர்கள் எனக்கும் பல அறிவுரைகளைக் கூறி பொறுப்பினைத் தந்தார். இப்பாடசாலையில் 1984ஆம் ஆண்டு மாசி மாதம் 07ஆம் திகதி அதிபராகக் கடமையேற்ற திரு. செபமாலை அவர்கள் குறைந்த ஆசிரிய வளத்துடன் அடிப்படை வசதிகளற்ற நிலையில் மூன்றாந்தரப் பாடசாலையைப் பொறுப்பேற்று அதன் பின்னதாகப் பல சாதனைகளைப் புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

திறமைசாலிகள் பலர் இருந்தும் சரியான வழிகாட்டல் இல்லாதவேளை 'ஆதவனின் வரவுகண்டு மலர்ந்த தாமரைகளாய்' இப்பாடசாலைச் சிறார்களின் திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட்டன. 1988ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில், மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற நாடகப்போட்டியில், அதிபரின் நெறியாள்கையில் மாணவர்களால் நடிக்கப்பட்ட 'யார் குழந்தை' என்னும் நாடகம் முதலிடத்தைப் பெற்று திருகோணமலையில் நடைபெற்ற வடமாகாண தமிழ்த்தினப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கற்கடந்தகுளம் மண் பெருமைபடத்தக்கதாக இங்கு கடமையாற்றிய காலத்திலேயே 'கலாபூஷண விருது' கிடைத்தமை பெருமைபடத்தக்கது. மன்/கற்கடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலையில் நடைமுறையிலிருக்கும் பாடசாலைக் கீதம் "கல்வி கலைகளில் கவின்பெற்று வளர்ந்திட" என்ற பாடல் அதிபர் அவர்களாலேயே இயற்றப்பட்டது. இப்பாடலின் இறுதி வரிகள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தரை தன்னில் கற்கடந்தகுளம்
இன்புற்று உயர்ந்திடவே..."


என்ற வாழ்த்து நாளாந்தம் ஒலிக்க ஒலிக்க இறையருளால் எமது பாடசாலை தேசிய மட்டத்திலும் சாதனை புரிவது பெருமைக்குரிய தாகும்.

1984இல் தரம் III பாடசாலையாக 01 தொடக்கம் 05 வரையான வகுப்புகளைக் கொண்டு விளங்கிய இப்பாடசாலை இவரது முயற்சியால் மன்/வககா/கி/மீ/2 இலக்கமும், 1999.01.12ஆம் திகதி கொண்ட கடிதப்படி தரம் II (Type II) பாடசாலையாக 01 தொடக்கம் 09 வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலை யாக நடத்துவதற்கு அனுமதி கிடைத்தது.

அதிபர் அவர்கள் இங்கு பணியாற்றிய காலத்தில் சமூகத்துடனான உறவு குறிப்பிடக் கூடியதாகும். மக்களது இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல், கிராமிய சமூகப் பண்புகளை மதித்தல், பொது நிகழ்வுகளில் பங்குபற்றல் என்பன மக்களைக் கவர்ந்தவையாகும். குறிப் பாக 2000ஆம் ஆண்டு கிராமத்தில் அரங்கேற் றப்பட்ட 'சற்பிரசாத வாசாப்பு' ஆரம்பிக்கப் பட்டபோது அதன் ஆரம்ப கட்டங்களில் கலைஞர்களுக்கு உதவிகள் புரிந்தார்.

மிகப்பெரிய கலைஞர் என்று எல்லோ ராலும் புகழப்படும் அதிபர் செபமாலை குழந்தை அவர்கள் முக்கிய நிகழ்வுகளில் தம்மைச் சிறுவனாக்கி வாழ்த்துப்பா இசைத்து மகிழ்விப் பதும் உண்டு. ஆசிரியர் ஒருவர் அவரை நினைவு கூருகையில் என்போன்ற பல ஆசிரியர்கள் அவரது மேற்பார்வையில் கடமை செய்தோம். எமக்குத் திருமணம் நடந்தபோது, "எனது ஆசிரியர்களுக்கு நானே வாழ்த்துப்பா பாடு வேன்" என்று முன்வந்து பாடி நாமும் மகிழத் தாமும் மகிழ்ந்தார் என்று கூறினார்.

இளமை மாறாது உயிருடன் இப்போதும் கலை இவருடன் இருப்பது இவரது முதுமையை மறக்க வைக்கின்றது. இன்னும் பலகாலம் இவர் வாழ இறைவனை வேண்டுகிறேன். ■




The National Theatre Trust
The Pradesha Kala Manram, Batticaloa
PANJALI SAPATHAM
KAL SUMANTHA KAVALARKAL
TOWN HALL, BATTICALOA
27th October 1968.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கலைக் குடும்பம்



**ம. ஆபேல் றெவ்வல்**
*முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*மன்னார்.*

*கடந்த கால நிகழ்வுகளை மீட்டிப் பார்க்கின்றேன். நான் ஆசிரிய நியமனம் பெற்ற பின் முருங்கன் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று செல்கின்றேன். குழந்தை ஆசிரியரின் உடையும் மென்மையான தன்மையும் வரவழைத்து உபசரிக்கும் பண்பினையும் புன்னகை பூத்த முகத்தினையும் கண்டு என்னுள்ளம் பூரிப்படைந்தது. "வாருங்கள் மாஸ்ரர் உங்களுக்கு வேண்டிய உதவிகளை நாங்கள் வழங்குவோம். உங்கள் பணியை மனசந்தோஷத்துடனும் தைரியமுடனும் தொடருங்கள்" என்று காட்டிய உற்சாகத்தினை இன்றும் எண்ணிப் பார்க்கின்றேன். அந்தவகையில் என் ஆசிரிய பணியில் முருங்கன் மகாவித்தியாலயம் - குழந்தை மாஸ்ரர் குடும்பம் ஒரு மைல்கல் என்று சொல்லவும் முடியும்.*

*கலாபூஷணம் குழந்தை மாஸ்ரர் அவர்கள் ஒரு நல்ல ஆசிரியனாக, நல்ல அதிபராக, குடும்பத் தலைவனாக, சமூகத் தொண்டனாக, ஆன்மீக தலைவர்களை உருவாக்குபவனாக, மற்றவர்களை உருவாக்குவதில் மற்றவர்களை வாழவைப்பதில் பெரும் அக்கறை கொண்டுள்ளார். இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களுக் கெல்லாம் ஒரு வழிகாட்டியாக நல்ல ஆலோசகராக வாழ்ந்து காட்டி வருகின்றார்.*

*முருங்கன் கிராமத்தில் கலைப் பரம்பரையில் தோன்றிய கலைக்காவலன் குழந்தை ஆசிரியர், ஒரு மாபெரும் கலைஞன், கலைக்களஞ்சியம், ஒரு பன்முக ஆளுமையுடையவர் என்று பலவாறு கூறினும் கலைத் தொண்டிற்காக பணம், பொருள், நேரத்தை தியாகம் செய்ததை நான் அவரின் முயற்சிகள் ஒவ்வொன்றையும் ஆய்ந்து அறிந்து உணர்ந்திருக்கின்றேன்.*

*கலாபூஷணம் குழந்தை ஆசிரியரின் குடும்பமே கலையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள் அவர்களின் பிள்ளைகளான திரு. ஆனந்தன், திரு. இன்பன், அருட்தந்தை அன்புராசா ஆகியோர் எனது மாணவர்கள். அவர்களின் ஆன்மீக கலைமுயற்சிகள் ஒவ்வொன்றையும் பார்த்தும் கேட்டும் அறிந்தும் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றேன். சந்தியோகு திருமகள், ஒஸ்மன் சாள்ஸ் மலர்விழி ஆகியோர் கல்விச் சமூகத்தில் என் தலைமைத்துவத்தின் கீழ் ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.*

*அவர்களும் தந்தையின் வழியில் கலையினை வளர்த்து வருவதனை நேரடியாகப் பார்த்தும் பாராட்டியும் உள்ளேன். கடைசி மகளான கயல்விழியும் கலாபூஷணம் அவர்களுடன் கலைநிகழ்ச்சிகளில் தனது திறமையை வெளிக்காட்டியுள்ளதனை பார்த்துப் பாராட்டியிருக்கின்றேன். கலாபூஷணம் அவர்களுக்கு பிள்ளைகள் போன்று மருமக்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்களும் கலைக்கு ஆதரவு வழங்குவதில் பின்நிற்பதில்லை. இவரின் மூத்த மருமகனான அதிபர். திரு. சந்தியோகு மனோகரன் எனது மாணவன். நல்ல அதிபராக பணியாற்றுவதுடன் மாமனாரின் வழியில், குழந்தை மாஸ்ரரின் முதுமை சுகயீனங்களாக இருக்கின்ற போதிலும் அவரின் பணியினை முடிந்தளவு வளர்த்துச் செல்வதனை பாராட்டுவதுடன், சிறப்பாக முருங்கன் கிராமத்தில் 2010இல் நடைபெற்ற சந்தியோகுமையோர் நாடக நிகழ்வில் தலைமை தாங்கி நடத்தியதை நேரடியாகப் பார்த்து அவரின் தலைமை தாங்கும் பண்பினை வெகுவாக மெச்சிப் பாராட்டியுள்ளேன்.


அவரின் பேரப்பிள்ளையான 05 வயது சிறுமி ஷாமின் பூர்விகாவின் நடனத்தினை நகர மண்டபத்தில் பார்த்து பாராட்டியுள்ளேன். பேரன் சாகித்தியன் பேரனாருடன் நான்கு, ஐந்து மேடைகளில் நடித்ததனை பார்த்து ரசித்து பாராட்டியதுடன் கலைக் குடும்பத்தின் பிள்ளை முதல், பேரப்பிள்ளை வரை வளர்ந்து வளர்க்கப்பட்டு வருவதனை கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. கலாபூஷணம் குழந்தை ஆசிரியர் அடைந்த கஸ்டங்கள் துன்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பது போல் அவர்களின் பிள்ளைகள் கொண்ட கலை ஆர்வத்தினைக் கண்டு இந்த கலைஞன் வளர்த்த கலை வாழும், கலை வளரும் என்று பெருமையுடன் வாழ்த்தி நிற்கின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக குழந்தை மாஸ்ரரின் மனைவி அவருக்கு அன்று தொடக்கம் இன்றுவரை வழங்கி வரும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் சொல்லில் அடங்கா.

குழந்தை ஆசிரியருக்கு 1982ஆம் ஆண்டு முருங்கன் மகாவித்தியாலயம் நடத்திய பாராட்டு விழா தொடக்கம் இன்றுவரை நடந்தேறிய புனித சந்தியோகுமையோர் இரண்டு இரவு நாட்டுக்கூத்து நிகழ்வுவரை நடந்த கூடுதலான பாராட்டு நிகழ்வுகளில் பங்கேற்று அவருக்கு வழங்கப்பட்ட கௌரவிப்பு, பட்டங்களையெல்லாம் கண்டுணர்ந்து இருக்கின்றேன். அவரின் கலைச்சேவையை பாராட்டிய, போற்றிய, வாழ்த்திய, கலைஞர்களின் வார்த்தைகளைக் கேட்டு இவர் எமது மாதோட்டத்தின் கலைக்களஞ்சியம், எமது மாதோட்டம் பெற்று எடுத்த முத்து, எமது சொத்து என இந்தக் கலைவல்லுனனை வாழ்த்தி நிறைவுசெய்கிறேன். ■

நறவுகுக்குந் தும்பை மலற் றெடயல் மார்ப
னாசிரியன் கவிஞர் சபைத்தீபமானேன்
பொறை சாந்தந் தாட்சி மரியாதை நேர்மை
பொருந்த குண மிகுந்துலவு புலவோர் நேசன்
குறை தவிர்மா முருங்க னெழில் நகரவாசன்
குலவு செப தியான் புதல்வன் குழந்தையாசான்
முறை திகழ் சந்தியோகு மையோர் பேரிற் செந்தேன்
மதுரித தண்டமி ழிசைப்பண் வரைந்திட்டானால்

புலவர் வி.மொத்தம் கபிரியேல்
சுண்டிக்குளி, முருங்கன், மன்னார்.

நன்றி: புனித இயாகப்பர் இன்னிசைப் பாடல்கள் (1967)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை ஆசிரியர் ஒரு முன்னுதாரணம்



**திருமதி ஜெயாபாலாஜி**
எழுத்தாளர்,
மாவிலங்கேணி, முருங்கன்,
மன்னார்.

குழந்தை மாஸ்ரர் என்று எண்ணும் போதே முருங்கன் முத்தமிழ் கலாமன்றமே முதலில் நினைவுக்கு வருகிறது. அமைதியான, அருமையான அந்த நாட்களில் முத்தமிழ் கலாமன்றத்தின் நிகழ்வுகள் என்றால், முதல் வரிசையில் நாங்கள் இருப்போம். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தைப் பொறுத்தவரையில் அதில் பங்கேற்கின்ற ஒவ்வொருவரும் தம் பாத்திரத்தை திறம்படவே செய்வார்கள். யாரிலும் எந்தக் குறையும் சொல்ல முடியாத வாறு நிகழ்த்திக் காட்டுவார்கள். இத்தனை பேருடைய திறமைகளையும் ஒருங்கமைத்து, ஒழுங்கமைத்து, உருவாக்கிக் கொடுப்பது ஆசிரியர் குழந்தை அவர்களின் பொறுப்பாக இருக்கும். நாட்டுக்கூத்து, நாடகங்களைப் பொறுத்தவரை அரசவேடம் அவருக்கு கனகச் சிதமாகப் பொருந்தும். அந்த நடை, அந்தக் குரல் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய மைதானமே அதிரும். அச்சமும், அவலமுமாய் நாம் கழித்துவிட்ட முப்பத்தைந்து ஆண்டுகளில் எத்தனையை மீளப்பெற முடியாமல் போயுள் ளோம். கலைஞர் குழந்தை அவர்களின் கலைக் காலமும் அவற்றில் ஒன்று.

சமயப் பணிகளில் அவர் வகித்த பெரும் பங்கு எடுத்துரைக்கத் தக்கவை. "நின்னரு ளாலே நின்தாள் வணங்கி" என்பதற்கிணங்க இறைவன் அவருக்கு வழங்கிய இசை என்னும் பெரும் கொடையை இறை புகழ் பாடுவதற்காக அர்ப்பணித்தார். தவக்காலத்தை அர்த்தமுள்ள தாக ஆக்குவதில் குழந்தை மாஸ்ரரின் திருப் பாடுகளின் பாடல்கள் பெரும் பங்கு வகிக்கும். பெரிய வியாழன், பெரிய வெள்ளி அவர் இசைக்கும் அருட்பாடல்களால் பக்திமயமாக அமையும். அவை ஒலிநாடாக்களாக எல்லா ஆலயங்களிலும் இப்போது ஒலிக்கின்றன. முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய பொன்விழா, வைரவிழா நிகழ்வுகளின்போது அவர் பாடிய பாடல்கள் இப்போதும் நினைவில் நிற்கிறது.

எங்கள் முருங்கன் கிராமத்தவர்கள் மரணச் சடங்கின்போது குழந்தை மாஸ்ரர் வந்து 'கல்வெட்டு' பாடுவதை மிகப் பெரிய கௌரவ மாகக் கருதுவார்கள். தனது பணிகள் மத்தியிலும் யார் அழைத்தாலும் வந்து பாடுவார். பிறரின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்கின்ற மிகப்பெரிய பண்பு அவரிடம் இருந்தது. "அழுவா ரோடு அழுங்கள் மகிழ்வாரோடு மகிழுங்கள்" என்கின்ற தேவ வார்த்தையின்படி வாழ்கின்றவர். உடல் நலம் குன்றி கொழும்பு சென்று, திரும் பிய பிறகு கூட, இன்னொருவரின் துணையோடு மரணச் சடங்குகளில் அவர் கலந்து கொண்டி ருக்கின்றார்.

ஓர் ஆசிரியராக தன் கடமைகளை அவர் சிறப்பாகச் செய்தார். அவர் ஓர் ஆசிரி யராக இருந்தபோதும் புகழ்பெற்ற ஒரு கலைஞனாக இருந்தபோதும் பெரியவர்களில் முக்கியமாக மூத்த ஆசிரியர்களில் அவர் பெருமதிப்பு வைத்திருந்தார். இந்த வகையில் ஆசிரியர்களான என் பெற்றோரின்முன் அவர் காட்டிய பணிவையும் பெருமதிப்பையும் நான் பார்த்து வியந்திருக்கின்றேன். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்றிருந்த காலத்தில் வந்து பார்த்து அவர் காட்டிய அன்பையும் மதிப்பையும் கண்டு குழந்தை மாஸ்ரர்மீது கொண்டிருந்த மரியாதை உயர்ந்திருக்கிறது. அவரின் அன்புத் துணைவி யாரும் அவரோடு பிறரின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளுவார்.

ஒரு மனிதன் என்னதான் திறமையான வனாக இருந்தாலும், எத்தனை சாதனைகளைச் செய்தாலும் அவனது தனிப்பட்ட வாழ்வு, அவனது குடும்ப வாழ்வு எடுத்துக்காட்டானதாக அமையாவிட்டால் அவன் ஒரு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவனாகவே இருப் பான். அந்தவகையில் தன் கலைப்பணிகளுக்கு மத்தியிலும், அவர் குடும்பத்தையும் சிறப்பாக அமைத்துக் கொண்டார். அவருடைய மூன்று புதல்வியரும் கல்வியில் சிறந்த பட்டதாரிகளாக விளங்கி, பதவி வகிக்கிறார்கள். இதிலே மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் இவர்கள் கல்வி கற்றது முருங்கன் மகா வித்தியாலயத்தில்தான். முருங்கன் மகா வித்தியாலயத்தில் இருந்துதான் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசித்தார்கள்.

ஐந்தாம் ஆண்டிலேயே அடுத்த ஊருக்கு அனுப்பிவிட்டு அவதிப்படுகின்ற பல பெற்றோருக்கு குழந்தை மாஸ்ரர் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றார். ஆசிரியர் குழந்தை அவர்களின் கடைசி மகன் அருட்பணியாளராக அன்புப்பணி ஆற்றுகின்றார். ஆசிரியரின் மருமக் கள் வைத்தியராகவும், ஆசிரியராகவும் முருங் கன் கிராமத்துக்கு சிறந்த பணியாற்றுகின் றார்கள். கல்வியில் சிறந்தவர்களாக தன் குடும் பத்தை அமைத்துக் கொண்டதில் அடுத்தவர் களுக்கு முன்மாதிரியாக அவர் திகழ்கின்றார்.

சிறியவளான எனக்கு, ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை சொல்லுவார். பத்திரிகைகளில் வெளியாகின்ற கவிதைகளைப் பாராட்டி உற்சாகமூட்டுவார். அவருடைய சமய, சமூக, கலைப் பயணத்தில் அதை அனுபவித்தவள் என்ற வகையிலும், அதனால் பயனடைந்தவள் என்ற வகையிலும், அவற்றினால் ஊக்கம் பெற்றவள் என்ற வகை யிலும் அவருக்கு என் சிரம் தாழ்த்திய வணக்கத் தையும் நன்றியையும், வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி நிற்கின்றேன். அவர் உடல் நலத்தோடு உள அமைதியோடு இன்னும் பல்லாண்டு வாழ யேசுவை வேண்டுகிறேன்.

இலக்கியவாதிகளை வாழும்போதே வாழ்த்துகின்ற, கௌரவிக்கின்ற முயற்சியை முன்னெடுக்கின்ற அனைவருக்கும் கலை உள்ளங்களின் நெஞ்சார்ந்த நன்றிகள். ■

**மன். முருங்கன் மெதடிஸ்த சேகர முகாமைக்குரு**
**அருள்திரு. S.K. ஜெபரத்தினம் அவர்களின் ஆசிச்செய்தி**

கலைத்துறையில் செபமாலை ஆசிரியர் அவர்கட்கு மன்/முருங்கன் மகா வித்தியாலயம் பாராட்டுவிழா எடுப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அவர் மகா வித்தியாலயத்திற்கு செய்த தொண்டினை அளவிடமுடியாது, மன்னார் மாவட்டத்தில் மாத்திரமன்று தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் அவ்விடங்களில் உள்ள வித்தியாலயங்கள் அனைத்தும் மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தின் கலை வளர்ச்சியை அறிவதற்கு மூலகாரணமாக இருப்பவர் திரு.செ.செபமாலை (குழந்தை) ஆசிரியர் அவர்களே.

திரு.செ. செபமாலை ஆசிரியர் ஒரு தனிச்சிறப்பு மிக்க கலைஞர். அவர் கலைத்திறன் இறைவன் அவருக்கு கொடுத்திருக்கும் வரம். வரமளித்த இறைவனின் அருளும் ஆசியும் என்றும் குழந்தை ஆசிரியருடன் இருப்பதாக.

**நன்றி: கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவேந்தன் 'குழந்தை'

எஸ். ஏ. இராசநாயகம்
ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்,
கற்கிடந்தகுளம்,
மன்னார்.



மன்னார் மாதோட்டம் கிராமியக் கலைகளுக்கு பெயர் பெற்ற பிரதேசமாகும். இங்குள்ள கிராமங்கள் தோறும் அவற்றிற்குரிய பிரத்தியேகமான நாட்டுக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை மாதோட்ட கிராமிய சிறப்பு அம்சமாகும். நாட்டுக்கூத்துக் கலைக்கு மன்னார் மாவட்டத்திலே 'குழந்தை மாஸ்ரர்' என அன்போடு அழைக்கப்படும் செ.செபமாலை என்பவரது நாமம் பிரபல்யமானது. அவரைப் பற்றி தெரியாத அறியாத நபர் யாருமில்லை என்றே கூறலாம். கிராமங்களில் எல்லாம் அவரின் பெயர் பிரபலமானது. ஏன் ஈழத்திரு நாட்டிலே அவரின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

இவரின் பல நாடகங்கள், வில்லிசைகள், இசைநாடகங்கள் அகில இலங்கை ரீதியிலும் மாகாண, மாவட்ட மட்டத்திலும் மேடையேற்றப்பட்டு பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்றுள்ளன. 'வீரத்தாய்', 'கல்சுமந்த காவலர்கள்', 'யார் குழந்தை', 'அன்புப் பரிசு', 'பணமா கற்பா', 'வீரனை வென்ற தீரன்' போன்ற நாடகங்கள் பல இடங்களில் பலமுறை மேடையேற்றப்பட்டு இன்றும் மக்கள் மனதில் அழியாமல் உள்ளன.

சிரித்த முகம், பண்பான குணம், பரிவான பேச்சு, எளிமையான போக்கு, அன்பான விருந்தோம்பல், பெரியோரை மதிக்கும் பண்பு, இறை பக்தி, நேர்மை இவைதான் ஆசிரியர் குழந்தையின் வடிவம்.

இயற்கை எழில் கொஞ்சும் முருங்கன் கிராமத்தில் 08.03.1940இல் பிறந்தார். இவரின் தந்தை மரியான் செபஸ்தியான், தாயார் பெயர் செபமாலை. அக்காலத்தில் இவரின் தந்தை பிரபல்யமான நாட்டுகூத்துக் கலைஞர். பெயர் பெற்ற அண்ணாவியாரும் ஆவார். உடன்பிறந்த நான்கு சகோதரர்கள், ஐந்து சகோதரிகளில் ஆறு பேர் தற்போது வாழ்கின்றார்கள். இவரது மூத்த சகோதரர் சீமான். இளையவர்களான மாசிலாமணி, யேசு, சகோதரி எலிசபேத் இவரது கலை வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றவர்கள். இவர்களும் கலையில் சகலகலா வல்லவர்கள். மனைவியும் கூட சிறந்த கலைஞர் ஆவார்.

தனது க.பொ.த. (சா.த) வரை முருங்கன் பாடசாலையில் கற்று, சித்தியெய்தி, ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயின்று, 01.02.1960இல் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

17.08.1963இல் நானட்டான் ஆவணத்தைச் சேர்ந்த சவரிமுத்து றோஸ்மேரி என்பவரை திருமணம் செய்தார். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதற்கிணங்க சிறந்த துணைவியார் இவருக்கு இறைவன் வழங்கிய கொடையாகும். 'குழந்தை மாஸ்ரர்' அவர்களின் முன்னேற்றத்திற்கும், நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுதல்களுக்கும், அவரது வெற்றிகளுக்கும், அவர் பெற்ற விருதுகளுக்கும், பரிசில்களுக்கும் மனைவியின் பங்களிப்பு முக்கியமான காரணம் என்பது எனது அபிப்பிராயம். புன்னகை பூத்த முகம், பரிவான - அன்பான பேச்சு, இறைபக்தி , விருந்தோம்பல் பண்பு, யாருடனும் அன்பாகப் பழகும் தன்மை அவரது மனைவியாரின் சிறப்பாகும்.

இக்குடும்பத்திற்கு 06 பிள்ளைகள். 03 ஆண், 03 பெண். இவர்களின் 05 பேர் திருமணம் செய்து தற்போது சீரும் சிறப்போடும் வாழ்கிறார்கள். மகன் ஒருவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு இறைபணி புரிகின்றார். அவர்தான் அருட்தந்தை செ. அன்புராசா O.M.I.. சிறந்த பிரசங்கி. மகன்மார் இருவர் 20 வருடங்களுக்கு மேலாக பிரான்ஸ் நாட்டில் குடும்பத்துடன் வாழ்கின்றார்கள். இவ்விருவரும் பிரான்ஸ் நாட்டில் தமிழ்க் கலைத்தாய்க்கு சேவையும் செய்துகொண்டுதான் வாழ்கிறார்கள். நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள், வில்லுப்பாட்டுக்கள் , இசைக் கச்சேரிகளை மேடையேற்றி கலைத்தாய்க்கு சேவை செய்கின்றார்கள்.

மகள்மார் திருமகள், மலர்விழி, கயல்விழி மூவரும் பட்டதாரிகள். திருமகள், மலர்விழி ஆசிரியர்களாக முருங்கன் மகா வித்தியாலயத்திலும், கயல்விழி இலங்கை வங்கி (B.O.C.) மன்னாரிலும் கடமை புரிகின்றார்கள். திருமகளின் கணவர் ப. சந்தியோகு, முருங்கன் பாடசாலை அதிபராக சிறந்த சேவை செய்து வருகின்றார். மலர்விழி அவர்களின் கணவர் Dr. மரியநாயகம் ஒஸ்மன் சாள்ஸ் முருங்கன் பிரதேச வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமை புரிகின்றார். எந்நேரமும் சிரித்த முகம், நோயாளிகளிடம் பரிவான - அன்பான வார்த்தைகள், முகம் கோணாத தொடர் சேவைகள் இவரது சிறந்த பண்புகளாகும். இளைய மகள் கயல்விழியின் கணவர் மன்னார் நீர்ப்பாசன திணைக்களத்தில் கடமை புரிகின்றார்.

ஆசிரியர் குழந்தையுடைய இளைய சகோதரி, அருட்சகோதரி எலிசபேத் அவர்கள் மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற புனித சிசிலியா பெண்கள் பாடசாலையில் பல வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். 2008ஆம் ஆண்டு இப்பெண்கள் கல்லூரிக்குச் சென்று நான் இவரைச் சந்தித்துள்ளேன். இவரது சேவையில் அக்கல்லூரி பல துறைகளிலும் முன்னிலை வகிப்பதை எனது மட்டக்களப்பு நண்பர்கள் மூலமாக அறிந்துகொண்டேன்.

ஆசிரியர் குழந்தை அவர்களுடைய முதல் ஆசிரியர் நியமனம் யாழ் / அல்லைப்பிட்டி றோ.க. பாடசாலையாகும். பின்னர் அடம்பன், கம்பளை, முருங்கன், அரிப்பு, இசைமாலைத்தாழ்வு போன்ற பாடசாலைகளில் சேவை புரிந்து இறுதியாக 1983 - 2000ஆம் ஆண்டு வரை தனது ஒய்வு பெறும்வரை 17 வருடங்களாக எனது கற்கிடந்தகுளம் கிராமப் பாடசாலையில் அதிபராக சேவையாற்றியுள்ளார். இப்பாடசாலையில் இவர் கடமை புரிந்த காலங்களில் இவரால் பயிற்றுவிக்கப்பட்ட நாடகங்கள், வில்லிசைகள், இசைநாடகங்கள் பாடசாலை மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் முதல் இடத்தைப் பெற்று விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டன. இவருக்கு விருப்பமான கிராமம் கற்கிடந்தகுளமாகும். கிராமத்து நன்மை, தீமை, கோயில் திருவிழாக்களில் இவரின் ஈடுபாட்டை எமது கிராமத்தில் காணலாம்.

குழந்தை மாஸ்ரர் அவர்களால் 1964ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் இன்னும் சிறப்புடன் இயங்கி கூடிய விரைவில் தனது பொன்விழாவை எட்டவுள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும். தலைவராக இருந்து அம்மன்றத்தை முன்னோக்கி நகர்த்தி பல விருதுகளையும், பாராட்டுக்களையும் பெறச்செய்தது இவரது சாதனையாகும். பணச்சுமைகளையும், பல எதிர்ப்புகளையும் இக்காலகட்டத்தில் சந்தித்தவர். பலமுறை நோய்வாய்ப்பட்டுள்ளார். எல்லாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைகளையும் தாண்டி அம்மன்றத்தை இன்றுவரை சிறப்புற இயக்கிச் சாதனை படைத்துள்ளார்.

இவர் பெற்றுக்கொண்ட விருதுகளோ ஏராளம். இவர் தனது ஆசிரியப்பணி, கலைப்பணியோடு, தான் சார்ந்த சமூகத்தை முன்னேற்றுவதிலும் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். இவரது உறவினர்களிலிருந்து பலர் அருட்பணியாளர்களாக உருவானதற்கும், கல்வியில் முன்னேற்றம் அடைந்ததற்கும் இவரது ஊக்கமும், முயற்சிகளுமே முக்கிய காரணமாகும்.

முருங்கன் மத்தி கி.மு.ச. தலைவராகவும், புனித யாகப்பர் ஆலயச் சபைத் தலைவராகவும், ஐக்கிய நாணயச் சங்கத் தலைவராகவும், முருங்கன் சனசமூகநிலையத் தலைவராகவும் பல வருடங்கள் சேவை புரிந்து பல முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்துள்ளார்.

2009ஆம் வருடம் மனைவியுடன் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று மூன்று மாதம் வரை அங்கு தங்கியுள்ளார். அங்கு அவருக்கு புலம்பெயர் தமிழ்க் கலைஞர்களால் பாராட்டுவிழா நடத்தப்பட்டு 'கூத்திசைக் காவலன்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டு 'குழந்தை' என்ற மலரும் வெளியிடப்பட்டமை ஒரு சிறப்பு அம்சமாகும்.

இவரது குடும்பமே ஒரு கலைக்கூடமாகும்.

வாழ்க அவரது நாமம்.
வளர்க அவரது சேவை. ■

"நீலக் கடலின் ஓரத்திலே, காலமெல்லாம் கூடிக்குலாவும் ஞாலத்திலே, காலத்தினால் அழிக்க முடியாத சாலச் சிறந்த கலைஞர்கள், கவிஞர்கள், அழகுக் கோலமிட்டு, அன்புப் பாலமிட்டுக், கலைத்து விடாத கலைக்கப்பட முடியாத கலைக் களஞ்சியங்களை, கவினுறு படைப்புக்களை, கலையாலே சிலைவடிக்கும் கருத்தாக்கங்களை கருவாக்கி, எழிலுரு வாக்கி, உலவவிடுகிறார்கள். இத்தகைய அறிஞர்களை அன்னார் வாழ்ந்து வளம் பெருக்கும் காலத்திலே வாழ்த்திப் போற்றுவது தலையாய கடனாகும். இந்நிலையில் முதுபெரும் சிறப்பு வாய்ந்த முருங்கன் மாநகரிலே, தித்திக்கும் தமிழ் மணம் பரப்பும் முத்தமிழ் மன்றத்தின் முத்தமிடு நித்திலமாய், எத்திக்கும் ஒளிவீசும் தம்பிராசாவை, கலைதந்த எம்பிரானாகப் போற்றிச் சம்பிரதாயச் சடங்கு செய்வது தகுந்தது என நம்புகிறோம்.

பண்டுதொட்டு இன்றுவரை பலராலும் நாட்டுக்கூத்துக் கலைஞரென போற்றப்படும் செபஸ்தியான் பெற்றெடுத்த குழந்தையல்லவா நம் கலைஞர். எனவே இளவயதிலேயே கலைமெருகுடன் நலம் பல புரிந்தார். பரம்பரையாக பெற்றிருந்த சிறப்பம்சங்களுடன் அவரது விடாமுயற்சியும் இணைந்து களிநடம் புரிந்தது. கலையினூடகவே சமுதாய நிலையுயர மலை போன்ற சேவைகளைத் தலைசாய்ந்து செய்தார். எல்லாவற்றிலும் மேலாக அவர் ஓர் ஆசிரியராக விளங்கியமையும் கலைத்துறையின் கொண்டிருந்த ஆர்வத்திற்கு நெய்யூட்டி வளர்ப்பதுபோல அமைந்தது. மாணவனாக இருந்து நாட்டுக்கூத்து, நாடகங்கள் போன்றவற்றில் நடித்துப் புகழ்பெற்ற 'குழந்தை' அவர்கள் ஆசிரியராக மலர்ந்ததும் கலை மணம் கமகமவெனக் கிளர்ந்தது.

அவரது கலையூற்று குழந்தைப் படைப்புக்களாக பொங்கிப் பிரவாகித்தது. யாழ். அல்லைப்பிட்டி, அடம்பன், அரிப்பு, இசைமாலைத்தாழ்வு, பெரியமுறிப்பு போன்ற இடங்களில் ஆசிரியப் பணியுடன் இணைந்து செயற்பட்ட அவரது கலைப்பணி எமது பாடசாலை ஆகிய முருங்கன் மகா வித்தியாலயத்தில் மகோன்னதம் பெற்று மிளிர்கின்றது..."

**நன்றி: பாடசாலை சமூகம், கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக எழுச்சியின் முன்னோடி கலைஞர் குழந்தை



**அலஸ் மரியதாஸ்**
*(கவிஞர் அ. மன்னார்மணி)*
*முன்நாள் உதவி அரசாங்க அதிபர்,*
*மாந்தை மேற்கு, மடு,*
*மன்னார்.*

**மா**ண்புறு மாதோட்ட கலைத்துவ
புகழேணியின் உச்சத்தை எட்டிப்பிடித்து
அகவை எழுபத்திரண்டில் மணவாழ்வின்
ஐம்பதாண்டு நிறைவை நோக்கிய
கலைஞர் குழந்தை அவர்களின்
சேவைநலம் பாராட்டி அகமகிழ்ந்து நாளும்
புகழ்சாற்றி நின்று அன்னவரின்
வலுவான சாதனைகளை யான்
வரலாற்றுப் பதிவுகளாக்க
வியந்துமே வாழ்த்துகிறேன்.
நினைத்துப் பார்க்கிறேன் அந்த நாளை
ஆண்டு எழுபதுகள் என ஞாபகம்.
எனக்கு வயது பதினான்கு அப்போது,
மன்னார் மாவட்டக் கலைவிழா
முருங்கன் செம்மண்தீவுக் கலையரங்கு
நாடக நாட்டுக்கூத்துப் போட்டிகள்
நடுநிசி தூங்கியெழும் மக்கள் வெள்ளம்
நானுமங்கே பார்வையாளரில் ஒருவனாய்.
அதிரடியாய் ஒலித்தது கட்டியதாளம்
திடுதிடுப்பென எழுந்தமர்ந்தனர் இரசிகர்கள்
ஒலிபெருக்கியின் ஒலி உச்சஸ்தானியில்
முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் வழங்கும்
கலைஞர் குழந்தையின் புதுமைப்பெண்
நாடகம்,
யார் குழந்தை நாட்டுக்கூத்து நடிகர்களாக
அன்னவரின் துணைவியார், சகோதரர்,
மருமகன்
தந்தையார் மிருதங்கக் கலைஞர்.
யார் குழந்தையில் குழந்தையாகத்
தோற்றியவர் இன்று அருட்பணியாளராய்
விளங்கும்
அன்னவரின் அன்புமகன் அன்புராசா அவர்கள்.
அதிரடித்தாளம், துள்ளல் இசை
துடிப்பான நடிப்பு, எழுச்சியுறும் குரல்வளம்
கிழுகிழுப்பை ஏற்படுத்தின எனதுள்ளத்திலும்.
சமூக சமதள நோக்கில் உடன்பிறப்பென
பாசம் கிளர்ந்தெழுந்தது கலைஞரின்மேல்
அந்த உணர்ச்சிப் பெருக்கால் வீடுவந்ததுமே
பள்ளிக்கூடக் கொப்பித்தாள்களை எடுத்து
ஐந்தாறு பக்கங்கள் அப்படியே
உறவுகலந்த உரிமையுடன்
கலைஞர் குழந்தை அவர்களை
பலவாறு பாராட்டி எழுதிமுடித்தேன் - ஆனாலும்
அஞ்சலிட போதிய விளப்பமின்மையால் அன்று
அப்படியே கிடப்பில் வைத்துவிட்டேன்.
நினைத்துப் பார்க்கின்றேன் அந்நாட்களை!

சமூக ஏற்ற இறக்கங்களை சிறிதும் இழக்கிவிட விரும்பாத காலகட்டம். கலைஞர் குழந்தை அவர்களின் கலைத்துவ எழுச்சி, பாரம்பரிய வழித்தோன்றல்களின் சமூக தொழில் கட்டுக்கோப்புகளை தகர்த்தெறிந்து கல்வியை அடித்தளமாகக்கொண்ட சமூக எழுச்சிக்கு வழிகோலியது எனின் மறுப்பதற்கில்லை. சமதள சமூக முன்னோடியாய் திகழ்வதற்கு முன்னோட்டமாய் விளங்கும் கலைஞர் அவர்களை பெரு மதிப்புடன் போற்றுகின்றேன்.

பழகுவதற்கு இனியவர், பண்புள்ளம் கொண்டவர். ஆசிரியராய், அதிபராய் அரும்பணி யாற்றியவர். பிரதேச, சமூக, சமய அமைப்பு களில் தலைமைப் பதவி வகித்து பெருந்தொண் டாற்றி வருகின்றவர். தற்போது சமாதான நீதிபதியாகவும் திகழ்கின்றார். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், நடிகர், நாட்டுக்கூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடகக் கலைஞர், இயக்குநர், அண்ணாவியார், ஒப்பனையாளர், இசைக் கலைஞர், பாடகர், தாளவாத்திய இயக்குநர் என்றவாறாக பன்முக ஆளுமை கொண்டவர்.


இன்பத் தமிழின் இதய ஓலம், அறப்போர் அறைகூவல். மரபுவழி நாடகங்கள், பரிசுபெற்ற நாடகங்கள், யாகப்பர் இன்னிசைப் பாடல்கள், நாம் மலர் 1, 2, 3, மாதோட்டம் கவிதைத் தொகுதி ஆகிய நூல்களின் ஆசிரியர். 1998இல் அரச இலக்கிய விழாவில் இவரது 'பரிசுபெற்ற நாடகங்கள்' என்ற நூலுக்கு சாஹித்திய விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

1999இல் கலாசாரத் திணைக்களத்தால் 'கலாபூஷண விருது'ம், 2000இல் வடக்கு கிழக்கு மாகாண சபையால் 'ஆளுநர் விருது'ம், 2005இல் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தால் 'தலைக்கோல்' விருதும் வழங்கப்பட்டன. முத்தமிழ் வேந்தர், திருக்கலை வேந்தன் முதலான பட்டங்களையும் பெற்றுள்ளார். பல தடவைகள் பல விழாக்களில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் நெறிப்படுத்தி நடித்த இசை நாடகங்கள், சமூக நாடகங்கள், வில்லிசைகள், நாட்டுக்கூத்துக்கள் ஆகியவற்றைப் பட்டியலிடுவதென்றால் நீண்டதாயமையும். இவரது கலைத்துவ, சமய, சமூக சாதனைகள் இன்னும் பலப்பல. மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்ல அகில இலங்கை ரீதியிலும் இவரது நாடகங்கள் பரிசில்கள் பல பெற்று சாதனைகள் படைத்துள்ளன.

எவ்வாறாயினும், என் நோக்கிலான கலைஞர் குழந்தை அவர்கள் பற்றிய பார்வையை முன்னிறுத்தி, உடல்உள நற்சுகதேகியாய் நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு மகிழ்வுடன் வாழ்ந்து சமூகத்திற்கு, மன்னார் மாவட்டத்திற்கு மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகிற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து கலைஞருக்கு வாழ்த்துக்கூறி நிற்கிறேன். ■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் துரோணர்



**திருமதி வசந்தி சுவாந்தக்குருஸ்**
*'கலைச்சுடர்'*
*கள்ளியடைஞ்சான், வட்டக்கண்டல்.*
*மன்/கருங்கண்டல் மகாவித்தியாலயம், மன்னார்.*

*முருங்கன் ஈன்றெடுத்த முத்தமிழ் கலா மன்றத்தின் கலைமுத்தான குழந்தை ஆசிரியரும் காத்தான்குளம் பெற்றெடுத்த ஓவிய நாடக கலைத்திறன் கொண்ட திரவியம் (இம்மனுவேல்) ஆசிரியரும் இணைபிரியா நண்பர்கள். இவர்களின் இணைபிரியா நட்பிற்கு உரமிட்டது இவர்கள் இருவரிடமும் விளங்கிய கலை ஞானமே. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே இவர்களது நட்பு துளிர்விட்டது என்பதை என் தந்தையார் மூலம் அறிந்திருந்தேன். இவர்கள் இருவரும் அன்போடு நெருங்கிப் பழகிய அந்தக் காட்சி இன்னும் என் கண்முன் நிழலாடுகிறது. எனது சிறு பராயத்திலே எனது குடும்பத்தினருக்கும் ஆசான் அவர்களின் குடும்பத்தினருக்கும் இடையே இருந்த உறவைக் கண்ட நான் இவர்கள் எங்களது நெருங்கிய உறவினர்கள் என எண்ணியதுண்டு. அந்த அளவிற்கு இவர்களது நட்புறவு நெருக்கமாக இருந்தது.*

*எனது தந்தையார், ஆசான் அவர்களை 'குழந்தை' என்று அன்பாக அழைப்பது இன்றும் என் காதில் ஒலிப்பது போன்று இருக்கின்றது. கலையோடு கலை கைகோர்த்து நடந்தது போன்று எனது குடும்பமும் ஆசான் அவர்களின் குடும்பமும் கலை வாழ்வில் கைகோர்த்து களிப்புற்ற அந்த நாட்களை மறக்க முடியாது. எங்கெல்லாம் குழந்தை ஆசிரியரின் நாடகம் மேடையேறுகிறதோ அங்கெல்லாம் திரவியம் ஆசிரியரின் ஒப்பனை காட்சியளிக்கும். குழந்தை ஆசிரியரும் மனைவியும் நடிகர்கள். திரவியம் ஆசிரியரும் மனைவியும் ஒப்பனையாளர்கள். இரு நண்பர்களின் உறவு இங்கு குடும்ப உறவாக உருப்பெற்றது. குழந்தை ஆசிரியரின் நாடகமும், திரவியம் ஆசிரியரின் ஒப்பனையும் இணைந்து மேடையை 'அசைக்க' வைத்து பெரும் பாராட்டுகளோடு நிறைவுகண்டு மகிழ்வது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கின்றது.*

*கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் போன்ற இன்னும் பல இடங்களுக்கு நண்பர்கள் இருவரும் முன்செல்ல நாடகப் பெட்டிகளுடன் நடிகர் பட்டாளங்கள் பின்செல்லும் காட்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். மீண்டும் வருமா இப்படியொரு காலம்? யார் குழந்தை, கல் சுமந்த காவலர்கள், வீரத்தாய் போன்ற இன்னும் பல நாடகங்கள் கண்ணுக்கு விருந்தாகிக் கொண்டிருந்ததை மறக்கத்தான் முடியுமா?*

*"நாளை மட்டக்களப்பில் நாடகம் உடனே புறப்பட்டு வாருங்கள்" என்று முதல் நாள் காலை எட்டு மணிக்குத் தபால் அட்டையை ஆசான் அவர்கள் அனுப்பி விடுவார்கள். அது பத்து மணியளவில் என் தந்தையாருக்கு கிடைத்து விடும். அதைக் கண்டு விட்டால் எனக்கும் குதூகலம். அடுத்த நிமிடமே எனது தந்தையார் குடும்ப சகிதமாக பயணத்திற்கு பெட்டி கட்டி விடுவார். இவ்வாறு தோளுக்குத் தோளோடு துணை நின்று இவர்கள் இருவரும் கலை வாழ்விலே மகிழ்வடைந்தனர். இப்படியாக வளர்ந்து வந்த உறவு கலை வாழ்வோடு மட்டுமல்ல, அன்றாட வாழ்வோடும் பின்னிப்பிணைந்தது. இரத்த பாசத்தில் மலர்ந்த உறவைப் போன்று வலுப்பெற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரின் குடும்பங்களிலும் நடைபெறும் எல்லா நிகழ்வுகளிலும் இரு குடும்பங்களும் கலந்து மகிழும். அவர்களின் ஆலயத் திருவிழாவிற்கு முதல் நாளே நாங்கள் குடும்பத்தோடு அங்கு சென்று அவர்களின் வீட்டில் உறவுகளோடு உறவாக, தங்கி நின்று திருவிழாவில் கலந்து வந்த நாட்களை நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. அக்காலத்தில்தான் ஆசான் அவர்கள் 'நாம்' எனும் நூல் ஒன்றை வெளியிட்டார். அதன் மூலம் தன் கலை வாழ்விற்கு கரங்கொடுத்த உறவுகளின் பெருமையை தெரியப்படுத்தினார். இவ்வாறு கூட்டுக்கலையான தன் நாடகத்திற்கு ஒப்பனையாளர்களாக கரங்கொடுத்துவந்த எனது தந்தையாரினதும், தாயாரினதும் செயற்பாட்டினை குறிப்பிட்டு வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக தூய்மையான நட்பில் பின்னிப்பிணைந்து, இரண்டறக்கலந்த ஆசான் அவர்களின் கலைவாழ்வோடு எனது தந்தை இணைந்திருந்த காலத்தில் நான் ஏழு வயது நிரம்பிய சிறுமியாக இருந்தேன். கலை ஞானம் நிறைந்திருந்த ஆசிரியரோடு இணைந்திருந்த கலையார்வம் மிக்க எனது தந்தையும் தாயும் எனக்கு நடனப் பயிற்சி அளித்து, ஆசிரியர் அவர்களின் பின்னணி இசை உதவியோடு அவர்களின் நாடகங்கள் மேடையேறும் அரங்குகளில் எனது நடனத்தையும் அரங்கேற்றியதுண்டு. இறைவன் எனக்குத் தந்த கொடையாகிய கலையாற்றலுக்கு எனது தந்தையும் தாயும் இந்நூலின் கதாநாயகனுமாகிய ஆசான் அவர்களுமே காரணம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் கூறி நிற்பதில் பெருமை அடைகின்றேன்.

காலங்கள் நகர்ந்தது. எனது தந்தையாரும் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களைப் படைப்பதில் ஆர்வம் கொண்டார். எழுத்திலே வடித்தார். எழுத்தில் வடித்த கலைக்கு உயிர் கொடுக்கும் ஒரு கருவியாக என்னை உருவாக்கினார். நானும் கலையார்வத்துடன் வளர்ந்தேன். திடீரெனக் காலன் வந்து எனது தந்தையின் உயிரை சூறையாடினான். இந்த மரணமே அன்புறவில் கலந்திருந்து இணைபிரியாத உண்மையான மேலான நட்பை வளர்த்து ஒன்றித்திருந்த நண்பர்களான எனது தந்தையையும், இந்நூலின் கதாநாயகரான ஆசிரியர் அவர்களையும் பிரித்தது. அதுவரை நான் அறிந்த காலத்தில் இருந்து அவர்கள் பிரிந்திருந்ததை நான் அறிந்ததே இல்லை.

எனது தந்தையின் திடீர் மரணத்தை அவருக்கு தெரியப்படுத்தினோம். அந்தக் கணமே தன் மாட்டு வண்டியைப் பூட்டிக் கொண்டு தனது குடும்பத்தோடு தன் அன்பு நண்பனுக்கு இறுதி விடை கொடுத்து வழியனுப்புவதற்காக வந்து இறங்கினார். ஆசான் அவர்கள் பழகிய நாட்களில் எனது தந்தை தன்னோடு கொண்டிருந்த நட்பின் பெருமையைக் கவியாக வடித்துப் பாடி தன் அன்பு நண்பனை ஆண்டவரின் இல்லத்திற்கு வழியனுப்பி வைத்தார். அது மட்டுமா அவரது ஆன்ம சாந்திக்காக நிறைவேற்றிய திருப்பலியில் பாடகர் குழாமாக இருந்து சிறப்பித்து திருப்பலியிலே என் தந்தையின் ஆன்ம சாந்திக்காக அவர் வேண்டியதை நாம் மறக்கவும் இல்லை.

ஆம்! தன் நண்பன் இறந்தாலும் ஆசான் அவர்கள் தனது நண்பனின் குடும்பம் மீது கொண்ட நட்பைப் பிரித்து விடவில்லை. என் தந்தையிடம் நான் நடிப்பினைக் கற்றுக் கொண்டேன். எனக்கு நாடகம் எழுதும் திறன் இருந்தாலும், அவரிடம் அதைக் கற்றுக்கொள்வதற்கு முன் அவர் எம்மை விட்டு திடீரென மறைந்து விட்டார். இந்த இழப்பை நிவர்த்தி செய்வது யார்? என்ற ஏக்கத்தோடு இருந்த எனக்கு என் மனக்கண் முன் ஆசிரியர் அவர்களின் முகம் நிழலாடியது.

துரோணரை நாடிய ஏகலைவன் போல் எனது தந்தையாரின் உயிர் நண்பரான ஆசிரியரிடம் உரிமையோடு சென்றேன். கேட்டேன், அறிந்தேன். அவரும் நல்ல மனத்தோடு என்னை வாழ்த்தி தனது கூத்து அடங்கிய நூல்களை எனக்குத் தந்து நானும் கலையுலகில் நடைபோட வழிகாட்டினார். அவரிடம் காணப்பட்ட கலைத்திறன்களை உற்று நோக்கினேன். அதை என் கலைப்படைப்புகளிலும் செயல் வடிவமாக்கினேன். இன்று எனது கூத்து பலராலும் போற்றப்படுகிறது என்றால் ஆசிரியர் அவர்களை எனது குருவாக கொண்டு செயற்படுகின்றமையே அதற்கு காரணம் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் கூறி நிற்கின்றேன்.

இந்த இரு கலைஞர்களுக்குமிடையே இருந்த நட்பு தூய்மையானதாக இருந்தது. இவர்களிடையே போட்டி இருக்கவில்லை, பொறாமை இருக்கவில்லை, சுயநலம் இருக்க வில்லை. இவர்களது நட்பை எந்த தீய சக்திக ளும் இடைபுகுந்து பிரிக்க முடியாதிருந்தது. அந்த அளவிற்கு இவர்களின் நட்பு களங்க மற்றதாக இருந்தது என்பதை பெருமையோடு கூறுகின்றேன். இவர்கள் நட்புறவில் ஏற்றம் கண்டார்களே தவிர வீழ்ச்சியைக் காண வில்லை.

இந்த நட்பு வலுவடைந்து ஞான உறவாக உருப்பெற்றது. இந்த ஞான உறவு எனது தாயாரின் மூலம் இன்றும் வளர்ந்து வருகின்றது. ஆம், தொடரட்டும் இந்த அன்புறவு ஒரு தொடர் காவியமாக என்று வாழ்த்துவதோடு மலர்கின்ற இந்த இதழிலே எனது தந்தையின் விம்பமாக நான் காணும் எமது ஆசானின் கலை ஞானத்தின் புகழையும், என் தந்தையின் சார்பாக வாழ்த்துவதில் நான் பெருமகிழ்வடை கின்றேன். ■

"... இவரது (குழந்தை) நடிப்புப் பலம் கட்டட நிதியையும் எட்டாத அளவுக்கு கொட்டிக் கொடுத்துள்ளது. இணைந்த உள்ளம், சிலம்பின்சிரிப்பு, நளதமையந்தி, கவரிவீசிய காவலன், கண்டியரசன் போன்ற நாடகங்கள் இவரது நெறிப்படுத்தலினால் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் முதற்பரிசைத் தட்டிக்கொண்டன. இவற்றில் கண்டியரசனை வென்றுவிட யாராலும் முடியாது.

நடிப்புத் துறையை மட்டும் எடுத்துக்கூறின் அவரது திறமையை குறைவு படுத்துவது போலாகும். ஏனெனில் இசைத்துறை, கவிதையாக்கம் போன்றவற்றிலும் நிறைவு பெற்று திகழ்கின்றார். அவரால் யாத்த இயக்கப்பட்ட வில்லுப்பாட்டுக்கள், கதாபிரசங்கங்கள், ஏனைய இசைநிகழ்ச்சிகள் என்பன அகில இலங்கை ரீதியில் புகழ்பெற்றவை. அதுமட்டுமன்றி இலங்கை வானொலி மூலமாகவும் தமது கலைப்பணியைப் புரிந்து புகழ் பெறுவதுடன் எமது பாடசாலை மாணவர்களையும் இசை, கவிதைப் போட்டிகளில் பங்குபெறத்தக்க வகையில் வழிப்படுத்தி இலைமறைகாய் போன்ற கலைத் திறமைகளையும் வெளிப்படுத்தி வளர்க்க உறுதுணையாக இருக்கிறார்.

அவரது பல்வகைப்பட்ட கவிதைகள் கவியரங்குகளை அணிசெய்வதுடன் பத்திரிகைகளிலும் புத்தம் புது மலர்களாக மணம் பரப்புகின்றன. கடல்கடந்து தமிழகம் நோக்கி நடைபயின்ற கவிதைகள் பல அன்னாரின் கவித்துவ ஆற்றலுக்கும், ஆராமைக்கும் சான்று பகர்கின்றன. அவர் கிராமிய இலக்கிய ரீதியில் கவிதைகளை யாத்தளித்தமை கிராமியத்துறைக்கு உயிர் ஊட்டத்தை கொடுக்கக்கூடியதாய் அமைந்தது.

தனியொருவர் செய்யும் பணியைவிட, பலவகையிலும் ஒன்றுபட்ட மனிதர் பலர் கூடிக் குழுவாக இயங்கும் நிலை சமூகத்தின் உயர்ச்சிக்கு வழிவகுக்கும், என்ற தத்துவத்தின் வெளிப்பாடகத் தலைநிமிர்ந்த தம்பிராசா அவர்கள் தமது சொந்தக் கிராமத்தில் கலையார்வம் கொண்டோரை முத்தமிழ் கலாமன்றமாக நிலைப்படுத்தி அதற்குத் தலையாக நின்று கலைக்கோலமிடுகிறார்.

அம்மன்றத்தை மையமாகக் கொண்டுழைத்த குழந்தை அவர்களின் உள்ளத்தில் உறைந்திருந்த கருத்துக்கள் சரித்திர, சமூக, நாட்டுக்கூத்து, அண்ணாவி மரபு நாடகங்களாக உருப்பெற்றன..."

**நன்றி: பாடசாலை சமூகம், கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையினால் இறைவனைப் புகழ்ந்தவர்



**அருட்பணி க.அ.அருள்ராஜ் குருஸ்**
பங்குத்தந்தை,
முருங்கன்,
மன்னார்.

**வ**யலும் வயல் சார்ந்த அழகிய மருத நிலப்பகுதி முருங்கன் பிரதேசமாகும். கலை, கல்வி, ஆன்மீகம் எனப் பல்வேறுபட்ட துறைகளிலும் தனக்கென ஒரு சிறப்பிடத்தை வரலாற்றின் பக்கங்களில் பதித்துள்ள தனித்துவமான ஒரு கிராமம். இவ்வாறான சிறப்புகளுக்கு காரணம் இங்கே காணப்படும் நீர்வளம், நிலவளம் என்பவற்றுடன் கூடிய அறிவு வளர்ச்சி என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு வளம் கொழிக்கும் முருங்கனில் உள்ள ஒரு சிறிய கிராமம் முருங்கன் கமம் ஆகும். இக்கிராமத்தில் என்றும் அழியாத வரலாற்றுப் பதிவுகளைப் பல்வேறு துறைகளிலும் பதித்துள்ளவர்தான் கலாபூஷணம் திரு. செபஸ்தியான் செபமாலை அவர்கள். கலைஞர், 'குழந்தை மாஸ்ரர்' என்று பலருக்கும் நன்கு அறிமுகமானவர். கலாபூஷண, தலைக்கோல், சாஹித்திய, ஆளுநர் ஆகிய நான்கு விருதுகளை, மன்னார் மாவட்டத்தில் பெற்ற ஒரேயொரு நாடகக் கலைஞர் இவரென்பது எமக்கு பெருமையளிக்கின்றது. மாவட்டம் மட்டுமல்ல, நாடே இனங்கண்டுகொண்ட அற்புதக் கலைஞர்.

இறைவன் இவருக்குக் கொடுத்த கலைத்திறனை எவ்வாறு இறை சேவைக்காக இவர் பயன்படுத்தினாரென்பதை நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். கலையில் வித்தகனாகத் திகழ்ந்தாலும், அக்கலை வழி மறையைப் பரப்பிய எம் திருமறையின் சமயக் காவலனாகவும் இவர் வாழ்வது, இவர் கொண்ட ஆழ்ந்த இறைபக்தியின், இறையன்பின் வெளிப்பாடாகும்.

இவர் எமது மறையைத் தழுவிய பல்வேறு நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள் போன்றவற்றை எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளதுடன், புனிதர்கள், அன்னை மரியாள் பேரில் பல கவிகளையும் இயற்றியுள்ளாரென்பது இங்கே வியந்து குறிப்பிடத்தக்கதாகும். கிறிஸ்தவர்களின் வாழ்வில் தவக்காலம் என்பது மனமாற்றத்துடன் கூடிய ஆன்மீக புதுப்பித்தலின் காலம். எனவே இக்காலத்திற்குரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டும், ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு வழிகாட்டும் வகையிலும் பல்வேறு பாடல்களை உருவாக்கியுள்ளார். உதாரணமாக: இயேசு இறந்த பின் பாடும் பாடலான, "பூ முகத்தின் சாந்தி ஒளி மறைந்ததம்மா….." (வெண்பா), "இறைமகன் வழிதனை…." (தேவாரம்) என்பன எம் உள்ளங்களை உருக வைப்பவை. அதிலும் இவர் தனது இன்றும் மங்காத கணீரென்ற குரல் வளத்துடன் பாடினால் இவருக்கு நிகர் இவரே தான்.

இவற்றுடன் இவர் எம் பங்கிற்கு ஆற்றிய சேவை அளப்பெரியது. எமது பங்கின் மூத்தோர்களில் ஒருவராகத் திகழ்பவர். பங்கின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் தன்னையும் ஓர் ஏணிப்படியாக்கிக் கொண்டவர். தன்னுடைய இளமைப் பருவத்தில் அருட்பணி வில்வராச சிங்கம் அ.ம.தி பங்குத் தந்தையாக பணிபுரிந்த காலத்தில் முருங்கன் பங்கிற்கே தனித்துவமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிறிஸ்மஸ் கரோல்" நிகழ்வில் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டவர். இவ்வனுபவம்தான் பின்னைய காலங்களில் பங்கு ஒளிவிழாக்களை தமது நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற வற்றினால் அலங்கரிக்கக் காரணமாக அமைந் ததென்று கூடக்கூறலாம். பங்கு பாடகர் குழாமினை வழிநடத்தி, நெறிப்படுத்தி, பதி னெட்டு ஆண்டுகளாக 'ஆர்மோனியம்' வாசித்து திருப்பலி வழிபாடுகள் சிறக்க இசையினால் இறைவனைப் புகழ்ந்தவர். தவக்காலத்தில் புனித வாரத்தில் புலம்பல், வியாகுல பிரசங்கம், ஒப்பாரி, விருத்தம் இவைகளை நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக பாடிவந்துள்ளார். மூன்று தடவைகள் திருப்பாடுகளின் காட்சியைத் தயாரித்து, நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்துடன் பங்குச் சபையில் இருபது வருடங்களுக்கு மேலாக அங்கத்தவராக இருந்து, பங்கின் வளர்ச்சிக்காக, ஆன்மீக வாழ்வின் முதிர்ச்சிக்காக அயராது அரும்பணி ஆற்றியமை இறைபணியில் இவர் கொண்டி ருக்கும் விருப்பத்தையும், மக்கள் சேவையில் இவருக்குள்ள ஆர்வத்தையும் எடுத்துக் காட்டு கின்றது. ஆலயத் திருவிழாக்கள் சார்ந்த நயம்மிக்க, பக்தியுடன் கூடிய கவிகள் எழுதுவது, வாழ்த்துப்பாக்கள் எழுதுவது என்பன இவரது இன்னோரென்ன பணிகளாகும்.

இவரது அயராத பணிக்காக, இவரைப் பங்கிற்குக் கொடையாகக் கொடுத்த இறை வனுக்கு நன்றி கூறி, இறைவனின் ஆசீர் இவருக்குத் தொடர்ந்தும் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன். ■

"எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்! நாடகம் உடல் என்றால், அதன் தலை இயக்குனர். தலை இன்றி உடல் இயங்காது: தலையில் அமைந்துள்ள ஆற்றல்கள்தான் உடலை தமக்கு இசைய இயக்குகின்றன. அதேவிதம் ஒரு நாடகத்தின் போக்கை, தொனியை, அடிநாதமாக அமைந்துள்ள கருத்தை நாடகத்தின் பல்வேறு உறுப்புகளின் மூலம் எடுத்துக் காட்டும் பெரும் பொறுப்பு இயக்குநருடையது.

நாடகம் பார்வையாளர் மனத்தில் எந்த உணர்வுகளை எழுப்ப வேண்டுமோ, எந்தப் பொது உண்மையை உரைக்க எழுதப்பட்டதோ, எந்தக் கருத்தையும் உட்பொருளையும், உரையாடல் மூலம், நடிப்பு மூலம், காட்சி அமைப்பு மூலம், ஒப்பனை மூலம், ஒலி ஒளி அமைப்பு மூலம் இழை யோடவிட்டு, அழுத்தியும் வழுத்தியும் இலேசாகச் சுட்டிக்காட்டியும் இயக்குனர் நாடகத்தை இயக்கவேண்டும். ஆக நாடகத்தின் ஒவ்வொரு அம்சமும் இயக்குநரின் பொதுப்பார்வையில் இருக்கவேண்டும்..."

கலாநிதி நீ.மரியசேவியர், கலைமுகம், 1981 மார்ச், பக்.41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கூத்துக்கலை முதுசம் கலைஞர் குழந்தை



**செ. மாசிலாமணி**
*கலாபூஷணம், நாட்டார்பாடல் கலைஞர்,*
*ஆவணம், மன்னார்.*

1

மன்னாரின் தமிழ்க் கலைகள் மாண்புடன்
வளர்ச்சிபெற
என்னேரமும் கலைத்தாய்க்குப் பணிபுரிந்திட்ட
பொன்னான கலைஞர் எம் புலவர் குழந்தையை
இன்னேரமிதுதனிலே இன்பமுற வாழ்த்துகின்றேன்.

2

முத்தமிழ் கலாமன்றத்தை முதுபெரும் கலை
நிறுவனமாக்கி
எத்தனை இடர்பிணி துன்பங்கள் வந்திடினும்
அத்தனையும் தான்ஏற்று ஆளுமையில் நிலைத்து
நின்றீர்
கத்தனருள் பாலித்திட கலைஞரை நான்
போற்றுகிறேன்.

3

கவிஞராய், கலைஞராய், கலாபூஷணமாய்,
திருக்கலை வேந்தனாய்
புவிதனில் புலவராய், தலைக்கோல் விருது
பெற்றவரை
நவில்கின்றேன் சாஹித்திய, மாகாண, ஆளுநர்
விருதுபெற்ற
செவி இனிக்கப் பாவிசைக்கும் பாவல்லோனைப்
புகழ்கின்றேன்.

4

மாதோட்ட மண்ணிலே மறைந்திட்ட கலைகளை
பாலூட்டி வளர்த்தவாறு படியதனில் வெளிக்
கொணர்ந்தீர்
நாமூட்டி வளர்க்காமல் நாமிதனை நழுவவிடில்
தேனூட்டும் கூத்துக்கள் திரைமறைவாகிவிடுமே.

5

நடிகனாய் நாடக இயக்குநராய் கலைப்பணியை
படிதனிலே பாடகனாய் பல்வேறு ஆற்றுனராய்
நொடியதனில் பாவியற்றும் புலமை
நிறைவித்தகனாய்
கெடிநீடி மகிழ்ந்திருக்க அடியவன்நான்
வாழ்த்துகின்றேன்.

6

வில்லின்பா இசைத்தால் வெளிவருமே உம்திறமை
சொல்லினில் பேசிட தோன்றிடுமே உம் புலமை
எல்லையில்லாத உம் எழிலான கலைப்பணிகள்
தொல்புவியில் என்றுமே தூங்காது துலங்கிடுமே.

7

கூத்துக்கள் பழக்கியே கூத்தனாய் மாறினீர்
பாக்களைப்பாடியே பாடகனாய் தோன்றினீர்
கவிகளை இயற்றியே கவிஞராய் மிளிர்கின்றீர்
கல்வெட்டுப் பாடியே மனங்களில் ஒளிர்கின்றீர்.

8

பல்துறைக் கலைஞரை பாரினில் வாழ்த்துகின்றேன்
நல்மனம் கொண்டவரை நலம்பெற
போற்றுகின்றேன்.
கல்வாரி நாயகனாம் கர்த்தனருள் நிலைத்திருக்க
எல்லாம் நிறைவுபெற இறையருளை
வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்குயில் குழந்தை மாஸ்ரர்



**டொறத்தி யோகப்பர்**
*முன்னாள் ஆசிரியை,*
*முருங்கன் மகா வித்தியாலயம்,*
*பிரான்ஸ்.*

**க**டந்த காலத்துக் கனிந்த நினைவுகள் என் நெஞ்சை நிறைக்கின்றன. கண்களை நனைக்கின்றன. குழந்தை மாஸ்ரரின் கள்ள மில்லா வெள்ளை உள்ளமும், புன்னகை பொலியும் பொன்முகமும், கலையறிவும், மலை போலத் துயர்வரினும் நிலைகுலையாத நற்பண் பும், பணிவன்பும் உடன் பழகுவோரைப் பரவசப் படுத்தும்.

முருங்கன் மகாவித்தியாலயத்தில் முதல் ஆசிரிய நியமனம் பெற்று யாழ் நகரிலி ருந்து புறப்பட்டு, மிகுந்த மனக்கலக்கத்தோடு முருங்கன் கிராமத்திற்குள் நுழைந்த எனக்கு, பசும் நெல் வயல்களும், நெடிதுயர்ந்த பனஞ் சோலைகளும், மெல்லிளங்காற்றில் அசைந் தாடி, நல்லிசையுடன் முதல் வணக்கம் கூறின. இடைவழியில், குழந்தை மாஸ்ரர் குடும்பம் என்னைக் குதூகலமாக வரவேற்றது. வேண்டிய உதவி செய்வோம் எனப் பாசக்கரம் நீட்டியது. எனது உள்ளக் குழப்பம் நீங்கி மகிழ்ச்சியுடன், மனத் துணிவுடன் எனது ஆசிரியப் பணியைத் தொடங்குவதற்கு மாஸ்ரர் அவர்களின் பரிவன் பான உதவி எனக்கு உறுதுணையாயிருந்தது.

ஒருவர் எல்லோருக்கும் நல்லவராயிருப் பது கடினமானது. ஆனால், மாஸ்ரர் அவர்கள் தன்னலமற்ற, தியாகம் நிறைந்த, மனிதம் மலர்ந்த, எளிய, இனிய நற்பண்புகளால் எல் லோரையும் கவர்ந்தவர். குறையற்ற இறையன் புடன், அன்பான குடும்பத் தலைவனாக, நல்லாசானாக, நல்ல நண்பனாக, அரவணைக் கும் அன்னையாக, அனைவருக்கும் அன்பனாக அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொண்ட குழந்தையவர். அன்புப் பணியா ளனாக நற்செய்தி அறிவிக்கும் அருட்தந்தை அன்பும், புலம்பெயர் வாழ்விலும், இன்றுவரை இன்பமாக, ஆனந்தமாக நற்பண்புகளால் என்னைப் பெருமைப்படுத்தும் எனது அன்பு மாணவர்களும், சிப்பிக்குள் முத்தாக முருங்கன் மண்ணை முதன்மைப்படுத்தும் ஏனைய அவரது பிள்ளைச் செல்வங்களும், இல்லத் தலைவனுக்கு எல்லாமுமாய் உடனிருந்து அன்பறம் காக்கும் அன்புத் துணைவியாரும், மாஸ்ரர் அவர்களின் மாண்புக்கு மகத்தான சாட்சியங்கள்.

மாஸ்ரர் அவர்கள் தனது அன்பான வழி நடத்துதலினால் மாணவர்களின் பேரன்புக்கு உரியவரானார். உதிராத மென்னகையுடன், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமைய, எத்தகைய பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தீர்வு காணும் அறிவாற்றல் வாய்ந்தவர். அவரது ஆசிரியப்பணியின் மேன்மையும், திறமையும் அவரை முருங்கன் மகாவித்தியாலய உதவி அதிபராகப் பதவி உயர்த்தியது. மாஸ்ரர் அவர்கள் உதவி அதிபராகக் கடமையாற்றிய காலத்தில், சக ஆசிரியர்கள், மாணவர்கள், அவர்களின் பெற்றோர் என்ற வகையில் அவரது தொழிற்திறமை, பிரச்சினைகளைச் சுமுகமான முறையில் அணுகி வெற்றி காணும் ஆற்றல் என்பன வியக்கத்தக்கவை.

கலைக்குயில் குழந்தை மாஸ்ரர் அவர்கள், கலைப் பரம்பரையில் தோன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞர். அவரது குடும்பமே கலைக்கோயில், கலைச்சுரங்கம். முத்தமிழ்க் கலைகளும், அவரது மொழியழகில், குரல் வளத்தில் எழிலோடு நடமாடும். அவர் இசைக்கும் இசையின்பத்தில், இன்னுயிர்த் தமிழன்னை இனிதே களித்திடுவாள். பாடும் போதே, பாடல் மெட்டு மாறாது, விரல்களால் வாத்தியத்தில் விளையாடும் தனித்திறமை வாய்ந்தவர். மாதோட்டத்தில் மறைந்திருந்த கலைகளுக்குப் புத்தியிரளித்துப் பேணிக்காத்த பெருமைக்குரிய கலைஞர். கலைத் தொண்டிற் காகப் பணம், பொருள், இன்பம், உடல் நலம் எதையுமே பொருட்படுத்தாதவர்.

முப்பத்தேழு வருடங்களாக, முருங்கன் முத்தமிழ்க் கலாமன்ற இயக்குநராகக் கலைப் பணி ஆற்றி வருகின்ற கலைஞர் குழந்தை அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் நடிப்பும், தலைமைத்துவமும் கொண்ட கவிஞ ராகக் கௌரவிக்கப்பட்டமை, எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. இரண்டு இரவுகளாக இடம்பெற்ற நாட்டுக் கூத்தை, சில மணித்தியா லங்களில் நிறைவடையும் குறுகிய, விறுவிறுப் பான நாடகங்களாக மாற்றியமைத்த பெருமை, நமது கலைஞர் அவர்களையே சாரும்.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் சார்பில் கவிதைகள், பாடல்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி முதன்மை பெற்றார். அத்துடன், 'அறப்போர் அறைகூவல்' தொடங்கி 'மாதோட் டம், கவிதைத்தொகுதி' வரையிலாக வெளியிட்ட நூல்கள் பலரின் பாராட்டைப் பெற்றன. முத் தமிழ் வேந்தனாக, சிறந்த கலைஞராக, கவிஞனாகக் கலையுலகில் உலா வந்த குழந்தை மாஸ்ரர் அவர்கள் மன்னார் மாவட் டத்தில் முதன் முதலாக சாஹித்திய, கலாபூ ஷண, ஆளுநர் விருதுகளைப் பெற்ற முருங்கன் மைந்தனாக, முதன்மை பெறுகின்றார்.

இறைபற்றும், பிறரன்பும் நிறைந்த கலைஞர் குழந்தை அவர்களுக்கு, *02.09.2000* அன்று இடம் பெற்ற நாடக விழாவில், அதி வந்தனைக்குரிய மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் அளிக்கப்பட்ட 'திருக்கலை வேந்தன்' விருது, மற்றைய விருதுகளுக்கெல்லாம் மணிமகுடமாய் மிளிர்ந்து, இறையாசீரைப் பெற்றுக் கொடுத்தது.

முருங்கன் மைந்தன், எம் கலைகுயில் குழந்தை மாஸ்ரர் அவர்கள், மாதோட்டத்து முத்தமிழ் கலைஞராக மட்டுமன்றி, ஈழத்து, இலங்கைக் கலைஞராய், வரலாற்றுப் புகழ் பெற்றுச் சிறந்த கலைவல்லுனராக மிளிர்வது பெருமைக்குரியது. இறையருளும், அன்பும் என் றும் அவர் உடனிருந்து காக்க, உடல் உள நலன் களுடன், கலைக்காவிரியாக நீடூழி வாழ்ந்து வளம் பெற உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார்**
***பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009***



*Eastern University, Sri Lanka.*

*This is to certify that*

*has participated in the world theatre day festival programme of*
**"World Theatre Day Festival - 2005"**
*Conducted by the Department of Fine Arts, Faculty of Arts and Culture,*
*From 08.06.2005 to 10.06.2005*

Head/ Fine Arts & Dean/Arts & Culture | Vice - Chancellor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை செபமாலை யார் இவர்?




**பி.றோசலின்**
B.A.(Jaffna)
*ஆசிரியை,*
*பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை,*
*மன்னார்.*


**க**லைஞரும் ஆசிரியருமாகிய திரு.செபஸ்தியான் செபமாலை (குழந்தை) அவர்களைப் பற்றி எழுதுவதற்கு இந்த சிறியவளுக்கு தகுதி இல்லை என்பது எனக்குத் தெரியும். எனினும் நான் அறிந்தவற்றையும் கல்விமான்கள், பெரியோர்கள், கலை விற்பன்னர்கள் இவரைப் பற்றி சொல்லியவை சிலவற்றையும் பதிய விரும்புகின்றேன்.

## பரம்பரையும் சூழலும்

எமது கிராமமாகிய முருங்கன் கமம் கிராமத்தில் "சரஸ்வதி புலவராக" வரம் கிடைக்கப் பெற்று பல நாடகங்களை எழுதி அரங்கேற்றம் செய்த மரியான் சந்தான் எனும் புலவர் எமது கிராமத்தின் முதற் புலவராக போற்றப்படுகின்றார். இவருடைய கவித் திறனை தெரிந்தவர்கள் இவ்வாறு கூறுகின்றனர், "விவசாய வேலை செய்து கொண்டு நிற்கின்ற போது அப்படியே வேலைகளை விட்டுவிட்டு வந்து தனது சிந்தனையில் எழுந்த பாடல் வரிகளை உடனே எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதி வைத்து விட்டு மீண்டும் தனது வேலையை தொடருவார்".

இப்புலவர் பெருந்தகை எழுதிய நாடகங்களாகவும், பாட்டுக்களாகவும், புனித சந்தியோகுமையோர் நாடகம், புனித அருளப்பர் நாடகம், புனித சந்தியோகுமையோர், புனித மரியாள் பேரில் கவிகள், யாகப்பர் திருவிழாவின் போது பாடப்படும் பாடல்கள் என்பவை விளங்குகின்றன.

இவர் மிகவும் நல்லவர். வல்லவர். தமது சமூகத்திற்கு வித்திட்டவர், அனைவரையும் ஒன்று சேர்த்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவற்றை தீர்த்து ஒற்றுமையாக ஒரு நிகழ்வைச் செய்து முடிக்கும் திறன் படைத்தவர். இவருடைய பிள்ளைகளான ச.சவியல், ச.பாவிலு, ச.பிரகாசம், ச.மனுவேல் ஆகியோர் சிறந்த கலையார்வம் உடையவர்களாகவும், நடிகர்களாகவும் விளங்கினர். இவர்களுள் ச.பாவிலு என்பவர் புலவராகத் திகழ்ந்து நாடகங்கள் சில எழுதி அரங்கேற்றியுள்ளார்.

தொடர்ந்து கலைஞர் குழந்தை அவர்களின் குடும்பத்தைப் பார்க்கையில் கலைஞரின் தந்தை மரியான் செபஸ்தியான், சந்தான் புலவரின் சொந்தச் சகோதரனாவார். இவரும் மிகுந்த கலையார்வம் உள்ளவராகவும் நாடகங்களை பயிற்றுவிக்கும் அண்ணாவியாராகவும், மிருதங்க வாத்தியக் கலைஞராகவும் திகழ்ந்துள்ளார். இவருடைய பிள்ளைகள் அனைவரும் சிறந்த குரல் வளமுள்ளவர்களாகவும் பல நாடகங்களை நடித்தவர்களாவும் திகழ்கின்றனர்.

இவ்வாறான கலைப் பெருமையும், கவித்திறனும் ஊற்றெடுத்த பரம்பரையில் தோன்றிய ஒரு முத்தாகவே கலைஞர் குழந்தை அவர்கள் தோன்றியுள்ளார். "சிறு வயது முதல் என்னை எனது பெரியப்பா மரியான் சந்தான் புலவர் கலைத்துறையில் வழிநடத்தி வந்துள்ளார்" என்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி கூறுவார். எவ்வாறெனில், "நாடகம் எழுது, எழுது என உற்சாகப்படுத்துவார். எழுதிய நாடகத்தை சரிபிழை பார்த்து தீய சொற்களை மாற்றி நல்ல சொற்களை இட்டு எனக்கு வழிகாட்டியுள்ளார். இவரது இராகச் சாயல்களை நானும் கற்று அதனை பயன்படுத்தி நாடகங்கள், பாடல்களை அமைத்துள்ளேன். இவை எனக்கு இன்றும் உதவி புரிகின்றன. எனது பெரியப்பா என்னில் மிகுந்த அன்பு கொண்டவர். நானும் அவரை மதித்து அன்பு காட்டினேன், எனது முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். தமிழர் உரிமைப் போராட்ட யாத்திரைக்கு செல்ல ஆயத்தமாகியபோது பயத்தின் காரணமாக எனது பெற்றோர் என்னை செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால், பெரியப்பா பெற்றோருக்கு அறிவுரை கூறி என்னை உற்சாகப்படுத்தி தட்டிக் கொடுத்து என்னை அனுப்பி வைத்தார். இது போன்ற பல நிகழ்வுகளில் பெரியப்பா என்னை வழிநடத்தி யுள்ளார். குறிப்பாக என்னை ஒரு புலவனாக்க கடும் முயற்சி மேற்கொண்டார். அத்தோடு எனது தாயும், நான் எழுதும் நாடகங்களை சரிபிழை பார்த்து திருத்தங்களைக் கூறுவார். இவ்வாறு எனது பெரியப்பாவும், பெற்றோரும் எனக்கு ஊட்டிய கலைதான் என்னை கலைத்துறையில் ஈடுபடச் செய்து அதன் பயனாக இன்று உயர் நிலையை அடைந்து அனைவராலும் போற்றப்படுகின்ற அண்ணாவியாராகவும், கலைஞனாகவும், நடிகனாகவும் இருக்கின்றேன். ஆகவே நான் பெற்றுக் கொண்ட கலையாற்றல் என் பெற்றோர், வழி வந்த முதுசொம்"என அடிக்கடி கூறுவார்.

"வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்று பதவி கொள்வார்"

## கலைப்பயணத்தில் தாண்டிய தடைக்கற்கள்

கலைஞர் செபஸ்தியான் செபமாலை அவர்களை சந்தித்து அவருடைய கலைப் பயணத்தில் தாண்டிய தடைக் கற்கள் பற்றிய தகவல்களை நேர்காணல் மூலம் அறிந்தவற்றை குறிப்பிடுகின்றேன்.

**கேள்வி:** நீங்கள் முதல் முதலில் கலைத்துறையில் பிரவேசித்த போது எந்த விதமான பிரச்சினைக்கு முகம் கொடுத்தீர்கள்?

**பதில்:** கலை வாழ்க்கையில் மிகவும் முக்கியமாக எதிர்நோக்கிய தடைக்கல் "பணத்தட்டுப்பாடு" என்பதாகும்.

**கேள்வி:** உங்களுக்கு ஏற்பட்ட பணச் செலவுகள் எவை?

**பதில்:** நடிகர்களுக்கான உடை, அலங்காரம் போன்றவற்றுக்குத் தேவையான பணம் இல்லாமை, போக்குவரத்துச் செலவு, நடிகருக்கான உணவுச் செலவு போன்றவை.

**கேள்வி:** அதனை எவ்வாறு ஈடு செய்தீர்கள்?

**பதில்:** எனது வருமானத்தாலும், பெற்றோரின் உதவியினாலும், நல்மனம் படைத்த ஒருசிலரின் பண உதவிகளாலும்.

**கேள்வி:** குடும்பப் பொறுப்புக்கள் மத்தியில் எவ்வாறு கலையை வளர்த்தீர்கள்?

**பதில்:** குடும்பம் எனக்கு எந்த விதத்திலும் தடையாக இருக்கவில்லை. எனது மனைவி, பிள்ளைகள், பெற்றோர் அனைவரும் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினர். இது நான் கலைத் துறையில் ஈடுபட வாய்ப்பாக இருந்தது. பிற்காலத்தில் குடும்ப நிதிப் பொறுப்புக்களை எனது மூத்த இரு பிள்ளைகளான ஆனந்தனும், இன்பனுமே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

**கேள்வி:** நாடகத்தை பயிற்றுவிக்கும்போது எதிர்கொண்டவை?

**பதில்:** நான் நடிகரை கடும் சொற்களால் ஏசுவேன். அவ்வாறு ஏசும் போது சிலர் நாடகத்தில் நடிக்க மாட்டேன் என இடையில் சென்று விடுவர். அனைவரையும் ஒரே நேரத்தில் ஒன்று சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றுதல் போன்ற தடைகளை எதிர்நோக்கினேன்.

**கேள்வி:** நடிகர்கள் விலகிச் செல்லும் போது பதில் நடிகரை எவ்வாறு தேர்ந்து கொண்டீர்கள்?

**பதில்:** ஒரு நடிகரே, இரண்டு மூன்று பாத்திரங்களை நடிக்கப் பயிற்சியளிப்பதனால், நடிகர் வெற்றிடத்தை நிரப்பியுள்ளேன்.

**கேள்வி:** நாடகப் பாத்திரங்களுக்கு ஆட்களை சேர்ப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் எவை?

**பதில்:** நாடக பாத்திரங்களுக்கு எனது சொந்தச் சகோதரர்களையே ஆரம்பத்தில் சேர்த்தேன். காரணம் ஏனையவர்கள் நிலைத்து நிற்க மாட்டார்கள் என்பதால். ஆனால் அதற்கு விமர்சனங்கள் வந்தன. இருந்த போதிலும் சிலர் தாமாகவே வந்து இணைந்து நாடகங்கள் நடித்தனர். பின்னர் படிப்படியாக சொந்தக்காரர்களையும் வெளியிடங்களில் இருந்து வருபவர்களையும் இணைத்து நாடகங்கள் அரங்கேற்றியுள்ளேன்.

**கேள்வி:** சொந்தக் கிராமத்தில் நாடகங்கள் மேடையேற்றப்படும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள்?

**பதில்:** பரவலாக சொந்தக்காரர் பலரின் ஒத்துழைப்பு போதாமை. பலருடைய கடும்போக்கான விமர்சனத்தை சந்தித்தமை.

**கேள்வி:** எத்தகைய விமர்சனங்களை எதிர் நோக்கினீர்கள்?

**பதில்:** ஒரு குறுகிய வட்டத்திற்குள் செயற்படுபவர். நாடகங்களைப் பார்த்து இது ஒரு கேலிக்கூத்து. வேலையற்றவர்களின் வேலை எனப் பலவாறான விமர்சனங்களைச் சந்தித்தேன்.

**கேள்வி:** வெளி இடங்களுக்கு நாடகத்தை அரங்கேற்றும்போது எதிர்நோக்கிய சவால்கள்?

**பதில்:** நடிகரை கூட்டிச் சேர்த்து சென்று வருவதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினேன்.

**கேள்வி:** போட்டி நாடகங்களை அரங்கேற்றும் போது எதிர்நோக்கியவை?

**பதில்:** நாடகம் தரமானதாக உருவாக்கப்படுகின்றமை, ஒப்பனை, உடை அலங்காரம் என்பவை வெளியில் இருந்து பெறப்படுவதில் சிரமங்கள் ஏற்பட்டமை. நடுவர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை போட்டிகளுக்கு பொறுப்பானவர்கள் மாற்றியமை, ஏனைய குழுக்களின் போட்டி, பொறாமை வெளிப்பாடுகளை எதிர்நோக்கியமை.

**கேள்வி:** பாடசாலைகளில் கலை நிகழ்வுகளை நடத்தும் போது எதிர்கொண்டவை எவை?

**பதில்:** கலையம்சங்களுக்கு பாடசாலை சமூகத்தால் ஆதரவோ ஒத்துழைப்போ போதியளவு கிடைக்காமை.

**கேள்வி:** தொழில் நடவடிக்கைகளோடு கலையை வளர்த்த போது ஏற்பட்ட சிக்கல்கள் எவை?

**பதில்:** கலைப்பயணத்தில் கல்விப் பணியோடு, விவசாயம் என்பதோடு கலையம்சத்திற்கு நேரம் போதாமையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** வாத்தியக் கருவிகள் அனைத்தையும் எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:** வாத்தியக் கருவிகள் என்னிடம் சொந்தமாக இருந்ததோடு சில கருவிகளை உதவி அரசாங்க அதிபர் அவர்கள் வழங்கினார்.

**கேள்வி:** கலாமன்றத்தை உருவாக்கி செயற்படுத்தும் போது எதிர் நோக்கிய பிரச்சினைகள் எவை?

**பதில்:** முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கி கூட்டங்களை கூடுவதற்கென கிடுகினால் அமைக்கப்பட்டிருந்த கொட்டிலை தீ வைத்து எரித்தமை. என் செயலையும் என்னையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்தவர்களால் எனது கொட்டிலை மட்டுமே எரிக்க முடிந்ததே தவிர என் மனதை எரிக்க முடியவில்லை. அதே மனம் அன்றும் இருந்தது, இன்றும் இருக்கின்றது.

**கேள்வி:** உங்களின் கலைச் செயற்பாட்டிற்கு எதிராக எழுந்த சக்திகள் எவை?

**பதில்:** தகாத விமர்சனங்கள் வைக்கப்பட்டன. எனது புகழையும், பெருமையையும் ஏற்றுக் கொள்ள முடியாதவர்களால் எதிர்ப்புகள் ஏற்பட்டமை. சாதிப் பாகுபாட்டின் காரணமாக எதிர்ப்புகள் ஏற்பட்டமை.

**கேள்வி:** ரிக்கட் கூத்துக்கள் போடப்பட்டதனால் எதிர் நோக்கிய பிரச்சினைகள் எவை?

**பதில்:** செம்மண் தீவில் ரிக்கற் கூத்து போடப்பட்ட போது ரிக்கட் விற்பனைக்கு பொறுப்பாக தியட்டர் முகாமையாளரை செயற்பட விட்டபோது ரிக்கட் விற்ற காசுகளை அவர் எடுத்துக்கொண்டு சொற்பளவிலான பணத்தையே எமக்குத் தந்தார். எனவே நம்பிக்கைக்கு துரோகம் செய்து விட்டார். இச்செயல் எமக்கு இழைத்த குற்றமாகும்.

**கேள்வி:** இவற்றையெல்லாம்விட நீங்கள் சந்தித்த வேறு தடைகள் அல்லது துன்பங்கள் உண்டா?

**பதில்:** ஆம். கொழும்பில் நாடகம் ஒன்று அரங்கேற்றம் செய்ய வேண்டும். செல்வதற்கு காசு இல்லை. அப்போ என்ன செய்வது உடனே எனது மனைவியின் தாலிக் கொடியினை அடகு வைத்து பணத்தை எடுத்து அந்நிகழ்வை செய்து முடித்தேன். இவ்வாறு பணநெருக்கடி ஒருபுறமிருக்க, கலைக்கென்று என்னை அர்ப்பணித்ததால் விழித்திருந்து நாடகங்கள், பாடல்கள், கவிதைகள் என பலவற்றை உருவமைத்ததால் காலப் போக்கில் நித்திரை குறைந்து வருத்தத்திற்கு ஆளாகியமையும் நான் சந்தித்த தடைக் கற்களில் முக்கியமானது. இலட்சிய வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அனைத்தையும் ஏற்றுக் கொண்டேன்.

**கேள்வி:** கலை வாழ்வில் நீங்கள் எல்லாவிதமான தடைக்கற்களையும் எவ்வாறு தாங்கினீர்கள்?

**பதில்:** இறைவழி நடத்தல் என்னோடு இருந்தமையினாலும், பெற்றோர், சகோதரர், உறவினர்களின் ஒத்துழைப்போடும், ஆதரவோடும், மனைவி, பிள்ளைகளின் உந்து சக்தியோடும், என்னுடைய மனோதைரியத்தாலும், ஒருசில நலன்விரும்பிகளின் உதவிகளினாலும், நான் கலை வாழ்வில் தடைகளை தாண்டி நிமிர்ந்து நிற்க வலுவூட்டியது.

பல்வேறு தடைக்கற்களை கலைவாழ்வில் சுமந்து அதன் விளைவாக ஏற்பட்ட மன உளைச்சல், மனச் சோர்வுகள் மத்தியிலும் தளர்ந்து போகாது, கலைச் செயற்பாட்டை முன்னெடுத்ததனால் இன்று கீர்த்தியும் சீர்த்தியும் பெற்று மன்னார் மாவட்டத்திலே சாஹித்திய விருது, கலாபூஷண விருது, ஆளுநர் விருது, தலைக்கோல் விருது எனப் பல விருதுகளையும் ஒருங்கே பெற்ற ஒருவராக திகழ்கின்றார்.

இவர் ஐம்பது வருட கலைப்பயண வாழ்வு வாழ்ந்தவர். இலக்கியத் துறையிலும் வல்லவர். சிறந்த கலை விற்பன்னர். சிறந்த ஆன்மீக பற்றுள்ள கத்தோலிக்கர். இவரால் உருவாக்கப்பட்ட இளைய தலைமுறையினர் எத்தனையோ பேர், அனைவரும் கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களாகவும், கலை ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே எமது கிராமத்திற்கு கடவுளால் கொடுக்கப்பட்ட அரும்பெரும் செல்வம், கொடை என்றே நான் இவரைக் கருதுகின்றேன். இவருடைய பெரியப்பாவின் கனவை நனவாக்கி சமூதாயத்தில் ஒரு கலை வழிகாட்டியாய் திகழ்ந்து அனைவராலும் மதிக்கப்படுகின்ற கலாபூஷணமாகத் திகழும் இவரை நானும் வாழ்த்தி பாராட்டி நிற்பதோடு தன்னை போன்ற கலைஞர்கள் எம் சமூகத்தில் உருவாகி கலை வளர்ப்பதை தன் கண்களால் கண்டு களிப்புற இறைவன் ஆசி வழங்க வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண்ணின் முதுசம் குழந்தை செபமாலை ஆசிரியர்



**எஸ்.ஏ.உதயன்**
*சாஹித்திய விருதுபெற்ற எழுத்தாளர்*
*பேசாலை*
*மன்னார்.*

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு மன்னாரில் அடிக்கடி கலைவிழாக்களும் போட்டிகளும் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். நானாட்டானிலும் ஒரு முத்தமிழ் விழா நாடகப்போட்டி நடந்ததாக எனக்கு ஞாபகம். அப்போதுதான் குழந்தை என்கிற ஒரு மாபெரும் கூத்துக்கலைஞரை எனக்குத்தெரியும்.

அப்போது நானும் ஒரு சிறுபருவத்து இளைஞனாக பயில்நிலை நாடகக் கலைஞனாக நாடகமொன்றில் பாத்திரமேற்று நடிக்கின்றேன். அந்தப் போட்டி பரபரப்புகளுக்கிடையே எனக்கு ஒப்பனை செய்யும் நாடக ஆசிரியர் குரலைத் தாழ்த்தி என்னிடம் சொல்லுகின்றார், "கவனம்... நம்ம நாடகத்தோடே போட்டி போடுவது குழந்தை மாஸ்டர்" அந்த வார்த்தைகளின் பின்னணியில் என் மனதில் பதிந்த நினைவுகளோடு இன்று கலாபூஷணம் குழந்தை செபமாலை என்கிற கூத்துக்கலைஞரைப் பார்க்கிறேன்.

மன்னார் கூத்துக்கலையின் முதிர் கலைஞராக அவர் வலம் வந்தபோது நானும் ஓர் அரங்காற்றுகையாளனாக, நாடகப்பிரதி எழுத்தாளனாக பல்வேறு அரங்க வெளிகளிலும் விழா நிகழ்வுகளிலும் நடை பயின்று கொண்டிருந்தபோதுதான் அந்த மாபெரும் கலைஞனின் பார்வையில் நான் கணிக்கப்பெற்றேன். அக்காலத்திலிருந்தே அவரை நேசித்து, சிநேகம் பாராட்டி, பழகியிருக்கின்றேன். கலையுணர்வுடன் கூடிய குசல விசாரிப்புக்களில் உருவான அன்பு இன்னும் நிலைத்திருக்கின்றது.

மனம் இசைந்து, உடல் வலிந்து, ஆத்மார்த்த பூர்வமாக ஈடுபடும் கலைதான் நாட்டுக்கூத்து. எழுத்துருவை மேடையில் ஆற்றுகை செய்யும்வரை ஒரு நாடகக் கலைஞனின் பிரயத்தனத்தில் சந்திக்கின்ற பிரச்சினைகள் ஏராளம். பத்து, இருபது பேரை ஒரே நேரத்தில் ஓரிடத்தில் பயிற்சிக்காக கூட வைப்பது என்பது சாதாரணமானதல்ல. பத்தொன்பது பேர் வந்து மிகுதி ஒரேயாள் அங்கு வரவில்லையென்றாலும் ஒரு நெறியாளன் படுகின்ற மன அழுத்தம் சொல்லி மாளாது. யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக நாடகத்தின் முக்கிய பங்காளியொருவர் முரண்பட்டுவிட்டால் அதனால் ஏற்படும் துன்பம் பெரிது. ஈட்டியாய் பாயும் சொற்கணைகளும் வசவுகளும் ஒரு படைப்பாளியினை அடித்துச் சிதைத்துவிடும். இவ்வாறு எத்தனை எத்தனை ஆண்டுகளாக இவர் கலையை வளர்த்திருப்பார். மெய் சிலிர்க்கிறது.

நாடக மேடையில் கூத்துக் கலைஞராக அவர் எனக்குள் விமர்சித்ததை மறவாத நிலை யிலேயே ஒரு மரண வீட்டுச் சடங்கில் ஒப்பாரிப் பாவை ஓதுபவராக, விழாக்காணும் பெரியோரை வாழ்த்திப் பாமாலை பாடுபவராகக் காணுகின்ற போது நெஞ்சு பூரித்து மிதக்கும். ஆகவேதான், மன்னார் மண்ணின் முதுசொம் குழந்தை செபமாலை என்று விழிக்கின்றேன்.

மன்னாரின் கத்தோலிக்க கிராமங்கள் அனைத்திலுமே தபசு நாட்களில் வியாகுல பிரசங்கம் குழந்தை மாஸ்ரர் பாடியளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுவட்டுக்கள் மூலம்தான் ஒலிபரப்பப்படு கின்றன என்கிறபோது கண்கள் ஆச்சரியத்தால் அகலத்திறந்து கொள்ளுகின்றன.

இப்படிப் பல்வேறு கலைப்பெருமை கொண்ட என் அன்பிற்குறிய குழந்தை மாஸ்ரர் வயோதிபத்திலும், வருத்தத்திலும் இருக்கின்றார் என்கின்ற போது ஒரு வகைப் பயம் வந்து ஒட்டிக்கொள் கின்றது.

வழித்துணையாக வந்தவர் இடைவழியில் கை நெகிழ்ந்தால் ஏற்படும் அதைரியம் மன்னார் கலைஞர்களுக்கும் குறிப்பாக முருங்கன் முத்தமிழ் கலாமன்ற உறுப்பினருக்கும் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

"அட்டதிசை அதிரவே அகிலமது நடுங்கவே
அரசுரிமை கொண்டவன் யார்?
ஆணவம் கொண்டுமே அற்பனென எண்ணியே
அவதூறு சொன்னவன் யார்?"

என்று அரங்கம் அதிர குழந்தை மாஸ்ரர் எழுப்பிய ஆசரியப்பா என் காதுகளில் இன்னும் எதிரொலிக்கின்றது.

ஒரு கலைத் தொண்டராய் மன்னார் மண்ணிற்கு பல்வேறு இரத்தினங்களை பட்டை தீட்டி ஒளிர்விடச் செய்த அவர் பணி சிறக்கும். அவரின் பட்டறையில் பயின்றவர்கள் கலைத் தீபமாய் இன்றுபோல என்றும் தொடர்ந்து ஒளிர் விடுவார்கள் என்று நான் நம்புகின்றேன். ■


27

எமது தொன்மையான கலைச் சொத்துக்களை பாதுகாக்கவேண்டிய காலத்தின் தேவையும் புலம்பெயர்ந்து வாழும் இளையோர் கைகளிலேயே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கனில் முதிர்ந்த முத்து 'குழந்தை ஆசிரியர்'




**திருமதி பெப்பி விக்ரர் லெம்பெட்**
B.A.,Dip.in.Ed.,Dip.in.Th.,M.Ed.
*உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)*
*மன்னார் கல்வி வலையம்,*
*மன்னார்.*


ஆசிரியர் செபமாலை அவர்களை எனது சிறு வயதிலிருந்து நான் அறிந்திருக்கின்றேன். ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் அவர்களின் கவித்துவம், செழுமைமிக்க கலைத்திறன்களை 'யார் குழந்தை', 'கல் சுமந்த காவலர்கள்' ஆகிய நாடகங்களைப் பார்த்ததிலிருந்து புரிந்திருக்கின்றேன். இவரின் புலமை வாழையடி வாழையாக வந்த புலமை என்று அறிய முடிகின்றது.

மன்னார் மாதோட்டம் கலைவளமும், கரை வளமும், நில வளமும் செழித்தோங்கிய காலத்தில், அந்நியர் இலங்கையை ஆண்ட காலங்களில், சிறப்பாகப் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில், மன்னார் மாதோட்டப் பகுதியிலே சிறப்பாக கலைகள் வளர்க்கப்பட்டன என்றும், முருங்கனில் கட்டுக்கரைக் குளத்தினை அண்டிய பகுதிகளிலேயே அதிகமான மாதோட்டப் புலவர்கள் வாழ்ந்துள்ளனர் என்றும் வரலாற்று நூல்களில் கூறப்படுகின்ற வேளையில் முருங்கனிலே, கவிஞர், கலைஞர் குழந்தை மாஸ்ரரும் உதித்து, கலையை வளர்த்த வரலாறு உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிட்டது. முத்தமிழ் கலாமன்றம் அமைத்து இயல், இசை, நாடகத் தமிழை வளர்த்து வருகின்ற பெருமை அவரையே சாரும். அவர் முருங்கனில் ஒரு முத்து. மாபெரும் கலைச் சொத்து. ஆசிரியராகி, அதிபராகி, கவிஞராகி, கலைஞராகி, கலாபூஷணமாகி, தலைக்கோல் விருதும் பெற்று சமூதாய நட்சத்திரமாகத் திகழ்கின்றவர்.

"களையிழந்த நாட்டிலே முன்போலே
கலை சிறக்க வந்தனை வா... வா... வா...
விளையும் மாண்பு யாவையும் பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வா... வா... வா..."

என்ற பாரதியின் பாடலுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர்.

"சொன்னலமும் பொருணலமும்
சுவைகண்டு துய்த்துத் துய்த்துக் - கன்னலிலே
சுவையறியுங் குழந்தைபோல்
தமிழ்ச்சுவை நீ களித்தாயன்றோ!"

"எண்ணிய முடித்தல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும், திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்" என்று மன்னார் மாதோட்டக் கவிஞர்களுள் கடைந்தெடுத்த முத்தாகத் திகழ்கின்றவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மாஸ்ரர் எப்போதும் புன்முறுவல் பூத்த முகம், அமைதியான சுவாபம், ஆண்டவனில் அசையாத நம்பிக்கை கொண்டவர்.

"ஆள் வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி" என்று கலையுலகில் வாழ்ந்தவர். தெளிவான சிந்தனையில் கலை பிறக்கும்.

"ஆன்மவொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க் கச்சமுண்டோ? - மனமே
தேன்மடையிங்குத் திறந்தது கண்டு தேக்கித் திரிவமடா" என்று கலை வளர்த்த தலைக்கோல்.

"கவிஞன் உயிருள்ளபோதே கௌரவிக்கப்படவேண்டியவன், பாராட்டப்பட வேண்டியவன்" என்ற கவிஞர் கண்ணதாசனின் கூற்று இன்று நிறைவுறுவதை எண்ணி மனமகிழ்வடைகின்றேன்.

குழந்தை மாஸ்ரர் பெரிய மனசு படைத்தவர். அவருடைய எழுத்தும் பெரிய எழுத்து. "எழுத்தைக்கொண்டு குணத்தை அறியலாம்" என்பது முதுமொழி. அதற்கிணங்க பெரிய சிந்தனை, கலையுலகில் விரிந்த பார்வை, அகலத் திறந்த கலையறிவு கொண்டவர்.

வலய, மாவட்ட, மாகாண மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டிகளுக்கு சிறந்த நடுவராகக் கடமையாற்றியவர். இவரின் கலைப் படைப்புக்களாக கவிதைகள், நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், வில்லுப் பாட்டுக்கள், கல்வெட்டுக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி செ.காரை சுந்தரம்பிள்ளை ஆகியோரின் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகளுக்கு மன்னார் மாதோட்டம் பற்றிய தகவல்களை வழங்கும் உசாத்துணையாகவும் அமைந்தவர். இன்றும் இவரின் அடியொற்றி இவரின் உறவுகள் பாடசாலைகளிலும், கிராமங்களிலும் நாட்டுக்கூத்துக் கலையை வளர்த்து வருவதற்கு இவர் ஓர் ஆணிவேர் என்று கூறலாம். எனவே, நீண்ட ஆயுளையும், நீடித்த நற்சுகமும் பெற வல்ல தேவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன். ■

"... இவரது (குழந்தை) கலைப்பணி, இனமொழிப் பற்றுக்களுடன் முற்றிவிடாமல் மறைப்பற்றையும் பற்றிப்பிணைந்து, புனித. சந்தியோகுமையோர், புனித. சில்வேஸ்திரிபாப்பு போன்ற நாடகங்களில் இயக்குநராக இருந்து மேடையேற்றியதுடன் 1968லும், 1981ஆம் ஆண்டிலும் முருங்கன் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பாடுகளின் காட்சியிலும் பங்கேற்று உழைத்த பெருமை எமது கலைஞரையே சாரும்.

அத்துடன் 1963இல் கண்டி, அம்பிட்டியா குருமடத்திலும் இடம்பெற்ற 'வாழ்வளித்த வாஸ்' என்ற நாட்டுகூத்திற்கும், நாவலப்பிட்டி சென் மேரிஸில் மேடையேறிய 'ஓவியன் யார்' என்ற சமூக நாடகத்திற்கும் இயக்குநராயிருந்து புகழ்பெற்றார். இவற்றைவிட எமது கலைஞர் நூல் வெளியீட்டிலும் கால்கோளிட்டுள்ளார். 'அறப்போர் அறைகூவல்', 'இன்பத் தமிழின் இதயஒலம்', 'யாகப்பர் இன்னிசைப் பாடல்கள்', 'நாம்' என்பவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

அரும்பாகி, முகையாகி இதழ்விரிக்கும் மலர் இன்றிருந்து நாளை உலர்ந்துவிடலாம். ஆனால் மலர்ந்து மலர்ந்து மணம் பரப்பி நறை சொரியும் பொன்மலராக, தன்னலம் கருதா மென்மலராக, கலையுலகின் கண்மலராக ஒளிரும் கலைஞன் வாடாத மலராகும். இத்தகைய அருமலராக குழந்தை உருவில் மலர்ந்த எம் கலைஞர் கலைக் குழந்தையாக வளர்ந்து, அகந்தை இருளை அழிக்கும் அன்புக் குழந்தையாகக் குழைந்து, பாரேத்தும் புகழ்க் குழந்தையாக நுழைந்து, என்றுமே வாடாத மலர்க் குழந்தையாக மணம் பரப்ப மனம் உவந்து வாழ்த்துகிறோம்.

**நன்றி: பாடசாலை சமூகம், கலைஞர் குழந்தை பாராட்டு விழா சிறப்புமலர், 27.07.1982**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தின் கூத்திசைக் காவலன் முத்தமிழ் வேந்தர் குழந்தை செபமாலை



**தவநாதன் றோபேட் அருட்சேகரன்**
**[வசாவிளான் தவமைந்தன்]**
B.F.A. (Jaffna), M.F.A., M.Phil.(Madras)
*விரிவுரையாளர்,*
*இராமநாதன் நுண்கலைக்கழகம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

கூத்துக்கலை என்பது எமது தொன்மை யான ஆற்றுகை வடிவங்களுள் முதன்மையான இடத்தில் திகழ்ந்து வருகின்றது. ஒவ்வொரு பிரதேசத் திற்கும் உரியதான தனித்துவப் பண்புகளோடு இவை வளர்க்கப்பட்டுள்ளதால் அங்கே வாழும் மக்களால் மனதார நேசிக்கப்படும் உயிர்ப்புள்ள கலை வடிவங் களாக இவை விளங்கி வருகின்றன. இவ்வாறான பல்வேறு வகைப்பாடுகளும் பாணிகளும் கொண்ட மைந்த நாட்டுக்கூத்துக் கலை மரபில் மன்னார் மாவட்டத்தில் ஆடப்பட்டு வரும் கூத்துக்கள் ஈழத்தின் கூத்துக்கலை ஆற்றுகை முறையில் தனித்துவமான பண்புகள் கொண்டதாக இன்று வரை ஆடப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் கூத்துக்கலையின் இணை யற்ற அண்ணாவியாராகவும் சிறந்த நடிகராகவும் நாடக எழுத்தாளராகவும் முகாமைத்துவத் திறன் கொண்ட நெறியாளராகவும் முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் இயக்குநராகவும் விளங்குவதுடன் பாடகர், கவிஞர், இசையமைப்பாளர், பேச்சாளர், வில்லிசையாளர், சமய, சமூகப் பணியாளர் எனும் பன்முக ஆளுமைகளோடு கடந்த ஐம்பது ஆண்டு களிற்கும் மேலாக அர்ப்பணிப்புடன் கலைப்பணி யாற்றி வருபவர் திருக்கலை வேந்தன் குழந்தை செ.செபமாலை.

அமரர்களான செபஸ்ரியான் – செபமாலை தம்பதியரின் மகனாக 03.08.1940இல் மன்னார், முருங்கனில் இவர் பிறந்தார். முருங்கன் கிறீஸ்து அரசர் பாடசாலையில் எஸ்.எஸ்.சி வரை கற்று கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை யில் 1959இல் ஆசிரியப் பயிற்சி நெறியை நிறைவு செய்து 1960இல் ஆசிரிய நியமனம் பெற்று அல்லைப் பிட்டி, அடம்பன், இசைமாலைத்தாழ்வு, அட்டபாகை (கண்டி), பொன்தீவுக்கண்டல், அரிப்பு, பெரிய முறிப்பு போன்ற இடங்களில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைகளில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றி யதுடன் கற்கிடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலையில் அதிபராகவும் பணியாற்றி 2000ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

ஆசிரியத் தொழிலில் நாற்பது ஆண்டுகள் பணியாற்றிய இவர் தனது பள்ளிப் பருவத்தி லிருந்தே ஆற்றுகைத் திறன் கொண்ட கலைஞராக வளர்ச்சி கண்டு வந்தார். மத்தள அண்ணாவியாராகப் புகழ் பெற்றிருந்த தந்தையும் தமிழ்ப் புலவராக அந்தக் காலத்தில் விளங்கிய பெரிய தந்தையாரும் இவரது கலைத்துறை சார்ந்த ஈடுபாட்டிற்குக் காரணமானவர்களாகவும் ஊக்குவிப்பாளர்களாக வும் விளங்கினர்.

யாழ். மறைமாவட்ட ஆயரும் தமிழர் கலை களின் தீவிர ஆதரவாளருமாக விளங்கிய அமரர் தியோகுப்பிள்ளை ஆண்டகையவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராக இருந்த காலத் தில் அங்கு கற்றமையால் இவரது கலைத்துறைகள் அனைத்தும் வளர்ச்சி காண்பதற்கான களமாகக் கலாசாலை வாழ்க்கையானது அமைந்தது.

மன்னார் மாவட்டத்தின் ஏழு பாடசாலை களில் பணியாற்றிய காலத்திலும் மாணவர் களிற்கான கலை நிகழ்வுகள் அனைத்தையும் நெறிப் படுத்தி மேடையேற்றிய மாபெரும் படைப்பாளி யாகவே இவர் தடம் பதித்து வந்துள்ளார். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் விடுமுறை நாட்களைப் பயன்படுத்தி ஏனைய கலைஞர்களை இணைத்து எண்ணற்ற நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றிய அற்புதக் கலைஞராகவும் இவர் விளங்குகின்றார்.

1964இல் இவரால் தொடங்கப்பட்ட முத்தமிழ்க் கலாமன்றமானது மன்னார் மாவட்டத்தின் சகல இடங்களிலும் கலை நிகழ்வுகளை அரங்கேற்றியதுடன் எண்ணற்ற கலைஞர்களை உருவாக்கி அவர்களது ஆற்றுகைகளைத் திறம்பட மேடையேற்றி ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புகழ் பெற்று விளங்கியதுடன் தேசிய மட்டத்திலான நாடகப் போட்டிகளிலும் வெற்றியீட்டி உற்சாகத்துடன் செயற்பட்டு வந்தது.

ஈழத்தின் இசைநாடக, கூத்துக் கலைகளை உயர் நிலையடையச் செய்ததுடன் அதன் ஆற்றுகையாளர்களையும் தேசியப் புகழ் கொண்டவர்களாகத் தரமுயர்த்திய முயற்சியில் 1950களில் முன்னின்றுழைத்து அரும் பெரும் கலைப்பணியாற்றிய பேராசிரியர் சு.வித்தியானந்தனின் செயற்பாடுகளில் இணைந்து செயலாற்றிய அனுபவமும் மன்னார் மாவட்டத்தில் இருக்கும் கலைஞர்களிற்கு எடுத்துக் காட்டான ஒருவராகவும் செயல் திறன் கொண்ட உண்மையான சாதனையாளராகவும் விளங்குகின்ற இவரது பல தசாப்தங்களைக் கடந்து நிற்கின்ற கலைப்பணியானது தனியான ஆய்வு நூலாகத் துறை சார்ந்தோரால் எழுதப்பட வேண்டியதாகும்.

இதுவரையில் எழுபத்திரெண்டிற்கும் அதிகமான நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றியும் பல நாடகங்களைச் சுயமாக எழுதியும் ஏராளமான கூத்துக்களில் நடித்தும் நீண்ட காலக் கலைத்துறைப் பட்டறிவுடையவராய்த் திகழ்கின்ற இவர் அறப்போர் அறைகூவல், நாம், இன்பத் தமிழின் இதய ஓலம், மரபு வழி நாடகங்கள், பரிசு பெற்ற நாடகங்கள் போன்ற நூல்களையும் மாதோட்டம் என்னும் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளதுடன் வியாகுல இசைப்பாக்களும் வியாகுலப் பிரசங்கமும் எனும் இயேசுவின் பாடுகளைப் பற்றிய துன்பியல் பக்தி இலக்கிய இறுவட்டினையும் உருவாக்கி வெளியிட்டுள்ளார்.

கடினமான ஒத்திகைகளின் பின்னர் சிறந்த முறையில் நாடகத்தை மேடையேற்றும் பண்பு கொண்ட இவர் ஹார்மோனியம், மத்தளம் போன்ற கருவிகளை இசைக்கவல்ல கருவியாளராகவும் கத்தோலிக்க மக்களின் தவக்காலத்தில் ஆலயங்களில் இசைக்கப்படுகின்ற "பசான்" என்னும் இசைப் பாடலை பக்தியுடனும் இசையிலக்கணங்கள் வழுவாமலும் இசைப்பதில் ஈடு இணையற்றவராகவும் விளங்குகின்றார்.

"தூய மனதோடு பணத்தை எதிர்பார்க்காமல் கலைத்துறையில் ஈடுபடுகின்ற ஒருவனே உண்மையான கலைஞன் ஆவான். நாட்டுக்கூத்துக் கலையை உயிரென நேசிக்கும் நானும் எனது நண்பர்கள், உறவினர்கள் பலரும் அந்தக் காலத்தில் கால நேரம் பார்க்காமல் ஒத்திகைகளில் ஈடுபட்டதையும் வெற்றிப் படைப்புக்களாகக் கூத்துக்களை மேடையேற்றியதையும் நினைத்தால் உண்மையில் மெய் சிலிர்க்கும்.

எத்தனை விதமான கலைகளைத் தற்காலத்தில் நாம் கற்று வந்தாலும் எமது முன்னோரால் பேணிப் பாதுகாக்கப்பட்ட கலையான கூத்துக் கலையை நாம் மறந்து விடக் கூடாது. ஏனெனில் அது தான் எமக்குரிய அடையாளம்.

எமது தேசியக் கலைவடிவமும் அதுவே. இந்தக் கலையை ஆவணப்படுத்துதல், ஆய்வு செய்தல், கலைஞரைக் கௌரவித்தல் என்பதற்கும் மேலாக நாட்டுக்கூத்துக் கலையை நிகழ்கலையாகத் தொடர்ந்தும் வைத்திருக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்" எனத் தனது கருத்துக்களை இவர் அன்புடன் கூறுகின்றார். ■

**நன்றி: உதயன், 12.08.2012**

**குழந்தையை (தம்பிராசா) வாழ்த்திப் பாடிய வேண்டுதல் கவி**

ஆசைகொள்ளும் நேசத்தந்தையான தவப்போதனே
ஆசீர்தாருமே எமக்குன் ஆசீர்தாருமே
நேசமாய் உம்மருளாலே செனர்கள் கூடவும்
புவிமீதிலே பாடவும் தாசன் தம்பிராசா
மிகத் தாரணியில் பாடவும் தயைகூருமே
சந்தியோகே என்நாளுமே."

**செ.சீமான்**
நாட்டுக்கூத்துக் கலைஞர்
முருங்கன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை செபமாலையிடம் கண்டதும், கற்றதும், கற்றுக்கொள்ள முயல்வதும்!



ப.சந்திரயோகு
Sp.Tr.Agri.,B.A.,Dip.in.Ed.,M.Ed.,S.L.P.S.2I.
அதிபர்,
மன்/முருங்கன் மகா வித்தியாலயம்,
மன்னார்.

இச்சிறிய கட்டுரையில் குழந்தை செபமாலை அவர்களின் ஆளுமைப் பண்புகளில் நான் கண்ட சிலவற்றை பகிர்ந்து கொள்ளலாம் என விளைகின்றேன். குழந்தை செபமாலை அவர்கள் சிறந்த நாடகத் தயாரிப்பாளர், நெறியாளர், நாட்டுக்கூத்து அண்ணாவியார், சிறந்த பாடகர், இசையமைப்பாளர், கவிஞர் எனப் பலரும் பேசக் கேட்டிருக்கிறேன். இத்தகைய அவரின் திறமைகள் எல்லாவற் றையும் ஒருமுகப்படுத்தி தம் கலை, சமூகச் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் மிகச்சிறப்பாகச் செய்வதுதான் குழந்தை செபமாலை அவர்களின் சிறப்பம்சமாகும். அந்த அளவிற்கு ஒவ்வொன்றிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார். அத்துடன் ஒவ்வொன்றிலும் தானே தனக்கு வழங்கும் சிறப்புப் பயிற்சியின் ஊடாக முழுத்தேர்ச்சி பெறுவார். இவ்வாறு அவரின் ஆளுமையில் காணப்பட்ட பண்புகளை பகுத்துப் பார்ப்பது இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

## தலைமை தாங்குபவர்

தலைவன் பிறப்பதில்லை, உருவாக்கப் படுகிறான் என்று சொல்லுகிறார்கள். இக்கூற்று உண்மையானாலும் குழந்தை செபமாலையைப் பொறுத்த வரையில் தலைமைத்துவப் பண்பை சிறு வயதிலிருந்தே கொண்டிருந்தார் என்பதைக் காணும்போது இப்பண்பு பிறப்பிலிருந்து வருகிறதா் அல்லது பின்னர் உருவாக்கப் பட்டதா என்பது தெரியவில்லை. எனினும் இவர் தலைமைத்துவப் பண்பைத் தன்னகத்தே கொண்டு எப்போதும் செயற்படுவார். தம் கிராமத்தில் என்றாலென்ன, பாடசாலை என்றால் என்ன அவர் தாமாக முன்வந்து பொறுப்புக்களை ஏற்று மற்றவர்களையும் இணைத்து அவற்றை திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றலை அவரிடத்தில் காணலாம். அந்த அளவிற்கு மிகச் சிறப்பாகக் காரியங்களைச் செய்து முடிப்பார்.

பாடசாலையில் கலை நிகழ்வாக, பரிசளிப்பு விழாவாக, விளையாட்டுப் போட்டியாக எதுவாக இருந்தாலும் அவரின் தலைமைத்துவம் வெளிப்படும். கிராமத்தில் திருமண வீடாக, குடிபுகுதல் விழாவாக - இறப்பு வீடாக, வேறு எந்த விழாவாக இருந்தாலும் குழந்தை செபமாலை தலைமை வகிப்பதைக் காணலாம். இத்தலைமை தாங்கும் திறன் இயல்பிலேயே அவரிடம் இருப்பதைக் அவதானிக்கலாம்.

## இலக்கை நோக்கி இடைவிடாமல் இயங்குபவர்

ஒரு வேலையை, குழந்தை செபமாலை அவர்கள் பொறுப்பேற்று விட்டார் என்றால் அதனை நிறைவேற்றியே தீருவார். உதாரணமாக, ஒரு கலை நிகழ்வை நிகழ்த்துவதாக வாக்குத் கொடுத்து விட்டார் என்றால் எந்தத் தடைகள் நேரினும் அதனை எப்படியேனும் செய்து முடிக்கின்ற மனவுறுதியைப் பற்பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். பொருளாதாரக் கஸ்ரமாக இருந்தாலென்ன, ஆளணிப் பற்றாக் குறையாக இருந்தாலென்ன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் அசாதாரண சூழ்நிலையாக (1980 களில், 1990களில்) இருந்தாலென்ன அவற்றை எல்லாம் கடந்து அக்கலை நிகழ்வை அரங்கேற்றியே தீருவார். ஒரு கலை நிகழ்வை ஆயத்தம் செய்யத் தொடங்கினால் உணவையோ, களைப்பையோ பார்க்க மாட்டார். கலை நிகழ்வே அவருக்கு விருந்தாகும் போது சாதாரண உணவைக் கவனிப்பாரா என்ன?

எதைச் தொடங்கினாலும் தொடர்ந்து துடிப்போடு செய்து கொண்டே இருப்பார். அவ்வேலையோ நிகழ்வோ நிறைவுறும் வரை அவர் இயக்கம் குறைவுறாது. அவரோடு நடந்து செல்வதே ஒரு கலை! அவரோடு நடப்பவர்கள் மரதன் ஓட்ட வேகத்தில் சென்றால்தான் அவருடன் செல்ல முடியும். எதைச் செய்தாலும் அவரிடத்தில் சோர்வைக் காண முடியாது. எப்போதும், குறுகியகால (Short term), நீண்டகால (Long term) இலக்குகளை நோக்கிப் பயணித்துக் கொண்டே இருப்பவர்.

## கலை, சமூக செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுபவர்

'ஆடிக்கொன்று அமாவாசைக் கொன்று' என்று இல்லாமல் கலை, சமூக நிகழ்வுகளில் தொடர்ந்து செயற்படுவார். ஏறக்குறைய ஆண்டுத் திட்டத்தை (Year Plan) அமைத்துக் கொள்வார். இவ்வாண்டில் இந்த இந்த நிகழ்வுகள் கலை நிகழ்வுகளாக, சமூக நிகழ்வுகளாக இடம்பெற இருக்கின்றன என்பதை நேரகாலத்தோடு திட்டமிட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவித்து விடுவார். எனவே, வெவ்வேறு நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான நாட்களை ஒதுக்கி வைப்பதோடு, வர முடியாதவர்களின் வெற்றிடங்களை யார் யார் நிரப்புவது என்பதை எல்லாம் நேரகாலத்தோடே பார்த்து விடுவார்.

## சிந்தனையைச் சிதறவிடாது கவனக்குவிப்போடு இருப்பவர்

எதையாவது செய்ய நினைத்தார் என்றால் அதைப்பற்றியே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பார். உதாரணமாக ஒரு நாடகத்தை ஆற்றுகை செய்ய வேண்டும் என்றால், அந்நாடகம் எவ்வாறு அமைய வேண்டும், யார் யாரை அந்நாடகத்தினுள் உள்வாங்குவது, யாரும் வர முடியாவிட்டால் யாரைக் கொண்டு அவ்வெற்றிடத்தை நிவர்த்தி செய்வது என அவருடைய உள்ளம் கழுகு இரையைத் தூக்க வட்டமிடுவது போல செய்யப் போகும் நாடக ஆற்றுகையைக் குறித்து அவருடைய கவனக் குவிப்பு அமையும். இதனால், அவர் முன்னெடுக்கின்ற நாடகங்களும் ஏனைய கலை நிகழ்வுகளும் அதியுயர் தரத்தையும், பார்ப்போரை தம் நிகழ்ச்சியோடு கட்டுண்டு வைத்திருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்துவார். இதன் காரணமாக இவரின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறுவதை அவதானிக்கலாம்.

## மிகுந்த பொறுமை உடையவர்

ஒரு கலை நிகழ்வைச் செய்யமுன் சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வார். வயதில் மிகச் சிறியவர்களுக்கும் கவனமாகச் செவிமடுப்பார். பல வகையான அபிப்பிராயங்களை, ஏன் கடும் விமர்சனங்களைக் கூட முன்வைக்கின்றபோது அவற்றுக்கு மிகுந்த பொறுமையோடு, அமைந்த உள்ளத்தோடு செவிசாய்ப்பார். கடும் விமர்சனங்கள் வருவதற்கான காரணம், அடிக்கடி கலை நிகழ்வுகளை அரங்கேற்ற ஒப்புதல் கொடுத்து விடுவார். இதனால் பங்கெடுக்கின்றவர்கள் பலவிதமான நடைமுறைச் சிக்கல்களுக்கு உள்ளாவர். அவ்வேளைகளில் அவர்கள் நிகழ்வை கைவிட்டுவிடுமாறு கூறுகின்ற போது எப்படியாவது கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று பொறுமையாக இருந்து சாதித்து விடுவார். சமூதாய சீர்திருத்தங்களில் ஈடுபடுவதால் ஏற்படுகின்ற நிந்தனைகளை எல்லாம் பொறுமையாகவும் அமைதியாகவும் தாங்கிக் கொண்டு அவற்றில் வெற்றி காண்பார்.

## பயிற்சியின்போது மிகக் கண்டிப்பானவர்

சாதாரணமாகவே மிக அன்பாகப் பழகுவார். நாடக ஒத்திகை அல்லது வேறு கலைப் பயிற்சியின் போது மிகக் கண்டிப்பாக இருப்பார். பல வேளைகளில் அவருடைய ஒரு பார்வையே மூன்று மணித்தியாலப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடந்து முடியப் போதுமானது. எனினும் பயிற்சியின் பின்னர் மிகவும் அன்பாகப் பேசுவதையும் பழகுவதையும் அவதானிக்கலாம்.

## 'முடியாது' என்று யாரும் இருந்துவிட முடியாது

நாடகத்தில் இப்பகுதியை இப்படிச் செய்ய தங்களால் முடியாது என யாரும் சொல்ல முடியாது. முயன்றால் எல்லாம் முடியும் என்பது அவரது தாரக மந்திரங்களுள் ஒன்று. முடியாது என்பவருக்கு தானே தன்னம்பிக்கை ஊட்டி, அப்பாத்திரத்தையோ ஒரு பாத்திரத்தின் குறிப்பிட்ட பகுதியையோ எப்படி செய்யலாம் என்று மாதிரிகளைக் காட்டிக் கொடுப்பார். காதல் சுவையோ, துன்பச் சுவையோ, வீரச் சுவையோ, நவரசச் சுவையோ எதுவாக இருந்தாலும் அச்சுவைகளை எப்படி வெளிக் கொணரலாம் என்று நடித்துக் காட்டுவார். அப்பாத்திரம் அரசனாகவோ அரசியாகவோ, வில்லனாகவோ வில்லியாகவோ, மந்திரியாகவோ அமைச்சனாகவோ, கட்டியனாகவோ சேவகனாகவோ, புலவனாகவோ பிச்சைக்காரனாகவோ, பணக்காரனாகவோ பரதேசியாகவோ, காதலனாகவோ காதலியாகவோ, கணவனாகவோ மனைவியாகவோ, அறிஞனாகவோ முட்டாளாகவோ எதுவாக இருந்தாலும் அப்பாத்திரமாக மாறி, பயிற்றுவிப்பார்.

## நேரகாலத்தோடு விடயங்களைச் செய்பவர்.

பிரயாணம் என்றால் நேரத்திற்குச் சென்றுவிடுவார். 10 மணிக்கு பஸ் என்றால் 09.30க்குப் போய்விடுவார். 11 மணிக்கு நாடகம் என்றால் 10.30க்காவது நடிகர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். அதாவது ஒப்பனைகளை முடித்து நிகழ்வுக்கு ஆயத்த நிலையில் இருக்க வேண்டும். பாடசாலை 08 மணிக்கு என்றால் 07.30க்குப் பாடசாலை சென்று விடுவார். யாரையாவது 04 மணிக்குச் சந்திக்க வேண்டும் என்றால் ஆகக்குறைந்தது அரை மணித்தியாலங்கள் முன்னே குறித்த இடத்தில் பிரசன்னமாக இருப்பார். யாரும் இவரைச் சந்திக்க வருகிறார்கள் என்றால், ஏறக்குறைய 40, 50 நிமிடங்களுக்கு முன்பே வருபவரை வரவேற்ற ஆயத்தமாகக் காத்திருப்பார். ஒரு நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தால் நேரகாலத்துடன் சென்றுவிடுவார். 10 மணிக்கு நிகழ்வென்றால் இவரை 9.30க்கே அந்நிகழ்வு நடைபெறும் இடத்தில் நிச்சயமாகக் காணலாம்.

## சும்மா இருக்க முடியாதவர்

இவரால் சும்மா இருக்க இயலாது. ஒன்றன்பின் ஒன்றாக கலை நிகழ்வுகள் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும். குழுவாகச் சேர்ந்து செய்வது ஒரு புறமிருக்க தனித்து, தான் செய்கின்ற நிகழ்வுகள் இன்னுமொரு நிகழ்ச்சி நிரலாக இருக்கும். உண்மையான ஒரு கலைஞனைப் பார்த்து சும்மா இருங்கள் என்று யாரும் கேட்கவும் முடியாது, அக்கலைஞனால் அவ்வாறு இருக்கவும் முடியாது. நடைமுறைச் சிக்கல்கள், பொருளாதாரச் சுமைகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு கொஞ்சம் குறைத்து கலை நிகழ்வுகளைச் செய்தால் என்ன என்று சொன்னால், அவர் எதையும் இழக்க ஆயத்தமாக இருந்தார், கலை நிகழ்வுகளைத் தவிர! குடும்பத்தில் மிகப் பொல்லாத பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்தித்த போதுகூட கலைகளை எப்போதும் போல செய்து கொண்டுதான் வந்தார் என்பதை இவரை நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும்.

## மரியாதை கொடுப்பவரும் மரியாதைக்கு உரியவரும்

பெரியவர்கள், சிறியவர்கள், வயதுக்குக் குறைந்தவர்கள், படித்தவர்கள், சாதாரணமானவர்கள், பணக்காரர், ஏழைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள் என யாராக இருந்தாலும் எல்லோருக்கும் மரியாதை கொடுப்பவர். உதாரணமாக, எங்கள் வீட்டிற்கு ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் வந்து போகின்றவர்களோடு பேசுகின்ற விதத்தில் இதனை நான் அவதானித்திருக்கிறேன். எல்லோரையும் உயர்வாக நோக்குகின்ற உள்ளம் உடையவர். தன்னோடு பணியாற்றுகின்ற ஆசிரியர்களோடு மரியாதையோடும் மாண்போடும் பழகுபவர். இதனை எங்கள் பாட சாலையில் படித்துக் கொண்டிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் கண்டிருக்கிறேன். இதனால் எல்லோ ருடைய மரியாதைக்கும் உரியவராகிறார்.

## பட்டம் பதவிகளை எதிர்பாராதவர்

இவர் ஆசிரியராக பணிபுரிந்த பாடசா லைகளில் முருங்கன் மகா வித்தியால யத்திலேயே கூடிய காலம் பணியாற்றி இருக்கி றார். இரண்டு தடவைகள் பணிபுரிந்திருக்கிறார். முதலில் ஐந்து ஆண்டுகள் அதாவது 1968 - 1972 ஆம் ஆண்டு வரை பணியாற்றி இருக்கிறார். இரண்டாம் தடவை 1975 - 1984 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்திருக்கிறார். இரண்டாம் தடவை பணியாற்றிய ஏறக்குறைய பத்து ஆண்டுகளில் மூன்று அதிபர்களின் கீழ் உப அதிபராக இருந்து பணிசெய்திருக்கிறார். பெரிய பதவிகளில் அமர்ந்தால் அவற்றில் கவனம் சென்றுவிடும் என்பதாலும் நிர்வாகம் செய்வதற்கு நிறைய நேரம் ஒதுக்க வேண்டும் என்பதாலும் பதவி களை எதிர்பார்க்கவும் இல்லை, ஏற்றுக் கொள்ளவும் இல்லை. ஆசிரியராக, உதவி அதிபராக இருந்துகொண்டு கல்விப்பணி களையும், கலைப்பணிகளையும், சமூகப் பணிகளையும் ஆற்றியிருக்கிறார்.

## கொள்கையில் உறுதி உடையவர்

1960களில் தமிழரசுக் கட்சி கோலோச் சிய காலம். அந்த நாட்களில் வாரக்கணக்கில் மன்னார் கச்சேரிக்கு முன் நடைபெற்ற சத்தி யாக்கிரக அகிம்சைப் போராட்டத்தில் தன்னை முற்று முழுதாக இணைத்துப் பங்காற்றி இருக்கிறார். தொடர்ந்து தன்னுடைய இக்கொள் கையில் இருந்து ஒருபோதும் விலகியவர் அல்லர். தனது நெருங்கிய சில நண்பர்கள் வெவ்வேறு கட்சிகளில் மிகுந்த செல்வாக் குடையவர்கள் அக்கட்சிகளின் சார்பாக இருந்தால் செல்வத்தையும் செல்வாக்கையும் நிறையவே பெற்றுக் கொள்ளலாம் எனக் கேட்ட போதுகூட அவற்றை எல்லாம் கருதிற்கொள் ளாது தமிழர்களின் விடுதலைக் குரலாய் அன்று முழங்கியவர். எப்போது ஆயுதங்கள் பேச ஆரம்பித்தனவோ, அக்கணத்திலிருந்து இவர் முழுவதுமாக அரசியல் நீரோட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்.

## மாற்றுக் கொள்கை உடையோரை மதிப்பவர்

தன்னுடைய கொள்கையில் இருந்து ஒருபோதும் விலகமாட்டார். அதேவேளையில் மற்றவர்களின் அபிப்பிராயங்களை, கருத்துக் களை மதித்து நடப்பவர். சில வேளைகளில் மாற்றுக் கொள்கைகளை ஆதரிக்காமல் இருப்பினும் அக்கொள்கை உடையோரின் ஆளுக்குரிய மதிப்பை எப்போதும் வைத்திருப் பவர். சமூதாயச் சிக்கல்களில் சிலர் அடிதடி என்று இறங்குகின்ற போது அதனை எவ்வகை யிலும் ஆதரிக்காமல் எப்போதுமே பேச்சு வார்த்தை ஊடாக சிக்கல்களுக்கு தீர்வு காண்பவர்.

இவ்வாறு இவரின் பண்பட்ட, பக்கு வப்பட்ட ஆளுமைக் கூறுகளை குழந்தை செபமாலை அவர்களின் வாழ்க்கையிலிருந்து காணவும், கற்றுக்கொள்ளவும் கூடியதாக இருக்கின்றது. ■



### குழந்தையின் நூல்கள்...

அறப்போர் அறைகூவல் (1966)
இன்பத்தமிழின் இதய ஓலம் (1966)
யாகப்பர் இன்னிசைப் பாடல்கள் (1966)
நாம் மலர் - 1 (1967)
நாம் மலர் - 2 (1989)
பரிசுபெற்ற நாடகங்கள் (1997)
மரபுவழி நாடகங்கள் (1998)
மாதோட்டம் - கவிதைத்தொகுதி (2000)
நாம் மலர் - 3 (2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் இணையிலாக் கலையே கூத்துக்கலை




**கன்னிமுத்து வெல்லபதியான்**
(நேர்காணல்)

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடக தின விழா - 2005 சிறந்த கூத்துக் கலைஞராக 'தலைக்கோல்' விருது பெற்ற மன்னாரைச் சேர்ந்த குழந்தை அவர்களுடனான நேர்காணல்**

**கேள்வி: வணக்கம் ஐயா! முதலில் உங்களது ஊர், பெயர் முதலான விபரங்களைப் பற்றி வாசகர்கள் அறிய ஆசைப்படுவார்கள்...! கூறுங்கள்...?**

***பதில்:*** *வணக்கம்...! என்னுடைய பெயர் செ.செபமாலை. புனைபெயர் குழந்தை. ஊர் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள முருங்கன் ஆகும். 1940.03.08இல் பிறந்தேன். முருங்கன் மகா வித்தியாலயமே எனது ஆரம்பப் பாடசாலையாய் இருந்தது. இதில் இருந்துதான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் சென்றேன். 1958, 59 ஆகிய இரு ஆண்டுகளும் பயிற்சி நெறிக்காலமாகும். 1960ஆம் ஆண்டிலே பயிற்சியை முடித்து வெளியேறினேன். 1964 இல் 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' என்னும் கலாமன்றத்தை உருவாக்கி கலைத் தொண்டுகளாற்றி வருகிறேன்.*

**கேள்வி: உங்களது இன்றைய இந்த உயர்வுக்கு உங்களது இளமைக்கால அனுபவமே அடித்தளமாக அமைந்திருக்கும் என நினைக்கின்றேன். இது பற்றி...?**

***பதில்:*** *அருமையானதொரு கேள்வி...! பாடசாலையில் படிக்கின்றபோது 05 வயதில் இருந்து பாடல்கள் பாடியும், நடனங்கள் ஆடியும் பல்வேறு கலைத்திறமைகளை வெளிக்காட்டி வந்தேன். 08ஆம், 09ஆம் தரங்களில் படிக்கும்போது எனது இந்தக் கலையார்வ, ஆக்க முயற்சிகள் உச்சநிலையைப் பெற்றது. இவ்வாறாக எனது கலைப்பயணம் படிப்படியாய் வளர்ச்சிபெற்று வந்தது.*

*இன்றைய உயர்வுக்கெல்லாம் காரணம் அன்றைய எனது இளமைக்காலம்தான். அதிலும் அந்தப் பாடசாலை வாழ்க்கையை எத்தனை பிறப்பெடுத்தாலும் என்னால் மறக்கமுடியாது.*

**கேள்வி: இளைமைக் காலத்திலேயே நீங்கள் கலைப்பயணத்திலே கால்பதிப்பதற்கான பின்புலம் என்ன?**

***பதில்:*** *என்னுடைய தந்தையார் பெயர் செபஸ்தியான். அவர் ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர். அவர் அண்ணாவின் பெயர் மரியான் சந்தான், அவர் ஒரு புலவர். இவர்கள் காட்டிய வழியே எனது இன்றைய வழி. இதிலேதான் என் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: கலைஞர்களுக்குப் பொதுவாக மனைவி வாய்ப்பதில்லை என்றும், இடஞ்சலையே ஏற்படுத்துபவளாக இருப்பாள் என்றும் கூறப்படுகிறதே...! இந்தநிலையில் உங்களது மனைவி...?**

*பதில்:* *உண்மைதான், ஆனாலும் என் மனைவி இதற்கு விதிவிலக்கானவள் என்றே நினைக்கிறேன். அந்த வகையில் என் மனைவி படித்தது 05ஆம் தரம் வரைதான். ஆனால், நல்ல கலை ஆர்வம் மிக்கவள். கலையை உளமார ரசிப்பவள். என் இன்ப துன்பங்களில் எல்லாம் தோளோடு தோள் நின்று உழைத்து வருபவள். என் தந்தைக்கும் தமையனுக்கும் அடுத்ததாக மனைவியே பக்கபலமாக இருக்கிறாள்.*

**கேள்வி: உங்களைக் கவர்ந்த கலைஞர்களைப் பற்றி கூறமுடியுமா...?**

*பதில்:* *நிச்சயமாக...! எனது உயர்ச்சிக்குக் காரணமான கலைஞர்கள் யாழ்ப்பாணக் கலைஞர்கள். இத்தனைக்கும் மேலாக எனக்குத் தானாக ஏற்பட்ட ஆர்வம். அண்ணாமார், தம்பிமார், சீமான், பிலேந்திரன், இரத்தினம், ஜேசுதாஸ் மற்றும் இறந்த மருமகன் அந்தோனிப்பிள்ளை உட்பட பல கலைஞர்கள் என்னைக் கவர்ந்தவர்கள். என் கலைவளர்ச்சிக்காக துணையாக நின்றவர்கள்.*

**கேள்வி: நீங்கள் படைக்கும் கூத்துகளில் இழையோடும் கருப்பொருட்கள் என்ன?**

*பதில்:* *தமிழர் வீரம், காதல், இலட்சியம் போன்றவற்றையே மையமாகக்கொண்டிருக்கும். இவற்றை அடிப்படையாக வைத்தே சரித்திர, சமூக நாடகங்களையும், நாட்டுக்கூத்துகளையும், மற்றும் படைப்புகளையும் படைத்து வருகின்றேன்.*

**கேள்வி: நீங்கள் இதுவரையில் ஆடிய, அரங்கேற்றிய கூத்துகள் பற்றி விபரமாகக் கூறுங்களேன்!**

*பதில்:* *ஆரம்பத்தில் சமூக நாடகங்கள்...*

*1. பாட்டாளிக் கந்தன், 2. பணத்திமிர், 3. இலட்சியவாதிகள்.*

*பின்பு சரித்திர நாடகங்கள்...*

*1. கண்ணகி, 2. இலங்கை கொண்ட இராஜேந்திரன்*

*அதனை அடுத்து நாட்டுக்கூத்துக்கள்.*

*1. வீரத்தாய் (கொழும்பு கலைக்கழகப் பரிசு பெற்றது), 2. கல் சுமந்த காவலர்கள்.*

*3. வீரனை வென்ற தீரன், 4. யார் குழந்தை*

*மொத்தத்தில் 50க்கும் மேற்பட்ட நாடகங்களையும், கூத்துக்களையும் எழுதியும் பழக்கியும் அரங்கேற்றியும் உள்ளேன்.*

**கேள்வி: 'சவால்கள்தான் சாதனைக்கான வழிகள்' என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இத்தகைய கலைகளின் வளர்ச்சியில் நீங்கள் சந்தித்த சவால்களும், அதனூடாக நீங்கள் பெற்ற சாதனைகளும் என்ன?**

*பதில்:* *பணத்தட்டுப்பாடு, பணம் படைத்தவர்களின் உதவியின்மை, அரசாங்கத்தில் இதற்கான அக்கறை போதாமை, யுத்த நெருக்கடியான சூழ்நிலைகள் போன்றவைகளுக்கு மத்தியிலேதான் எனது கலைப் பிரவேசமும், பயணமும் தொடர்ந்தது, தொடர்கிறது. இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து பெற்ற சாதனைகளாக பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கின்றேன்.*

**கேள்வி: என்னென்ன பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளீர்கள் என்று கூற முடியுமா?**

*பதில்:* *01. 1995இல் வடகிழக்கு மாகாணசபையால் மாவட்டத்தில் 'சிறந்த கலைஞர்' என்ற விருதைப் பெற்றேன்.*

*02. 1998இல் அரச இலக்கிய பேரவையின் சாஹித்திய விருதினைப் பெற்றேன்.*

*03. 1999இல் அரச இலக்கிய பேரவையில் கலாபூஷண விருதை எனதாக்கிக் கொண்டேன்.*

*04. 2000ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணசபையில் ஆளுநர் விருதைத் தட்டிக்கொண்டேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*05. 2000*ஆம் ஆண்டில் ஆயர் இராயப்பு யோசேப்பு வழங்கிய 'திருக்கலை வேந்தன்' எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன்.
*06. 2005*இல் சிறந்த கூத்துக்கலைஞனாக இந்த 'தலைகோல்' விருதினைத் தட்டிக்கொண்டேன்.

**கேள்வி: பல வெளியீடுகள் மூலமும் நீங்கள் கலைத்தொண்டுகள் ஆற்றியுள்ளதாகத் தெரிகிறதே...! என்னென்ன வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறீர்கள்?**

**பதில்:** *1966*இல் 'அறப்போர் அறை கூவல்' என்னும் பாடல் தொகுப்பினையும், 'இன்பத்தமிழின் இதய ஓலத்தினையும்' வெளியிட்டேன். மேலும் 'நாம்', 'பரிசு பெற்ற நாடகங்கள்' (தொகுப்பு - சாஹித்திய பரிசு பெற்றது) 'மரபு வழி நாடகங்கள்', 'மாதோட்டம்' (கவிதைத் தொகுப்பு) போன்றவற்றை வெளியிட்டிருக்கிறேன்.

**கேள்வி: அன்றைய நிலையோடு இன்றைய நிலையினை ஒப்பிடும் போது கூத்துக்கலை அருகிக் கொண்டு செல்வதைத்தானே காணமுடிகிறது. இது பற்றி...?**

**பதில்:** தொலைக்காட்சி ஆதிக்கம், சினிமா மோகம்...! இவற்றிலேதான் பெரும்பாலான மக்கள் மூழ்கி விடுகிறார்கள். இதனல் இத்தகைய (தமிழர்) பாரம்பரியக் கலைகளின் தரத்தினையும், தனித்து வத்தினையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இது மாத்திரமன்றி இத்தகைய கலைகளை, கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் அரச, அரசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ, பணம்படைத்த தனவந்தர்களி டமிருந்தோ மிகமிக அரிதாகவே கிடைக்கின்றன. இதனாலும் இக்கலைகள் அருகிக் கொண்டு செல்கின்றன. இந்த மோசமான நிலை மிகவும் மனவேதனையைத் தருகிறது.

**கேள்வி: இந்த இடத்தில் ஒன்றை நாம் மறக்க முடியாது. இத்தகைய அருங்கலைகளை வளர்ப்பதற் காகத்தான் கி.ப.கழக நுண்கலைத்துறை, கலை கலாசார பீடமானது அயராது முழுமூச்சாகச் செயற்பட்டு வருகிறது. இது தொடர்பில் உங்களது கருத்தென்ன?**

**புதில்:** உண்மைதான். இதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கி.ப.கழக சமூகமானது ஆற்றிவரும் சேவைகளோ அளப்பரியவை. அரும்பெரும் நம் தமிழ், முஸ்லிம் கலைகளை வளர்ப்பதிலும், வாழ்விப்பதிலும், பிற்கால சந்ததியினருக்காக அவற்றைப் பேணிக் கடத்துவதிலும் பல யுக்திகளையும் முறைகளையும் கையாண்டு படைத்துவரும் பணிகளோ பல்திறப்பட்டவை. இப்படி நான்கு பல்கலைக்கழகங்கள் நாலா பக்கமும் இருந்தாலே போதும்.

**கேள்வி: நவீன மயமான இந்தக் காலகட்டத்திலே அருங்கலைகளை வளர்ப்பதில் புதிய புதிய யுக்தி களைத்தான் கையாள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் எந்த யுக்திகளை நீங்கள் கைக் கொள் கிறீர்கள்?**

**பதில்:** பல இரவுகள் தொடராக இடம் பெறும் பெரிய நாடகம், கூத்துக்களைச் சுருக்கி 01 மணித்தியாலம் கொண்டதாக அமைத்தும், நடித்தும் வருகிறோம்.

**கேள்வி: இப்படியாகச் சுருக்கும்போது அதன் கட்டுக்கோப்பும், தனித்துவமும் இழந்து போகும் அல்லவா?**

**பதில்:** மிகவும் முக்கியமான கருத்துக்களையும், கட்டங்களையும் ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் நெறியாள்கையைக் கையாண்டு சுருக்குவதன் மூலம் இழப்புக்கள் அதிகம் நேர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை. இருந்தும் பாதிப்புக்களும் உள்ளதுதான். இன்னும் என்னசெய்ய?

**கேள்வி: தமிழர் விடுதலைப் பேராட்ட வளர்ச்சிக்கு கலைத்தொண்டுமூலம் நீங்கள் பங்காற்றியதாகக் கூறப்படுகிறதே...! இதன் பொருத்தப்பாடு என்ன?**

**பதில்:** தமிழ்பேசும் மக்களது பிரச்சினைகளை மையமாக வைத்து 'தாகம்', 'என் மகன் மாவீரன்', 'வித்துக்கள்' ஆகிய நாடகங்களை எழுதி, அவற்றை அரங்கேற்றியுள்ளேன். இவை தவிர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாபிரசங்கம், வில்லுப்பாட்டுகள் போன்றனவும் செய்தேன்.

**கேள்வி: 'கலை கலைக்காக' என்றும் 'கலை வாழ்க்கைக்காக' என்றும் இரு பிரதான கொள்கைகள் இருக்கின்றனவே இதனைப்பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

***பதில்:*** இரண்டும் முக்கியம்தான். இருந்தும் 'கலை வாழ்க்கைக்காக' இருக்கவேண்டும் என்பதனையே பெரிதும் நான் விரும்புகின்றேன். வாழ்க்கையே ஒரு கலைதான். எனவே மக்கள் வாழ்க்கையை அவர்களது ஏக்கங்களை, தாக்கங்களை எனப் பல்வேறு பிரச்சினைகளையும் அது பிரதிபலித்துக் காட்டவேண்டும்.

**கேள்வி: மன்னார்க் கலை, மட்டக்களப்பு கலை பற்றிய உங்களது கருத்தோட்டம் எவ்வாறு இருக்கிறது?**

***பதில்:*** இவை இரண்டு மாவட்டங்களுமே கலைமணம் கமழும் பிரதேசங்களாகும். இருந்தும் இரண்டு இடங்களிலும் அன்றிருந்தது போல் கலைகள் இன்றில்லை. அருகியே காணப்படுகின்றன. ஆனாலும் இரு பிரதேசங்களிலுமே அருங்கலைகள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அங்கும், இங்கும் வாழும் மக்கள் கலை ஈடுபாடு உடையவர்களாவார்கள். மன்னார்க் கலைகளை யும்விட மட்டக்களப்புக் கலை ஒருபடி உயர்ந்து நிற்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

**கேள்வி: தலைக்கோல் விருதினைப்பெறும்போது உங்களது மனநிலையில் ஏற்பட்ட மாற்றம்...?**

***பதில்:*** ஆரம்ப காலத்திலிருந்து கலை வளர்ச்சிக்காகக் கஸ்ரப்பட்டதற்குக் கிடைத்த பரிசாகவும் மாபெரும் மற்றுமோர் வெற்றியாகவும் 'தலைக்கோலைக்' கருதினேன். பேரானந்தம் அடைந்தேன். இவ்விருது வழங்கி கௌரவித்ததன் மூலம் எனது கலைப்பணியினை எந்த இடர்பாடுகள், சவால்கள் பிரச்சினைகளின் மத்தியிலும் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல முடிவு செய்துள் ளேன். உத்வேகத்தினையும் எனக்கிது அளித்துள்ளது. அந்த வகையில் கி.ப.கழகத்துக்கு என்றென்றும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவனாவேன்.

**கேள்வி: வளர்ந்து வரும் கூத்துக் கலைஞர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது...?**

***பதில்:*** அவர்கள் சலனம் அடையாமல் கூத்துக்களின் உண்மை நிலைகளையும், அருமை பெருமைகளையும் அறிந்து நேரத்தையும் காலத்தையும் அர்ப்பணித்து செயற்படவேண்டும். எதிர்ப்புக்கள், ஏக்கங்கள், தாக்கங்கள், சவால்கள் அனைத்தையும் சந்திக்கும் சக்தியைப் பெறவேண்டும். இத்தனைக்கும் மத்தியிலே கலை செயற்பாடுகளை வெற்றிகரமாக முன் கொண்டுசெல்ல வேண்டும். முன்னோடிக் கலைஞர்களை அணுகி அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெறவேண்டும் முக்கியமாக மக்களுடைய சமுதாயப் பிரச்சினைகளை மையப்படுத்தியதாகவும், அவற்றுக்குத் தீர்வு கூறுவதுமான படைப்புக்களைப் படைக்கவேண்டும். அருகிக் கொண்டு வரும் அருங்கலைகளை வளர்ப்பதற்கும் வாழ்விப்பதற்கும் அயராது பாடுபட வேண்டும். ஈழத் தமிழர்களின் இணையில்லாக் கலையான கூத்துக்கலைக்காக இறுதி மூச்சுவரை உழைக்க வேண்டும். ■

***நன்றி – ஈழநாதம், மட்டக்களப்புப் பதிப்பு, 01.07.2005***

"... உலகப் புகழ்பெற்ற கலைச்செல்வம் படைத்தவர் தமிழ் மக்கள். தமிழரின் கலைச் சின்னங்களையும், கலைப் பாதிப்பையும் உலகமெங்கும் காணலாம். நிலைபேறில்லாத உலகிலே நிலைபெற்று வாழ்வது கலையொன்றுதான். அதனாலேயே அழியாத கலையை என்றுமேயுள்ள இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தனர் தமிழர். கலையை கடவுளோடு ஒன்றுபடுத்திப் புனிதத்தன்மை அளித்து வளர்த்த பெருமை தமிழருக்குண்டு..."

**நன்றி : சு. வித்தியானந்தன், கலைவிழா மலர் 1966,**
**மன்னார் பிரதேசக் கலாமன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மண் தந்த குழந்தை என்னும் மன்னர் இவர்...



'பிரியாலயம்' துரைஸ்
பாரிஸ்,
பிரான்ஸ்

**தே**சம் விடியவேண்டும்! நம் தேன் தமிழ் வாழவேண்டும்!! வாழும் தமிழ் கொண்டு வண்ணமிகு கலை உலகில் வலம்வரும் கலைஞர்களை வாழும்போதே நாம் வாழ்த்தி மகிழ்ந்திடவேண்டும்! இது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

சமூதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ் வொரு துறைகளைத் தெரிவுசெய்து அதில் தன்னை ஈடுபடுத்தி பயிற்சி பெற்று பார்போற்றும் வகையில் பணமும் சம்பாதிக்கின்றான். மாலை, மரியாதை, பரிசுகள், பட்டங்கள் எனப் பெற்று தனது வாழ்வில் தான் கொண்ட இலக்குகளை எட்டி தனது ஆயுளைக் கூட்டிக்கொள்ளும் அதி உன்னத மகிழ்வினைப் பெறுகின்றான்.

தட்டிக்கொடுப்பதனால் யாரும் கெட்டுப் போவதில்லை. ஆயினும் அன்னை தந்தையரைத் தவிர வேறு யாரும் ஒருவரைப் பாராட்ட வருவது மிகவும் அரிது என்றே சொல்வேன்.

யாரும் முன்வரவேண்டும் என்பதில் எனக்கு பெரிதும் உடன்பாடு இல்லாவிட்டாலும் நமக்குள் ஏன் இந்த நிலை என்ற கேள்வி எழுந்தே தீரும். அறிஞர் ஒருவர் சொல்லியது போல "தன் அறியாமையை தான் அறியாமல் இருத்தலே அறியாமையின் துயரமாகும்" என்னும் வாசகம்தனை நினைத்த வண்ணம் நாம் செய்ய வேண்டியதை செய்துகொண்டு எமது பணியைத் தொடர்வதே நாம் வாழும் காலத்தில் நாம் செய்யும் அழியாச் சிறப்பாகும்.

கால ஓட்டத்தில் பல சுனாமிகளும், அதைவிடக் கொடுமையான அழிவுகளும், இழப்புக்களும் எம்மைச் சூழ்ந்து சிறைப்படுத்தி, சின்னாபின்னமாக்கி, எம்மைச் சீரழித்த போதும் நாம் எழுந்து நின்று கண்ணீரைத் துடைத்து விட்டு, கரையேறி கால ஓட்டத்தில் இணைந்து இயல்பு நிலைக்குள் சென்று இயங்காவிட்டால் நமது இதய ஓட்டத்திற்கு தீனி ஏது? இந்த வழியில் நாம் செய்த பணிகளை இனிவரும் காலங்களிலும் தொடர்வது வரலாற்றுக் கடமையென்றே நான் எண்ணுகின்றேன்.

நாம் கலைத்துறைப் பயணிகள், இந்தப் பயணத்தில் அறிந்த, தெரிந்த, பழகிய உறவுகளைக் கௌரவித்து வருகின்றோம். அந்த வகையில் இன்று எமது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய நாட்டுக்கூத்து மேதை திரு.செபமாலை ஐயா அவர்களுக்கு பாரிஸில் வாழ்கின்ற கலைச் செல்வங்கள் எல்லாம் இணைந்து பாராட்டு விழா எடுத்திருப்பதை முதற்கண் பெருமையுடன் வாழ்த்தி வரவேற்றுக்கொண்டு ஐயாவை வாழ்த்தி, வணங்கி நான் எழுதும் தமிழ் எழுத்துக்கள் இவை!.

மன்னார் மண்ணின் குழந்தை மன்னா! மன்னா(ர்) மண்ணின் வாசம் தன்னை நாட்டுக் கூத்தின் மூலமாக நாடறியச் செய்தவர் நீங்கள்!

கிளிநொச்சியில் நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில் குழந்தை மாஸ்ரர் என்னும் பெயர் நாட்டுக்கூத்துப் பிரியர்கள் மத்தியிலும் மல்லிகையின் வாசனையைப்போல மக்கள் மத்தியிலும் வீசியதை நான் இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பூந்தான் யோசேப் என்னும் நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தியின் நெறியாள்கையில் "சங்கிலியன்" என்னும் நாட்டுக்கூத்தில் நான் வன்னியனாக நடித்த பெருமைதான், ஐயா செபமாலை அவர்களுக்காக வெளியிடப்படும் இந்த சிறப்பு மலரில் வாழ்த்துரை வழங்குவதற்கு அடியேனுக்கும் தகுதி உண்டு என்னும் தைரியத்தைத் தந்தது.

கம்பீரமான நடையும்!
கண்களால் கவர்ந்திழுக்கும் திறனும்!
பாடினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம்! - கூத்திலே
ஆடினால் பார்த்துக்கொண்டே இருக்கலாம்!

நாட்டுக்கூத்து இவர் மூச்சு!
நமக்கு இவர் பெரும் சொத்து!
நல்ல கலைகளைப் படைத்த இவர்
நம்மோடு இன்னும் பல்லாண்டு காலம்
பாராட்டு அரங்கங்கள் பல கண்டு
பள்ளிக்கூடமாய் நம்மோடிருந்து
பண்பாளன் நீங்கள் என்றும்
நீடூழி வாழ்க வாழியவே! ■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**


1967-ம் ஆண்டு மன்னார் பிரதேசக் கலாமன்றம்

புலவர்கள் அண்ணாவிமார்களும்

இயற்றிய நூல்கள்:

அண்ணாவிமார்

மேற்பார்வை செய்த நாடகங்கள்:

(மரியான் செபஸ்தியான், குழந்தை செபமாலையின் தந்தையாவார்)

**நன்றி : பொருட்காட்சி - கலைவிழா - 1968, மன்னார் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக வாழ்பவர் எங்கள் குழந்தை அத்தார்



**கிறிஸ்ற்றி ஜேம்ஸ்**
பாரீஸ்,
பிரான்ஸ்.

**நா**ன் எனது சிறு வயதில் கோவில் விழாக்கள், நாடகங்கள், கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் என்றால் குடும்பத்தாருடன் முருங்கனுக்கு சென்று வருவேன். அங்கு அக்கா வீட்டில் தங்கும் வேளையில் அத்தான் பழக்கும் நாடகங்களைப் பார்த்தும், கேட்டும், ரசிப்பதில் எனக்கு அலாதி விருப்பம்! அந்நாட்களில் அண்ணன்மார் நாடகங்களில் நடித்தபடியாலும், நான் பாடசாலைக்கு செல்வதனாலும், எனக்கு நடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பாடுவதற்கும், ஆடுவதற்கும் எனக்கு ஆசை. இதை நிறைவேற்ற ஊரில் விளையாடும் இடங்களிலும், உறவினர்கள் கூடி மகிழும் கோவில்களிலும், வீட்டு முற்றத்திலும் எனது ஆசையை தீர்த்துக்கட்டி பாடி, ஆடி, அரனுக்கு வருவேன்! 'வீரத்தாய்' நாடகத்தில் மணிபுரி அரசனின் வருகைப் பாடலான "மா புகழ் மணிபுரி மாமன்னன் நான்தானே..." என நான் பாட அங்குள்ள எங்களது உறவுகள் எல்லாம் என்னைப் பார்த்து 'அண்ணாவியார் வருகின்றார்' என கிண்டல் செய்வார்கள். இப்படியாகத் தான் எனது கலை வாழ்வு ஆரம்பமானது!

புலம்பெயர்ந்து பாரிஸ் வந்ததும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தை அத்தானின் பிள்ளைகள் இருவருடனும் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோடு பிரான்ஸில் பல கலைஞர்களுடன் இணைந்து பல கலை நிகழ்வுகளில் பங்குபற்றியிருக்கின்றேன். இவற்றிற்கெல்லாம் வழி சமைத்தது நான் சிறு வயதில் பார்த்ததும், கேட்டதும், ரசித்ததும், மனதில் ஆழமாகப் பதிந்ததுமான எங்கள் குழந்தை அத்தானின் முத்தான பாடல்களும், ஆடல்களுமே!

அவருடைய புன் சிரிப்பும், வசீகரத் தன்மையும், திறமையான நடிப்பும் அனைவரையும் மயக்கி ஆட்கொண்டு விடும்! அந்த நாட்களில் காலை பத்துமணி என்றால் அத்தான் வீட்டில் இருந்து மத்தள ஒலி கிடு கிடு என ஒலிக்கத் தொடங்கிவிடும்! இது பதினொரு மணிவரை கேட்கும்! அதை வாசிப்பவர் யாரென்றால் குஞ்சுப்பெத்தப்பா என்னும் அத்தானின் தந்தையார்தான்! காலையில் அத்தானின் தந்தையார் என்றால் மாலையில் அத்தானின் நாடகப் பழக்கம் நடைபெறும். 'பெற்றோல் மக்ஸ்' வெளிச்சத்தில் மத்தளம், வீணைப் பெட்டி, இவற்றுடன் கொஞ்சம் வாள் ஈட்டிகளுடன் நடிகர்களுமாக இரவு ஏழு மணிக்குத் தொடங்கும் நாடகப் பழக்கம் பதினொரு மணி வரை தொடரும்! பாட்டும் இசையுமாக கழியும் அந்த இரவுகளையும் அந்த வீட்டினையும் நினைத்துப் பார்க்க எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

கோடை காலத்தில் முற்றத்திலும், பனி மழை காலத்தில் விறாந்தையிலும் நாடகம் பழகுவார்கள். அத்தான் வீட்டுக் கூரையும் அங்குள்ள வேலிகளும், மரங்களும், இன்றும் இந்தக் கதைகளைச் சொல்லி மகிழும்!.

நானும் எனது சகோதரர்களும் நாடகத் துறையில் இந்த அளவிற்கு வந்ததற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் எங்கள் பாசத்திற்கும், நேசத்திற்கு முரிய எமது அத்தானையே சாரும்! இவர் எங்களுக்கு மட்டுமல்ல ஏராளமான கலைஞர் களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்தவர்!

அவருக்கு பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் கலைஞர்களால் நடத்தப்படும் இந்த பாராட்டு விழா சிறப்புறவும், அத்தான் நீண்ட ஆயுளைப் பெற்று அவருடைய கலைப்பணி மேலும் தொடரவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது சார்பிலும் எனது சகோதரர்கள் சார்பிலும் நன்றிகளும், வணக்கங்களும், வாழ்த் துக்களும் கூறுகிறேன். ■

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**

## வளம்மிகு மன்னார் மண்ணின் வற்றாத கவிச்சுனை 'குழந்தை'க்கு, மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபையின் வாழ்த்துப்பா

சிரித்த முகத்தோனே, என்னேரமும் - நற்
சிந்தனை செய்யும் மனத்தோனே
சீரான நற் கருத்துக்களை
சிதறாமல் எமக்களித்த - மா
சிகரமே, எம் மண் ஈன்றெடுத்த
சிறப்பான நல்முத்தே - உம்
வரவைப் பெருமையுடன் ஏற்று
வருக வருகவென வரவேற்கின்றோம்.

பஞ்ச, வயதினிலே பாலகப் பருவத்திலே
பரவசம் பொங்க பாடி ஏறினாய்
பாங்காக நல் நடிகனாய் மேடை
பார்த்தோர் பெருமகிழ்வு கொள்ள - இறை
பக்தியும் பாசமும் பண்பும் கொண்டு
படிப்பில் நல் ஊக்கம் கொண்டு
பதவிகளும் நீர் பெற்றபோதும் - அன்பு
பாலகனாய் வாழ்ந்து காட்டினாய்
அதனால் கிடைத்ததல்லவோ "குழந்தை"
என்னும் நற் பட்டப் பெயர்.

அரிச்சுவடி பயிலும் பாலகர் தொட்டு
அறிவாற்றல் மிக்க அறிஞர் வரை - உம்
ஆற்றல் அறிவை நன்குணர்வர்
ஆசையாய் படித்தும் பார்த்தும் மகிழ்வர்.
ஆலோசனைகளும் நல் ஆக்கங்களும்
ஆர்வமோடு தந்த அன்பரே
நீர் பெற்ற பட்டங்கள் - எம்
நிலம் பெற்ற பட்டங்கள் அன்றோ
நிகரில்லாக் கவித்துவனே
நின் பெரும் புகழ் என்றென்றும் நிலைக்கும்.

நீடித்த ஆயுளும் நீர்அருவி போன்று
நில்லாது பாய்ந்தோடும் கலைத்தொண்டும்
இன்னும் பற்பல பட்டங்களும்
ஈடில்லா நற் பரிசுகளும்
இறைவன் நல் அருளோடு இன்புற்றுவாழ
எம்தலை முறையினர் என்றென்றும்
எடுத்தியம்பி ஏற்றம் கொண்டு வாழ - உம்
எழுத்தாற்றலும் ஏற்ற மிகு பாடல்களும்
என்றென்றும் நிலைத்துவாழ வாழ்த்துகிறோம்-நாம்
வாழிய வாழிய வாழியவே.

**நன்றி:**
**மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு - பிரான்ஸ், கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த குழந்தை மாமா... !



அ.ஜஸ்மின் ஷறோன்
எழுத்தாளர்,
ஆவணம்,
நானாட்டான்,
மன்னார்.

கலைத்துறையும், பொதுத்துறையும்
காசினியில் செய்து வந்து;
கண்ணயர நேரமின்றி கலையார்வம் கொண்ட
கனிந்த மனமுடைய குழந்தை மாமாவே! - உம்
கால்தடம் பற்றி சிரம்தாழ்த்தி இருகரம் கூப்பி வணங்குகின்றேன்!

மன்னார் மாதோட்டமானது இயல், இசை, நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் போன்ற கலையம்சங்களால் நிறையப் பெற்றதும், நிறைந்த கலைஞர்களை, நாடக ஆசிரியர்களை, பேச்சாளர்களை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, நடனஆசிரியர்களை, சிற்பக் கலைஞர்களை உருவாக்கியும், உருவாக்கிக் கொண்டும் இருக்கின்றது. இம் மண்ணிற்கு பெருமையோ எம் மகத்தான கலை வளமும், கரை வளமும், மண்வளமுமாகும். மண்வளமும், கரைவளமும் ஓங்குவது போல், கலை வளமும் ஓங்கி உயர்ந்து செல்கின்றதென்றால், அது பாரம்பரியமாக பேணி பாதுகாத்து, வளர்க்கப்பட்டு, அழியாமல் நிலைத்திருக்கும் சொத்து என்பதில் ஐயமில்லை. இச் சொத்தை பாரம்பரியமாகக் காத்து பேணி வளர்த்த, மன்னார் மண்ணின் கலைத் தொட்டிலிலே பாலூட்டி சீராட்டி கனிவுடன் கலை வளர்ந்த மண்ணின் மூத்த கலைஞர்தான் அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் 'குழந்தை' ஆசிரியர் ஆவார்.

இவருடைய பெயர் செபஸ்தியான் செபமாலை. தற்காலத்தில், செபமாலை என்று சொன்னால் யார்? என்று கேட்பார்கள். யாருக்கும்... ஏன் ? உலகிற்கே அந்தப் பெயர் உடையவரைப் பெரிதாகத் தெரியாது. ஆனால், 'குழந்தை மாஸ்ரர்' என்றால் தெரியாத மனிதரே இல்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை உலகமே அறிந்து வைத்திருக்கின்றது. இப்பெரிய உலகமே அறிந்த குழந்தை மாமாவைப் பற்றி எழுதச் சொன்னால் சிறியவள் நான் என்ன எழுதுவது! எதை எழுதுவது! அவரோ பெரிய கடல்! நானோ அதில் சிறுதுளி! தொன்று தொட்டு போற்றப்படும் பெரியார்களில் ஒருவராக பார்க்க வேண்டிய இவரைப் பற்றி எழுத எனக்குச் சிறிதும் தகுதி இல்லை என்பது எனக்குத் தெரியும். எனினும், எனக்கு தெரிந்ததை, நான் அறிந்ததை, இவர் மூலம் நான் பெற்றதை இளையவள் நான் பகிர்கின்றேன்.

முத்தமிழ் வித்தகராய், முழு உலகும் அறிந்தவராய், பார் போற்றும் பாவலராய், சீர் பெற்று வாழ்ந்து வந்தார். முருங்கன் கமம் எனும் முத்தான ஊரினிலே! நாளெல்லாம் கலையார்வம் கொண்டு, பாரிலே பல கூத்திசை நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், நாட்டியங்கள், வில்லுப்பாட்டுக்கள், தெருக்கூத்துக்கள், கலை நிகழ்வுகள் என இவர் கைபார்க்காத கலையம்சங்கள் இல்லை என்றே கூறமுடியும். குழந்தைகளைக் கண்டதும் குழந்தை போலவே இந்தக் குழந்தையும் மாறிவிடுவார். தன் குழந்தைத்தனம் கொண்ட உள்ளத்தால் சிறுவர்களை எப்போதும் சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் ஒரு 'குழந்தை' என்று எண்ணினாரோ...!

'குழந்தை மாஸ்ரர்' என்றாலே இக்குவலயமும் குதுகலிக்கும். கலை வரலாற்றிலே பொறித்து வைக்கப்பட வேண்டிய கலைஞர் இவர். சிறந்த நடிகர், பேச்சாளர், பாடகர், எழுத்தாளர், பாடல் ஆசிரியர், நாடக ஆசிரியர் இவ்வாறு பல் பரிமாணங்களில் இவர் வளர்ச்சி பெற்று விளங்கினார் என்று சொன்னால் இவரின் வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். எழுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார்.

தன்னிடமுள்ள கலையார்வம் தன்னோடு மட்டும் அழிந்து விடக்கூடாது என்ற தன்னலமற்ற, தன்னிகரில்லா வேந்தனிவர். இவரிடம் நான்பெற்ற கலையார்வத்தையும். இவர் என்னைக் காணும் போதெல்லாம் கொடுக்கும் உற்சாகமான, உந்து சக்தியான வார்த்தைகளையும் இப்போது நன்றியோடு எண்ணிப் பார்க்கின்றேன்!

ஆரம்பத்திலே எனக்கு பதினநான்கு வயது இருக்கும்போது ஒரு சிறு கவிதை ஒன்றை எழுதி என்னை வளர்த்துவிட்ட அபிமான பத்திரிகையான 'மன்னா'விற்கு அனுப்பினேன். அந்தக் கவிதையும் பத்திரிகையில் வெளிவந்தது. வெளிவந்த சில நாட்களில் எங்கள் வீட்டிற்கு வந்த மாமா, "என்ன ஷரோன்..! கவிதையெல்லாம் பேப்பரில வருது. நல்லா எழுதி இருக்கிறீங்க. தொடர்ந்து நிறைய எழுத வேணும்..!" என்று சந்தோஷப்பட்டுக் கூறி என் ஆசையைத் தூண்டி விட்டுச் சென்றார். அன்று முதல் எடுத்தேன் பேனாவை இன்று வரை ஏதோ எழுதிக் கொண்டிருக்கின்றேன் என்றால், அன்று எனக்கு ஊட்டப்பட்ட உற்சாகமும், ஊக்கமும், என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும், இறை பராமரிப்புமேயன்றி வேறெதுவுமே இல்லை என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

என்ன நிகழ்வுகள் நடந்தாலும், அது சந்தோஷமான விடயமோ, துக்கமான நிகழ்வோ அந்தந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் உடனுக்குடன் ஒருவரைப்பற்றி வாழ்த்துப்பாவோ, கல்வெட்டுக்களோ இயற்றி, தான் அமைத்த ராகத்துடன் அனைவர் உடலும் சிலிர்க்கும் வண்ணம் பாடக்கூடியவர். அதற்கு இசைக்கருவிகளோ, தாள வாத்தியங்களோ தேவையே இல்லை. அவரின் குரலிலே அத்தனை இசையும், தாளமும் இருக்கும்; பின் ஏன் வாத்தியங்கள்? தனியாளாய் நின்று மேடையில் பாத்திரமேற்று நடித்தாலும், கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம். அத்தனை கலையம்சங்களும், அம்சமாய் அமைந்த தன்னிகரில்லா தலைவனிவர், சகலகலா வல்லவனிவர்.

பொதுப் பணிக்கென தன்னைப் பொதித்து வைத்தவர். சமூகநாடகங்கள், தெருக்கூத்துக்களை உடனுக்குடன், ஓரிரு நாட்களில் எழுதி நடிக்க வைக்கும் ஆற்றலும், தற்துணிவும், சாதிக்கவேண்டும் என்ற தன்னம்பிக்கையும் உடைய தலைமகனிவர். இவர் தன் முதிர்ந்த வயதிலும், கலையில் குன்றாமல் இளமையோடு இருக்கின்றாரென்றால் அது மாபெரும் 'இறைவரம்' என்றே எண்ணிப் பார்க்க முடிகின்றது. உடல் தளர்ந்தாலும் மனம் தளராமல் இசை ஆர்வலராக இருந்து கொண்டிருக்கின்றார். இந்திய சினிமா பாடல்களை பாடிய பழைய பாடலாசிரியர்களில் சிலரின் குரல்வளம் இவ்வேளை நினைவிற்கு வருகின்றது. அவர்களையும் மிஞ்சிவிட்டார் எங்கள் 'குழந்தை மாமா' என்றால் அது பெருமைக்குரிய விடயம் என்பது நிஜம்.

இவரைப் பற்றிச் சொல்லப் போனால்; "உள்ளத்தில் அன்போடு உறவாடும் வீணை; உதடுகள் இரண்டுமோ அமுதத்தின் பானை!" என்று கவிஞர் மு.மேத்தா கூறுவது போல, "இவர் தன் உதடுகளை திறந்தாலோ கலை அமுதம் ஆறாய் பாயும்! இவர் தன் உள்ளத்தை திறந்தாலோ குழந்தையுள்ளம் தவழ்ந்து நிற்கும்!" கலையுலகிலே எந்தப் பாத்திரங்களைக் கொடுத்தாலும் அதற்கு ஏற்றால்போல தன்னை மாற்றிவிடும் மகத்தான திறனுடையவர். ராசாவாக, மந்திரியாக, கோபக்காரனாக, நகைச்சுவையாளனாக, தலைவனாக, அரசியல்வாதியாக, பிச்சைக்காரனாக என்ன பாத்திரம் வேண்டும்? எல்லாப் பாத்திரமுமே இவருக்கு அத்துப்படி. அன்பான, பண்பான, தலைமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவம் நிறைந்த, தன்னம்பிக்கையுடைய, பொது நலமுடைய பேச்சாளர், சிந்தனையாளர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், சமூக சேவை யாளர் என்றே என்னால் வர்ணிக்க முடிகின்றது. எது எப்படி இருந்தாலும், யார் என்னதான் சொன்னாலும் தன் இலட்சியத்தில், இலட்சியப் பயணத்தில் தளராத தன்னம்பிக்கையோடு செயற்பட்டவர், செயற்படுகின்றவர். இவரின் பணி, எம் மாவட்டத்தின் நாட்டின் வளர்ச்சிக்கு அளப்பெரும் பணியாக இருந்து வருகின்றது என்பது தெளிவு.

கலையோடு மட்டும் நின்று விடாமல், கல்விப் பணியிலும் சிறந்த ஆசானாய் விளங்கி நல்ல தலைமுறையினரை, ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கியுள்ளார். பிள்ளை களின் ஆற்றலை இனங்கண்டு அத்துறையிலே அவர்களை வளர்த்து விடவேண்டும் என்ற பொது நல எண்ணமும், நற்சிந்தையும் கொண் டவர். அதன்படி பலரை உருவாக்கியும் இருக் கின்றார். முருங்கனில் 'முத்தமிழ்க் கலாமன்றம்' என்ற ஓர் அமைப்பை உருவாக்கி பல நிகழ்வுகள் இன்றுவரை நடைபெற்று வருகின்ற பெருமை கவிஞர் 'குழந்தை' மாமாவையே சாரும் என்பது நிச்சயம்.

இவ்வாறாக நான் அறிந்த 'குழந்தை' மாமா பற்பல சாதனைகளை நிகழ்த்தி மக்கள் மனதிலே இடம் பிடித்துவிட்டார் என்பது ஆணித் தரமான உண்மை. இவரின் கலை வாழ்வில் இவருக்கு இருந்த தளராத தன்னம்பிக்கை யையும், தற்துணிவையும், நினைத்ததை, நினைத்த நேரத்தில் சிறப்பாக வியக்கும் வண் ணம் செய்து முடிக்கும் ஆற்றலையும், சக்தியை யும் எண்ணி நான் வியந்து பாராட்டி மகிழ்ந்து வாழ்த்துகிறேன்! தொடர்ந்தும் இவரின் கலைப் பணிகள் சிறப்பாக நடந்தேற உடல், உள, ஆன்ம நலத்துடன், நீடிய ஆயுள் பெற்று, நிம்மதி வாழ்வு பெற நிமலனிடம் வேண்டுகின்றேன்!

அறிவுக் களஞ்சியமே! அமுத சுரபியே! - உம்
அருகிலே வந்தாலோ கலைரசம் பொங்குமே!
அழுகின்ற குழந்தையும் உம் முகம் பார்த்து
உறங்குமே!
அன்பான மொழியாலே! அணைக்கின்ற கரமாக
- நான்
அறிந்த 'குழந்தை' மாமாவே! வாழ்க உங்கள்
பணி!
ஆறாய்ப் பெருகி நீடிய ஆயுளுடன் வளர்க
உங்கள் மாண்பு! ■








குழந்தை செபமாலை அவர்களைப்பற்றி
வெளிவந்த நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில் நிறைந்திருக்கும் 'குழந்தை'



**அருள்திரு செ.அந்தோனிமுத்து, அ.ம.தி.**
B.Th (Rome), M.A. (Rome). M.A. (Madurai)
*அதிபர்,*
*டி மசனட் அ.ம.தி. இறையியலகம்,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

நினைவுகள் சுகமானவை. குழந்தைகளாக, இளைஞர்களாக நாம் இருந்தபொழுது நம்மைத் தொட்ட, நம்மைச் சுட்ட நிகழ்வுகள் இன்றும் எம் நெஞ்சங்களில் நிரம்பியிருக்கின்றன. இனிமையான நினைவுகளால் எம் வாழ்வு இனிக்கின்றது. கசப்பான நினைவுகளால் எம் வாழ்வு கசக்கின்றது, கனக்கின்றது. எனவே, நாம் சந்திக்கின்ற கசப்பான நிகழ்வுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்ட பின்னர் அவற்றை மறந்து விடுவது நிகழ்காலத்துக்கு மட்டுமல்ல, எதிர்காலத்துக்கே ஆரோக்கியமானது.

நல்ல நினைவுகள் நம்மைத் தாலாட்டும், ஊக்கப்படுத்தும், வாழ்வுக்கு பிடிப்பைத் தரும். மேலும், முதுமையில் வறுமையைச் சந்திப்பவர்கள், நோய்களை - நோவுகளைச் சந்திப்பவர்கள், தனிமையைச் சந்திப்பவர்களுக்கு உற்றதுணை நினைவுகளென்றால் அது மிகையாகாது. வாழ்க்கையில் ஏதோ சாதித்தவர்கள் முதுமையில் தங்களைப் பாதித்த, பதப்படுத்திய நிகழ்வுகளை அடிக்கடி நினைத்துப் பார்ப்பார்கள். எனவே, இந்த நினைவுகளை பலரும் கேட்கக்கூடிய, வாசிக்கக்கூடிய, பார்க்கக்கூடிய ஊடகங்களாக மாற்றுகின்றபொழுது அந்தப் பலனை பலரும் பாவித்து பலனடைவார்கள். சிறப்பாக எதிர்கால சந்ததிக்கு அதுவொரு சிறந்த பாடமாக அமையும்.

எடுத்துக்காட்டாக, எம் விசுவாசத்தில் இரு கண்களாக இருக்கும் எம்முடைய பாரம்பரியமும், வேதாகமும் எம் முன்னோர்களுக்கும், இறைவனுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கைகளும், அதன் நிமித்தம் ஏற்பட்ட வாழ்க்கை முறையின் நினைவுகளே. அவ்வாறே, எம் ஒட்டுமொத்த ஆன்மீகத்தின் அடித்தளமாக இருக்கும் திவ்ய நற்கருணை என்பது "என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் அன்பின் இன்றைய நினைவுகளின் கொண்டாட்டமே. எனவே, நினைவுகளின் ஆன்மீகம் அவசியமானது என்பது தவிர்க்க முடியாத உண்மை.

"ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே..." என்ற பாடல் வரிகளை எனக்குள்ளே பாடிக்கொண்டு என் வாழ்க்கையை நான் முழுமையாக வாழ பல பாடங்களைச் சொல்லித்தந்த என் ஆசான்கள், நான் வாழ தங்களைக் கரைத்த என் பெற்றோர், பெரியோர்கள், நல்லவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். கடவுளுக்கு அவர்களுக்காக நன்றி சொல்கிறேன்.

'செசெ' என்று என் சின்ன எழுத்துக்களை சரிசெய்து 'சைன்' வைக்க முழுப்பக்கத்தையே எடுத்துவிடுகின்ற செபமாலை என்ற குழந்தை மாஸ்ரரை என் நினைவுகள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றன. நடையிலே உறுதி, பார்வையில் தெளிவு, பேச்சிலே கணீர். மொத்தத்தில் அவரொரு நடமாடும் கலையாகவே எனக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். மேடையில் ஒரு கலைஞனை எப்படிப் பார்ப்போமோ, அப்படித்தான் நான் ஆரம்பத்திலே கல்விகற்ற முருங்கன் மகாவித்தியாலயத்திலே அவரைப் பார்ப்பதுண்டு. இதற்குக் காரணமும் உண்டு.

ஒருமுறை 1980ஆம் ஆண்டு தொடக்கத்தில் குழந்தை மாஸ்ரர் அவர்கள் 'கோலியாத்து' என்ற பாத்திரத்தை மேடையில் நடித்துக்காட்டிக் கொண்டிருந்தார். அவருடைய ஒவ்வொரு ஆட்ட அபிநயமும் மேடையைத் தாண்டி பாடசாலையையே அதிர்வித்துக் கொண்டிருந்தன. அவர் தன்னுடைய ஓய்வு நேரங்களில் ஏதாவதொன்றை யோசித்துக்கொண்டு தன் வாயினால், ஏன் தன்னுடைய முழு உருவத்தினாலும் இசையில் அன்றேல் கலையில் வெளிப்படுத்துவது என்னைப்போன்ற பலரின் சிந்தைகளுக்கு விருந்தாவதுண்டு.

இன்று நான் நல்ல இரசனையுள்ளவனாக இருக்கிறேன். இந்த இரசனை கலையையும் தாண்டி என் வாழ்வுக்கும் பணிக்கும் பிடிப்பைத் தருகின்றது. ஏன் நாடகம், எழுத்துத் துறையிலும் ஈடுபாடு உடையவனாக என்னை உருவாக்கியிருக்கின்றது என்றால் நான் குழந்தை மாஸ்ரரைத்தான் நன்றியோடு நினைப்பேன். அந்த நாள்களில் நான், அருட்தந்தை தமிழ்நேசன், அருட்தந்தை அன்புராசா, நிலான் மாஸ்ரர் எல்லோரும் குழந்தை மாஸ்ரரின் குட்டிக் கலைக்குழுவில் இடம்பிடித்தவர்கள். என்னைப் பொறுத்தவரை நானொரு அந்நியன். இருந்தும் 'தாழ்வுபாட்டு ரவி' என்று அந்தக் குழுவில் இடம்பிடித்ததை நினைக்கும்போது எனக்கு அது இன்றும் இனிமையாக இருக்கின்றது.

ஒருமுறை மாகாணமட்ட இசைப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. குழந்தை மாஸ்ரர் அவர்கள் "ஆனந்தம் பெற்று மகிழ்வோம் பாலகர்கள் நாமும் ஆனந்தம் பெற்று மகிழ்வோம்" என்ற பாடலை எழுதி இசையமைத்தார். நாங்கள்தான் பாடினோம். திருகோணமலை வரை சென்று பரிசைத் தட்டிச்சென்ற வெற்றியுணர்வு இன்றும் என்னை நனைக்கிறது.

இன்னொருமுறை குழந்தை மாஸ்ரர் அவர்கள் அழகிய சமூக சீர்திருத்த நாடகமொன்றை எழுதி நடிகர்களாக எங்கள் குழுவையே தேர்வுசெய்தார். அந்த நாடகம் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்புச் செய்யப்பட்டதை நினைக்கும்போது இன்றும் எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

நன்றி குழந்தை மாஸ்ரர். நீங்கள் கலையுலகுக்குச் செய்த சேவைகள் அளப்பரியன. அதுவும் என்னைப் போன்றவர்களுக்கு கலையில் இரசனையையும், ஆர்வத்தையும் ஊட்டியிருக்கிறீர்கள். ஆசிரியத்துறையிலும், கலைத்துறையிலும் நீங்கள் செய்த அர்ப்பணிப்புகள் அளப்பெரியன. உங்களைப் பார்த்து நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. அது கலைத்துறையைக்கூட கடந்தது என்றால் மிகையாகாது. உங்களைப் பற்றி நாங்களும் நினைத்துப் பார்க்க பல நினைவுகளை எங்களுக்குள் நீங்கள் விட்டுச் சென்றிருக்கிறீர்கள். மீண்டும் உங்களுக்கு நன்றி. நீவிர் நீடூழி வாழ்க! ■

"தூய மனதோடு பணத்தை எதிர்பார்க்காமல் கலைத்துறையில் ஈடுபடுகின்ற ஒருவனே உண்மையான கலைஞன் ஆவான். நாட்டுக்கூத்துக் கலையை உயிரென நேசிக்கும் நானும் எனது நண்பர்கள், உறவினர்கள் பலரும் அந்தக் காலத்தில் கால நேரம் பார்க்காமல் ஒத்திகைகளில் ஈடுபட்டதையும் வெற்றிப் படைப்புக்களாகக் கூத்துக்களை மேடை யேற்றியதையும் நினைத்தால் உண்மையில் மெய் சிலிர்க்கும்..."

**ஆசிரியர் குழந்தை செபமாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கிளி, பொன்னாடை பொருட்டல்ல நின்போன்ற பெருந்தகைக்கு



**திருமதி அ.ஸ்ரான்லி டிமெல்**
*மேலதிக அரசாங்க அதிபர்.*
*மன்னார்*

முத்தான முத்தல்லவோ
முருங்கன் தந்த முத்தல்லவோ
கவியான குழந்தையல்லவோ
கடவுள் தந்த சொத்தல்லவோ

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதே
பங்குனித் திங்கள் எட்டே
நவின்றிடா நன்றி உனக்கு
நல் 'தலைக்கோல்' ஈந்தாய் எமக்கு

கலாபூஷணம், ஆளுநர், சாஹித்தியமெனும்
மூவிருது பெற்ற முடிசூடா மன்னன்
முத்தமிழ் கலாநாடக மன்றத்தார்
பெருமைகொள் 'திருக்கலை வேந்தன்'

இன்பத்தமிழின் இதய ஓலமாகி
அறப்போரின் அறைகூவலுமாய்
அன்னையாய் தமிழுக்கு உயிரூட்டினீர்
தந்தையாய் தமிழனுக்கு உரமூட்டினீர்

பொற்கிளியும் பொன்னாடையும்
பொருட்டல்ல நின்போன்ற பெருந்தகைக்கு
பொக்கிஷமாய் கலை வளம் பேண
பொன்மகனாய் நீடூழி வாழ
வாழ்த்துகின்றேன்.

> "உலகில் படைகொண்டு போர் வெல்வோனையே வீரன் என்கிறோம்.
> பொறுமையோடு வறுமையைச் சகித்துக்கொண்டு மானத்தைக் காப்பவனே மாவீரன்"
> - சான்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையைக் கலையாக்கியவன்



**அருள்திரு. ஜெயந்தன் அமதி**
B.Th.,S.T.L.(Rome)
*விரிவுரையாளர்,*
*டி மசனெட் இறையியலகம்,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

மன்னார் மாதோட்டம் கலைகளின் விளைநிலம், நாட்டுக்கூத்து கலைவடிவின் தொட்டில், முருங்கன் அதன் முற்றம். காலம் காலமாக தம் வாழ்வையும் ஆன்மீகத்தையும் துய்ப்பதற்கும் வளர்ப்பதற்கும் கலைவடிவங்களே இங்கு வாகனமாயின.

குழந்தை கலைத்தாய்க்குக் குழந்தை. ஆசிரியராக, கலைஞனாக, சமூகப் பிரக்ஞை யோனாக, தலைவனாக, நல்ல மனிதனாக பன்முகங் கொண்டவர் குழந்தை செபமாலை மாஸ்ரர்.

குடும்பத்திற்கு நல்ல தலைவன். நல்ல துணை. நல்ல தந்தை அதற்கு மேலாக சமூகத் திற்கு நல்ல தலைவன். ஊருக்கு நேர்ந்துவிட்ட ஜீவன். அனைத்திற்கும் மேலாக கலைக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்தவர்.

கலைமகள்மேல் இவர்கொண்ட காதல் உறவினரின் புறணியை தூண்டிவிடுமோ என்ற பயம் எமக்கு. "அவரோடு சேராத. சேர்ந்தால் நீயும் இப்படியே நாடகம், நாடகமெண்டு அழிஞ்சு போக வேண்டியிருக்கும்" என விமர்சிக்கப் படுமளவிற்கு கலை மீது இவருக்குப் பிடிப்பு.

வெறும் அந்நிய அடையாளமான கோட் டையும், பெருக்கு மரமுமல்ல மன்னாரின் பெருமை. மாறாக தனக்கென ஒரு கலாசார, பண்பாட்டு, ஆன்மீக, நாகரிகம் கொண்டு வாழ்ந்து செழிக்கும் ஒரு மனித குழுமத்தின் தாய்மண் அது.

வாழ்க்கையைப் பேசாதவை, கலை கலையாக முடியா. தன் மக்களின் நடப்பு ஆன் மீக, சமூக, அரசியல், பொருளாதார முகங்களை வெளிச்சமிட்டுக் காட்டியவர் குழந்தை மாஸ்ரர் அவர்கள்.

மண்ணின் கலைகளை வெறும் கூப்பிடுதொலை மேடைகளில்லாமல் தேசிய பரப்பிற்கும் எடுத்துச் சென்றவன் இக்கலைஞன். கலையைக் 'காசாக்க'த் தெரியாத ஓர் அப்பாவி. உள்ளதெல்லாம் கலையாற்றில் அள்ளி வீசும் ஓர் ஊதாரி.

அன்றாட. சீவியமே கேள்விக் குறியாக் கப்பட்ட போர்த் தசாப்தங்களிலும் தன் கலை முரசை ஓங்கியொலித்தவன் இந்தக் கலைஞன். தம் மாணாக்கரையும், மக்களையும் கலைத் தேரேற்றிய கலைச் சாரதி. குண்டுச் சத்த லயத்தி லும் கலைக் கூத்தாடலாமெனக் காட்டிய நடப்புக் கலைஞன்.

வெறும் பரிசில்களையும், பட்டங் களையும் குறிவைக்காமல் வாழ்க்கையைக் கலையாகவும், கலையையே வாழ்க்கையாக வும் கொண்டவன்.

தமிழ்த்தாய் வாழ்க!
அவள் குழந்தை வாழ்க! ■

"உலகில் கல்வி முக்கியமானது மட்டுமல்ல அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக் கூடியதாகும்"
– **ஜே.ரஸ்கிஸன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாபெரும் கலைஞனைச் சந்தித்தேன்... !



ந. அருணகிரிநாதன்
பாரீஸ்,
பிரான்ஸ்.

நான் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் (1979ஆம் ஆண்டு) கடமையாற்றிக் கொண்டிருந்தவேளை இந்த மாபெரும் கலைஞர் குழந்தை மாஸ்ரர் அவர்களுக்கு சரவணமுத்து மாஸ்ரர் என்னை அறிமுகம் செய்து வைத்தார். இவரை குழந்தை மாஸ்ரர் என அழைத்தாலும் இவரின் பெயர் செபஸ்தியான் செபமாலை என்றும் அறிந்து கொண்டேன். இவர் ஒரு பிரபலமான நாட்டுக்கூத்துக் கலைஞர் என்றும் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

ஆனால் இவரைச் சந்தித்ததில் இருந்து இவரைக் கண்டு கதைத்ததை பெருமையாக எண்ணிக்கொண்டேன். இவருடன் நான் பழகியதை எனக்குக் கிடைத்த வாய்ப்பாக எண்ணினேன். மிகவும் அடக்கமானவர். புன்சிரிப்பையே எப்பொழுதும் காணலாம். தற்பெருமையோ அல்லது தன்னைப்பற்றி புகழ்வதையோ தன்னகத்தில் கொண்டிராதவர்.

ஆமாம் புகழ் பெற்ற கலைஞர்களுக்கு இவையெல்லாம் இருப்பதில்லை. மிகவும் சாதாரணமாகப் பழகுவார். நாம் இருவரும் சந்திக்கும் வேளைகளில் ஓரிரு வார்த்தைகளாவது பேசாமல் சென்றதே கிடையாது.

ஒருமுறை இவர் தனது வீட்டில் நடத்திய விருந்திற்கு என்னையும் அழைத்திருந்தார். அங்கு பலருடைய வேண்டுகோளை ஏற்று இவர் பாடிய நாட்டுக்கூத்துப் பாடல்களை எல்லோரும் ரசித்தார்கள். அன்றுதான் இவருடைய பாடல்களை நான் நேரடியாகக் கேட்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியது.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் நாட்டுக் கூத்துக் கலைஞனை தந்ததிற்காக கடவுளிற்கு எம் இனம் நன்றி சொல்ல வேண்டும்.

இவர் தனது கலையை தன்னுடன் வைத்திருக்காமல் அது வளரவேண்டும், அதை வளர்க்க வேண்டும் என்னும் உணர்வில் தனது பிள்ளைகளை அதே உணர்வில் வளர்த்தது பெருமைக்குரிய விடயம்.

இந்த மாபெரும் கலைஞருக்கு பிரான்ஸ் நாட்டுக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து பாராட்டுவிழா எடுப்பது சந்தோசப்பட வேண்டியது மட்டுமல்ல கலைஞர்களின் கடமையும் கூட. எனவே அந்தக் கடமையில் இருந்து பிரான்ஸ் கலைஞர்கள் தவறவில்லை.

இவரால் முருங்கன் மண்ணிற்குப் பெருமை! இப்படிப்பட்ட கலைஞனுடன் பழகியதை எனக்குக் கிடைத்த பெருமை என்று கூறி இவரின் கலை தொண்டு எம் தமிழினத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும். அதை அவர் கட்டாயம் செய்வார் என்னும் நம்பிக்கையுடன் வாழ்த்துக்களைக் கூறி நிற்கிறேன். ■

நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009

."வாழ்வைப் பயிலும் சாதனமே கல்வி" – வில்டமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட அற்புதக் கலைஞன்



**அருட்தந்தை ஜெரோம் லெம்பெட் , அ.ம.தி.**
B.A.(Jaffna)
*தொடர்பகம்,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

**சி**று வயதில் இருந்தே நாடகத்திலும், நடிப்பிலும், பாட்டிலும், கலையிலும் நாட்டம் கொண்ட சிறுவனாகவே நான் வளர்ந்தேன். எனது கிராமத்தைத் தாண்டி எனது ஆளுமை விரிந்தபோது, மன்னார் பட்டினத்தில் என்னைக் கவர்ந்த ஓர் ஒப்பற்ற கலைஞராகத்தான் குழந்தை என்ற செபமாலை மாஸ்டரை நான் கண்டேன். அவரை முதன் முதலாக கண்ட ஞாபகம் இன்றும் பசுமரத்தாணிபோல் எனது மனதில் நிலைத்திருக்கின்றது.

1960இல் தமிழரசு கட்சித் தலைவர்கள் மன்னார் பட்டினத்தில் சத்தியாக்கிரகம் நடத்திய போது, தமிழ் எழுச்சி தரும் பாடல்களையும், தந்தை செல்வாவின் இலட்சியங்களையும், உள்ளடக்கி, "எங்கள் திராவிட பொன்னாடே!" என்ற இசையில், கணீர் என்று அவர் பாடிய பாடல் வரிகள், இன்றும் என் நெஞ்சில் நீங்காமல் நிலைத்திருக்கின்றது. அதன் பின்பு மன்னார் பட்டின சபையால் நடத்தப்பட்ட தமிழ் விழாக்களிலும் கலைநிகழ்வுகளிலும், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினால் நடத்தப்பட்ட அரங்க நிகழ்வுகளில் குழந்தை என்ற கலைஞனை நான் கண்டு வியந்திருக்கின்றேன். குடும்ப சகிதமாக அவர் தலைமையில் மேடையேற்றப் படும் நாடகங்கள் முதன்மையான இடங்களை பெற்றுச் செல்லும் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

நாடகம் என்பதே பல கலைகளின் சங்கமம். அது தனக்கே உரிய பல சிறப்பு அம்சங்களை கொண்டுள்ளது. இசை, நடனம் இலக்கியம், நடிப்பு, வேட உடுப்பு, விதானிப்பு, ஓவியம், சிற்பம், ஒப்பனை, கட்டவியல், ஒளி அமைப்பு, பேச்சு போன்ற பல கலைகளின் ஒருங்கிணைப்புத்தான் நாடகம். இந்த ஒவ்வொரு துறையிலும் பாண்டித்தியம் பெற்ற ஓர் அற்புதக் கலைஞனாகவே நான் குழந்தை மாஸ்டரை கண்டேன்.

நாடகத்தை பற்றி விமர்சிக்கும் போது, பேராசிரியர் வித்தியானந்தன் சொல்வார், "வீட்டை கட்டிப்பார். கலியாணத்தை முடித்துப் பார், நாடகத்தை நடித்துப்பார்" என்று. ஒரு நாடக மேடையேற்றம் மிகச்சிரமமான காரியமாகும். தனது குடும்ப உறுப்பினர் அனைவரையும் ஒருங்கிணைத்து, மிகுந்த அர்ப்பணத்தோடும், ஈடுபாட்டோடும், ஒரு தியாக வேள்வியைப் போல ஒவ்வொரு நாடகத்தையும் மேடையேற்றியவர் குழந்தை என்ற கலைஞர் என்று சொன்னால் அது முற்றிலும் உண்மை.

ஈழத்து மரபுவழி நாடகங்களையும், கூத்துக்களையும், பேணிப்பாதுகாக்கின்ற ஒரு கடமையாக, அர்ப்பணத்துடன் இணைந்த ஒரு பணியாக அவர் நாடகங்களை மேடையேற்றினார். ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டே கல்விப் பணிக்கு மத்தியிலும் கலைத் தொண்டாற்றியவர் குழந்தை. மன்னார் கூத்து மரபில், வடபாங்கு, தென் பாங்கு, வாசாப்பு என்ற மூன்று மரபுகளையும் ஒருங்கிணைத்து, தமது நாடகங்களுக்கு, அழகும் அணியும் சேர்த்தவர்.

இறைவனின் உன்னதமான படைப்பின் உயர்ந்த வெளிப்பாடுதான் ஒரு குழந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை உலகத்தைப் பார்க்கின்ற பார்வை ஒரு புனித பார்வை. அங்கே கள்ளம், கபடம் இல்லை, சூது வாது இல்லை. குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. இப்படியான மேன்மை நிறைந்த உள்ளம்தான், குழந்தை மாஸ்ரரின் உள்ளம்கூட. அனுபவமும் புத்திக் கூர்மையும் உள்ள அவரது உள்ளம், அது இயற்கையை, உலகத்தை, மனித வாழ்வை, அங்கே பரந்து விரிந்து கிடக்கும் அவலங்களை, ஆழ்துயர வடுக்களை, கலையுணர்வோடு வெளிப்படுத்தும்போது இயல் இசை நாடகம் உருவாகின்றது.

குழந்தையை, மக்கள் கலைஞரென்று சொல்லலாம். சமூகத்தோடு அவர் வாழ்ந்த மனித சூழலோடு இரண்டறக் கரைந்தவர். திருமணவீடு, பாராட்டு வைபவங்கள், சமூக கொண்டாட்டங்கள், ஏன் இறந்தோர் இல் லங்கள் இப்படியான ஒன்றுகூடலில், அவர்தம் இலக்கியப் படைப்புக்கள், வாழ்த்துப்பாக்கள் கனதியாய் வெளிப்பட்டு நிற்கும். கலைசார்ந்த எந்த விடயத்திலும், சளைக்காத, பின்வாங்காத உள்ளம் கொண்டவர் குழந்தை மாஸ்ரர். அவரது வீரத்தாய்(1966), கல்சுமந்த காவலர் கள்(1968), இணைந்த உள்ளம்(1972), அன்புப் பரிசு, யார் குழந்தை, பரதேசிமகன், வீரனை வென்ற தீரன், இறைவனா? புலவனா?, விடுத லைப் பயணம் போன்ற நாடகங்கள் பல்லாண் டுகளாகப் பாராட்டுக்களைப் பெற்ற நாடகங்கள் ஆகும்.

அவர் குடும்பம் கடவுள் பக்தியும், கலை யுணர்வும் உடைய குடும்பமாகும். மன்னார் மாவட்டத்தின் கலைவரலாற்றில் குழந்தை மாஸ்ரருக்கு என்றும் ஒரு சிறந்த, உயர்ந்த இடம் உண்டு என்பது வெளிப்படையான உண்மை. இவரது கலைப்பணி மென்மேலும் சிறக்கவும் வளரவும் வாழ்த்துகின்றேன். ■

**என்னைச் செப்பனிட்ட ஆசிரியர்!...**

காலங்கள் படு வேகமாகவே ஓடிக் கழிந்து கொண்டிருக்கின்றது. இந்த இடைவெளிக்குள் எத்தனை மாறுதல்கள் பொதுவாக எம் கண்முன்னே நாளாந்தம் நிறையவே ஏற்பட்டுக் கொண்டே இருப்பதைக் காண்கின்றோம். எது எப்படியெல்லாம் மாற்றம் கண்டாலும் ஆசிரியர் மாணவர் என்ற உறவு முறையில் மாற்றங்கள் என்றுமே ஏற்பட்டதில்லை என்பதற்கு முன் உதாரணமாகவே எங்கள் ஆசான் உயர்திரு.செபமாலை அவர்கள் முருங்கன் மண்ணில் நான் கண்ட முத்து. என் ஆரம்ப பாடசாலைக் காலங்களில் எனது தமிழ் ஆசிரியராக விளங்கினார். அன்று அவர் ஊட்டிய தமிழ் அறிவும், உணர்வும் இன்று நான் ஒரு தமிழ் அறிவிப்பாளனாக வாழ்வதற்கு வழி சமைத்திருக்கிறது என்பது மிகையல்ல.

அவரிடம் பல ஆற்றல்கள் நிறைந்திருப்பதற்கு சாட்சிகளாகப் பல நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டலாம். அவற்றில் ஒன்று தான் இன்றைய பெருவிழா. பல கௌரவங்களைப் பல இடங்களில் பெற்ற பெரு மனிதருக்கு, புலத்துக் கலைஞர்களால் ஏற்படுத்தப்பட்ட இன்றைய நிகழ்வு மிகவும் பொருத்தமானதொன்றாகவே இருக்கின்றது. என் ஆசானிடம் கற்றுத் தேர்ந்தவர்கள் இன்று விற்பனர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை எங்கள் முருங்கன் மண் நன்கு அறியும். ஒரு மனிதன் வாழும்போதே கௌரவம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு எல்லோருக்கும் எட்டிவிடும் விடயமல்ல.

எந்தத் துறையில் எப்படி மிளிர்ந்தாலும் முழுமையான மனிதனாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கு காலத்தின் கண்ணாடியாக எங்கள் குருவே போதுமான சான்றாகி நிற்கின்றமை எமக்கு பெருமையாக இருக்கின்றது. இம்மலரில் வாழ்த்தும் வாய்ப்பினை பெற்றமையை எனக்குக் கிடைத்த பெருமையாக கருதிக்கொண்டு வாழ்த்தி விடை பெற்றுக்கொள்கின்றேன்.

**பிலிப் தேவா** *(வானொலி அறிவிப்பாளர், பிரான்ஸ்.)*

**நன்றி: கூத்திசைக்காவலன் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை, சிறப்பு மலர் - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழிப்புறு நிலமகள் பேர்கொண்ட முருங்கன்



**கலையார்வன்**
*சாஹித்திய விருதுபெற்ற எழுத்தாளன்,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

கலைத்தாய் ஈன்றகலைக் குழந்தையே
குவலயம் போற்றிநிற்கும் வல்லோனே
சிலையெடுத்து சிறப்பூட்டுதற்குரிய சீராளனே
சிறிதேனும் கர்வமுமக் கில்லையன்றோ

கல்வெட்டு பாடல்கள் உள்ளமுருகும்
கவிதைச் சரங்கள் நெக்குருகும்
வில்லுப் பாட்டுக்கள் வலிந்திழுக்கும்
வாழ்த்துப் பாக்கள் வியப்பளிக்கும்

சொல்லாத கதைகளில்லை நாடகத்தில்
செல்லாத இடங்களில்லை ஈழத்தில்
பல்கலை ஆற்றலில் பரிணமித்தீர்
பரிவான அணைப்பால் பெயரெடுத்தீர்

நாடகவரங்கில் சிம்மக் குரலோனாய்
நேர்த்தியாய் மாறிடிவீர் பாத்திரமாய்
நாட்டுக்கூத் தாடினால் தாண்டவம்தான்
நீட்சியாயத் தொடர்ந்திடும் இறுதிவரை

எத்தனை எத்தனை புகழ்மாலைகள்
எண்ணி லடங்கிடா இரசிகர்கள்
எத்தனையோ தரம்மிக்க விருதுகள்
எண்ணவே உள்ளம் குளிருதையா

கலையாலே புகழடைந்த உங்களைநான்
காண்பதற்கு காலம் வழிகாட்டவில்லை
ஆழமான பாசமுள்ள பிள்ளைகள்போல்
'அப்பா'வென் றழைக்கலாமா அன்புருக?

அப்பா!

உங்களின் சிறப்புக் கிந்நூலோர் எடுத்துக்காட்டு
உலகோர் அறிந்திட உண்மையைக் கூறுமகராதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கக் கீரிடம் தலைமீதணிந்த சிறப்பினை
தந்திடும் இந்நூல் நிலைத்திடும் வரலாறாய்

செழிப்புறு நிலமகள் பேர்கொண்ட முருங்கன்
களிப்புறு கலைகளால் சிறப்புற்ற தும்மால்
கல்வியை கலையை உம்மிரு கண்களாய்
கொண்டனை அப்பா கண்டனை சிறப்பை

கட்டுரை கவிதைகள் கல்வெட்டுப் பாடல்கள்
காலத்தால் அழியாத நிலையான ஆக்கங்கள்
நாட்டுக்கூத்து நாடகம் நானிலத்தோர் புகழ்வர்
நாமகள் உந்தன்நாவில் களிநடம் புரிகிறாள்

இரண்டறக் கலந்தது கலையார்வ மும்வாழ்வில்
இணையுண்டோ இம்மண்ணி லிணையாக நடைபோட
உரங்கொண்ட 'முத்தமிழ் கலாமன்ற' முமதுசொத்து
உயிரோட்டம் பெற்றது உங்களரும் பணிகளால்

இயல்பாகப் புகுந்தது ஆயகலைகளின் ஆற்றல்
இதுவரை கண்டதில்லை தோல்வியின் தூற்றல்
புயலாக வருமிடரை தகர்த்திடும் பலத்தினை
பரிசாகக் கொடுத்திடும் எமையாளும் இறைவா!

மலர்வதும் மாலையில் உதிர்வதும் மலரன்றோ
மன்னா! உமக்கில்லை மண்ணி லிம்மரபு
ஆலமரமாக அவனிக்கு அளித்த அருங்கலைகள்
ஆதரவாய் ஆயுள்தர ஆண்டவனை வேண்டுகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலை குழந்தையின் கலைப்பணியும் சமூகப்பணியும்



ச. குணசீலன்
கிராமசேவகர்,
ஆவணம்,
மன்னார்.

மன்னார் மாவட்டத்தில் புகழ் பூத்த கலைஞர் திருவாளர் செபமாலை குழந்தை அவர்களின் கலைத்துறை பற்றி பல பெரியார்கள் சொல்லி இருப்பார்கள். இருந்தும் அவரது கலைப்பணியைச் சற்றுத் தொட்டுவிட்டு இன்னுமொரு விடயத்திற்குச் செல்லலாம் என எண்ணுகின்றேன்.

கலைஞர் குழந்தை அவர்களின் கலைத்துறைப் பயணம் பாடசாலை மாணவராக இருக்கும் போதே ஆரம்பித்து இன்னும் தொடருகின்றது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் கலையை தளராது வளர்த்து வருபவர். குறிப்பாக நாட்டுக் கூத்து, சமூக நாடகங்கள், இசை நாடகங்கள் போன்றவற்றை எழுச்சி பெற வைத்தவர். குறிப்பாக எமது முன்னோர் எழுதி வைத்த பெரிய நாடகங்களை உருக்குலையாமல் சுவையூட்டி நயமூட்டி மெருகூட்டினார்.

அத்துடன் தனக்கிருந்த இந்த வளத்தை தான் மட்டும் வைத்திராமல் எல்லோரும் இதனை பெறவேண்டும் என்ற சிந்தனையுள்ளவராக இருந்து, விரும்பியவர்களுக்கெல்லாம் தன் கலைச் செல்வத்தை அள்ளிக் கொடுத்தவர். இவரால் உருவான கலைஞர்கள் எழுத்தாளர்களாக, நாடக இயக்குநர்களாக, கவிஞர்களாக இன்னும் நடிகர்களாக மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர் தனது கலைப் பயணத்தை ஆற்றும் போது இவரது பொருளாதாரம் மிக நெருக்கடியாகவும் அதனை தொடர்வதற்கு இடையூறாகவும் இருந்தது. சில வேளைகளில் தனது மனைவியின் தாலியைக் கூட அடகு வைத்து குறித்த நிகழ்ச்சிகளை கொண்டு சென்று மேடையேற்றிய நிகழ்வுகளும் உண்டு.

ஒரு கலைஞனை உருவாக்குவதில் அவர் மனம் சோராமல் தன்னிடம் உள்ளதெல்லாம் வெளிப்படுத்தி அவனை உருவாக்குவார். இன்னும் மேலாக ஒரு கலை நிகழ்வை செய்ய வேண்டுமாயின் பலருடைய பங்களிப்பு தேவைப்படும். சில வேளைகளில் பங்களிப்புக் குறையும்போது தனியாகவே நின்று ஒரு சிலருடைய உதவியுடன் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர்.

அடுத்த விடயம் இவரது சமூகப் பணிகள் பற்றியது. "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற பாடலுக்கொப்ப இளைஞனாய் இருந்தபோது தமிழுக்காக பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். அன்றைய தமிழ் பெரியார்களின் நெஞ்சத்தில் இடம் பிடித்துக் கொண்டவர். பல சத்தியாக்கிரகங்களில் ஈடுபட்டு, அடிபட்டு, உதைபட்டு தமிழரின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்.

நன்மை தீமைகளிலெல்லாம் கலந்து கொண்டு சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டவர். தனது கிராமத்தின் வளர்ச்சிக்காக பல கிராம விழிப்புணர்வு செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காகப் பல செயற்பாடுகளைச் செய்தவர். கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், முத்தமிழ் கலாமன்றம் போன்றவைகளை உருவாக்கி அதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கிராமத்தில் மட்டுமல்ல அயல் கிராமங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகச் செயற்பட்டவர்.

சங்கங்களை உருவாக்கி செயற்படுத்தி வந்தது மட்டுமல்லாமல் தொடர்ந்து பல தலைவர்களை உருவாக்கி அவர்களை சமூகப் பணியாளர்களாக மாற்றியவர். எங்கு அவரின் பணி தேவையென கேட்கும் போதெல்லாம் அங்கு சென்று அப்பணிகளை நிறைவேற்றிக் கொடுக்கும் மனப்பக்குவம் கொண்டவர்.

இப்படியாகப் பல சமூகப்பணிகளையும் கலைப்பணிகளையும் நிறைவாக தன்னால் முடியும் வரை ஆற்றி எமது பிரதேசத்திற்கும், எமது மாவட்டத்திற்கும், எமது நாட்டுக்கும் புகழ் சேர்த்தவர். இன்னும் அவரது இச்சேவை தளர்ந்தாலும் முடிந்தளவு செய்துகொண்டே இருக்கின்றார். இவரது சமயப்பணிகளில் முக்கியமாக இறைமகன் இயேசுவின் பாடுகளை எடுத்தியம்பும் பாடல்கள் அனைத்தையும் இசையுடன் இணைத்துப்பாடி இறுவட்டுக்களாக எமது மாவட்டத்தில் முதன் முறையாக ஆற்றிய பெருமை இவரையே சாரும்.

எமது பிரதேசத்தில் அல்லது மாவட்டத்தில் பல பெரியார்கள் சமூகப்பணி, கலைப்பணி, சமயப்பணிகளை ஆற்றியுள்ளார்கள். அவர்கள் தமது வாழ்நாளின்போது பாராட்டப்பட வேண்டும். அப்போதுதான் இளைய தலை முறையினர் அதனைப் பார்த்து அவர்களும் பல்வேறு பணிகளில் ஈடுபடுவர் என்பது மட்டுமல்ல அப்பெரியார்களும் சந்தோஷமடைவார்கள் என்ற உயரிய சிந்தனையோடு செயற்பட்டார்கள். இதன் காரணமாக விழாக்களை ஏற்பாடு செய்து பல பெரியார்களை அழைத்து அவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை இவரது பெருந்தன்மையான சிறப்பம்சமாகும்.

தனது உறவினரின் சந்தோசமான விழாக்களுக்குச் செல்லும்போது அங்கு இசை நிகழ்வுகளை அவ்வப்போது உருவாக்கி அங்கு சந்தோஷத்தை மிகைப்படுத்துவார். இன்னும் துக்க நிகழ்வுகள், பெரியர்களின் இறப்பு நிகழ்வில் கலந்து கொள்வார். இந்த நிகழ்வுகளில் முன்னைய காலங்களில் அப்பெரியவர்களைப் பற்றி அவர்களின் செயற்பாடுகளைப் பற்றி உரையாற்றுவது வழமையாக இருந்தது. ஆனால் இறந்த அப்பெரியார்களைப் பற்றி உரையாற்றுவது மட்டுமல்லாமல் அவர்களின் பிறப்புத் தொடக்கம் இறந்தது வரையான அவர்களது நற்செயற்பாடுகளைக் கல்வெட்டு மூலம் பாடி வெளிப்படுத்தி துக்கத்தில் கலந்து கொள்வார். இந்த நிகழ்வை எமது மாவட்டத்தில் முதல் முதலில் ஆற்றிய பெருமையும் இவரையே சாரும். ■

**மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்கள் கலைஞர் செபமாலை குழந்தை ஆசிரியரின் 'பரிசு பெற்ற நாடகங்கள்' என்ற நூலுக்கு 1997ஆம் ஆண்டு வாழ்த்துரை வழங்கியபோது,** "ஆசிரியரும் கலைஞருமாகிய திரு. செ.செபமாலை அவர்களை பள்ளிக் காலம் தொடக்கம் நான் அறிவேன். அன்றெல்லாம் எமது பாடசாலையில் கலை நிகழ்ச்சிகள் என்றால் குழந்தையும் அவருடைய சகோதரர்களும் மேடை ஏறி எல்லோருடைய பாராட்டுக்களையும் பெறுவர். சங்கீதமும், கலையும், நாடகமும் இவர்களுடைய இயல்போடு கலந்துவிட்ட ஒன்றாக இருந்தது.

ஆசிரியர் குழந்தை அவர்கள் இந்தத் திறமையை இடை விடாது வளர்த்து மாதோட்டத்தில் மட்டுமல்ல ஈழத்திலும் பெயர்பெற்ற ஓர் உயர்ந்த கலைஞராகத் திகழ்கின்றார். பல் துறைக் கலைஞராகத் திகளும் குழந்தை அவர்கள் தமிழ் உலகின் பாராட்டுக்குரியவர்" என விதந்துரைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயமுள்ள இறைத்தொண்டன்



**திருமதி பயஸ் ரதி யுடெக்சியா பீரிஸ்**
*PGD.Ed.,M.Ed.,B.A.,*
*ஆசிரிய ஆலோசகர் (கிறிஸ்தவம்),*
*வலயக் கல்விப் பணிமனை,*
*மன்னார்.*

*குழந்தை மாஸ்ரர் என்று செல்லமாக அழைக்கப்படும் செபமாலை மாஸ்ரர் அவர்கள் சேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்த பண்பாளன்.*

*மக்கள் சேவையே மகேசன் சேவையென எண்ணி தன் கல்விப் பணியோடு சமூகப் பணியாக இறைபணி ஆற்றியவர்.*

*பல்துறை விற்பன்னரான இவர், தன் குடும்ப வாழ்வில் நன்மக்கள் அறுவரைப் பெற்று, அவர்கள் ஒவ்வொருவரையும் துறைசார் வல்லுனர்களாக உருவாக்கினார்.*

*சமூக சேவைக்கெனவே தன் மக்கட் செல்வங்களை பயிற்றுவித்து ஆன்மீக, சமூகப் பணியாளர்களாக வடித்தெடுத்தார்.*

*தான் பெற்ற பிள்ளைகளை மட்டுமல்ல ஊரார் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளைப்போல் நேசித்த நேயன்.*

*பல இறைத்தொண்டர், துறவியர் உருவாக்கத்தில் ஆலோசனையும் வழிகாட்டியுமாக இருந்து தம் பணியோடு ஆன்மீகப் பணியையும் இணைத்துக் கொண்டவர்.*

*எவரையும் மதிக்கும் மகோன்னதம் இவரோடு கூடப்பிறந்தது. தம்மை அண்டி வருவோர்க்கு கரவாது வாரி வழங்கும் அறிவுப் பொருள் பொதிந்தது.*

*மனிதநேயப் பண்பும், ஆழ்ந்த இறை பக்தியும், தன்னடக்கமும் இவரது அணிகலன்களாகும்.*

*நல்லாசிரியனாக இன்சொல் வார்த்தை பேசி எவரும் இலகுவில் அணுகக்கூடிய இனிய சுபாபம் கொண்டவர்.*

*தம் ஆசிரிய மாணவர்க்கு ஊக்கமளித்து, உயர்ந்த இலக்குடன் செயற்பட வழிகாட்டியாய் அமைந்தவர்.*

*மருதநில மக்களின் அழியாச் செல்வமாகிய இவர் வாழ்வு கிறிஸ்துவின் முப்பணிகளான குரு, ஆயன், ஆசிரியப் பணிகளில் தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டவர்.*

*இவரின் எளிமையான தோற்றம், விசாலப் பார்வை மக்களுடன் அணைந்து கொள்வதுடன், அணைந்து வாழும் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற பண்பாளனாக இவரைப் பார்க்கின்றேன்.* ■

"கட்டுண்டோம், பொறுத்திருப்போம்: காலம் மாறும்
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்."
– மகாகவி பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டும் கலங்கரை விளக்கு



ம.பத்திநாதன்
பாரிஸ்,
பிரான்ஸ்.

எமது பேரனார் மரியான் சந்தான், மரியான் செபஸ்ரியான் ஆகிய இருவரும் சகோதரர்கள். இவர்கள் இருவரும் இளம் வயதில் இருந்தே மிகவும் கலை ஆர்வம் கொண்டவர்களாக இருந்த ஒரு கலைக் குடும்பம். மரியான் சந்தான் அவர்கள் சிறந்த ஒரு சரஸ்வதி புலவர் ஆவார். கோவில் கவிகள், நாடகம் என பல நூல்கள் எழுதினார். புனித யாகப்பர் நாடகத்தை இரண்டு இரவு கதையாக எழுதி எல்லா மக்களின் பாராட்டுதலையும் பெற்றவர். அப்படியான ஒருவரின் வழிநடத்தலில் அவரின் ஆசீரை பெற்று சிறந்த கலைஞராக உருவாகியவர்தான் குழந்தை செபமாலை அவர்கள்.

கலை ஆர்வம் கொண்டவராக மாணவ பராயத்தில் இருந்து பாடசாலை பேச்சுப் போட்டிகளிலும், அரசியல் மேடைகளிலும் சிறந்த பேச்சாளனாக விளங்கினார். அப்போது உள்ள அரசியல் தலைவர்களால் பாராட்டுக்கள் பெற்றார். 1959ஆம் ஆண்டு சத்தியாக்கிர கங்களில் இவர் அதிக பங்கு கொண்டு 'அறப் போர் அறைகூவல்' என்னும் நூலை எழுதி பல ஆயிரக்கணக்கான உள்ளங்களைக் கவர்ந்தார். சிறந்த எழுத்தாளனாக, நடிகராக, பாடல் பாடுவதிலும் அவர் சிறந்து விளங்கினார்.

மாணவப் பராயத்தில் சிறந்த விளை யாட்டு, உதைபந்தாட்ட வீரராகவும், அதி வேகமாக ஓடும் போட்டி போன்றவற்றிலும் பல வெற்றி களை பாடசாலை மட்டத்தில்தான் கல்வி பயின்ற பாடசாலைக்குத் தேடிக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். இவர் சிறந்த பாடகர், இசையமைப்பாளர், நாடக எழுத் தாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர். வில்லுப்பாட்டு பாடுவதிலும், கோயில் நிகழ்ச்சிகளிலும் கலை விழாக்களிலும் நாடகம், பாடல் என்று பல அரச தலைவர்கள், அரசாங்க அதிபர்கள், அதிவணக் கத்துக்குரிய ஆயர்களான எமிலியானுஸ் பிள்ளை, தியோகுப்பிள்ளை, தோமஸ் சவுந்தர நாயகம், மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு மற்றும் குருக்களால் பல பாராட்டுதல்களை பெற்று பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கப்பட்டிருக்கிறார்.

தமது பண்பால், பணிவால், தமிழால், கலையால், நடிப்பால், பாடலால், பேச்சால், சிரிப்பால் எல்லோரின் அன்புக்கும் மதிப்புக்குரி யவராக திகழ்கின்றார்.

அவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அடம்பன் மகாவித்தியாலயத்தில் தமது பணி யைத் தொடங்கினார். அங்கு அவர் மாணவர் சமூகத்தை ஒன்று திரட்டி கலை, கல்வி, விளை யாட்டு, பொதுப்பணி என்று பல துறைகளில் அவர்களுக்கு தேர்ச்சி அளித்து பல துறைகளி லும் மாணவர்களை வெற்றியடையச் செய்து பெற்றோரால் தலைமை அதிகாரிகளால் பல பாராட்டுதல்களைப் பெற்றார். பாடசாலைக்கும் பல பெருமையையும் வெற்றியையும் மாவட்ட மட்டத்தில் தேடிக்கொடுத்தார். பாடசாலைப் பணியோடு மட்டும் அவர் நிற்காது, பொதுப் பணிகளிலும் அவர் தலைமை தாங்கி செயற் பட்டார். இதனால் பல ஆண்டுகள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டதற்கு அமைய அங்கு பணி செய்தார். எல்லோரின் மதிப்புக்குரியவராக விளங்கினார்.

பின்பு முருங்கன் மகா வித்தியாலயத்துக்கு உப அதிபராக மாற்றப்பட்டார். இங்கும் பல ஆண்டுகள் பணியை செய்தார். முத்தமிழ் கலாமன்றம் ஒன்றை உருவாக்கி அதில் பல இளைஞர்களை, இளம் பெண்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு கல்வி, விளையாட்டு, பொதுப்பணி என்று பலதுறையிலும் தேர்ச்சி அளித்து அவர்கள் விளையாட்டு வீரராகவும், கலையில் ஆர்வம் உள்ளவராகவும், நடித்தல் - பாடுதல் போன்றவற்றில் சிறந்தவர்களாக ஆக்கி சமூகம் மட்டில் எல்லோர் உள்ளங்களிலும் வரவேற்பைப் பெற்றார்.

இவரின் காலங்களில் பாடசாலை மிகவும் பல துறையிலும் வளர்ச்சிப் படிகள் அடைந்தது. இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பெரும் பகுதியினர் இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல துறைகளிலும் சிறந்தவராக இருப்பதற்கு இவர் கடமை உணர்வுடன் பணியில் செயற்பட்டதே காரணம். தான் பெற்ற அறிவை, ஆற்றலை, பண்பை எல்லோர் மட்டிலும் வெளிப்படுத்தி எல்லோரையும் சிறந்தவர்களாக உருவாக்கினார்.

முருங்கன் புனித யாகப்பர் கோயில் சபைத் தலைவராக முப்பது வருட காலமாக தமது பணியை செய்தார். இவருடைய காலங்களில் கோயிலைச் சேர்ந்த மக்களும், கோயிலும் பல துறையிலும் பெரும் வளர்ச்சியடைந்தன. கிராம மன்றங்கள், சமூக மன்றம், கலை மன்றம் என பல துறைகளிலும் மக்களை மேம்படுத்த மிகவும் கடினமாகப் பாடுபட்டார். இவற்றின் மூலம் பலதுறையிலும் சமூகம் முன்னேற்றம் அடைந்தது.

எமது பகுதி மக்கள் கலையில் ஆர்வம் உள்ளவராக இருந்தபடியால் பலமுறை போட்டி நாடகங்களில் வெற்றி பெற்று எல்லோரின் மதிப்பையும் பெற்றார். அவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் டேவிட் ராஜேந்திரன் போன்றோரால் நேர்காணல் செய்யப்பட்டு இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டதால் பல கலைஞர்களாலும், கல்விமான்களாலும் மிகவும் பாராட்டப்பட்டார். நடிகர் வைரமுத்து, பூந்தான் யோசேப்பு போன்ற கலைஞர் போல் மிகவும் திறம்பட கர்நாடக சங்கீத முறையில் பாடுவார்.

அரச பாத்திரப் பகுதிகளை ஏற்று நடிக்கும்போது எவரும் அவருக்கு நிகராக இருக்க முடியாது. அவரின் நாடகம் மேடையேற்றப் படுகிறது என்று மக்கள் அறிந்தால் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தை பார்க்கக்கூடியதாக இருக்கும். முன்பு, மன்னார் மாவட்டத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் கலைவிழாக்களில் முக்கிய இடம் முத்தமிழ் கலாமன்றத்துக்கு வழங்கப் படும்.

எவ்வளவு வெற்றிப் படிகளை தாண்டிய போதும் தன் இனம், மண்ணை நேசித்தவராகவே இன்றுவரை அவர் விளங்குகின்றார். அவருக்கு இவ்வளவு வெற்றிகள் கிடைத்ததற்கு அவரின் துணைவியார் றோசாக்காவும், குடும்பத்தினரும் காரணமாக அமைந்தனர்.

அவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள். இரண்டு பேர் பிரான்ஸ் நாட்டில் இருக்கிறார்கள். ஆனந்தா, இன்பன் அவர்களும் தந்தையின் பணிபோல் நாடகம் கலைநிகழ்வுகள் செய்து பாராட்டைப் பெற்றனர். பாதர் அன்பும் லூட்ஸ் மாதா தேவாலயத்தில் முதல் தமிழ் குருவாக நியமிக்கப்பட்டு தம் பணியை திறம்படச் செய்து இப்போது நாடு திரும்பி இருக்கிறார். அவரும் தந்தையைப்போல் எல்லோர் அன்புக்கும் மதிப்புக்குரியவராக விளங்குகின்றார்.

குழந்தை செபமாலை மாஸ்ரரின் குடும்பம் என்றால் வெளிநாட்டில் இருப்பவரும் சரி உள்நாட்டில் சரி தெரியாதவர் எவரும் இல்லை. 2008ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்கு அவரும் மனைவியார் றோசாக்காவும் வருகை தந்தபோது பிரான்ஸ் நாட்டின் தமிழ் கலைஞர்களால் நூல் வெளியீடு செய்யப்பட்டு அவர்களின் பாராட்டைப் பெற்றார். பல ஆயிரக்கணக்கானவர் மத்தியில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அவரின் பணியை தொடர்ந்தும் செய்ய இறைவன் நல்ல உடல் சுகத்தை அருள வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை அதிகமாக நேசிக்கும் எனது பெரியப்பா



அருட்சகோதரி தே.வளர்மதி, அ.கா.
இந்தியா

எனது பெரியப்பா, 'பெரியப்பா' என்ற சொல்லிற்கு தனது வாழ்வால் அர்த்தம் கொடுப்பவர். எங்களுடைய வாழ்க்கையைப் பற்றி அக்கறைகொண்ட, அன்புள்ள, ஆலோசனை வழங்கும் ஒரு பெரியப்பாவாகத் திகழ்கிறார். எங்களுடைய வளர்ச்சியில் அக்கறை காட்டுபவராக இருக்கிறார். குறிப்பாக எங்களுடைய குடும்பக் கொண்டாட்டங்களில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முன்னின்று ஆலோசனைகள் வழங்கி, அவை நல்லவிதத்தில் நடைபெற முன்னின்று உழைக்கும் பெரியப்பாவாக இருக்கிறார்.

எனது சிறு வயதில் பாடசாலை விடுமுறைக் காலங்களில் பெரியப்பாவின் வீட்டிற்குச் செல்லும் வழக்கம் இருந்தது. அப்போதெல்லாம் எங்களை முக மலர்வுடன் வரவேற்று நலம் விசாரிப்பார். நாங்கள் பாடசாலையில் பெற்ற புள்ளிகளை அக்கறையுடன் கேட்பார். இன்னும் ஊக்கமெடுத்து படிக்கவேண்டும் என்று ஆலோசனை வழங்குவார். அவருடைய ஆலோசனைகள் எமக்கு ஓர் உந்துசக்தியாகத் திகழும்.

சில நாட்களில் அவர் தனது வீட்டிலே நாட்டுக்கூத்து, நாடகங்கள் என்பவற்றை பயிற்றுவிப்பார். அந்த வேளையில் நாங்கள் போய் அமர்ந்திருந்து அதைக் கவனிப்போம். அவர் ஒவ்வொரு பாத்திரத்தையும் பயிற்றுவிக்கும் போது அதைத் திரும்பத் திரும்ப செய்து காட்டுவதும், தனது கணீர் என்ற குரலில் அவற்றைப் படித்துக் காட்டுவதும் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டேயிருக்கலாம் எனத் தோன்றும். பல தடவைகளில் நாங்கள் அதை மனப்பாடமாக்கி வீட்டிற்கு வந்து எங்களுக்குள்ளே நடித்தும், படித்தும் மகிழ்வதுண்டு.

நான் திருகோணமலையில் படித்துக் கொண்டிருக்கும்போது விடுமுறைக்கு வீடு வந்தால் பெரியப்பா வீடு செல்வேன். என்னைப் பற்றி விசாரித்துவிட்டு ஏதாவது ஒரு இராகத்தைப் படித்துக் காட்டுவார். குறிப்பாக, தான் இசையமைத்த மெட்டுக்களைப் படித்து "வளர், இது எப்படி இருக்கிறது?" என்று கேட்பார். பல அசைவுகளுடன் இதமான குரலில் அவர் பாடும்போது கேட்க மிகவும் ஆசையாக இருக்கும். நேரம் போவதே தெரியாது. இவருடைய வாழ்க்கையில் இசை பின்னிப்பிணைந்து இருந்ததென்றால் மிகையாகாது.

என்னைப் பொறுத்தவரையில் இசையையும் தனது இன்னுமொரு குழந்தைபோல் நேசிப்பவர். அதற்காக தனது நேரம், காலங்களை அள்ளி வழங்குபவர். அவர் யாருடன் உரையாடினாலும் கலையம்சங்கள் பற்றிப் பேசுவார். தன்னுடைய ஓய்வு நேரங்களில் ஏதாவது எழுதுவதும், பாடுவதும், இசையமைப்பதும் என்று ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டேயிருப்பார். அவருடைய இந்த வாழ்க்கை முறை எங்கள் எல்லோருக்கும் ஒரு முன்மாதிரிகையாகத் திகழ்கிறது.

எனது பெரியப்பா தமிழை அதிகம் நேசிப்பவர். குறிப்பாக எங்கள் குடும்பங்களில் குழந்தைகள் பிறந்துவிட்டால் நல்ல பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துத் தரும்படி கேட்கும்போது, அழகான தமிழ்ப் பெயரைத் தருவார். எனது பெயரே இதற்கு உதாரணம். எனக்கு வளர்மதி என்று அழகான பெயரைத்தந்த பெருமை அவரைச் சாரும்.

எனது பெயரைக் கேட்ட பலர் என்னிடம், “அழகான தமிழ்ப் பெயராக இருக்கிறதே. பெயரை வைத்தவர் மிகுந்த தமிழ்ப்பற்று உடையவராக இருப்பாரே” என்பர். அப்போது பெரியப்பாவை நினைத்துச் சந்தோஷப்படுவேன். எனது பெரியப்பா வைத்த பெயர் எனக்கு மட்டுமல்ல. எனது சகோதரிகளுக்கும் அன்பரசி, எழிலரசி, தேன்மொழி, கனிமொழி என அழகான பெயர்களை வைத்திருக்கிறார் எனக்கூறி பெருமை பாராட்டுவேன். இவ்வாறு தமிழ்ப்பற்று மிகுந்த தமிழை நேசிக்கும் ஒரு மனிதனாக பெரியப்பா இருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில், பெரியப்பா எங்களுக்குக் கிடைத்த பெரிய, அரிய கொடை என்றுதான் சொல்லுவேன். எங்களுடைய சமூகத்தின் வளர்ச்சியில் அவர் மிகுந்த செல்வாக்குச் செலுத்துபவராக இருக்கிறார். பல்வேறு வகையான வளர்ச்சிப் படிகளிலும் முன்னின்று உழைத்திருக்கிறார்.

இவ்வாறான ஒரு பெரியப்பாவை எமக்குத் தந்த இறைவனுக்கு கோடி நன்றி கூறுகிறேன். இவர் தொடர்ந்தும் உடல், உள, ஆன்ம நலத்துடன் சிறந்துவாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். ■

**கவி –1**

வாளேந்து புகழ்வீரா வான்பலனஞ் சீஷா
வாகையைப் பெற்றவீரா!
வளர்பூவில் யேசுமறை வண்ணமாய்ப் பரப்பிட
வரமருள் நிறைந்தவீரா

தோள்ளேந்து வலிமை செறிதுலுக்கர் படைசாயவே
துாயவெண் பரியில் வீரா!
தொன்றெம் மிக்கேலுக்குத் தோற்றியே
வெற்றியைத் துணிவொடு கொடுத்தவீரா

தாள்ஏந்து முத்தனின் தன்மைசெறி வண்மையைத்
தரணியில் கூறுவோர்க்குத்
தங்கவே இருநிதி பொங்கவே பலசெல்வம்
தழைக்க நின்றருள் கூருவாய்

ஆளேந்து அணிவயிரரத மீதுபவனிவரும்
ஐயனே அடி பணிகுவோம்
அணிவளரு மாலயமுருங்கனுறு துாயவா
அமிர்த சந்தியோகு முனியே

**கவி –2**

தந்தை செபதேயுவின் தவமுறை குமாரனே
தரணி யொளிர் பிரகாசனே!
தங்குசெபம் பொங்கவே எங்குமருள் தந்திடும்
தத்துவச் சுடர் நேசனே!

விந்தை மாயப் புத்தகங்கள் யாவற்றையும்
வீசிநெறி கொண்ட நேசா
வெண்பரி மீதேறி வீரமுறு துலுக்கரை
விழுத்தியே நின்ற வீரா!

சிந்தைமிக நொந்தவனைச் சீவனொடு காத்தநல்
செயவிருது பெற்ற நேசா
சிறுநாவாய் தன்னில் திருத்தேகமே செல்ல
எருத்தேறுகள் இழுத்த நேசா

எந்தை பரனாயிருந் தேர்செறி வளம்பெருகு
மெழில் முருங்கன் பகுதிஆழ்
ஏந்தலே உந்தனை இறைஞ்சி மகிழ்வாகினோம்
இயாகப்ப ரென்னுந் தவனே.

**குழந்தை, இயாகப்பர் இன்னிசைப் பாடல்கள்,**
**முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 1966, பக். 8–9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாடகக் கலை என்பது மனிதனுக்குப் பிரியமான சொத்து"




**'ஆற்றுகை' ஆசிரியர் குழுவினர்**
*நேர்கண்டவர்கள்*

## அண்ணாவியார், கலாபூஷணம் செபமாலை குழந்தையுடன் ஒரு நேர்காணல்

மன்னாரில் உள்ள முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்ட 'குழந்தை' என்ற புனைப்பெயரைக் கொண்ட, நாட்டுக்கூத்து அண்ணாவியாரும், நாடகக்கலைஞருமான திரு 'செபஸ்தியான் செபமாலை' அவர்கள் ஈழத்து நாடகக் கலையின் முதுசமாக கொள்ளத்தக்கவர்களில் பன்முக ஆளுமை கொண்ட ஒரு கலைஞன். நாட்டுக்கூத்து, நாடகம், கிராமியக் கலைகள், கவிதை, நடிப்பு, நெறியாள்கை, எழுத்துத்துறை என பல பரிமாணத்துடன் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக உழைத்து வருபவர். ஆசிரியப்பணி புரிந்து ஓய்வு பெற்றவராகிய இவர் 50 நாடகங்களுக்கு மேல் எழுதி நெறிப்படுத்தியவர். இவரது 'இன்பத்தமிழின் இதய ஓலம்', 'அறப்போர் அறை கூவல்' போன்ற அரசியல் சார்ந்த நூல்களும், 'யாகப்பர் இன்னிசைப்பாடல்கள்', 'மாதோட்டப் பாடல்கள்' போன்ற கவிதை நூல்களும், 'பரிசு பெற்ற நாடகங்கள்' (சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றது), 'மரபு வழி நாடகங்கள்' என்ற நாட்டுக் கூத்துத் தொகுதிகளும் 'நாம்' (சஞ்சிகை) போன்றவையும் நூல்களாக வெளிவந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தின் வடபாங்கு கூத்து மரபின் இன்றைய முகவரியாகக் காணப்படும் இவர், இம்மாவட்டத்தின் கலைஞர்களில் முதன்மையானவராகக் காணப்படுகின்றார். 'முத்தமிழ்க் கலாமன்றம்' என்ற அமைப்பினை உருவாக்கி அவ் வமைப்புக்கூடாக பல நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றியதுடன், பல்வேறு சமூக செயலூக்க மன்றங்களிலும், கலை நிறுவனங்களிலும் அங்கத்தவராக பணியாற்றுபவர்.

இவரது கலைச் சேவையை மதித்து வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு 'கலாபூஷணம்', 'ஆளுநர் விருது' போன்றவற்றை வழங்கிக் கௌரவித் துள்ளது.

சமூக நேசிப்புள்ள, மரபுக்கலைகளை வளர்த்து வருகின்ற அனுபவமும், ஆளுமையும் மிக்க இக்கலைஞனின் நேர்காணலை, 'ஆற்றுகை' இவ்விதழில் பிரசுரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ **நீண்டகாலமாக நாட்டுக்கூத்துத் துறையில் செயற்பட்டு வரும் நீங்கள் எவ்வாறு இந்தத் துறைக் குள் நுழைந்தீர்கள்?**

என் தந்தையார் ஓர் அண்ணாவியார். அவர் மாதோட்டத்திலே பல நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றிப் புகழ் பெற்றவர். இவரது அண்ணன் மரியான் சந்தான்; சந்தியோகுமையோர் நாடகம், அருளப்பர் நாடகம் எனப் பல நாடகங்களை எழுதிய புலவர். பத்து வயதில் இருந்து இவர்களோடு நான் வளர்ந்ததால் எனக்கு கிடைத்த இவர்களது வழிகாட்டல்கள், நான் நாட்டுக் கூத்துத் துறையிலே நுழைவதற்கு காரணமாய் இருந்தது எனலாம்.

➢ **உங்களுடைய தந்தையார் எந்த வகை மோடிக்கூத்திலே அதிக பாண்டித்தியம் பெற்றிருந்தார்?**

வடபாங்குக் கூத்தைத்தான் அவர்கள் மரபு ரீதியாக ஆடி வந்தார்கள்.... ஆனால் இப்போது ஆய்வு செய்கின்ற போது தான் தெரிகின்றது என தந்தையார் ஆடிய நாடகப் பிரதிகளில் ஏறத்தாழ ஐம்பது வீதம் தென்பாங்கு கூத்துக்களின் இராகங்கள் கலந்திருக்கின்றது என்று, நானும் எனது தந்தை வழியில் வடமோடிக் கூத்துக்களைத் தான் ஆடி வருகின்றேன். வடபாங்கு எமக்கு அதிக பரிச்சயமாக இருந்த காரணத்தினாலும், அதன் இராகங்கள் யாழ்ப்பாணத்தைத் தழுவியதாய், அழகும் இனிமையும் கொண்டதாக காணப்படுவதாலும் நாங்கள் இக்கூத்து மரபில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்.

➢ **நாட்டுக்கூத்துக்களை மரபு கெடாது பாதுகாத்த பிரதேசங்களில் மன்னார்ப்பிரதேசமும் கூறப்படுகின்றது. இப்பிரதேச கூத்துக்களை, வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு என்று வகைப் படுத்துவதையும் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வகைப்பாடு உங்களால் ஆரம்பத்தில் இருந்தே துல்லியமாக இனங்காணப்படக்கூடியதாக இருந்ததா?**

ஆரம்பகாலத்தில் வடபாங்கு, தென்பாங்கு என்று பிரித்தறியும் தேவையோ, அவசியமோ இருந்ததில்லை. 1966 இற்குப் பின் அமரர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் ஆலோச னையின் பெயரில் மன்னார் மாவட்டப்பிரதேச கலைமன்றத்தினால் மிகப்பெரிய அளவில் கூத்துப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அப்போட்டிக்கென என்னுடைய தலைமையின் கீழ் இயங்கிய முத்தமிழ் கலாமன்றத்தினூடாக ஒரு கூத்தை தயாரித்தேன் (வீரத்தாய்). இதனைத் தயாரிக்க முற்பட்டபோதுதான் இந்த கூத்துவகைகளுக்கான தனித்துவங்களை துல்லியமாக இனங்கண்டோம். அவ்வாறு உருவாக்கம் பெற்ற வீரத்தாய், கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்குப்பின்னரே இவ்வேறு பாடுகளை தனித்துவமாகக் கைக்கொள்ளவேண்டுமென்ற உணர்வுமேற்பட்டது.

➢ **உங்களுடைய முருங்கன் பிரதேசத்தில், வடமோடிக்கூத்தை மட்டுந்தான் ஆடுவார்களா?**

எங்கள் கிராமத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் குறிப்பாக பிச்சைகுளம், களிமோட்டை, பிடாரிகுளம், மாவலங்கேணி... போன்ற இடங்களிலெல்லாம் சந்தியோகுமையோர் வாசாப்பு மற்றும் சில தென்பாங்கு, வடபாங்குக்கூத்துக்களும் மேடையேற்றப்பட்டன. ஆனால் நாம் தென்பாங்கு கூத்துக்களை விட வடபாங்குக்கூத்துக்கே அதிக முதன்மை கொடுத்து வந்தோம். அதேவேளை மற்றொரு விடயத்தையும் கூறவேண்டும்; வடபாங்குக்கூத்துக்களில் ஏறத்தாழ முப்பது வீதத்துக்கு மேல் தென்பாங்கு இராகங்கள் கலந்துள்ளன.

➢ **அப்படியாயின் வடபாங்கு இராகங்கள் ஏதும் தென்பாங்கில் காணப்படுகின்றனவா...?**

இல்லை... மிகக்குறைவு என்றுதான் கூற வேண்டும்.

➢ **அதே வேளை வாசாப்பு என்பது நேர்த்திக்காக ஆடப்படுவதென்றும் அதிக சடங்கு பண்பு களோடு காணப்படுகின்றது என்றும் அண்மைக் காலத்தில் கூறக் கேள்விப்பட்டுள்ளோம்... அது பற்றி...?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசாப்பு என்பது தனித்துவமானது என்று கூறலாம். ஆனால், வடபாங்காக இருந்தாலும் சரி தென்பாங்காக இருந்தாலும் சரி மாதோட்டப் பகுதியில் நேர்த்திக்காகவே எல்லாக் கூத்துக் களும் ஆடப்பட்டன. உதாரணமாக, 'என்றிக் எம்பரதோர்' கூத்து நடிக்கப்படும் இடங்களில் நோய் பிணி அகலவும், நல்ல பொருள்வளம் வேண்டியுமே பெரும்பாலும் மேடையேற்றப்படுகின்றது.

➢ **மன்னார்ப் பிரதேசத்தில் 'வட்டக்களரி'யில் கூத்தாடும் மரபு இன்னும் காணப்படுகிறதா?... அது பற்றி...?**

மன்னாரில் கூத்துக்கள் வட்டக்களரியில் ஆடப்பட்டு வந்தது என்ற கருத்தை எமது முன்னோர்களும் சொல்லி வந்ததை அவதானித்துள்ளேன். ஆனால் நான் வட்டக்களரிக் கூத்தைக் கண்டதில்லை. அதாவது என்னுடைய அனுபவ காலத்துக்குள் இந்த வட்டக்களரி முறை இருந் ததை நான் அறியவில்லை.

➢ **பேராசிரியர் வித்தியானந்தன் மன்னார் பிரதேசத்தில் செய்த கூத்தின் வளர்ச்சிக்கான பணிகளைக் குறிப்பிட முடியுமா?**

வித்தியானந்தனின் பணியை மன்னார்ப் பிரதேசம் மறக்காது என்றுதான் கூற வேண்டும். மன்னாரில் பிரதேசக் கலாமன்றத்தினை உருவாக்கி அதன் மூலமாக மன்னார் மாவட்டத் திணைக்களத் தலைவர்களை ஒன்றுபடுத்தி 'அண்ணாவிமார் மாநாடு', 'புலவர் மாநாடு' போன்றவற்றை மிகவும் எழுச்சியுடன் நடத்தினார். அந்த எழுச்சி மன்னாரில் பல படைப்பாளிகளை உருவாக்கியது. பல கலைஞர்களை தூண்டியது. அண்ணாவிமார், புலவர்கள் பலரை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்திய விழாக்களாக அவை அமைந்தன. 1966இற்கு முன்னரும் சரி, அதற்குப் பின்னரும் சரி அவ்வாறான விழாக்கள் மன்னாரில் நடக்கவில்லையென்று தான் கூறவேண்டும்.

➢ **பேராசிரியர் வித்தியானந்தனின் செயற்பாடுகள் கூத்துக்கலையினை வளர்த்தது என்ற கருத்திருக்கின்ற அதே வேளை, மரபுசார்ந்த, வாழ்வியல் அம்சங்களோடு இரண்டறக் கலந்திருந்த கூத்து வடிவம் வெறும் நாடக வடிவமாக மாற்றமடைந்தது என்ற கருத்துமுள்ளது... அது பற்றி...?**

பேராசிரியர் வித்தியானந்தன் வருவதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி மன்னாரில் கூத்துக் கள் சிறப்பாக ஆடப்பட்டே வந்தன. வித்தியானந்தன் வந்ததனால் விடிய விடிய ஆடப்படுகின்ற மரபு வழிக்கூத்துக்களில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன என்று கூறமுடியாது. ஏனெனில், அவை இன்றும் பழமை கெடாது மேடையேற்றப்படுகின்றன. ஆனால் வித்தியானந்தனின் வருகைக்குப் பின் குறிப்பாக, அவரது கர்ணன் போர், வாலிவதை, நொண்டி நாடகம் போன்றவை மேடை யேற்றப்பட்டதன் பின் மன்னார்க் கூத்தில் ஒரு புதிய வேகம் பிறந்தது. கூத்தில் ஈடுபடாத பலர் ஈடுபடத்தொடங்கினர். புதிதாக நாடக மன்றங்கள் தோற்றம் பெற்றன. கூத்துக்களிலும் சிறந்ததான ஒழுக்கம் பின்பற்றப்படலாயிற்று. இதற்கு உதாரணமாக: வங்காலை வளர்பிறை மன்றம், வான்மதி கலைமன்றம் போன்றவற்றின் நாடகங்களையும், அதிபர் மைக்சிமஸ் லம்பேட், பசில் லம்பேட் போன்றோரின் நாடகங்களையும் குறிப்பிடலாம். எனவே வித்தியானந்தனின் பணி மன்னாருக்கு மிகுந்த பயனைக் கொடுத்த பணி என்பது மறுக்க முடியாதது.

➢ **நீங்கள் இதுவரை எத்தனை நாடகங்கள் எழுதியுள்ளீர்கள்?**

ஏறத்தாழ ஐம்பது நாடகங்களை வரை எழுதியுள்ளேன். 1966இற்கு முன் இருந்தே எழுதி வருகின்றேன். ஆரம்பத்தில் 'பணத்திமிர்', 'பாட்டாளிக் கந்தன்', 'பணமா? கற்பா' போன்ற சமூக நாடகங்களை எழுதி நடித்திருந்தோம். இந்நாடகங்கள் என்னை ஊக்கப்படுத்தியதுடன் எமது முத்தமிழ் கலாமன்றம் பிரபல்யம் பெற்றுப் பாராட்டப்படவும் காரணமாகியது. அதனைத் தொடர்ந்து 'இலங்கை கொன்ற இராயேந்திரன்', 'நளதமயந்தி', 'அம்பிகாவதி' போன்ற இலக்கிய நாடகங்களை எழுதி மேடையேற்றினேன். 1966க்குப் பின் அமரர் வித்தியானந்தன் மன்னாரில் மேற்கொண்ட நாட்டுக் கூத்து முயற்சிகளால் தூண்டப்பட்டு நாட்டுக் கூத்துக்களை எழுதத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீரத்தாய்', 'கல்சுமந்த காவலர்கள்', 'யார் குழந்தை' போன்ற கூத்துக்களை ஆரம்பத்தில் எழுதினேன். இன்றுவரை எழுதி வருகின்றேன். மன்னாரில் மட்டுமன்றி கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு என பல இடங்களிலும் கொண்டு சென்று இந்நாடகங்களை மேடையேற்றியுள்ளேன்.

➢ **நீங்கள் நாடகங்களை எழுதும்போது என்ன நடைமுறைகளைக் கைக்கொள்வீர்கள்? அதாவது உங்கள் எழுத்தாக்க முறைமை எப்படிப்பட்டதென்று கூறமுடியுமா?**

நாடகமொன்று எழுதவேண்டுமென்ற தேவை அல்லது எண்ணம் தோன்றிவிட்டால், மிக வேகமாகச் செயற்படுவேன். எழுதி முடிக்கும் வரை நிம்மதி இருக்காது. அநேகமாக அரைமணிநேர, ஒரு மணி நேர நாடகம், நாட்டுக்கூத்து என்றால் கிட்டத்தட்ட ஒரு இரவுக்குள் எழுதிப்போடுவேன். அப்படியான ஆற்றல் என்னிடம் இருந்தது. ஆனால் பிற்பட்ட காலத்தில் எனக்கு ஏற்பட்ட நோயினால் என்னை அதிகம் வருத்தி எழுத முடியாது போனது. அதன் பின் நிதானமாக, நன்கு நேரமெடுத்தே செயற்படுகின்றேன். முன்பு போல் அதிக தீவிரமாக நிற்பதில்லை. அதே நேரத்தில் நாடகத்திற்கான கதையை தெரிந்தெடுப்பதென்றாலும் அதில் காதல், சோகம், வீரம்... போன்ற தான பல்வகைச் சுவையுமுள்ள கதைகளைத்தான் தெரிவு செய்வேன். அவைதான் நாடகத்திற்கு வெற்றியைத் தரக்கூடியவை.

➢ **நீங்கள் எழுதிய நாட்டுக் கூத்தின் கதைகளைப் பார்க்கின்ற போது, பெரும்பாலும் தமிழ் இலக்கியம் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. மன்னார்ப் பிரதேசத்தில் அதிக அளவில் கத்தோலிக்கக் கூத்துக்களுக்கே வரவேற்பு இருக்கும் சூழலில் நீங்கள் இலக்கியம் சார் கதைகளை நாடியதன் காரணம்?**

நல்ல கேள்வி; மன்னார்ப் பிரதேசம் அதிக கத்தோலிக்கர்களைக் கொண்ட பிரதேசம் என்பது உண்மைதான். ஆனாலும் நாடகங்களை மேடையேற்றுவதற்கும், அவற்றின் செலவீனங்களை பொறுப்பதற்கும் எல்லாக் குருக்களும் தயாராக இருக்கவில்லை. 1961இல் புனித யாகப்பருடைய கதையைக் கூறுகின்ற 'நல்வாழ்வு' என்னும் நாடகத்தை தயாரித்தேன். அதற்கு அதிக செலவு பிடித்தது. அச்செலவின் சிறு பகுதியையாவது பொறுப்பதற்கு அப்போதைய முருங்கன் கிறிஸ்துராசா ஆலயப் பங்குத் தந்தை இணங்கவில்லை. இது என்னுள் ஒரு வெறுப்பைத் தோற்றுவித்தது. எனவே கத்தோலிக்கருக்கு மட்டுமென்று எல்லைப்பட்டு நிற்காமல் எல்லா மக்களையும் சென்றடையத்தக்க இலக்கியக் கதைகளை தெரிவு செய்தேன். அத்தோடு எனது ஆசிரியப்பணியும் இலக்கியம் சார்ந்த சூழலுக்குள் அதிகம் வாழும் நிலையைத் தோற்றுவித்தது. அதனால் இலக்கியக் கதைகளை அதிகம் தெரிவு செய்தேன். அதேவேளை கிறிஸ்தவக் கூத்துக்களையும் ஆக்கியுள்ளேன்.

➢ **அதேவேளை நீங்கள் தெரிவு செய்த இலக்கியக் கதைகள், குறிப்பாக 'வீரத்தாய்' 'கல்சுமந்த காவலர்கள்' போன்றவை, தமிழர் தம் போராட்ட வரலாற்றுக்கு புத்துயிர்ப்பு கொடுப்பவை. அவற்றை தெரிவு செய்ததன் காரணம்?**

நான் தமிழில் அதிகமான பற்றுள்ளவன். 1940இல் நான் பிறந்தேன். 1945இல் இருந்து எனது பாடசாலைக் கல்வி ஆரம்பமானது. அது முதலே என்னுள் தமிழார்வம் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது எனலாம். அது என்னை ஒரு காலத்தில் அரசியலிலும் தீவிரமாக இயங்குவதற்கு வழி கோலியது. அக்காலம் தமிழ் அரசியல் கட்சிகள் சுதேசியம் பற்றிப் பேசித்திரிந்த காலகட்டம். திருகோணமலை யாத்திரை, சத்தியாக்கிரகம், மன்னார் கச்சேரியில் மாதக்கணக்காக நடைபெற்ற சத்தியாக்கிரகம் போன்ற அனைத்திலும் பங்குபற்றினேன். அதே வேளை "அறப்போர் அறைகூவல்" "இன்பத் தமிழின் இதய ஒலம்" என்ற இரண்டு நூல்களை அக்காலத்தில் எழுதி வெளியிட்டேன். இவ்வாறு எனக்குள் இருந்த தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனைதான் அவ்வாறான நாடகங்களை எழுதுவதற்கும் காரணமாக இருந்தது. பிற்பட்ட காலங்களில் படிப்படியாக அரசியலில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி முழுக்க முழுக்க கலைத்துறையுடனேயே நின்று கொண்டேன்.

➢ **நீங்கள் எழுதி நூலாக வெளிவந்த நாடகங்கள்?**

'கல் சுமந்த காவலர்கள்', 'யார் குழந்தை', 'வீரத்தாய்', 'வீரனை வென்ற தீரர்' போன்ற ஐந்து நாடகங்களின் தொகுதி வெளிவந்துள்ளது. இதற்கு 1998இல் சாஹித்திய விருது கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 'விடுதலைப் பயணம்', 'நளன் தமயந்தி' என்ற மூன்று மரபு வழி நாடகங்கள் நூலுருவில் வெளிவந்துள்ளன.

➢ **உங்களின் நாடக முயற்சிக்கு, பாடசாலைகளும் ஆசிரியத் தொழிலும் எந்த வகையில் உதவியது என்பது பற்றி...?**

என்னுடைய நாடக முயற்சிகளில் கணிசமான செயற்பாடுகள் பாடசாலைகள் சார்ந்தவை. ஏனெனில் 40 வருடங்கள் நான் ஆசிரியப்பணி செய்துள்ளேன். எனது கற்பித்தல் கடமைகளுடன் நாடகங்கள், நடனங்கள், வில்லுப்பாட்டுக்கள், இசை நிகழ்ச்சிகள் என பலவற்றையும் புறச் செயற்பாடாக மேற்கொண்டு வந்துள்ளேன். குறிப்பாக தமிழ்த்தின விழா, தமிழ்த் தினப் போட்டிகளிற்கு, அதிகமான நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களை எழுதிப் பழக்கியுள்ளேன். உதாரணமாக: முருங்கன் பாடசாலையில் மட்டும்:'கவரி வீசிய காவலன்', 'மயான காண்டம்', 'நளன் தயமந்தி'... உட்பட ஏழு நாடகங்கள் எனது காலத்தில் மேடையேற்றப்பட்டு முதற்பரிசைப் பெற்றன. இன்று நான் ஒய்வு பெற்றாலும் கூட பாடசாலைகள் என்னை விடுவதாயில்லை. அதனால் இயன்ற அளவில் பாடசாலைகளில் நாடகங்களைப் பழக்கி வருகின்றேன்.

➢ **மன்னார்ப் பிரதேசத்தில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் நாடகங்களை மேடையேற்றி யுள்ளீர்கள். வெளி மாவட்டங்களில் பெற்ற அனுபவங்கள், தொடர்புகள்...?**

நாங்கள் எங்களுடைய முத்தமிழ் கலாமன்றத்துக்கூடாக இலங்கையின் பல பாகங்களிலும் நாடகங்களைக்கொண்டு சென்று மேடையேற்றி இருக்கின்றோம். அவை அங்கெல்லாம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றன. உதாரணமாகக் கூறுவதானால்: 1972ஆம் ஆண்டு 'அன்புப்பரிசு' என்னும் நாடகத்தைத் தயாரித்தோம். அது மன்னார் மாவட்டப் பிரதேசக் கலை விழாவில் 1ஆம் இடத்தைப் பெற்றது. அதன் பின் அதனை யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் உள்ள 'உதயசூரியன் நாடகமன்றம்' நடத்திய நாடகப் போட்டிக்கு கொண்டு சென்றோம். அந்தப் போட்டியில் 32 நாடகங்கள் பங்கு பற்றின. அதில் எமது 'அன்புப்பரிசு' நாடகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது. முதலாவது இடத்தை குருநகர் கலைஞர்களின் 'கண் திறந்தது' நாடகம் பெற்றது. இதை நான் கூறுவதற்குக் காரணம்: அந்தக் காலகட்டத்தில் ஆனையிறவைக் கடந்து சென்று போட்டியில் பங்கு பற்றிய நாடக மன்றமாக எங்களுடைய நாடகமன்றம் மட்டும் தான் இருந்தது. இவ்வாறு பல இடங்களிலும், பல மாவட்டங்களிலும் நாடகங்களை மேடையேற்றினோம். அண்மையில் கூட திருமறைக் கலாமன்ற நாட்டுக்கூத்து விழாவில், யாழ்ப் பாணத்தில் 'கல்சுமந்த காவலர்கள்' என்னும் கூத்தினை மேடையேற்றினோம். இதனால் பரந்த அளவில் கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்பு எனக்கிருந்தது. நடிகமணி வி.பி.வைரமுத்து, நாட்டுக் கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு எனப் பிரபல்யம் பெற்றிருந்த பல கலைஞர்களுடன் எனக்கு நெருங்கிய நட்பிருந்தது.

➢ **மிக நீண்டகாலமாக நாடகத் துறையில் ஈடுபட்டு வருகின்றீர்கள். இந்த ஈடுபாட்டிற்கு உங்கள் குடும்பத்தின் ஆதரவு எவ்வாறு இருந்தது என்பது பற்றிக் கூற முடியுமா?**

நிச்சயமாக... காரணம், எனது குடும்பம் எனக்களித்த ஆதரவினால்தான் நான் இது நாள் வரை செயற்பட்டு வருகின்றேன். நாடகம் மனத்திற்கு நிறைவைத் தரும். ஆனால் பொருளா தாரத்தில் மிகுந்த சிரமத்தைத் தான் தரும். இதற்கு ஒரு சில உதாரணங்களைக் கூறலாம். 1966ஆம் ஆண்டு 'வீரத்தாய்' நாடகத்தை கொழும்பிலே மேடையேற்றுவதற்கு எல்லாமாக 1600ரூபா முடிந்தது. இந்தச் செலவை எனக்கு யாரும் தரவில்லை. எனது மனைவியின் சங்கிலியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்று அடைவு வைத்து ஒரு தொகைப் பணத்தையும், கற்குளம் கிராமத்தில் வட்டிக்குப் பணம் எடுத்து மீதித் தொகையையும் பெற்றே செலவை ஈடுசெய்தேன். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் எனது குடும்ப நகைகளை அடைமானம் வைத்துத்தான் நாடகம் நடத்தினேன். அதற்கு என்னுடைய குடும்பம் நல்ல ஆதரவாக இருந்தது. ஒரு தடவை 'அன்புப்பரிசு' நாடகத்தைத் தயாரித்து மேடையேற்ற முற்பட்டபோது அம்பிகாவதியாக நடித்த என்னுடைய தங்கையாருக்கு, திடீரென கன்னியர் மடத்துக்குச் செல்வதற்கான அழைப்பு வந்துவிட்டது. இதனால் நான் எனது மனைவியை அந்நாடகத்தில் நடிக்க வைத்தே மேடையேற்றினேன். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் எனது குடும்பம் பக்கபலமாக இருந்தது. குறிப்பாக, எனது மனைவி பொறுமையும் நிதானமும் கொண்ட ஒருவர். இவ்வாறான ஒருவர் எனக்கு அமைந்தது நான் பெற்ற மிகப் பெரிய கொடை என்றுதான் கூறுவேன். அவர் இல்லையென்றால் நான் இவ்வளவு ஆட்டமும் ஆடி இருக்க முடியாது. அதேபோல் எனது பிள்ளைகளும் நான் எதைச் செய்தாலும் தடை சொல்லமாட்டார்கள். என்னுடைய வளர்ச்சியிலும், புகழிலும் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பெரும்பங்குண்டு.

➢ **உங்கள் நாடகங்களுக்கான சமூக அங்கீகாரம் எவ்வாறு இருந்தது...?**

இது நான் கூறித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்றில்லை என்று நினைக்கின்றேன். மன்னாரில் என்னுடைய நாடகங்களுக்கு ஒரு தனி வரவேற்பு என்றும் இருந்தது. என்னுடைய கலைச் செயற்பாட்டை அங்கீகரித்துப் பல மேடைகளில் கௌரவித்தார்கள். குறிப்பாக ஒரு சிலவற்றைக் குறிப்பிடலாம். 1982இல் முருங்கன் பாடசாலை அபிவிருத்திச் சபை என்னைக் கௌரவித்தது. 1983இல் மட்டக்களப்பு இலக்கிய விழாவில் மாவட்டத்தின் சிறந்த கலைஞருக்கான கௌரவ விருது எனக்கு வழங்கப்பட்டது. 1999இல் கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருதை வழங்கியது. 2000ஆம் ஆண்டு மன்னார் ஆயர் அவர்கள் பொன்னாடை போர்த்தி "திருக்கலை வேந்தன்" விருதை அளித்தார். அதே ஆண்டு வடக்கு கிழக்கு பண்பாட்டலுவல்கள் அமைச்சு "ஆளுநர் விருது" வழங்கிக் கௌரவித்தது. 2003இல் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத்தில் பேராசிரியர் மரிய சேவியர் அடிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இவையெல்லாம் எமது சமூகம் என்னை அங்கீகரித்துள்ளது என்பதற்கான சான்றுகள். நான் உழைக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து எனக்கு ஒரு வீடோ, காணியோ வாங்கியதில்லை. என் உழைப்பை கலைக்காகத்தான் செலவழித்தேன். அதன் பயனாகத் தான் கடவுள் இவ்வாறான விருதுகளைப் பெறும் சந்தர்ப்பங்களைத் தந்தார் என நிம்மதி அடைவதுண்டு.

➢ **நீங்கள் ஆரம்ப காலத்தில் நாடகம், நாட்டுக் கூத்துத் துறையில் ஈடுபட்டபோது, இளைஞர்கள் காட்டிய ஆர்வத்திற்கும், இன்றைய இளைஞர்களின் ஆர்வத்திற்குமிடையில் எவ்வாறான வேறுபாடுகளைக் காணுகின்றீர்கள்?**

நாங்கள் 'முத்தமிழ் கலாமன்றத்தை' அமைத்து நாடகங்களை மேடையேற்றியபோது அவற்றிற்கு உயிர் கொடுத்தவர்கள் அன்றைய இளைஞர்கள். குறிப்பாக, எமது உறவினர்கள். இதில் எனது சகோதரர்களாகிய மாசிலாமணி (புலேந்திரன்), யேசுதாசன், கமலன், இரத்தினம் இவர்களோடு என் மருமக்களும் குறிப்பாக, அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்), சத்தியசீலன், மனோகரன், தேவராஜா, அற்புதராஜா என, எனது சொல்லைக்கேட்டு நடக்கக் கூடிய இளைஞர் குழாம் இருந்தார்கள். ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றில் நாம் மிகவும் கண்டிப்புடன் இருந்து செயற்பட்டோம். மிகவும் பொறுப்புணர்வுடன் அக்கால இளைஞர்கள் தொழிற்பட்டனர். உதாரணமாக, ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம்.

ஒரு தடவை, நாம் கொழும்பிலே நாடகமொன்றை மேடையேற்ற வேண்டிய நிலையில் இருந்த போது, எனது சகோதரனின் மனைவியார் குழந்தைப் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது எனது சகோதரன் நாடகம் தான் முக்கியமென்று கொழும்பு வந்து நடித்துவிட்டுத் திரும்பினார். அவ்வாறான பொறுப்புணர்வு மிக்க இளைஞர்கள் அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். ஆனால் இன்று அவ்வாறான இளைஞர்களைக் காணமுடியவில்லை. தற்போதைய இளைஞர்களை நாடகத்திற்கு கொண்டு வருவதே பெரிய விடயம். தவறுகளை சுட்டிக்காட்டுதல், பேசுதல், நேரத்திற்கு வருமாறு கண்டிப்புடன் நடத்துதல் எதுவுமே இன்றைய இளைஞர்களுக்குப் பிடிக்காது. எனவே இன்று நாடகம் செய்வதென்றால் அவர்களோடு இணங்கிச் செயற்படுவதற்கு நாம் எம்மைத் தயார் செய்ய வேண்டிய ஒரு விசித்திரமான நிலை.

➢ **இறுதியாக ஒரு கேள்வி, இன்று நாடகத் துறையில் ஈடுபடுகின்ற இளங்கலைஞர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய ஆலோசனை என்ன?**

"கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதும் ஆத்தாதவன் செயல்" என்று ஒரு பழமொழியுண்டு. ஆனால் இன்றைய காலம் அப்படியல்ல. கலை பல ஆச்சரியங்களையெல்லாம் சாதித்து வருகின்றது. நாடகக்கலை என்பது மனிதனுக்குப் பிரியமான ஒரு சொத்து. அது ஒரு கூட்டு முயற்சி. இளம் சந்ததியினர் இந்தத் துறையில் ஈடுபடும் போது, மொழிப்பற்றும், தேசப்பற்றும், மனிதத்துவம் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுகின்றது. ஆத்மீக நிறைவு ஏற்படுகின்றது. நற்பழக்கங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதில் ஈடுபடுபவர்கள் நன்மையடைவார்களே தவிர தீமையடையப் போவதில்லை. எனவே இளைஞர்கள், மாணவர்கள் இக் கலையை மானசீகமாக நேசிக்க வேண்டும். அது நல்லதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப உதவும். ■

**நன்றி : 'ஆற்றுகை' நாடக அரங்கியலுக்கான இதழ், டிசெம்பர் 2004, இதழ் 12.**



2009இல் பாரிஸில் நடந்த பாராட்டு விழாவின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, கலைப் பணிக்கு தன்னையே அர்ப்பணித்த பெருமகன்



அருள்சகோதரி தன்னியா அந்தோனிப்பிள்ளை
திருச்சிலுவை கன்னியர் மடம்,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

திரு. செ.செபமாலை ஆசான் 1940 மார்ச் மாதம் எட்டாம் திகதி நமக்காக இம்மண்ணிலே அவதரித்தார். பல கலையும் பயின்ற இவர் 1960இல் ஆசிரியர் நியமனம் பெற்று தனது கல்விப் பணியை ஆரம்பித்தார். தனது பணியின் பாதையில் விரைந்துகொண்டிருந்த இவர், 1984.02.07 அன்று மன்/கற்கடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலைக்கு மாற்றம் பெற்றுவந்தார். இப்பாடசாலையிலே இவரது பணியானது தலைவணங்கத்தக்கது எனலாம்.

இவர் வந்த நாள்முதல் பாடசாலை மிளிரத் தொடங்கியது எனலாம். 1994இல் இப்பாடசாலை தரம் 06இற்கு தரம் உயர்த்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் பாடசாலை எழுச்சி பெற்றது. 1995இல் தரம் 07 ஆரம்பிக்கப்பட்டது. 1996இல் தரம் 09 ஆரம்பிக் கப்பட்டதுடன் இப்பாடசாலை இரண்டாந்தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இப்பெருமை குழந்தை செ.செபமாலை ஆசானையே சாரும்.

இவரது காலத்தில் இவரது பணியின் பேரில் பெருமைக்குரிய விடயமாக 1996இல் தரம் 05 புலமைப்பரிசில் பரிசிலை 2 மாணவர்கள் தட்டிச்சென்றமை குறிப்பிடத்தக்கது. இதே காலப்பகுதியில் இடப்பற்றாக்குறை காரணமாக தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு அதன்மூலம் இவரது கல்விப்பணி தொடர்ந்தது.

1997இல் ஆங்கிலப் போட்டிகளில் இம்மாணவர்களை வழிநடத்தி மாவட்டம் முதல் மாகாணம் வரை அனுப்பினார். இதன்மூலம் பாடசாலைக்கு பெரும் புகழை மணிமகுடமாகச் சூடிக் கொடுத்தார்.

இக்காலப் பகுதியில் 'எடிபல' இராணுவ நடவடிக்கை காரணமாக பாடசாலையை மூட வேண்டிய தேவை ஏற்பட்டபோதும் திரு. செ.செபமாலை ஆசான் அவர்கள் கற்கிடந்த குளத்தில் புனித சூசையப்பர் ஆலயத்தில் தற்காலிக வசதிகளை மேற்கொண்டதன் மூலம் மாணவர்களின் கல்வி சிதையாமல் காத்த பெருமை இவரையே சாரும்.

1998இல் இவ்வாசானின் 'யார் குழந்தை' எனும் நாட்டுக்கூத்து மாகாண மட்டத்தில் 02ஆம் இடத்தைப் பெற்றமை இவருக்கு மேலும் மேலும் பேரையும் புகழையும் சூடிக்கொடுத்தது. காலாகாலமாக இப்பாடசாலைக்காகவே அரும் பணியாற்றிய திரு. செ.செபமாலை ஆசான் அவர்கள் 2000.01.28 அன்று தனது கல்விப்பணி யிலிருந்து சற்று இளைப்பாற முன்வந்தார்.

குழந்தை ஆசிரியர், தனது பெயருக் கேற்றாற் போன்றே குழந்தை உள்ளம் கொண்டவர். நல்லவர், வல்லவர், மொத்தத்தில் எல்லோரும் போற்றிடும் நாயகன், கலைஞன் இந்தக் குழந்தை ஆசிரியர்.

இந்த குழந்தை ஆசிரியர் பேரும், புகழும், இசையும் கலையும் எத்திசையும் போற்றிடும் வகையில் சாதித்துள்ளார். இவரைப் போன்றே இவரது குடும்பமும் அன்பும் பண்பும் ஒருங்கே இணைந்த சிறந்த நற் பிரஜைகளைக் கொண்டுள்ளது. இயற்கையாகவே இவரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையார்வம் இரண்டறக் கலந்துள்ளது என லாம். இவர் நடத்திய கூத்துக்களையும் நாடகங் களையும் பார்த்து இரசித்துள்ளேன். இதன் மூலம் இவரது கலையார்வத்தை இனங்காண முடிகிறது.

இவர் கலைத்திறன் மட்டுமன்றி தமிழ்த் திறனையும் தன்னகத்தே கொண்டவர். எனது ஊரில் நிகழும் எந்த ஒரு பொது நிகழ்வுகளிலும் இவரது பாங்கு நயக்கத்தக்கது. தன் கவித் திறனாலும் பேச்சுத் திறனாலும் மக்கள் மனதில் தனக்கென ஓரிடத்தை எப்பொழுதும் அமைத் துக் கொண்டவர்.

சிறந்த நோக்கத்துடனும் இலட்சியத்து டனும் சீரிய ஒழுக்கத்துடனும் வாழ்ந்த இவர் ஆன்மீக வழிகாட்டியும் கூட. இதனால் தனது புத்திரரையும் ஆன்மீக வழியில் நடத்தியவர்.

குழந்தை ஆசிரியரிடம் நேர்மையும், பெருந்தன்மையும் இவரது வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. சிரித்த முகத் துடனும் மலர்ச்சியுடனும் இவரைக் காணலாம்.

மாணவர்களோடு அன்பாகப் பழகுவதி லும், அவர்களின் குறைகளை அறிந்து அதனை நிவர்த்தி செய்வதிலும், பெற்றோருடன் அன்பா கவும் மிகவும் பவ்வியமாகவும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதிலும் இவருக்கு நிகர் இவரே எனலாம்.

இவரின் ஆர்வமும், இலட்சியமும், சிறந்த நோக்கமும், நிறைந்த பண்புகளும், சீரிய ஒழுக்கமும், வரலாறு படைத்த இசையும் கலையும் கிளைவிட்டு, விழுதுவிட்டு பரவி மனித மனங்களில் நிலையான இடம் பிடித்த இவர் பணி ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றேன். ■

## "ஒன்றாக்கு அருள்வீர்"

**இசைஅமைப்பு: 'குழந்தை'**

**பல்லவி**

எம்மை ஒன்றாக்கி அருள்வீர் தூயா – உம்மை
அம்மாவாய் அப்பாவாய் கொண்டோமே வா – எம்மை...

**சரணம்**

திருமறை ஓங்கத் திருவுளம் கொண்டாய்
ஒருமுறை பார்த்துந்தன் ஒளியருள் தாராய்
வரும்பகை யாவையும் வாளினால் வெல்வாய்
பெரும் பொருளே திருவே சந்தியோகையா – எம்மை...

இடியின் மக்கள் என்றே இறைவன்பின் சென்றாய்
அடிமைகள் தானோ அறிவொளி தாராய்
மிடிகைகள் நீங்கி மேன்மையாய் வாழ
கொடிபிடித் தும்மைக் கும்பிட்டு மன்றாட – எம்மை...

கலைமகள் ஓங்க திருமகள் தேங்க
நிலைமகளாம் செல்வம் நிறையவே செய்வாய்
அலைகடல் போலவே அருட்செல்வம் தாராய்
தலைமகனே திருவே சந்தியோமையா – எம்மை...

**குழந்தை, இயாகப்பர் இன்னிசைப் பாடல்கள், முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 1966, பக்.7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் அக்கறைகொண்ட மாமனிதன்



**திருமதி அன்னம்மா சந்தாம்பிள்ளை கொடுதோர்**
*இளைப்பாறிய ஆசிரியை,*
*மறைமாவட்ட குடும்பப்பணி இணைப்பாளர்,*
*மன்னார்.*

**ப**ல ஆசான்களையும் அறிவாளிகளையும் உருவாக்கும் தொழில் ஆசிரியத் தொழில். இறைபக்தி இறைவனை மகிமைப்படுத்துகின்றது. குருபக்தி குருவை மேன்மைப்படுத்துகின்றது. மறைந்தாலும் மறவாமல் நினைவுகூரப்படுபவர்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர் செபமாலை குழந்தை மாதோட்டத்தில் மட்டுமல்ல, கலையுலகிலும் பெரியோர்களால் பாராட்டப்பட்ட ஒரு கலைஞன், அறிவாளி, இறைபக்தியுடன் அன்பும், அமைதியும், பண்பும் கொண்ட ஆசானாக வாழ்கிறார். அவருடன் முருங்கன் மகா வித்தியாலயத்தில் ஆறு வருடங்களாக ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினேன். சிறந்த ஓர் ஆரம்பக் கல்வி அதிபராக அவர் இருந்து பணியாற்றினார். நான் முருங்கன் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தது அவருக்கு மகிழ்ச்சிபோலும். ஏனென்றால், சொந்த மண்ணில் பணிசெய்ய ஒருவர் வந்துவிட்டார் என என்னிடம் கூறியது என் ஞாபகத்திற்கு வருகின்றது. பாடசாலையில் மிக மிக அக்கறையும் ஆர்வமும் அவரிடம் இருந்ததை நான் நன்கு அறிவேன்.

முருங்கள் மகா வித்தியாலயம் வளர்ச்சியடைய வேண்டும், புதிய பாடசாலை கட்டப்பட காணி வேண்டும் என்றும், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகக் கூட்டத்தில் தெரியப்படுத்தியவுடன், ஆர்வமுள்ள பெற்றோரை ஊக்குவித்து இப்புதிய காணியில் புதிய பாடசாலை கட்டப்படுவதற்கு வித்திட்டவர்களுள் இவர் முதன்மையானவர். அத்தோடு, அதிபர் அவர்கள் மாணவர்களை கலை நிகழ்ச்சிகளில் ஊக்கப்படுத்தியதுடன், பல போட்டிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்து, போட்டிகளில் முதற்பரிசு தட்டிச் செல்வதுடன், முருங்கன் மகா வித்தியாலயம் கலையில் ஆர்வமுடன் செயற்பட வழிகாட்டியவர் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இக்காலப் பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்குள் இருந்த ஒற்றுமை, அன்புறவுதான் பாடசாலை வளர்ச்சியடைய உதவியது. மேல்வகுப்பு மாணவர்கள் தயங்காமல் அவரிடம் செல்வார்கள். எவரையும் மதிக்கும் பண்பு அவரிடம் நான் கண்டதுண்டு. குழந்தை மாஸ்ரர் எம்மையும் குழந்தைகள் போல்த்தான் கருதுகிறார் என்று ஆசிரியர்கள் கூறுவதுண்டு. தமக்கு இறைவன் கொடுத்த ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றை குறைவின்றி சமுதாயத்திற்குச் சமர்ப்பித்துள்ளார். இவர் மக்கள் உள்ளங்களிலும் மறக்கப்படாத மாமனிதனாகத் திகழ்கின்றார். அதிபராக இருந்து ஓய்வுபெற்று நிற்கும் இவருக்கு இறைவனின் ஆசீர் வேண்டி வாழ்த்துகிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் கலையும் இவரின் இரு கண்கள்



**திருமதி தே.மேரி றீற்றா**
*மாதிரிக் கிராமம்,*
*நறுவிலிக்குளம், மன்னார்*

குழந்தை செபமாலை அவர்கள் சிறு வயதிலேயே கலையார்வம் மிக்க துடிப்புள்ள குறும்பான எல்லோராலும் விரும்பத்தக்கவராக இருந்தவர் என மூத்தோர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். தீமைகளை ஒழிப்பதற்கு அவர் சிறு வயதிலேயே ஆர்வம் கொண்டிருந்தவர். ஒவ்வொரு தனி மனித சுதந்திரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆர்வமாய் எண்ணத்திலும் செயற்பாட்டிலும் காட்டியவர். சமுதாய சீர்கேடுகளில் இருந்து மக்கள் விடுதலை பெற வேண்டுமென பாடசாலை மாணவர் முதல் பெரியவர்கள் வரை அன்பாகவும் மிகவும் பக்குவமாகவும் சீர்திருத்த முயன்றவர். மாணவர்களை ஊக்கப்படுத்தி கல்வி புகட்டி சிறந்த கல்விமான்களாக உருவாக்கியவர்.

கலை வளர்ச்சியை பொறுத்த வரையில் அரும்பாடுபட்டு உழைத்தவர். இதற்குப் பல சான்றுகளைக் கூறலாம். தொடக்க காலத்தில் ஆசிரியராக பணிபுரிந்தவேளை தன்னுடைய பாடசாலைக் கடமைகளை நிறைவேற்றுவதோடு கலையை வளர்ப்பதிலும் துடிப்புடன் செயற்பட்டார். இரவிரவாக கண்விழித்து பல நாடகங்களை இயற்றி எழுதி மேடையேற்றுவதென்றால் சாதாரண காரியமல்ல. இக்காரியத்தையும் இவர் வெற்றியுடன் செய்து முடித்தார். இவற்றில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், உடல் இயலாமை, ஒத்துழைப்பின்மை போன்ற சவால்களையும் தாண்டி இவர் நாடகங்களை மேடையேற்றி உள்ளார். இவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் வெற்றியீட்டாமல் திரும்புவதில்லை. இப்படியிருந்த போதிலும் அவர் அதனை சாதாரணமாக கிரகித்துக் கொள்வார்.

மேலும் மற்றய போட்டியாளர்களோடு மிகவும் நட்பான முறையில் பழகுவார். “அவர்களும் திறமையாக நடித்தார்கள்” என்று சொல்வார். மற்றவர்களை எப்போதும் உயர்வாக மதிக்கும், நினைக்கும் பண்பு அவரிடம் காணப்பட்டது. அந்தக் குணம்தான் அவரை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது என்றும் கூறலாம்.

பகலில் பாடசாலை, இரவில் கலை வளர்ப்பு. இதுதான் அவரது இளமைக் காலத்தின் வேலைத்திட்டங்களாக இருந்தன. தனக்கென தன் குடும்பத்துக்கென அவர் வாழவில்லை. மாறாக; கலையை வளர்க்க வேண்டும், தான் மட்டுமல்ல தன்னை சூழவுள்ள சமுதாயமும் முன்னேற வேண்டுமென கலையை வளர்த்த, வளர்க்கின்ற கலைஞர் அவர். அந்த நாட்களில் நாங்கள் கொழும்பு, மட்டுநகர், திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்நகர் போன்ற இடங்களின் பிரபல மேடைகளில் ஏறி வெற்றி வாகைகளை சூடிய நாட்களை மறக்க முடியாது.

இவ்வாறான பயணங்களின் போது தானே செலவீனங்களை பொறுப்பெடுப்பார். தனது செலவிலேதான் எல்லாவற்றையும் செய்து முடிப்பார். தனது சம்பளம் இதற்கு போதாமல் போய்விட்டால் கடன் பெற்றாவது கலையை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் உத்வேகமும் கொண்ட அவரது கலையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தையும் மறக்க முடியாது. முயற்சி உடையார் இகழ்ச்சியடை யார் என்பதற்கேற்ப அவரது முயற்சிதான் அவரது உயர்ச்சிக்குக் காரணம். எப்போதும் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கமும், புதிய பாடல்களை உருவாக்கும் ஆர்வமும் அவரிடம் காணப்படும். வீட்டில் இருக்கும்போது கூட ஏதோ ஒன்றை முணுமுணுத்துக் கொண்டே இருப்பார்.

இவருடைய இந்தக் கலைவாழ்வின் பின்னாக இவருக்கு உடல் நலத் தடைகள் ஏற்பட்டன. இவர் உடல் நலம் பாதிக்கப்பட்டார். ஒருவாறாக வருத்தத்தில் இருந்து விடுபட்டு மீண்டும் கலை வேலைகளில் ஈடுபடுவார். இதைப் பார்த்த அவரது குடும்பத்தவர் இவ்வேலைகளை சிறிது சிறிதாக குறைக்குமாறு கூறியும் அவரால் அதை செய்ய முடியவில்லை. கலையார்வம் அவரை விடவில்லை என்றே சொல்லலாம். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்னும் முதுமொழிக்கு ஏற்ப அக்கலையுணர்வு எச்சந்தர்ப்பத்திலும் அவரை விட்டு நீங்காமல் அவர் கூட இருந்ததை எம்மால் காண முடிந்தது.

இவரது இயலாமையில் அவர் கஷ்டப்பட்டாலும் அவருடைய திறமையை உணர்ந்த அவரது மனைவி , பிள்ளைகள், சகோதரங்கள் இவருக்கு ஊக்கமும் உதவியும் செய்து அவரை கலை உலகிற்கு காணிக்கையாக்கினார்கள். இவரது மூத்த சகோதரர் இவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். மற்றும் இளைய சகோதரர்கள் தமது கலைத்திறமையால் இவரை உயர வைத்தார்கள். இவரது தந்தை செபஸ்தியான், இவரின் மனைவி, மனைவியின் தந்தை சவிரிமுத்து போன்றோர் இவரது கலையை வளர்ப்பதற்கு ஊக்கமூட்டினார்கள் என்று கூறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கலைஞர் குழந்தை அவர்களின் இனிய பேச்சு, அன்பான சுபாவம், துடிப்பான நடை, வீரமான நடிப்பு, இனியகுரல்; இவை போக, மற்றவரை அன்பு செய்து மதிக்கும் அன்பான பண்பான பழக்கம், எல்லோரோடும் ஒத்துப் போகும் பண்பு, சுற்றங்களை நேசிக்கும் பண்பு என்பவற்றால் அவர் எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்துள்ளார். கலை உலகிற்கு தன்னை முழுவதும் அர்ப்பணித்த கலை வீரன் மன்னாரில் மட்டுமல்ல அகில இலங்கை ரீதியாகவும் குழந்தையை தெரியாத கலைஞர்கள், ரசிகர்கள் இல்லை என்றே கூறலாம். கலைத் தாய்க்குத் தன்னை அர்ப்பணித்ததற்கேற்ப வாழ்ந்து காட்டியவர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் தன்னையும் தன் சுற்றம் சூழலையும் கலையால் வளர்த்த இவரது கலைப்பணி வாழ்க என்று வாழ்த்தி, இவரைப்போல அர்ப்பணிப்புள்ள கலைஞர்கள் இன்னும் உருவாக வேண்டி நிறைவு செய்கின்றேன். ■



# பால்போல் மனம்கொண்ட பாவலர் !



**ஏ.டி.தேவதாசன் அல்மேடா**
*முருங்கன்,*
*மன்னார்.*

கலையுலகம் மறவாத கலைஞன்
வறுமையும் புலமையும் இணை பிரியாதென்பர்
இளமையில் இவரது புலமையின் புறப்பாட்டால்
வெறுமையாய்ப் பணப் பெட்டி இருந்திட்ட போதிலும்
பெருமையாய்ப் பெருங்கலை வளர்த்தவர் குழந்தையே!

மலையெனச் சோதனை வேதனை வந்தாலும்
நிலையாக என்றுமே நீடித்து நிற்பவர்
கலை வாழத்தன் ஆயுள் அர்ப்பணம் செய்தவர்
விலையிலாதவர் பணி மதிப்பிடற்கரியதே!

ஆல்போல் அவர்நிழல் அமர்ந்தவர் ஆயிரம்
வேல்போல் அவராற்றல் பயின்றவர் ஆயிரம்
பால்போல் மனம்கொண்ட பாவலர் குழந்தையே
நூல்பல வெளியிட்ட பெருந்தகை நீரன்றோ

யார்குழந்தை என்னுமோர் நாடகம் தன்னிலே
பேர்பெறு பாத்திரம் ஏற்றதால் பெருமையாய்
ஊரெல்லாம் குழந்தையாய்ப் புனைபெயர் சூடினீர்
பார்போற்றும் பாவலா பல்லாண்டு வாழ்கவே!

முத்தமிழ் மன்றத்தை முருங்கனில் ஸ்தாபித்த
வித்தகர் நின் பெயர் நீடூழி வாழ்கவே
எத்தனை காலங்கள் கடந்தாலும் நின் ஆற்றல்
கத்தனின் காவலோடென்னாளும் வளர்கவே!

"அவனுடைய கோபாவேசத்தை என்னுடைய பொறுமையால் எதிர்ப்பேன்.
அவனுடைய கொடுமையை எனது சாந்தத்தால் பொறுத்துக் கொள்வேன்"

- ஷேக்ஸ்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதசுரபி குழந்தைக்கு...



**அ.அந்தோனிமுத்து**
*முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்,
மன்னார் கல்வி வலயம்,
மன்னார்.*

*__1958__களில் எனது 18 ஆவது வயதினிலே நான் அரச பதிவற்ற ஆசிரியனாகப் பெரிய முறிப்பில் கற்பித்துக் கொண்டிருந்த காலம். தமிழரசுக்கட்சியின் மாபெரும் சத்தியாக்கிரகம் ஒன்று மன்னார் கச்சேரியின் முன் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை! மாவட்டத்தின் நாலாபுறமிருந்தும் லொறிகள், பஸ்களிலுமாக மக்கள் சாரி சாரியாக வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். நானும் பெரிய முறிப்பிலிருந்து வந்த மக்களுடன் லொறி யொன்றில் வந்திறங்கினேன். ஒலி பெருக்கியில் தமிழுணர்ச்சிப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அப்பாடல் வரிகள், அதை இசையுடன் பாடிய கானாமிர்த கானம். கணீரென்ற அக்குரலுக்குரியவனின் இசை மழையில் மயங்கிக் குரல்வந்த திசை நோக்கி விரைகின்றேன். கச்சேரியின் முன்புற வாயிலில் கெம்பீரமாக அமர்ந்தபடி கணீரென்ற குரலிற்பாடிய பாடல்கள் என்னை மெய்மறக்கச் செய்தன. அதிலேதான் 'தம்பிராசா' மாஸ்ரரான நீ, 'குழந்தை' எனும் புனைப்பெயருடன் பாடற் தொகுப்பொன்றை வெளியிட்டுப் பாடிக்கொண்டிருந்தாய். அன்று தொடங்கிய நம் நட்பு மெல்ல மெல்ல மெல்ல வளர்ந்து வந்தது (ஆண்டு பாடல்வரிகள் ஞாபகமில்லை).*

*ஆசிரிய பயிற்சியின் பின் நீ விடத்தல்தீவுக்கு மாற்றலாகி வந்தாய். வந்த கையோடு இரண்டொரு மாதங்களில் முருங்கனுக்குப் பறந்து சென்றாய். ஆயினும் நம்மிடையே ஏதோ ஒரு வித பாசப்பிணைப்பு நம்மையறியாமலேயே ஊடுருவி வளர்ந்ததை நாமறிவோம்.*

*நமது குடும்பப் பின்னணியை எடுத்துக் கொண்டால், எனது தந்தையார் அடைக்கலம் அண்ணாவியார். அவரது சகோதரர் மூவரும் அவருடன் இணைந்து கலையரசிக்குச் சேவகம் செய்தனர். எனது தந்தையாரின் தந்தையும் ஓர் அண்ணாவியார். பெயர் பிலிப்பு. இவர்கள் நம் மாவட்டத்தின் பல கிராமங்களிலும் விடத்தல்தீவு, சாளம்பன், பொன்தீவுகண்டல், அடம்பன் போன்ற இடங்களிலெல்லாம் நாட்டுக்கூத்தைக் கொண்டு சென்றவர்கள்.*

*உனது தந்தையார் செபஸ்தியான் ஓர் அண்ணாவியார். அவரது தந்தையும் அண்ணாவியார். உனது சகோதரர்களும் கலைத் தொண்டில் ஈடுபட்டவர்கள். நான் 12ஆவது வயதில் நாட்டுக்கூத்தில் நடித்தேன். நீயும் நடித்திருப்பாய். இது ஒருபுறமிருக்க, முத்தமிழ்க் கலாமன்றத்தை நீ முருங்கனில் ஆரம்பித்த அதே ஆண்டில் நான் விடத்தல்தீவில் தொடங்கினேன்.*

*நான் என் கிராமத்திலுள்ள பலரையும் ஒருங்கிணைத்து இம்மன்றத்தைத் தொடங்கினேன். 'அரிச்சந்திரன்' நாடகத்தை அரங்கேற்றியபோது மக்களின் ஏகோபித்த பாராட்டுக்கள்! ஏறக்குறைய 1970களில் சினிமா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியேட்டர்களில்தான் படங்களின் கதாநாயகனின் 'கட்அவுட்' காட்சிப்படுத்துவார்கள். ஆனால் 'அரிச்சந்திரனாக நடித்த கீர்த்தி சீலன்' (தற்போது தோட்டவெளியில் வசிக்கிறார்) என்பவரின் 'கட்அவுட்' விடத்தல்தீவில் காட்சிப்படுத்தப்பட்டுப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றது. ஆயினும் 4, 5 வருடங்கள் பல படைப்புக்களை வெற்றிகரமாக அரங்கேற்றிய இம்மன்றம், எனது ஆசிரியப்பணி காரணமாக நான் மாற்றலாகிச் சென்றபோது, சரியான வழிகாட்டி இல்லாததன் காரணத்தால் மன்ற உறுப்பினர்களிடையே கருத்து மோதல்கள், போட்டி மனப்பான்மைகள் ஊடுருவி காலப்போக்கில் அது உடைந்து உடைந்து சிதறியது. ஆனால் எனது குடும்ப உறவுகளை மட்டும் வைத்து இம்மன்றம் தொடங்கப்பட்டிருந்தால் அது தொடர்ந்து தாக்குப்பிடித்திருக்கும். இதற்குதாரணம்தான் நீ.

உனது முத்தமிழ்க் கலாமன்றத்தை வளர்ப்பதில் நீ மட்டுமல்ல உனது குடும்ப உறவுகளே முழுமையாகப் பங்கேற்று, இடையிலேற்பட்ட சவால்களுக்கு முகம் கொடுத்தீர்கள். இத்தியாக வேள்வியில் உனது அருமை மனைவி றோஸ்மேரியும் நியாயமான பங்களிப்பை வழங்கியிருந்தார். இதனாலேதான் நீ தயாரித்தளித்த அனைத்துப் படைப்புகளும் வெற்றிக்கனியை எட்டிப்பிடித்தன.

அப்பிகாவதி அமராவதி நாடகத்தில் நீயும் உன் மனைவியும் சோடியாக நடித்துப் புகழடைந்தாய். 'கல் சுமந்த காவலனில்' நீயும் உன் மருமகன் அமரர் அந்தோனிப்பிள்ளையும் எதிரணியாக நடித்துப் போர்க் காட்சிகளில் பட்டையைக் கிளப்பிப் புகழடைந்தாய்! முள்ளிக்குளம் நாடக விழாவில் வந்த 25 நாடகங்களுள் உனது நாடகத்தின் தரமறிந்து 1ஆம் இடம் என் தலைமையிலான நடுவர் குழு வழங்க, அதிலே உள்ள சிறு தவறொன்றைச் சுட்டிக்காட்டி, ஆவணம் சார்பில் நாடகம் கொண்டுவந்த உனது தம்பி பிலேந்திரன் குழுவினர் எதிர்ப்புக் குரல் எழுப்ப நாம் பட்டபாடு ஞாபகமிருக்கிறதா? 'இறைவனா? புலவனா?' நாடகத்தில் நீ சிவபெருமானாக நடிக்க உன் அண்ணர் சீமான் நக்கீரனாக ஆடிப் புகழேணியின் உச்சியைத் தொட்டார்.

'யார் குழந்தை' நாடகத்தில் சலமோன் இராசாவாக நடித்த நீ உண்மைக் குழந்தையொன்றை - பச்சிளம் பாலகனை ஒரு கையாற் தூக்கி வெட்ட வந்த காட்சி சபையை மெய்சிலிர்க்க வைத்தமை இன்றும் என் மனக்கண்ணில் தெரிகிறது.

நான் கற்கிடந்தகுளத்தில் படிப்பித்த காலத்தில் உங்களது 'சந்தியோகுமையோர்' நாடகத்தை இரண்டு இரவுகள் பார்த்துப் பரவசமடைந்தேன். அதிலே உன் உறவினர்கள், இனபந்துக்கள் யாவருமே என்னுடன் நல்லுறவு பூண்டதை மறக்க முடியுமா?

அமரர் மக்சிமஸ் லம்பேட் அவர்கள் முருங்கனில் அதிபராக வந்த காலம், மன்னார் கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்த 'ரிக்கற் நாடகம்' முருங்கனில் மக்சிமஸ் அதிபரின் தயாரிப்பில் 'வில்லியாகுதல்' நாடகம் முருங்கன், மன்னார், எருக்கலம்பிட்டி, அடம்பன் ஆகிய இடங்களில் மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களைப் பெற்றது (ஆண்டு நினைவில் இல்லை). அதிலே நீ அதிகாரி, நான் 'வில்லியம் தெல்'. முருங்கன் இராசையரின் மகள் (பெயர் நினைவில்லை) நாடகத்தில் எனது மகள்.

நாமிருவரும் சரிக்குச்சரியாக வாதாடிப் பாடலால் தர்க்கமாடி அட்டகாசப்படுத்தி அரங்கேற்றிய அந்நாடகத்தை, மன்னார் மாவட்டமே ஏகோபித்துப் பாராட்டிய சம்பவத்தை மறக்கவே முடியாது. அவ்வேளை (அமரராகிவிட்ட) எனது தந்தையார் வந்து எனக்கு 'மேக்கப்' செய்தது நினைவுக்கு வருகிறது. நாடகம் முடிந்ததும் நம்மிருவரையும் பாராட்டி மகிழ்ந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இருவரும் ஆசிரியர்கள் என்பதால் கல்வித்திணைக்களம் நாடாத்திய தமிழ்த் தினப் போட்டிகளில் கலந்து பல பரிசுகள் பெற்றோம். நான் ஆரம்பப் பாடசாலையில் கற்பித்த காரணத்தால் சிறுவர்களுக்கான நிகழ்வுகளைத் தயாரிப்பேன் நீ முருங்கனில் கற்பித்த காரணத்தால் பெரிய மாணவர்களுக்கான நிகழ்வுகளைத் தயாரிப்பாய்.

மாவட்ட மட்டத்தில் நமது தயாரிப்புகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகும். அங்கும் நமது நிகழ்வுகள் அடுத்த கட்டப் போட்டிக்குத் தெரிவாகும். அகில இலங்கை மட்டப் போட்டியில் நீ எடுபடுவாய், நானும் எடுபடுவேன். நீ 4, 5 நிகழ்ச்சிகளுடன் வருவாய், நான் ஒன்று அல்லது இரண்டு நிகழ்வுகளுடன் வருவேன். உனக்கும் இடம் கிடைக்கும். எனக்கு 2ஆம் 3ஆம் இடங்கள் கிடைக்கும், கிடைக்காமலும் போகும்.

எனக்கு இடம் கிடைப்பது முக்கியமல்ல, எனது சிறிய பாடசாலையிலிருந்தும், 25 மாணவர்களை இலவசமாக அழைத்துச் சென்று இவற்றில் பங்கேற்கவும், ஏனைய நிகழ்வுகளைக் கண்டுகளிக்கவும், இச்சிறுவர்களுக்கு வாய்ப்புக்கிடைக்கின்றதே என்பதில் எனக்கு ஓர் ஆத்மதிருப்தி.

பெரும்பாலான காலத்தை முருங்கன் மகா வித்தியாலயத்திலும், கற்கிடந்தகுளத்திலும் செலவழித்து மேலும் சில சிறிய பாடசாலைகளுடன் உனது சேவையினை நிறைவேற்றினாய். ஆனால் கற்பிக்கும் காலம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் 'கலையரசிக்கு உன்னை அர்ப்பணித்தாய்' இதன் காரணமாகப் பாடசாலை மட்ட கலைநிகழ்வுகளுக்கு மேலதிகமாக இளைஞர்கள், பெரியவர்களுக்கான நிகழ்வுகள் மூலம் நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றை பல மாவட்டங்களில் நடத்தி பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டாய். இதன் விளைவுகள்தான் நீ தற்போது பெற்றுக் கொண்ட பட்டங்கள்! விருதுகள்! பாராட்டுக்கள்.

ஆக, 1940களில் பிறந்த நாம் நமது காலத்தில் மக்களுக்கான சேவையை மன நிறைவாகச் செய்த திருப்தியுடன் இருக்கின்றோம் என்றால் அது மிகையல்ல! இருந்தும், நீ உடல் நலமிழந்து ஓய்ந்திருப்பதைப் பார்க்கும் போது என் மனம் வேதனைப்படுகிறது.

புகைத்தல் முற்றாகத் தவிர்ப்பு, மதுசாரம் இடையிடையே பாவிப்பு இது நம்மிருவருக்குமிடையிலான ஒற்றுமை. அப்படியிருந்தும் உன் அன்பு மனைவி, மக்கள், மருமக்களினால் உனக்கு உள நெருக்கீடுகள் வர நியாயமில்லை. எனவே நீ முதிர்சியடைந்த மூத்தோனாக நெஞ்சை நிமிர்த்தி வாழவேண்டும்.

நீ ஒரு வயோதிபன் அல்ல, முதியோன் அல்ல, 'நைன்ரி' அல்ல, பெரிசு அல்ல, மாறாக முதிர்ச்சி பெற்ற மூத்தவன். நீ உன் பரம்பரைக்கு ஒரு அழியாத சொத்து, ஒரு புதையல், அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி! அந்த நிறைவோடு தன்னம்பிக்கையுடன் மகிழ்ந்து வாழப் பழகிக்கொள், அடிக்கடி வைத்தியரிடம் உன் உடலைப் பரிசோதித்துக் கொள்.

நீ பல்லாண்டு மகிழ்ச்சியுடன் வாழ இறைவனை வேண்டி என் நினைவலைகளை நிறைவு செய்கின்றேன்.

'வாழ்க வளமுடன்' ■

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்
நாமும் நிலத்தினது நாகரீக வாழ்வுக்கு நம்மால்
இயன்றபணிகள் நடத்திடுவோம்'

- மஹாகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை விற்பனர்



**திருமதி சோதிமலர் மகேஸ்வரன்**
*பயிற்றப்பட்ட இசை ஆசிரியர்*
*மன்/கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலை,*
*முருங்கன், மன்னார்.*

ஆசிரியரும் கலைஞருமான கலாபூஷணம் குழந்தை ஒய்வுபெற்ற அதிபர் ஆவார். இவர் கலை ஆர்வமும், கலை உணர்ச்சியும் மிக்கவர். இவருடைய தகப்பனார் மரியான் செபஸ்தியான் ஓர் அண்ணாவியார். அண்ணாவியாரின் தமையன் மரியான் சந்தான் அவர்கள் 1940இல் சந்தியோகுமையோர் நாடகத்தை பாடிய புலவராவார். புலவரின் மகன் சந்தான் பாவிலு அவர்களும் ஒரு புலவர். எனவே, கலாபூஷணம் குழந்தை என்றழைக்கப்படும் திரு. செ.செபமாலை அவர்கள் புலவர்கள் பரம்பரையைச் சார்ந்தவர். கலாபூஷணம் குழந்தை ஒரு பல் கலை விற்பனர்.

பாடசாலைக் காலத்திலிருந்தே கலை, இலக்கிய ஈடுபாடு கொண்ட இவர், பாடசாலையில் தமிழ்த் தினப் போட்டிகளுக்காகவும், பல்வேறு விதமான விழாக்களுக்காகவும், பொது நிகழ்வுகளுக்காகவும், சமூக, சமய, கலாசார நிகழ்வுகளுக்காகவும் கவரி வீசிய காவலன், கண்டி அரசன், நளன் தமயந்தி, இணைந்த உள்ளம், மயான காண்டம், கல் சுமந்த காவலர்கள், வீரத்தாய், யார் குழந்தை, அன்புப் பரிசு, வீரனை வென்ற தீரன், சிலம்பின் சிரிப்பு முதலான நாடகங்களைத் தயாரித்து நடத்தி பல பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெற்றவர்.

1964ஆம் ஆண்டிலே முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் இவரால் ஆரம்பிக்கப்பட்டு, படிமுறையாக வளர்ச்சி பெற்று இன்றும் இளமை குன்றாது கலைப்பணியாற்றி வருகின்றது. இந்நாடக மன்றத்தின் தலைவராக கலாபூஷணம் திரு. செ.செபமாலை இருந்து இம்மன்றத்தினை இயக்கி வருகின்றார்.

மன்னார் மாவட்டத்தில் கலை, இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளில் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் முத்தமிழ் கலாமன்றம் ஆரம்பித்த காலத்திலிருந்தே பல காத்திரமான நாடகங்களை தயாரித்து மேடையேற்றி அகில இலங்கை ரீதியாக பரிசில்கள் பெற்றுக்கொண்ட மன்றமாகத் திகழ்வதும் இவரின் கலைப் பணியாலேதான்.

சமூக, இசை, இலக்கிய, சரித்திர , கத்தோலிக்க சமயம் சார்ந்த நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள், வில்லுப்பாட்டுகள் போன்றவற்றினை தயாரித்து வழங்கி தமிழையும், ஆன்மீகத்தையும் வளர்த்த பெருமை இவருக் குரியதே. கலைஞனாகவும், எழுத்தாளனாகவும், கவிஞனாகவும், நடிகனாகவும், பாடகனாகவும், அண்ணாவியாராகவும், புலவராகவும், ஒப்பனையாளராகவும், இசைக் கருவிகளை மீட்டுபவராகவும், நெறிப்படுத்துபவராகவும், தலைமை வகிப்பவராகவும், பேச்சாளனாகவும் என பல் கலை விற்பன்னனாக திகழ்வது இவருக்கே உரிய தனிப்பெருமையாகும்.

எனது ஆரம்பக் கல்வியை இவரிடம் பெற்றதுடன் சிறுபராயம் முதல் முத்தமிழ் கலாமன்றத்தின் ஓர் அங்கத்தவனாகவும் இணைந்துகொண்டேன். என்னை கலைத் துறையிலே நாட்டம் கொள்ளவைத்ததும் இவரேதான். இவரது நாடகங்களுக்கு பின்னணிப் பாடகியாகவும் அன்புப் பரிசு, யார் குழந்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயானகாண்டம், சிலம்பின் சிரிப்பு, பாதுகை, வீரத்தாய் போன்ற நாடகங்களில் பல வேடங் களிலும் நடித்துள்ளேன்.

1979இல் மன்னார் திறந்தவெளி அரங் கினிலே ஒரு வில்லுப்பாட்டு நிகழ்வினை செய்வதாக சம்மதம் தெரிவித்துவிட்டார் குழந்தை ஆசிரியர். ஆனால், குழுவினரில் சிலர் மறுத்துவிடவே என்னையும் எனது சகோதரி யையும் அழைத்து, இரு தினங்களில் எமக்குப் பயிற்சி அளித்து தன்னைப்போலவே எமக்கும் ஆண்வேடம் அணிவித்து வில்லிசையை மிகவும் சிறப்பாக நடத்தி பிரதம அதிதியால் பொன் னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வானது என் வாழ்நாளில் மறந்துவிட முடியாத ஒரு சம்பவமாகும்.

இதைவிட மாணவர் உலகம் என்னும் வானொலி நிகழ்ச்சிக்காக என்னை அழைத்துச் சென்று நாட்டார் பாடல்கள் பலவற்றை பாடி ஒலிபரப்பிய பெருமையும் இவருக்குரியது. மேலும், வாழ்த்துப் பாக்கள், கல்வெட்டுக்கள், வரவேற்புப் பாடல்கள் பாடுவதில் வல்லவரா கவும் இவர் திகழ்கின்றார். இன்னும் வியாகுல பிரசங்கங்கள், ஆசந்தி பாடல்கள், சுற்றுப்பிரகார கவிகள், வேண்டுதல்கள், பிழை தீர்க்கும் மந்தி ரங்கள் போன்றவற்றையும் ஒலிப் பதிவு செய்து காலத்தால் அழியாச் சொத்தாக்கினார்.

தான் எழுதிய மரபுவழி நாடகங்களை நூல் வடிவிலே வெளியிட்டுள்ளார். இதன் மூல மாக சாஹித்திய விருது, கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, தலைக்கோல் விருது போன்ற விருதுகளையும் இவர் பெற்றுள்ளமை மன்னார் மாவட்டத்திற்கோர் தனிச்சிறப்பாகும்.

நாட்டுக்கூத்துத் துறையில் அவர் அடைந்துள்ள உயர்நிலை போற்றுதற்குரியது. கலை ஆற்றல் இவருக்கு இயல்பானது. இவரது குடும்பம் ஒரு கலைக் குடும்பம். கலை உணர்வு இவரது இரத்தத்துடன் ஊறியது. இவரது குடும்ப அங்கத்தவர் அனைவரிடமும் இவ்வாற்றலைக் காணலாம். ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டு கல்விப்பணிக்கு மத்தியிலும் கலைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் குழந்தை அவர்கள். நாட்டுக்கூத்துக் கலையில் இவரது திறமை மிக உயர்வானது.

கலாபூஷணம் குழந்தை அவர்கள் மன்னார் மாவட்டத்தின் பெரும் சொத்து. இவர் மூலம் மாவட்டத்தின் மகிமை பிரகாசமாக விளங்குகின்றது. ஆகவே இவரது சேவை இங்கு மட்டுமல்ல எங்கும் பெருகவேண்டும். உடலில் வயதுத் தோற்றத்தைக் காட்டிக்கொண்டாலும் இன்றும் இளமையோடு இருக்கும் இவரின் உத்வேகத்தைப் பாராட்டி தொடர்ந்தும் பல கலைப் படைப்புக்களை உருவாக்கவேண்டு மென இறையாசிர் வேண்டி நிற்கிறேன். ■

சேவை விபரம்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|
| J/ [illegible] | உ. ஆ | 1. [illegible]. 60 | 11. 5. 60 | [illegible] | [illegible] |
| MN/ [illegible] | [illegible] | 12. 5. 60 | 30. 6. 63 | [illegible] | [illegible] |
| K/ [illegible] | [illegible] | 1. 7. 63 | 31. 7. 65 | [illegible] | [illegible] |
| MN/ [illegible] | [illegible] | ([illegible]) 1. 8. 65 | 6. 7. 67 | [illegible] | [illegible] |
| MN/ [illegible] | [illegible] | 7. 7. 67 | 31. 12. 67 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | [illegible]. [illegible]. 68 | 31. 12. 72 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | 1. 1. 73 | 27. 1. 75 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | 28. 1. 75 | 14. 10. 75 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | 15. 10. 75 | 31. 10. 75 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | 1. 11. 75 | 06. 02. 84 | [illegible] | |
| MN/ [illegible] | [illegible] | 07. 02. 84 | 05. 03. 2000 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் கலைப் பொக்கிஷம்

ப.அஜந்த ரூபன்
Dip.in.Teach.
ஆசிரியர்
மன்/சித்திவிநாயகர் இந்து தேசியபாடசாலை,
மன்னார்.



செபமாலை குழந்தை என்பவர் வேறு யாருமல்ல. இவரை 'பெத்தப்பா' என்றுதான் நான் ஆசையாக அழைப்பதுண்டு. இவருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்புகளும் கலைப் பயணங்களும் இடைவெட்டுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். எனது வாழ்வின் திருப்புமுனையாக இருந்தவரும் இவரே. இவரது கலைப் பயணத்தை எனது அனுபவங்களினூடாக கூற லாம் என நினைக்கின்றேன்.

1994ஆம் ஆண்டு நான் இரண்டாம் தரம் படித்துக் கொண்டிருந்தேன். புனித இயாகப்பர் நாடகம் மிக விறுவிறுப்பாக ஒத்திகைகள் பார்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்நாடகத்தில் ஒருவர் அனைவரின் நடிப்புக்களையும் சரிசெய்து கொண்டிருந்தார். அவர்தான் எனது பெத்தப்பா. அவரைக் கண்டால் எனக்கு மாத்திரமல்ல என் வயதை ஒத்தவர்கள் அனைவருக்கும் மிகவும் பயம். நாங்கள் மிகவும் தூரத்தில் நின்று கொண்டே நாடகத்தை பார்ப்போம்.

இவ்வாறாக ஒரு நாள் ஒத்திகை நடைபெற்றது. என்னையும் இன்னும் இருவரையும் அழைத்து, "இப்போது அரசர்கள் வேட்டையாடுவார்கள். நீங்கள் பன்றிகள் போல் தவளவேண்டும்" என்ற கட்டளை பிறப்பித்தார். அன்றுதான் நான் முதன் முதலாக மேடை ஏறிய பாத்திரம் பன்றி. இவ்வாறாக நாங்கள் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் கலை எனும் மழையில் நனைய ஆரம்பித்தோம். இவருடைய நெறியாள்கையின் கீழ் பல நாடகங்களையும், கூத்துக்களையும் கற்றோம். இயல்பாக எங்களுக்குள் தாளப்பிடிப்பை உணர்ந்தோம்.

என்னுடைய பெத்தப்பா நாடகங்களுக்கு எங்களை அழைக்கின்ற போது விருப்பத்துடன் சென்ற நாட்களே இல்லை. முகத்தை சுழித்துக்கொண்டு அவரை திட்டிக் கொண்டு சென்ற நாட்களே அதிகம். ஆனால் இன்று உணர்கிறேன் எம் சமூகத்திற்கு கிடைத்த மாபெரும் கலைப் பொக்கிஷம் எங்கள் செபமாலை (பெத்தப்பா).

"மாரி மழை பெய்தாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது" என்ற பழமொழியை அறிந்திருப்போம். நான் கேள்விப்பட்ட அளவில் இவரால் பழக்கப்பட்ட, நெறியாள்கை செய்யப்பட்ட நாடகங்கள் வெல்லவில்லை என்ற வசனம் இன்று வரை என் காதுகளுக்கு எட்டவில்லை. இதனூடாக இவருடைய திறமைகளை நோக்கலாம்.

அடுத்த முக்கிய விடயத்திற்கு வருகின்றேன். நான் தரம் 07 வரை மன்/முருங்கன் மகா வித்தியாலயத்தில் கற்றேன். பெத்தப்பாவின் தூண்டுதலால் கல்முனை பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலையில் க. பொ. த. உயர்தரம் வரை கற்றேன். இங்குதான் எனது வாழ்க்கையில் திருப்பம் ஏற்படுகின்றது. எனது பெத்தப்பாவின் வழிநடத்தலால் நான் இயல்பாகவே தபேலா, டோல்கி போன்ற தோற் கருவிகள் வாசிக்க கற்றிருந்தேன். அது எனக்கு பெரும் உதவியாக கல்வி கற்கும் காலத்தில் இருந்தது.

இவ்வாறாக க. பொ. த சாதாரன தரப் பரீட்சையில் சித்தியடைந்து, உயர்தரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை என் ரசனை போன்றும் பெத்தப்பாவின் விருப்புக் கேற்பவும் தெரிவு செய்தேன். உயர்தரமும் சித்தியடைந்தேன். கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டேன். எனது பெத்தப்பா கலைகள் மட்டும் எங்களுக்கு கற்றுக் கொடுக்க வில்லை. சில வழிகாட்டல், அனுபவங்கள் வாயிலாக வழிப்படுத்தினார்.

நாடகம் நடிப்பதில் உள்ள சரி பிழைகள் பற்றி கதைக்கும்போது தன்னுடைய அனுபவங் களைக்கொண்டு எனக்கு விளக்கமளிப்பார். மேலும், நான் கல்வியியற் கல்லூரிக்கு நாட கமும் அரங்கியலும் என்ற பாடத்திற்கே தெரிவானேன். அங்கு சென்று பல நாடகங் களில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தேன். உதாரணமாக: காத்தவராயன் கூத்தில் காத்த வராயனாகவும், பவளக்கொடி நாடகத்தில் அர்ச்சுனனாகவும், இன்னும் பல நாடகத்திற் பாத்திரமேற்று நடித்திருந்தேன். மேலும் மிருதங்கம், தவில், ஒக்ரோபாட் போன்ற இசைக் கருவிகளையும் வாசிக்க கற்றுக்கொண் டேன். இவை அனைத்திற்கும் அடித்தளம் எனது பெத்தப்பா குழந்தை செபமாலைதான்.

இவ்வாறு எனது கல்லூரி கற்கைநெ றியை முடித்து விட்டு தற்போது மன்/சித்தி விநாயகர் இந்து தேசியப் பாடசாலையில் ஆசிரி யராக பணிபுரிகின்றேன். இங்கும் கூட நான் சில படைப்புக்களை படைத்துக் கொண்டிருக்கின் றேன். கணித போட்டியில் பழக்கிய 'மனித மணித்தியாலம்' எனும் நாடகம் எனது படைப் பில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றது. 'ஒன்று பட்டு உழைப்போம்' என்ற சிறுவர் நாடகம் மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தற்போது வடமோடி 'இராவ ணேசன்' கூத்து பயிற்றுவித்துக் கொண்டிருப்பது குறிப் பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறாக நான் என்ன நாடகம் மேடையேற்றப் போறேன் என்றாலும் எனது பெத்தப்பாவிடம் ஒருசில விடயங்களை வினவி ஆசி பெற்றுச் செல்வது வழக்கம். இப்பண்பை பெற்றுக் கொண்டதும் பெத்தப்பாவிடம் இருந்து தான். எவ்வாறென்றால், பெத்தப்பா நாடகத்தை போட்டிக்கு அல்லது ஏதாவது கலை நிகழ்வுக்கு கொண்டு செல்லும் முன் யாகப்பர் ஆலயத்தை மறக்க மாட்டார். இது என் வாழ்வில் பெற்ற மிகப்பெரிய படிப்பினையாகும். இவ்வாறாக எனது பெத்தப்பா நாடகக் கலைக்கும், எனக்கும், சமூகத்திற்கும் கிடைத்த பெரிய சொத்தாகும்.

அன்று என் பெத்தப்பா பழக்கிய தாளம்தான் இன்று நான் ஒரு நாடக ஆசிரிய ராக மிளிர்வதற்கும் 'ஜேம்ஸ்' இசைக்குழு உருவாகுவதற்கும் காரணமாய் அமைந்தது. எனவே இவ்வாறான இசைக் கலைஞனை, நாடகக் கலைஞனை நன்றியோடு நினைக் கின்றேன். வாழ்க எம் கலைமகன் வாழ்கவே. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை ஆர்வமும் சமூகத் தொண்டும்



**பறுனாந்து அற்புதராஜா**
*காசாளர்,*
*பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,*
*நானாட்டான்,*
*மன்னார்.*

**மா**தோட்டத்தின் முருங்கன் என்ற கிராமத்தில் புனித சந்தியோகுமையோர் ஆலயத்திற்கு அருகாமையில் வசித்து வருபவர் கலைஞர் செபமாலை. இவரைக் 'குழந்தை மாஸ்ரர்' என்றும் அழைப்பர். இவரது கலை ஈடுபாடானது மன்னாரில் மட்டுமல்லாது அகில இலங்கையிலும் வெளிநாட்டிலும் வளர்ச்சியடைகின்றது. மன்னார் மாதோட்ட கலை உலகளாவிய ரீதியிலும் வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே வேளையில், இவர் ஒரு சாதாரண உதவி ஆசிரியராக இருந்து நிகழ்ச்சிகளை ஆயத்தம் செய்து, இவரே இவற்றை நெறியாள்கை செய்து, இவருடைய உறவினர் சகோதரருடன் அரங்கேற்றம் செய்து, பல கல்விமான்களுக்கு நிகரான முறையில் செயற்பட்டவர். இவரது கலைப் படைப்புக்கள் மூலமாக மன்னார் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த மாபெரும் கலைஞர். இவரது படைப்பு பலதரப்பட்டவையாக இருந்தபோதிலும் இவருடைய நாட்டுக் கூத்துக்கள் மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவை. இவர் பல நாடகங்களை, நாட்டுக் கூத்துக்களை அரங்கேற்றம் செய்து பார்வையாளர்களின் நெஞ்சைக் கவர்ந்தவர்.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தை உருவாக்கி அதன்மூலம் கலையை வெளிக்கொணர்ந்து வழிகாட்டியவர். முத்தமிழ் கலாமன்றத்தின் எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்ததை காணக்கூடியதாக இருந்ததுடன் பார்வையாளர்கள், இரசிகர்கள் நிகழ்வு முடியும் வரை காத்திருப்பதுடன் பார்வையாளர்கள் பலரும் பாராட்டிச் செல்லும் வண்ணமாக நிகழ்ச்சிகளை வழங்கியவர். அத்துடன் பல கலாமன்றங்கள் உருவாகுவதற்கும் காரணமாக இருந்தவர்.

இவரது கலை ஆர்வம், கலைத்துறை ஈடுபாடு எவ்வாறு தோன்றியது என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது இவருடைய மூதாதையர்கள் பலர் புலவர்களாகவும் அண்ணாவிமார்களாகவும் இருந்து நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றியதை அவர்கள் வழிமரபில் சிறுவனாக இருந்த செபமாலை அவர்கள் பார்த்தும் கேட்டும் இவற்றைத் தாம் உள்வாங்கி இருந்ததுடன், இவர் சிறுவனாக இருந்த காலப்பகுதியில் புனித சந்தியோகுமையோர் நாடகத்தைப் பார்த்தும் நடித்தும் இரசித்தும் இருந்த இவர், இவ்வாறான கலைப்படைப்புகளை சமூகத்தில் கொண்டுவர வேண்டுமென்ற ஆசை இவரை கலைத்துறைக்கு இட்டுச் சென்றது.

இவரது கலை வளர்ச்சியில் இவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பு, உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் நாட்டுக்கூத்துக் கலையை உலகறியச் செய்தவர் கலைஞர் செபமாலை என்றால் அது மிகையாகாது.

கலைஞர் செபமாலை அவர்களின் சமூகத்தொண்டு பற்றிப் பார்க்கின்றபோது கலையில் காட்டிய ஆர்வம் போன்றே சமூக ஈடுபாடும் அமைந்து இருந்தது. இவர் பல சமூக அமைப்புகளை உருவாக்கியும் நிர்வகித்தும் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதுடன் இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்டவர். கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கலாமன்றங்கள், மாவட்ட மாகாண மன்றங்கள் போன்றவற்றில் அங்கம் வகித்து சமூகத் தொண்டு புரிந்தவர். இவர் பல்வேறு தமிழ் விழாக்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், ஆண்டு விழாக்கள் எனப் பலதரப்பட்ட விழாக்களை நடத்தி, பல அதிகாரிகள், புலவர்கள், புத்திஜீவிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ அமைச்சர்கள், அருட்பணியாளர்கள், ஆயர்கள் போன்றோரின் பாராட்டுதல்களைப் பெற்றவர்.

இன்று இவரது வழிமரபில் பல எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள், பல சங்கீத ஆசிரியர்கள், வாத்தியக் கலைஞர்கள் போன்றவர்கள் உருவாகுவதற்கு வழிசமைத்தவர். எனவே, நாம் அவர் ஆற்றிய கலைப்பணியைத் தொடர நாம் தமிழை நேசிப்போம். தமிழ்த் தாயை வணங்குவோம். தமிழ்த் தாயின் கலை வடிவத்தை பரப்ப ஆர்வமாய் தொண்டு புரிவோம். ■







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பற்றுள்ள பெருமகன் கலைஞர் குழந்தை



**செ. அல்பிறெட் சில்வா**
*இளைப்பாறிய தபாலதிபர்,*
*தலைமன்னார்.*
*மன்னார்.*

கலைஞர் குழந்தை அவர்களின் வரலாற்றுப் பாதையில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏராளம். எனினும் நான் அவரோடு உறவாடியது, பகிர்ந்துகொண்டது போன்ற ஓரிரு சம்பவங்களை நினைவூட்ட எனக்குத் தந்த இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த விளைகிறேன்.

1961ஆம் ஆண்டு தமிழினம் எழுச்சி கொண்டு சாத்வீகப் போராட்டம் நடத்திய ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. மன்னார் கச்சேரிக்கு முன் கலைஞர் குழந்தையும், குழுவினரும் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். அத்தருணத்தில், கலைஞர் குழந்தை அவர்கள் உருக்கமாக மனம் நெருகப் பாடிய பாடல்களில் லயித்து ஆனந்தக் கண்ணீர் சிந்தியவர்களில் நானும் ஒருவன். இந்நிகழ்வை யாம் மறக்கமுடியாது. இப்படிப் பல சம்பவங்கள் கலைஞர் குழந்தை அவர்களின் 'நா' வன்மையை மேலெழச் செய்தது.

1961இல் தலைமன்னார் பங்குத் தந்தையாக அருள்திரு. பௌற் கொன்ஸ்ரன்ரைன் இருந்தபோது தவக்காலத்தில் பசாம் வாசிப்பதற்கு புதிய மெருகில் பாட கலைஞர் குழந்தை அவர்களை நான் அணுகினேன். அப்போது மறுப்புச் சொல்லாமல் உடன்வந்து, பசாமை மூன்று புதிய மெட்டுக்களில் உருக்கமாகப் பாடி எம் பங்கை மெய்மறக்கச் செய்ததை இப்போதும் யாம் நினைவுகூர்கின்றோம்.

மேலும், கலைஞர் குழந்தையின் குடும்பமே கலை வரங்களினால் பொழியப்பெற்ற ஒரு குடும்பம் என்பதை நிரூபிக்கிறது அவர்களது நாடகமேடை. அவர்கள் பல மேடைகளில் அரங்கேற்றிய நாடகங்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவரது நாடகங்கள் எங்கெல்லாம் நடக்கின்றதோ அங்கெல்லாம் மக்கள் வெள்ளம் அலைமோதும், அதில் நானும் ஒருவன். எனவே, கலைஞர் குழந்தை அவர்களின் ரசிகன் என்பதைக் கூறிக்கொள்வதில் ஆசைப்படுகின்றேன், பெருமைப்படுகின்றேன்.

எனவே, கலைஞர் குழந்தை தமிழ் மண்ணின் மறக்கமுடியாத தமிழ் பற்றுள்ள பெருமகன். மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்கத் திருச்சபைக்கு இவர் ஆற்றிய பணிகள் ஏராளம். அது மட்டுமல்ல அவர் தன் குடும்பத்திலிருந்து திருச்சபைக்கு ஒரு மகனை வாரி வழங்கியிருக்கிறார். இவர்தான் அருள்தந்தை அன்புராசா. இவர் ஒரு பிரபல பிரசங்கியாக அமலமரித் தியாகிகள் சபையில் சிறப்பாக பணிபுரிகிறார். தனது தந்தையின் அடிச்சுவடுகளின் வாரிசாக இருக்கும் இவர் எமது பங்கில் 1998இல் திரு. பாலச்சந்திரனுடன் இணைந்து மேடையேற்றிய திருப்பாடுகளின் காட்சி (பாஸ்) இவரின் கலைத்திறனுக்கு ஒரு சான்றாகும்.

கலைஞர் குழந்தை அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இம்மண்ணுக்கும் எம் இனத்துக்கும் பெருமை தேடித்தர எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன். கலைஞர் குழந்தை அவர்களின் பணிகளின் ஆய்வேட்டுக்கு எழுதும் வாய்ப்பை எனக்குத் தந்ததவிய அருள்தந்தை தமிழ்நேசனுக்கு நன்றிகூறி நிறைவுசெய்கிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்திசைக் காவலர் விருதும் பாராட்டு விழாவும் !




**பாரிஸிலிருந்து**
**வண்ணை தெய்வம்**

**இ**ந்த உலகத்தில் கலைகள் இல்லா விட்டால் மனிதர்கள் ஆதிவாசிகளாகவே இருந்திருப்பார்கள். கலைகளில் பல வடிவங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் கூத்துக் கலை. எங்களது பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் தெய்வ சிந்தனைகளையும் இந்தக் கூத்துக் கலை மூலமாகப் பண்டைக்காலம் முதல் இன்று வரை நமது கலைஞர்கள், மக்கள் மத்தியில் எடுத்துரைத்து வருகின்றார்கள்.

இன்னமும் நாகரிகத்தை முழுமையாகத் தொட்டுவிடாமலும், கிராமத்து வாசனைகளைத் தொலைத்து விடாமலும், தமிழர்களின் பண்பாடுகளையும், கலாசாரங்களையும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் கிராமத்தில், வாழையடி வாழையாக கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் குடும்பத்தில் இருந்து வந்தவர்தான் நாட்டுக் கூத்து விற்பன்னர் 'கலாபூஷணம்' குழந்தை செபமாலை.

கடந்த ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாக, கலைப்பணியாற்றி, கூத்துக் கலையைக் காத்து வரும் இவருக்கு, கடந்த ஓகஸ்ட் பதினாறாம் திகதி ஞாயிறன்று, பாரிஸ் வாழ் கலைஞர்களால் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில், ஐரோப்பியக் கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சார்பில் 'கூத்திசைக் காவலர்' என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

செபமாலை - றோஸ்மேரி கலைத் தம்பதியினரை, கலைஞர்கள் ஊர்வலமாக அழைத்துவர பாரிஸில் வாழ்ந்து வரும் இன்னொரு கலைத் தம்பதிகளான பிரியாலயம் துரைஸ், வளர்மதி தம்பதிகள் சந்தன மாலை அணிவித்துச் சிறப்பித்தனர். நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார் 'சூரியக்குரலோன்' ஜஸ்றின். இரண்டு அரங்குகளாகப் பிரித்து நடத்தப்பட்ட இப்பாராட்டு விழாவின் முதலாவது அரங்கிற்கு, இலங்கையில் 'நிர்மலா', 'தெய்வம் தந்த வீடு' போன்ற பல திரைப்படங்களில் நடித்தவரும் அமரர் கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகப் பட்டறையில் வளர்ந்தவருமான மூத்த கலைஞர் ஏ.ரகுநாதன் தலைமையேற்க, இலங்கை வானொலியின் முன்னாள் கிராமிய சஞ்சிகை நிகழ்ச்சியின் பொறுப்பாளரான டேவிற் ராஜேந்திரன், திருமறைக் கலாமன்றத்தின் பிரான்ஸ் கிளைத் தலைவர் டேமியன் சூரி, பிரபல எழுத்தாளர் தமிழ்ப்பிரியா ஆகியோர் கலைஞர் குழந்தையின் சிறப்புக்களைக் கூறி வாழ்த்துரை வழங்கினார்கள்.

தொடர்ந்து, ஐரோப்பியக் கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சார்பில், அதன் செயலாளர் கே.பி.லோகதாஸ் வாழ்த்துப்பாவைப் பாடினார். பின், லோகதாஸூம் மன்றத்தின் தலைவர் வண்ணை தெய்வமும் இணைந்து, குழந்தைக்கு 'கூத்திசைக்காவலர்' என்னும் பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். இவ்வரங்கிலேயே, குழந்தையின் சிறப்புக்களை எடுத்தியம்புவதாக வெளியிடப்பட்ட 'மன்னார் பெற்றெடுத்த குழந்தை' என்னும் சிறப்பு மலரை, விழாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் ரகுநாதன் வெளியிட, விழா நாயகன் குழந்தை செபமாலை பெற்றுக் கொண்டார். நிகழ்வின் இரண்டாவது அரங்கிற்கு 'கலைஞர் காவலர்' வண்ணை தெய்வம் தலைமையேற்க, பிரபல கலைஞர் அப்புக்குட்டி ராஜகோபால், பாரிஸ் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த பாரிஸ் பார்த்தசாரதி, இரா.குணபாலன், ரி.தயாநிதி, திருமதி. வினோதினி ஸ்ரீதரன் உட்பட, இன்னும் பல கலைஞர்களும், கலை மன்றங்களைச் சார்ந்தவர்களும் வாழ்த்துரை வழங்கியதோடு, ஜஸ்ரினின் தொகுப்பிலே உருவான குழந்தை செபமாலையின் கலைத்துறைப் பதிவுகள் அடங்கிய ஒளிப்படமும் அரங்கத்திலே திரை யிடப்பட்டது.

இன்றைய தலைமுறைக் கலைஞர்களில் பெரும்பாலானோர் நாட்டுக் கூத்துக் கலையைக் கற்றுக் கொள்ள முன்வருவதில்லை. காரணம், கூத்து நாடகங்களில் ராகம் தவறாமல், உச்சதொனியில் பாடுவதோடு, தாளம் தவறாமல் ஆடவும் வேண்டும். இதனால், அத்திபூத்தாற் போல் மிகச் சிலரே இந்தக் கூத்துக் கலையைக் கற்றிருக்கின்றார்கள். அவர்களில் பாரிஸில் வாழ்ந்து வரும் குழந்தை செபமாலை தம்பதியினரின் பிள்ளைகளான ஆனந்தன், இன்பம் ஆகிய இருவரும் தந்தை யாரிடம் இக்கலையைப் பழகி, சந்தர்ப்பம் கிடைக்கும் போது பாரிஸிலும் கூத்திசை நாடகங்களை மேடையேற்றி வருகின்றார்கள். அதை நிரூபிக்கும் விதமாக 'அசலும் நகலும்' என்ற நிகழ்ச்சியில் தந்தை குழந்தை, தான் முன்னர் நடித்த கூத்திசை நாடகங்களில் இருந்து சில பாடல்களைப் பாட, அவரது புதல்வர்கள் சேர்ந்து பாடியும், பக்கவாத்தியம் வாசித்தும், பார்வையாளர்களைக் கவர்ந்தனர். விழா முடிந்து சென்ற ஒவ்வொருவருக்கும், ஒரு உண்மைக் கலைஞனை கௌரவித்த திருப்தி ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ■

**நன்றி: வீரகேசரி, செப்டெம்பர் 25, 2009**





கூத்திசைக் காவலர் பாராட்டுவிழா - 2008, பாரிஸ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுவாரோடு அழுது மகிழ்வாரோடு மகிழ்பவர்



ம. சவிரி
மறையாசிரியர்,
உயிலங்குளம்,
மன்னார்.

குழந்தை ஆசிரியரை பல வருடங்களாக எனக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட காலமாகத்தான் நான் அவரோடு நெருங்கிப் பழகியுள்ளேன். அவர் சிறந்த நடிகன். ஆனால், வாழ்க்கையில் நடிக்கமாட்டார். எதையும் திறந்த மனதோடு நேரடியாக தயக்கமின்றி கூறிவிடும் சுபாவமுள்ளவர். அவர் தனது ஆசிரியப் பணியோடும், குடும்பப் பொறுப்புகளோடும் இடைவிடாத தேடலின் நிமித்தம் சிறந்த கவிஞனாக சிறந்து விளங்குகின்றார் என்று மிக லேசாக பலர் கூறிவிடுவார்கள்.

அது சரியான விடையாகத் தெரிந்தாலும், அதைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு பரித்தியாகங்கள், கண்விழிப்புகள், பல ஏச்சுப் பேச்சுக்கள் போன்ற சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பார். கற்ப வேதனையின் நிமித்தம் பெற்ற குழந்தைபோன்று குழந்தை ஆசிரியர் தற்போதைய நிலையில் இருப்பதற்கு அவருடைய தன்னம்பிக்கை, இடைவிடாத முயற்சியே காரணமென நான் உணருகிறேன்.

குழந்தை ஆசிரியர் தான் சார்ந்த சமூகத்தை, கலை கலாசாரத்தில் விழிப்படைய வைத்துள்ளார் என்றால் அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன். முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் அமைத்து பல போட்டி நாடகங்களை ஆயத்தம் செய்து கிராம, மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியில் பல தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார் என்பதை பலர் அறிவார்கள்.

அவரின் படிப்புக்களை, நடிப்புக்களை, சுவாரசியமான பேச்சுக்களை சிறு பராயத்திலிருந்து வாலிபப் பருவம் வரை கண்டு களித்துள்ளேன். புன்சிரிப்புள்ள முகபாவனை கொண்டவரானாலும் அவர் நடிக்கின்ற பாத்திரத்துக்கு ஏற்ற வகையில் தோற்றம் மாறுவார். யதார்த்தமாக நடிப்பார். பல மேடைகளில் ஏறி இறங்கியவர்.

நீண்டதூர பிரயாணங்கள் மத்தியிலும் பலரைச் சந்தித்து அவர்களை நண்பராக்கி தனது திறமைகள், கொள்கைகளை பகிர்ந்த சந்தர்ப்பங்களை அவரது மேடைப் பேச்சின் மூலம் நான் அவதானித்துள்ளேன். தான் சார்ந்த சமூகத்திற்கு, தமிழுக்கு, சமயத்திற்கு அளப்பரிய சேவைகளைச் செய்து பல பாராட்டுக்களை, வாழ்த்துக்களை, பல கௌரவிப்புகளை, பல பொன்னாடை போர்த்தல்களைப் பெற்றுள்ளார். குழந்தை ஆசிரியர் என்றால் பல சமூகத்தினரின், சமயத்தினரின் மனங்களைக் கொள்ளை கொண்டவர். எல்லோருக்கும் பிரியமானவர். எல்லா மக்களையும் பிரியமாக நேசிப்பவர்.

எங்கு சென்றாலும் இன்ப துன்ப நிகழ்வுகளுக்கு அழைப்பு கிடைத்தால் போதும் அதை எவ்விதத்திலும் அலட்சியப்படுத்தாது, இறைவார்த்தையில் குறிப்பிட்டபடி அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு மகிழும் மனப்பாங்கு கொண்டவர். எனவே, ஊருக்கு உழைத்தவன் இறப்பதும் அல்ல, உலகம் அவனை மறப்பதுமல்ல என தத்துவ ரீதியாக வாழ்த்தி எனது வரைதலை நிறைவு செய்கிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தான கலைஞர் குழந்தை எம் கிராமத்தின் சொத்து



**அ.ஜீட் புனிதராஜ்**
*முருங்கன்,*
*மன்னார்.*

**"நேற்றைய** பதிவுகள் இன்றைய வரலாறு, அதேபோல் இன்றைய பதிவுகள் நாளைய வரலாறு". இதன் அடிப்படையில் உயிர்வாழும் ஒவ்வொரு மனிதனும் மானிடத்தின் ஒரு வரலாற்றுப் புத்தகம் எனலாம். பதிவுகளற்ற மனிதனின் வரலாறு அவனது மறைவோடு இறந்து விடுகிறது. வரலாற்று உண்மைகள் சிலரின் மறைவோடு உறங்கிவிட்டால் நாளைய தலைமுறையினர் வரலாறு அறியாதவர்களாய், உண்மை தெரியாதவர்களாய் ஏமாற்றத்தையே கண்டு கொள்வார்கள். இந்த வகையில் நசுக்கப்பட்டட ஒரு சமூகத்தின் சமூக வரலாற்றை பதிவுசெய்வது காலத்தின் தேவையாக உள்ளது. அருட்பணி. செ. அன்புராசாவின் பெருமுயற்சியினால் உருவாகும் கலாபூஷணம் செபஸ்தியான் செபமாலை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கூறும் இந்நூலுக்கு பங்களிப்பு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

இவரைப் பற்றிய அனுபவங்களை அல்லது தகவல்களை நான் எமது ஊரின் பெரியவர்களிடமும், எனது அனுபவ வாயிலாகக் கண்டுகொண்ட உண்மைகளையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

கலாபூஷணம் செபஸ்தியான் செபமாலை 1940ஆம் ஆண்டு பங்குனி மாதம் 08ஆம் திகதி திரு திருமதி. செபஸ்தியான் செபமாலை தம்பதிகளின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். முருங்கன் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தனது கல்வியை நிறைவுசெய்த இவர் தனது ஆசிரிய பயிற்சியை கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்து ஆசிரியராக வெளியேறினார். இவரது கலைப் பயணம் பாடசாலைக் காலத்திலே உருவெடுத்தது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இவரது தந்தையார் அமரர் மரியான் செபஸ்தியான். இவர் நன்கு மத்தளம் வாசிக்கும் ஓர் அண்ணாவியார் ஆவார். அத்தோடு கலாபூஷணம் அவர்களின் சகோதரர்களும் கலையிலே நன்கு ஆர்வமுள்ளவர்களாக காணப்பட்டனர்.

கலாபூஷணம் செபமாலை அவர்கள் எமது சமூகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம். கலைஞர் குழந்தை எனும் பெயரில் உருவெடுத்த இவரே எமது சமூகத்தின் முதல் அரச உத்தியோகம் என்ற நிலையை எய்தியவர். இத்தகைய நிலையை அடைய சில விஷமிகளால் பல தடைகள் இவருக்கு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவற்றை எல்லாம் கடந்து அடக்கி ஒடுக்கப்பட்ட இனத்திற்கே பெருமை சேர்த்தவர். இவருக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த எமது பெரியார்களும் கல்வியில் சிறப்பு மிக்கவர்களாக காணப்பட்டாலும் அரச உத்தியோகம் என்ற நிலையை அடைந்தவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஆசிரியராகப் பல இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றி உள்ளார். தாம் பணிபுரிந்த இடங்களில் எல்லாம் தனது கலைச் சேவையை ஆற்றியுள்ளார். குறிப்பாக முருங்கன் பாடசாலையில் இவர் கல்வி கற்பிக்கும் காலத்தில் தனது நெறியாள்கையில் உருவான பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். தமிழ்மொழித்தினம், ஒளிவிழா, இலக்கியவிழா, வரவேற்புவிழா, பாராட்டுவிழா, பரிசளிப்புவிழா என பல நிகழ்வுகளில் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். எனது பாடசாலைக் காலத்தில் இவர் நெறியாள்கையில் உருவான பல நாடகங்களிலும், போட்டி நாடகங்களிலும் நான் பங்கேற்றுள்ளேன். கோட்டம், மாவட்டம், மாகாணம் வரை சென்று வெற்றி பெற்றுள்ளோம்.

பாடசாலைக்காலம் என்னும்போது இன்னொரு விடயமும் ஞாபகம் வருகின்றது. கல்வி கற்பிக்கும் காலத்தில் பிழை செய்யும் மாணவர்களுக்கு இவர் கொடுக்கும் தண்டனை விநோதமானது. கைகள் இரண்டையும், ஒரு காலையும் தூக்கிக் கொண்டு நிற்க வேண்டும். இதனைவிட பிழை செய்தவரின் தலையை கையால் தடவிக்கொண்டே "சோக்கான உருண்டைத் தலை" என பிடரியிலே லேசாக தட்டுவார். இப்படி வேடிக்கையான சம்பவங்களைச் சுட்டிக்காட்டி இன்றும் நாம் சிரிப்பதுண்டு.



ஆசிரியராக, பிரதிஅதிபராகப் பணியாற்றி, அதிபராகப் பதவி உயர்வு பெற்று கற்கடந்தகுளம் பாடசாலையில் சேவையாற்றிய பின் ஓய்வு பெற்றுள்ளார்.

நாம் தனித்து இயங்கி செயற்பட ஒரு மன்றம் வேண்டும் எனும் ஓர் அவா இவர் மனதில் நெடுங்காலமாய் இருந்தது. அதனை நிறைவு செய்யும் வகையில் 1964ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே முருங்கன் முத்தமிழ் கலாமன்றம். இம்மன்றம் மூலம் பல நிகழ்வுகளை கலைஞர் அவர்கள் 50 ஆண்டு களுக்கு மேலாக படைத்து வந்துள்ளார்.

இறைபக்தி நிறைந்தவர் என்பதற்கு இவர் சிறந்த எடுத்துக்காட்டு. எந்த நாடக நிகழ்ச்சி என்றாலும் அது போட்டி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது சிறப்பு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி நடிப்பவர்கள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு அருகில் இருக்கும் யாகப்பர் கோவிலுக்குச் சென்று வழிபட்ட பின்பே நிகழ்விற்கு செல்வது வழக்கம். இதைவிட தான் எங்கும் தூரப்பயணம் செல்வது என்றாலும் அல்லது எந்த ஒரு விடயத்தை செயற்படுத்துவது என்றாலும் கோவிலுக்கு சென்ற பின்பே அதனைத் தொடர்வார். அண்மையில் கூட எமது சமூகம் சார்ந்த ஒரு விடயம் பற்றி கதைக்கும் போது அவர் என்னிடம், "நீங்கள் பயப்பட வேண்டாம். கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டு செல்லுங்கள் எல்லாம் நன்றாக நடக்கும்" எனக் கூறினார். உடல் நிலை சற்று பாதிக்கப்பட்ட நிலையிலும் இன்றும் கூட மாலை வேளைகளில் கோவிலுக்குச் செல்வதை இவர் வழக்கமாக கொண்டுள்ளார். இது இவரது இறைபக்திக்கு ஒரு சான்றாகும்.

கலாமன்றம் அமைத்து செயற்பட்டது போன்றே எமக்கென ஒரு சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், சென். ஜேம்ஸ் ஐக்கிய நாணயசங்கம், சர்வோதய சங்கம் எனப் பல அமைப்புக்களை இவர் உருவாக்கினார். இவ்வுருவாக்கத்திற்குப் பலர் இவரோடு இணைந்து செயற்பட்டார்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் எனது தந்தையார் அமரர். திரு. ப. அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்) அவர்கள் கலைஞர் குழந்தை அவர்களின் மருமகன். மாமன், மருமகன் என்ற உறவைக் கடந்து எந்த விடயம் என்றாலும் இருவரும் கலந்தாலோசித்தே முடிவு எடுப்பார்கள். அவரது காலப்பகுதியில் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையேனும் எமது வீட்டிற்கு பெத்தையா (கலைஞர் குழந்தை) வந்து சமூக விடயம் பற்றியும், இன்னும் பலவேறு விடயம் பற்றியும் கலந்தாலோசிப்பார்கள். இது நான் நேரில் கண்ட ஒரு அனுபவமாகும். எனது தந்தையார் கூட தனது இளமைக்காலத்தில் இவரோடு சேர்ந்து பல விடயங்களுக்கு பக்கபலமாக நின்று செயற்பட்டதாக என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

பல அமைப்புக்களை இவர் உருவாக்கினாலும் கூட்டங்களை கூட்டுவதற்கு ஒரு கட்டடம் தேவை என்பதை உணர்ந்து பல்வேறு முயற்சியின் காரணமாக அமையப்பெற்றதே மத்திய கிராமியஅபிவிருத்தி சங்கக் கட்டடமும், திறந்தவெளி அரங்கமும் ஆகும். எமது கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக இலக்கியவிழா, சனசமூகவிழா, நூல்வெளியீட்டுவிழா, தமிழ்விழா, வயல்விழா என பல விழாக்களை இவ்வரங்கத்தில் நிகழ்த்தினார். கலைஞர் அவர்கள் தனது சொந்த முயற்சியில் உருவான 'நாம்' என்ற மலரை இவ்வரங்கத்தில் வெளியிட்டுவைத்தார். இவ்விழாக்களில் கலைஞர்கள், எமது ஊரின் பெரியார்கள், எமது கிராமத்தை சூழ உள்ள பெரியவர்கள், சமூக ஆர்வலர்கள் என்போர் அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு எமது கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறந்த வீர, வீராங்கனைகளாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் சனசமூக நிலையத்தினால் ஊக்குவிப்புப்பணமும், பாராட்டும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



இத்தகைய விழாக்கள் மூலம் இலைமறை காயாக இருக்கிறவர்களை இனம்கண்டு அவர்கள் திறமைகளை வளர்க்க காரணமாக இருந்துள்ளார். எமது கலாமன்றத்தைச் சேர்ந்த சீமான். யோவான் என்பவர்கள் கலை, பண்பாட்டுக்கழகத்தினால் சிறந்த நடிகர் என விருது பெற்றமைக்கு இவரே மூலகாரணமானார். எதனையும் நேர்த்தியாக செய்யும் பண்பு இவரிடம் காணப்பட்டது. நாடகங்களை பழக்குகின்றபோது என்னால் செய்யமுடியாது. வேறுயாரையும் பழக்குங்கள் எனக் கூறுபவர்களைக் கூட 'உன்னால் முடியும்' எனத் தட்டிக்கொடுத்து இப்படிச் செய்ய வேண்டும் என தானே பலமுறை ஆடி அவர்களை பழக்கிவிடுவார்.

இவ்வாறு இவரது நெறியாள்கையின் கீழ் செயற்பட்டவர்கள் இன்று பல்வேறு கோணங்களில் தமது கலைத்துறையை ஆற்றி வருகின்றனர். குருக்களாகவும், துறவிகளாகவும், சங்கீத ஆசிரியர்களாகவும், நாடக அரங்கியல் ஆசிரியர்களாகவும் இன்னும் பல துறைகளில் தமது கலைச் சேவையை ஆற்றி வருகின்றனர். குருக்கள் துறவிகளாக இருந்தும் இறைபணியோடு கலைப்பணியையும் ஆற்றி வருகின்றார்கள் என்பது பாராட்டத்தக்கதொன்றாகும்.

இவரைப் பற்றிய சில நகைச்சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களும் உண்டு. "நடையினில் என்னைப் போலவே வல்லோர் இந்த நாட்டினிலே யாரும் உண்டோ" என்பது போன்று இவரோடு யாரும் நடக்க முடியாது. நடையினில் யாரும் இவரை வெல்ல முடியாத அளவிற்கு வேகமாக நடப்பார். இவரோடு செல்பவர்கள் இவர் பின்னே ஓட்டமும் நடையுமாகவே செல்வார்கள். நிகழ்வுகளிற்கு கூட்டிச் செல்பவர்களை கடைகளிற்கு கூட்டிச்சென்று தேநீர் வாங்கிக் கொடுப்பது இவர் வழக்கம். தேநீர் எவ்வளவு சூடாக இருந்தாலும் 'பூ' என ஊதி வேகமாக குடித்து விட்டு எல்லோருக்கும் முன்பே கிளம்பி, கணக்கை முடித்தபின் கிளம்பி விடுவார். மற்றவர்கள் அரைவாசி தேநீரை வைத்துவிட்டு பின்னே செல்வார்கள்.

சிறந்த நேரமுகாமைத்துவத்திற்கு ஒரு முன்னுதாரணம். நிகழ்வு தொடங்குவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பே எல்லோரையும் தயாராக வைத்து விடுவார். நிகழ்வு தொடங்கப்பட்டதும் தமக்கென வழங்கப்பட்ட நேரத்திற்கு அமைவாக கலைநிகழ்வுகள் விறுவிறுப்பாகவும், சிறப்பாகவும் செய்து முடிப்பவர். முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் ஒரு நிறுவனமாக எதிர் காலத்தில் செயற்பட வேண்டும் என்னும் அவா இவர் மனதில் நெடுநாள் உள்ளதாக நேர்காணல்கள் மூலம் அறிய முடிந்தது.

இதனைவிட 25 வருடங்களுக்கு மேலாக புனித யாகப்பர் ஆலயசபையின் உபதலைவராகவும், 35 வருடங்களுக்கு மேல் மத்திய கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகவும், சென் ஜேம்ஸ் சிக்கன கடனுதவிச் சங்க தலைவராகவும், 40 வருடமாக ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் செய்த சமூக சேவையின் அடிப்படையில் இவருக்கு "சமாதான நீதவான்" என்னும் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்திற்கு புதுமெருகூட்டிய பெருமை கலைஞர் குழந்தை அவர்களையே சாரும். இவரது இத்தகைய முயற்சி மூலமே முருங்கன் என்ற ஊர், மன்னார் மாவட்டம் வெளி உலகிற்கு தெரிய வந்தது. கலைஞர் **ஒரு முத்து** எங்கள் கிராமத்தின் **பெரிய சொத்து**. இன்றும் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் இவரது வாழ்வு கலைக்கென அர்ப்பணிக்கப்பட்ட பெருவாழ்வாகும். இக்கலைஞனின் அதீத உழைப்பிற்கு முருங்கன் வாழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களே.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி
அவையத்து
முந்தியிருப்பச்செயல்"

தந்தையாக இருந்து தன்பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை கலாபூஷணம் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

"மகன் தந்தைக் ஆற்றும் உதவி
இவன் தந்தை
என்னோற்றான் சொல் எனும் சொல்"

மகனான இருந்து தம் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றி தம் தந்தையைப் பற்றி நூலினை வெளிக்கொணரும் அருட்பணி அன்புராசா அ.ம.தி அவர்களின் இம்முயற்சி காலத்தால் போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

எனவே, இச்சந்தர்ப்பம் அளித்த அருட்பணியாளருக்கு நன்றி கூறுவதோடு நேர்காணலில் தகவல்களை வழங்கிய திருமதி. செ. றோஸ்மேரி, திரு. ப. தேவராசா அவர்களுக்கும் நன்றிகூறி நிற்கின்றேன். ■

"யாமறிந்த மொழிகளிலேதமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்"

– பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்ததொரு தலைவன்



**ப.றெனாட் தயானந்தன்**
*வியாபார அபிவிருத்தி அலுவலர்,*
*'பிறவுன்ஸ்' கொம்பனி,*
*மன்னார்.*

ஒரு தலைவன் என்பவன் ஒரு கிராமத்தின் அல்லது நாட்டின் மக்களை வழிநடத்தி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று அதன் வழியாக அந்த கிராமத்தினை முன்னேற்றம் அடைய வைப்பது சிறந்த தலைவனுக்குரிய பண்பாக காணப்படுகின்றது. அந்த வகையில் குழந்தை அவர்கள் எங்கள் பெத்தப்பா. எமது கிராமத்தில் அனைத்து மக்களையும் வழிநடத்தி அவர்களுக்குத் தகுந்த துறைகளை தெரிவு செய்ய வழிப்படுத்தி மக்களின் அன்பினை பெற்றவராக காணப்படுகின்றார். அத்தோடு அம்மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அனைத்துத் துறைகளிலும் எமது கிராமம் முன்னிலையில் திகழ்வதற்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர். இவருடைய திறமைகளை அதாவது தலைமைத்துவ உத்திகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

தலைவனானவன் தன்னுடைய விருப்பத்தோடு பிறரது கருத்துக்களை செவிமடுப்பவனாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கிணங்க பெத்தப்பா அவர்கள் முன்னேற்றத்துக்கான தனது கருத்தையும் கிராம மக்களின் கருத்துக்களையும் கொண்டு தனது தலைமைத்துவத்தை நிலைநாட்டினார். இச்செயற்பாடானது முருங்கன் மத்திய கிராம மக்களாகிய எமக்கு பாரிய வெற்றியை தந்துள்ளது. உதாரணமாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், ஆலய சபை, கிராம அபிவிருத்தி சங்கம், ஐக்கிய நாணய சங்கம், சிக்கன கடனுதவி கூட்டுறவு, சர்வோதய சிரமதான சங்கம் போன்றவைகள் இன்றும் சிறப்பான முறையில் இயங்குவதற்கு காரணம் பெத்தப்பாவின் உறுதியான அடித்தளமே ஆகும்.

பாரபட்சம் பாராது ஏற்றத்தாழ்வு இன்றி அனைவரோடும் உரையாடுகின்ற ஒரு பண்பு பெத்தப்பாவிடம் அதிகமாகக் காணப்பட்டது. அதனால் அவர் இலகுவில் அனைத்து மக்களையும் புரிந்து கொள்ளும் திறமையை இயல்பாகவே வலுவாக்கிக் கொண்டார். இதனால் இவ்வூரில் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் யாரை எவ்வாறு அணுகுவது என்று அவருக்கு தெரிந்திருந்தது. இதனால் அனைத்து நிர்வாகமும் சிறப்பாக இடம்பெற்றது.

மேலும் இவருடைய நிர்வாகத் துறையில் பேச்சாற்றல் ஒரு தனித்துவத்தை வகிக்கின்றது. ஒருவரின் பேச்சாற்றலை வைத்துக் கொண்டு அவருடைய மனத்திடத்தை அறிந்து கொள்ளலாம். பெத்தப்பாவின் திடமான பேச்சானது ஒவ்வொருவரிடமும் உள்ள இயல்பான திறமைகளை வெளிக்கொணர்வதற்கு அடிகோலாய் இருந்தது. இதனாலே முத்தமிழ் கலாமன்றமானது மாபெரும் கலைஞர்களை இச்சமூகத்திற்கு ஈன்றெடுக்கக் காரணமாய் அமைந்தது. உதாரணமாக, கலாபூஷணம் செ.மாசிலாமணி, வாத்தியக் கலைஞன் இயேசுதாசன், ஆனந்தன், இன்பராஜா, கிராமசேவையாளர் குணசீலன், அருட்பணி அன்புராசா, அருட்பணி விமல்ராஜ், அருட்பணி தமிழ்நேசன், அருட்பணி நிர்மலராஜ், அதிபர் திரு.ப.சந்தியோகு, சீ.யோவான் (சிறந்த நடிகர்) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தலைமைத்துவத்தின் அடுத்த பண்பு செய்திப்பரிமாற்ற முறையாகும். ஒரு தலைவனானவன் ஒரு செய்தியை வெளியிடுகின்றவேளை அதை அனைவரும் அறிய வேண்டும் எனவும் அச்செய்தியை அறிய வைக்க அத்தலைவனுக்கு இயலுமையும் இருக்க வேண்டும். பெத்தப்பா தான் எந்தச் செயற்பாட்டை செய்வதாக இருந்தாலும், அல்லது நிர்வாகக் கூட்டங்களை கூட்டுவதாக இருந்தாலும் அறிவித்தல் கொடுப்பதில் மிகவும் கைதேர்ந்தவராகக் காணப்பட்டார். ஏனென்றால் சில சந்தர்ப்பங்களில் நானும் சந்தர்ப்ப சூழ்நிலையில் மாட்டிக்கொண்டதுண்டு. எவ்வாறென்றால் தன்னுடைய அறிவித்தல் விடயத்தை தந்து அனைவரிடமும் தெரியப்படுத்தப் பணிப்பார். அறிவித்தல் கொடுக்க தவறும்பட்சத்தில் தானே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவ்வாறாக செய்திப் பரிமாற்றத்தை சில உத்திகளோடு கையாண்டார்.

ஒரு தலைவன் பொறுப்புக்களை முழு அளவில் தாங்கத் தயாராக இருக்க வேண்டும். இப்பண்பு ஒரு தலைவனின் அதிசிறந்த பண்பாகக் காணப்படுகின்றது. இப்பண்பு எனது பெத்தப்பாவில் காணப்பட்டதற்கு சில உதாரணங்கள் முன்வைக்கின்றேன். நாங்கள் இன்றும் பல தேவைக்காக பயன்படுத்தப்படும் பொது நோக்கு மண்டபம் உருவாவதற்கு முழுப் பொறுப்பையும் எனது பெத்தப்பா ஏற்றுக் கொண்டார். பொது மண்டபம் வேலைப்பாடு முடிவடையும் போது வரவிற்கும் செலவிற்கும் அதிக இடைவெளி காணப்பட்டது. எவ்வாறான பிரச்சினை ஏற்பட்டாலும் பொது மண்டபம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தமையால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களையும் சீராக நிறைவேற்றினார். இச்சந்தர்ப்பமானது நான் நேரில் கண்ட காட்சி போன்று நடைபெற்று முடிந்தது.

மேலும் இவர் பல்வேறு வகையான எதிர்ப்புக்களையும் சவால்களையும் வென்றவராகவும் காணப்படுகின்றார். ஏனென்றால் ஒரு உண்மையான தலைமைத்துவம் உள்ள தலைவனுக்கே பிரச்சினைகளும் விமர்சனங்களும் ஏற்படும். ஏனென்றால் பெத்தப்பா பல்வேறு பிரச்சினைகளையும், விமர்சனங்களையும் சந்தித்து இருக்கின்றார். ஆலய கூட்டங்களிலோ, நிர்வாக கூட்டங்களிலோ, ஒரு நாடக உருவாக்கத்தின்போதோ, அதை நிகழ்த்துகின்ற போதோ இவர் அத்தார்ப்பரியத்தை சந்தித்தவராக காணப்படுகின்றார். ஒரு நாடகம் என்பது கூட்டுக் கலையாகும். அதாவது ஒரு நாடகம் மேடை ஏறுவதற்கு நெறியாளன், இசையமைப்பாளன், ஒலி ஒளி அமைப்பாளன், நடிகன் போன்றவர்களோடு ஒரு நாடக நெறியாளனாக இவர் எத்தனை பிரச்சினை, விமர்சனங்களை சந்தித்திருப்பார் என்பது வியப்புக்குரிய விடயமாகும்.

மேலும் தலைமைத்துவத்தின் அடுத்த கட்டமாக தன்னைப்போல மற்றவர்களை வளர்த்தது சிறந்த விடயமாகும். தான் கலையில் சிறந்த ஆர்வம் உடையவர் என்பதை வெளிக்காட்ட எங்களுக்கும் அவ்வறிவைப் பகிர்ந்தார். ஒவ்வொருவரையும் உறுதியான கலைஞர் ஆக்கினார். ஒரு தலைவன், பிறர் தன்னை உதாரணம் காட்டி நடக்கக் கூடியவாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையை எம்மத்தியில் வளரச் செய்தார்.

இவரின் இன்னுமொரு மிகச்சிறந்த பண்பு நேர முகாமைத்துவமாகும். பெத்தப்பா இன்று தலைசிறந்த தலைவராக மிளிர்வதற்கு காரணம் ஆரம்பகாலத்தில் இருந்து கடைப்பிடித்து வந்த நேரமுகாமைத்துவமாகும். நிர்வாகக் கூட்டம் என்றாலும் சரி, நாடக நிகழ்வுகள் என்றாலும் சரி குறிப்பிட்ட நேரத்தில் அங்கு சமுகமளிப்பார். இதுவே, இவரில் ஒரு சிறந்த தலைவராகுவதற்கு வழிகாட்டியாக இருந்தது. அவர் இப்பண்பை தன்னோடு மாத்திரம் நிறுத்தாது ஏனையவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எங்களுக்கும் அவ்விடயத்தை உணர்த்துவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனவே மேற்கூறிய விடயங்களை வைத்துப் பார்க்கின்றவேளை எனது பெத்தப்பா என்னுடைய கிராமம் வளர்ச்சியடைவதற்கு அனைத்து வழிகளிலும் ஒரு சிறந்த தலைவராக வழிநடந்து சென்றுள்ளார் என்பதை இந்நேரத்தில் கூறி நிற்கின்றேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தை மாற்றும் 'குழந்தையின்' சிந்தனைப் புரட்சி




யா. பெஞ்சமின்
ஒய்வுபெற்ற உதவி அரச அதிபர்,
மூத்த மறைப்பணியாளர்,
மன்னார்.


கலைஞர் குழந்தை என அழைக்கப் படுகின்ற ஆசிரியர் செ.செபமாலை அவர்கள் மன்னார் மண்ணின் சொந்தக்காரர். இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழ் கலையார் வத்தால் இந்த மண்ணில் மட்டுமன்றி எந்த மண்ணிலும் எல்லோர்க்கும் அறிமுகமானவர். இனிமையான குரலாலும், எழுத்து வன்மை யாலும், நடிப்பாற்றலாலும் எல்லோர் மனங் களிலும் இடம்பிடித்துக் கொண்டவர்.

சாஹித்திய விருது, கலாபூஷண விருது, ஆளுநர் விருது, தலைக்கோல் விருது எனப் பல்வேறுபட்ட விருதுகளின் சொந்தக்காரன். அமைதியான சுபாவமும், ஆழமான சிந்தனை யும் கொண்ட இந்தச் சிற்பி, பலவித கலை வடிவங்களின் உரிமையாளன். நாட்டுக்கூத்து என்கிற கலைவடிவத்திற்கு புதுமெருகூட்டி; எந்த மதத்தையோ சமுகத்தையோ புண்படுத்தாத வகையில்; மரபுகளுக்குட்பட்டு, ஆபாச மின்றி அழகுற வடிவமைத்துக் கொடுத்து 'மன்னார் நாட்டுக் கூத்து' மறுமலர்ச்சி பெற காரண ரானவர். சரளமாக தமிழ் பேசும் சிறந்த மேடைப் பேச்சாளன். புகழ் என்கிற பெருமை சேரச்சேர பொறுமையோடும் பண்போடும் சகஜமாகப் பழகி நட்பிற்கு இலக்கணம் வகுத்தவர்.

ஆன்மீகப் பற்றுள்ள கத்தோலிக்கரான இவர், தன் கலையாற்றலை மதப்பற்றோடு இணைத்து பல்வேறுபட்ட கூத்துக்கள், நாட கங்கள் மூலம் சமயப்பணியாற்றியமை குறிப்பிட வேண்டியதொன்றே. கிறிஸ்தவர்களின் தபசு கால சிந்தனைக்கு விருந்தாக 'கிறிஸ்துவின் திருப்பாடுகளின் பிரசங்கங்களை' அழகுற வடி வமைத்து பாடியும் காட்டியவர்.

இவரின் சமயப்பணி ஆர்வத்தை பாராட்டி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் 'திருக்கலை வேந்தன்' விருது அளித்து பொன் னாடை போர்த்தி கலைஞரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதே.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலான இவர்; பல்வேறு பட்ட நாடகங்களை இம்மன்றத்தின் மூலம் அரங் கேற்றி; ஈழத்தின் நாடக உலகிலே தனக்கென தனியோர் இடத்தை தட்டிக்கொண்டவர். ஓய்வு பெற்ற அதிபரான கலைஞர் குழந்தை தமிழ்த் தாயின் செல்லக் குழந்தையாவார். சேவையி லிருந்து ஓய்வுபெற்ற பிறகும் ஓயாமல் ஓடியோடி உழைத்து கலை வளர்க்கும் இந்தக் கலை ஞனை வாழும்போதே வாழ்த்துதலே பொருத்த மானது. தமிழ்த் தாய்க்கு பெருமை சேர்த்த இந் தப் பெருமகனின் சிந்தனைப் புரட்சி நிச்சயமாக இந்த சமூகத்தை மாற்றும் என்பது உறுதி.

கலைக் குடும்பத்தில் பிறந்து கலைஞ னாக மாறி பிள்ளைகளையும் கலைப்பணியில் ஈடுபடுத்தியுள்ள கலைஞர் குழந்தை அவர்களின் கலைப்பணி ஓய்வின்றித் தொடர இறைவன் அருள் பாலிக்க இறைஞ்சுகிறோம்.

காலத்தால் அழியாத கலைப்படைப் புகளை கொடுத்த இந்தக் கலைஞனை மன தாரப் பாராட்டுகிறேன். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நாடகக் கலைஞன்



**திருமதி எம்.ஏ.எம்.கபிரியேல்**
ஆசிரியை,
மன்/நானாட்டான் மகா வித்தியாலயம்,
நானாட்டான்,
மன்னார்.

புனித யாகப்பர் தேவாலயத்தை மையமாகக்கொண்டு வாழுகின்ற மக்களை உற்று நோக்குவோமாயின் அவர்கள் கல்வித்துறையில், கலைத்துறையில் சிறந்து விளங்குவதை அவதானிக்கலாம். இவர்களில், புலவர்களின் வரிசையில் சந்தான் என்பவரே வரலாற்றில் முதன்முதல் அறியப்பட்டவர்.

தொடர்ந்து பாவிலு புலவர், சவியேல் அண்ணாவியார் எனத் தொடர்கிறது. சந்தான் புலவரின் சகோதரன் செபஸ்தியானின் மகனே செபமாலை குழந்தை ஆவார். இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர்.

இவர் ஆசிரியராக கடமையாற்றிய இடங்களில் அந்தந்த கிராமங்களுக்கு உகந்த முறையில் சிறிய நாடகங்கள் இயற்றி அக்கிராமத்து மக்களின் நன்மதிப்பை பெற்றார். சிறுவர்களுக்கு உரிய நாடகங்களைத் திறம்பட பயிற்றுவித்தவர்.

இவர் எந்த எந்த பாடசாலைகளில் கற்பித்தாரோ அந்தந்த பாடசாலைகள் நாடகப் போட்டிகளில் முதலாம் இடத்தை பெற்றுள்ளன. அகில இலங்கை ரீதியாகவும் முதலிடம் பெற்றுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இவை பத்திரிகை வாயிலாக பிரசுரிக்கப்பட்டன.

நாட்டுக்கூத்தை மக்கள் இரசிக்கக் கூடிய முறையில் தொகுத்து நடிக்கச் செய்துள்ளார். வசன நடையிலும், பாக்கள் அமைப்பதிலும், நடிப்பு, தாளத்துக்குரிய முறையில் பயிற்றுவிப்பதிலும் சிறந்து விளங்கினார்.

பொதுமக்களும் ஆவலுடனும், ஆர்வத்துடனும், இவரது நிகழ்வுகளை கண்டு களிப்பார்கள். இக்கலைஞரின் நாடகங்கள் எங்கு அரங்கேறுகிறதோ அங்கு மக்கள் கூட்டத்தைக் காணலாம்.

இக்கலைஞருக்கு பலவிதமான விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. தேசிய ரீதியாக பலர் வந்து இவரிடம் கூத்து, நாடகம் சம்பந்தமான விடயங்களை பெற்றுச் செல்வார்கள். மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் இவரின் கலை நிகழ்வுகள் பல ஆண்டுகளாக பேசப்பட்டு, பாராட்டப்பட்டு, உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்கப்படுகின்றது.

எனவே இவரின் கலை வாழ்வு சிறக்க நாம் என்றும் வாழ்த்துகிறோம். இவருக்கு நீடிய ஆயுளையும் கூடிய சுகத்தையும் இறைவன் வழங்கும் படி வேண்டுவோமாக.

இவரின் கலைத்திறமை இவருடன் அழிந்துவிடாது இவருக்கு பின் வருவோரும் இவரைப் போன்றே கலையை மங்கவிடாது வளர்க்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். ஆசிக்கின்றோம். ■

'நாடகசபைகள் பாமரமக்களின் பல்கலைக்கழகம்'
**– கவியரசி சரோஜினிதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1966-1982 வரை கலைநிகழ்வுகளில் பெற்ற சான்றிதழ்வுகள்

[கையிருப்பில் உள்ளவை]



**திருமதி ச.திருமகள்**
B.A.(Jaffna)
*ஆசிரியர்,*
*மன்/முருங்கன் மகாவித்தியாலயம்*
*மன்னார்*

| கலைநிகழ்வு | பெற்ற தகமை | காலம் | நடத்திய அமைப்பு | பொறுப்பானவர் |
|---|---|---|---|---|
| நாட்டுக்கூத்து (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 16.12.1966 | இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு | சு. வித்தியானந்தன் |
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | 02ஆம் இடம் | 5-7.06.1967 | மன்னார்ப் பிரதேசக் கலாமன்றம் | தேவநேசன் நேசையா |
| நாட்டார் பாடல் (மு.றோ.க.த.க.பாட.) | 02ஆம் இடம் | 5-6.06.1967 | மன்னார்ப் பிரதேசக் கலாமன்றம், | தேவநேசன் நேசையா |
| நடனம் (மு.றோ.க.த.க.பாட.) | 03ஆம் இடம் | ஆடி 1967 | மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சமாசம் | தலைவர், ம.மா.கூ.சமாசம் |
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | சிறப்பு நிகழ்வு | 04.02.1968 | முசலிக் காரியாதிகாரி பிரிவு | மு. சுப்பிரமணியம் |
| வில்லிப்பாட்டு (மு.மு.க.மன்றம்) | சிறப்பு நிகழ்வு | 04.02.1968 | முசலிக் காரியாதிகாரி பிரிவு | மு. சுப்பிரமணியம் |
| நாட்டுக்கூத்து (மு.றோ.க.த.க.பாட.) | 01ஆம் இடம், | 17-19.05.1968 | மன்னார்ப் பிரதேசக் கலாமன்றம் | தேவநேசன் நேசையா |
| கர்நாடகசங்கீதம் (மு.றோ.க.த.க. பாட.) | 01ஆம் இடம் | 17.06.1968 | மன்னார்ப் பிரதேசக் கலாமன்றம் | தேவநேசன் நேசையா |
| நாட்டுக்கூத்து (மு.றோ.க.த.க. பாட.) | 01 இடம் | 24.09.1968 | இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு. | சு. வித்தியானந்தன் |
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 17-19.06.1968 | மன்னார்ப் பிரதேசக் கலாமன்றம் | தேவநேசன் நேசையா |
| நாடகப் போட்டி (மு.ம.மகா.வித்தி.) | சிறப்புப்பரிசு | 1969 | இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு | க. செ. நடராசா |
| நாட்டுக்கூத்து (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 28.08.1969 | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி.நடராசா |
| கர்நாடக இசை (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 28.08.1969 | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி. நடராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 30.08.1969. | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி. நடராசா |
| கர்நாடக இசை (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 30.08.1969, | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி. நடராசா |
| நாட்டுக்கூத்து (மு.மு.க.மன்றம்) | 02ஆம் இடம் | 30.08.1969 | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி. நடராசா |
| வில்லிசை (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 30.08.1969 | மன்னார் மாவட்ட கல்வி நூற்றாண்டு அமைப்புக்குழு | வி. நடராசா |
| நாடகம் தரம் 3-7 (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 17.06.1970 | அகில இலங்கை தமிழ் மொழித்தினக் குழு | வ. க. ஈசுரபாதம் |
| நாடகம் தரம் 3-8 (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 17.07.1971 | அகில இலங்கை தமிழ் மொழித்தினக் குழு | வ. க. ஈசுரபாதம் |
| நாடகம் தரம் 3-8 (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 27.07.1971, | அகில இலங்கை தமிழ் மொழித்தினக் குழு | கே.கனகசபாவதி |
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | 01ஆம் இடம் | 15.09.1971, | முசலி காரியாதிகாரி பிரிவு | வை.சொக்கலிங்கம் |
| நாடகம் (மு.மு.க.மன்றம்) | 02ஆம் இடம் | 1972 | வல்வெல்டித்துறை உதயசூரியன் கழகம் | கா.சிவத்தம்பி |
| நாடகம் (மு.மகா.வித்தி.) | 03ஆம் இடம் | 07.08.1979 | கல்வி அமைச்சு சங்கீத, நடன நாடகவிழா | கல்விமா அதிபர் |
| நாட்டுக்கூத்து (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 20-21. 1981 | கல்வி அமைச்சு சங்கீத, நடன நாடகவிழா | எரிக்.ஜே.த.சில்வா |
| கர்நாடக இசை (மு.மகா.வித்தி.) | 03ஆம் இடம் | 2.12.1982, | அனைத்திலங்கை சங்கீத, நடன நாடகவிழா | கல்விமா அதிபர் |
| இசைநாடகம் (மு.மகா.வித்தி.) | 01ஆம் இடம் | 12.12.1982 | அனைத்திலங்கை சங்கீத, நடன நாடகவிழா | கல்விமா அதிபர் |

**குறிப்பு:**

*மு.மு.க.மன்றம்* - *முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்*
*மு.மகா.வித்தி* - *முருங்கன் மகா வித்தியாலயம்*
*மு.றோ.க.த.க.பாட* - *முருங்கன் றோமான் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ISBN 978-955-4609-00-6

Graphics
Jaffna. 0777 446973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org